இந்திய வரலாறு

(கி.பி. 1707-லிருந்து இன்றுவரை)

1757

ஆசிரியர்

து. சதாசிவன், M.A., M.Litt.,

விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,

சென்னைப் பல்கலைக்கழகம்,

சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த.பா.நி. (க.வெ.) வரிசை எண் — 400

இந்திய வரலாறு

(கி.பி. 1707-லிருந்து இன்றுவரை)

அன்பளிப்பு
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை.

ஆசிரியர்

து. சதாசிவன், M.A., M.Litt.,
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—January, 1973

T.N.T.B.S. (C.P.) No. 400

© Tamil Nadu Text Book Society

INDIAN HISTORY From 1707 A.D.

D. SADASIVAN

Price Rs. 8 - 50

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by

SOUNDARA PRINTERS,
403, T. H. Road,
Madras - 5.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்திய வரலாறு (கி. பி. 1707-லிருந்து இன்றுவரை)' என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 400ஆவது வெளியீடாகும். இதுவரை 435 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூகநல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

நூன்முகம்

இந்திய நாட்டில், ஆங்கிலேயரின் ஆட்சியானது எத்தகைய பின்னணியில், எங்ஙனம் படிப்படியாக ஏற்பட்டது, இறுதியில் அது எங்ஙனம் மறைந்தது என்பதைப் படம் பிடித்துக் காட்டு வதே இந் நூலின் முக்கிய நோக்கமாகும். சாதாரண வணிகர் களாக வந்த ஆங்கிலேயர் இறுதியில் இந்தியாவைத் தங்களது ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததென்பது உண்மையில் வியத்தகு நிகழ்ச்சியென்பதில் ஐயமில்லை. அங்ஙனம் அவர்கள் இந்திய மண்ணில் காலூன்றுதற்குத் துணையாக இருந்த சூழ்நிலை யாது என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிதல் வேண்டும். அந்த நோக்கத்துடனேயே இந் நூல் முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக் காலத்திலிருந்து,அதாவது 1707ஆம் ஆண்டி லிருந்து தொடங்குகிறது. 1707ஆம் ஆண்டு இந்திய வரலாற்றில் ஒரு பெருந் திருப்புமுனையைக் குறிப்பிடும் மைல் கல்லாகும். அவ்வாண்டில்தான் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் காலமானார். அவர் இறப்பதற்குச் சற்று முன்பிருந்தே சரியத் தொடங்கிய பேரரசானது அவரது மறைவிற்குப் பின் மடமட வென நலிவுறத் தொடங்கியது. முகலாயரின் பேரரசு மராத்தி யர்களின் கைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. முகலாய மன்னர்கள் பெயரளவிற்கே பேரரசர்களாயிருந்தனர். மராத்தியர்களின் கைப்பாவையாக அன்னார் விளங்கினர். 1761ஆம் ஆண்டில் நடைபெற்ற மூன்றும் பானிபட் போரில் மராத்தியர்கள் ஆஃப்கானியர்களிடம் தோற்றனர் என்றாலும் வியக்கத்தக்க வகையில் மீண்டும் அவர்கள் பலம் பெற்று விட்டனர். எனினும், தென்னிந்தியாவில் அவர்கள் நன்கு தமது ஆதிக்கத்தை நிறுவவில்லை. வட இந்தியாவிலிருந்து இரஜ புத்திரர்கள் போன்ற இதர இந்திய மன்னர்கள் அவர்களது தலைமைக்கு முட்டுக்கட்டையாயிருந்தனர். மற்றும் மராட்டியத் தலைவர்களிடத்திலேயே ஒற்றுமையில்லை. இந்நிலையை நன்கு பயன்படுத்திக்கொண்டு ஆங்கிலேயர் கொஞ்சம் கொஞ்சமாகத்

தமது ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்டனர். நாடு பிடிக்கும் பணியில் இறங்கக்கூடாது என ஆங்கில அரசால் அவ்வப்போது எச்சரிக்கை விடுத்ததையும் பொருட்படுத்தாது, ஆங்கில வணிகக் குழு பேரரசுப் பாதையில் இறங்கியது. அதற்கு இந்தியச் சூழ்நிலை ஓரளவு தூபம் போட்டது எனில் அது மிகையாகாது. ஆங்கிலேயர் முகலாயர்களிடமிருந்து இந்தியாவைக் கைப்பற்றினர் என்பதைவிட, இந்தியர்களிடமிருந்து முக்கியமாக மராட்டியர்களிடமிருந்தே அதைப் பெற்றனர் என்பதே வரலாற்று உண்மையாகும். எனவேதான் முகலாயர்களின் பிற்கால வரலாறும், மராத்தியர்களின் பிற்கால வரலாறும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன. மராத்தியர்களின் ஒற்றுமையின்மையையும், ஏனைய சுதேச அரசர்களின் பலஹீனங்களையும் பயன்படுத்திக் கொண்டு இந்திய உள்நாட்டு விவகாரங்களில் ஆங்கிலேயர் எவ்வாறு தலையிட்டனர், தலையிட்டு எங்ஙனம் இந்தியாவின் தனிப்பெரும் வல்லரசாக வளர்ந்தனர் என்பதை இந் நூல் சித்திரிக்கிறது. அதோடு ஆங்கில ஆதிக்கத்தின் விளைவாக இந்தியாவில் ஏற்பட்ட அரசியல், சமுதாய, பொருளாதார மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் இந் நூலில் பரக்கக் காணலாம். அறிந்தோ அறியாமலோ, ஆங்கிலேயர் எங்ஙனம் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை வளர்த்தனர், எங்ஙனம் இந்தியர் தம்மைத் தாமே ஆண்டு கொள்வதற்கேற்ற பயிற்சியை அன்னார்க்கு வழங்கினர், தன்னாட்சி நிறுவனங்கள் எவ்வாறு படிப்படியாய் அமைக்கப் பெற்று இறுதியில் இந்திய சுயஆட்சியாக அவை மலர்ந்தன என்பதன் வரலாறு தொடர்ந்து இந் நூலில் கூறப்பட்டுள்ளது. இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாறும் அதற்காகப் பாடுபட்டுப் பலவித தியாகங்களைச் செய்த பெருந்தலைவர்களின் வரலாறும் இந் நூலில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. விடுதலைக்குப் பின் இந்தியா எங்ஙனம் தனது வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளது; உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்து முன்னேற்றப் பாதையில் அஃது எங்ஙனம் விரைவாக நடைபோட்டு வருகிறது என்பதையும் இந் நூல் விவரித்துள்ளது.

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள சமுதாயப் பண்பாட்டு மாற்றங்களும் தெளிவாக எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. இன்னோரன்ன பல காரணங்களால், பட்டப் படிப்புக்காக முயன்றுவரும் மாணவர்களுக்கு மட்டுமன்றி, இந்தியாவின் நவீனகால வரலாற்றை அறிந்து கொள்வதில் ஆர்வங்கொண்டுள்ள, ஆங்கில மொழிப் பயிற்சி இல்லாத பொதுமக்களுக்கும் இந் நூல் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை. குடிமக்கள் தங்களது குறைகளை உணர்ந்து அவற்றைப் போக்கிக் கொள்ளவும், நிறைகளை உணர்ந்து அவற்றைப் பெருக்கிக் கொள்ளவும், இந் நூல் பெரிதும் பயன் படக்கூடும்.

ஆசிரியர்

பொருளடக்கம்

			பக்கம்
1.	பிற்கால முகலாயர்கள்	...	1
2.	ஐரோப்பியர் வருகை	...	16
3.	கர்நாடகத்தில் ஆங்கில-ஃபிரெஞ்சு ஆதிக்கப் போட்டி	...	27
4.	வங்காளத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் நிறுவப்பெறல்	...	39
5.	வாரன் ஹேஸ்டிங்ஸ்	...	57
6.	காரன்வாலிஸ் பிரபு	...	74
7.	வெல்லெஸ்லி பிரபு	...	90
8.	மைசூர்ப் போர்கள்—ஐதரும் திப்புவும்	...	103
9.	ஹேஸ்டிங்ஸ் பிரபு	...	116
10.	மராத்தியர்களின் பிற்கால வரலாறு	...	127
11.	மராத்தியப் போர்கள்	...	148
12.	வில்லியம் பெண்டிங் பிரபு	...	155
13.	சீக்கியரின் எழுச்சி	...	168
14.	டல்ஹௌசி பிரபு	...	179
15.	படையினரின் பெரும் புரட்சி	...	196
16.	அரசப் பிரதிநிதிகளின் ஆட்சியின்கீழ் இந்தியா —கானிங் முதல் லிட்டன் வரை	...	208
17.	ரிப்பன் பிரபு	...	218
18.	டப்பரின் முதல் எல்ஜின் II வரை	...	224
19.	கர்சன் பிரபு	...	235
20.	மின்டோ பிரபுவின் காலம் முதல் இன்றுவரை	...	245
21.	இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி (1773 முதல் 1861 வரை)	...	259

22. இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி (1861 முதல் இன்று வரை) ... 278
23. இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு ... 313
24. இந்தியாவின் தனிப்பெரும் தலைவர்கள் ... 340
25. தற்கால இந்தியாவின் சமூக, பொருளாதார நிலைமைகள் ... 374
26. இந்தியாவில் ஆங்கிலேயரின் செல்வாக்கு ... 392
27. இந்தியாவில் கல்வி வளர்ச்சி வரலாறு ... 408
28. இந்தியாவில் செய்தித்தாள்களின் வளர்ச்சி வரலாறு ... 420
29. சுதந்திர இந்தியாவும் சுதேச அரசுகளும் ... 434
30. விடுதலைக்குப்பின் பாரதம்—சுதந்திர இந்தியத் தலைமை அமைச்சர்கள் ... 443
BIBLIOGRAPHY ... 448
கலைச்சொற்கள் ... 449

1. பிற்கால முகலாயர்கள் (1707 – 1858)

முகலாயப் பேரரசின் வீழ்ச்சி

இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றி நின்றழிந்த பேரரசுகள் பலவற்றுள் முகலாயப் பேரரசு சீருஞ் சிறப்பு மிக்க தொன்றாகும். இந்திய அரசியல் வானில், ஒரு மூன்றாம் பிறைச் சந்திரனைப் போன்று சிறிய அளவில் பாபர் காலத்தே தோன்றிய அப் பேரரசு நாளுக்குநாள் பரப்பிலும் வலுவிலும் பெருகிக் கொண்டே சென்று ஒளரங்கசீப்பின் காலத்தே உச்சநிலையை அடைந்து ஒரு முழுமதியென ஒளிவிட்டுத் துலங்கலாயிற்று. ஆனால், ஒளரங்கசீப்புக்குப் பின்னர், பேரரசானது தேய்பிறை என நாளுக்குநாள் புகழிலும் பரப்பிலும் குன்ற ஆரமபித்து விட்டது. ஒளரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியிலேயே அதன் தேய்பிறைக்காலம் தொடங்கிவிட்டதெனலாம். 'எம்மதமும் சம்மதம்' என்ற பரந்த மதக் கொள்கை எனும் வலுவான அடிப் படையின்மீது பேரரசர் அக்பரால் அரிதின் முயன்று அமைக்கப் பட்டிருந்த முகலாயப் பேரரசு எனும் கட்டடத்தில் ஜஹாங்கீர், ஷாஜஹான் போன்ற பேரரசர்களின் ஒருதலைப்பட்சமான சமயக் கொள்கையால் ஆங்காங்கே விரிசல்கள் தோன்ற ஆரம் பித்தன. ஒளரங்கசீப்பின் குறுகிய சமயக் கொள்கைகள் அவ் விரிசல்களை மேலும் விரிவாக்கின. அவற்றைச் சீராக்கிச் செப்ப னிட்டு, பேரரசு கட்டடத்தை மீண்டும் பொலிவுறச் செய்தற் கான அறிவும் ஆற்றலும் ஒளரங்கசீப்பின் பின்வழித் தோன்றல் களிடம் காணப்படவில்லை. அவர்கள் பெரும் பிரபுக்களின் கைப் பாவையாக மாறிவிட்டனர். எனவே, ஆங்காங்கே பல மாநிலங் கள் சுயேச்சையடைந்தன; அந்நியர்கள் படையெடுத்தனர்; நாடு சீரழிந்தது; மேலைநாட்டினரின் செல்வாக்கு ஓங்கியது.

முகலாயப் பேரரசர்களில் கடைசி அரசரான பகதூர் ஷாவை 1858-ல் ஆங்கிலேயர்கள் அரியணையினின்றும் அகற்றியகாலை, அவர் பெயரளவில் மட்டுமே மன்னராயிருந்தார். இங்ஙனம் முகலாயப் பேரரசு சிதைந்து சீரழிந்த வரலாற்றின் சுருக்கத்தைக் கீழே காண்போம்.

முதலாம் பஹதூர் ஷா (1707 — 1712)

தம் தந்தையையே சிறையிலடைத்து அரியணையைக் கைப்பற்றிய ஒளரங்கசீப் 'தம்முடைய மக்களால் தமக்கும் அதே கதி ஏற்பட்டுவிடுமோ' என்று எந்த நேரமும் அஞ்சிக்கொண்டிருந்தார். அதனால் தம்முடைய ஐந்து புதல்வர்களில் எவரையும் அவர் நம்பவில்லை. அவர்களில் எவராவது தமக்கு எதிராகச் செயல்படுவதாகச் சிறிதளவு ஐயம் ஏற்பட்டாலும், உடனே அவரை ஈவிரக்கமின்றித் தண்டிக்கத் தயங்கியதே இல்லை. இதனால், ஒரு பேரரசருக்கு அவர்கள் புதல்வர்களாகப் பிறந்ததை எண்ணி மற்றவர்கள் பெருமிதம் அடைவதற்குப் பதிலாக இரக்கங் கொள்ளும் நிலைதான் ஏற்பட்டது.

ஒளரங்கசீப் ஆட்சிக்கு வந்த இருபதாம் ஆண்டில் அவருடைய மூத்த மகன் சுல்தான் முகம்மது தந்தையின் அவநம்பிக்கைக்கு உரியவர் ஆனமையால், சிறையில் அடைக்கப்பட்டு அங்கேயே மாண்டார். இரண்டாவது மகன் முவாசம் (Muazzam) ஓர் அற்பக் காரணத்திற்காக ஏழாண்டுகள் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது. மூன்றுவது புதல்வன் ஆஜம் ஷா (Azam Shah), தந்தையின் கடுமையான கடிந்துரைகளுக்கு அடிக்கடி உள்ளானர். அவரைத் தம் அருகில் நெருங்கக்கூட ஒளரங்கசீப் விடவில்லை. நான்காவது புதல்வனான அக்பர், தம் கொள்ளுப் பாட்டனர் அக்பரைப்போல் இராஜபுத்திரர்களுடன் சமாதானமாகப் போக வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர். இதன் காரணமாக அவர் தந்தையின் கடுங் கோபத்திற்கு ஆளானர். ஒளரங்கசீப்பின் தண்டனையிலிருந்து தப்புவதற்காகப் பாரசீகத்திற்கு ஓடி அங்கே அடைக்கலம் புகுந்த அவர் 1706-ல் இறந்தார். கடைசிப் புதல்வன் காம் பாக்ஷா (Khan Bakshah) ஈராண்டுகள் தனிமைச் சிறையில் வாடினர். இவ்வாறு, எந்தப் புதல்வரும் ஒளரங்கசீப்பின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவில்லை. அதனல் அவர்களில் எவருக்கும் நிருவாகப் பயிற்சியளிக்காமையால் அவர்களிடம் பட்டத்து இளவரசருக்குரிய பண்புகளும், ஆட்சித் திறமையும் வளரவில்லை.

இந் நிலையில் 1707ஆம் ஆண்டில் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் காலமானார். முகலாயப் பேரரசர்களின் வழக்கப்படி, அவர் தாம் இறப்பதற்கு முன்பே அரசுரிமைபற்றி ஓர் உயில் எழுதி வைத்திருந்தார். அதில் தமக்குப் பின் உயிரோடிருக்கும் தம் புதல்வர்கள் பேரரசைப் பாகம் பிரித்துக்கொண்டு, தனித் தனியே அரசு செலுத்தி வரவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், உயிரோடிருந்த முவாசம், ஆஜம், கான்பாக்ஷா ஆகிய மூன்று இளவரசர்களில் எவருக்கும் இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை. ஒவ்வொருவரும் பேரரசை முழுமையாகத் தாமே ஆள வேண்டுமென விரும்பினர். இதனால், ஷாஜஹான் காலத்தில் ஔரங்கசீப்பிற்கும் அவருடைய சகோதரர்களுக்கு மிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போர்போல், இப்போதும் ஔரங்கசீப்பின் புதல்வர்களுக்கிடையே வாரிசுரிமைப்போர் மூண்டது.

முவாசம் தம் தமையன் ஆஜமை 1707-ல் ஜாஜௌ (Jajau) என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆஜம் போர்க்களத்திலேயே மாண்டார். இவ் வெற்றிக்குப்பின் முவாசம், முதலாம் பகதூர் ஷா (Bahadur Shah I) என்ற பட்டத்துடன் தில்லி அரியணையில் அமர்ந்தார். மற்றொரு சகோதரரான கான் பாக்ஷாவை, முதலாம் பகதூர் ஷா ஐதராபாத்துக்கு அருகில் நடந்த போரில் தோற்கடித்தார். கான் பாக்ஷாவும் போரில் ஏற்பட்ட காயத்தினால் உயிர்நீத்தார். இவ்விதம் பகதூர் ஷா தம் சகோதரர்களின் எதிர்ப்பை முறியடித்து ஆட்சியைக் கைப்பற்றிய போதிலும், ஆட்சிக்கு வந்தவுடன் பல எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. சீககியரும், மராத்தியரும் அவரை எதிர்த்தனர். பகதூர் ஷாவே படைக்குத் தலைமை தாங்கிச் சென்று சீக்கியர்களைத் தோற்கடித்தார். ஆனால், அவர்களை முற்றிலும் முறியடிக்க முடியவில்லை. அவர்கள் தொடர்ந்து தொல்லை கொடுத்துக்கொண்டே இருந்தமையால், மராத்தியருடன் சமாதானம் செய்துகொண்டார். ஔரங்கசீப் 1689-ல் மராத்திய மன்னர் சாம்பாஜியைத் தோற்கடித்துக் கொன்றவுடன், அவருடைய மகன் சாஹூவைப் பிடித்துத் தில்லியில் சிறை வைத்தார். 1689 முதல் 1708 வரை முகலாயரின் காவலில் இருந்து வந்த சாஹூவை, மராத்தியருடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையின்படி பஹதூர் ஷா விடுதலை செய்தார். சாஹூ விடுதலையாகித் தாயகம் சென்றவுடன் மராத்தியருக்குள் உள் நாட்டுப் போர் மூண்டு அவர்கள் வலிமை குன்றும் என்று பஹதூர் ஷா எண்ணினர்.

ஔரங்கசீப்பைப் போன்று, பஹதூர் ஷா பிற சமயத்தவரை வெறுக்கவில்லை. இந்து சமயத்தினரிடம் சகிப்புணர்வுடன் நடந்துகொண்டதோடு இராஜபுத்திரர்களுடனும் நட்பாகப் பழகினர். இந்துக்களிடம் வசூலித்த ஜிஸியா (Jizya) என்ற சமய வரியிலிருந்து இராஜபுத்திரர்களுக்கு விலக்களித்தார். அதனுடன் அவர்களின் மேவார் (Mewar), மார்வார் (Marwar), ஆம்பர் (Amber) போன்ற பகுதிகளைச் சுதந்திர நாடுகளாகவும் அங்கீகரித்தார். எனினும், அவருடைய சமயச் சகிப்புணர்வுக் கொள்கை காலங்கடந்ததாகவே அமைந்தது. முகலாயப் பேரரசர்களின் ஈவிரக்கமற்ற கொடுமைக்கு நீண்ட காலமாகவே ஆளாகி வந்த இராஜபுத்திரர்களும், மராத்தியர்களும், சீக்கியர்களும், ஜாத்துகளும் முகலாயரைப் பழிக்குப்பழி வாங்குவதற்குத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மேலும், பகதூர் ஷா அரியணை ஏறும்போது 63 வயதைக் கடந்திருந்தார். முதுமையின் காரணமாக அவரால் நிருவாகத்தைச் செவ்வனே செயல்படுத்த இயலவில்லை., அரசவையில் ஏற்பட்ட சூழ்ச்சிகளைக் களையவும் சக்தியற்றவராக இருந்தார். தமக்கெதிராகச் சதியும், கலகமும் செய்யும் கும்பலைத் தெரிந்திருந்தும், அதை ஒடுக்கவோ தடுக்கவோ அவரால் இயலவில்லை. பேரரசின் பகுதிகள் ஒன்றன்பின் ஒன்றாக மத்திய அரசின் கட்டுப்பாட்டிலிருந்து நழுவிச் சென்றுகொண்டிருந்தன. இதைத் தடுக்கும் ஆற்றலற்ற நிலையில் 1712ஆம் ஆண்டில், ஏறக்குறையத் தம் 70ஆம் வயதில் பகதூர் ஷா காலமானர்.

ஜஹந்தர் ஷா (Jahandar Shah), 1712—13

முதலாம் பகதூர் ஷாவின் மறைவிற்குப்பின் வழக்கம் போல் அவருடைய புதல்வர்களுக்குள் வாரிசுப் போர் மூண்டது. பகதூர் ஷாவிற்கு நான்கு புதல்வர்கள் இருந்தனர். அந் நால்வரும் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். முடிவில் மூத்த மகனும், கொடூரமானவருமான ஜகந்தர் ஷா பெரும் இரத்தக் களரிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தார். இவர் சிற்றின்பப் பிரியர்; சுகபோகங்களில் காலத்தையும் செல்வத்தையும் செலவிட்டார்; தகுதியற்றவர்களுக்கெல்லாம் சலுகையும், பதவியும் அளித்தார். இவருடைய கொடுங்கோலாட்சி ஓராண்டுதான் நீடித்தது. இவருடைய மைத்துனர் பருக்ஷியர் (Faruksiyar) என்பவர் 1715-ல் இவரைக் கொன்றுவிட்டு அரசைக் கைப்பற்றினர்.

பருக்ஷியர் (1713—1719)

ஜகந்தர் ஷாவின் கொடிய ஆட்சிக்கு முடிவுகட்ட பருக்ஷியருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் அப்துல்லாகான், ஹூசேன் அலி என்ற இரு சையது (Sayyid) சகோதரர்களாவர். அவர்களுடைய உதவியினால்தான், ஜகந்தருக்குப் பின், பருக்ஷியர் அரியணையில் அமர முடிந்தது. பருக்ஷியர் ஆளுந்திறமையற்றவர். அவர் ஆட்சிப் பொறுப்பைச் சையது சகோதரர்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தாம் கேளிக்கைக் களியாட்டங்களில் காலங் கழித்தார்.

சையது சகோதரர்கள்

சையது சகோதரர்களில் மூத்தவர் அப்துல்லா கான்; இளையவர் ஹூசேன் அலி. இவர்கள் ஷியா (Shia) என்னும் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்தியாவிலேயே பிறந்து மதம் மாறியவர்களையும், அயல்நாடுகளிலிருந்து பல தலைமுறைகளுக்கு முன் இந்தியாவிற்கு வந்து குடியேறிய முஸ்லிம்களின் சந்ததியினரையும் கொண்டது ஷியா வகுப்பு. இவ் வகுப்பைச் சேர்ந்த சையது சகோதரர்களை இந்திய மண்ணின் புதல்வர் (Sons of the Soil) என்பது பொருந்தும். இவ் விருவரும் முகலாயப் பேரரசின் அரசியலில் எட்டாண்டுக் காலம் (1713—1722) பெருஞ் செல்வாக்குடன் ஆணை செலுத்திய வரலாறு, வரலாற்று அதிசயங்களில் ஒன்றாகும். அரசர்களை ஆக்கவும், அழிக்கவும் வல்லவர்களாக (King-makers) இவர்கள் திகழ்ந்தமைக்கு இவர்களின் அபார அரசியல் ஆற்றலும், சிறந்த நிருவாகத் திறனுமே காரணம் எனலாம்.

பருக்ஷியரிடமிருந்து நிருவாகப் பொறுப்பை ஏற்றவுடனேயே இவர்கள் சீக்கியர்களின் புரட்சியை ஒடுக்கினார்கள். ஔரங்கசீப்பின் சமயப் பாகுபாட்டுக் கொள்கையைப் பின்பற்றாமல், சமயச் சகிப்புணர்வுடன் நடந்துகொண்டனர். 'ஜிஸியா' என்ற சமயவரியை இந்தியாவிலிருந்து அடியோடு நீக்கினர். இராஜபுத்திரர்கள் முதலிய வலிமை வாய்ந்த இந்து இளவரசர்கள், சையது சகோதரர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள். அரசாங்கத்தில் இச் சகோதரர்களின் அதிகாரமும் செல்வாக்கும் ஓங்கியது. இந்திய முஸ்லிம்களான சையது சகோதரர்கள் இவ்வாறு ஆதிக்கம் பெறுவதைக்கண்டு வெளிநாட்டு முஸ்லிம்களைக்கொண்ட சன்னி (Sunny) என்ற வகுப்பைச் சேர்ந்த முகம்மதியப் பிரபுக்கள் பொறாமை கொண்டனர். சையது சகோதரர்களை ஒழிக்க இவர்கள் தக்க தருணம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மேலும், சமயப்பற்றுமிகுந்த முகம்மதியர்களுக்கு

இச் சகோதரர்களின் சமயச் சார்பற்ற கொள்கை பிடிக்கவில்லை. பருக்ஷியர் அரசியல் அனுபவமோ, ஆட்சித்திறனோ சிறிதும் அற்றவர் என்பதைக் கண்ட சையது சகோதரர்கள் தம்மிச்சை யாக நிருவாகத்தை நடத்தலானார்கள். இதனால் பருக்ஷியரும் ஐயுறலானார். சையது சகோதரர்களின் ஆதிக்கத்தை ஒழிக்கும் சூழ்ச்சியிலும் அரசர் ஈடுபட்டார்; அவர்களைக் கொல்வதற்கும் திட்டம் வகுத்தார். ஆனால், இதையறிந்த சையது சகோதரர்கள், அவரைப் பதவியிலிருந்து நீக்கியதுடன், சொல்லொணாத் தொல்லைகளுக்கும், அவமானத்திற்கும் ஆட்படுத்தி இறுதியில் அவரைக் கொலையும் செய்தனர். பிறகு அடுத்தடுத்து இருவரைப் பதவியில் அமர்த்தினர். அவ் விருவரின் ஆட்சி ஒருசில மாதங் களுக்கே நீடித்தது. பிறகு 1719-ல் பகதூர் ஷாவின் பேரனான முகம்மது ஷாவை (Muhammad Shah) அரசராக்கினர்.

முகம்மது ஷா (1719—1748)

முகம்மது ஷா அரசாட்சியில் ஆர்வம் காட்டவில்லை. மிருகச் சண்டைகளைக் கண்டு களிப்பதிலேயே காலங்கழித்தார். அரசாங்க அதிகாரங்கள் அனைத்தும் சையது சகோதரர்களின் கையிலேயே இருந்தன. எனினும், அவர்களின் ஆதிக்கம் அதிக நாள்கள் நீடிக்கவில்லை. அவர்களைக் கவிழ்ப்பதற்கு அரசவையில் பிரபுக்களின் சதி தீவிரமாகியது. பல குழுக்கள் அவர்களுக்கு எதிராகக் கூட்டுச்சேர்ந்தன. முகம்மது ஷாவும் அவர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட நினைத்தார். இதன் விளைவால், அவர்களின் ஆதிக்கம் 1722-ல் ஒழிக்கப்பட்டது. ஹுசேன் அலி கொல்லப்பட்டார். அப்துல்லா தோற்கடிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டு நஞ்சு கொடுத்துக் கொல்லப்பட்டார். இவ்விதம் சையது சகோதரர்களின் வாழ்க்கை முடிவடைந்தது.

சையது சகோதரர்களின் நீக்கம், முகம்மது ஷாவின் ஆட்சியைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக மேலும் சீரழிக்கவே செய்தது. அவர்களை நீக்கியபிறகே அரசர் தம் தவற்றை உணர்ந் தார். அவரால் நிருவாகத்தைச் சீராகக் கவனிக்க முடியவில்லை. நிருவாகத் திறமையின்மையால் அரசு சரிவதை உணர்ந்தும் அதைச் சீர்படுத்தும் ஆற்றலின்மையால் அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஏற்கெனவே, சீர்கெட்டிருந்த படை மேலும் சீரழியலாயிற்று. இச் சமயத்தில் பாரசீக மன்னர் நாதிர் ஷாவின் (Nadir Shah) பெரும் படையெடுப்பையும் அவர் சமாளிக்க நேரிட்டது. முகம்மது ஷாவின் வலிமையற்ற நிலையைக்கண்டு ஊக்கமடைந்த நாதிர் ஷா 1739ஆம் ஆண்டில் இந்தியாவின் மேல் படையெடுத்தார். கர்னால் (Karnal) என்ற இடத்தில்

முகலாயப் படையை முறியடித்துத் தில்லியைக் கைப்பற்றினர். தில்லியைச் சூறையாடியதில் கிடைத்த பொருள்களில் முக்கிய மானவை புகழ்பெற்ற மயிலாசனமும், விலைமதிப்பற்ற கோஹினூர் வைரமுமாகும்.

நாதிர் ஷா தில்லியில் 57 நாள்கள் இருந்தார். பிறகு முகம்மது ஷாவுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அவ் வுடன் படிக்கையின்படி ஆப்கானிஸ்தானத்தை நாதிர் ஷாவிற்கு அளிப் பதற்கு முகம்மது ஷா ஒப்புக்கொண்டார். அளவற்ற கொள்ளைப் பொருள்களுடன் நாதிர் ஷா பாரசீகம் திரும்பினர்.

நாதிர் ஷா தில்லியில் இருந்த காலத்தில் ஓர் அசம்பாவித நிகழ்ச்சி நடைபெற்றது. பாரசீகப் படைவீரர் ஒருவர், வீதியில் விற்பனைக்கு வைத்திருந்த சில புறுக்களை வலுக்கட்டாயமாகப் பறித்துச் செல்ல முயன்றபோது, ஆத்திரமடைந்த ஒரு கூட்டம் அவரைத் தாக்கிக் கொன்றது. நாதிர் ஷாவையும் ஒரு மசூதியில் சுட்டுக் கொல்ல முயற்சி நடந்தது. இதனல் ஆத்திரம் அடைந்த நாதிர் ஷா, தில்லி மக்களைக் கொன்று குவிக்கும்படி தம் படை வீரர்களுக்கு ஆணையிட்டார். இதைத் தொடர்ந்து, நகரில் இரத்த ஆறு ஓடியது; ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆண் களும், பெண்களும், குழந்தைகளும் கொன்று குவிக்கப் பட்டார்கள்; குடிமக்ககளின் வீடுகள் சூறையாடப்பட்டன; அவர் களிடம் கட்டாயத் தண்டத் தொகைகளும் வசூலிக்கப்பட்டன. 'நாதிர் ஷா போன்ற கொடிய மனிதர் அன்றைய உலகில் வேறு ஒருவருமில்லை' என்று கூறுமளவிற்கு இன்னும் பல கொடு மைகளை இழைத்தார். இத்தகைய கொடியவரான நாதிர் ஷா தாயகம் திரும்பியதும் 1747-ல் கொலையுண்டு மாண்டார்.

நாதிர் ஷாவின் இப் படையெடுப்பு, முகலாயப் பேரரசு மேலும் சிதையக் காரணமாயிற்று. மேலும், நாதிர் ஷா ஆப்கானிஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொண்டதால் இந்தியா வின் பாதுகாப்புக்கு அத் திசையிலிருந்து நிரந்தரமான ஆபத்து உண்டாகியது. அதனுடன், அகமது ஷா அப்தலி என்பவரின் படையெடுப்புக்கும் அது அடிகோலிற்று. முகலாயப் பேரரசிலிருந்து பிரிந்து, பல மாநிலங்கள் சுயாட்சி பெறவும் காரணமாயிற்று. முகலாய மன்னரால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆஸப் ஷா தென்னிந்தியாவிலும், சப்தர் ஜங் (Safdar Jung) அயோத்தியிலும் சுயாட்சி ஏற்படுத்தினர். அலிவர்தி கான் (Alivardi Khan) வங்காளத்தில் சுயாட்சி ஏற்படுத்தினர். ரோஹில்கண்டும் (Rohilkand) சுயாட்சி

பெற்றது. மராத்தியர்கள் முதலாம் பாஜிராவின்கீழ் குஜராத், மால்வா, புண்டல் கண்டு (Bundal Khand) ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டார்கள். வரலாற்றுப் பேராசிரியர் கீன் (Keene) குறிப்பிடுவதைப் போல, 'இக்கால இந்தியாவின் சுதந்திரப் பகுதிகள் பல இவர் (முகம்மது ஷா) ஆட்சியில் தோன்றின. பாபர்வழி வந்த முகலாய மன்னர்களின் ஆட்சி, முகம்மது ஷாவுடன் முடிவடைந்ததாகவே கருதலாம். இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர்கள், மன்னர் என்ற பட்டத்தைப் பெயரளவில் பெற்றிருந்தனரே தவிர, உண்மையில் அதற்கான அதிகாரம் அவர்களிடம் இல்லை என்றே கூறவேண்டும்.

அகமது ஷா (1748—1754)

முகம்மது ஷா 1748ஆம் ஆண்டில் காலமானார். அவருக்குப் பின் அவருடைய ஒரே மகன் அகமது ஷா பேரரசர் ஆனார். ஆனால், அவரும் ஆளும் திறமையற்றவர். அரசு அலுவல்களைக் கவனிக்காமல் காமக் களியாட்டங்களிலேயே நாட்டஞ் செலுத்தினார். அவர் சார்பில் அவருடைய தாய் குட்சியா பேகம் ஆட்சியைக் கவனித்து வந்தார். பல உள்நாட்டுக் கலவரங்கள் மூண்டு நாட்டை மேலும் சீரழித்தன.

அகமது ஷா அப்தலியின் படையெடுப்பு

இத்தகைய குழப்ப நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, ஆப்கானிஸ்தானத் தலைவரான அகமது ஷா அப்தலி என்பவர் இந்தியாமீது படையெடுத்துக் காஷ்மீரையும் பஞ்சாபையும் ஆக்கிரமித்துக்கொண்டார். ஆனால், அவருடைய நாட்டில் கலவரங்கள் ஏற்படவே, தில்லியின்மேல் படையெடுக்காமல் திரும்பிச் சென்றுவிட்டார்.

துரானி (Durani) என்ற பெயரிலும் அழைக்கப்படும் அகமது ஷா அப்தலி, நாதிர் ஷாவின் தலைமைத் தளபதிகளுள் ஒருவர் நாதிர் ஷாவின் கொலைக்குப்பின், காந்தஹார் (Kandahar) என்னும் பகுதிக்குத் தாம் அரசர் என்று பிரகடனம் செய்து கொண்டு காபூலையும் கைப்பற்றிக்கொண்டார். இவர் அகமது ஷா ஆட்சிக் காலத்தில் பலமுறை இந்தியாவின்மீது படையெடுத்தார். அவருடைய படையெடுப்பை எதிர்த்துச் சமாளிக்கும் திறமை அகமது ஷாவுக்கு இல்லை. அவருடைய செயலற்ற தன்மையைப் புரிந்துகொண்ட அரசவைப் பிரபுக்கள், அவரைப் பதவியிலிருந்து நீக்கத் திட்டமிட்டனர். ஆகவே, 1754-ல் அகமது ஷாவை ஆட்சியிலிருந்து நீக்கி, அவருடைய கண்களையும் குருடாக்கிச் சிறையில் தள்ளினார்கள்.

இரண்டாம் ஆலம்கீர் (Alamgir II), 1754—1759

அகமது ஷாவுக்குப் பின் இரண்டாம் ஆலம்கீர் என்பவர் முகலாயப் பேரரசராக்கப்பட்டார். இவர் ஜஹந்தர் ஷாவின் இரண்டாவது மகனாவார். ஆலம்கீரின் புதல்வரும் இரண்டாம் ஷா ஆலம் (Shah Alam II) என்று பிற்காலத்தில் அழைக்கப் பட்டவருமான அலி கௌஹார் (Ali Gauhar) அயோத்தி அரசருடன் சேர்ந்துகொண்டு, தந்தைக்கு எதிராகக் கலகம் செய்தார். இரண்டாம் ஆலம்கீரால் தம் மகனின் கலகத்தை அடக்க முடியவில்லை. மேலும், இச் சமயத்தில் நான்காம் முறையாக அகமது ஷா அப்தலி இந்தியாவின்மேல் படை யெடுத்துத் தில்லியையும் சூறையாடினர். 1759-ல் இரண்டாம் ஆலம்கீர் கொல்லப்பட்டார்;

இரண்டாம் ஷா ஆலம் (1759 — 1806)

இரண்டாம் ஆலம்கீருக்குப்பின், அவர் மகனாகிய அலி கௌஹார், இரண்டாம் ஷா ஆலம் என்ற பட்டத்துடன் பதவிக்கு வந்தார். அவருடைய ஆட்சி 1759 முதல் 1806 வரை நீடித்தது. அவர் பெயரளவில்தான் அரசராய் இருந்தார். மராத்தியரின் ஆதிக்கம் உச்சக் கட்டத்தில் இருந்த காலம் அது. வடக்கிலும் தெற்கிலும் மராத்தியரின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. அப்போது அகமது ஷா அப்தலி ஐந்தாம் முறை யாகப் படையெடுந்து வந்தார். அதே சமயத்தில் மராத்தி யரும் வடக்குநோக்கி ஆதிக்கம் செலுத்த முயன்றனர். இரு வருக்கும் பானிப்பட்டு என்ற இடத்தில் 1761-ல் ஒரு கடும் போர் நடந்தது. பானிப்பட்டு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. பானிப்பட்டில் மராத்தியருக்கும் அகமது ஷா அப்தலிக்கும் 1761-ல் போர் நடந்தது. இப்போரில் மராத்தியர் தோற்றனர். அப்தலி தில்லியைக் கைப்பற்றினர். ஆனால், அவ் வெற்றியை அனுபவிக்க அவருக்குக் கொடுத்துவைக்கவில்லை. அவருடைய படைவீரர்களுக்குத் தரவேண்டிய ஊதியத்திற்குத் தேவையான செல்வம் தில்லியில் அவருக்குக் கிடைக்கவில்லை. அதனால் தாம் பேரரசராக முடிசூட்டிக்கொண்டு இந்துஸ்தானத்தை ஆட்சி புரிவதற்குரிய அரிய வாய்ப்பினைப் பொருளாதார நெருக்கடி காரணமாக அவர் கைவிட வேண்டியதாயிற்று. இதனால் ஷா ஆலத்தையே தில்லி அரசுகட்டிலில் தம் ஆதிக்கத்திற்குட்பட்ட சிற்றரசராக அமர்த்தினர். அதனுடன் தம் நம்பிக்கைக்குரிய நாசிப் - உத்-தௌலாவை முகலாய மன்னரின் அமைச்சராக நிய மித்துவிட்டு, அப்தலி ஆப்கானிஸ்தானம் திரும்பினர். இச் செயலை, 'அஹமது ஷா அப்தலி (இந்தியப்) பேரரசின் ஆட்சி

உரிமையை வேண்டாமென்று முடிதுறந்தார் என்றே கூறலாம்' என்று வி. ஏ. ஸ்மித் குறிப்பிடுகிறார். இதனால் இம் முறையும் இந்தியாவில் அப்தலியால் தம் ஆட்சியை நிறுவமுடியாமல் போயிற்று. இதன் பிறகும் நான்கு முறை முயன்றார். அம் முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

முகலாய அரசர் ஷா ஆலம் 1760 முதல் 1771 வரை பிரிட்டிஷாரின் தற்காப்பில், அலகாபாத்தில் இருந்தார். இக் காலத்தில 1764-ல் நடந்த பக்ஸார் (Buxar) போரில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரில் ஈடுபட்டுத் தோற்கடிக்கப் பட்டார். ஆனால், இராபர்ட் கிளைவால் முகலாய மன்னர் என அங்கீகரிக்கப்பட்டார். இதற்கு ஈடாக வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாநிலங்களின் திவானி உரிமையை ஆங்கிலேயருக்கு இவர் வழங்கியதோடு, ஆண்டிற்கு இருபத்தாறு (26) இலட்சம் ரூபாய் கப்பம் கட்டவும் ஒப்புக்கொண்டார்.

1771ஆம் ஆண்டில் ஷா ஆலம் ஆங்கிலேயரின் பிடியிலிருந்து நீங்கி, மராத்தியரின் தற்காப்பில் மறுபடியும் தில்லியில் குடியேறினர். 1788-ல் தில்லியில் ரோஹில்லாத் தலைவர்களால் குருடாக்கப்பட்டார். தில்லியை 1804-ல் ஆங்கிலேயர்கள் கைப்பற்றவே, மறுபடியும் அவர் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டார். 1806-ல் அவர் மாண்டார்.

இரண்டாம் அக்பர் (1806—1837)

ஷா ஆலத்திற்குப் பின் அவர் மகன் இரண்டாம் அக்பர் ஆட்சிக்கு வந்தார். அவர் ஆங்கிலேயரின் ஓய்வு ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தினர். இராஜாராம் மோஹன் ராயை இங்கிலாந்துக்கு அனுப்பித் தம் ஓய்வு ஊதியத்தை உயர்த்தும்படி ஆங்கிலேய அரசாங்கத்தை வேண்டிக்கொண்டார். இராஜா ராம் மோஹன்ராய்க்கு 'இராஜா' என்ற பட்டத்தை அளித்தவரும் இவரே. முகலாயப் பேரரசர் என்ற பட்டம், அக்பருக்குப் பெயரளவிலேயே இருந்தது. 1837-ல் இவர் மரண மடைந்தார்.

இரண்டாம் பகதூர் ஷா (1839—1858)

இரண்டாம் அக்பருக்குப் பிறகு, அவருடைய மகனாகிய இரண்டாம் பகதூர் ஷா பதவிக்கு வந்தார். 1857-ல் ஏற்பட்ட இந்தியாவின் முதலாவது சுதந்திரக் கிளர்ச்சி எனப்படும் படைவீரர் புரட்சியின்போது பெயரளவில் பேரரசராயிருந்தவர் இவரே. இவரைத்தான் பதவியில் அமர்த்தக் கலகத்தினர் விரும்

பினர். அதனால் அவரும் கலகத்தில் சேர்ந்தார். கலகம் ஒடுங்கியபின் இவரை ஓய்வு ஊதியத்துடன் இரங்கூனில் ஆங்கிலேயர் சிறைவைத்தனர். அங்கே 1862-ல் இவர் இறந்தார். இவருடைய இரண்டு புதல்வர்களும் படையினர் புரட்சியின்போது சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்விதம் பாபரால் தோற்றுவிக்கப்பட்ட அரச மரபு இரண்டாம் பகதூர் ஷாவுடன் மறைந்தது.

முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குரிய காரணங்கள்

முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பல காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, உலகில் தோன்றிய எல்லாப் பேரரசுகளும் ஒரு காலத்தில் சரிந்துதான் தீரவேண்டும் என்ற இயற்கை நியதிக்கு முகலாயப் பேரரசும் விதிவிலக்கன்று என்பதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும். இந்திய வரலாற்றில் தோன்றிய, சீரும் சிறப்பும் வாய்ந்த மௌரிய, குப்த, பல்லவ, சோழப் பேரரசுகளின் சரிவிற்குக் கூறிய பல பொதுக் காரணங்கள் முகலாயப் பேரரசின் சரிவிற்கும் பொருத்தமாயிருக்கும். எனினும், கால மாறுதல்களுக்கு ஏற்றாற்போல், வேறு பல குறிப்பிட்ட காரணங்களும் முகலாயப் பேரரசின் வீழ்ச்சியைத் துரிதப் படுத்தின என்பதில் ஐயமில்லை. இக் காரணங்களுள் முதன்மையானது, முகலாயப் பேரரசர்களின் தனிப்பட்ட வல்லாட்சித் தன்மையாகும்.

பிற்கால முகலாயர்களின் திறமையின்மை

பாபர், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் போன்ற முகலாயப் பேரரசர்கள் தனித்திறமை வாய்ந்தவர்களாக இருந்தனர். இவர்களின் தனித்திறமை, பேரரசு வளரவும் நீடிக்கவும் மிகவும் துணையாக இருந்தது. ஆனால், ஔரங்கசீப் பிற்குப்பின் பதவிக்கு வந்தவர்கள் ஆட்சித்திறன் குன்றியிருந்ததுடன், நாட்டின் பொறுப்பு வாய்ந்த அரசியல் கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலற்றவர்களாகவும் இருந்தனர். அரசியல் சதுரங்கத்தில் திறமைபெற்ற சில தலைவர்கள் அரசர்களைத் தங்களின் கைப்பொம்மைகளாக ஆட்டிப் படைத்தனர். அவர்களின் எதேச்சாதிகாரத்தில் சிக்கி, அவர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்குத் தக்கபடி அரசர்கள் அரசியல் நடத்தினர்.

பேரரசின் பரப்பு

முகலாயப் பேரரசின் பரப்புக் கட்டுக்கடங்காமல் பெருகி இருந்தது மற்றொரு முக்கியக் காரணமாகும். அக்பர் தம்

பேரரசைப் பரப்பும் ஆவலால் உந்தப்பட்டுத் தென் மாநிலங்களைத் தம் அரசுடன் இணைப்பதற்கெனத் தென்னிந்தியப் போரை 1595-ல் தொடங்கினர். அது முதல், ஒவ்வொரு முகலாயப் பேரரசரும் அடுத்தடுத்து அப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, அரசியல், பொருளாதாரக் காரணங்களுக்காகத் தொடங்கப்பட்ட இப் போர், ஷாஜஹான் காலத்தில் ஓரளவு சமயம் காரணமாகவும், ஔரங்கசீப்பின் காலத்தில் முற்றிலும் சமயங் காரணமாகவும் தீவிரமாக்கப் பட்டது. 'ஸ்பானியரின் போர்' எவ்விதம் நெப்போலியனின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்றோ, அதைப் போன்று, தென்னிந்தியப் போர் முகலாயர்களின் வீழ்ச்சிக்கு அடிகோலியது. போக்குவரவு வசதிகள் குறைந்த அக்காலத்தே, தில்லி போன்ற ஒரு மூலையிலிருந்து கொண்டு, பரந்த பேரரசை மன்னர்கள் கட்டிக் கண் காணிக்க இயலாது போயிற்று.

மையத்தில் அதிகாரச் செறிவு

முகலாயப் பேரரசின் ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் பேரரசரிடமே குவிந்துகிடந்தன. மதம், அரசியல், பொருளியல், நீதி, போர் போன்ற எல்லாத் துறைகளிலும் அவருடைய ஆணையே முடிவானதாக இருந்தது. நிருவாகம் சரிவர நடைபெறப் பேரரசரின் மேற்பார்வை மிகவும் இன்றியமையாததாயிற்று. மாநில ஆளுநர்களிடம் பேரரசருக்கு நம்பிக்கையின்மையினால், ஒருசில அதிகாரங்களே அவர்களிடம் கொடுக்கப் பட்டன. அதிகாரங்களைப் பகிர்ந்து ஆட்சி செலுத்தும் முறை கடைப்பிடிக்கப்படவில்லை; இதனால் தாமதமும், குழப்பமும், நேர்மையின்மையும் பெருகியதே தவிர, ஆட்சி வலுவடையவில்லை. இவ்வித நேரடி ஆட்சிமுறை, மன்னரின் தனித்திறமையைப் பொறுத்திருந்தது. மன்னரின் ஆட்சித்திறன் குன்றியவுடன், மாநில ஆளுநர்கள் சுதந்திரமாகச் செயல்படலாயினர். அவர்களை அடக்கவோ தண்டிக்கவோ இயலாத நிலைமை ஔரங்கசீப்பிற்குப் பிறகு ஏற்பட்டது. பல மாநிலங்கள் மன்னரின் ஆட்சியிலிருந்து விடுபட்டுத் தனித்தியங்கியதற்கு இதுவே காரணம். போக்குவரத்துச் சாதனங்களும், விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இன்று தோன்றியுள்ள செய்தித் தொடர்பு வசதிகளும் அக் காலத்தில் இல்லாமையால், ஔரங்கசீப்புக்குப் பின்வந்த பலமற்ற அரசர்களால் பேரரசின் கோடியிலிருந்த பல பாகங்களைக் கண்காணிக்க இயலாமற் போய்விட்டது.

வாரிசுரிமைப் போர்

மூத்த மகன் அரசுரிமையைப் பெறும் பழக்கத்தை (Law of Primo geniture) முகலாயர்கள் விதியாகக் கையாளவில்லை. அரசர் மரணப்படுக்கையில் விழுந்ததுமே, அவருடைய பிள்ளைகள் அரியணையைப் பிடிப்பதற்குத் தங்களுக்குள் சண்டையிடக் கத்தியைத் தீட்டத் தொடங்கினர். இந்த வாரிசுரிமைப் போர் அக்பர் கால முதலே தொடங்கிவிட்டது. அக்பரை எதிர்த்து அவர் மகன் சலீம் (பிற்கால ஜஹாங்கீர்) புரட்சிக்கொடி தூக்கினர். ஜஹாங்கீருக்கு எதிராக அவர் புதல்வர் ஷாஜஹான் கலகம் செய்தார். அவருடைய மகன் ஔரங்கசீப், தந்தையைச் சிறையிலடைத்ததுடன் தம் சகோதரர்கள் மூவரையும் ஈவிரக்கமின்றிக் கொன்று ஆட்சியைப் பிடித்தார். இவ்வாறு இளவரசர்களுக்குள் வல்லவனே ஆட்சியைக் கைப்பற்றினன். 'வாளே வாரிசுரிமையை நிருணயிக்கும் ஆயுதமாக விளங்கியது' என்பதில் தவறில்லை. இத்தகைய வாரிசுரிமைப் போர் இடைவிடாமல் நீடித்து, அரச குடும்பத்தின் மதிப்பையும், சக்தியையும் சிதறடித்தது. இப் போர்களால் பேரரசின் ஆற்றல் குறையலாயிற்று. ஔரங்கசீப் வரையில் இளவரசர்களுள் வல்லவரே பட்டத்திற்கு வந்தனர். ஔரங்கசீப்பிற்குப் பிறகு இது தலைகீழாக மாறி, தகுதியற்றவரே பட்டத்திற்கு வரும் சூழ்நிலையைப் பிரபுக்கள் உருவாக்கிவிட்டனர். தங்களுக்குத் தலையாட்டும் இளவரசரையே மன்னராக்கிப் பிரபுக்கள் தங்கள் போக்கில் ஆட்சிசெலுத்தினர். பிற்கால முகலாய அரசர்கள் சந்தர்ப்ப வாதிகளின் கைப்பாவைகளாகவே இருந்தனர்.

சமயப் பொறையின்மை

ஔரங்கசீப்பின் தீவிரச் சமயப்பற்றும் முகலாயப் பேரரசின் சிதைவைத் துரிதப்படுத்தியது. இந்துக்களின் வெறுப்பை மட்டுமன்றி, முகலாயர்களின் வெறுப்பையும் பல காரணங்களால் அவர் தேடிக்கொண்டார். ஔரங்கசீப் அசாதாரண ஆற்றல் பெற்றிருந்தார் என்பதில் ஐயமில்லை. தளர்வுரு ஊக்கம் இவருடைய தனிச் சிறப்பான பண்பாக இருந்தது. ஆனல், இவருடைய குறுகிய மனப்பான்மையும், எதற்கும் சந்தேகப்படும் இயல்பும், நிருவாகத்தில் இருந்து வந்த இடர்ப்பாடுகளை மிகுதியாக்கின. அதனுடன், இந்துக்கள், முகம்மதியர் ஆகிய இரு சாராரின் மனப்பூர்வமான ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே முகலாயப் பேரரசு நிலைபெற முடியும் என்பதை ஔரங்கசீப் உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டார். முகலாயப் பேரரசை

ஆதரித்துப் பாதுகாத்ததில் இராஜபுத்திரர்கள் முக்கியப் பங்கு கொண்டிருந்தனர். அக்பரின் ஆட்சிக்குத் தூண்போன்றிருந்தவர்கள் இவர்களே. இவர்களின் ஆதரவைத் தேடிக்கொள்வதற்குப் பதிலாக ஔரங்கசீப் அவர்களின் கொடிய பகைவரானார். சுருங்கக் கூறின், நண்பர்களைப் பகைவர்களாக்குவதிலேயே இவர் வெற்றி கண்டார் எனலாம். மேலும், மராத்தியர், சீக்கியர், ஜாத்துகள் (Jats), சத்நாமிகள் (Satnamis) ஆகியோரின் கடும்பகைமையையும் தேடிக் கொண்டார். ஆகவே, முகலாயப் பேரரசு சரிந்ததற்கு இவருடைய தீவிரச் சமயப்பற்றும் மக்களின் மேல் திணிக்கப்பட்ட பல கட்டுப்பாடுகளும் காரணமாயிருந்தன. இந்துக்களின் மீது இவருக்கிருந்த வெறுப்பும், முகலாயர்களின் மேல் இவர் விதித்த கட்டுப்பாடுகளும், இவருடைய இரக்கமற்ற தன்மையும் இவர் கண்முன்னேயே முகலாயப் பேரரசைச் சரியச் செய்தன. இச் சரிவைத் தடுக்கவோ, சரிப்படுத்தவோ ஔரங்கசீப்பால் இயலவில்லை.

பொருளாதார நெருக்கடி

முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஔரங்கசீப் ஒருவர்தாம் மூலகாரணம் என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகும். பொருளாதார நெருக்கடியும் முகலாயப் பேரரசின் சரிவுக்கு முக்கியக் காரணமாக இருந்தது. நிதியே ஒரு நாட்டின் முதுகெலும்பாகும். முகலாயர் கருவூலம், ஔரங்கசீப் காலத்தில் ஏறக்குறையக் காலியான நிலையை அடைந்துவிட்டது. தொடர்ந்து நடத்திய போரே அதற்குக் காரணம். காலியான கருவூலத்தைக்கொண்டு போர்வீரரின் மதிப்பையோ, விசுவாசத்தையோ பெற இயலவில்லை; நாட்டின் வளர்ச்சியைப் பெருக்கவும் முடியவில்லை. பிரபுக்களும், அதிகாரிகளும் சுகபோகங்களில் மிதக்க, மக்கள் வறுமையில் வாடினர். அதை நீக்க அரசர்கள் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

முகலாயப் படையின் தரக்குறைவு

முகலாயப் படை தரத்திலும், தகுதியிலும் மிக மோசமாக இருந்தது. படைவீரர்கள் ஒழுக்கமும், கட்டுப்பாடும், நிரந்தரமான பயிற்சியுமின்றி இருந்தனர். அதனுடன் நிலையான படையும் இல்லை. அக்பர், தம் காலத்தில் ஜாகீர் முறைக்குப்பதிலாக மன்சப்தாரி முறையைச் செயல்படுத்தினர். அம் முறை விரைவில் ஜாகீர் முறையைவிட மோசமான நிலையை உருவாக்கியது. போர்வீரர்கள் தங்கள் மனைவி, மக்கள் மற்றப் பொருள்களுடன் போர்க்களத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்: படை அணி

வகுத்துச் செல்லும் காட்சி அந்தப்புரம், கடைவீதி, இசை வாணர்கள் முதலிய அரசவைத் தோரணைகள் அனைத்துடன் ஒரு நகரமே ஊர்ந்து செல்வது போன்று காட்சியளித்த தென்றால், அதன் விளைவை நன்கு உணர்ந்துகொள்ளலாம்.

மராத்தியர் எழுச்சி

மராத்தியரின் எழுச்சியும், முகலாயப் பேரரசின் வளர்ச்சிக்கு ஊறு விளைவித்தது எனலாம். இந்தியா முழுவதையும் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரும் ஆற்றலும் சூழ்நிலையும் மராத்தியர் பெற்றிருந்தனர். ஆங்கிலேயர் இந்திய அரசியலில் தலையிடாமலிருந்து, மராத்தியரும் ஒற்றுமையுடன் செயல்பட்டிருந்தால் முகலாயப் பேரரசுக்கு மராத்தியரே முற்றுப்புள்ளி வைத்திருப்பார்கள். ஆகவே, மராத்தியரின் எழுச்சியை முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கியக் காரணமாகக் கருதுவதில் தவறில்லை.

அயல்நாட்டினர் படையெடுப்பு

நாதிர் ஷா, அகமது ஷா அப்தலி போன்ற அயல் நாட்டவரின் அடுக்கடுக்கான படையெடுப்புகளும் முகலாயப் பேரரசு சரிவதற்குக் காரணமாயின. இவர்களின் படையெடுப்புகள் முகலாயர் ஆட்சியை நிலைகுலையச் செய்ததுடன் பொருளாதார வறட்சியையும் உண்டாக்கின.

ஆங்கிலேயரின் வருகை

வாணிகத்திற்காக இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர், அரசியலிலும் ஈடுபட்டதுடன் தங்களது ராஜதந்திரத்தாலும், கடற்படை வன்மையாலும் சிறிது சிறிதாக முகலாயப் பேரரசர்களைத் தங்களின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தனர். இறுதியில் பெயரளவில் முகலாய மன்னராக இருந்தவரையும் இரங்கூனுக்குத் துரத்தி, முகலாயப் பேரரசை அடியோடு ஒழித்துக்கட்டியவர்களும் ஆங்கிலேயரேயாவர்.

2. ஐரோப்பியர் வருகை

இந்தியாவிற்கும் மேலைநாடுகளுக்கும் தொன்றுதொட்டே வாணிபத் தொடர்பு இருந்துவந்தது. ஏழாம் நூற்றாண்டிலிருந்து அராபிய வணிகர்களின் மூலம் மேலைநாட்டின் வணிகர்கள் இந்தியப் பொருள்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர். தரைமார்க்கமாய் நடந்த வாணிபத்தில் பல இன்னல்களும் இடர்ப்பாடுகளும் இருந்தன. இதனால் காலதாமதம் ஏற்பட்டது மட்டுமன்றிக் கொள்ளைக் கூட்டத்தினரின் தொல்லையையும் அவர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது. மேலும், இந்தியப் பொருள்களைப் பெரும்பாலும் கான்ஸ்டான்டிநோபிள் வழியாகவே மேலைநாட்டினர் கொண்டு சென்றனர். 1483ஆம் ஆண்டு அந் நகரைத் துருக்கியர் கைப்பற்றிக்கொண்டு ஐரோப்பிய வணிகருக்குப் பல தடைகளை விதித்தனர்; வாணிபம் நடைபெறாதவாறும் தடுத்தனர். இதனால் மாற்றுவழி கண்டுபிடிக்க வேண்டுமென்ற கட்டாயம் ஏற்பட்டது. தரைமார்க்கத்தை விடக் கடல்மார்க்கமே மேல் என்றும் அவர்கள் நினைத்தனர். ஏனெனில், கப்பல் கட்டும் துறையில் ஐரோப்பியர் நல்ல தேர்ச்சியைப் பெற்றிருந்தனர். மேலும் 'மெரினர்ஸ் காம்பஸ்' (Mariners Compass) என்ற 'மாலுமியின் திசைகாட்டும்' கருவி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இதனால் கடற்பயணம் சிரமமின்றிச் செய்ய வசதி ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் பல இந்தியாவிற்குக் கடல்வழி கண்டுபிடிப்பதில் போட்டியிட்டன. இப் போட்டியே, அமெரிக்கா போன்ற பல புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கக் காரணமாயிற்று. இம் முயற்சியில் முன்னணியில் இருந்தவர்கள் போர்த்துகீசியர்கள்.

போர்த்துகீசியர்கள்

1492-ல் கிறிஸ்தோபர் கொலம்பஸ் (Christopher Columbus) என்பவர், ஸ்பெயின் நாட்டு அரசர் பெர்டினந்து,

அரசி இஸபெல்லா ஆகியோரின் உதவியையும், ஆசியையும் பெற்றுத் தம் கலங்களுடன் இந்தியாவைக் கண்டறியப் புறப் பட்டார். உலகம் உருண்டை வடிவமானது என்ற தத்துவப்படி மேற்றிசை நோக்கிச் சென்ற அவர் புதியதொரு நிலப்பகுதியைக் கண்டுபிடித்தார். அதுதான் தாம் நாடி வந்த 'இந்தியா' என அவர் நினைத்தார். இதனால் அதற்கு 'மேற்கிந்தியத் தீவுகள்' என்றும், அம் மக்கட்குச் 'செவ்விந்தியர்' என்றும் கொலம்பஸ் பெயர் சூட்டினார்.

1487ஆம் ஆண்டில் பார்த்தலோமியோ டயஸ் (Bartholomeo Diaz) என்பவர் ஆஃபிரிக்காவில் 'நன்னம்பிக்கை முனை' வரை, அல்லது அவர் பெயரிட்டபடி 'புயல் முனை' வரை சென்று விட்டுத் திரும்பிவிட்டார். அவருக்குப்பின் வாஸ்கோடகாமா (Vascoda Gama) என்பவர், அவர் காட்டிய கடல்வழியையே பின்பற்றி நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு 1498ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் தேதியன்று மேற்கிந்தியாவில் கள்ளிக்கோட்டை என்ற துறைமுகத்தை அடைந்தார். அன்றிலிருந்து மேலைநாட்டிற்கும், இந்தியாவிற்கும் நேரடியான இக் காலக் கடல்மார்க்கம் ஏற்படுத்தப்பட்டது.

போர்த்துகீசியரின் முயற்சி, முடிவில் வாஸ்கோடகாமாவால் வெற்றியடைந்தது. கொலம்பஸ் ஒரு புதிய உலகத்தைக் கண்டு பிடித்தார். வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு ஒரு புதிய கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்தார். போர்த்துகீசியர் இந்தியா விற்கு வருகையில் முகாலயப் பேரரசு இந்தியாவில் நிறுவப் படவில்லை. விஜயநகரப் பேரரசும் மேலைக்கடல் பகுதியில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டவில்லை. கள்ளிக்கோட்டையைச் சாமரின் (Zamorin) என்றழைக்கப்பட்ட பரம்பரையைச் சார்ந்த இந்து அரசர் ஆண்டு வந்தார்.

வாஸ்கோடகாமா சாமரின் மன்னரிடம் சில வணிக உரிமைகளைப் பெற்றதுடன், கொச்சி, கண்ணனூர், முதலிய இடங்களில் புதிய பண்டகசாலைகளையும், பலம் பொருந்திய காவற் கோட்டைகளையும் ஏற்படுத்தினர். போர்த்துகீசியரின் வாணிகமும், அதிகாரமும் இந்தியாவில் வளர வித்திட்டவர்கள் வாஸ்கோடகாமா, ஃபிரான்ஸிஸ் - டி - அல்மெய்டா (Fransis-de-Almeida), அல்ஃபான்சோ - தி - ஆல்புகர்க் ஆவர்.

ஃபிரான்ஸிஸ்–டி–அல்மெய்டா

போர்த்துகல் அரசின் முதல் ஆளுநராகப் ஃபிரான்ஸிஸ் - டி - அல்மெய்டா, 1505-ல் இந்தியாவிற்கு அனுப்பிவைக்கப்

பட்டார். இவர் போர்த்துகீசியரின் வாணிகத்தை இந்தியாவில் சிறப்புடன் நடத்தவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். 1505ஆம் ஆண்டு முதல் 1509ஆம் ஆண்டுவரை அதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர். இவர் நாட்டைக் கைப்பற்றும் கொள்கையைப் பின்பற்றுதல், வாணிகத்தைப் பாதிப்பதுடன் வாணிக இலாபத்தையும் அழித்துவிடும் என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தார். இந்தியாவில் போர்த்துகீசியரின் ஆதிக்கம் செழிக்கவும், நீடித்து நிற்கவும் கடல் ஆதிக்கம் அவசியம் என்றுணர்ந்து அதைக் கவனத்துடன் பாதுகாத்து வந்தார். இவருடைய இக் கொள்கையே 'கடல் ஆதிக்கக் கொள்கை' அல்லது 'நீலநீர்க் கொள்கை' (Blue Water Policy) என்ற சிறப்புப் பெயர் பெற்றது. இந்தியாவில் ஐரோப்பியரின் வாணிகவளம் கடல் ஆதிக்கத்தைப் பொறுத்திருந்தது. ஆகவே, போர்த்துகீசியர் இந்தியாவின் உள்நாட்டுப் பகுதியில் தம் அரசு ஆதிக்கத்தை நிறுவ முயலாமல், கடற் பகுதியை மட்டும் தம் ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே இக் கொள்கையின் நோக்கமாகும்.

போர்த்துகீசிரியரின், வருகையால் அராபியர், துருக்கியர்களின் இந்திய வாணிகம் மிகவும் பாதிக்கப்பட்டது. இது வரையில், மேற்கு நாடுகளுடன் அராபியர்கள், துருக்கியர்கள் மூலம் இந்திய வாணிகம் நடைபெற்று வந்தது. போர்த்துகீசியர்களின் வருகையால் அவர்களுடைய வாணிகம் பாதிக்கப்பட்டது. மேலும், சாமரினுக்கும் கொச்சி அரசருக்கும் பகையிருந்தது. போர்த்துகீசியர்கள் சாமரினுக்கு எதிராகக் கொச்சி அரசருடன் சேர்ந்துகொண்டனர். இதனுல் போர்த்துகீசியர்கள் அராபியர்கள், துருக்கியர்கள், சாமரின் ஆகியோரின் பகைவர்களாயினர். 1509ஆம் ஆண்டு அல்மெய்டா தாயகம் திரும்பினுர். அவருக்குப் பின் அல்ஃபான்சோ - தி - ஆல்புகர்க் (Alfanso-de-Albuquerque) என்பவரை ஆளுநராக, 1509ஆம் ஆண்டு போர்த்துகீசிய அரசு அனுப்பி வைத்தது.

அல்ஃபான்சோ-தி-ஆல்புகர்க் (1509—1515)

ஆல்புகர்க் மிக்க திறமையுள்ளவர். இந்தியாவில் போர்த்துகீசிரியர்கள் வணிகர்களாகமட்டும் வாழாமல் ஆட்சியாளர்களாகவும் திகழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். ஆகவே, போர்த்துகீசியப் பேரரசை நிறுவப் பேராவல் கொண்டார். இவ்விதம் அல்மெய்டாவிற்கு நேர்மாருன கருத்தைக் கொண்டிருந்ததுடன் அதைச் செயல்படுத்தவும்

முனைந்தார். அதன் விளைவே கோவாவைக் (Goa) கைப்பற்றியதாகும். 1510-ல் கோவாவை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினர். இதையே போர்த்துகீசியரின் தலைநகராகவும் செய்தார். வணிகராய் வந்த ஐரோப்பியர் முதன்முதலாக இந்தியாவில் கைப்பற்றிய இடம் கோவாவாகும். அப்பொழுது விஜயநகரப் பேரரசராயிருந்த கிருஷ்ணதேவராயர் இதற்காகப் போர்த்துகீசியரை மிகவும் பாராட்டி ஒரு விருந்தும் அளித்தார். பீஜப்பூர் சுல்தான் அவருக்குப் பகைவராயிருந்ததால், அவரிடமிருந்து கைப்பற்றிய கோவாவைத் தாமே கைப்பற்றியதைப் போன்ற உவகையை அடைந்தார். ஆல்புகர்க் 1511-ல் தூரக்கிழக்கில் (Far East) உள்ள மலாக்கா (Malacca) என்ற தீவைக் கைப்பற்றினர். இத் தீவு மூர்கள் (Moors) என்ற முகம்மதியரின் ஆதிக்கத்தின் கீழிருந்தது. சீன-இந்திய வாணிக மார்க்கத்தில் இத் தீவு அமைந்திருந்ததால், கிழக்கு நாடுகளுடன் முகம்மதியர்களின் வாணிகத் தொடர்பிற்கு ஒரு முக்கியத் தலமாக அமைந்திருந்தது. இத் தீவைக் கைப்பற்றிய செய்தியைக் கேட்டுப் போப் ஆண்டவர்கூட மட்டில்லா உவகை கொண்டார் என்பதைக் கொண்டு அதன் சிறப்பை உணரலாம். 1513-ல் பாரசீக வளைகுடாவிலுள்ள ஆர்மூஸை (Ormuz) ஆல்புகர்க் கைப்பற்றினர். இம் மாபெரும் வெற்றிக்குப்பின், திரும்பி வருகையில் 1515-ல் ஆல்புகர்க் காலமானர். கோவாவில், அவர் ஆதரவால் கட்டப்பட்ட திருச்சபையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

போர்த்துகீசியரின் ஆட்சிமுறை

இந்தியாவில் போர்த்துகீசியரின் ஆட்சிமுறையை நிறுவிய பெருமை ஆல்புகர்க்கையே சாரும். ஆல்புகர்க் சிறந்த படைத்தலைவர் மட்டுமன்றிச் சிறந்த அரசியல் மேதையும் ஆவார் என்பது, அவர் போர்த்துகீசியரின் ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைத்து நிற்கச் செய்த பல சீர்திருத்தங்களிலிருந்து நன்கு புலனாகின்றது. போர்த்துகீசிய அரசு இந்தியாவில் நிலைத்திருக்க வேண்டுமானல், அவர்கள் இந்தியர்களுடன் இணைந்து செயல்படவேண்டுமென்பதை நன்குணர்ந்திருந்தார். இக் குறிக்கோளை மனத்தில் கொண்டே, இந்திய அரசியல் அடிப்படையிலேயே தம் ஆட்சிமுறையினையும் அமைத்தார்; இந்தியர்களை வரித் தண்டல் போன்ற துறைகளில் அமர்த்தினர். இவர் ஆட்சியில் இந்தியர்களும் பங்குபெற வேண்டுமென்பதற்காக, போர்த்துகீசிய கல்வி முறையைப் பரப்ப, பல பள்ளிகளை நிறுவினர். ஆனல், முகம்மதியர்களை மிகவும் கொடுமையாக நடத்தினர். அவர்களை ஆட்சித் துறைகளில் அமர்த்தவில்லை. போர்த்துகீசியர்களை இந்தியப்

பெண்களை மணக்கும்படி ஊக்குவித்தார். இக் கலப்புத் திருமணங்களின் மூலம், நிரந்தரமான போர்த்துகீசிய மக்கள் தொகையை இந்தியாவில் ஏற்படுத்த நினைத்தார்; சதி (Sati) என்ற கொடிய வழக்கத்தை ஒழித்தார்; விஜயநகர அரசுடன் நட்புடன் பழகினார்.

ஆல்புகர்க்குக்குப் பின் டையு (Diu), டாமன் (Daman), சால்செட்டு (Sallsette), பாசீன் (Bassein), சவுல் (Chaul), பம்பாய், சென்னையில் சாந்தோம், வங்காளத்தில் ஹூக்ளி போன்ற பல இடங்கள் போர்த்துகீசியரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. ஆனால், படிப்படியாக கோவா, டையு, டாமன் என்ற மூன்று இடங்களைத் தவிர மற்ற இடங்களை எல்லாம் இழந்தனர். 1961ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் நாள், இந்தியக் குடியரசு இராணுவ நடவடிக்கையின் மூலம் தன்னுடன் இணைத்துக்கொள்ளும் வரையில் போர்த்துகீசியரின் ஆதிக்கத்தின்கீழ் அம் மூன்று இடங்களும் இருந்தன.

போர்த்துகீசியரின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்தியாவில் போர்த்துகீசியரின் ஆதிக்கம் குன்றலாயிற்று. அதற்கான முக்கியக் காரணங்கள் கீழ்வருமாறு.

போர்த்துகல் ஸ்பெயினுடன் இணைக்கப்படல்

1580ஆம் ஆண்டு போர்த்துகல் ஸ்பெயினின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இதனால் போர்த்துகல் அரசு தன் சுய ஆட்சியை இழந்து, ஒரு மூன்றாந்தரக் கீழ்நிலையை அடைந்தது. அதனுடன் ஸ்பெயினும் போர்த்துகலின் இந்தியப் பகுதிக்கு முக்கியத்துவம் செலுத்தவில்லை. அது வளர்வதற்கான ஆக்கமும், ஊக்கமும் தரவில்லை. ஸ்பெயின் கலந்துகொண்ட போர்களில் போர்த்துகலும் கலந்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் போர்த்துகலின் பணம், படை முதலியன வீணாக்கப்பட்டன.

பிரேசில் கண்டுபிடிப்பு

தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் (Brazil) ஸ்பெயின் ஆட்சியின் கீழிருந்தது. போர்த்துகல் மக்கள்தொகையிலும் படைபலத்திலும் ஒரு சிறிய நாடு. அதனால் இந்தியாவிலிருந்த போர்த்துகல் பகுதிகளையும், பிரேசிலையும் ஒரே சமயத்தில் பாதுகாக்க முடியவில்லை.

கடலாதிக்கம் இழத்தல்

இந்தியாவில் ஐரோப்பியரின் ஆதிக்கம் அவர்களின் கடல் ஆதிக்கத்தைப் பொறுத்திருந்தது. அக் கடலாதிக்கத்தைப் போர்த்துகல் மற்ற ஐரோப்பிய வணிகர்களின் வருகையால் இழந்தது. இதனுல் இந்தியாவில் அவர்கள் செல்வாக்குச் சரியத் தொடங்கியது.

முகலாய, மராத்தியரின் எழுச்சி

முகலாய, மராத்திய அரசுகளின் வளர்ச்சியால் போர்த்துகீசியரின் ஆதிக்க வளர்ச்சி தடுக்கப்பட்டது. 1632-ல் ஷாஜஹான் ஹூக்ளியைக் கைப்பற்றிப் போர்த்துகீசியரை வங்காளத்தை விட்டு வெளியேற்றினுர். சிவாஜியும் சாம்பாஜியும் சால்செட், பாஸின் முதலிய தீவுகளைக் கைப்பற்றிப் போர்த்துகீசியரை மேற்குக் கடற்கரையிலிருந்து விரட்ட முயற்சி செய்தனர்.

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சி

போர்த்துகீசியரின் வாணிகம், அரசியல் பலம் யாவும் விஜய நகரத்துடன் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தன. 1565ஆம் ஆண்டு விஜயநகரம் தலைக்கோட்டைப் போரில் படுதோல்வியடைந்தது. அதன் வீழ்ச்சி போர்த்துகீசியரையும் பாதித்தது. சீவல் (Sewell) என்ற பேராசிரியர், 'விஜயநகர அரசுடன் கோவா அரசும் வளர்ந்து அது வீழ்ந்தவுடன் போர்த்துகீசிய அரசும் வீழ்ந்தது' என்று கூறுகிறுர்.

மற்ற ஐரோப்பியரின் போட்டி

டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் இவர்களுக்குப் போட்டியாக வந்ததால் போர்த்துகீசியரின் வாணிகமும், அரசியல் ஆதிக்கமும் பாதிக்கப்பட்டன. 1612-ல் ஆங்கிலேயர் போர்த்துகீசியரைச் சூரத்தில் தோற்கடித்தனர். 1616-ல் இந்தியாவிற்கு வந்த டச்சுக்காரர்கள் போர்த்துகீசியருக்குச் சொந்தமான மலாக்கா, கொழும்பு, நாகப்பட்டினம், கொச்சி முதலான இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

கலப்புமணமுறையின் தீங்கு

ஆலபுகர்க்கின் 'கலப்புமணமுறையும்' போர்த்துகீசியரின் வீழ்ச்சிக்கு அடிகோலியது. பண்பிலும், குலத்திலும் உயர்ந்த இந்தியக் குடும்பப் பெண்கள் போர்த்துகீசியரை மணக்க முன் வரவில்லை. குலத்திலும், குணத்திலும் கீழ்த்தரமான பெண்களே

போர்த்துகீசியரை மணந்ததால் அவர்களின் சந்ததி, போர்த்துகீசியரின் அரசைப் பலப்படுத்துவதற்குப் பதில் பல பிரச்சினைகளை உண்டாக்கின. இதனால் அரசு பலவீனம் அடைந்தது.

கிறித்துவ சமயத்தைப் பரப்ப முயலுதல்

போர்த்துகீசியர் இந்தியரைப் பல தொல்லைகளுக்காளாக்கிக் கிறித்துவராக்க முயன்றனர். கிறித்துவராக மறுத்தவர்களைக் கொளுத்தினர்; கொன்றனர்; ஊனமாக்கினர். சமய வெறி கொண்ட எந்த அரசும் இந்தியாவில் நிலைத்ததில்லை. அதற்குப் போர்த்துகீசியரும் விலக்கல்லர்.

ஆளுநரின் திறமையின்மையும் ஊழலும்

அதனுடன் ஆல்புகர்க்குக்குப் பின் வந்தவர்கள் ஆற்றல் படைத்தவரல்லர். மேலும், போர்த்துகீசிய ஊழியர்களின் ஊதியம் மிகவும் குறைவாயிருந்ததால் இலஞ்சம் போன்ற ஊழல்களில் ஈடுபட்டனர். சுயநலம்கொண்டு மக்கள் நலனில் அக்கறை செலுத்தாமலிருந்தனர்.

இத்தகைய முக்கியக் காரணங்களால் போர்த்துகீசியரின் ஆதிக்கம் இந்தியாவில் அழிவுற்றது.

டச்சுக்காரர்

போர்த்துகீசியருக்குப் பின் டச்சுக்காரர் (Dutch) இந்தியாவுடன் வாணிகம் செய்ய வந்தனர். 1602ஆம் ஆண்டு 'டச்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழு' ஒன்று நிறுவப்பட்டது. இக் குழு மற்றப் போட்டி வாணிகக் குழுவுடன் போரிடவோ, பண்டக சாலைகளை நிறுவுவதற்காகக் கிழக்கிந்தியச் சுதேச அரசுகளுடன் எவ்விதமான உடன்படிக்கையையும் செய்து கொள்ளவோ இவ் வணிகக் குழுவுக்கு ஹாலந்து அரசு ஒரு பட்டயம் மூலம் உரிமை வழங்கியது. டச்சுக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் நிருவாகத்தை மேற்கொள்ள ஹாலந்து அரசு ஆளுநர்களை அனுப்பிவைத்தது. அத்தகைய ஆளுநர்களில் மிகச் சிறந்தவர் கோயன் (Coen) என்பவர். இவர் வாணிகத்திற்கு முக்கியமான இடங்களை மட்டுமன்றி, மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் பகுதிகளையும் டச்சு ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்ற குறிக்கோள் கொண்டவர். மலேயாப் பகுதியின் வாணிகத்திற்கு மிக முக்கியமான வியாபாரத் தலமான பதாவியாவைக் (Batavia) கைப்பற்றி அதையே டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமையிடமாகச் செய்தார். ஹன்டர் என்ற வரலாற்று ஆசிரியர்,

கோயனே ஆற்றலிலும், ஆற்றிய பணிகளிலும் ஆல்புகர்க், தியூப்ளே, வாரன்ஹேஸ்டிங்ஸ் போன்றோருடன் ஒப்பிடலாம் என்று குறிப்பிடுகிறார்.

கிழக்கிந்தியத் தீவுகளான போர்னியோ, ஜாவா, சுமத்திரா போன்ற பகுதிகளிலும், இந்தியாவில் மசூலிப்பட்டணம், சதுரங்கப்பட்டணம், பழவேற்காடு, சின்சுரா, காஸிம்பஜார், சூரத், நாகப்பட்டினம், கொல்லம், கொச்சி போன்ற இடங்களிலும் டச்சுக்காரர் வியாபாரக் கூடங்களை அமைத்தனர். அவர்கள் கிழக்கிந்தியத் தீவுகளின் ஆதிக்கத்திலேயே மிக்க கவனம் செலுத்தினர். முதலில் அவர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் நட்புறவு நிலவியது. ஆனால், வாணிகப் போட்டியால் அவர்களுக்குள் பகைமை மூண்டது. 1623ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் பதின்மரும், ஜப்பானியர் ஒன்பதின்மரும் அம்பாய்னு (Amboyna) என்னுமிடத்தில் டச்சுக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டனர். இதுவே 'அம்பாய்னுப் படுகொலை' எனப்படுவதாகும். அப்பொழுது ஆங்கிலேய வணிகர்கள், டச்சு வணிகர்களைவிட வலிமை குறைந்தவர்களாயிருந்ததால், கிழக்கிந்தியத் தீவுகளை அவர்களிடமே விட்டுவிட்டு இந்திய வாணிகத்தில் முழுக் கவனம் செலுத்தினர். டச்சுக்காரர்களும், கிழக்கிந்திய நறுமணப் பொருள்களால் அதிக இலாபம் பெற்றதால், இந்திய வாணிகத்தில் அதிக நாட்டம் செலுத்தவில்லை. மேலும் 1824-ல் டச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி இந்தியாவிலிருந்த தம் பற்றிடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டு, சுமத்திராத் தீவிலுள்ள ஆங்கிலேயரின் பற்றிடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அரசியல் அமைப்பு முறை

டச்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழு தன் ஆதிக்கத்திற்குட்பட்ட இடங்களைத் தலைமை ஆளுநர் (Governor - General) என்பவரின்கீழ்ப் பணிபுரிந்த பல ஆளுநர்களைக் கொண்டு ஆட்சி செலுத்தியது. சுதேச அரசுகளின் நிருவாகத்தில் கூடிய வரையில் அஃது தலையிடாமலிருந்தது. வாணிகச் சலுகை கொடுக்க மறுத்தாலோ, வாணிகத்திற்குத் தடை விதித்தாலோ அன்றி, ஆட்சியில் டச்சுக்காரர் தலையிடாமலேயே நடந்து கொண்டனர். ஆனால், அவர்களுடைய ஆதிக்கத்தின்கீழிருந்த பகுதியிலுள்ள குடிமக்களைத் தம்கீழ்ப் பணிசெய்யக் கட்டாயப்படுத்தினர். இதனால் குடிமக்களும் அவர்களும் சுமுகமாக இல்லை,

அடிக்கடி அவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுக்கொண்டேயிருந்தது. அவர்களின் ஆதிக்கம் தடைப்பட இது ஒரு முக்கியக் காரணமாகும். இதனுடன், ஆங்கிலேயரின் பகைமையை அவர்களால் சமாளிக்க இயலவில்லை. மேலும், ஹாலந்து ஐரோப்பியப் போர்களில் ஈடுபட்டதால் அதன் படைபலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. ஆகவே, தன் குடியேற்றப் பகுதிகளை ஹாலந்தால் பாதுகாக்க இயலவில்லை. இதனுடன் திறமையின்மை, இலஞ்சம் போன்ற ஊழல்களும் டச்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் நிருவாகத்தைச் சீரழித்தன.

ஆங்கிலேயர்கள்

இங்கிலாந்தின் பேரரசியார் முதலாம் எலிசபெத் காலத்தில், 1599ஆம் ஆண்டின் இறுதியில் இலண்டன் நகர வணிகர்கள் சிலர் கூட்டுச் சேர்ந்து கிழக்கிந்திய வாணிகக் குழுவை நிறுவினர். 1600ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதியன்று தான் 'பதினைந்து ஆண்டுகளுக்குக் கிழக்கிலே வாணிகம் செய்யும் தனி உரிமையைக் கிழக்கிந்திய வாணிகக் குழுவினருக்கு எலிசபெத் பேரரசி ஒரு பட்டயம் மூலம் வழங்கினர்.' அக் குழு, ஆண்டுதோறும் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிருவாகக் குழுவின் மேற்பார்வையின்கீழ்ச் செயல்பட்டு வந்தது. இவ் வுறுப்பினர்கள் முதலில் தனித் தனியாகவும், பின்னர்க் கூட்டுறவு முறையிலும் கப்பல்களைச் செலுத்தி வாணிகம் செய்யலாயினர். இங்கிலாந்தின் பேரரசரான மூன்றும் வில்லியம் 1690ஆம் ஆண்டு மேலும் ஒரு வணிகக் குழுவுக்குக் கிழக்கிந்திய வணிக உரிமையை வழங்கினர். இவ் விரு குழுக்களிடையே அடிக்கடி போட்டியும், சச்சரவும் உண்டாயின. இறுதியில் 1708ஆம் ஆண்டில் அவ் விரண்டு நிறுவனங்களையும் ஒன்ருக்கி 'ஐக்கியக் கிழக்கிந்திய வாணிகக் குழு' என்று பெயரிட்டனர். இவ் வாணிகக் குழுவே பிறகு இந்தியாவில் பிரிட்டிஷ் பேராதிக்கத்தை நிறுவியதாகும்.

1608-ல்தான், வாணிகக் குழு இயக்குநர் இந்தியாவில் வாணிகசாலைகளை அமைப்பதற்கான உரிமையை முகலாய மன்னரிடமிருந்து பெறக் கேப்டன் ஹாக்கின்ஸ் (Captain Hawkins) என்பவரை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார். அப்பொழுது முகலாயப் பேரரசராய் இருந்த ஜஹாங்கீர் ஹாக்கின்ஸை நன்கு வரவேற்ருர். ஆனல், போர்த்துகீசியரின் பொருமையால் அவர் ஜஹாங்கீரிடம் ஒரு சலுகையையும் பெற இயலாமல் 1611-ல் தம் தாயகம் திரும்பினர். அவருக்குப் பின்

சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe) என்பவர் 1615-ல், ஜஹாங்கீரை வாணிகக் குழுவின் தூதராய்ச் சந்தித்தார். ரோ சிறந்த ஆற்றல் உள்ளவர்; நாவன்மையிலும் சிறந்தவர்; 1618ஆம் ஆண்டு வரை ஜஹாங்கீருடன் இருந்தார். அவர் முயற்சியால் முகலாயப் பேரரசின் பல பாகங்களில் வாணிகசாலைகளை அமைத்துக்கொள்ள ஆங்கிலேயர்கள் உரிமை பெற்றனர். அதன்படி சூரத், ஆக்ரா, அஹமதாபாத், புரோச்சு (Broach) என்னுமிடங்களில் ஆங்கிலேயர்கள் தம் வாணிகசாலைகளை அமைத்தனர். 1615ஆம் ஆண்டில் முதன்முதலில், ஆங்கிலேயர் சூரத்திலேதான் தம் வாணிகசாலையை அமைத்தனர். இதற்காக, 1615ஆம் ஆண்டில் ஜஹாங்கீரால் வழங்கப்பட்ட பட்டயம் (Farman) இந்திய வரலாற்றில் முக்கியத் திருப்பத்தைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. ஆங்கில ஆதிக்கத்தின் வளர்ச்சிக்கு இதுவே முதற் படியாகும். 1661ஆம் ஆண்டில் பம்பாய், இரண்டாம் சார்லஸ் அரசரால் கிழக்கிந்திய வாணிகக் குழுவுக்கு ஆண்டிற்குப் பத்துப் பவுன் வாடகைக்கு விடப்பட்டது. இரண்டாம் சார்லஸ் போர்த்துகீசிய இளவரசியை மணந்த போது, அவருக்குச் சீதனமாகப் போர்த்துகீசிய அரசரால் பம்பாய் கொடுக்கப்பட்டது. விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியான சந்திரகிரி அரசரிடமிருந்து 1639-ல் ஃபிரான்ஸிஸ் டே (Francis Day) என்பவர் சென்னையைக் குத்தகைக்கு எடுத்தார். அவ்வரசரின் தந்தையின் பெயரான சென்னப்பன் பெயரால் இது சென்னப்பட்டினம் எனப் பெயர் பெற்றது என்று சிலர் கருதுகின்றனர். அவ்விடத்தில் டே, 1640-ல் ஒரு கோட்டையைக் கட்டினார். அதுவே செயின்ட் ஜார்ஜ் கோட்டையாகும். இந் நகரம் நாளாவட்டத்தில் பெருகி வளர்ந்தது.

மேற்கு வங்காளத்தில் ஹூக்ளி நதிக் கரையிலும், ஒரிஸ்ஸாவில் பாலசூரிலும், பீகாரில் பாட்னாவிலும், கிழக்கு வங்காளத்தில் டாக்காவிலும் வாணிகசாலைகளை ஆங்கிலேயர் அமைத்தனர். கல்கத்தாவில் 1700ஆம் ஆண்டு, ஆங்கிலேயர் ஃபோர்ட் வில்லியம் என்ற கோட்டையைக் கட்டினர். இக் கோட்டை பின்னர்ப் பெருஞ் சிறப்பை எய்தியது.

ஃபிரெஞ்சுக்காரர்கள்

மற்ற ஐரோப்பியர்கள் கீழ்த்திசை நாடுகளில் வாணிகம் செய்து பெரும் பொருளீட்டுவதைக் கண்ட ஃபிரெஞ்சு அரசும் இம் முயற்சியில் இறங்கலாயிற்று. ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழு கோல்பெர்ட் (Colbert) என்ற ஃபிரெஞ்சு நிதி அமைச்சரின்

முயற்சியால் 1664ஆம் ஆண்டில் 14ஆம் லூயிப் பேரரசர் காலத்தில் நிறுவப்பட்டது. ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழு அரசாங்கத்தால் நிறுவப்பட்டது. ஆனால், ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழுவோ தனியார் நிறுவனமாகும். இதனால் ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக்குழு ஆட்சித்துறையின் ஓர் அங்கமாகும். இவ்வாறு இவ் விரண்டு வணிகக் குழுக்களும் அமைப்பில் மிகவும் மாறுபட்டவையாகும்.

ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழு ஃபிரான்ஸிஸ் மார்டின் (Francis Martin) தலைமையில் சிறந்து விளங்கியது. அக் குழுவின் தலைமை இயக்குநராக (Director General) இவர் 1699ஆம் ஆண்டு முதல் 1706ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார்.

பீஜப்பூர் சுல்தானின் பிரதிநிதியிடமிருந்து மார்டின் புதுச்சேரியை விலைக்கு வாங்கினார். 1674-ல் புதுச்சேரி ஃபிரெஞ்சுக்காரர்களின் வாணிகசாலையாயிற்று. வங்காளத்தில் சந்திரநாகூர் என்ற வாணிகசாலையை 1692-ல் ஃபிரெஞ்சுக்காரர்கள் கட்டி முடித்தனர். டச்சுக்காரர்கள் புதுச்சேரியை 1693-ல் கைப்பற்றினர். பிறகு 1697-ல் ஃபிரெஞ்சுக்காரர்களுக்குத் திருப்பித் தரப்பட்டது. மார்டின் தம் துணிவாலும் விடாமுயற்சியாலும் புதுச்சேரியைப் ஃபிரெஞ்சுக்காரர்களின் தலைமைப் பீடமாக வளரும்படி செய்தார். மார்டின் 1706ஆம் ஆண்டு காலமானார். அவருக்குப் பின் லெனார் (Lenoir) என்பவர் ஆளுநராக நியமிக்கப்பட்டார். லெனார், மாஹியையும் (Mahe), ஏனாமையும் (Yanam) ஃபிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். புதுவையில் ஒரு கல்லூரியையும் நிறுவினார். அவருக்குப் பின்னர் ஆளுநரான டுமாஸ் (Dumas) 1739ஆம் ஆண்டில் தஞ்சாவூர் அரசரிடமிருந்து காரைக்காலைப் பெற்றார். தஞ்சாவூரில் ஏற்பட்ட வாரிசுப் போரில் ஃபிரெஞ்சுக்காரர் செய்த உதவிக்காக இப் பகுதியைப் பெற்றார்.

அவருக்குப் பின் 1741ஆம் ஆண்டு தியூப்ளே (Dupleix) ஆளுநராகப் பதவியேற்றார். இந்தியாவில் ஃபிரெஞ்சு ஆதிக்கம் தியூப்ளே காலத்தில் உச்சநிலையடைந்தது. கர்நாடகப் போர்கள் என்ற பகுதியில் அது விவரிக்கப்பட்டுள்ளது.

3. கர்நாடகத்தில் ஆங்கில—ஃபிரெஞ்சு ஆதிக்கப் போட்டி

ஔரங்கசீப் காலத்தில் கர்நாடகத்தை முகலாயர்கள் கைப் பற்றித் தாவூத்கான் (Daud Khan) என்பவரின் ஆட்சியின்கீழ் அது விடப்பட்டபோது ஆர்க்காட்டைத் தலைநகராக்கித் தாவூத் கான் ஆண்டு வந்தார். அவருக்குப் பின் வந்த சாத்-அத்-உல் லாகானை (Saad-at-Ullah Khan) கர்நாடகத்தின் நவாபாக, தக் காணத்தில் தம் ஆதிக்கத்தை நிறுவிய ஆஸஃப் ஜா (Asaf Jah) அங்கீகரித்தார். சாத்-அத்-உல்லாகானுக்குப் பிறகு தோஸ்ட் அலி (Dost Ali) ஆர்க்காட்டின் நவாபாக 1732ஆம் ஆண்டு பதவி ஏற்றார். அவருடைய மருமகனை சந்தா சாகிப் (Chanda Chahib) மதுரையை ஆண்ட நாயக்க மன்னரை நீக்கிவிட்டுத் தோஸ்த் அலியின் சார்பில் ஆண்டு வந்தார். திருச்சிராப்பள்ளியைத் தோஸ்த் அலியின் மகன் சஃப்தார் அலி (Safdar Ali) ஆண்டு வந்தார். மராத்தியர் தென்னிந்தியாவின்மேல் 1740ஆம் ஆண்டு படையெடுத்து வந்த போது தோஸ்த் அலியைத் தமால் சேரி முனையில் (Damal cheri pass) தோற்கடித்தனர். தோஸ்த் அலியும் போரில் மாண்டார்; திருச்சிராப்பள்ளியையும் கைப் பற்றிக் கொண்டனர்; சந்தா சாகிப்பையும் சிறைப்பிடித்துச் சென்றனர். சஃப்தார் அலியும் பிறகு கொலை செய்யப்பட்டுவிட்ட தால் ஆஸஃப் ஜா தம்மிடம் பணிபுரிந்த அன்வார் உத்தீனை (Anwar-Uddin) ஆர்க்காட்டு நவாபாக 1743ஆம் ஆண்டு நியமித் தார். சாதாரண ஊழியராயிருந்த அன்வார் உத்தீன நவாபாக் கியது, காலஞ்சென்ற தோஸ்த் அலி குடும்பத்தினருக்குப் பிடிக்க வில்லை. அன்வார் உத்தீனுக்கு எதிராகச் சதிச் செயலிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். கர்நாடக அரசியல் சூழ்நிலை இவ் விதம் இருக்கையில் ஐரோப்பாவில் ஆஸ்திரிய 'வாரிசுரிமைப் போர்' மூண்டது. இப் போரில் ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்

காரரும் ஒருவருக்கொருவர் எதிர்எதிராகக் கலந்து கொண்டனர்.

ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரர்களும் தங்கள் குடியிருப்புகளைத் தென்னிந்தியாவின் பல இடங்களி லமர்த்தி இருந்தனர். ஆங்கிலேயருக்குச் செயின்ட் ஜார்ஜ் (St. George) என்ற சென்னைப் பகுதியும், ஸெயின்ட் டேவிட் (St. David) என்ற கடலூர்ப் பகுதியும், ஃபிரெஞ்சுக்காரர்களுக்குப் புதுச்சேரியும் (Pondicherry) மிக முக்கியமானவையாகும். அரசியல், வாணிகப் போட்டி இவர்களுக்குள் இருந்துகொண்டே இருந்தது. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் (War of Austrian Succession) 1740-ல் தொடங்கியது. ஐரோப்பியப் போர், அவர்களின் குடியிருப்பு நாடுகளிலெல்லாம் எதிரொலிக்கும் இயல்புடையதாயிருந்ததால், இந்தியாவிலும் ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரரும் போரிடும் நிலை ஏற்பட்டது. அப்போது சென்னைக்கு மார்ஸ் (Morse) என்பவர் ஆளுநராகவும், புதுச்சேரிக்கு தியூப்ளே (Dupleix) ஆளுநராகவும் இருந்தனர். ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆஸ்திரியப் போரில் ஈடுபட்டுள்ள தங்கள் தாய்நாட்டின் சார்பில் தென்னகத்திலும் போரிட முயன்றனர். கர்நாடகத்தில் ஆட்சி புரிந்த அன்வார் உத்தீன், தம் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் போரிடக் கூடாதென உத்தரவு பிறப்பித்தார்.

முதல் கர்நாடகப் போர்
(1746—1748)

ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரரும் கர்நாடகத்தில் போரிடக் கூடாதென்ற அன்வார் உத்தீன் உத்தரவிற்கு ஆங்கிலேயர் பணிந்தனர். ஆனால், தியூப்ளே மொரீஷஸ் தீவின் ஆளுநரான லா போர்டனைய்ஸ் (La Bourdannais) என்பவர் மூலம் சென்னையைக் கைப்பற்றினர். இதை எதிர்த்த அன்வார் உத்தீனுக்குச் சென்னையைக் கைப்பற்றி அவரிடம் அதை ஒப்படைக்கப் போவதாகத் தியூப்ளே ஆசைகாட்டிச் சமாதானப்படுத்தியிருந்தார். அவ்வாறு ஆசை காட்டி இருந்ததால், அன்வார் உத்தீனும் வாளாவிருந்துவிட்டார். ஆனால், சொன்ன வாக்குப்படி சென்னையைத் தராததால், தியூப்ளேக்கு எதிராக ஒரு பெரும் படையை அன்வார் அனுப்பினர். அப் படையைச் சென்னை அடையாறு ஆற்றங்கரையில் நடந்த போரில் வெகு சுலபமாக ஃபிரெஞ்சுப் படை தோல்வியைத் தழுவச் செய்தது. இந்த அடையாற்றுப் போர் வரலாற்று முக்கியம் வாய்ந்த தெனலாம். ஏனெனில், இதுவரையில் ஆங்கிலேயரும், ஃபிரெஞ்சுக்காரரும் இந்திய அரச

ரிடம் ஓரளவிற்கு அஞ்சி நடந்து வந்தனர். கட்டுப்பாடும் தேர்ச்சியுமடைந்த பீரங்கிப் படையின்முன் இந்தியப் படை ஒன்றும் செய்ய இயலாது என்ற பெரிய உண்மையைத் தியூப் ளேக்கு உணர்த்தியது இப் போரேயாகும். இந்திய அரசின் உண்மை வலிமையைப் புரிந்துகொண்ட தியூப்ளே, இந்தி யாவில் ஃபிரெஞ்சுப் பேரரசை நிறுவும் ஆசை கொண்டார். இவ் வாசையால் உந்தப்பட்டு இந்திய அரசர்களின் உள்நாட்டுக் கொள்கையில் தலையிட்டு, இந்திய அரசர்களைத் தம் எண்ணப்படி ஆட்டிப்படைத்தார். இதே முறையைப் பின்பற்றித்தான் ஆங்கி லேயரும் தம் ஆதிக்கத்தை இந்தியாவில் நிறுவினர். முதலாம் கர்நாடகப் போர் வரலாற்றில் சிறப்புப் பெற்றது. ஆஸ்திரிய வாரிசுப் போர் 1748ஆம் ஆண்டு ஐக்ஸ்-லா.சாபெல் (Aix-la-chapelle) உடன்படிக்கையால் முடிவுற்றபோது, ஆங்கிலேயர் சென்னையைத் திருப்பிப் பெற்றனர். ஃபிரெஞ்சுக்காரர் இதற்குப் பதிலாக அமெரிக்காவில் அவர்களிழந்த லூயிஸ்பர்க் (Louis burg) என்ற பகுதியைத் திரும்பப் பெற்றனர். இந்தியாவில் இதைத் தவிர எவ்வித ஆதிக்க மாற்றமும் இப் போரால் ஏற்பட வில்லை.

இரண்டாம் கர்நாடகப் போர்
(1749—1754)

முதலாம் கர்நாடகப் போரின் முடிவில் தியூப்ளேயிடம் சிறந்த படையும் இருந்தது. இந்தப் படையைக் கலைக்க அவர் விரும்ப வில்லை. வேலையில்லாமல் அப் படையினருக்கு ஊதியம் தரவும் அவர் மனம் இசையவில்லை. மேலும், ஆங்கிலேயருடன் போர் எந்த நிமிடமும் நேரிடலாம் என்ற அச்சமும் இருந்துகொண்டே இருந்தது. இந்திய அரசியலில் குழப்பம் ஏற்பட்டால் அதில் தலையிடத் தக்க தருணத்தை மிக்க ஆவலுடன் தியூப்ளே எதிர் பார்த்திருந்தார். பெரும்படையுடன் விளங்கிய அன்வார் உத்தீனை அடையாற்றுப் போரில் தோற்கடித்ததால், தியூப்ளே தம் வலிமையால் இந்தியாவில் ஃபிரெஞ்சுப் பேராதிக்கத்தை நிறுவ முடியுமெனத் திடமாக எண்ணினர். இந்திய உள்நாட்டு விவகா ரங்களில் தலையிடும் தருணத்தை மிக்க ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தார். அவர் எதிர்நோக்கிய சூழ்நிலை தக்காண, கர்நாடக வாரிசுப் போரின் வடிவில் வந்தது. ஐதராபாத் நவாபு ஆஸஃப் ஜா 1748 ஆம் ஆண்டு காலமானர். நஸிர்ஜங் (Nasir Jang) என்ற அவர் குமாரர் நவாப் பதவிக்குவந்தார். ஆஸஃப் ஜாவின் மகளின் மகனை முஜாஃபர் ஜங் (Muzaffar Jang) அவரை எதிர்த்தார். மராத்தியரால் விடுவிக்கப்பட்ட சந்தா சாகிப்பும் அன்வார் உத்தீனை எதிர்த்து ஆர்க்காட்டு நவாபு பதவிக்குப் போட்டி

இட்டார். தியூப்ளே சந்தா சாகிப்புடனும் முஜாஃபர் ஜங்குடனும் (Mujzaffar Jang) கூட்டுச் சேர்ந்தார். இதனல் நாஸிர்ஜங் ஆங்கிலேயரின் உதவியை நாடினர். ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை வளரவிட விருப்பாததால் நாஸிர்ஜங்கின் கூட்டில் சேர்ந்தனர். தியூப்ளே ஆர்க்காட்டில் சந்தா சாகிபுக்கும் ஐதராபாத்தில் முஜாஃபர் ஜங்குக்கும் உதவிவந்ததற் கெதிராக ஆங்கிலேயர் ஆர்க்காட்டில் அன்வார் உத்தீனுக்கும் ஐதராபாத்தில் நாஸிர்ஜங்குக்கும் உதவ இசைந்தனர்.

ஆம்பூர்ப் போர்

வாணிக அரசு ஆதிக்கக் காரணங்களால் ஃபிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் இரண்டாம் முறையாகக் கர்நாடகத்தில் 1749ஆம் ஆண்டில் போரில் இறங்கினர். தியூப்ளே, சந்தா சாகிப், முஜாஃபர் ஜங் ஆகிய மூவரின் படை, வேலூருக்கு அருகிலுள்ள ஆம்பூர் என்னுமிடத்தில் கூடி அன்வார் உத்தீனைத் தோற்கடித்துக் கொலேயும் செய்தது. அவருடைய மகன் முகமது அலி திருச்சிராப்பள்ளிக்கு ஓடியொளிந்தார். வெற்றி பெற்ற சந்தா சாகிபு ஆர்க்காட்டு நவாபானர். முகமது அலியைத் தொடர்ந்து ஒரு படையுடன் சந்தா சாகிப் திருச்சிக் கோட்டையை அடைந்து அதை முற்றுகையும் இட்டார்.

இதற்கிடையில் நாசிர் ஜங் கொலே செய்யப்படவே தியூப்ளே, முஜாஃபர் ஜங்கினே 1750ஆம் ஆண்டு நிஜாமாக்கினர். முஜாஃபருக்கு உதவியாகத் தலேசிறந்த தளபதியான புஸ்ஸியின் (Bussy) கீழ் ஒரு ஃபிரெஞ்சுப் படையினேயும் ஐதராபாத்திற்குத் தியூப்ளே அனுப்பி வைத்தார். இச் செயலுக்கு ஈடாக அவர் முஜாஃபரிடமிருந்து பெரும் மானியங்களேப் பெற்றதோடு கிருஷ்ணு நதிக்குத் தெற்கேயுள்ள தென்னிந்தியாவின் ஏகபோக வாணிக உரிமையையும் பெற்ருர். முஜாஃபர் விரைவிலே கொலே செய்யப்பட்டார். ஆனல் புஸ்ஸி, சலபத் ஜங்கை (Salabat Jang) உடனடியாக நிஜாமாக்கினர். அவருக்கு யாதொரு தீங்கும் நேராதவாறு கண்காணித்தும் வந்தார். இந் நிகழ்ச்சிகள் தியூப்ளேக்குப் பேரும் புகழும் பெற்று விளங்க வாய்ப்பு அளித்தன. 1748—1750 ஆண்டுகளில் தியூப்ளேயின் புகழ் உச்சநிலேயை அடைந்தது. கிருஷ்ணு நதிக்குத் தெற்கே கன்னியாகுமரிவரையுள்ள நிலப்பகுதிக்குத் தியூப்ளே நவாபின் பிரதிநிதியானதால் மொத்தத்தில் தியூப்ளே இந்தியாவில் மூன்று கோடி மக்களேத் தம் தனி அதிகாரத்தின் கீழ் ஆட்சி செய்தார் என்று ‘மெக்காலே’யும் மற்ற வரலாற்று ஆசிரியர்களும் கூறுகின்றனர்.

சாதாரண நிலையிலிருந்த ஃபிரெஞ்சுக்காரரைத் தென்னிந்தியாவின் அரசியல் தலையெழுத்தை நிர்ணயிக்கும் நிலைக்கு உயர்த்திய பெருமை அவரையே சாரும். தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருக்கும் இந்திய அரசுகளுள் எதற்கு ஐரோப்பியர் உதவி செய்கிறார்களோ அவ்வரசு போரில் வெற்றி பெறுவது உறுதி என்னும் கருத்து நடைமுறையில் அவரால் மெய்ப்பித்துக் காட்டப் பெற்றது.

இராபர்ட் கிளைவின் வருகையும் ஆர்க்காட்டைக் கைப்பற்றலும்

சென்னையிலிருந்த ஆங்கிலேயர், தியூப்ளேயின் வளர்ச்சியைப் பார்த்துக்கொண்டு அமைதியாய் இருக்கவில்லை; அப்படி இருப்பது ஆபத்து என்றும் உணர்ந்தனர். அதனால் முகமது அலிக்கு உதவுவதாக வாக்களித்ததுடன், ஒரு படையையும் இராபர்ட் கிளைவ் மூலம் அவருக்கு உதவும்பொருட்டு 1751ஆம் ஆண்டு அனுப்பிவைத்தனர். பிரிட்டிஷ் பேரரசுக்கு அடி கோலிய அரசியல் மேதை இராபர்ட் கிளைவ், இவ்விதம்தான் முதன்முதலில் இந்திய அரங்கில் அடியெடுத்து வைத்தார். அவர் தம் வருகை தியூப்ளேயின் புகழுக்கும், ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்க ஆசைக்கும் வைக்கப்பட்ட முற்றுப்புள்ளி எனலாம். 210 வீரர்களுடன் திருச்சிக்குப் புறப்பட்ட கிளைவ் வழியில் அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு, கர்நாடகத்தின் தலைநகரான ஆர்க்காட்டை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். (சில வரலாற்று ஆசிரியர்கள், இவ்வெண்ணத்தை வெளியிட்டவர் அன்வார் உத்தீனின் மகனை முகமது அலி என்றும், மற்றும் சிலர் இக் கருத்தைத் தெரிவித்தவர் இராபர்ட் கிளைவ் என்றும் மாறுபட்டுக் கூறுகின்றனர்.) சந்தா சாகிப்பிற்கும், தியூப்ளேவிற்கும் இது எதிர்பாராத அதிர்ச்சியைத் தந்தது. ஐம்பது நாள்கள் முழு மூச்சுடன் போரிட்டும் அதைத் திருப்பிக் கைப்பற்ற முடியவில்லை. திருச்சியைத் தாக்காமல் ஆர்க்காட்டைத் தாக்கும் எண்ணம் யாருடையதாய் இருந்தாலும், ஆர்க்காட்டைக் கைப்பற்றியபின், ஃபிரெஞ்சுக்காரர்களால் எல்லா இன்னல்களுக்கிடையில் அதைத் திருப்பிக் கைப்பற்ற முடியாமல் செய்த பெருமை இராபர்ட் கிளைவையே சாரும். ஏனெனில், சந்தா சாகிபின் முழுப் படையும் திருச்சிக் கோட்டையை முற்றுகையிடச் சென்றிருந்தது. ஆகவே, இராபர்ட் கிளைவ் வெகு எளிதில் ஆர்க்காட்டைக் கைப் பற்றிக் கொண்டார். ஆனால் இழந்த தம் தலைநகரை மீட்கச் சந்தா சாகிபு தம் எல்லாப் படையையும் திரட்டிச் செய்த முயற்சியை, எண்ணிவிடக் கூடிய அளவில் உள்ள படையைக் கொண்டு இராபர்ட் கிளைவ் முறியடித்தார் என்பதுதான் கிளைவின்

போரிடும் ஆற்றலைச் சிறப்புறச் செய்கின்றது. வெற்றிப் புரவியின்மீதமர்ந்து வீறு நடைபோட்ட இராபர்ட் கிளைவ், ஆரணியிலும் காவேரிப்பாக்கத்திலும் தம் பகைவர்களை மேலும் தோற்கடித்தார். பிறகு கிளைவ் திருச்சிராப்பள்ளி சென்று, அங்குச் சந்தா சாகிபு தஞ்சம் புகுந்திருந்த ஸ்ரீரங்கத்தை முற்றுகையிட்டார்.

சந்தா சாகிபு கொலைசெய்யப்படுதல்

மைசூர் அரசரும், தஞ்சை அரசரும் மட்டுமன்றி மராத்தியத் தலைவரான முராரி ராவும் முகமது அலிக்கு உதவ முன்வந்தனர். அவர்கள் உதவியைத் தக்க முறையில் ஆங்கிலேயர் பயன்படுத்திக் கொண்டனர். முதலில் திருச்சிராப்பள்ளி ஃபிரெஞ்சு முற்றுகையிலிருந்து மீட்கப்பட்டது. சந்தா சாகிபும் ஸ்ரீரங்கத்திற்குள் ஓடி ஒளிந்தார். முடிவில், சந்தா சாகிபு சரணடைந்தார். முகமது அலி, சந்தா சாகிபைத் தூக்கிலிட்டுக் கொன்றார். இதற்குப் பிறகு முகமது அலி கர்நாடகத்தின் நவாபு ஆனார்.

தியூப்ளே தொடர்ந்து போரிட்டார். ஆனால் ஃபிரெஞ்சு அரசு ஃபிரெஞ்சு வணிகக் குழுவின் இயக்குநர்களுள் ஒருவரான கோதயூவை (Godeheu) இந்தியாவிற்கு அனுப்பி, தியூப்ளேயைத் திருப்பி அழைத்துக்கொண்டது. தியூப்ளேயை விசாரிக்கும் உரிமையும், கையொப்பமிடப்பட்ட ஆணைப் பத்திரமும் கோதயூவிடம் கொடுத்தனுப்பப்பட்டன. தியூப்ளே அரசியல் பிழை புரிந்திருக்கிறார் என்று காணப்பட்டால், அவரைத் தண்டிக்கும் அதிகாரமும் அந்த ஆணைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. 1755-ல் தியூப்ளே ஆங்கிலேயருடன் ஒரு தாற்காலிக உடன்பாடு செய்துவிட்டுத் தாய்நாடு திரும்பினார். கோதயூ, தியூப்ளேயின் கொள்கைகளையும் போக்கையும் மாற்றித் தம் தாய்நாட்டு ஆணைப்படி தலையிடாக் கொள்கையைப் பின்பற்றலானார். இவ்விதம் இரண்டாம் கர்நாடகப் போர் முடிவுற்றது. தாயகம் சென்ற தியூப்ளே பட்டினி, நோய் இவற்றால் அவதிப்பட்டு அநாதையாய் 1763ஆம் ஆண்டு பாரிஸிலே காலமானார்.

மதிப்பீடு

இரண்டு கர்நாடகப் போர்கள் தியூப்ளேயின் பதவிக் காலத்தில் நிகழ்ந்தன. தியூப்ளே 1697-ல் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர்; ஃபிரெஞ்சு வணிகக் குழுவில் சேர்ந்து 1720ஆம் ஆண்டு புதுவைக்கு வந்தார்; சந்திரநாகூரின் (Chandranagore) ஆளுநராகப் பணிபுரிந்து, தமக்கு ஆட்சித்

துறையில் உள்ள மதிநுட்பத்தைத் தெளிவுபடுத்தினர்; 1741-ல் புதுவையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். சூழ்நிலைகள் ஒரு மனிதனுக்குகந்ததாக இருக்குமானல், அச் சூழ்நிலைகளைப் பெரிதும் பயன்படுத்திக்கொண்டு செயலாற்றும் தகுதியுடைய மனிதனைத் தியூப்ளே விளங்கினர். அரசியல் சக்திகளின் சம நிலையினை மாற்றியமைப்பதற்குரிய வாய்ப்புகளும் வசதிகளும் இல்லாத சமயத்திலும், அவ் வரசியல் சக்திகளின் சமநிலையினைத் தம் விருப்பம்போல் மாற்றியும் திருத்தியும் அமைக்கும் பேராற்றலும் பெருந்திறனும் அவர் பெற்றிருந்தார். சுருங்கச் சொல்வதென்றல், ஓர் அரசியல் ஞானியின் மதிநுட்பத்தைத் தியூப்ளே இயல்பாகவே பெற்றிருந்தார் என்று கூறலாம். அவ் வியல்புதான், அவரைத் தென்னிந்திய அரசியல் அமைப்பில் உள்ளார்ந்த பண்பாக இருந்த ஆற்றலின்மையைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தறிய உதவியது. மேலும், அதன் விளைவாக ஐரோப்பியரின் குறைந்த ஆற்றல் தென்னிந்தியாவில் பெரும் முக்கியத்துவத்தைப் பெறலாயிற்று. ஆனல், அவரிடம் காணப்பெற்ற முக்கியக் குறை அளவுகடந்த தன்னம்பிக்கையும் ஆணவமுமாகும். தன்னம்பிக்கை அளவுகடந்து இருந்ததுடன் எந்தப் பிரச்சினையையும் உடனுக்குடன் தீர்வு காணும் குணமின்மையால், பல பிரச்சினைகளைக் காலம் கடந்தே முடிவு செய்தார். அதன் பலன் அவர் எதிர்பார்த்ததற்கு மாருகவே இருந்தன. மேலும், அவருடைய ஆணவமிக்க மனப்பான்மை அவருடைய நண்பர்களுடன் சேர்ந்து பணியாற்ற முடியாதவாறு செய்தது. மேலும், அவருடைய அரும்பணியைத் தொடர்ந்து செய்வதற்குரிய ஆற்றலும் பண்புமுடைய தலைவர்களை அவர் தோற்றுவிக்காமல் சென்ருர். இதைத் தவிர ஃபிரெஞ்சு, கடலாதிக்கமின்மையால் ஆங்கிலேயரின் துரிதப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் அவருடைய படைத்தலைவர்கள் புஸ்ஸியைத் தவிர, அவருடைய கட்டளைப்படி செயலாற்றவும் இல்லை; ஒத்துழைக்கவும் இல்லை: அவர்களால், கிளைவ், லாரன்ஸ் போன்ற மதிநுட்பமும் திறமையும் வாய்ந்தவர் முன்னல் ஒன்றும் செய்ய முடியவில்லை. மேலும், தியூப்ளே ஃபிரெஞ்சுப் பேரரசை நிறுவுவதற்குப் பின்பற்றிய முறைகளைத் தாயகத்திலிருந்தவர்கள் போற்றி ஆதரிக்கவில்லை. அவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக வெற்றியைமட்டும் தெரிவித்தார்; தோல்வியை மூடி மறைத்தார். இவர் செய்கை ஒரு மர்மமாகவே இருந்தது. இவை யாவற்றையும்விட நெடுங்காலம் போர் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்குத் தேவையான நிதி வசதி இல்லாமையால் தியூப்ளே அல்லற்பட்டார். ஆகவே,

இந்தியாவில் ஃபிரெஞ்சுப் பேரரசிற்கான அடிக்கல்லை நாட்டும் வாய்ப்பு தியூப்ளே கை நழுவியதற்கு இவரது தவறு மட்டும் காரணமன்று, ஃபிரெஞ்சு அரசாங்கம் இவரது ஆற்றலையும் நுண்ணறிவையும் உணராததுடன், ஊக்கமும் ஒத்துழைப்பும் தர மறுத்ததும் முக்கியக் காரணமாய்க் கருத வேண்டும். தம் இளமை, செல்வம், வாழ்க்கை யாவற்றையும் தியூப்ளே ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவில் நிறுவச் செலவிட்டார். அதற்கு அவருக்குக் கிடைத்த பரிசு வறுமை, பிணி; அநாதையாய்க் கடைசியில் மரணம் எய்தியதேயாகும்.

மூன்றும் கர்நாடகப் போர்

(1757—1763)

முதலாம் கர்நாடகப் போரைப் போலவே, மூன்றும் கர்நாடகப் போரும் ஐரோப்பாவில் ஏற்பட்ட போரின் தொடர்பேயாகும். 1756ஆம் ஆண்டு ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் மூண்டது. இப் போரில் தாயக நாடுகள் எதிர்த்துப் போரிட்டதால், இந்தியாவிலும் இதன் எதிரொலியாக மூன்றும் கர்நாடகப் போர் 1757ஆம் ஆண்டு தொடங்கியது. ஃபிரெஞ்சு அரசு கௌன்ட்-டி-லாலி (Count de Lally) என்பவரின்கீழ் ஒரு பெரும் படையினை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது. கௌன்ட்-டி-லாலி அஞ்சா நெஞ்சமும், நேர்மையும் நிறைந்தவர். ஆனல் முரட்டுப் பிடிவாதமும், மற்றவர் கருத்துக்கு மதிப்புத் தராத ஆணவமுமுடையவராக நடந்துகொண்டார். அவர் படைத் தளபதியாகவும் ஃபிரெஞ்சுக் கம்பெனியின் ஆளுநராகவும் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். ஆட்சியிலிருந்த ஊழல்களை நீக்க முயன்றதில், ஊழியரின் வெறுப்பிற்கும் ஒத்துழையாமைக்கும் ஆளாக நேரிட்டது. மேலும் கடற்படை டாஸ் (d'Ache) என்பவரின் தலைமையின்கீழ்த் தனியே இயங்கியதால் கௌன்ட்-டி-லாலியால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

லாலி தென்னிந்தியாவிற்கு வந்த பொழுது, சூழ்நிலை ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு மிகவும் சாதகமாய் இருந்தது. ஆங்கிலேயரின் படையின் முக்கால் பகுதிக்குமேல் கிளைவின்கீழ் வங்காளத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. கடற்படையும் வாட்சன் தலைமையின்கீழ் வங்காளத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்நிலையில் லாலி செயின்ட் டேவிட் கோட்டையைத் தாக்கி, அதைக் கைப்பற்றினர். சென்னையைத் தாக்குவதே அவரின் அடுத்த குறிக்கோளாக இருந்தது. இது உண்மையிலேயே சிறந்த முடிவும் ஆகும். ஏனெனில், சென்னை பாதுகாப்பின்றி இருந்த



கர்நாடகப் போர்கள்
மங்களூர்
பெங்களூர்
வேலூர்
காவேரிப்பாக்கம்
சென்னை
குடகு
ஆர்காடு
காஞ்சிபுரம்
ஆரணி
செங்கல்பட்டு
ஸ்ரீரங்கப்பட்டிணம்
வந்தவாசி
செஞ்சி
மைசூர்
பெண்ணையாறு
பாண்டிச்சேரி
மாஹி
செண்ட்டேவிட்-கோட்டை
கடலூர்
பரங்கிப்பேட்டை
கள்ளிக் கோட்டை
நீலகிரி மலை
கரூர்
காவேரி
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
நாகப்பட்டிணம்
கொச்சி
மதுரை
வைகை
மன்னார் வளைகுடா
இலங்கை
திருநெல்வேலி
கன்னியாகுமரி
0 100
கிலோமீட்டர்கள்

துடன், அதைக் கைப்பற்றுவதன்மூலம் ஆங்கிலேயரைத் தென்னிந்தியாவிலிருந்தே துரத்தலாம். ஆனால், சென்னையை உடனே தாக்காமல், தஞ்சாவூர் அரசர் கொடுக்கவேண்டியிருந்த பழைய கடனைத் திரும்பப் பெற, தம் பொன்னான நேரத்தையும், ஆற்றலையும் செலவழித்தார். தஞ்சாவூர் அரசிடமிருந்தும் கடனை வசூலிக்க முடியவில்லை. இவ்வாறு காலதாமதத்திற்குப் பின் லாலி சென்னையைத் தாக்கினார். கால தாமதமாக்கிச் சென்னையைத் தாக்கியது ஒரு பெரும் தவறாகும். மேலும், ஐதராபாத்திலிருந்த புஸ்ஸியைத் தமக்கு உதவி புரிய அழைத்துக்கொண்டார். இதுவும் அவர் செய்த மிகப்பெரிய தவறாகும். லாலி அவசரக்காரரர். புஸ்ஸி அனுபவ அறிவும், போரியல் சூழ்ச்சித் திறனும் மிக்கவர். ஆகவே, இவ் விருவரும் ஒன்றாய்ச் செயல்பட முடியவில்லை. புஸ்ஸி ஐதராபாத்தைவிட்டுச் சென்னைக்குச் சென்றவுடன், கிளைவ் ஆங்கிலப் படையொன்றைப் ஃபோர்டேயின் (Forde) தலைமையின்கீழ்த் தக்காணத்திற்கனுப்பி அங்கிருந்த ஃபிரெஞ்சுப் படையைத் தோற்கடித்து நிஜாம் ஸலபத் ஜங்கை (Salabat Jang) ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். ஃபிரெஞ்சுக்காரரின் தக்காணத்திலிருந்த ஆதிக்கம் இதனால் இழக்கப்பட்டது. லாலியால் சென்னையையும் கைப்பற்ற முடியவில்லை. இதற்கிடையில் வங்காளத்தில் வெற்றிக் கொடி நாட்டிய ராபர்ட் கிளைவ், அங்கிருந்து பொருளையும் போர் வீரரையும் தக்க சமயத்தில் சென்னைக்கு அனுப்பி ஃபிரெஞ்சுக் கடற்படையையும், வங்காளத்திலிருந்து வந்த கடற்படையால் முறியடித்தார். கடைசியில் லாலி வந்தவாசியில், ஸர் அயர் கூட்டால் (Sir Eyre Coote) 1760ஆம் ஆண்டு தோற்கடிக்கப் பட்டார். பிறகு புதுச்சேரியைத் தாக்கினார். ஐதருடன் கூட்டுச் சேர்ந்து, லாலி ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பைத் தகர்த்தெறிய நினைத்தார். அவ் வெண்ணம் பலிக்கவில்லை. புதுவை 1761ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்டதுடன் லாலியையும் சிறைப்படுத்தினர். பின்பு விடுவிக்கப்பட்டார். பாரிசுக்குத் திரும்பிய உடன் ஃபிரெஞ்சுத் தோல்விக்கு அவரே முக்கியக் காரணம் என்று பழி சுமத்தப் பெற்றுத் தூக்கிலிடப்பட்டார். ஏழாண்டுப் போர் 1763ஆம் ஆண்டு பாரிசு உடன்படிக்கைப்படி முடிவுற்றபோது மூன்றாம் கர்நாடகப் போரும் முற்றுப்பெற்றது. பாரிசு உடன் படிக்கைப்படி புதுவையையும் சந்திரநாகூரையும் திரும்பப் பெற்றனர். ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய வணிகக்குழு 1770ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. இந்திய விடுதலைக்குப்பின் ஃபிரெஞ்சு அரசின் ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரி, காரைக்கால், சந்திர நாகூர் முதலியவை இந்திய அரசின் ஆதிக்கத்திற்குள் வந்தன.

ஃபிரெஞ்சுக்காரர் தோல்வியுறக் காரணங்கள்

தென்னிந்திய ஆதிக்கத்திற்காகப் போரிட்ட இரு ஐரோப்பிய வல்லரசுகளில், இங்கிலாந்தே கடைசியில் வெற்றிபெற்றதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. லாலியின் பொறுமையற்ற தன்மையும், திறமையின்மையும், சில தவறுகளும் அவ்வளவு முக்கியக் காரணங்களல்ல.

ஃபிரெஞ்சு வணிகக்குழு ஆட்சியின் ஓர் அங்கம்

ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய வணிகக்குழு, ஃபிரெஞ்சு அரசின் அங்கமானதால், உடனடியாகவும் சுயேச்சையாகவும் இயங்க முடியாத நிலையில் இருந்தது. ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய வணிகக் குழு ஃபிரெஞ்சு அரசின் கட்டளையை அப்படியே செயல்படுத்த வேண்டியிருந்தது. ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழு இவ் விதமின்றித் தனியார் நிறுவனமானதால், இயக்குநர் ஆலோசனை களையும், உத்தரவுகளையும் இந்தியச் சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றிக்கொள்ளவோ, தள்ளிவைக்கவோ முடிந்தது. இந்தியச் சூழ்நிலையைத் தாயகத்திற்குத் தெரிவிக்கும் தருணத்திலிருந்த தற்கும் அந் நிலைக்கு ஏற்பத் தாயக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மறுபடியும் இந்தியா சேருவதற்கும் பல மாதங்கள் பிடித்ததால், தாயகத்தின் உத்தரவு கோரும்நிலை பல மாற்றங்களுக்கு இலக்காகி இருக்கும். ஆகவே, அவ் வுத்தரவுகளை ஃபிரெஞ்சு வாணிகக் குழு மாற்றுவதால் அரசாங்கத்தை அவமதித்தது போலானதாகும். ஃபிரெஞ்சு அரசின் உத்தரவின்றி மாற்றல் செய்தல் அரசியல் குற்றமுமாகும். ஆனால், அவ்விதத் தடங்கல் ஆங்கில வாணிகக் குழுவிற்கு இல்லை. ஏனெனில், அது ஒரு தனியார் நிறுவனம். இம் மாபெரும் வித்தியாசம் ஃபிரெஞ்சு வாணிகக் குழுவின் முன்னேற்றத்தைப் பல விதத்திலும் தடைசெய்தது. மேலும், ஃபிரான்சின் அரசியல் மாற்றங்களும், அமெரிக்க, ஐரோப்பியப் போர்களும், ஃபிரெஞ்சு ஆதிக்கத்தைப் பெரிதும் பாதித்தன.

கடலாதிக்கம் இல்லாமை

ஆங்கிலேயரின் கடற்படை ஃபிரெஞ்சுக் கடற்படையைவிடச் சிறந்ததாயிருந்ததால், ஆங்கிலேயர் கடலாதிக்கம் பெற்று, தம் பொருளையும், படையையும் இந்தியாவின் எப் பகுதிக்கும் உடனுக்குடன் கொண்டுசெல்ல ஏதுவாயிற்று.

நிதி நிலைமை

பொருளாதார நெருக்கடி ஆங்கிலேயருக்கு ஃபிரெஞ்சுக் காரரைவிடக் குறைவாய் இருந்தது. தியூப்ளேயும் லாலியும்

இதனால் மிகவும் திணறினர். மேலும், ஃபிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக்குழு வாணிகத்தைப் புறக்கணித்து அரசியலுக்கு முதலிடம் அளித்தது. இதற்கு மாறாக ஆங்கிலேயர் வாணிக வளர்ச்சியை என்றுமே புறக்கணித்ததில்லை. இதனால் அவர்கள் பொருளாதார நிலை, ஃபிரெஞ்சு நிதிநிலையைப் போன்ற மோசமான நிலையை அடைந்ததில்லை.

புதுச்சேரியைத் தலைமைத் தளமாகக் கொண்டது

மிக்க செழிப்பான வங்காளப் பகுதி 1757ஆம் ஆண்டிலிருந்து, ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் வந்ததால், மூலப் பொருள்களை ஆங்கிலேயர் சிரமமின்றிப் பெற இயன்றது. மூன்றும் கர்நாடகப் போரின்போது வங்காளத்திலிருந்து படையும், தேவையான பண்டங்களும், தென்னகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதைக் கண்டோம். வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிலைபெற்றது, இந்தியாவில் அவர்கள் ஆதிக்கம் செலுத்துவதற்கு மூலகாரணமாயிருந்த தெனலாம். அவ்விதச் செழிப்பான பகுதியை ஃபிரெஞ்சுக்காரர்கள் பெற்றிருக்கவில்லை. நெப்போலியன் போன்ற மிக்க திறமை வாய்ந்தவராய் இருந்தாலும், புதுவையை மையமாகக் கொண்டு இந்தியாவைக் கைப்பற்றும் முயற்சி தோல்வியையன்றி வெற்றி அளிக்காது என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். 'புதுவையைத் தளமாகக்கொண்டு மாமன்னர் அலெக்ஸாண்டரோ நெப்போலியனோ கூட வங்காளத்தையும் கடல் ஆதிக்கத்தையும் கொண்டிருந்த ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்செய்து, இந்தியாவில் பேரரசை நிறுவியிருக்க முடியாது' என்று ஸ்மித் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

திறமைமிக்க தலைவர்கள் இல்லாமை

போரின் போக்கைப் புரிந்து செயல்பட நுண்ணிய போர்த் திறனும் போக்கை மாற்றும் சமயோசித யுக்தியும் தேவைப் பட்டன. உதாரணமாக, திருச்சியை நோக்கிப் புறப்பட்ட படை எதிர்பாராத வகையில் ஆர்க்காட்டைக் கைப்பற்ற இராபர்ட் கிளைவே மூலகாரணமாயிருந்தார். இப் போக்கே, தியூப்ளேயின் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை அடியோடு அழிக்கக் காரணமாயிருந்தது. லாலி, புஸ்ஸி போன்ற தகுதிமிக்க தலைவர்களை ஃபிரெஞ்சுக்காரரும் பெற்றிருந்தனர். ஆனால், லாலி ஆணவப் போக்கும் முன்கோபக்காரருமாய் இருந்தார். இதனால் ஃபிரெஞ்சுத் தலைவர்கள் தமக்குள்ளேயே அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டதால், அது அவர்களின் முயற்சியின் குறிக்கோளையே முறியடிப்ப

தாய் அமைந்தது. ஆங்கிலத் தலைவர்கள் தமக்குள் எவ்விதப் பிணக்கும் இன்றி ஒற்றுமையாய் உழைத்தனர்.

ஆங்கிலேயர்களின் சாதகநிலை

ஆங்கிலேயருக்கும், ஃபிரெஞ்சுக்காரரைப் போல் இன்னலும், இடர்ப்பாடுமிருந்தாலும், கிழக்கிந்திய வாணிகக்குழு, தனித் துறையைச் சார்ந்ததாலும், அரசியலில் ஈடுபட்டாலும் வணிகத்தை மறவாமல் நன்கு கவனித்து வந்தமையாலும், இராபர்ட் போன்றோரின் தன்னிகரற்ற தலைமையினாலும், பிரெஞ்சுககாரரை எதிர்த்து வெற்றி பெற வாய்ப்பு ஏற்பட்டது.

தாயகத்தின் நிலை

இவை யாவற்றையும்விட ஐரோப்பாவில், ஆங்கில, ஃபிரெஞ்சு நாடுகளின் வெற்றி தோல்வி அவைகளின் குடியேற்ற நாடுகளிலும் இந்தியாவிலும் அவர்களின் வாணிகக் குழுக்களையும் பாதித்ததெனலாம். ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர், ஏழாண்டுப் போர் இவை இரண்டிலும் இங்கிலாந்தும், ஃபிரான்சும் கலந்து கொண்டு, ஒன்றுக்கொன்று எதிராகப் போரிட்டது என்பதைக் கண்டோம். அப் போரில் இங்கிலாந்து சார்ந்திருந்த குழுவே வெற்றி கண்டது. ஆகவே, இந்தியாவில் ஃபிரெஞ்சுக்காரரின் தோல்வியை ஐரோப்பாவில் ஃபிரெஞ்சுக்காரரின் தோல்வியுடன் பிணைத்து முடிவு காணவேண்டும்.

கர்நாடகப் போருக்குப் பின்பும், ஃபிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்குச் சில இந்தியப் பகுதிகளில் நிலைபெற்றிருந்தது. ஆனால், அது தனி மனிதர்களின் அறிவையும், ஆற்றலையும் பொறுத்தே அமைந்தது; ஐதராபாத்தில் ரேமாண்டும் (Reymond), மராத்தியத் தலைவர் ஸிந்தியாவோடு டி பாய்க்னே (de Boigne), பெர்ரோன் (Perron) ஆகியோரும் சேர்ந்து கொண்டு அவ்வப்பொழுது ஆங்கிலேயருக்குத் தொல்லை கொடுத்தனர். ஆனால், ஆங்கிலேயர் அஞ்சி நடுங்குமாறு ஆட்டிப் படைக்கவில்லை. முதலாம் மின்டோ பிரபு காலத்தில், நெப்போலியன் போனபார்ட் இந்தியாவின்மேல் படையெடுக்கக் கூடும் என்ற பயம் ஏற்பட்டது. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு, இந்தியாவில் ஃபிரெஞ்சுக்காரரின் பேரரசு நிறுவ வேண்டும் என்ற ஆசை, நிறைவேறாத கனவாகவே முடிந்ததெனலாம்.

4. வங்காளத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் நிறுவப்பெறல்

ஔரங்கசீப்பின் மறைவிற்குப்பின், மூர்ஷித் குலிகான் (Murshid Qulikhan) என்பவர் வங்காளத்தின் ஆளுநராகப் பணி புரிந்து வந்தார். இவர் மிக்க ஆற்றலும் திறனும் பெற்றவர். வங்காளத்தின் தலைநகரை டாக்காவில் (Dacca) இருந்து மூர்சிதாபாத்திற்கு (Murshidabad) மாற்றினார். இவர் காலத்திலிருந்து வங்காளம் முகலாயர் ஆட்சியிலிருந்து விடுபட்டதென்றே சொல்லலாம். இவருக்குப் பின்னர் இவர் மகன் ஷுஜாகான் (Shujakhan) நவாபானார். ஒரு சாதாரண நிலையிலிருந்து, பீகாரின் ஆளுநராக உயர்ந்த ஆஃப்கானியப் படைவீரரான அலிவர்திகான் 1742ஆம் ஆண்டில் ஷுஜாகானைக் கொன்று விட்டுத் தாமே வங்காளத்தில் ஆளுநரானார். முகலாய மன்னரும் இதற்கு ஒப்புதல் தந்தார். ஆற்றலும், அரசியல் தந்திரமும் நன்கு தெரிந்திருந்த அலிவர்திகான், இந்தியரின் திறமையில் மதிப்புக் கொண்டு, பலரை உன்னதப் பதவியில் அமர்த்தினார். அவருடைய உயர்வினால் பொறாமைகொண்ட நிஜாம், மராத்தியரை வங்காளத்தைத் தாக்குமாறு தூண்டினார். ஆனால், அலிவர்திகான் மராத்தியத் தலைவர் ரகுஜி பான்ஸ்லேவிற்கு (Raghuji Bhonsle) ஒரிஸ்ஸாப் பகுதியைக் கொடுத்தும், ஆண்டிற்கு 12 இலட்சம் 'சௌத்' வரி செலுத்துவதாக ஒப்புதல் தெரிவித்தும் மராத்தியத் தொல்லையை நீக்கினார். வங்காளத்திலிருந்த ஆங்கிலேயருடனும் நட்புடன் பழகினார். அலிவர்திகான் 1756ஆம் ஆண்டில் காலமானார்.

சிராஜ்-உத்-தௌலா (1756—57)

அவருக்குப் பின்னர் அவருடைய பெயரன் சிராஜ்-உத்-தௌலா (Siraj-ud-daulah) நவாபானார். அலிவர்திகானுக்கு

ஆண் வாரிசு யாரும் இல்லை. அவருக்கு மூன்று புதல்வியர் இருந்தனர். சிராஜ்-உத்-தௌலா அவருடைய கடைசி மகளின் மகனுவார். இவரை அலிவர்திகான் தமக்குப் பின்வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். இதை மற்ற இரு புதல்வியரும் எதிர்த்துத் தம் பிள்ளைகளே வாரிசாக வர வேண்டும் எனப் போட்டி யிட்டனர். தமக்கு வேண்டியவர்களைச் சேர்த்துக்கொண்டு, சூழ்ச்சிகளிலும் சதித் திட்டங்களிலும் அவர்கள் இறங்கினர். சிராஜ்-உத்-தௌலா, ஊசலாடும் உறுதியற்ற உள்ளம் படைத்த இளைஞர். எளிதில் உணர்ச்சி வயப்படுபவராகவும் இருந்தார். நவாபு பதவிக்கு வந்தபோது அவருக்கு 22 வயதே ஆகி இருந்தது; சிற்றின்பத்தில் மிக்க நாட்டம் கொண்டிருந்தார்.

சிராஜ்-உத்-தௌலா ஆட்சிக்கு வந்த காலத்தில் ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் தொடங்கியிருந்தது. இதைத் தொடர்ந்து இந்தியாவிலும் ஃபிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் போரிடத் தொடங்கினர். தென்னிந்தியாவில் குறிப்பாகக் கர்நாடகத்தில் ஏற்பட்ட நிலை வங்காளத்திற்கு நேரக் கூடாதெனஅஞ்சிய சிராஜ்-உத்-தௌலா, தம்முடைய இசைவின்றி ஐரோப்பியர்கள் கோட்டைகளை வலுப்படுத்தவோ புதுப்பிக்கவோ கூடாதென ஆணை பிறப்பித்தார். ஆங்கிலேய, ஃபிரெஞ்சு, டச்சுக்காரர் ஆகியோர் தங்கள் குடியிருப்புகளை வங்காளத்திலும் அமைத்திருந்தனர். 1717ஆம் ஆண்டில், முகலாயப் பேரரசரிடமிருந்து ஆங்கிலேயர் வங்காளத்தில் தடையின்றி வாணிகம் செய்வதற்கான ஆணைகளை (Firmans) பெற்றனர். அதற்கு ஈடாக ஆண்டுதோறும் ஆங்கிலேய வணிகக் குழுவினர் மூவாயிரம் ரூபாயினை முகலாயப் பேரரசருக்குத் திறைப் பொருளாகச் செலுத்த வேண்டும் என்னும் விதிக்கும் உடன்பட்டனர். கல்கத்தாவைச் சூழ்ந்திருந்த பெரும் நிலப்பரப்பினைக் வணிகக் குழுவினர் குத்தகைக்குப் பேரரசரிடமிருந்து பெற்றிருந்தனர். ஆனல், பேரரசரின் ஆதிக்கம் நலிவுற்றதும், வங்காளத்தின் நவாபோடு நெருங்கிய தொடர்புகொள்ளலாயினர். 1716ஆம் ஆண்டில்தான் ஸெயின்ட் வில்லியம் கோட்டை (St. William Fort) கட்டி முடிக்கப்பட்டது. அதனுடைய மதிற்சுவர்கள் பண்டகசாலைகளாக மாற்றி அமைக்கப்பட்டன. ஃபிரெஞ்சுக்காரர் சந்திரநாகூரையும், டச்சுக்காரர் சின்சுராவையும் (Chinchura) தங்கள் குடியேற்றங்களாகக் கொண்டு வங்காளத்தில் வாணிகம் செய்து வந்தனர்.

இருட்டறைத் துயர நிகழ்ச்சி

சிராஜ்-உத்-தௌலா, ஐரோப்பியர்களைத் தங்கள் குடியிருப்புகளைப் புதிய அரண்கொண்டு பலப்படுத்தக் கூடாதென உத்தரவிட்டதற்குப் பணிந்து ஃபிரெஞ்சுக்காரர்கள், கோட்டை கொத்தளங்கள் கட்டுவதைக் கைவிட்டனர். ஆனால், ஆங்கிலேயர் அவ் வாணையை மதியாததுடன், சிராஜுத்திடமிருந்து தப்பி ஓடிவந்த அரசியல் குற்றவாளிகளுக்கும் தங்கள் கோட்டையில் புகலிடம் கொடுத்தனர்.

இதனால் கோபமடைந்த சிராஜ்-உத்-தௌலா காசிம்பசார் என்னுமிடத்தில் இருந்த ஆங்கிலேயரின் தொழிற்சாலையைக் கைப்பற்றிக் கல்கத்தாவையும் முற்றுகையிட்டார். திடீரெனச் சிராஜ் படையெடுத்ததால், கல்கத்தாவின் ஆளுநராயிருந்த டிரேக்கும், தளபதி வாட்சனும் மற்றவர்களும் வில்லியம் கோட்டையிலிருந்து தப்பியோடிவிட்டனர். ஆலோசனைக் குழுவின் இளைய உறுப்பினரான ஹால்வெல் (Halwel) என்பவரின் தலைமையின்கீழ், முற்றுகையை எதிர்த்துப் போரிடும்படி விட்டுவிட்டு ஆங்கிலேயரில் பெரும்பாலோர் கப்பலில் தப்பிச் சென்றுவிட்டனர். தப்பித்து ஓட முடியாத ஹால்வெல் என்பவரும் மற்றும் 145 பேர்களும் சிறைப்பிடிக்கப் பட்டனர். சிராஜ்-உத்-தௌலா கல்கத்தாவையும் கைப்பற்றினர். கல்கத்தாக் கோட்டையைக் கைப்பற்றிய செய்தி சென்னையை அடைந்த உடனே, சென்னை ஆளுநர் ஒரு படையை ஆர்க்காட்டு வெற்றி வீரர் இராபர்ட் கிளைவின் தலைமையின்கீழ் வங்காளத்திற்கு அனுப்பி வைத்தார். அவருக்குத் துணையாக, வாட்சன் (Watson) தலைமையில் கடற்படை ஒன்றும் அனுப்பிவைக்கப் பட்டது. கிளைவ் கல்கத்தாவைச் சிரமமின்றி மறுபடியும் கைப் பற்றிக் கொண்டார். கல்கத்தா கைவிடப்பட்டதும், பிறகு கைப் பற்றியதும் வரலாற்றில் முக்கியத்துவம் பெறச் செய்தது.

இருட்டறைத் துயர நிகழ்ச்சி (Black hole Tragedy) என வரலாற்றில் பேசப்படுவது என்ன என்பதைக் காணலாம். கல்கத்தாவைக் கைப்பற்றிய இரவு, ஹால்வெல் உட்பட 146 ஆங்கிலேயக் கைதிகளை சிராஜ்-உத்-தௌலா 18′×14′ 10″ அளவு கொண்ட அறையில் அடைத்ததாகவும் அதனால் 123 பேர் மூச்சுத் திணறலால் இறந்தனர் எனவும் தம்முடைய குறிப்புகளில் ஹால் வெல் என்பவர் மிகவும் பயங்கரமாகச் சித்திரித்துள்ளார். காலப் போக்கில் இருட்டறைத் துயரநிகழ்ச்சி முக்கியத்துவம் பெற லாயிற்று. இருட்டறைத் துன்ப நிகழ்ச்சி, பிளாசிப் போர்,

சிப்பாய்க் கலகம் ஆகிய மூன்று நிகழ்ச்சிகளும் இந்தியாவைப் பற்றி அறிந்திருந்த யாவருக்கும் தெரிந்த சிறப்பு மிக்க நிகழ்ச்சி களாயின. இந் நிகழ்ச்சி உண்மையில் நடந்ததா, கட்டுக்கதையா என்ற ஆராய்ச்சி பலரால் நடத்தப்பட்டுப் பலவிதமாகக் கூறப்படு கின்றது. இதைச் சித்திரித்துள்ள ஹால்வெல் மிகைப்படுத்தி உரைப்பதில் நிகரற்றவர். ஹால்வெல்லின் விளக்கவுரையில் ஒரு பகுதியேனும் அவருடைய கற்பனையாற்றலால் எழுதப் பட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்பதை ஸ்மித்தே ஒப்புக்கொள்கிறார். மேலும், அவர் குறிப் பிட்டுள்ள 324 சதுரஅடி அல்லது 267 சதுரஅடி அளவு கொண்ட அறையில் 146 கைதிகளை அடைக்கவே முடியாது. இதைப்பற்றிய ஆதாரக் குறிப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட வில்லை. மேலும், அக்கால முசமதிய வரலாற்று ஆசிரியர்களாலும் இந் நிகழ்ச்சி குறிப்பிடப்படவில்லை. ஆகவே, இந் நிகழ்ச்சி நடந் திருந்தாலும் ஹால்வெல் குறிப்பிடும் அளவிற்குக் கைதிகள் இறந் திருப்பதற்கு ஆதாரம் இல்லை. ஹால்வெல் தம் புகழ் ஓங்கு வதற்கும், சிராஜின்மேல் பழி சுமத்தவுமே இந் நிகழ்ச்சியை மிகைப்படுத்தி எழுதியுள்ளார் என்ற கருத்து நம்புதற்குரிய தாகவே உள்ளது. ஹால்வெல் தம்முடைய நூலில் கொடுத் துள்ள எண்ணிக்கையில்கூட மாறுபாடு காணப்படுகிறது. முதலில் 160 பேர் அடைக்கப்பட்டனர் என்று குறிப்பிட்டுவிட்டுப் பின்னர் அதனை 170 பேர் என்று பிறிதொரு இடத்தில் குறிப் பிட்டு, இறுதியில் 143 பேர் என்று மாற்றிய அவர் தம் நண்பருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் 150 பேர் என்றும் குறித் துள்ளது நமது ஐயத்தை உறுதிப்படுத்துகிறது. மில்ஸ் (Mills) என்பார் 144 எனக் கூறுகின்றபோது குக் (Cook) என்பவர் 150 எனக் கூறுகின்றார். பிழைத்து வந்தவர்கள் எண்ணிக்கை யிலும் மாறுபாடு இருப்பதைக் காண்கிறோம். முன்பு போல முதலில் 50 பேர் பிழைத்தனர் என்று கூறி, பின்னர் 16 பேர் என்று கூறி, இறுதியில் 23 பேர் என ஹால்வெல் முடிவு கட்டு கின்றார். மில்ஸ் 24 பேர் பிழைத்து வந்தவர் என்னும்போது குக் 22 பேர் எனக் கூறுகின்றார்.

1912ஆம் ஆண்டு ஜே. எச். லிட்டில் என்பவர் "வங்காளம் நேற்று, இன்று' என்றும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் இருட்டறைச் சம்பவம் கற்பனைக் கதையே என உரைக் கிறார். 'இங்கிலீஷ்மேன்' (Englishman), 'தி ஸ்டேட்ஸ்மேன்' (The Statesman) ஆகிய செய்தித்தாள்களும் அவ்வாறே கருதி யுள்ளன. ஆயினும் மார்டினோ எனப்படும் ஃபிரெஞ்சுக்காரர் லிட்டிலின் கருத்து நிரூபிக்கப்படாத ஒன்று எனவே கருத

வேண்டும் என்று கூறுகின்றார். 1916ஆம்ஆண்டு கல்கத்தா வரலாற்றுச் சங்கம் லிட்டிலே மறுமுறை அவர் தம் கருத்தை எடுத்து விளக்குமாறு கூறியது. அப்போது அவர் 'ஹால்வெல் பொய் சொல்வதில், புகழ் பெற்றவர்' என்றும், 'கிளைவ் கூட அவரை நம்பவில்லை' என்றும் எடுத்துரைத்தார்.

லெப்டினன்ட் பிளாக் (Blagg) என்பவரின் பெயர் சிறையில் இறந்தவர்களின் பட்டியலில் காணப்படுகிறது. ஆனால், உண்மையில் அவர் கோட்டையைக் காப்பதில் உயிர் துறந்தார். ஒன்பது பேரே சிறையில் அடைக்கப்பட்டனர். அந்த இரவில் மூவரே இறந்தனர். அந்த மூவரில் ஒருவர் போரில் ஏற்பட்ட காயத்தாலும், இருவர் மலேரியாவாலும் இறந்தனர். தாம் தப்பிப் பிழைத்ததை மறைக்க ஹால்வெல் கட்டிய கதையே இது.

அலிஷாய குமார் மெய்த்திரா என்னும் ஆசிரியர் ஹால்வெல்லின் கூற்று மிகப் பெரும் புளுகு என்று உரைத்தார். பேராசிரியர் ஈ. எப். ஓட்டன் லிட்டிலின் வாதங்களை ஏற்க மறுத்தார். கர்சன் பிரபுவும் இதுகுறித்த விவாதத்தில் கலந்து இச் சம்பவத்தை உண்மை என்று நம்பினர். பி. என். சந்தர் என்பவர் கணித அடிப்படையில் பார்த்தாலும், 146 பேரை மேற் குறித்த அளவுள்ள அறையில் அடைத்துவைத்தல் இயலாது என்று கூறுகின்றார்.

ஆர். சி. மஜூம்தார், இராய் சௌத்திரி, தத்தா ஆகியோரின் 'இந்தியாவின் சிறப்புவரலாறு' என்னும் நூலில் சில கைதிகள் இருட்டறைச் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் போர்க்காயங்களின் விளைவாகச் சிறையினுள் இறந்தனர் என்பது வேண்டுமானல் உண்மையாய் இருக்கலாம். ஆனால் பயங்கரமாகக் கூறப்பட்டுள்ள அனுபவங்கள், கைதிகளின் எண்ணிக்கை ஆகியவை ஹால்வெல்லின் மிகச் சிறந்த கற்பனையே என்று கூறவேண்டும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹால்வெல் அதன் பின்னர்ச் சிறிது காலம் வங்காளத்தின் ஆளுநராகப் பணிபுரிந்தபோது இறந்தவர்களின் நினைவாக நினைவுச் சின்னம் ஒன்றைக் கட்டுவித்தார். உயிர்பிழைத்த 48 பேரின் பெயர்கள் அதில் பொறிக்கப்பட்டிருந்தன. 1782ல். மின்னலினல் இந் நினைவுச் சின்னம் பாதிக்கப்பட்டது. பின்னர் 1821-ல் இடிந்து விழுந்துவிட்டது. கல்கத்தா விரிவுபடுத்தப்பட்ட போது கடுஞ்சிறையும், வில்லியம் கோட்டையும் இடிக்கப்பட்டன. 1902 ஆம் ஆண்டில் கர்சன் பிரபு மற்றொரு நினைவுச் சின்னத்தைக் கட்டுவித்துக் கிடைத்த பெயர்களைமட்டும் குறித்துவைத்தார்.

இன்று கல்கத்தாத் தலைமை அஞ்சலகம் வில்லியம் கோட்டை இருந்த இடத்தில் இருக்கிறது. சிறிய சுவரின் வடிவத்தில் கர்சன் விட்டுச் சென்ற நினைவுச் சின்னம் அஞ்சலகத்திற்கு அருகில் இருக்கின்றது.

சிராஜ்-கிளைவ் ஒப்பந்தம்

இனி ராபர்ட் கிளைவிற்கும் சிராஜ்-உத்-தௌலாவிற்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தைக் கவனிப்போம். சிராஜ்-உத்-தௌலாவும், கிளைவும் விரைவில் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அவ்வொப்பந்தப்படி கல்கத்தாவில் அரண் அமைக்கவும், நாணயங்கள் அடித்துக்கொள்ளவும், வாணிகச் சலுகைகள் பலவும் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டன. ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் மூண்டது. அதன் விளைவுகள் இந்தியாவிலும் எதிரொலித்தன. ஃபிரெஞ்சுக்காரருடன் உடனே போரிடவேண்டியிருந்ததால் கிளைவ் இந்த உடன்படிக்கைக்குச் சம்மதித்தார். சிராஜ்-உத்-தௌலாவும் சூழ்நிலைகள் சரியாகவில்லாமையால் ஒப்பந்தம் செய்துகொள்ள உடன்பட்டார். கிளைவும், சிராஜுவும் சூழ்நிலை சரியின்மையால் ஒப்பந்தத்திற்கு இசைந்தனரே தவிர, உளமார நட்புற வேண்டும் என்று எண்ணத்தினால் அன்று என்பதை இங்கு நாம் நினைவுகூர்தல் அவசியமாகும். ஆகவே, இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்த்து வெற்றிபெறும் தருணத்தை ஆவலுடன் நோக்கிக் கொண்டிருந்தனர். ஐரோப்பாவில் ஏழாண்டுப் போரில், ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரரும் போரிடும் செய்தி, கிளைவிற்கு எட்டிய உடனே வாட்சனுடைய கப்பற்படையின் உதவியால் சந்திரநாகூரைக் கைப்பற்றி ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை வங்காளத்திலிருந்து விரட்டியடித்தார்.

சிராஜ்-உத்-தௌலாவிற்கு எதிராகச் சதி

ஃபிரெஞ்சுப் பகுதியைக் கைப்பற்றிய உடன், ஃபிரெஞ்சுப்பயம் ஆங்கிலேயருக்கு வங்காளத்தில் இல்லாமல் போயிற்று. ஆகவே, சிராஜுவைப் பதவியிலிருந்து நீக்கும் சூழ்ச்சிக் கும்பலுடன் கிளைவும் சேர்ந்துகொண்டார். சிராஜ்-உத்-தௌலாவின் ஆட்சியைக் கவிழ்க்கச் சதித்திட்டம் தீட்டினர். வெளிப்படையாகப் போரிடுவதைக் காட்டிலும், நயவஞ்சகமான முறையில் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கிளைவ் எண்ணினார். இதனால், நேர்மையற்ற வழியில் வஞ்சனையால் நவாபைக் கவிழ்ப்பதற்குரிய செயல்களில் அவர் ஈடுபட்டார், பக்ஷி (Bakshi) என்ற பதவியிலிருந்த மீர்ஜாஃபரை (Mir Jafar) சிராஜ்-உத்-தௌலா நீக்கியிருந்தார். அதனால் சீற்றமுற்றிருந்த

மீர்ஜாஃபரைத் தம் வலையில் சிக்க வைத்தார்; அவருடன் ஓர் உடன்படிக்கையும் செய்துகொண்டார். இதில் சில சேட்டுகளும் இந்து அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இதன்படி மீர்ஜாஃபரை வங்காள நவாபாக நியமிக்கவும் அவரால் வணிகக் குழுவிற்குப் பல சலுகைகள் தரவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தச் சதிக்குழுவில், ஒருவனான அமீன்சந்த் (Aminchand) தனக்குச் சேரவேண்டிய பணத்தையும் ஒப்பந்தத்தில் குறிப்பிட வேண்டும்; இல்லையென்றால் சதியைச் சிராஜ்-உத்-தௌலாவுக்குத் தெரிவிப்பதாகப் பயமுறுத்தினான். அவனுக்குப் பணம் தர கிளைவிற்கு மனம் இல்லை. வஞ்சனையும், ஏமாற்றமும் செய்வதற்கு அஞ்சாத இராபர்ட், இரு உடன்படிக்கைகள் தயார் செய்தார், போலி உடன்படிக்கையில் அமீன்சந்திற்குத் தரவேண்டிய பணம் குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையாக எழுதப்பட்ட உடன்படிக்கையில் அதைச் சேர்க்கவில்லை. நேர்மையின் உறைவிடமான வாட்சன் இதற்கு இணங்க மறுத்ததால் அவருடைய கையெழுத்தையும் தாமே போட்டு அமீன்சந்தைக் கிளைவ் ஏமாற்றினார். போலிக் கையெழுத்துப் போடுதல் ஆங்கிலச் சட்டப்படி கடுமையான குற்றமாகும். பின்னால் அவர்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளில் இதுவும் ஒன்றாகும்.

மீர்ஜாஃபரின் உதவிகொண்டு, சிராஜ்-உத்-தௌலாவின் படையையும் அவருக்கு எதிராகத் தம் சதிவலையில் சிக்க வைத்தார். பதவிக்காகவும், பணத்திற்காகவும், வீண் அகங்காரத்திற்காகவும் தம் நாட்டை அடைமானம் வைத்தவரின் பட்டியலிலே மீர்ஜாஃபரையும் சேர்க்க வேண்டும். ஆனால், இச் சதித்திட்டம் எப்படியோ சிராஜ்-உத்-தௌலாவிற்கு எட்டியும்கூடத் தக்க நடவடிக்கை எடுக்காமல் தம் அழிவிற்குத் தாமே குழிதோண்டிக் கொண்டார். மீர்ஜாஃபர் தம் மதத்தின் பேரில் ஆணையிட்டுத் தாம் ஆங்கிலேயருடன் சதியில் ஈடுபடவில்லை என்று மறுத்ததை நம்பி, எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அதற்கு மாறாக அவரைத் தமக்கு உதவி செய்யுமாறு வேண்டிக் கொண்டதுடன் தம் படையையும் தலைமை தாங்கும்படி பணித்தார்.

பிளாசிப் போர்

வரலாற்றிலே மிக முக்கியத் திருப்பத்தை அளித்த பிளாசிப் போர் 1757-ல் நடைபெற்றது. சிராஜ்-உத்-தௌலாவின் போர் வீரர் சதியால் வளைக்கப்பட்டிருந்ததால், ஆங்கிலப் படையினர் வெகு எளிதில் சிராஜ்-உத்-தௌலாவைத் தோற்கடித்துச் சிறைப் பற்றினர். கிளைவ் ஏற்கெனவே செய்துகொண்ட உடன்படிக்

கைப்படி ஜாஃபரை வங்காளத்தின் ஆளுநராக்கினர். சிராஜ்-உத்-தௌலா மீர்ஜாஃபரால் தூக்கிலிடப்பட்டார். மீர்ஜாஃபர் வணிகக் குழுவினருக்குப் பொருளையும் சலுகைகளையும் வாரி வழங்கினர். '24 பர்காணுக்கள்' என்ற பகுதியின் ஜமீந்தாரி உரிமை வணிகக் குழுவினருக்கு வழங்கப்பட்டது. கிளைவ் மற்றும் ஊழியர்கள் யாவரும் தங்கள் தகுதிக்குத் தக்கபடி சன்மானம் கிடைக்கப்பெற்றனர். கிளைவ் 6,000 குதிரைவீரர்களுக்குத் தலைவரான 'மன்சப்தார்' ஆக்கப்பட்டார். பர்காணுக்களிலிருந்து ஆங்கிலேயருக்கு ஆண்டொன்றுக்கு முப்பதாயிரம் பொற்காசுகள் வருமானம் கிடைத்தது. உண்மை தெரிந்தபின், ஏமாற்றம் தாளாமல் அமீன்சந்த் பைத்தியம் பிடித்தவனானன். மீர்ஜாஃபர் பெயரளவில் நவாபு ஆனாரே தவிர, மற்ற எல்லா அதிகாரங்களை யும் வணிகக் குழுவே அனுபவித்தது. உள்நாட்டு அயல்நாட்டு ஆபத்திலிருந்து கிளைவே அவரைக் காப்பாற்ற வேண்டிய நிலையிலும் இருந்தார். பிளாசிப் போருக்குப்பின் கிளைவ் கல்கத்தாவின் ஆளுநராக 1758ஆம் ஆண்டு அமர்த்தப்பட்டார்; வணிகக்குழுவின் ஆதிக்கத்தை மீர்ஜாஃபர் வெறுத்தார். சின்சுராவில் இருந்த டச்சுக்காரருடன் ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சியும் செய்தார். இதனல் அவர் நம்பத் தகாதவர் என்னும் உள்ளார்ந்த உணர்ச்சியை ஆங்கிலேயரிடையே உண்டாக்கி விட்டார். 1760ஆம் ஆண்டு கிளைவ் தாயகத்திற்குத் திரும்பினர். அவருடைய முதலாம் ஆளுநர் பதவி 1758ஆம் ஆண்டு முதல் 1760ஆம் ஆண்டுவரை நீடித்தது.

1760-லிருந்து 1765 வரை வங்க வரலாறு

1765ஆம் ஆண்டு இயக்குநர் கிளைவை மறுபடியும் கல்கத்தாவிற்கு ஆளுநராக அனுப்பினர். அவருடைய முதலாம் ஆளுநர் பதவிக்கும், இரண்டாம் ஆளுநர் பதவிக்கும் இடையில் இருந்த ஐந்தாண்டுகளில் (1760—1765) வங்காளத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இந்திய வரலாற்றில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அவ் வைந்தாண்டுகள் மிகுந்த குழப்பமும், கொந்தளிப்பும் உடையனவாக இருந்ததோடு மிக மோசமான நிலைமையும் அடைந்துவிட்டதெனலாம். கிளைவிற்குப் பிறகு ஹால்வெல் ஆளுநர் பதவியில் அமர்ந்தார். ஹால்வெல் காலத்தில் இரண்டாம் ஷாஆலம் வங்காளத்தின்மீது படையெடுத்தார். ஹால்வெல் இப் படையெடுப்பை முறியடித்தார். மீர்ஜாஃபர் ஷாஆலத்திற்கும், டச்சுக்காரருக்கும் ஆதரவு காட்டினர். இதனல் மீர்ஜாஃபர் ஆங்கிலேயரின் மனக்கசப்பிற்கு ஆளானர். அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான சதியும் செய்யப்பட்டது. ஹால்

வெல்லுக்குப் பின் ஹென்றி வான்சிட்டார்ட் (Henry Vansittart) என்பவர் பதவிக்கு வந்தார்.

ஹென்றி வான்சிட்டார்ட் (1760–1765)

வாணிகத்தைவிட அரசியல் மாற்றங்களில் வருவாய் மிகுதியாய் வருவதை உணர்ந்த வணிகக்குழுவினர் மீர்ஜாஃபரை நீக்கிவிட்டு அவர் மருமகனை மீர்காஸிமை (Mir Kassim) நவாபாக்கினர்.

வணிகக்குழுவினர் இந்திய அரச குடும்பத்திலிருந்த பகைமையையும், பதவி ஆசையையும் மையமாக வைத்துக்கொண்டு, அரசியல் சூதாட்டமாடினர். தமக்கு வேண்டியவரைப் பதவியில் அமர்த்தல், அவர்களால் பல சலுகைகளைப் பெறல், பிறகு அவர்களை நீக்கிவிட்டுப் புதியவர்களைப் பதவியில் ஏற்ற முயற்சித்தல் இவை வணிகக்குழுவினரின் அரசியல் குறிக்கோளாக அமைந்து இருந்தன. மீர்ஜாஃபரை நீக்கி மீர்காஸிமை வங்காளத்தின் நவாபாக அமர்த்தியது இக் குறிக்கோளாலேயே ஆகும்.

மீர்காசிம் (1760—1763)

மீர்காசிம் மீர்ஜாஃபரைப் போல் திறமையற்றவர் அல்லர். திறமையும் உறுதியும் படைத்த அவர் வணிகக் குழுவினருக்குக் கொடுக்கவேண்டிய கடனையும் விரைவில் தீர்த்து வணிகக் குழுவின் ஆதிக்கத்தைச் சிறிது சிறிதாகத் தளர்த்த முயன்றார். இதற்காகவே கல்கத்தாவிற்கு அருகிலிருந்த மூர்சிதாபாத்திலிருந்த தம் தலைநகரை மாங்கீருக்கு (Monghir) மாற்றிக்கொண்டார். ரெயின் ஹாரத் (Rein Harat) என்ற ஜெர்மானியரின் துணைகொண்டு தம் படையை ஐரோப்பிய முறையில் பயிற்றுவித்தார்; ஆட்சி முறையையும் நல்ல முறையில் திருத்தி அமைக்க முயன்றார்; நிதிநிலைகளை ஒழுங்குபடுத்திப் பல சீர்திருத்தங்களைச் செய்தார்; அரசாங்கப் பொதுச் செலவையும் தம் சொந்தச் செலவையும் குறைத்துக்கொண்ட அவர் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முயன்றபோது, வணிகக் குழுவினருடன் மோதாமல் இருக்க முடியவில்லை.

பக்ஸார் போர், 1764

1717ஆம் ஆண்டு முகலாயப் பேரரசர் வணிகக் குழுவினரின் வாணிகத்திற்கு வங்காளத்தில் சுங்க வரி செலுத்தவேண்டாம் என்ற ஆணையை வழங்கி இருந்தார். ஆனால், நடைமுறையில்

வணிகக்குழுவின் ஊழியரில் தனிப்பட்டோர் செய்யும் வாணிகத்திற்கும் சுங்க வரி செலுத்தாமல் வந்தனர். தனிநபர் வாணிகத்திற்கான வரியை வசூலிக்கும் திறனும் நவாபிற்கு இல்லாமையால், அவர்கள் சுங்க வரி செலுத்தாமலேயே வாணிகம் செய்து வந்தனர். இதன் விளைவாக வணிகக் குழுவின் ஊழியர்களின் தனிப்பட்ட வாணிகம் மிக விரைவில் செழிப்புற்று விளங்கியது. ஆனால், சுங்க வரி இந்திய வாணிகர்களிடமிருந்து வாங்கப் பட்டதால், அவர்களின் வாணிகம் நலிந்து சீர்கேடுற்றது. வணிகக் குழுவும் தனியார் செய்யும் வாணிகத்திற்குச் சுங்க வரி வசூலிக்க இணங்காததால், வாணிகப் பொருள்கள் மீது விதிக்கப் பெற்றிருந்த வரிகள் அனைத்தையும் மீர்காஸிம் அடியோடு நீக்கி விட்டார். இதனால் போரிடுவது இரு திறத்தினராலும் தவிர்க்க முடியாததாயிற்று. 1763ஆம் ஆண்டில் போரே தொடங்கியது. ஆங்கிலப் படை, மீர்காஸிமின் படைகளைக் காட்பா, மூர்சிதாபாத், இரியா, சூட்டி, உதயநலா, மாங்கீர் ஆகிய இடங்களில் தோற்கடித்தது. மீர்காசிம் கடைசியில் அயோத்திக்குத் தப்பி ஓடி விட்டார். மீர்ஜாஃபர் மீண்டும் நவாபாக்கப்பட்டார். அயோத்தி நவாபு ஷுஜா-உத்-தௌலா மீர்காஸிமை ஆதரித்ததுடன், அவருக்காக ஆங்கிலேயருடன் போரிடவும் தயாரானார். ஏற்கெனவே, முகலாயப் பேரரசர் ஷா ஆலம் (Shah Alam) அயோத்தியிலிருந்தார். அவரும் இவர்களுடன் சேர்ந்துகொண்டார். இம் மூவரின் படைகளும், வணிகக் குழுவின் படையை 1764ஆம் ஆண்டு பக்ஸார் (Buxar) என்ற இடத்தில் சந்தித்தன. இப் போரில் ஆங்கிலேயர் மாபெரும் வெற்றி பெற்றனர். அயோத்தியை ஆங்கிலேயர் கைப்பற்றியவுடன், ஷா ஆலம் ஆங்கிலேயருடன் சேர்ந்துகொண்டார். ஷுஜா-உத்-தௌலா ரோகில்கண்டிற்குத் (Rohil Khand) தப்பியோடினார். மீர்காசிமும் தப்பியோடினார். பல இன்னல்களுக்கு இலக்காகிக் கடைசியில் 1777ஆம் ஆண்டு தில்லியில் காலமானார். பக்ஸார் போர், பிளாசியைவிடப் பலவகையில் சிறந்தது. கிளைவின் தந்திரமும், சூழ்ச்சியும் பிளாசிப் போரில் வெற்றிபெறச் செய்தன. பக்ஸார் போரில் ஆங்கிலேயரின் படைபலமே வெற்றிவாகை சூட வைத்தது. மற்றவர்கள் யாருமே ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கத்தோடு போட்டியிட முடியாது என்பது அப் போரின் விளைவாகப் புலனாயிற்று. மேலும், அப் போருக்குப் பிறகே முகலாயப் பேரரசர் ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டார். 1765ஆம் ஆண்டு மீர்ஜாஃபர் மாண்டார். கிளைவ், இரண்டாம் தடவையாக ஆளுநர் பதவி ஏற்க 1765ஆம் ஆண்டு கல்கத்தாவிற்கு வந்தபோது நிலவிய நிலைமை இது.


ஆரம்பகால ஐரோப்பிய வாணிபத் தளங்கள்
ஆ – ஆங்கிலேயர்
போ – போர்த்துகீசியர்
ட – டச்சு
பி – பிரஞ்சு
டில்லி
அயோத்தி
ஆக்ரா
பீஹார்
இராசபுதனம்
அலகாபாத்
வங்காளம்
(ஆ)காசிம்பசார்
(ஆ)ஹூக்ளி
(ஆ)
டாக்கா
(பி)சந்திரநாகூர்
சின்சுரா(ட)
(ஆ)கல்கத்தா
(போ)
டையு
(போ)டாமன்
சூரத்(ஆ)
(போ)பஸ்ஸீன்
(ஆ)பம்பாய்
மராத்திய இராச்சியம்
பாலசூர்
பூரி
வடசர்க்கார்
பீமிலிப்பட்டினம்(ட)
ஏனம்(பி)
மசூலிப்பட்டினம்(ஆ)
(போ)கோவா
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
மைசூர்
கர்நாடகம்
பழவேற்காடு(ட)
சென்னை(ஆ)
சதுரங்கப்பட்டினம்(ட)
புதுச்சேரி(பி)
செயின்ட் டேவிட் கோட்டை(ஆ)
காரைக்கால்(பி)
(பி)மாஹி
கள்ளிக்கோட்டை
(ட)கொச்சி
தஞ்சாவூர்
இலங்கை
இந்து மகா சமுத்திரம்
வ

கிளைவ் பிரபுவின் இரண்டாம் ஆளுநர் பதவிக்காலம் (1765—1767)

அரசியல் விரகர் என்ற பொன்றுப் புகழினை அவர் பெறுவதற்குக் காரணமாக இருந்தது அவரது இரண்டாவது ஆளுநர் பதவிக் காலமேயாகும் (1765—1767). 'எத்தகைய கட்டுப்பாடும் இல்லாவிட்டால், ஆர்வமும் பேராசையும் எவற்றைச் சாதிக்க முடியுமோ, அவற்றை இரண்டாவது முறை ஆளுநராக ஆட்சி புரிந்த பொழுது கிளைவ் சாதித்துக் காட்டினார்' என்று மிகத் தெளிவாக ஸ்மித் கூறுகின்றார்.

அலகாபாத்து உடன்படிக்கை

உண்மையில் இந்தியாவின் பேரரசர் முகலாய மன்னர். அந்த முகலாய மன்னர் வணிகக்குழுவின் ஆதிக்கத்திலிருந்தார். அவர் பெயரைப் பயன்படுத்தி இந்தியாவிற்கே உரிமை கொண்டாடி இருக்கலாம். அவ்வாறு கிளைவ் செய்திருந்தாலும் அவரைத் தடுத்து நிறுத்தக் கூடியவர் யாருமில்லை. அத்தகைய செயலில் ஈடுபடுமாறு அவரைப் பலர் தூண்டவும் செய்தனர். 1760ஆம் ஆண்டிற்கு முன்னிருந்த இராபர்ட் கிளைவாயிருந்தால் ஒருகால் அவ் வாசை அவர் உள்ளத்தில் தோன்றி இருக்கலாம். தாயகத்தில் ஐந்தாண்டு இருந்து திரும்பிய கிளைவ், பிரபு பட்டத்துடன் மட்டும் திரும்பவில்லை. உள்ளத்திலும், ஆற்றல் முறையிலும் உயர்ந்த பிரபுவாகவே அவர் திரும்பியிருந்தார். அவ்விதச் செய்கையால் விளையும் இடையூறுகளை எண்ணி ஆராய்ந்தார். ஆதிக்க வெறி அவருக்கு இல்லை என்பதன்று. அதற்குத் தகுந்த சூழ்நிலை அப்பொழுது இல்லை என்பதை நன்குணர்ந்ததால் அவ்வித ஆசைக்கு இணங்கவில்லை. வணிகக்குழுவின் ஆதிக்கத்தைப் பழையபடியே வங்காளம், பீகார் வரையிலேயே நிறுத்திக்கொள்வது விவேகம் என்பதை உணர்ந்தார். அதன்படியே தோல்வியுற்ற அயோத்தி அரசருடனும், முகலாயப் பேரரசருடனும் அலகாபாத் உடன்படிக்கை செய்து கொண்டார். ஈட்டுப் பணமாக 50 இலட்சம் பெற்றுக் கொண்டார். கோரா (Kora), அலகாபாத் (Allahabad) என்ற இரு பகுதிகளைத் தவிர, அயோத்தியை ஷுஜா-உத்-தெளலாவிற்குத் திருப்பித் தந்ததுடன், அவரையே நவாபாக அங்கீகரித்தார். ஆனால் வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா மாநிலங்களில் வங்காள நவாபிற்கு யாதொரு மேலதிகாரமும் கிடையாது. நவாபினுடைய நிர்வாகச் செலவுக்காக 53 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலுத்த ஒப்புக்கொண்டார். (இத் தொகை

1766-ல் 41½ இலட்சமாகவும், 1769-ல் 32 இலட்சமாகவும் குறைக்கப்பட்டது). நவாபுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையும் செய்து கொண்டார். அதுமுதல் அயோத்தி வணிகக்குழுவுடன் நட்புடன் நடந்துகொண்டது. 1857 ஆம் ஆண்டு நடந்த சிப்பாய்க் கலகத்தின்போதும் அது அதில் கலந்துகொள்ளவில்லை. ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டுவரும் வரையில் அது வணிகக்குழுவினரிடம் நன்றியுடன் நடந்துகொண்டது.

வங்காளத்தின் திவானியைப் (Diwani) பெறுதல்

முகலாயப் பேரரசை வணிகக்குழு அங்கீகரித்தது. கோரா, அலகாபாத்தையும் அவருக்கே அளித்ததுடன், வருடத்திற்கு 26 இலட்சங்கள் திறைப்பொருளாகக் கொடுக்கவும் இசைந்தது. அதற்குக் கைம்மாருக ஷா ஆலம் வங்காளத்தின் திவானிப் (Diwani) பொறுப்பை வணிகக் குழுவினருக்கு அளித்தார்.

இரட்டை ஆட்சி

வங்காள நவாபிற்கு முக்கியமாக திவானி என்ற அதிகாரமும், நிஜாமத் (Nizamat) என்ற அதிகாரமும் முகலாயப் பேரரசரால் வழங்கப்பட்டு இருந்தன. 'திவானி' என்பது நிலவரியினைத் தண்டும் உரிமையும், பொது நீதியைப் பரிபாலிப்பதுமாகும் (Financial Administration and Jurisdiction in Civil Justice). கிளைவ் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே 1765ஆம் ஆண்டில் வங்காள நவாபு 'நிஜாமத்' உரிமையை வணிகக் குழுவினுக்கு வழங்கிவிட்டார். கிளைவ் முகலாய மன்னருடன் செய்துகொண்ட அலகாபாத் உடன்படிக்கைப்படி திவானி உரிமையை வணிகக் குழுவினுக்கு அளித்தார். ஆகவே, அவ்விரு அதிகாரங்களையும் வணிகக்குழு நவாபிடமிருந்தும், முகலாயப் பேரரசரிடமிருந்தும் பெற்றது. இவ்விரு அதிகாரங்களையும் வணிகக்குழுவே நேரடியாகச் செலுத்தியிருந்தால், எவ்விதச் சிக்கலும் தோன்றியிருக்காது. கிளைவ் ஓர் அசாதாரண முறையைக் கையாண்டார். அதன்படி 'நிஜாமத்' அதிகாரம் பெயரளவில் நவாபினுடையதாக இருந்து வந்தது. ஆனால், நவாபு அவ்வதிகாரத்தைச் செயல்படுத்தும் உரிமையை வணிகக் குழுவினர் குறிப்பிட்ட முகமது ரஸாகானைத் (Muhammad Razakhan) துணை நவாபாக நியமித்து அவரிடம் அப்பணியினை ஒப்படைத்தார். வணிகக் குழுவினரும் தங்களுடைய 'திவானி' அதிகாரத்தைச் செயல்படுத்தும் வேலையையும் அதே ரஸாகானிடம் ஒப்படைத்தனர். இவ்வாறு ரஸாகான் நிலவரியைத் தண்டும் கடமையைச் செய்கின்ற பொழுது வணிகக்குழுவின் பிரதிநிதியாகவும், படைகளைக் கண்காணிக்கும்பொழுதும்

குற்றவியல் நீதியை நிலைநாட்டும்பொழுதும் நவாபின் பிரதிநிதியாகவும் காட்சியளித்தார். சுருங்கக் கூறின், வணிகக் குழுவினால் குறிப்பிட்ட பணியாளரை அமர்த்தி நிலவரியை நவாபு வசூலித்து வணிகக்குழுவின் கருவூலத்தில் (Treasury) கட்டினார். இதனால் மேல்நோக்காகக் காணுங்கால் மாற்றம் எதுவும் தெரியாது. எப்பொழுதும் போலவே நவாபின் ஊழியர்கள் வரி வசூலிக்க மக்களிடம் வந்தனர். மக்களால் எவ்வித மாற்றமும் அறிய முடியவில்லை. மாற்றம் தலைமையில்தான் செய்யப்பட்டது. வங்காளக் கருவூலம் மூர்சிதாபாத்தில் ரஸாகான்கீழ் இயங்கியது. இவ்விதமே பீகாருக்கு ராஜா சித்தாப் ராய் (Raja Sitab Rai) துணை நவாபாக அமர்த்தப்பட்டார். அதன் கருவூலம் பாட்னாவில் இயங்கியது. இதன்படி இராணுவம், நிதி, வெளிநாட்டுறவு, வெளிநாட்டு வாணிகம் ஆகியவை வணிகக் குழுவினரிடமிருந்தன. வரித்தண்டல், நீதி வழங்குதல் ஆகிய துறைகள் நவாபிடமிருந்தன. சுருங்கக் கூறின் உரிமையும், ஆதிக்கமும் வணிகக் குழுவினரிடமிருந்தன; கடமையும் பொறுப்பும் நவாபிடமிருந்தன. வரி வசூலிக்கும்பொழுது தவறும் ஊழியரைத் தண்டிக்கும் பொறுப்பு நவாபிற்கு இல்லை. ஏனெனில், அவர்கள் வணிகக் குழுவின் ஊழியர்கள். இவ்வித ஆட்சியே கிளைவின் இரட்டை ஆட்சி என்று வரலாற்றில் கூறப்படுவதாகும். இதை 'இரட்டை ஆட்சிமுறை' என்பதைவிட 'மறைமுக ஆட்சிமுறை' (Indirect System) என்று வழங்கியமை மிகப் பொருத்தமுடையதாகும் என்று ஸ்மித் கூறுகின்றார். இரட்டை ஆட்சி முறையில் நன்மைகளைவிடத் தீமைகளே மிகுதியாக விளைந்தன. கடமையும் உரிமையும் கலந்ததே ஆட்சியாகும். ஆனால், இம் முறையில் கடமையும் உரிமையும் பிரிக்கப்பட்டன. கடமை, உரிமையின் உயிர்நாடி ஆகும். இவ் விரண்டையும் இணைத்தால்தான் ஆட்சி வளம்பெறும். அதை இரட்டை ஆட்சி முறை மறந்து, உரிமை ஆங்கிலேயரிடமும், கடமை நவாபிடமும் தரப்பட்டது. இதனால் மக்கள் துன்பத்திற்கு ஆளாயினர். கிளைவின் இரட்டை ஆட்சி முறை மிகக் கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. 'பொறுப்பிலிருந்து அதிகாரத்தைப் பிரித்தது' இதன் பெருங்குற்றம் என்று பி. ஈ. ராபர்ட்ஸ் குறிப்பிடுகின்றார். ஏன் கிளைவ் 'திவானியையும்,' 'நிஜாமத்தை'யும் கம்பெனியே ஏற்று நடத்தவில்லை? என்ற ஐயம் தோன்றக்கூடும். வணிகக் குழுவின் ஊழியர்கள் வாணிகத்தில் பழகியவர்கள்; ஆட்சி முறையினை நன்கு உணராதவர்கள் என்ற காரணமிருக்கலாம். மேலும், மற்ற ஐரோப்பியரின் பொறாமையையும், எதிர்ப்பையும் நவாபு என்ற முகமூடியினால் மறைக்க முயன்றுமிருக்கலாம்.

நிர்வாகத்துறைச் சீர்திருத்தம்

வணிகக்குழுவின் உள்துறை ஆட்சியைச் சீர்திருத்துவதிலும் கிளைவ் பேரார்வம் காட்டினார். வணிகக்குழு ஊழியர்கள் இலஞ்சத்திலும், தனி வாணிகத்திலும் மூழ்கியிருந்தனர். இவை இரண்டையும் நீக்கப் பாடுபட்டார். திறமையற்றவர்களையும், இலஞ்ச ஊழலில் ஊறியவர்களையும் பதவியைவிட்டுக் கட்டாயமாக விலக்கினார். ஒவ்வொர் ஊழியனும் ஆயிரம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள பரிசு பொருள்களை ஆலோசனைக் குழுவின் (Governor's Council) இசைவைப் பெற்றே பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும், நாலாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புடைய பரிசு பொருள்களைக் வணிகக்குழுவினுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றும் கிளைவ் ஒவ்வோர் ஊழியரிடத்தும் ஓர் உடன்படிக்கையினைச் செய்துகொண்டார். இவ் வுடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்களா என்பதையும் இவர் கண்காணித்துவந்தார். ஊழியர்களின் தனிப்பட்ட வாணிகத்தை அடியோடு நிறுத்தினால், ஊழியர்கள் நசித்துப் போவர் என்பதை நன்குணர்ந்தார். ஊழியருக்கு மிகக் குறைந்த ஊதியமே தரப்பட்டது. அதை உயர்த்த இயக்குநர்கள் இசைவுதர மறுத்தனர். உப்பு, புகையிலை, பாக்கு ஆகிய பொருள்களின் வாணிகத்தைக் கண்காணிப்பதற்குக் கிளைவ், வாணிகக் கழகம் ஒன்றை நிறுவினார். இப்பொருள்களின் வாணிகத்திலிருந்து ஊழியர்கள் அவரவர்களுடைய பதவிநிலைக் கேற்ப ஆதாயத்தைத் தத்தம் பங்காகப் பெற்றனர். இத் திட்டத்தினால் ஆளுநர் 17,500 பவுன்களும், படைத்தலைவரும் ஆலோசனைக்குழு உறுப்பினரும் 7.000 பவுன்களும் ஆண்டுதோறும் உபரி ஊதியமாகப் பெறத் தொடங்கினர். ஆனால், இம் முறைக்கு, கம்பெனி இயக்குநர்கள் ஒப்புதல் தர மறுக்கவே, இரண்டாண்டுகளுக்குப் பிறகு ((1768-ல்) இம் முறை கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக அம் மாநிலத்திலிருந்து வரும் நிலவருவாயில் தரகு (Commision) கொடுக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டது, இச் சீர்திருத்தத்தினால் சீர்கேடுகளும், ஒழுங்கற்ற செயல்முறைகளும் பெரிதும் குறைக்கப்பட்டன. ஆனால், அவை அடியோடு ஒழிக்கப்படவில்லை. மேலும், வணிகக் குழுவின் மேல் அதிகாரிகளுக்குமட்டுமே தரகும் பிற சலுகைகளும் அளிக்கப்பட்டன. கீழ்த்தர ஊழியர்களுக்கு எவ்விதச் சலுகையோ தரகோ கொடுக்க ஏற்பாடு செய்யவில்லை. காரன்வாலிஸ் காலத்தில்தான் ஊழியரின் ஊதியம் உயர்த்தப்பட்டு, இலஞ்ச ஊழல்களைக் களைய வழிசெய்யப்பட்டது. கிளைவ் நிர்வாகத் துறையில் செய்த சீர்திருத்தங்கள் முழு வெற்றியளிக்

காமைக்கு வணிகக்குழுவின் இயக்குநர்களும் ஓரளவிற்குக் காரணமாவார்கள்.

படைத்துறைச் சீர்திருத்தம்

படைத்துறை நிருவாகம் ஊழல் மிகுந்து இருந்தது. குறிப்பிட்ட காலத்திற்குமேல் பணிபுரிந்ததற்காகவும் சிறப்பாகச் செய்வதை ஊக்குவிப்பதற்காகவும் கொடுக்கப்படும் உபரி ஊதியம் அல்லது படியே 'பேட்டா' (batta) என்று சொல்லப் படும். போர்க்களத்தில் பணிபுரியும் வணிகக்குழுவின் வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இம் முறை ஆரம்பிக்கப்பட்டது. கர்நாடகப் போரின்பொழுது சென்னையில் இத் திட்டம் முதன் முதலில் அமலில் வந்தது. கர்நாடக நவாபிற்காக, ஃபிரெஞ்சுக் காரருடன் போரிட்டபோது வணிகக்குழு படைவீரர்களை ஊக்கு விக்கும் பொருட்டு 'பேட்டா' கொடுத்தது. இவ் வழக்கம் மெல்ல மெல்ல வங்காளத்திலும் பரவியது. 'பேட்டா' இந்திய அரசர்களால் கொடுக்கப்பட்டு வந்த வரையில், இம் முறைக்கு வணிகக்குழு யாதொரு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. வங்கா ளத்தில் இரட்டை ஆட்சி நிறுவியபின் இவ் வுபரி ஊதியத்தையும், வணிகக்குழுக் கருவூலத்திலிருந்தே கொடுக்கும்படியாயிற்று. இதனால் வணிகக்குழுவின் நிதிநிலைமை பாதிக்கப்பட்டது. ஆகவே, 'கிளைவ்' குடியிருப்புகளில் தங்கியிருக்கும் வீரர்களுக்குப் பாதி உபரி ஊதியமும், வங்காளத்திற்கு வெளியே சென்று போரில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு இரட்டை உபரி ஊதியமும் (double batta), வங்காளத்திலேயே போரில் ஈடுபட்டிருந்தவர் களுக்கு முழு உபரி ஊதியமும் வழங்குவது என்று தீர்மானித்தார். உதாரணமாக, ஒரு படைத்துறைத் தலைவருக்கு (Captain) முறையே ஒரு நாளைக்கு ரூபாய் 3, 6, 12 உபரி ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. இம் முறை போர்வீரர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. மேலும், அரசாங்க அதிகாரிகள் தங்கள் ஊதி யத்துடன் தரகினையும் (Commission) பெற அனுமதித்ததால், அவர்கள் ஊதியம் படைத்துறையினரைவிட அதிகமாயிருந்தது. இதனால் சீற்றமடைந்த படைத்துறையினர், கிளைவிற்கு எதிராகக் கலகம்செய்தனர். ஆனால், அஞ்சா நெஞ்சம் படைத்த கிளைவ் கலகத்தை ஒடுக்கினார். எனினும், வணிகக்குழுவின் ஊழியர்களின் நலனில் அவர் மிக்க நாட்டமுள்ளவர் என்பதை மறுப்பதற்கில்லை. மீர்ஜாஃபரால் தமக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபாயை வணிகக்குழுவில் பணியாற்றும் அதிகாரிகள், எதிர்பாராத வகையில் கட்டாய ஓய்வுபெற நேர்ந்தால் அவர் களுக்கு உதவி செய்வதற்கென்று அப் பணத்தைக்கொண்டு 'உதவி நிதி' ஒன்று நிறுவினார். இந் நிதியிலிருந்து போரில்

காயமடைந்த வீரர்களுக்கும் இறந்தவர்களின் மனைவி மக்களுக்கும் உதவி செய்யப்பட்டது. அதிலிருந்து உடல்நலக் குறையுற்றோர், அந்திய காலத்தில் அவதியுறுவோர் முதலியோருக்கும் நிதியுதவி செய்தார். இவரது இச் செயலே பிற்காலத்தில் வழங்கப்பட்ட ஓய்வு ஊதியத்திற்கு (Pension) முன்னோடியாக அமைந்தது எனலாம். 1767ஆம் ஆண்டு நலமின்மை காரணமாகக் கிளைவ் ஆளுநர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுத் தாயகம் திரும்பினார். தாய்நாடு சென்ற அவரை இங்கிலாந்து மக்கள் வரவேற்கவில்லை. அவர்மீது பொறாமையும் வெறுப்பும் கொண்டனர்.

குற்ற விசாரணை

1772ஆம் ஆண்டில் வணிகக்குழுவின் பொருளாதாரச் சீரழிவிற்குக் 'கிளைவ் முதன்முதல் கவர்னராக இருந்த காலத்தில் செய்த செயல்களே காரணம்' என கிளைவ் மீது பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது. முப்பது உறுப்பினர்கொண்ட விசாரணைக்குழு ஒன்று பர்கோனி (Pargoyne) என்பவரின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டது. அவர்மீது பல குற்றங்கள் சாட்டப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை: (1) சிராஜ்-உத்-தௌலாவின் மரணத்திற்கு இவரே காரணமாவார்; (2) அமீன் சந்தை வஞ்சகமாக ஏமாற்றினார்; (3) வாட்சனின் பொய்க் கையெழுத்திட்டார்; (4) தம் அதிகாரத்தையும் செல்வத்தையும் பெருக்கிக்கொள்ள அவர் பொருளியல் துறையையும் இராணுவத் துறையையும் பயன்படுத்திக்கொண்டார் என்பனவேயாகும். எல்லாக் குற்றச்சாட்டுகளையும் தனித்தனியே அலசி ஆராய்ந்து கிளைவ் மறுப்புக் கூறினார். அவர் தம் வாதத்திறமையால் நாட்டின் வளர்ச்சிக்காகவே அக் குற்றங்களைச் செய்ததாக விசாரணைக் குழு ஏற்கும்படி செய்தார்.

கிளைவ் விசாரணைக் குழுவின்முன் ஆற்றிய விளக்க உரை தம் உள்ளத்தைத் தொடும்வகையில் உள்ளது. 'நான் உட்காருமுன் இம் மன்றத்திற்கு ஒரு வேண்டுகோள்! என் மதிப்பை எடைபோட்டுத் தீர்வு காணும்முன், தயைகூர்ந்து தங்களுடையவற்றையும் மறவாதீர்கள்! என் செல்வத்தையெல்லாம் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். தயவுசெய்து என் மானத்தை மட்டும் காப்பாற்றுங்கள்.'

விசாரணைக்குழு இறுதியில் 'இராபர்ட் கிளைவ் பிரபு மாபெரும் பணியைத் தாய்நாட்டிற்குச் செய்தார்' என்ற சிறப்போடு குற்றவாளி அல்லர் என்று தீர்ப்பளித்தது.

சாதாரணக் கணக்கராக, இந்தியாவிற்கு வந்த இராபர்ட் கிளைவ், 1751-ல் ஆர்க்காட்டைக் கைப்பற்றியதன்மூலம் தம் போர்த்திறமையை வெளிப்படுத்தினார். இவ்வெற்றி அவர் வாழ்க்கையில் மட்டுமன்றி, ஆங்கில அரசியல் ஆதிக்க வளர்ச்சிக்கே ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஆங்கிலேயர் ஆதிக்கம் கர்நாடகத்திலும் தக்காணத்திலும் நிலைபெற அது வித்திட்டது. தியூப்ளேயின் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநிறுத்த வேண்டுமென்ற ஆசைக்கும் அவ் வெற்றி சாவு மணி அடித்ததை ஏற்கெனவே கண்டோம். இராபர்ட் கிளைவின் சூழ்ச்சியே சுராஜ்-உத்-தௌலாவைப் பிளாசிப்போரில் தோல்வியுறும்படி செய்தது என்பதையும் கண்டோம். இவ் விரு வெற்றிகளால், இந்தியாவில் வணிகர்களாகச் செயற்பட்ட ஆங்கிலேயரை ஆட்சியாளராகவும் மாற்றிய பெருமை அவரையே சாரும். போரில்மட்டும் சிறந்த தளபதியாயில்லாமல் ஆட்சியிலும் சிறந்தவர் என்பதைத் தம்முடைய இரண்டாம் ஆளுநர் பதவியின் போது வெளிக்காட்டினார். பக்ஸார் போருக்குப்பின், முகலாய மன்னரின் பெயரில் இந்தியாவையே, ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்ற பலரின் ஆலோசனையைக் கேளாமல், ஒரு புதிய ஆட்சிமுறையைச் செயல்படுத்தியதுடன், தோல்விகண்ட அயோத்தி, முகலாய அரசர்களையும் மதிப்புடன் நடத்தியது கிளைவின் அரசியல் தந்திரத்தையும் ஆட்சித் திறமையையும் காட்டுகின்றன. ஆங்கில ஆதிக்கத்தை இவ்விதம் பல விதங்களில் வளர அடிகோலிய பெருமை சந்தேகமின்றிக் கிளைவையே சாரும்.

ஆனால், இவர்மேல் பொறாமை கொண்டிருந்த பலர் ஆளுநர் ஆவதற்குமுன் அவர் இருந்த நிலைமையையும், பிளாசிப் போருக்குமுன் இவர் செய்த சூழ்ச்சிகளையும் மிகைப்படுத்தி, அவரது மனத்தைப் புண்படுத்தினர். இவற்றாலும், பிணியாலும், அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. உடலாலும், உள்ளத்தாலும் சோர்வடைந்த அவர் 1774 ஆம் ஆண்டு தம் ஐம்பதாம் வயதில் தற்கொலை செய்துகொண்டு உயிர்நீத்தார். ஆங்கில ஆட்சிக்கு இந்தியாவில் வித்திட்டவரும், 'கடவுளால் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்ட பெருந் தளபதி' என்று பிட் (Pitt) பிரபுவாலும், 'பிரஷ்யாவின் பிரெடரிக் மன்னருக்கு ஒப்பானவர்' என்று • சாத்தம் (Chatham) பிரபுவாலும் புகழப் பெற்றவருமான கிளைவின் வாழ்க்கை இவ்விதம் பரிதாபமாக முடிவுற்றது. ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை நிறுவ எண்ணிய தியூப்ளேயின் முடிவுடன் இதை ஒப்பிடலாம். தம் வாழ்க்கை, செல்வம், இளமை

யாவற்றையும் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநிறுத்தச் செலவிட்ட டியூப்ளேவிற்கு ஃபிரான்சு அளித்த பரிசு பதவி நீக்கம், ஏளனம், பட்டினி ஆகியவையே. அதே போல் இந்தியாவில் ஆங்கிலப் பேரரசை நிறுவவேண்டும் என்பதற்காகப் பாடு பட்ட கிளைவிற்குப் பாராளுமன்றத்தில் மானத்தையும், மரியாதையையும் இழக்கக்கூடிய கடுந்தாக்குதல் நடந்தது. தற்கொலையே அதற்கு மருந்து என முடிவெடுக்கும் நிலைக்கு அவரை அது கொண்டுசென்றது. கிளைவ் தவறு ஏதும் இழைக்கவில்லை என்று கூற முடியாது. முடிவே குறிக்கோளாக, வழியைப்பற்றிக் கவலைப் படாத அவர் சூழ்ச்சியைக் கையாண்டது மறக்க முடியாதவொன்றாகும். ஆனால், வாணிக வளர்ச்சிக்கும், ஆங்கிலேய ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநிறுத்தவுமே அவர் சூழ்ச்சியைக் கையாண்டார் என்பதை நினைக்குங்கால் அவர் இங்கிலாந்திற்கு ஆற்றிய தொண்டு ஈடு இணையற்றது எனக் கூறலாம். ஆனால், தம் புகழுக்காகவும், ஆங்கிலேய ஆதிக்கத்தின் வளர்ச்சிக்காகவும் ஆதரவு அற்ற இந்திய மக்களின் வாழ்க்கையுடன் விளையாடினார் என்றால் தவறாகாது. அவர் வங்காளத்தில் நிறுவிய இரட்டை ஆட்சிமுறையின்மூலம் பொருளும் அதிகாரமும் அடைவதற்காக எதையும் செய்யும் இதயம் படைத்தவர் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்தினார். வங்க மக்களின் வறுமைக்கும், ஏழ்மைக்கும் அவர் ஆட்சிமுறையே முக்கியக் காரணமாகும்.

5. வாரன் ஹேஸ்டிங்ஸ்
(1772—1785)

இராபர்ட் கிளைவிற்குப்பின் 1767ஆம் ஆண்டுமுதல் 1769ஆம் ஆண்டுவரை வெரெல்ஸ்ட் (Verelst) என்பவரும், 1769ஆம் ஆண்டு முதல் 1772ஆம் ஆண்டுவரை கார்ட்டியர் (Cartier) என்பவரும் வங்காளத்தின் ஆளுநர்களாகப் பதவி வகித்தனர். இந்த ஐந்து ஆண்டுகளில் கிளைவின் இரட்டை ஆட்சியின் குறைபாடுகளால் வணிகக்குழுவின் ஆட்சி மிகச் சீர் குலையலாயிற்று. நிலத்தீர்வை வசூலிப்போரின் கொடுமையி னாலும், இலஞ்ச ஊழல் தலைவிரித்தாடியமையாலும் மக்கள் அவதிப் பட்டனர். வங்காளத்தில் 1769–70-ல் தோன்றிய பஞ்சத்தால் மக்களின் துன்பம் மேலும் அதிகரித்தது. வங்க மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் (சுமார் பத்து இலட்சம் பேர்) மாண்டனர். கணக்கற்ற கால்நடைகளையும் இப் பஞ்சம் கொள்ளை கொண்டதாகக் கூறப்படுகிறது. இப் பஞ்சத்தின் கோரத்தைச் சர் W. W. ஹண்டர் என்பவர் கீழ்வருமாறு விவரித் துள்ளார்.

'புல்லையும், பூண்டையும், மரத் தழைகளையும் உண்டனர்; பிணக்குவியல்கள் தெருக்களிலே அழுகி நாற்றம் அடித்துக் கொண்டிருந்தன; இறுதியில் அழுகிப்போன பிணங்கள் குடி மக்களின் உயிர்வாழ்க்கைக்கு ஊறு விளைவிக்கும் நிலையை அடைந்தன; எங்குப் பார்த்தாலும் துன்பக் காட்சியே தொடர்ந்தது. இக் காட்சி மனித குலத்தையே உலுக்கிவிட்டது. சில பகுதிகளில் மனிதப் பிணங்களைக்கூடச் சிலர் தின்றனர்.'

மக்களின் துயரைத் துடைக்க நிருவாகத்தினர் யாதொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, வணிகக் குழுவின் ஊழியர்கள் பண்டங்களைப் பதுக்கிவைத்து, அதிக விலைக்கு

விற்றனர். நிலவரியையும் கொடுமைப்படுத்திக் கண்டிப்பாக வசூலித்தனர். கைத்தொழிலில் ஆற்றல் மிக்கவர்களும், உழவர்களும் பேரளவில் மாண்டு மடிந்து போனமையால் வணிகக் குழுவின் வருமானமும் பெருவாரியாகப் பாதிக்கப்பட்டது. மேலும், நாட்டின் சமூக, பொருளாதார நிலைகளும் சீர் கெட்டன.

வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தின் ஆளுநராக 1772ஆம் ஆண்டு பதவி ஏற்றார். இவர் 1732ஆம் ஆண்டில் பிறந்தவர். 1750ஆம் ஆண்டு எழுத்தராகக் கல்கத்தாவிற்கு வந்தார். அவர் வணிகக் குழுவின் எழுத்தர் (clerk) நிலையிலிருந்து படிப்படியாக உயர்வுபெற்று வங்காளத்தின் ஆளுநரானார். சென்னை ஆளுநர் ஆலோசனைக் குழுவின் அங்கத்தினராகவும் பணிபுரிந்தார். அவர் வங்காள ஆளுநராகப் பணிபுரிந்த காலம் இந்திய வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும். ஆட்சித் துறையில் ஏற்கெனவே நீண்டநாள் அனுபவமும் ஆற்றலும் படைத்திருந்ததால், ஆட்சித் துறையில் பல மாற்றங்களைச் செய்தார்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்திற்கு வந்தவுடனேயே கூறியதாவது, 'நான் கப்பலைவிட்டு இறங்கி, வங்காளத்தில் காலடி வைத்தவுடன், செல்வாக்கும் செல்வமுமுள்ள அரசாங்கத்தை ஆங்கிலேயர்கள் அமைத்திருப்பதைக் கண்டேன். ஆனால், ஒழுங்கு முறையும், ஒழுக்கமுறையும் இங்கிருக்கவில்லை. இதனால் என் அதிகாரத்தை வலியப் பயன்படுத்தி ஒழுங்கீனத்தை நேர்முகமாகச் சீர்திருத்த வேண்டியதுள்ளது. நீதியை நிலை நாட்ட நிலையான நீதிமன்றங்கள் ஏற்படுத்த வேண்டியதிருக்கிறது. வரித்தண்டல் துறையை வகைப்படுத்தியும், வலுப்படுத்தியும் நிர்வாகம், நீதிமுறை, அரசியல் முறை முதலியவற்றைத் தொடர்புபடுத்தித் துலங்கவைத்தும், வருவாய் குறையாதவாறு ஆக்கப் பணியைத் தொடர்ந்தும், வருவாயின் ஒரு பகுதியைத் தாய்நாட்டிற்குச் செலுத்தியும், பணியாற்றும் கடமை எனக்குக் காத்திருக்கிறது' என்பதாகும்.

வருவாய்த்துறைச் சீர்திருத்தங்கள்

வணிகக் குழுவின் இயக்குநர்கள், இரட்டை ஆட்சி முறையை ஒழிக்கும்படி பரிந்துரைத்ததற்கொப்ப, இரட்டை ஆட்சி முறையை ஒழித்தார். இதனால் வரித்தண்டல் பொறுப்பை இயக்குநர் குழுவே நேர்முகமாக ஏற்றுக்கொண்டது. துணை

நவாபாக இரட்டை ஆட்சியின்போது இருந்த முகமது ரஸாகானும், கான் சித்தா ப்ராயும் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். 1772-ல் மூர்சிதாபாத்திலிருந்த அரசு பொதுக் கருவூலத்தைக் கல்கத்தாவிற்கு மாற்றினர். நேரடியாக வணிகக் குழுவின் ஆள்களை அமர்த்தி வரிப்பணத்தை வசூலிக்கச் செய்தார். நிலவரியைத் தண்டுவதை மேற்பார்வையிட இவ்வாறு அமர்த்தப்பட்டவரே பின்னர் மாவட்ட ஆட்சியாளராயினர். இவரே பொதுத்துறை நீதியையும் நிலைநாட்ட வேண்டுமென்ற வழக்கம் இருந்து வந்தமையால், பொதுத்துறை ஆட்சியையும் திவான் பதவியையும் இவர்கள்மூலம் ஆங்கிலேயர்கள் நேரடியாக வகிக்க ஆரம்பித்தனர்.

கல்கத்தாவில் வருவாய் வாரியம் (Revenue Board) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ் வாரியத்தில் ஆளுநரும் பன்னிரண்டு உறுப்பினர்களும் இருந்தனர். மாவட்டங்களில் இருந்த மாவட்ட ஆட்சியாளர்களை (Collectors) இவ் வாரியம் மேற்பார்வையிட்டு வரிவசூலை ஒழுங்கு செய்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்கிலேயர் ஒருவர் மாவட்ட ஆட்சியாளராக நியமனம் செய்யப்பட்டார். அவருக்கு உதவியாக இந்திய ஆலோசகர் ஒருவர் அமர்த்தப்பட்டார். இவர்கள் வரிவசூலை மேற்கொண்டு, வசூலிக்கப்பட்ட தொகையை அரசு கருவூலத்தில் செலுத்தினர்.

அலகாபாத் உடன்படிக்கையின்படி வங்காள நவாபுக்குக் கொடுத்து வந்த 32 இலட்சம் ரூபாய் பாதியாகக் குறைக்கப்பட்டது. நவாபின் அரண்மனைச் செலவுகளைக் குறைத்து, தேவைக்கு அதிகமாக இருந்த நவாபின் அலுவலர்கள் பலரை நீக்கினர். இதனைப் போலவே முகலாயப் பேரரசர் ஷா ஆலம் மராத்தியர்களின் பாதுகாப்பில் சென்றுவிட்டமையால், அவருக்கு அதுவரை அளிக்கப்பட்டு வந்த 26 இலட்சம் ரூபாயை நிறுத்திவிட்டார். மராத்தியருக்கு ஷா ஆலம் கொடுத்த கோரா, அலகாபாத் ஆகிய மாவட்டங்களை அயோத்தி நவாப்பிடம் 50 இலட்சம் ரூபாய்க்கு விற்றார்.

'ஐந்தாண்டு நிலப்பாடு திட்டம்' (Quinquennial settlement) எனப்படும் திட்டம் ஒன்று இவரால் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி நிலங்களின் தரம், வருவாய், வரி விகிதம் முதலியவற்றை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தீர்மானித்தார் இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட நிலங்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஏலம் விடப்பட்டன. அதிகத் தொகைக்கு ஏலம் கேட்பவருக்கு நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. ஏலம் எடுத்தவர் ஏலத்தொகையைத்

தவருமல் ஐந்தாண்டுகள் செலுத்த வேண்டும். ஐந்தாம் ஆண்டின் முடிவில் மீண்டும் அந்த நிலம் ஏலத்தில் விடப்படும். இந்த முறையினுல் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்த நிலச்சுவான் தார்கள் (ஜமீன்தார்கள்) நிரந்தரமற்ற நிலையை அடைந்தனர்.

இம் முறையினுல் பல பழைய ஜமீன்தார்கள் தங்கள் உரிமையை இழந்தனர். அதிகத் தொகைக்கு ஏலம் கேட்ட வருக்கே ஜமீன்தாரி உரிமை வழங்கப்பட்ட முறை பல கேடுகளை விளைவித்தது. பலத்த போட்டியின் காரணமாக அதிகப் பணம் செலுத்துவதாக எடுத்த ஜமீன்தார்கள் ஏழை விவசாயிகளைத் துன்புறுத்தி, விளைந்தாலும் விளையாவிடினும் தங்கள் விருப்பம் போல் வரிப்பணத்தைப் பிடுங்கிக்கொண்டனர். இம் முறையால் குடியானவர்கள் வரிச்சுமை பொறுக்கமாட்டாது துயருற்றனர். மண் வளம் பிரித்தல், வருவாய் மதிப்பிடல் ஆகியவை உண்மைக்குப் புறம்பாகவே இருந்தன. செலுத்துவதாக ஒப்புக் கொண்ட தொகையை ஜமீன்தார்களிடமிருந்து பெற இயல வில்லை. ஏலப்பணம் அதிகமாகப் பாக்கியாக நின்றது. இதனுல் 1777-ல் ஐந்தாண்டு காலம் முடிவுற்றதும் இக் குறையைப் போக்கிட ஆண்டுதோறும் நிலவாரம் நிர்ணயிக்கும் பழைய முறையையே வாரன் ஹேஸ்டிங்ஸ் திரும்பவும் அமலுக்குக் கொண்டுவந்தார். ஆங்கிலேய மாவட்ட ஆட்சியாளர்களுக்குப் பதிலாக இந்தியர்களே நியமிக்கப்பட்டனர்.

மாவட்டங்கள் ஆறு வருவாய்த்துறைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிற்கும் அதனைக் கண் காணிக்க ஓர் ஆங்கிலேய ஆணையாளர் நியமிக்கப்பட்டார். ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட 'மாநிலக் குழு' ஒன்று நியமிக்கப்பட்டு, அக் குழு மேல்முறை யீடுகளைத் தீர்த்து நீதி வழங்கவும், நில வருவாய்க் கணக்குகளைப் பரிசீலிக்கவும் அதிகாரம் பெற்றது.

பொருளியல் சீர்திருத்தங்கள்

ஒத்த நிலையுடைய சுங்கவரி இருத்தல் பொருட்டு, உள் நாட்டு வாணிகத்திற்கு இடையூருக இருந்தவர்களை நீக்கிவிட்டு, இந்தியப் பொருள்களுக்கும் பிறநாட்டுப் பொருள்களுக்கும் 2½% சுங்கவரி என ஓர் ஒழுங்குமுறையை வகுத்தார். இதன் விளைவாக மீர்காசிமிற்கும், வணிகக் குழுவிற்குமிடையே நிலவிய சச்சரவு தீர்ந்தது.

உப்பு, அபின் ஆகிய பொருள்களை அரசின் தனியுடைமை ஆக்கி அவ் வாணிகத்தின்மூலம் அரசுக்குப் பொருள் சேர்த்தார். நெசவாளர்களுக்கு ஏற்பட்ட துயரங்களைப் போக்கினார்.

அஞ்சல் கட்டண முறையிலும் சீர்திருத்தம் செய்யப்பட்டது. கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தும் முறை புகுத்தப்பட்டது.

நிலநூல் ஆய்வும், செங்கடற் செலவுபற்றிய ஆய்வும் மேற் கொள்ளப்பட்டன. தம்முடைய பிரதிநிதியைப் பூடானுக்கு அனுப்பி, இந்திய-திபேத் வணிக வாய்ப்புகளை ஆராய்ந்து வாணிகம் நடத்தும் உரிமையினைப் பூடான் மன்னரிடம் பெற்றார்.

வங்கத்தில் அநேகக் குடும்பத்தினர் தாங்கள் பெற்ற செல்வங் களைப் பறிகொடுத்தனர். இதற்குக் காரணம் துறவிகள் உடையில் திரிந்த கயமைக் கூட்டத்தினர் என்று கண்டு அவர்களை நாட்டைவிட்டு விரட்டினார். காவல்துறையை வலுப் படுத்திக் கொள்ளைக்காரர்களைக் கடுமையாகத் தண்டித்தார்.

நீதித்துறைச் சீர்திருத்தங்கள்

நீதித் துறையிலும் பல மாற்றங்களைச் செய்தார். மாவட் டங்கள்தோறும் ஊரியல் (Civil), குற்றவியல் (Criminal) நீதி மன்றங்களை அமைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர்களையே ஊரியல் நீதிமன்றத்தைத் தலைமை தாங்கும்படி செய்தார். குற்றவியல் நீதிமன்றங்களுக்கு இந்திய நீதிபதிகள் அமர்த்தப் பட்டனர். மாவட்ட ஊரியல் நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டு உயர்நீதிமன்றமாகக் கல்கத்தாவில் சாதர் திவானி அதாலத் (Sadr Diwani Adalat) என்ற நீதிமன்றமும், குற்றவியல் மேல் முறையீட்டு உயர்நீதிமன்றமாகச் சாதர் நிசாமத் அதாலத் (Sadr Nizami Adalat) என்ற நீதிமன்றமும் அமைக்கப்பட்டன. திவானி அதாலத்தில் ஆளுநரும், அவரது ஆலோசகர்களில் இருவரும் நீதிபதிகளாகப் பணியாற்றினர்.

சாதர் நிசாமத் அதாலத்திற்கு ஓர் இந்தியத் தலைமை நீதி பதியும், துணை நீதிபதிகளும் அமர்த்தப்பட்டனர். இந் நீதி மன்றங்களில் முறை வழங்குவோருக்கு உதவியாக இந்துச் சட்ட வல்லுநர்களையும் (Hindu Pandits) முகமதிய மறை மௌல்வி களையும் நியமித்தார்.

முகமதிய, இந்து வழக்கங்களைத் தெரிந்து தக்க தீர்ப்பு வழங்கும்பொருட்டுப் பாரசீக, சமஸ்கிருத மொழிகளை ஆங்கி

லேயர் கற்றுக்கொள்ள ஊக்குவித்தார். பாரசீகம், உருது, வங்காள மொழிகளை வாரன் ஹேஸ்டிங்ஸ் அறிந்திருந்தார். பல பாரசீக சமஸ்கிருதப் புத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஆதரவு தந்தார். பகவத் கீதை ஆங்கிலத்தில் வில்லியம் வில்கின்ஸால் மொழிபெயர்க்கப்படப் பெரிதும் உதவினர். இந்திய வரலாற்றிலும் ஆர்வம் காட்டினர். 'வங்க ஆசியக் கழகம்' (Asiatic Society of Bengal) என்னும் கழகம் ஒன்று சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் நிறுவப்பட அதற்குப் பேராதரவு தந்தார். சர் வில்லியம் ஜோன்ஸ், உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகக் கல்கத்தாவிற்கு வந்தார். கல்கத்தாவில் 1781ஆம் ஆண்டில் மதரஸா (Madrasah) எனப்படும் அராபிய மொழிக் கல்லூரி ஒன்றையும் வாரன் ஹேஸ்டிங்ஸ் நிறுவினர். வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆளுநர் பதவிக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் முக்கியமானது ரோகில்லாப் போராகும்.

ரோகில்லாப் போர் (1774)

ரோகில் கண்டு

ரோகில் கண்டு (Rohil Khand) இமயமலையின் அடிவாரத்தில் அயோத்திக்கு வடமேற்கே உள்ளது. இதன் பரப்பளவு 12,000 சதுர மைல்களாகும். இதன் மக்களில் பெரும் பகுதியினர் இந்துக்கள்; ஆயினும், பட்டாணியர்களின் ஆட்சியே அங்கு நடைபெற்று வந்தது. ரோகில்லா என்பவர்களும் பட்டாணியர்களும் ஆஃப்கானிஸ்தானத்திலிருந்து வந்த முகமதியர்களாவர். மூன்ரும் பானிப்பட்டுப் போரில் மராத்தியருக்கு எதிராக ரோகிலாக்கள் போரிட்டனர். இதனால் ரோகில்லா மீது பழிதீர்க்க மராத்தியர் தக்க தருணம் பார்த்திருந்தனர். ரோகில் கண்டின் தலைவரான ரஹமத் கான் (Rahmat Khan) அயோத்தியுடன் 1772ஆம் ஆண்டு ஓர் உடன்படிக்கையினைச் செய்துகொண்டார். அவ்வுடன்படிக்கையின்படி ரோகில் கண்டை மராத்தியர்கள் படையெடுத்துத் தாக்கினால், அயோத்தி நவாபு உதவ வேண்டும். இதற்காக அவருக்கு ரோகிலாக்கள் 40 இலட்சம் ரூபாய் தரவேண்டும் என இராபர்ட் பர்கான் என்பவரின் முன்னிலையில் இவ்வொப்பந்தம் நடைபெற்றது. 1773-ல் மராத்தியர்கள் ரோகில் கண்டின் மீது படையெடுத்தனர். அயோத்தி நவாபும் ரோகில்லாவின் உதவிக்குச் சென்றார். அதனால் பீஷ்வா மாதவ ராவ் திடீரென மரணமடையவே, மராத்தியர்கள் படையெடுப்பைப் பாதியிலேயே கைவிட்டுச் சென்றனர். மராத்தியருக்குள் குழப்பமும் தகராறும் ஏற்பட்டதால், அவர்கள் ரோகில்லாப் படையெடுப்பை உடனடியாக மீண்டும் தொடங்க

வில்லை. உதவிக்கு வந்த அயோத்தி அரசர் ஷுஜா-உத்-தௌலா (Shuja-ud-daulah) மராத்தியர் தாக்குதலிலிருந்து ரோகில் கண்டைக் காப்பாற்றியதற்காக ஒப்பந்தப்படி ரூபாய் 40 இலட்சத்தையும் தரும்படி கேட்டார்.

ரஹமத்கான் மராத்தியத் தாக்குதல் முற்றுப்பெறவில்லை யென்றும் அது முற்றுப்பெற்றாலே ஒப்பந்தப்படி பணந் தர இயலும் என்றும் கூறிவிட்டார். இதனால் சீற்றம் அடைந்த நவாபு ரோகில் கண்டைத் தாக்கினார். 1773-ல் காசி உடன்படிக்கையை நவாபுடன் செய்துகொண்டமையால், வாரன் ஹேஸ்டிங்ஸ் நவாபின் உதவிக்கு ஆங்கிலப் படையை அனுப்பினார். ஆங்கிலப் படையின் துணைகொண்டு 1774-ல் ரோகில்லாக்களை மீரான்பூர் கத்ரா (Miranpur Katra) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்து, ரோகில் கண்டை அயோத்தி நவாபு கைப்பற்றிக் கொண்டார். ரஹமத்கான் போரில் கொல்லப்பட்டார்.

வெற்றிபெற்ற நவாபின் படைகள் ரோகில் கண்டைச் சூறையாடின; கங்கைக்கு அப்பால் 20,000 ரோகில்லாக்கள் துரத்தப்பட்டனர்; ரோகில் கண்டு அயோத்தியுடன் சேர்க்கப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸின் மீது பின்னர் துரோகக் குற்றச்சாட்டுச் சாட்டப்பட்ட பொழுது இது ஒரு குற்றமாகச் சுமத்தப்பட்டது. ஆனால், பிரிட்டிஷ் பாராளுமன்றம் இக் குற்றத்தை அங்கீகரிக்காததால், இக் குற்றச்சாட்டுத் துரோகக் குற்றச்சாட்டுப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆளுநர் பதவியில் நிகழ்ந்த கடைசி முக்கியச் செயல் ரோகில்லாப் போர்தான். இதன் பிறகு ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி (Regulating Act) வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தின் தலைமை ஆளுநராக உயர்த்தப்பட்டார். இப் பதவியை வகித்த முதல் ஆங்கிலேயர் இவரே ஆவார்.

வாரன் ஹேஸ்டிங்ஸின் தலைமை ஆளுநர் பதவிக்காலம் (1774—1785)

1774ஆம் ஆண்டு முதல் 1785ஆம் ஆண்டுவரை இப் பதவியை இவர் வகித்தார். இவர் தலைமை ஆளுநராய்ப் பதவி வகித்த காலம் இந்திய வரலாற்றிலேயே மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். அவர், நிகரற்ற ஆட்சித் திறமையும் இடுக்கண் வருங்கால் மனந்தளராமல் போராடி வெற்றிபெறும் தனிச்

சிறப்பும் பெற்றிருந்ததை இத் தருணத்தில் நன்கு வெளிப் படுத்தினர்.

வாரன் ஹேஸ்டிங்ஸின் தலைமை ஆளுநர் பதவிக் காலத்தில் (1774—1785) ஏற்பட்ட நிகழ்ச்சிகளை இப்பொழுது கவனிப் போம்.

வாரன் ஹேஸ்டிங்ஸிற்கு உள்துறை ஆட்சியில் உண்டான இன்னல்களுக்கு ஒழுங்குமுறைச் சட்டமே முக்கியக் காரண மாகும். தலைமை ஆளுநரின் ஆலோசனைக்குழு அங்கத்தினர் களாய் நியமிக்கப்பட்டவர்களில் பார்வேல் ஒருவர்தாம் இந்தியா விலிருந்தார். கிளாவரிங், மான்சன், ஃபிலிப் ஃபிரான்ஸிஸ் என்ற மற்ற மூவரும் 1774ஆம் ஆண்டு கல்கத்தாவிற்கு வந்து சேர்ந் தனர். வந்தவுடனே, அவர்களைத் தக்கபடி உபசரிக்கவில்லை என்று வாரன் ஹேஸ்டிங்ஸ்மேல் குற்றம் சாற்றினர். கல்கத்தாத் துறைமுகத்தில் இறங்கியவுடன் வாரன் ஹேஸ்டிங்ஸ் இராணுவ மரியாதையுடன் அவர்களை வரவேற்க 17 குண்டுகளை இயக் கினர். 'நாங்கள் 21 குண்டுகளை எதிர்பார்த்தோம். 17 குண்டுகள்தாமே இயக்கப்பட்டன. இது எங்களைக் குறைத்து மதிப்பிடும் செயலின் முன்னோடி' என்று இந்தியாவில் காலடி வைத்த உடனேயே வாரன் ஹேஸ்டிங்ஸுடன் தம் போராட் டத்தைத் தொடங்கினர்கள். இந்த மூன்று உறுப்பினர்களும் இங்கிலாந்திலேயே வாரன் ஹேஸ்டிங்ஸுடன் பகைகொண் டிருந்தனர். இந்தப் போராட்டம் கடைசிவரை நீடித்தது. பெரும்பான்மை வாக்கெடுப்பு என்னும் கருவியை வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு எதிராகப் பயன்படுத்தினர்.

1777ஆம் ஆண்டுவரை ஆலோசனை மன்றத்தின் செயல்கள் அனைத்தும் ஹேஸ்டிங்ஸிற்கு எதிராகவே நடைபெற்றன. 1776ஆம் ஆண்டு மான்சன் திடீரெனக் காலமானர். கிளா வரிங் 1777ஆம் ஆண்டு இறந்தார். மான்சன் இறந்தது முதற் கொண்டு ஹேஸ்டிங்ஸ் படிப்படியாகத் தம்முடைய அதிகாரத் தினைப் பொதுவாகத் திரும்பப் பெற்றர். 1778-ல் ஃபிலிப் ஃபிரான்ஸிஸ் மற்போரில் படுகாயமடைந்து இங்கிலாந்திற்குத் திரும்பினர். 1778ஆம் ஆண்டுமுதல் ஹேஸ்டிங்ஸ் தன்னிகரற்ற தலைவராக விளங்கினர். 'என் பகைவருள் சிலர் இறந்தனர்; சிலர் பிணியுற்றனர்; ஒருவர் ஓடிவிட்டார்' என்று அவரே கூறினர். தலைமை ஆளுநரவை, தலைமை ஆளுநருடைய சொந்தச் சபை ஆயிற்று.

வெளிநாட்டுக் கொள்கை

அவர் தலைமை ஆளுநராக இருந்த பதவிக் காலம் ஆங்கிலேயருக்கு மிகவும் இக்கட்டான காலமாகும். அமெரிக்கச் சுதந்திரப் போரில் இங்கிலாந்து ஈடுபட்டிருந்தது; ஃபிரான்சும் ஹாலந்தும் அதற்கு எதிராக அமெரிக்காவை ஆதரித்தன. இதன் விளைவுகள் இந்தியாவிலும் எதிரொலித்தன. பம்பாய், மராத்தியருடனும், சென்னை ஹைதர் அலியுடனும் போரிட்டன. இதனால் வாரன் ஹேஸ்டிங்ஸுக்குச் சென்னையையும், பம்பாயையும் ஆதரித்து அவர்களுடன் போரிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 1780—81ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியே ஆட்டங் காணும் நிலைக்கு நிலைமை மோசமாயிருந்தது. இவ்விரண்டாண்டும் வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆட்சித் திறனுக்குச் சவால் விட்ட காலம் என்றால் அது மிகைப்படுத்தியதாகாது.

ஆங்கிலேயர் மராத்தியருடன் போரிடுகையில், ஹைதரும் போரைத் தொடங்கினர். ஃபிரெஞ்சுக்காரரும் அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். பொருளாதாரமும் மிகச் சீர்கேடான நிலையில் இருந்தது. மாபெரும் இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் இடையே வணிகக் குழுவின் ஆட்சியைச் சிதைந்து போகாதவாறு கட்டிக் காத்த பெருமை வாரன் ஹேஸ்டிங்ஸையே சாரும்.

முதலாம் மராத்தியப் போர் 1776ஆம் ஆண்டு முதல் 1782ஆம் ஆண்டுவரை நீடித்தது. இரண்டாம் மைசூர்ப்போரும் 1780ஆம் ஆண்டு முதல் 1784ஆம் ஆண்டுவரை நீடித்தது. இவை மராத்தியப் போர், மைசூர்ப் போர் என்ற தலைப்புடைய அத்தியாயங்களில் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஹேஸ்டிங்ஸ் 1785ஆம் ஆண்டு இந்தியாவைவிட்டுச் சென்றபோது வணிகக் குழுவின் ஆட்சியை அமைதியுடையதாகவும், ஆற்றல் உடையதாகவும் விளங்குமாறு செய்துவிட்டுச் சென்றார்.

(அரசியல்) துரோகக் குற்றச்சாட்டுகள் (Impeachment)

ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்து திரும்பிய மூன்றாண்டிற்குப்பின் (1788) துரோகக் குற்றச்சாட்டுக்கு இலக்கானர். பெருமக்கள் மன்றத்தின் முன்னர் (House of Lords) வாரன் ஹேஸ்டிங்ஸ் 23 குற்றங்கள் சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டார். அவற்றுள் முக்கியமானவை ரோகில்லாப் போரைப்பற்றியதும், காசி அரசர்

செயித்சிங்கைப்பற்றியதும், அயோத்தியப் பேகங்களைப் பற்றியதும், நந்தகுமாரைப்பற்றியதுமாகும்.

ரோகில்லாப் போரைப்பற்றிய சில வினாக்கள் தலைமை ஆளுநரின் ஆலோசகர்களால் கேட்கப்பட்டன. பார்வெல் மட்டும் வாரன் ஹேஸ்டிங்ஸிற்கு ஆதரவாக இருந்தார். மற்றவர்கள் லக்னோவிலிருந்த நிலையர் (Resident) மிடில்டன் (Middleton) என்பவரை அழைத்து, ரோகில்லாப் போரின்போது வாரன் ஹேஸ்டிங்ஸுக்கும், அவருக்கும் இடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகளைக் கொடுக்கும்படி கேட்க, அவை இரகசியக் கடிதங்கள் என்றும் அவற்றை வெளிப்படையாகக் கேட்டது தவறு என்றும் கூறினர். ரோகில்லாப் போரில் வாரன் ஹேஸ்டிங்ஸ் பங்கெடுத்துக் கொண்டது முறையற்றதும், ஆங்கிலேயரின் கொள்கைக்கு முரணானதும் ஆகும். ரோகில்கண்டு நேர்முகமாக ஆங்கிலேயருக்குப் பகைநாடன்று. ரோகில்கண்டின் மீது படையெடுத்ததற்குத் தகுந்த காரணம் ஏதும் இல்லை. பொருள் ஆசை பிடித்து அதனாலேயே அப் போரில் கலந்து கொண்டார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கையில் 'ரோகில்லாப் போர்' ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்று தாம் ஆளுநர் பதவி வகித்தபோது நடந்தது. ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி இப்பொழுது தாம் 'தலைமை ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸ்'. எனவே, தமக்கும் இதற்குத் தொடர்பில்லை என்று கூறிவிட்டார். மேலும்,

'அந்நிய நாட்டில் ஆங்கிலேய ஆட்சிக்குப் பலன் தேடியது சுயநலத்தின் பொருட்டன்று. ஆங்கிலேயப் பேரரசு இந்தியாவில் சிறப்படைய வேண்டும் என்ற அரசியல் நோக்கத்தினாலேதான். எனவே, ரோகில்லாப் போர் குற்றமில்லாத செயலே ஆகும்' என்றும் பதில் கூறினர்.

பலர் ரோகில்லாப் போரைப்பற்றிப் பல தரப்பட்ட கருத்துகளைத் தெரிவித்தனர். இப் போரில் வாரன் ஹேஸ்டிங்ஸ் கலந்து கொண்டது தவறு என்றும், சரியென்றும் இருவகைப்பட்ட கருத்துகளை அறிஞர்கள் கூறினர். ஆயினும், அவர் தமது சூழ்நிலையாலும், இன்னல்களாலும், ஆங்கில ஆட்சியைக் காக்க வேண்டும் என்னும் கொள்கையாலுமே ரோகில்லாப் போரில் கலந்துகொண்டார் என்றே பொதுவாகக் கருதப்பட்டது.

செயித் சிங் (Chait Singh) வழக்கு

செயித் சிங் காசியை அயோத்தி நவாபிற்குக் கட்டுப்பட்டு ஆண்டு வந்தார். 1775-ல் நவாபு அந்த உரிமையை வணிகக் குழுவுக்கு வழங்கினார். இதனால் 22½ இலட்சம் ரூபாய் ஆண்டு தோறும் திறைப்பொருள் வணிகக் குழுவுக்குச் செலுத்த உடன்பட்டுச் செயித் சிங் காசியை ஆண்டு வந்தார். 1778-ல் மராத்தியப்போரால் நிதிநிலைமை மோசமாகவே வாரன் ஹேஸ்டிங்ஸ், வழக்கமான ஆண்டுத் திறைப்பொருளோடு ஐந்து இலட்சம் ரூபாய் தரும்படி கேட்டார். 1779ஆம் ஆண்டும் சென்ற ஆண்டைப் போல 27½ இலட்சமே கேட்டார். சிறிது தயக்கத்திற்குப்பின் அத் தொகையை அவர் செலுத்தினார். 1780ஆம் ஆண்டு திறைப் பொருளுடன் 2,000 குதிரைப் படை வீரர்களையும் அவரிடம் கேட்டார். செயித் சிங்கால் 2,000 குதிரைப் படை வீரர்களை அனுப்ப இயலாதெனத் தெரிந்தவுடன் குறைந்தது 1,000 குதிரைப் படை வீரர்களைக் கட்டாயம் அனுப்பிவைக்கும்படி உத்தரவிட்டார். காசி மிகச் சிறிய நாடு. 27½ இலட்ச ரூபாயே மிகப் பெரிய தொகையாகும். செயித் சிங்கால் 1,000 குதிரைப் படை வீரர்களை அனுப்பிவைக்க முடியவில்லை. 500 குதிரைப் படை வீரர்களையும், 500 காலாட் படையினரையும் (Infantry) அனுப்பிவைத்தார். ஹேஸ்டிங்ஸ் இதனால் மிக்க சீற்றம் அடைந்தார். ஆணைக்குக் கீழ்ப்படியவில்லையாகையால் காசியின்மேல் படையெடுத்துச் சென்று செயித் சிங்கை அவர் அரண்மனையிலே சிறைப்படுத்திவிட்டுக் கல்கத்தா திரும்பினார். தம் அரசருக்கு ஏற்பட்ட இழிவை மக்களால் பொறுக்க முடியவில்லை. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் ஆங்கிலேயப் படை வீரர்களைக் கொலை செய்தனர். இதனால் மறுபடியும் ஹேஸ்டிங்ஸே ஒரு படையுடன் சென்று மக்களின் எழுச்சியை ஒடுக்கிச் செயித் சிங்கையும் பதவியிலிருந்து நீக்கினார். செயித் சிங் தப்பிச்சென்று கருவூலத்திலிருந்த ஒரு பகுதிப் பணத்துடன் குவாலியருக்கு ஓடிவிட்டார். ஆண்டிற்கு 40 இலட்சம் திறைப்பொருளைச் செலுத்த ஒப்புக்கொண்ட செயித் சிங்கின் மருமகன் மகிப் நாராயணனுக்கு ஆளும் உரிமையைத் தந்தார். செயித் சிங்கின்மீது நடவடிக்கை எடுத்தது ஒரு முறைகேடான செயல் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

காசிக்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் போனதால் ஒரு பலனும் விளையவில்லை. ஆங்கிலேய வீரர்கள் பலர் உயிர் நீத்தனர். வரலாற்று ஆசிரியர்கள் செயித் சிங்கின் விவகாரம், அவமானத்திற்கும் வேதனைக்குமுரிய விவகாரமென்று குறிப்பிடுகின்றனர்.

இச் செயலை பர்க் மிகவும் கடுமையாகக் கண்டித்துப் பேசினார். 'உலகம் உள்ள வரையில், உலகில் உண்மை உள்ள வரையில் ஹேஸ்டிங்ஸ் இழைத்த கொடுமையையும் கொள்ளையையும் மக்கள் மறக்கமாட்டார்கள்' என்று குற்றம் சாட்டினார் ஒருவர். மற்றொருவர் 'அக் காலத்தில் சிந்திய ஒவ்வொரு துளிக் குருதிக்கும் அவரே பொறுப்பாவார்; அவர் காரணமாகவே பலர் அங்கே உயிர் துறந்தனர்' என்றார்.

நடுநிலையோடு இவ் விவகாரத்தினை ஆராய்கின்றபோது, உடன்படிக்கைக்கு மாறாகப் பொருள் கேட்டுத் துன்புறுத்தியது வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த மன்னிக்க முடியாத குற்றமேயாகும். தம் அவையிலிருந்த தம் எதிரியான கிளாவரிங்கின் ஆதரவைப் பெறச் செயித் சிங் முயன்றதால் அவர்மீது நடவடிக்கை மேற்கொண்டார் என்று சொல்லப்படுகிறது. ஆனால், வாரன் ஹேஸ்டிங்ஸ் அவசரகாலத் தேவையை ஒட்டி, ஆங்கில அரசின் நன்மைக்காகவே அதிகமாகப் பணம் கேட்டதாகக் கூறியதிலிருந்தும் செயித் சிங் தாமே பதவியைவிட்டு ஓடியபோது அவர் மருமகனுக்குத் தாம் பதவியை அளித்திருப்பதிலிருந்தும் தம் நியாய உணர்வு நன்கு விளங்கும் என்று பதில் கூறினார்.

அயோத்தி பீகங்களின் வழக்கு

அயோத்தி பீகங்கள் என்று சொல்லப்படுகின்றவர், அயோத்தியின் நவாபான ஆஸஃப்-உத்-தௌலாவின் (Asaf-ud-daulah) பாட்டியும் தாயும் ஆவர். இவர்களுக்கு என்று தனிக் கருவூலங்கள் இருந்தன. இவற்றில் விலைமதிக்க முடியாத பொருள்களும் இருந்தன.

ஆஸஃப்-உத்-தௌலா ஆடம்பரப் பிரியர்; பெரும் பொருளைத் தீய வழிகளில் செலவழித்தார். இதனால் இவர் அடிக்கடி பீகம்மாரிடம் பணம் கேட்டார். இவர் தொந்தரவைப் பொறுக்க முடியாத பீகம்மார், 1778-ல் வாரன் ஹேஸ்டிங்ஸின் முன்னிலையில் ஆஸஃப்-உத்-தௌலாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு, அவருக்கு ஏற்கெனவே கொடுத்திருந்த 25 இலட்சம் ரூபாயுடன் மேலும் 30 இலட்சம் ரூபாய் கொடுத்து, அதன்பிறகு அவர்களுக்கு யாதொரு பணத் தொந்தரவும் கொடுக்கக் கூடாதென உறுதி மொழியும் வாங்கிக் கொண்டனர். இதற்கு வாரன் ஹேஸ்டிங்ஸும் சாட்சியாக விளங்கினார். ஆஸஃப்-உத்-தௌலா, பீகம்மார் சொத்தில் யாதொரு உரிமையும் கொண்டாடுவதில்லை என்று எழுதியும் கொடுத்தார்.

வணிகக் குழுவுக்குக் கொடுக்கவேண்டிய கப்பத் தொகையை ஆஸஃப்-உத்-தௌலா கொடுக்காமல் இருந்தார். 1780-ல் இத் தொகை ஒன்றரைக் கோடிக்குச் சேர்ந்தது. மராத்திய மைசூர்ப் போர்களால் வணிகக் குழுவின் நிதிநிலைமை மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்தது. வாரன் ஹேஸ்ங்டிங்ஸ் நவாபைப் பணம் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினர். நவாபின் பார்வை இதனால் மறுபடியும் பீகம்மார்களின் கருவூலங்களின்மேல் சென்றது. 1775ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் மீறிப் பண உதவி செய்யும்படி நவாபு அவர்களை வற்புறுத்தினர். அவர்கள் கொடுக்க மறுக்கவே நவாபு வாரன் ஹேஸ்டிங்ஸின் உதவியை நாடிட, எப்படியாவது பணம் பெறவேண்டுமென்ற நிலையிலிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் 1781ஆம் ஆண்டு பீகங்களைத் தங்கள் கருவூலங்களை வணிகக் குழுவிடம் ஒப்படைக்கும்படி கட்டளையிட்டார். செயித் சிங்கிற்கு அவர்கள் ஆதரவு அளித்ததாக ஒரு கற்பனைக் காரணத்தையும் காட்டினர்.

பீகங்களின் மாளிகை முற்றுகையிடப்பட்டு, அவர்களுடைய இரு அமைச்சர்களும் சிறைப்பிடிக்கப்பட்டு உடைமைகளும், ஜாகீர்களும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன. கொள்ளையிட்ட பொருள்களைக்கொண்டு நவாபு தம் கடனைத்! தீர்த்தார். வணிகக் குழுவிற்கு 76 இலட்சம் ரூபாய் இம் முற்றுகையால் கிட்டியது.

ஆதரவற்ற பெண்டிர்களை முற்றுகையிட்டு அவர்கள் வசமிருந்த பொருள்களைக் கைப்பற்றிய செயல் ஹேஸ்டிங்ஸின் தவறுகளில் முக்கியத்துவம் வாய்ந்தது என்று எட்மண்டு பர்க் அவர்மீது குற்றம்சாட்டினர். 1775-ல் பீகங்களின் உடைமைகளைக் காப்பதாக வாக்களித்திருந்த ஆங்கிலேயர், அதற்கு மாருக ஆஸஃப்-உத்-தௌலாவுக்குத் துணையாகநின்று அவர்களைத் துன்புறுத்தியது பெருங்குற்றமேயாகும். நவாபிடமிருந்து பத்து இலட்சம் ரூபாய் இலஞ்சம் வேறு பெற்றார்.

வாரன்ஹேஸ்டிங்ஸ் வழக்கம் போல இக் குற்றச்சாட்டுகளுக்கு, 'நான் 1775-ல் வணிகக் குழுவினர் பீகங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறியதற்குக் காரணம் அவர்கள் செயித்சிங்கின் கலகத்தில் கலந்துகொண்டதே' என்றும், பத்து இலட்சம் ரூபாய் பெற்றது துரோகச் செயல் அன்று, தமது சேவைக்குக் கிடைத்த அன்பளிப்பு' என்றும் பதில் கூறினர்.

அவர்கள்மீது முதலாவது அவர் சாட்டிய குற்றச்சாட்டு வேண்டுமென்றே புனையப்பட்டது என்று கருதப்படுகிறது.

நீதிபதி இம்பே இதைப்பற்றி விசாரித்தபோது வேறுபல வாக்கு மூலங்களைத் தயாரித்து ஹேஸ்டிங்ஸைக் காப்பாற்றினர். ஒழுங்கு முறைச் சட்டத்தில் பரிசுகள் பெறுவது குற்றம் என விதிக்கப் பட்டுள்ளது. அதை மீறி அவர் பத்து இலட்சம் ரூபாய் பெற்றது துரோகச் செயல் என்றே கருதப்படுகிறது.

நந்தகுமார் வழக்கு

நந்தகுமார் வங்காளத்தில் பிறந்து, சுராஜ்-உத்-தௌலாவின் கீழும், மீர்ஜாஃபரின் கீழும், முகமது கஸாக்கான் கீழும் பணிபுரிந்தார். 1775-ல் நந்தகுமார் வாரன் ஹேஸ்டிங்ஸின் மீது பெருங் குற்றமொன்றைச் சாட்டினர். மீர்ஜாஃபரின் புதல்வரை நவாபின் குடும்பத்திற்கு ஹேஸ்டிங்ஸ் திவானுக்கியதற் காகவும், மீர்ஜாஃபரின் மனைவியைத் தம் மகனுக்குப் பாதுகாவல ராக்கியதற்காகவும் 3½ இலட்சம் ரூபாய் கையூட்டுப் பெற்ருர் என்பதே அக் குற்றச்சாட்டு. அதைத் தகுந்த சான்றுகளுடன் மெய்ப்பிக்க முன்வந்தார். ஆலோசனைக் குழுவில் பெரும் பாலோர் அதனை ஏற்று ஹேஸ்டிங்ஸைக் குற்றவாளி என்று கூறிப் பதவி இறக்கம் செய்ய முன்வந்தனர்.

இந் நிகழ்ச்சி 1775 மார்ச்சில் நடைபெற்றது. அதே ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நந்தகுமார் மீது மோகன் பிரசாத் என்பவரின் தூண்டுதலின்பேரில் 50,000 ரூபாய்க்கு ஏமாற்றப் பொய்க் கையெழுத்திட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, அக் குற்றச் சாட்டின்படி, பொய்க் கையெழுத்திட்டதற்காக நந்தகுமார் 5-8-1775-ல் தூக்கிலிடப்பட்டார்.

நந்தகுமார் இந்தியர். இந்தியரைத் தண்டிப்பது இந்தியச் சட்டத்தின்படியே தண்டிக்கப்பட வேண்டும். ஆங்கிலநாட்டுச் சட்டத்தின்படி அக் குற்றத்திற்குரிய தூக்குத்தண்டனையை இங்கே பயன்படுத்தி நந்தகுமாரைத் தூக்கிலிட்டது நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பானதாகும் என்றே கருதப்படுகிறது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் நந்தகுமாரைத் தாம் கொண்டிருந்த சொந்தப் பகையாலேயே தூக்கிலிட்டார். இதனுல் ஆங்கிலே யரின் நீதி, பண்பாட்டிற்கு இவர் இழுக்கைத் தேடித்தந்து விட்டார் என்று எட்மண்ட் பர்க் உரைத்தார். நந்தகுமாரின் சாவு ஹேஸ்டிங்ஸின் பெருமையைச் சிதைத்துவிட்டது என்று ஜேம்ஸ் மில் கூறினர். எட்வர்ட் தாம்ஸனும், G T. காரட்டும் நந்தகுமாருக்கும், ஹேஸ்டிங்சுக்கும் இருந்த தனிப்பட்ட பகையே நந்தகுமாரின் கொலைக்குக் காரணம் என்கின்றனர்.

ஆனால், சர் ஜேம்ஸ் ஸ்டீபன் என்பவர் நீதிவிசாரணை நேர்மையற்றது என்ற குற்றச்சாட்டை மறுத்து அது சரியே என்று கூறுகிறார். ஆயினும், ஆங்கிலச் சட்டப்படி நந்தகுமாரைக் கொலைத் தண்டனைக் குள்ளாக்கியது ஏற்றதன்று என்னும் டாக்டர் வின்செண்ட் ஸ்மித், நீதிமன்றமே முடிவெடுத்துச் செய்த செயலுக்கு ஹேஸ்டிங்ஸை உடந்தையாக்குவது பொருத்தமில்லை என்றும் உரைக்கிறார். நீதிபதி கொலை செய்யாவிட்டாலும், நீதி மன்றம் தவறிழைத்தது என்று கூறுவதோடு, சபையுறுப்பினர் களின் கேளாச் செவியாலும், இரக்கமற்ற தன்மையாலும், ஹேஸ்டிங்ஸின் நடத்தையாலும் நந்தகுமார் தூக்கிலிடப்பட்டார் என்று இராபர்ட்ஸ் கூறுகின்றார்.

இக் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்துப் பேசுகையில் வாரன் ஹேஸ்டிங்ஸ் தமக்கும் நந்தகுமாரின் கொலைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று கூறினார். இது முழுதும் நீதிமன்றம் அளித்த தீர்ப்பாகையால், அதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தமக்கு இல்லையென்றார். தாம் நிரபராதி என்றார். நீதிபதி இம்பேக்கு (Impey) வேறொரு பதவியும், அதிகச் சம்பளமும் கொடுத்து மறைமுகமாகக் கொலை செய்யத் தூண்டினார் என்று குற்றம் சாட்டப்பட்ட போதும் இதனையே கூறினார்.

1788-ல் தொடங்கிய விசாரணை 1795 வரை நடந்தது. மேல் சபையோர் வெஸ்ட்மினிஸ்டர் மாளிகையில் சான்ஸலர் தலைமையில் வழக்கு நடந்தது.

இவ் வழக்கு வரலாற்றுப் புகழ் பெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். இவ் வழக்கைக் கேட்க ஆயிரக்கணக்கான மக்கள் பணம் கொடுத்து நுழைவுச் சீட்டுப் பெற்று வந்தனர். சொல்லாற்றல் மிக்க பர்க் (Burke), ஃபாக்ஸ் (Fox) போன்றவர்களால் வாரன் ஹேஸ்டிங்சிற்கு வழக்கு விசாரணை பாதகமாகவே இருந்தது. அவர்களின் குற்றச்சாட்டுகளை எல்லாம் வாரன் ஹேஸ்டிங்ஸ் மறுத்து வாதாடி என்ன பதில்கூறினார் என்பதை ஏற்கெனவே கண்டோம்.

கடைசியில் ஹேஸ்டிங்ஸ் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப் பெற்றார். ஆனால், நீடித்த விசாரணையால் இவர் நிதிநிலைமை மிக மோசமான நிலையை அடைந்துவிட்டது. ஹேஸ்டிங்ஸ் இலட்சம் பொற்காசுகளை வழக்குக்காகச் செலவழித்தார். வணிகக்குழு இயக்குநர் ஆண்டுக்கு 4000 பவுன்களை இவருக்கு ஓய்வுகால ஊதியமாகக் கொடுத்தனர். 1813ஆம் ஆண்டு வணிகக்குழுவின் பட்டயச் சட்டத்தை நீடிக்க வாரன் ஹேஸ்

டிங்ஸின் முதிர்ந்த அறிவுரையைக் கோரப் பாராளுமன்றத்திற்கு அழைக்கப்பட்டார். பாராளுமன்றத்திற்கு வருகை தந்தபோது எல்லா உறுப்பினர்களும் எழுந்துநின்று ஆரவாரத்துடன் வரவேற்று அவருக்குப் பெரும் மதிப்புக் காட்டினர்.

1780-ல் கல்கத்தா உயர்நீதிமன்றம் வங்காள அரசின்மீது தன் ஆணைகளைச் செலுத்த விரும்பியது. இதனால் அரசுக்கும், மன்றத்திற்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. இச்சச்சரவை எளிதாகத் தீர்க்கவேண்டிய வாரன் ஹேஸ்டிங்ஸ் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியை ஊரியல், குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் தலைவராக்கி அவருடைய ஊதியத்தோடு 6,500 பொற்காசுகளைச் சேர்த்துக் கூடுதல் ஊதியமாகக் கொடுத்த இச்செயலைத் தலைமை நீதிபதிக்குக் கையூட்டுக் கொடுத்தார் என்று அனைவரும் கண்டித்தனர்.

வாரன் ஹேஸ்டிங்ஸ்மீது 22 குற்றச்சாட்டுகளை பர்க் பாராளுமன்றத்தில் தொடுத்தார். அவற்றில் மேற்கூறியவற்றோடு கோரா, அலகாபாத் மாவட்டங்களை விற்றது, மகாராட்டிரப் போர், வங்க நிலவரித்திட்ட ஊழல்கள், முகமது ரஸாக்கானையும் இராணபுரியின் பெய்ஸுல்லாகானையும் கேவலப்படுத்தித் துன்பம் விளைவித்தது ஆகிய குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் வாரன்ஹேஸ்டிங்ஸிற்கு 'டாக்டர் ஆஃப் லாஸ்' என்னும் கௌரவப் பட்டம் அளித்தது. பிரஷ்யாவின் அரசர் 1814ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்கு வந்த போது இவர் இல்லத்திற்கு வந்து இவரைப் பெருமைப் படுத்தினர். இவ்வாறு சிறப்புப் பெற்ற ஹேஸ்டிங்ஸ் 1818ஆம் ஆண்டில் தம் 86ஆம் வயதில் இறந்தார்.

மதிப்பீடு

எடுத்துச் சொல்ல முடியாத இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் இடையில் வணிகக் குழுவைக் கட்டிக் காத்த பெருமை வாரன் ஹேஸ்டிங்ஸையே சாரும். சாதாரண வணிகக் குழுவின் எழுத்தாளராகத் தம் வாழ்க்கையை ஆரம்பித்த வாரன் ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநர் பதவிக்கு உயர்ந்தார் என்றால், அது அவர் ஆற்றலுக்கு அளித்த பரிசு என்றே கருத வேண்டும். இவரது ஆட்சிக் காலத்தில், இங்கிலாந்துப் பேரரசு அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை இழந்த வேளையில் இந்தியாவிலிருந்த ஆங்கில நிலப் பகுதிகளைப் பாதுகாத்தார். இவர் மேற்கொண்ட சீர்திருத்தங்களின் மூலம் இவருக்குப் பின் வந்த பலருக்கு

முன்னேடியாய் இருந்தார் என்பதில் ஐயமில்லை. 'ஸிவில் (Civil) நிர்வாக முறையின் அடித்தளத்தை வாரன் ஹேஸ்டிங்ஸ் அமைக்க அதன் மீது மேற்கட்டுமானம் காரன்வாலிசால் எழுப்பப்பட்டது' என்று சர் வில்லியம் ஹன்டர் கூறுகின்றார். வெளிப் பகைவர்களேயும் வணிகக் குழுவின் நிர்வாகத்துள் உள்ள உட்பகைவர்களேயும் பொறுமையுடனும், உறுதியுடனும் எதிர்த்துப் போரிட்டார். ஆட்சி அமைப்பிற்குரிய அடிப் படையை வலுவாக அமைத்த பெருமை வாரன் ஹேஸ்டிங் ஸையே சாரும். அவர் கல்கத்தாவை விட்டுத் தாயகம் திரும்பிச் செல்லும்பொழுது கல்கத்தாவைப் பேரரசின் தலைமை நிலைய மாக்கிச் சென்ருர்.

6. காரன்வாலிஸ் பிரபு
(1786—1793)

ஜான் மக்பெர்சன் (John Macpherson) என்பவர் வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு தாற்காலிகத் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். தலைமை ஆளுநர் குழுவின் மூத்த அங்கத்தினராக இருந்த காரணத்தினால் அவருக்கு இந்தப் பதவி கிடைத்தது. இவர் பதவியிலிருந்த பதினெட்டு மாதத்தில் குறிப்பிடும்படியான செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. பூனாவிலிருந்த மராத்திய அரசிடம் அவர் செய்துகொண்ட ஏற்பாடு ஆங்கிலேயரைச் சிக்கலில் அகப்படச் செய்ததேயன்றி, அவர்களுக்கு உதவியாக அமையவில்லை. அவரின் குறுகிய ஆட்சியில் இலஞ்சமும், பதவி வேட்டையும் ஆட்சியை ஆட்டிப் படைத்தன. இந்திய இலஞ்ச ஊழலில் பழக்கப்பட்ட கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஊழியரை, மிக உயர்ந்த பதவியான தலைமை ஆளுநர் பதவிக்கு நியமிக்கக் கூடாதென்ற எண்ணம் இங்கிலாந்தில் வலுப்பெற்றதன் பயனே காரன்வாலிஸ் தலைமை ஆளுநர் ஆனதற்கு முக்கியக் காரணமாகும். மாசுமறுவற்ற உயர்குடிமகனை அப் பதவியில் அமர்த்தலே சாலச் சிறந்தது என்ற மனப்பான்மை வலுப்பெற்றது. நேர்மையற்ற முறைகளில் எவ்வளவு விரைவில் பொருளைக் குவிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் பொருளைச் சேர்க்கும் அவாவினை மிகுதியாக உடையவர்களாக வணிகக் குழுவின் ஊழியர்கள் இருந்தனர். அந் நிலையை மாற்றிச் சீர்திருத்தம் செய்திட உயர்குடிப் பிறந்த ஒருவரைத் தலைமை ஆளுநராக அமர்த்த வேண்டுமென்று எல்லாத் துறையினரும் விரும்பினர்.

எல்லாத் தகுதிகளையும் பெற்றவராகக் காரன்வாலிஸ் விளங்கினர். ஆகவே, அவரை அந்தப் பதவியை ஏற்கும்படி பல

முறை வேண்டப்பட்டது. 1782-லும், 1785-லும் இரண்டு முறை அந்தப் பதவியை வகிக்கும்படி வேண்டப்பட்டும் அப் பதவியை ஏற்க அவர் மறுத்துவிட்டார். மூன்றும் முறையும் அவரை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டதோடு சில தனிச் சலுகைகளையும் அவருக்குக் கொடுத்தனர். அதற்காகவே தனி யானதொரு சட்டம் 1786-ல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி வணிகக் குழுவின் படைக்கும் அவரே தலைவராகவும் நியமிக்கப்பட்டார். தேவைப்பட் டால் தம் ஆலோசனை மன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை யினரின் வாக்குகளை நிராகரிக்கும் இரத்து உரிமையும் (Veto) வழங்கப்பட்டது. இவ் விரு சலுகைகளை இவரைத்தவிர மற்ற எந்தத் தலைமை ஆளுநரும் அனுபவிக்கவில்லை என்பதை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். இதைத் தவிர, காரன்வாலிஸ் மற்ற வகையிலும் அதிருஷ்டசாலி என்றே குறிப்பிடலாம். அமெ ரிக்காவின் சுதந்திரப் போரில் ஆங்கிலப் படையைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். அவர் போரில் தோல்வி அடைந் தாலும் ஆங்கிலேயர்கள் அவர்பால் மிக்க மதிப்பும், நம்பிக்கையும், அன்பும் வைத்திருந்தனர். அதற்கு முக்கியக் காரணம் அவ ருடைய நேர்மைப் பண்பேயாகும். இவர் உயர்குடிக் குடும் பத்தைச் சார்ந்திருந்ததால், இங்கிலாந்தில் முதன்மையாயிருந்த அரசியல் வல்லுநர்களின் இடையே இவருக்கு ஏராளமான நண்பர்கள் இருந்தனர்.

இவர் கட்டுப்பாட்டு வாரியத்தின் (Board of Control) தலைவ ரான டண்டாசின் (Dundos) மிக நெருங்கிய நண்பர் மட்டுமன்றி அன்றைய இங்கிலாந்து முதல் அமைச்சர் பிட்டின் (Pitt) நண் பரும் ஆவார். அவரின் நேர்மையும் ஊக்கமும் வணிகக் குழு வின் ஊழியரை அவர்பால் மதிப்பும், அவர் மேற்கொண்ட தூய்மைப்படுத்தும் பணிக்கும் சீர்திருத்தம் செய்யும் திட்டத் திற்கும் உதவிபுரிய வைத்தன. புகழ்பெற்ற வணிகக் குழுவின் ஊழியர்களான சர் ஜான் ஷோர் (Sir John Shore), பிற்காலத் தில் பம்பாயின் ஆளுநராகப் பணிபுரிந்த ஜோனதன் டங்கன் (Johnathan Duncan), சார்லஸ் கிராண்ட் (Charles Grant), ஜேம்ஸ் கிராண்ட் (James Grant) போன்றோர் அவரின்கீழ்ப் பணி புரிந்தனர். காரன்வாலிஸ் இந்த எல்லாச் சூழ்நிலைகளையும் வீணாக்காமல் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தித் தமது பெயர் என் றென்றும் நிலைத்துநிற்கும்படி செய்தார். 1786-லிருந்து 1793 வரை ஏழாண்டுகள் ஆட்சி செய்தார். இவர் தம் ஆட்சிக் காலத்தில் மூன்றும் மைசூர்ப் போர் தவிர வேறெந்தப் போரும் நிகழாததும், இந்தியாவில் மட்டுமன்றி ஐரோப்பாவிலும் எந்தப்

போரும் நிகழாததும் குறிப்பிடத் தகுந்த சூழ்நிலையாகும். அவர் ஒரு போர்த் தலைவராயிருந்தும், போரில் காலத்தையும் பொருளையும் வீணாக்காமல், ஆக்க வேலையில் தம் காலத்தையும் திறமையையும் செலவிட்டார். அவர் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

இந்தியச் செய்திகளில் தலையிடாக் கொள்கை

இந்தியச் செய்திகளில் தலையிடாமலும், இந்திய மன்னர்களின் ஆட்சியைக் கவராமலும் தலையிடாக் கொள்கையினைக் (Policy of non-intervention) கடைப்பிடித்தார். 1784ஆம் ஆண்டு ஏற்பட்ட பிட் இந்தியச் சட்டம் இங்கிலாந்தின் இசைவின்றி இந்திய மன்னர்களோடு போரிடுதலோ, சமாதான உடன்படிக்கை செய்தலோ கூடாது என வலியுறுத்தியது. அச் சட்டத்தின் கொள்கை உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையினை மனத்தில்கொண்டே இந்தியாவிற்கு வந்தார்.

அக் கொள்கையினை மேற்கொண்டதாலேயே, ஷா ஆலத்தின் மகனுக்கு டெல்லியைக் கைப்பற்ற உதவிசெய்ய மறுத்துவிட்டார். தலையிடாக் கொள்கையின் காப்பாளராக இருக்க வேண்டும் என்று இந்தியாவிற்கு வந்த காரன்வாலிஸ், சூழ்நிலையால் மைசூர்ப் போரில் ஈடுபட நேர்ந்தது. எனவேதான் வின்சென்ட் ஸ்மித் 'சமாதானம் தேடிவந்த காரன்வாலிஸ் சண்டையைக் காண வேண்டியதாயிற்று' என்று கூறினார். இந்தியாவில் காலடி வைத்தவுடனேயே இந்திய அரசியல் சூழ்நிலையில் தாம் மேற்கொண்டிருந்த தலையிடாக் கொள்கை பயன்பாடது என்பதை அவர் உணர நேர்ந்தது.

மகாராட்டிரர்கள் தம் நாட்டினை வலுப்படுத்திக்கொண்டு, அண்டை நாடுகளைக் கவரும் கொள்கையினை மேற்கொண்டிருந்தனர். இந்திய மன்னர்கள் ஒற்றுமையின்றி ஒருவருக்கொருவர் போரில் ஈடுபட்டிருந்தனர். ஐதராபாத் நவாபும், அயோத்தி நவாபும் வலிமையற்றவர்களாக விளங்கினார்கள். மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் ஆங்கிலேயரை விரட்டிவிடவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். இந் நிலையில் காரன்வாலிஸ் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைப் பாதுகாக்கத் தலையிடுதல், விரிவு படுத்துதல் ஆகிய கொள்கைகளைப் பின்பற்ற எண்ணம் கொண்டார்.

திப்புவிற்கு எதிராகப் போரை மேற்கொள்ள எண்ணம் கொண்ட காரன்வாலிஸ் பிரபு ஐதராபத் நிஜாமுடனும், மராத்

தியர்களுடனும் ஓர் உடன்படிக்கையினை மேற்கொண்டார். திப்புவிடமிருந்து சில பகுதிகளைக் கைப்பற்ற உதவி செய்யுமாறு ஆங்கிலேயரை நிஜாம் வேண்டிக்கொண்டார். காரன்வாலிஸ் திப்புவிற்கு எதிராகப் படை ஒன்றை அனுப்பிவைத்தார். எனவே, ஆத்திரமடைந்த திப்பு ஆங்கிலேயர்களின் நட்புப் பகுதியான திருவாங்கூரைத் தாக்கிடவே போர் ஆரம்பமாயிற்று.

மராத்தியர்களும் நிஜாமும் உதவினுலும் ஆங்கிலேயர்களுக்கு வெற்றி வாய்ப்பு ஏற்படவில்லை. 1790-ல் காரன்வாலிஸ் தாமே படை நடத்திச் சென்ருர். பெங்களூரைக் கைப்பற்றிய காரன்வாலிஸ் போதிய ஆயுதங்கள் இல்லாமையால் பின்வாங்கினுர். 1792-ல் காரன்வாலிஸ் திப்புவின் குன்றுக்கோட்டைகளைக் கைப்பற்றிச் சீரங்கப்பட்டணத்தை நோக்கி முன்னேறினுர். மராத்தியர்கள் மைசூர்ப் பகுதிகளைச் சேதப்படுத்தினர். தம் நிலை மோசமடைந்ததை உணர்ந்த திப்பு வேறு வழியின்றி அமைதி உடன்படிக்கை ஒன்றினைச் செய்தார். 1792-ல் மேற்கொள்ளப்பட்ட இவ்வொப்பந்தம் சீரங்கப்பட்டண ஒப்பந்தம் என வழங்கப்படுகிறது.

இவ்வொப்பந்தத்தின்படி திப்பு தம்முடைய ஆட்சிப் பகுதிகளில் பாதியை ஆங்கிலேயருக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டியதாயிற்று. 3½ கோடி ரூபாயைப் போர்ப் பணயப் பணமாகக் கொடுத்ததோடு, தம்முடைய இரு மக்களையும் பணயமாக ஆங்கிலேயரிடம் விட்டுவைத்தார். மராத்தியர்கள், நிஜாம் ஆகியோருடன் போரில் கிடைத்தவற்றை ஆங்கிலேயர்கள் பகிர்ந்துகொண்டனர். ஆங்கிலேயர்கள் மலபார், கூர்க் பிரதேசம், திண்டுக்கல், பாராமகால் ஆகியவற்றையும், மராத்தியர்கள் வடமேற்குப் பகுதியையும், நிஜாம் வடகிழக்குப் பகுதியையும் பிரித்துக்கொண்டனர்.

காரன்வாலிஸ் நினைத்திருந்தால் திப்பு சுல்தானை முழுவதுமாக ஒழித்திருக்க முடியும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதன் மூலமாக நான்காவது மைசூர்ப் போரைத் தவிர்த்திருக்கலாம் என்று கூறப்பட்டாலும் இப்போரில் காரன்வாலிஸ் மேற்கொண்ட நிலை சரியானதே. இல்லையென்ருல் நிஜாமும், மராத்தியர்களும், துரோகம் இழைத்திருக்கக் கூடும். மேலும், இச்செயலுக்குக் கட்டுப்பாட்டுக் கழகத்தின் அனுமதியும் பெறவேண்டும். காரன்வாலிஸ் இவ்வெற்றியைப்பற்றி உரைக்கின்றபோது எதிரியை ஒடுக்கியதோடு, நம் நண்பர்களும் பலமுள்ளவர்களாக மாறிவிடாது தடுக்க வாய்ப்பு ஏற்பட்டது என்றே கூறினுர்.

ஆட்சித்துறைச் சீர்திருத்தங்கள்

ஆட்சித்துறையைத் தூய்மைப்படுத்தும் பணியை முதன் முதலாக இவர் மேற்கொண்டார். ஆட்சித்துறையில் பணிபுரிந்தவர்கள்......தனிப்பட்ட வகையில் வாணிகம் செய்வதை மிகக் கடுமையாகத் தடைசெய்து ஒழித்தார். லஞ்சம் வாங்குவதை மிகக் கடுமையாக வெறுத்தார். அவர் 'இந்துஸ்தானத்தின் ஒவ்வொரு குடிமகனும் கைக்கூலி வாங்கும் ஊழல்மிக்கவனாக இருக்கின்றான் என்பதை நான் நம்புகிறேன்' என்று எழுதினார். ராபர்ட் கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் போன்றோர் லஞ்சம் வாங்குவதைத் தடுக்க முயற்சித்துத் தோல்வியடைந்தனர். லஞ்சம் வாங்குவதற்கு அடிப்படையான இரண்டு காரணங்களைக் காரன்வாலிஸ் கண்டறிந்தார். வணிகக் குழுவின் ஊழியர்கள் ஓய்வுபெறுங் காலத்து, ஓய்வுகால ஊதியம் ஒன்றும் அளிக்கப்படவில்லை. மேலும் அவர்களின் ஊதியம் மிகவும் குறைவாக இருந்தது வாரன் ஹேஸ்டிங்ஸ் இதை உணர்ந்து, பலமுறை இயக்குநர் குழுவினரை ஊதியத்தினை உயர்த்துமாறு வேண்டினார். ஆனால் அவர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. காரன்வாலிஸ் தம் செல்வாக்கினால் வணிகக்குழு ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தி, மற்றத் தரகு போன்ற மறைமுக வருவாய்களை நிறுத்தினார். வணிகக்குழு ஊழியர் தனிப்பட்ட வாணிகத்தில் ஈடுபடக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவிட்டார். வணிகக் குழுவின் வாணிகத்தையும் பொதுப்பணியிலிருந்து பிரித்து, வணிக வாரியத்திடம் (Board of Trade) ஒப்படைத்தார். குறைந்தது இத்தனை ஆண்டுகளாகிலும் பணிபுரியவேண்டும் என்று வரையறுக்கப்பட்ட பதவிகளுக்கே ஊதியம் தருவதை முறையாகக் கொண்டார். இவ்வாறு தாராளமாக ஊதியம் அளிக்கப்பட்ட ஆட்சிப்பணியாளர் தொகுதி ஒன்று(Covenanted Civil Service) தொடங்கப்பெற்றது. பொதுக் கடமையாற்றுவதில் உயர்ந்த கடமை உணர்வும், கவர்ச்சிமிக்க நேர்மையுமுடைய இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (I.C.S.) அவரால் இவ்விதம் வித்திடப்பட்டது. தற்கால ஐ. ஏ. எஸ். (I. A. S.) பதவி இதைத் தழுவியதே ஆகும். தகுதியின் அடிப்படையில் உத்தியோகங்களை வழங்கினார். இயக்குநர்கள் முதல் வேல்ஸ் இளவரசர் வரையில் எவருடைய சிபாரிசுகளையும் இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. 'திறமையுடையோர்க்கு வாய்ப்புகள் கிடைப்பது எளிது' என்ற கோட்பாட்டின்படி, எல்லோருக்கும் ஒரே மாதிரியான கொள்கையையே கடைப்பிடித்தார். நீதித் துறையைப் பொதுத் துறையிலிருந்து பிரித்தார். பின்பு, ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில்தான் இவை இரண்டும் இணைக்கப்பட்டன. ஒரு விரிவான பணிச் சட்டதிட்டங்கள் உருவாக வழிசெய்தார்.

நிலையான நிலவரித் திட்டம்
(Permanent Revenue Settlement)

நிலையான நிலவரித் திட்டத்தினை வங்காளம், பீகார், ஒரிசா ஆகியவற்றில் நிறுவியது காரன்வாலிஸின் சாதனைகளில் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். 1765-ல் இங்கிலாந்து வணிகக் குழு திவானி (Diwani) என்ற நிலவரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றது. ஆனால், அப் பொறுப்பை வணிகக் குழு உடனே மேற்கொள்ளவில்லை. நிலவரியை உழவரிடமிருந்து நேர்முகமாக வசூலிக்காமல், அதற்காக நியமிக்கப்பட்ட வரிதண்டுவோர் (வசூலிப்போர்) மூலம் பெற்று வந்தனர். உழவர்கள் வரி தண்டுவோரிடம் அவர் குறிப்பிட்ட தொகையையோ, பண்டத்தையோ செலுத்தினர். வரி தண்டுவோர் ஒரு குறிப்பிட்ட தொகையை வணிகக் குழுவினருக்குச் செலுத்தி வந்தனர். அவ்வாறு வரி தண்டியவர்களுக்குத்தான் ஜமீன்தார்கள் (பெருநிலக்கிழார்கள்) என்ற பெயர் வழங்கியது. வழக்காற்றினால் ஜமீன்தார்கள் மரபு வழி உரிமையைப் பெற்றனர். தந்தைக்குப்பின் மகனுக்கு அச் சலுகை வழங்கப் பெற்றது. குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வையைச் செலுத்த எந்த ஜமீன்தாராகிலும் தவறுவாரானால், அவர் தண்டம் (அபராதம்) செலுத்த வேண்டும்; அல்லது சிறைப் பிடிக்கப்படுவார் அல்லது கசையடி பெறுவார். ஆனால், அவரின் உரிமை பறிமுதல் செய்யப்படவில்லை. முன் அனுமதி பெற்ற பிறகு தமது ஜமீன்தாரிப் பதவியை மற்றவருக்கு விற்பனை செய்ய அவருக்கு முழு உரிமை இருந்தது. ஜமீன்தாரிப் பதவியை இழந்துவிடும் நிலை ஏற்பட்டால், அதற்கான இழப்பீடு பெறும் உரிமையும் அவருக்கு இருந்தது. ஜமீன்தாருக்குத் தீர்வை வசூலிப்பதுடன் அவர் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதியில் காவல் துறையின் பணிகளான (Police functions) பொதுவமைதியை நிலைநாட்டும் உரிமையும் அவர் பொறுப்பிலேயே இருந்து வந்தது. தோற்றத்தில் பெருநிலக் கிழார்கள், ஆங்கிலேய நிலக்கிழார்களைப் போன்று தோன்றினர். ஆனால், அமைப்பிலே இருவரும் மிக மாறுபட்டனர்.

1772ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் வணிகக் குழு ஊழியரே நேரிடையாய் நிலவரி வசூலைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்படுத்தினர். ஐந்தாண்டு நிலத்தீர்வை நிர்ணய முறை ஒன்றும் அவர் காலத்தில் பரிசோதிக்கப்பட்டது. அதன் பிறகு 1772-ல் ஆண்டுதோறும் நிலத்தீர்வை நிர்ணயமுறை முயற்சிக்கப்பட்டது. இம் முறை 1790 வரை தொடர்ந்தது. இவ்வாறு வாரன் ஹேஸ்டிங்ஸ் நிலத்தீர்வையை நிர்ணயிக்கும் முறை

யில் பல முயற்சிகள் செய்தார் என்பதை ஏற்கெனவே விரிவாய்க் கண்டோம்.

இம் முயற்சி யாவும் உழவருக்குப் பெரும் தீங்கு இழைத்த தன்றி வணிகக் குழுவின் வருவாயை அதிகமாக்கவில்லை. காரன் வாலிஸ் ஆங்கிலப் பெருநிலக்கிழார் பரம்பரையைச் சார்ந்தவர். இங்கிலாந்துப் பாராளுமன்றமும் நிலக்கிழார்கள் கூடியுள்ள மன்றமாகும். இந்திய ஜமீன்தார்கள் தங்களைப் போன்றவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்கள். ஆகவே, ஆண்டுதோறும் குத்தகைக்கு விடுவதைக் கைவிடுமாறு அவர்கள் வற்புறுத்தி வந்தனர். ஷோர் போன்றவர்கள் ஜமீன்தாருடன் நிரந்தர வரி வசூல் ஒப்பந்தம் செய்து கொள்ளுதலே சிறந்தது என்றும் சிபாரிசு செய்தனர். அதன் விளைவாக 1790-ல் பத்தாண்டு களுக்கு நிலத்தீர்வை நிர்ணயம் (Decennial Settlement) ஜமீன் தாருடன் செய்யப்பட்டது. பிறகு 1793 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22ஆம் நாள் நிலையான நிலவரி ஏற்பாடு (Permanent Land Revenue Settlement) சட்டமாக்கப்பட்டது. இதன்படி, ஜமீன்தார்கள், நிலக்கிழார்கள் என்று ஒப்புக்கொள்ளப் பட்டனர். ஜமீன்தார்கள் ஆண்டிற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைத் தீர்வையாகச் செலுத்த வேண்டும்.

நன்மைகள்

நிலையான நிலவரி ஏற்பாடு நன்மையும் தீமையும் கலந்த வொன்று. நிலையான நிலவரித் திட்டத்தைச் சர் ஜான் மால்காம் மார்ஷ்மேன் போன்றோர் புகழ்ந்துள்ளனர். டாக்டர் டட் (Dr. Dutt), 'ஆங்கிலேய அரசு இந்திய மக்களுக்குச் செய்த நன்மைகளில் நிலையான நிலவரித் திட்டம் மிகச் சிறப்பான ஒன்றாகும்' என்று கூறுகின்றார்.

(1) இத் திட்டத்தால் அரசாங்கத்திற்குக் குறிப்பிட்ட வருவாய் ஆண்டுதோறும் கிடைத்து வந்ததால் திட்டமிட்டுச் செலவிட முடிந்தது.

(2) ஆண்டுதோறும் மாற்றும் முறை மாறியதால், நிலத்தில் நிரந்தரமான செப்பங்களை அவர்கள் செய்ய முடிந்தது. இதனால் பல நிலங்கள் பயிரிடப்பட்டன. வேளாண்மை விரிந்து வளர்ந்தது.

(3) வணிகக் குழு பெருநிலக்கிழார்களின் விசுவாசத்தைப் பெற்றது. உழைக்காமலே ஊதியம் பெற்ற அவர்கள் ஆங்கி லேயர் ஆட்சிக்கு ஆதரவாயிருந்தனர்.

(4) குறைந்த பணியாளரைக்கொண்டு நிலவரி வசூல் செய்யக்கூடியதால், அதற்கான செலவும் நேரமும் குறைந்தன.

(5) வேளாண்மைத் துறையில் வருவாய் அதிகரித்ததால், பிற தொழிற்சாலைகளும் வாணிகமும் வளரத் தொடங்கின.

(6) கலை, இலக்கியம் ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்பட்டது. இதற்குக் காரணம் செல்வந்தர்களே ஆவார்கள். உழைக்க வேண்டிய அவசியம் குறைந்தபடியால் நுண்கலைகளில் ஆர்வம் காட்டினர்.

(7) வணிகக் குழுவின் திறமைமிக்க ஊழியர்கள் நீதித் துறைப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டனர். இதற்கு முன்னர் வருவாய்த் துறையில் அவர்கள் உழைப்பு வீணாகிக் கொண்டிருந்தது.

தீமைகள்

(1) இம்முறையினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் உழவர்கள்தாம். காரன்வாலிஸ் உழவர்களின் நலனைக் கவனிக்கவில்லை. பெரும் நிலக்கிழார்களின் தயவில் அவர்கள் விடப்பட்டனர். பல ஜமீன்தார்கள் உழவர்களின் நலனைக் கருதாமல் செல்வக் கோமான்களாகச் சிறப்புற்றனர்.

(2) நிலையான நிலவரித் திட்டத்தின் உடனடி விளைவு ஜமீன்தார்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது என்றே சொல்ல வேண்டும். தங்கள் பொறுப்பிலிருந்த உழவர்களிடமிருந்து நிலவரியை வசூலிக்க இயலவில்லை. எனவே, அரசுக்கும் அவர்களால் வரி செலுத்த முடியாது போய்விட, அவர்கள் நிலங்கள் விற்பனை செய்யப்பட்டன. ஜமீன்தார்களின் குடும்பங்கள் நடுத் தெருவில் நிற்கலாயின.

(3) பத்து ஆண்டுகளுக்கு நிலவரி நிர்ணயிக்கப்பட்டு விட்டதால் அரசு தன் தேவைக்கேற்ப நிலவரியை உயர்த்த இயலாது போய்விட்டது. இப் பத்தாண்டுக் காலத்தில் நிலத்தின் மதிப்பு உயர்ந்தது; பொருள்களின் விலை ஏறியது.

(4) இந் நிலவரித் திட்டம் வங்கத்தில் மட்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதால் அரசின் செலவு ஆண்டுக்கு 300 இலட்சம் ரூபாய் வருவாய்க்கு மேற்பட்ட செலவாக உயர்ந்தது. இவ் விழப்பைச் சரிக்கட்ட மற்ற மாநிலங்களில் வரியை உயர்த்த வேண்டியதாயிற்று.

1770-ல் ஏற்பட்ட வங்கப் பஞ்சத்தின் கேடுகள் முழுவதும் நீங்குமுன்னரே இத் திட்டம் கொண்டுவரப்பட்டதால் தோல்வி அடைந்தது. உண்மையான பலனை அரசு பெற முடியாமல் போயிற்று. இந்தியர்களைத் தனிச் சொத்துக்கு உரிமையாக்கியதால், காரன்வாலிஸ் இந்திய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றார். 'இந்தியரின் தனிச் சொத்துரிமையின் தந்தை' எனக் காரன்வாலிஸ் அழைக்கப்படுகிறார்.

மார்ஷ்மேன் 'இத் திட்டம் தைரியமான தீரம்மிக்க, புத்தி கூர்மையுள்ள திட்டம்' என்று கூறுகின்றார். பேடன்பவல் இதனைக் குறைகூறி 'வரலாற்றுப் பகுதியைத் தவிர நடைமுறையில் போற்றக்கூடிய சிறப்பு அதனிடம் ஒன்றுமில்லை' என்று உரைத்தார். 'இந்திய ஆட்சிமுறையின் தந்தை' என்று அவர் செய்த பிற சீர்திருத்தங்களினாலேதான் அழைக்கப்படுகிறாரே தவிர, நிலவரிச் சீர்திருத்தத்தினால் அன்று என்று உரைக்கப்படுகிறது. வங்கத்தில் ஏற்பட்ட குழப்பமான நிலையை ஏற்று நிலையான ஏற்பாடுகளைச் செய்யமுடியாத ஆங்கிலேயர்கள், ஜமீன்தார்களைக் கொண்டு வருவாய் பெற வகுத்த திட்டமே நிலையான நிலவரித் திட்டம் ஆகும். இதன் விளைவு சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வை நிலையாக ஏற்படுத்திவிட்டது என்பதைக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

நீதித்துறைச் சீர்திருத்தங்கள்

நீதித்துறையிலும் சில மாற்றங்களைச் செய்தார். நீதித்துறையில் பல குறைகள் இருந்தன. எடுத்துக்காட்டாக, குற்றத்திற்கேற்ற தண்டனை இன்றி இடத்துக்கு இடம் மாறுபட்ட தண்டனைமுறை பின்பற்றப்பட்டது. மேலும், குற்றவாளிகள் விசாரணையின்றிப் பல நாள்கள் காவலில் வைக்கப்பட்டனர். வருவாய்த் தண்டல் நாயகம் (Revenue Collector) மாவட்ட ஆட்சிக்கும், நீதித்துறைக்கும் அலுவலராய் இருந்தார். இதனால் வேலைப் பளுவால் இரு துறைகளிலும் கடமைகளைச் செவ்வனே செய்ய முடியாமல் தவக்க மேற்பட்டது.

(1) இதனைத் திருத்திட வேண்டிச் சில சீர்திருத்தங்களைக் காரன்வாலிஸ் செய்தார். மாநிலத்தைப் பல மாவட்டங்களாகப் பிரித்தார். மாநிலத்தை மாவட்டங்களாகப் பிரித்ததே அவருடைய சீர்திருத்தங்களுக்கு எல்லாம் முதுகெலும்பாகும்.

(2) வருவாய்த் துறையின் தண்டல் நாயகராகவும் மாவட்ட நீதிபதியாகவும் செயற்பட்டு வந்த ஆட்சித் தலைவர்களை,

வருவாய்த்துறைத் தண்டல் நாயகராக மட்டுமே செயலாற்றச் செய்தார். நீதித்துறைக்கெனத் தனியே நீதிபதிகளை நியமித்தார். இவ்வாறு அதிகாரப் பாகுபாடு செய்ததால், அவரவர் துறையில் அவரவர் செவ்வனே பணியாற்ற முடிந்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தம் அரசிறைக் கழகத்திற் குட்பட்டுச் செயலாற்ருமல், தனித்துத் தம் அலுவலகத் தலைவர்களைக் கொண்டு செயலாற்றினர். இதனுல் பணிகள் விரைவாக நடைபெற்றன. அதனேடு திறமையாகவும் பணியாற்ற வாய்ப்பு ஏற்பட்டது. நீதித்துறையில் தேங்கிக் கிடந்த பல வழக்குகள் தீர்க்கப்பட்டன. ஆகவே, மாநிலங்களைப் பல மாவட்டங்களாகப் பிரித்து, மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டு நீதி, நிர்வாக ஆட்சியை ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்ட நிரந்தரமான செம்மையான ஆட்சிமுறை அமைக்க அடிக்கல் நாட்டினுர். ஊரியல் வழக்குத் துறை (Civil) நீதி நிர்வாகத்தையும், குற்றவியல் (Criminal) நீதி நிர்வாகத்தையும் திருத்தியமைத்தார். ஊரியல்வழக்குத் துறை நீதிக்கு, மாவட்ட நீதி மன்றங்கள் (Zilla Courts) நிறுவப்பட்டன. அவை ஊரியல் வழக்குகளையும், வருவாய்த் துறை (Revenue) வழக்குகளையும் கவனித்து வந்தன. மாவட்ட நீதிமன்றங்களுக்கு (Zilla Courts) மேலாக நான்கு மாநில நீதிமன்றங்கள் (Provincial Courts) கல்கத்தா, மூர்சிதாபாத், டாக்கா, பாட்ன ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. இதற்குமேல் மிக முக்கியமான வழக்குகளை மேல்முறையீடு செய்வதற்காக மேல்முறையீட்டு நீதிமன்றம்(Appeal Courts) சதர் திவானி அதாலத் (Sadr Diwani Adalat) என்னும் பெயரில் அமைக்கப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸால் ஆரம்பிக்கப்பட்ட நீதித்துறையமைப்பு இவ்வாறு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டது.

இவ்வகையிலேயே குற்றவியல் நீதித்துறையும் திருத்தம் செய்யப்பட்டது. மாவட்டங்களிலிருந்த நீதி மன்றங்களுக்கு மேலாக மாநிலங்களின் தலைநகரங்களில் சுற்றுநீதிமன்றங்கள் (Courts of Circuits) நிறுவப் பெற்றன. ஒவ்வொரு நீதிமன்றத்திலும் இரண்டு ஆட்சிப் பணியாளர் தலைமை தாங்கினர். அவர்களுக்கு உதவியாக இந்திய ஆலோசனையாளர்கள் (Advisers) அமர்த்தப்பட்டனர். ஆண்டிற்கு இரண்டு முறை அச் சுற்று நீதிமன்றம் மாவட்டங்கள்தோறும் சென்று வழக்கு விசாரணை செய்து வந்தது. சதர் நிசாமத் அதாலத் (Sadr Nizamat Adalat) குற்றவியல் நீதி நிர்வாகத்தின் மேல்முறையீட்டு மன்றமாகும். அங்கு இந்திய ஆலோசனையாளர்களோடு தலைமை ஆளுநரைத்

தலைவராகக்கொண்ட அவருடைய ஆலோசனை மன்றம் கூடி வழக்குகளை விசாரித்தது. ஊரியல் வழக்கு நீதிமன்றங்களுக்கு மாவட்ட நீதிபதிகள் தலைமை தாங்கினர். குற்றவியல் நீதிமன்றங்களுக்குச் சுற்று நீதிமன்றங்களின் நீதிபதிகள் தலைமை தாங்கினர். இவ்வாறு நீதித்துறை ஆட்சித் துறையிலிருந்து பிரிக்கப்பட்டது.

வங்காள மாவட்ட அமைப்பினைப் போல மற்ற மாநிலங்களிலும் மாவட்ட ஆட்சிமுறை இயங்கத் தொடங்கியது. ஊரியல் வழக்குகளில் வழக்கிடுவோரின் சமயத்திற்கு ஏற்றபடி நீதி வழங்கப்பட்டது. இந்துவும் முகமதியரும் எதிர்வழக்கினர்களாயின் அறத்தின் வழிநின்று நீதிபதி முறைசெய்தார். வாரிசுரிமை, திருமணம் முதலியவற்றில் இந்து, முகமதியப் பழக்க வழக்கங்களின்படி தீர்ப்புக் கூறப்பட்டது. நீதிமுறையைத் தூய்மைப்படுத்தவும், துரிதப்படுத்தவும் மாவட்ட நீதிபதிகளுக்குக் காவலர் (Police) அதிகாரமும் வழங்கப்பட்டது. நீதித்துறை இவ்வாறு ஆட்சித் துறையிடமிருந்து பிரித்துத் தனித்தியங்கு முறை இவரால் செயல்படுத்தப்பட்டு, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் முழுவதிலும் பெரும் மாற்றங்கள் ஒன்றுமின்றி அப்படியே பின்பற்றப்பட்டு வந்தது, இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். பிற்காலத்தில் அம்முறை வங்காளத்திலும் மற்றப்பகுதிகளிலும் சிறிது மாற்றம் செய்யப்பட்டது என்றாலும், நீதித்துறை ஆட்சித் துறையிலிருந்து தனித்தியங்க வேண்டுமென்ற கொள்கை ஆங்கிலேயரால் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

காவல்படை அமைப்பு (Police)

சீரான காவலர் படையினை இந்தியாவில் நிறுவிய சிறப்பு காரன்வாலிஸையே சாரும். காவலரின் பணிகளான ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டும் உரிமை முதலில் ஜமீன்தாரிடமிருந்தது. காரன்வாலிஸ் அப் பணிகளை அவர்களிடமிருந்து பிரித்துக் காவலர் படையினை நிறுவினர். இதற்காக மாவட்டங்களைப் பல தாணுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியும் ஒரு தரோக் (Darogh) அல்லது கண்காணிப்பாளரின் (Superintendent) கீழ் இயங்கச் செய்தார். காவல்படை முழுமையையும் ஆங்கிலேயரிடமே ஒப்புவித்தார். இந்தியரை இப் படையில் சேர்க்கவில்லை.

காரன்வாலிஸ் சட்டத்தொகுப்பு (Cornwallis Code)

பாரபட்சமற்ற ஒழுங்கான ஆட்சித்துறை தொடங்க ஒரு தனிச் சட்டத்தொகுப்புத் தொகுக்க ஏற்பாடு செய்தார். அது 'காரன்

வாலிஸ் சட்டத்தொகுப்பு' (The Cornwallis Code) எனப் பட்டது. இத் தொகுப்பினுல் இந்தியாவில் சட்ட நீதிமுறை (Rule of Law) அதாவது சட்டத்தின்முன் யாவரும் சமம் என்ற கொள்கையும் சட்ட ஆதிக்கக் கொள்கையும் (Principle of Rule of Law) வழக்கத்தில் வர வித்திட்ட வித்தகர் இவரே ஆவார். ஆட்சிமுறையில் ஊரியல் ஆட்சிமுறையும், அரசியலாரின் அதிகார முறையும் தனித்தனியே இதில் காணப்படுகின்றன. வருவாய்த் துறை அதிகாரத் துறையினின்றும் பிரிக்கப்பட்டு இரண்டும் தனித்தனிச் சட்டதிட்டங்களால் பாதுகாக்கப்பட்டன. வங்கத்தில் அதிகாரப் பிரிவினைக் கொள்கையை முதலில் ஏற்படுத்தியவர் காரன்வாலிஸே ஆவார்.

வணிக வாரியம்

வணிக வாரியத்தில் பதினெரு உறுப்பினர்கள் இருந்தனர். வணிக முதலீடுகளை வணிக வாரியமே கவனித்து வந்தது. அத் துறையில் சீர்கேடுகள் நிரம்பியிருந்தன. எனவே, அச் சீர்கேடுகளைச் சார்லஸ் கிராண்ட் என்பவரின் உதவியோடு நீக்கினர். இதனுல் இந்திய நெசவாளர்களும், தொழிலாளர்களும் நற்பயனடைந்தனர்.

மதிப்பீடு

காரன்வாலிஸ் பலவழிகளில் நிரந்தரமான சிறந்த ஆட்சி முறைக்கு அடிகோலினர். அவை அனைத்தையும் ஒன்ருகத் தொகுத்து நோக்குவோமானுல், காரன்வாலிஸின் ஆட்சித் துறையின் சிறப்பை நன்கு உணரலாம். ஊழலாலும், அரசியல் ஆதிக்கத்தாலும் விளைந்த கேடுகளைப் போக்குவதற்கு அவர் நீதியையும், நேர்மையையும் ஆட்சிமுறையில் கடைப்பிடிப்பதற்கு வழி கோலினர். ஆனுல், இந்தியர்களின்மேல் அவருக்கு அளவில்லா அவநம்பிக்கை இருந்தது. இந்தியர் நேர்மையும், ஊக்கமும் அற்றவர் என்ற தவருன கருத்தால், இந்தியருக்கு முக்கியப் பதவிகளை அளிக்காதது மட்டுமன்றி, 'இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும் இலஞ்சம் வாங்கும் ஊழல்மிக்கவனுக இருக்கின்ருன் என்பதை நான் நம்புகிறேன்' என்று எழுதியது மிக வருத்தத்தைத் தருகிறது.

காரன்வாலிஸ் நாட்டுப்பற்றுக் கொண்டவராக விளங்கினுலும் பொருளீட்டுவதையும், தம் நாட்டுக்குப் புகழீட்டுவதையும் அடிப்படைக் கொள்கைகளாகக் கொள்ளவில்லை. அவருடைய நிலையான நிலவரித்திட்டம் குறைபாடுகள் கொண்ட

தாயினும் சிறந்ததொரு சீர்திருத்தமாகும். நீதித்துறை, ஊரியல் பணித்துறை, சட்டத்தொகுப்புமுறை ஆகியவற்றில் அவர் செய்த சீர்திருத்தங்கள் போற்றத்தக்கனவே. எனவே, 'இந்திய ஆட்சிப் பணித்துறையின் தந்தை, சட்ட ஆதிக்கக் கொள்கையின் காவலர், மாநில நீதிபதிகள் சுற்று முறைவர்' என்றெல்லாம் அழைக்கிறேம். காரன்வாலிஸ் வெறும் வாய்ச்சொல் வீரராக இல்லாமல் கடமை வீரராக விளங்கினர்.

ஸர் ஜான் ஷோர் (1793—1798)

தலையிடாக் கொள்கை

பிரிட்டனில் பொதுவாழ்வில் சீரும் சிறப்புமுடையவராக இருக்கின்ற ஒருவரைத் தலைமை ஆளுநராக அமர்த்த வேண்டும் என்று இயக்குநர்கள் கருதினர். ஆனல், காரன்வாலிஸ் 1793-ல் ஓய்வுபெற்ற பொழுது, அப்படி ஒருவர் கிடைக்காமையினுல் ஸர் ஜான் ஷோர் என்பவரை இறுதியில் தலைமை ஆளுநராகத் தேர்ந்தெடுத்தனர். மேலும், காரன்வாலிஸின் பல சீர்திருத்தங்களுக்கு உடனிருந்து பணியாற்றியவர் ஷோர். அவர் திறமையும், அறிவாற்றலும் காரன்வாலிஸை மிகவும் கவர்ந்ததால், ஷோரினைத் தலைமை ஆளுநர் பதவிக்குப் பரிந்துரைத்தார். அவர் நல்லவர்; நேர்மையானவர் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. ஆனல், தலைமை ஆளுநர் பதவியைத் தனித்து நிர்வகிக்கும் திறமை அற்றவராகவே தோன்றினர். தலையிடாக் கொள்கையை (Non-intervention Policy) உறுதியாகப் பின்பற்றினர். ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள், இவரை இதற்காகக் குறைகூறுவர். ஏனெனில், இந்தக் கொள்கையினுல் வணிகக் குழுவின் செல்வாக்கும், மதிப்பும் மிகவும் பாதிக்கப்பட்டன. மராத்தியருடனே, மைசூருடனே வணிகக்குழு போரிடும் நிலையில் இல்லை என்று உறுதியாய் நம்பினர். மேலும், திப்புவுடன், காரன்வாலிஸ் போரிட்டதன் விளைவால், பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டிருந்தது. ஆகவே, போரில் ஈடுபடாமல் நிருவாகச் செலவைக் குறைப்பது மிக முக்கியமெனக் கருதினர். தலையிடாக் கொள்கையினுல் நன்மைக்குப் பதில், கெடுதலே வணிகக்குழுவுக்கு அதிகமாக விளைந்தது எனலாம். மராத்தியர்கள் தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள இக் கொள்கை மிகவும் உதவியது.

நிஜாமின் தோல்வி

ஐதராபாத் நிஜாமான நிஜாம் அலியை (Nizam Ali) கர்தா (Kharda) என்ற இடத்தில் மராத்தியர்கள் தோற்கடித்தனர்.

1790-ல் காரன்வாலிஸ் நிஜாமுடன் செய்துகொண்ட பாதுகாப்பு உடன்படிக்கையின்படி ஆங்கிலேயரின் உதவியை நிஜாம் நாடினர். ஷோர் நிஜாமிற்கு உதவவேண்டுமென்ற எண்ணமிருந்தும், தலையிடாக்கொள்கையின் காரணமாக உதவ மறுத்துவிட்டார். தமக்கு ஆபத்தில் உதவவேண்டும் என்பதற்காகக் குண்டூரை ஆங்கிலேயருக்கு அளித்திருந்த நிஜாம் ஏமாற்றமடைந்தார். இதனல் ஆத்திரமடைந்த நிஜாம், ஃபிரெஞ்சுக்காரருடன் தொடர்புகொண்டார். ரேமாண்டு (Raymond) என்னும் ஃபிரெஞ்சு அதிகாரியையும் வேறுபல அதிகாரிகளையும் கொண்டு, நிஜாம் தம்முடைய படைகளுக்கு மேனட்டு முறையில் முறையான படைக்கலப் பயிற்சி கொடுத்துப் பலப்படுத்திக் கொண்டார். இவ்வாறு நிஜாம் தம் படையினை அமைத்துக் கொள்ள ஷோரே முக்கியக் காரணமாவார். கர்நாடக நவாபான வாலாஜா நவாபு 1795-ல் இறந்தார். அவருடைய மறைவுக்குப் பின்னர் இரண்டாம் வாலாஜா பட்டமேற்றூர். காரன்வாலிஸின் பதவிக் காலத்தில் 1792-ல் நவாபுடன் சென்னை அரசு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தது. அவ் வுடன்படிக்கையின்படி ஆண்டுதோறும் நவாபு ஒரு குறிப்பிட்ட தொகையை ஆங்கிலப் படைக்கு அளிக்க ஒப்புக்கொண்டார். நவாபு தொடர்ந்து கொடுக்காததால், கர்நாடக மாவட்டங்கள் ஆங்கிலேயரிடம் அடைமானமாக வைக்கப்பட்டன. 1795 வரை நவாபு ஆங்கிலேயரிடம் கடனைத் தீர்க்கவில்லையாதலால், சென்னை ஆளுநராக இருந்த ஹோபர்ட் அவற்றைத் தம் ஆட்சியுடன் இணைத்துக் கொண்டார். கர்நாடகத்தில் நவாபின் ஆட்சியில் ஆங்கிலேயரின் தலையீட்டால் நிலைமை மோசமடைந்தது. ஆனல், ஷோர் ஏதும் வழிவகை செய்யாமல் இருந்தார்.

ஜாமான் ஷாவின் படையெடுப்பு

திப்பு சுல்தான் ஆஃப்கானிய அரசரான ஜாமான் ஷாவுடன் (Zaman Shah) ஆங்கிலேயருக்கெதிராகச் சதி ஆலோசனை செய்தார். 1796-ல் ஜாமான் ஷா, லாகூர் வரையில் படையெடுத்து வந்தார். ஆனல், அதிர்ஷ்டவசமாக ஆஃப்கானிஸ்தானத்தில் விளைந்த கலகத்தினல் இந்தியாவின்மேல் படையெடுக்காமல் திரும்பிவிட்டார். ஜாமான் ஷாவின் படையெடுப்பு, ஷோரை விழிப்புறச் செய்தது. இதனல் ஸர் ஜான் ஷோர் தம் தலையிடாக் கொள்கையின் தீமையை உணர்ந்து இக்கொள்கையைச் சிறிது தளர்த்திக்கொண்டு, அயோத்தி, தஞ்சை அரசுகளின் வாரிசுகளைத் தம் கருத்துப்படி நியமித்தார்.

அயோத்தி வாரிசை நியமித்தல்

1797-ல் அயோத்தியின் நவாப், ஆஸஃப்-உத்-தௌலா (Asaf-ud-daulah) காலமானர். அவர் மகன் வாசிர் அலி

(Wazir Ali) நவாப் ஆக்கப்பட்டார். ஆனால், வாசிர் அலி, ஆஸஃப்-உத்-தௌலாவின் முறையற்ற வழியில் பிறந்தவர் என்பதை அறிந்த ஷோர், அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, மற்றொரு மகனை சாதத் அலியை (Sadat Ali) நவாபாக்கினர். அவருடன் ஓர் உடன்படிக்கையும் செய்துகொண்டார்; அதன்படி ஆங்கிலேயர் அலகாபாத் கோட்டையைக் கைம்மாருகப் பெற்றனர். நவாபின் அயல்நாட்டுத் தொடர்பு முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. அயோத்தியைப் பகைவரிடமிருந்து காக்கும் பொறுப்பையும் ஏற்றனர். நவாபும் அதற்காக ஆண்டுதோறும் 76 இலட்சம் ரூபாய் உதவித்தொகை அளிக்க ஒப்புக்கொண்டார். ஷோர் அயோத்தியர்பால் செய்துகொண்ட ஏற்பாடு, அவரிடத்தில் மங்கி இருந்த அரசியல் ஆற்றலுக்கு ஒரு சான்றாகும்.

தஞ்சை வாரிசை நியமித்தல்

இவ்வாறே தஞ்சை வாரிசுக்குத் தகராறு ஏற்பட்டபோதும், ஒரு குழு அமைத்து, சரபோஜியைத் (Serfoji) தஞ்சை மன்னராக்கினர்.

ஷோரின் பதவி நீக்கம்

இவர் ஆட்சியில் 1795-ல் வங்காளப் படையினர், தங்கள் ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமெனப் பெருங்கலகம் செய்தனர். இதைக் கட்டுப்படுத்தி, அவர்களை அடக்காமல் அவர்கள் கேட்ட நியாயமற்ற ஊதிய உயர்விற்குச் சம்மதித்து, அவர்கள் கேட்டதற்கு அதிகமாகவே ஊதியம் கொடுத்து அக் கலகத்தை அடக்கினர். இதனால் வணிகக் குழுவின் நிதி மிகவும் பாதிக்கப் பட்டது. வணிகக்குழு இயக்குநர்கள் இதனால் சீற்றமுற்று, இவரைத் தலைமை ஆளுநர் பதவியிலிருந்து நீக்கினர்.

மதிப்பீடு

ஷோர் ஆற்றல் நிறைந்தவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இயக்குநர் ஆலோசனைப்படி இவர் தலையிடாக் கொள் கையைக் கடைப்பிடித்தது, நீண்ட நாள் தலைமை ஆளுநரின் கீழ்ப் பணிபுரிந்து மேலதிகாரியின் உத்தரவை மீருமல் நடக்கும் பண்பை வளர்த்துக்கொண்டிருந்ததால். ஏனெனில், ஜாமான் ஷாவின் படையெடுப்புக்குப்பின் அவர் அயோத்தி, தஞ்சை அரசுகளில் தலையிட்டு, ஒழுங்குபடுத்தியதிலிருந்து அவர் அரசியல் ஆற்றல் பெற்றிருந்தும் அதைச் சரியாகப் பயன்படுத்த வில்லை என்றே நாம் எண்ணத் தோன்றுகிறது. இவருடைய செயல்களின் விளைவு, பின்னல் வந்த தலைமை ஆளுநர்களுக்குத் தொல்லைகளைக் கொடுத்தது.

7. வெல்லெஸ்லி பிரபு
(1798—1805)

ஸர் ஜான் ஷோருக்குப்பின் மார்னிங்டன் பிரபு தலைமை ஆளுநரானார். நான்காம் மைசூர்ப்போரின் வெற்றிக்குப்பிறகு மார்க்விஸ் வெல்லெஸ்லி என்றழைக்கப்பட்டார் (Marquis of Wellesley). இவர் பல மொழிகளையும் இலக்கியங்களையும் நன்கு கற்றிருந்தார்; பல ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராய் இருந்தார்; கட்டுப்பாட்டு வாரியத்தின் (Board of Control) உறுப்பினர் போன்ற இந்தியா சம்பந்தப்பட்ட பல பணிகளை ஏற்கெனவே மேற்கொண்டிருந்ததால், தலைமை ஆளுநராவதற்கு முன்பே, இந்தியாவைப்பற்றி நன்கு அறிந்திருந்தார். பிறகு வந்த கர்சன் பிரபுவைத் தவிர மற்ற எந்தத் தலைமை ஆளுநரும் இந்தியாவைப்பற்றி இவ்வளவு நன்கு தெரிந்துகொண்டு இந்தியாவிற்கு வந்ததில்லை தலைமை ஆளுநர் பதவியலமரும் போது முப்பத்தேழு வயதே நிரம்பிய இளைஞராயிருந்தார்; குறுகிய தோற்றமுடையவரானாலும், ஆதிக்கப்பற்று உடைய வராய் இருந்தார்; வல்லமைச் சமநிலைக் கொள்கையும் (Balance of Power), தலையிடாக் கொள்கையும் (Non-intervention Policy) இந்திய அரசியல் சூழ்நிலைக்கு ஒத்துவராது என்று இந்தியா விற்கு வந்த உடனே புரிந்துகொண்டார்.

ஆங்கிலேய ஆட்சி, இந்திய மன்னர்களின் ஆட்சியைக் காட்டிலும் சிறந்ததென்றும், இந்திய மன்னர்களின் பகுதிகளை ஆங்கிலேய ஆட்சியின்கீழ்க் கொண்டுவருவதால் இந்திய மக்களுக்கு நன்மையே தவிரத் தீங்கு இல்லை என்றும் மனமார உணர்ந்தார். அதனுடன் ஆங்கில நாட்டுப்பற்றும், பெருமையும் இந்தியாவில் ஆங்கில ஆட்சி நிறுவ அவரைத் தூண்டியது. இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், அரசியல் சூழ்நிலையில் பல

மாற்றங்கள் உண்டாயின. வெல்லெஸ்லி பதவியில் இருந்த காலத்தில் இங்கிலாந்து நாடு ஃபிரஞ்சு நாட்டுடன் ஐரோப்பிய மண்ணில் போரில் ஈடுபட்டிருந்தது. ஃபிரான்சின் தலைவரான நெப்போலியன் போன பார்ட் என்பவர் (Napolean Bona-Parte) தம் ஆதிக்கத்தை ஆசியாவிலும் பரப்ப எண்ணினார். இந்தியாவின்மேல் படையெடுத்து ஆங்கில ஆதிக்கத்தை அழிக்கத் திட்டமிட்ட அவர், திப்பு சுல்தான் போன்ற இந்தியச் சுதேசி மன்னர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக முயற்சிகள் செய்தார். இந்தச் சூழ்நிலை, வெல்லெஸ்லியின் ஆதிக்க ஆசைக்கு ஆதரவளித்தது. தலையிடாக் கொள்கையையும், வல்லமைச் சமநிலைக் கொள்கையையும் நீக்கிவிட்டு, இந்தியாவில் ஆங்கிலேயரின் பேராதிக்கத்தை நிலைநாட்டத் தலையிடும் கொள்கையே சிறந்த வழி என்று உணர்ந்தார்.

இந்தியாவிலிருந்தே ஃபிரெஞ்சுக்காரரை அடியோடு அகற்றிவிட வேண்டும் என்பதும் அவருடைய கொள்கையாகும். கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸைக்கூட இச் சாதனையில் மிஞ்சிவிட்டார் என்றே கூறலாம். கடமை உணர்ச்சியிலும் ஆவலிலும் வாரன் ஹேஸ்டிங்ஸை ஒத்திருந்தார். ஆங்கில ஆட்சி, இந்திய ஆட்சியை விடச் சிறந்தது என்ற எண்ணத்தில் டல்ஹௌசி பிரபுவையும்; நேர்மையிலும்,உணர்ச்சியிலும் காரன்வாலிஸ் பிரபுவையும் ஒத்து இருந்தார் என்று கூறலாம். காரன்வாலிஸிற்கு ஸர் ஜான் ஷோர் போன்ற சிறந்த பணியாளர்களிருந்ததைப் போல இவருக்கும் மால்கோம் (Malcolm), மெட்காஃப் (Metcalfe), மன்ரோ (Munro), எல்ஃபின்ஸ்டன் (Elphinstone) போன்றோர் இருந்தனர். மாநில ஆளுநர்களும் அவருக்குக் கீழ்ப்பணிந்து அவர் ஆணையை நிறைவேற்ற உதவினர்.

துணைப்படை முறை (Subsidiary System)

ஆங்கிலேயரின் பேராதிக்கத்தை இந்தியாவில் நிலைநாட்டத் துணைப்படைத் திட்டத்தைக் கருவியாக உபயோகித்தார். இத் திட்டத்தின் வித்தகர் இவரல்லர். இத் திட்டம் ஏற்கெனவே வணிகக் குழுவினரால் பலமுறை கையாளப்பட்டதுதான். 1765ஆம் ஆண்டில் அயோத்தியைச் சார்ந்த ஷுஜா-உத்-தௌலாவோடு (Suja-ud-daulah) கிளைவ் முதன்முதலாகத் துணைப்படைத் திட்ட உடன்படிக்கையைச் செய்துகொண்டார். வாரன் ஹேஸ்டிங்ஸும், காரன்வாலிஸும் அதைச் சிறிது விரிவுபடுத்தினர். ஆனால், அவர்கள் குறிப்பிட்ட ஓர் அரசரிடத்துக் குறிப்பிட்ட ஒரு குறிக்கோளுக்காகத்தான் இம் முறையைக் கையாண்டனரே தவிர, வெல்லெஸ்லியைப் போன்று ஆங்கிலப் பேராதிக்கத்தை

இந்தியாவில் நிலைநாட்ட ஒரு கருவியாக அதைப் பயன்படுத்த வில்லை. ஆகவே, வெல்லெஸ்லி ஏற்கெனவே பழக்கத்திலிருந்த முறையை விரிவுபடுத்திய முறையே துணைப்படைத் திட்டம் என வரலாற்றில் சிறப்புப் பெற்றது. இத் திட்டத்தின்படி,

1. இத் திட்டத்தில் கையொப்பமிடும் இந்திய அரசர், ஆங்கிலப்படையைத் தம் நாட்டில் வைத்துக்கொள்ளவேண்டும். அப் படைவீரர்களின் ஊதியத்தையும் அவ் வரசரே பணமாகக் கொடுக்கவேண்டும், அல்லது அரசின் ஒரு பகுதியை ஆங்கிலே யருக்கு மானியமாக அளிக்கவேண்டும். ஆங்கிலப்படைத் தளபதி (Resident) ஒருவரைத் தலைநகரில் வைத்துக்கொள்ளவேண்டும்.

2. அவ் வரசர் அயல்நாட்டுக் கொள்கையை ஆங்கிலே யரிடம் விட்டுவிட வேண்டும்.

3. மற்ற இந்திய அரசருடன் யாதொரு நேரடித் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது. ஆங்கிலேயர் தவிர, மற்ற ஐரோப் பியரைத் தம் நாட்டிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும்.

4. அவ் வரசருக்கு உள்நாட்டு, வெளிநாட்டு ஆபத்து எதுவாயிருந்தாலும், முழுப் பாதுகாப்பு அளிப்பதாக ஆங்கி லேயர் உறுதிமொழி அளித்தனர். உள்நாட்டுக் கலகத்தாலோ, அயல்நாட்டுப் படையெடுப்பாலோ ஆபத்து நேர்ந்தாலன்றி அந் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்றும் ஆங்கி லேயர் உறுதி அளித்தனர்.

இத் திட்டத்தின் நன்மைகள்

வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம், நன்மையும் தீமையும் கலந்த ஒரு திட்டமாகும்.

இத் திட்டத்தினால் வணிகக் குழுவின் படைபலம், அரசியல் நிலை மிக உயர்ந்த நிலைக்கு மாற்றமடைந்தன.

ஆங்கிலப் படையின் ஊதியத்தை இந்திய அரசர்களே ஏற்றுக்கொண்டதால், வணிகக் குழுவின் செலவும் கணிசமாகக் குறையலாயிற்று.

மற்ற ஐரோப்பியரை இந்திய அரசுகள் நீக்கிவிட்டதால், வணிகக் குழுவுக்கு அவர்களின் பயமும் தொல்லையும் நீக்கப் பட்டன,

இந்திய அரசர்களுள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளும் வாய்ப்பும் இன்மையால், அவர்களின் சதியாலோசனைக்கும் இடமின்றிப் போயிற்று.

ஆகவே பல வழிகளிலும், வணிகக் குழுவின் ஆதிக்கம் நன்கு நிறுவப்பட்டது.

மக்களைப் பொறுத்தவரையில் அடிக்கடி நடைபெறும் படையெடுப்புகளால் அல்லற்படாது தப்பிப் பிழைத்தனர். மக்களும் இந்திய அரசர்களும் அமைதியுடன் வாழ்ந்தனர்.

குறைகள்

ஆனால், இத் திட்டத்தினால் பல தீமைகளும் விளைந்தன. இந்திய அரசர்களின் ஆட்சிக்கு ஆதரவும், பாதுகாப்பும் அளிக்கப்பட்டதால், பலர் பொறுப்பற்றவர்களாக நடந்து கொண்டனர்; இன்பத்தில் மூழ்கிக் குடிமக்களை மறந்தனர்; ஆடம்பர வாழ்க்கையில் காலத்தையும், பொருளையும் செலவிட்டனர். இதனால் ஆட்சியில் ஊழல்கள் மலிந்தன. அரசரின் மனம்போன போக்கினால் அல்லற்படும் மக்களுக்கு நல்லதோர் எதிர்காலம் வாய்க்காமல் போயிற்று; அரசரின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்க்கும் வாய்ப்பும் மக்களுக்கு இல்லாது போயிற்று. ஆனால், கொடுங்கோல் அல்லது மற்றக் காரணங்களுக்காக, இந்திய அரசரின் உரிமையைப் பறிக்க பிறகு ஆங்கிலேயருக்கு இத் திட்டம் உதவியது. சிற்றரசர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த இயலாமல் போனமையால் நாட்டின் பொருளியல்நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

அரசரின் படையைக் கலைத்ததால், அப் படைவீரர்கள் ஆக்க வேலையில் ஈடுபட இயலாமல், நாட்டில் கொள்ளையும், குழப்பமும், கலகமும் இழைக்கும் பணியில் ஈடுபட்டனர். இவர்களில் பலர், பின்னர்த் தக்கர்கள் (Thugs), பிண்டாரிகள் (Pindaris) போன்ற பயங்கரக் கொள்ளைக் கூட்டத்தினராய் விளங்கினர். மேலும், அரசரின் துணைப்படை மானியம் மிக அதிகமாயிருந்ததால், நாட்டில் பொருளாதாரச் சீர்கேடு ஏற்படவும் ஏதுவாயிற்று.

நிஜாமுடன் துணைப் படை ஒப்பந்தம்

1798-ல் துணைப்படைத் திட்ட ஒப்பந்தத்தை முதன் முதலாக நிஜாமுடன் வெல்லெஸ்லி செய்துகொண்டார்: ஸர் ஜான் ஷோர் காலத்தில், மராத்தியர் அவரை எதிர்த்தபோது,

ஆங்கிலேயர் அவர் ஆதரவுக்குச் செல்லாமையால் கோபப் பட்டு, ஃபிரெஞ்சுக்காரருடன் உறவுகொண்டார் என்பதை ஏற்கெனவே கண்டோம். வெல்லெஸ்லியின் தூண்டுதலால் நிஜாம் ஃபிரெஞ்சுக்காரரை விலக்கிவிட்டு, துணைப்படை ஒப்பந் தத்தைச் செய்துகொண்டார். இத் திட்டத்தை வெல்லெஸ்லி யுடன் செய்துகொண்ட முதல் இந்திய அரசர் நிஜாமே ஆவார். கொடை மாவட்டங்கள் (Ceded Districts) என வழங்கப்பட்ட பெல்லாரி, கடப்பா, அனந்தப்பூர்ப் பகுதிகளை இதற்காக மானியமாக வணிகக் குழுவினரிடம் ஒப்படைத்தார்.

மைசூர் (1799)

திப்புவின் செய்கைகளை ஆதிக்கப் பற்றுக்கொண்ட வெல்லெஸ்லியினால் பொறுக்க முடியவில்லை. இதனால் 1799-ல் அவருடன் போர் தொடுத்தார். இதுவே நான்காம் மைசூர்ப் போர் எனப்படும். இப் போரைப்பற்றி விரிவாக மைசூர்ப் போர்கள் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது. நான்காம் மைசூர்ப் போருக்குப்பின் வெல்லெஸ்லி மைசூரைப் பழைய இந்து வம்சத்தைச் சார்ந்த கிருஷ்ணராஜ உடையாருக்குத் திரும்பித் தந்தார் (1799). அவருடன் துணைப்படைத் திட்ட உடன்படிக்கையும் செய்துகொண்டார். மைசூர் அரசர் கனரா (Kanara), வைநாடு (Wynad), கோயம்புத்தூர்ப் (Coimbotore) பகுதிகளை வணிகக் குழுவினருக்கு மானியமாக வழங்கினர்.

அயோத்தி (1801)

ஷோர், அயோத்தியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, அதன் அயல்நாட்டுக் கொள்கையையும், அதைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றார் என்று பார்த்தோம். அயோத்தியும் 76 இலட்சத்தை இதற்காக ஆண்டுதோறும் தவறாமல் செலுத்தி வந்தது. வெல்லெஸ்லி, ஆஃப்கானிய மன்னர் ஜாமான் ஷாவின் பயத்தாலும், நெப்போலியன் போன பார்ட் இந்தியாவின்மேல் படையெடுக்கலாம் என்ற அச்சத்தாலும், வடமேற்கு எல்லையில் தனிக் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து 1801-ல் அயோத்தி நவாபைத் துணைப்படைத் திட்டத்தைச் செய்துகொள்ளக் கட்டாயப்படுத்தினர். ரோகில் கண்டு (Rohil khand), கீழ் தோ ஆப் பகுதிகளை (Lower Doab)–கங்கை யமுனை நதிகளுக்கிடையேயுள்ள பகுதியை–மானியமாகவும் ஆக்கிரமித்துக் கொண்டார். இதனால் அயோத்தியின் நிலப் பகுதி பாதிக்குக் குறைக்கப்பட்டது. அதனுடன் கப்பத் தொகையும் அதிகமாக்கப்பட்டது. இது ஒரு நியாயமற்ற

எதேச்சாதிகாரச் செயலாகும். வெல்லெஸ்லியின் இந்தச் செய்கை, சமநோக்குக் கொண்ட வரலாற்று ஆசிரியர்களான லயால் (Lyall) போன்றவர்களால் மிகவும் கடுமையாகத் தாக்கப் பட்டுள்ளது: அயோத்தியின் ஆட்சி மிக மோசமான நிலை அடைவதற்கும் இது காரணமாயிற்று. டல்ஹெளசி பிரபு அயோத்தியைக் கடைசியில் வணிகக் குழுவின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார்.

மராத்தியருடன் துணைப்படை ஒப்பந்தம்

பேஷ்வா இரண்டாம் பாஜி ராவ் (Baji Rao II) 1802-ல் வெல்லெஸ்லியிடம் செய்துகொண்ட பேஸின் உடன்படிக்கைப் படி (Treaty of Bassein) துணைப்படை ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். பேஸின் பகுதியையும் மானியமாக வழங்கினார். இவ் வுடன்படிக்கையே இரண்டாம் மராத்தியப் போருக்கு மூல காரணமாயிற்று. விளக்கத்திற்கு மராத்தியப்போர்ப் பகுதியைக் காண்க. ராகுஜி பான்ஸ்லே (Raghuji Bhonsle) தியோகுவான் உடன்படிக்கையினை (Treaty of Deogaon) 1803-ல் செய்துகொண்டார். இதன்படி அவர் துணைப்படைத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டார். மகாநதி டெல்டாவை (Orissa)மானியமாக வணிகக் குழுவினருக்கு வழங்கினர்.

சுர்ஜி அர்ஜன்கான் உடன்படிக்கையின் (Treaty of Surji Arjangaon) படி தௌலத் ராவ் சிந்தியா (Daulat Rao Sindhia) 1803-ல் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார். இதற்காக மேல் தோஆப் (Upper Doab), ராஜபுதனம் (Rajputana), புரோச் (Broach), அகமத்நகர்ப் (Ahmad Nagar) பகுதிகளை வணிகக் குழுவினருக்கு மானியமாக வழங்கினர். இவ்வாறு துணைப்படைத் திட்டத்தின்கீழ்ப் பல பெரிய இந்திய அரசுகளை வணிகக் குழுவின் மறைமுகமான ஆட்சிக்குள் கொண்டுவந்தார்.

வணிகக் குழுவின் ஆட்சிக்குட்பட்ட பல சிறிய அரசுகளை வணிகக் குழுவின் நேர்முக ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். அவ் வரசர்களின் ஆட்சித் திறமையின்மை, கொடுங்கோல், சரியான வாரிசுரிமையின்மை போன்ற காரணங்களைக் காட்டி அவ் வரசுகளை நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். தஞ்சாவூர், சூரத், கர்நாடகம், ஃபரூக்காபாத் (Farukhabad) ஆகியவை இவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்ட சிறிய அரசு களாகும்.

தஞ்சாவூர்

1799-ல் தஞ்சை அரசருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி தஞ்சையின் நிருவாகத்தையும் பாதுகாப்புப் பொறுப்பையும் வணிகக் குழுவே ஏற்றுக்கொண்டது. ஸர் ஜான் ஷோர், சரபோஜியைத் தஞ்சையின் அரசராக்கி இருந்ததால், அவரை நீக்கும் அதிகாரத்தினை வணிகக்குழு பெற்றது. சரபோஜிக்கு ஆண்டிற்கு நான்கு இலட்சம் ஓய்வு கால ஊதியம் (Pension) அளிப்பதாகவும் ஒப்புக்கொள்ளப் பட்டது. சரபோஜி சிறந்த கல்விமான்; ஆங்கிலமும், ஃபிரெஞ்சும் கற்றவர்; கிடைத்தற்கரிய நூல்களைச் சேகரித்துப் புகழ்பெற்ற தஞ்சைச் சரஸ்வதி மஹால் என்ற நூலகம் நிறுவ வழிகோலியவர். 1833-ல் சரபோஜி மன்னர் காலமானார். அவருக்குப்பின் அவர் மகன் சிவாஜியும், தந்தையைப் போலவே ஓய்வுகால ஊதியம் பெற்றுக் கொண்டு, தஞ்சை ஆட்சியை ஆங்கிலேயரிடம் விட்டுவைத்திருந்தார். அவர் 1855-ல் காலமானார். அவர் மறைவிற்குப்பின், டல்ஹௌசி பிரபுவால் ஆங்கில அரசுடன் தஞ்சை 1856-ல் இணைக்கப்பட்டது.

சூரத்

சூரத் (Surat) நவாபு 1799-ல் இறந்தவுடன், அவருடைய வாரிசுக்கு ஆண்டுக்கு ஓர் இலட்சம் ஓய்வுகால ஊதியம் (Pension) கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு, சூரத்தை ஆங்கில ஆட்சியின்கீழ் வெல்லெஸ்லி கொண்டுவந்தார். 1759-ல் சூரத் வணிகக் குழுவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தது. அவ்வொப்பந்தப்படி, சூரத்தின் பாதுகாப்புப் பொறுப்பை வணிகக் குழு ஏற்றிருந்தது. இந்த உரிமையைப் பயன்படுத்திக் கொண்டுதான் வெல்லெஸ்லி பிரபு சூரத்தை 1800-ல் ஆக்கிரமித்துக் கொண்டார்.

கர்நாடகம்

கர்நாடக நவாபு முகமது அலி 1795-ல் காலமானார். இவருக்குப்பின் நவாபான இவர் மகன் உம்தத்-உல்-உம்ரா (Umdat-ul-umra) சென்னைச் சேப்பாக்க அரண்மனையில் ஆடம்பர வாழ்க்கை நடத்தி வந்தார். இவர் ஆடம்பர வாழ்க்கைக்காக ஏராளமான கடன்களை வாங்கியிருந்தார். 'ஆர்க்காடு நவாபின் கடன்கள்' எனப் பெயர் அடிபடும் அளவிற்குக் கணக்கு வழக்கின்றிக் கடன் வாங்கியிருந்தார். ஆங்கிலேயரிடம் பெற்ற கடனையும், கட்டவேண்டிய தொகையையும் கட்டவில்லை. ஏற்கெனவே ஊழலுடையதாக இருந்த நிர்வாகம் மேலும் சீர்

குலைந்தது. இதனால் மக்கள் அல்லலுற்றனர். இதுமட்டுமன்றி, வணிகக் குழுவிற்கு எதிராகத் திப்பு சுல்தானுடன் தொடர்பு கொண்டதற்கான சில ஆதாரங்கள் வெல்லெஸ்லிக்குக் கிடைத்தன. இதனால் வெல்லெஸ்லியின் கோபத்திற்கு அவர் ஆளாகியிருந்தார். இதைக் காரணமாக வைத்து உம் தத்-உல்-உம்ராமீது நடவடிக்கை எடுக்க வெல்லெஸ்லி தீர்மானிக்கும் சமயத்தில் அவர் இறந்துவிட்டார். அவருக்குப்பின் நவாபான அஸம் உத் தௌலாவுடன் வெல்லெஸ்லி ஒப்பந்தம் செய்து கொண்டார். இதன்படி கர்நாடகத்தின் ஆட்சியை வணிகக்குழு 1801-ல் மேற்கொண்டது. புதிய நவாபு மூன்ரும் வாலாஜா என்ற பட்டப்பெயருடன் கர்நாடக வருமானத்தில் ஐந்திலொரு பங்கை உதவித்தொகையாக ஆங்கிலேயரிடமிருந்து பெற்ருர். கர்நாடக நவாபு என்ற பட்டத்தையும் வைத்துக்கொள்ள உரிமையும் வழங்கப்பட்டது.

ஃபருக்காபாத் (Farrukhabad)

கர்நாடகத்திற்கு ஏற்பட்ட நிலையே, ஃபருக்காபாத்திற்கும் 1802-ல் ஏற்பட்டது. ஃபருக்காபாத் நவாபிற்கு ஆண்டொன்றுக்கு இலட்சம் ரூபாய் உதவி ஊதியம் கொடுத்துவிட்டு, ஃபருக்காபாத்தை ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார்.

வெல்லெஸ்லியின் ஆட்சிமுறை

இந்தியாவிற்கு வந்ததும் ஆங்கிலேயர்கள் இந்திய மொழி, சட்டதிட்டங்கள், வரலாறு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று வெல்லெஸ்லி எண்ணினர். 1800-ல் கல்கத்தா வில்லியம் கோட்டையில் நிறுவிய கல்லூரியில் ஆங்கிலேயர்கள் வணிகக்குழுவில் பணியேற்குமுன் மூன்ருண்டுகள் கல்வி கற்றிட வேண்டுமென்று விதி செய்தார். அக் கல்லூரியில் ஐரோப்பியப் பேராசிரியர்கள் பலரும், இந்தியப் பண்டிதர்கள் எண்பது பேரும் பணியாற்றினர். பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையைவிட ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபடியால் கல்லூரி 1802-ல் மூடப்பட்டது. மீண்டும் 1806-ல் இது ஒரு பள்ளிக்கூடமாக மாற்றப்பட்டது. அதே சமயத்தில் கிழக்கிந்தியக் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது.

நீதித் துறையில் வெல்லெஸ்லி மாறுதல்கள் சிலவற்றைச் செய்தார். கல்கத்தாவிலிருந்த சதர் திவானி அதாலத்தைச் சீர்திருத்தினர், தலைமை ஆளுநர் சபையின் ஆலோசகர்கள்



வெல்லெஸ்லி காலத்தில்
பிரிட்டிஷ் இந்தியா
காபூல்
பெஷாவர்
காஷ்மீரம்
லாகூர்
முல்தான்
பகவல்பூர்
டில்லி
லாஸ்வாரி
நேப்பாளம்
ராஜபுத்திரர்கள்
அயோத்தி
ஆக்ரா
குவாலியர்
பீஹார்
பாட்னா
ஐதராபாத்
அலகாபாத்
காசி
ஹோல்கார்
வங்காளம்
கேக்வார்
பரோடா
இந்தூர்
குசரத்
ப்ரோச்
மராத்திய அரசு
போன்ஸ்லே
கல்கத்தா
ஆர்காம்
சூரத்
நாகபுரி
அஸ்ஸேய்
பஸ்ஸீன்
சால்செட்
ஒரிஸ்ஸா
கட்டாக்
அகமத்நகர்
பம்பாய்
பூனா
நிஜாம்
அரபிக் கடல்
புரந்தர்
இராச்சியம்
பீஷ்வா
ஐதராபாத்
மசூலிப்பட்டினம்
கர்னூல்
கோவா
பெல்லாரி
கடப்பை
மங்களூர்
மைசூர்
சென்னை
வங்காளக் குடாக்கடல்
ஸ்ரீரங்கப்பட்டணம்
கோயம்புத்தூர்
தஞ்சாவூர்
கொச்சி
திருவாங்கூர்
இலங்கை
இந்து மகா சமுத்திரம்

அங்கு நீதிபதிகளாக இருந்தமுறை தடுக்கப்பட்டது. ஊரியல் துறையில் சிறந்தவர்களே நீதிபதிகளாக அமர்த்தப்பட்டனர்.

மதிப்பீடு

அவருடைய ஏழாண்டு ஆட்சிக்காலத்தில் தஞ்சாவூர், சூரத், கர்நாடகம், ஃபருக்காபாத் பகுதிகளை வணிகக் குழுவின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். திப்பு சுல்தானை நான்காம் மைசூர்ப் போரில் முரியடித்து, மைசூரில் பழைய அரச குடும்பத்தைப் பதவியிலமர்த்தி, துணைப்படைத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவந்தார். இரண்டாம் மராத்தியப் போரில் வெற்றி பெற்று மராத்தியத் தலைவர்களையும் ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். முகலாய மன்னரையும் ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தார். மாரிஷியஸ் (Mauritius) பகுதியைக் கைப்பற்றத் திட்டமிட்டு எகிப்து வரையில் ஒரு படையையும் அனுப்பினர். ஸர் ஜான் மால்கோம் (Sir John Malcolm) தலைமையில் ஒரு தூதுக்குழுவைப் பாரசீகத்திற்கு அனுப்பிப், பாரசீக மன்னருடன் ஃபிரெஞ்சுக்கு எதிராக ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டார். இவ்விதம் போரின் மூலமும், துணைப் படைத் திட்டத்தின் மூலமும் ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்திய பெருமை வெல்லெஸ்லியையே சாரும். இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் என்ற நிலையை மாற்றி, இந்தியாவின் ஆங்கிலப் பேரரசு என்று மாற்றிய பெருமை இவரையே சாரும். ஆனால், இவருடைய நாடு பிடிக்கும் பற்றுக் காரணமாகப் படை ஆற்றலுக்கே முக்கியத்துவம் அளித்தாரே தவிர, ஆட்சிச் சீரமைப்பில் கவனம் செலுத்தவில்லை. முதலில் இவர் ஆதிக்கக் கொள்கைக்கு ஆதரவு காட்டிய இயக்குநர் குழு. போரின்பால் இவர் கொண்டிருந்த பேராவலைக் கண்டு இவரைத் திருப்பி அழைத்துக்கொள்ள முடிவு செய்தது. இவ் வெண்ணம் ஏற்பட்ட தருணத்தில் மராத்தியத் தலைவர் ஹோல்கார் (Holkhar) ஆங்கிலப் படையை ஒரு போரில் வெற்றிகொண்டார் என்ற செய்தி எட்டியது. இவ் வெற்றி, வெல்லெஸ்லியைத் திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை மேலும் வலியுறுத்தியது. இதனால் வெல்லெஸ்லியை 1805-ல் இயக்குநர்கள் திருப்பி அழைத்துக்கொண்டனர். ‘இந்தியாவில் ஆங்கில ஆதிக்கத்திற்கு வித்திட்டவர் இராபர்ட் கிளைவ்; அதைப் பாதுகாத்தவர் வாரன் ஹேஸ்டிங்ஸ்; அதைத் தன்னிகரற்ற பேரரசாக்கிய பெருமைக்கு உரியவர் வெல்லெஸ்லி பிரபுவே ஆவார்.’ வெல்லெஸ்லி பிரபுவிற்குப்பின் ஆங்கில ஆதிக்கத்தை இந்திய அரசுகளால் அச்சுறுத்தும் நிலை அடியோடு ஒழிந்ததெனலாம்.

காரன்வாலிஸ் பிரபு(1805)

வெல்லெஸ்லியின் ஆக்கிரமிப்புக் கொள்கையை இயக்குநர் குழு ஆதரிக்கவில்லை. அதனால் வெல்லெஸ்லியைத் திருப்பி அழைத்துக்கொண்டனர். பின்பு, காரன்வாலிஸ் பிரபுவையே இரண்டாம் முறையாகத் தலைமை ஆளுநராக அனுப்பினர். அப்பொழுது அவருக்கு 67 வயது. வெல்லெஸ்லியின் ஆக்கிரமிப்புக் கொள்கையை மாற்றித் தலையிடாக் கொள்கையை மீண்டும் செயல் முறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று காரன்வாலிஸ் பிரபு விரும்பினர். மராத்திய இராஜபுத்திரர்களுடன் அதற்கான திட்டங்கள்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருக்கையில், பதவியேற்ற மூன்றாவது மாதமே திடீரெனக் காலமானர். இதனால் காரன் வாலிஸ் எந்த மாற்றமும் இந்தியக் கொள்கையில் செய்ய முடியவில்லை.

ஸர் ஜார்ஜ் பார்லோ (1805—1807)

காரன் வாலிஸிற்குப் பிறகு ஸர் ஜார்ஜ் பார்லோ தலைமை ஆளுநராக்கப்பட்டார். அவர் 28 ஆண்டுகள் வணிகக் குழுவின் ஆட்சியில் பல துறைகளில் பணிபுரிந்தவர். வெல்லெஸ்லியின் கீழ்ச் சிறப்பாகப் பணிபுரிந்து நிர்வாகத் திறனில் நல்ல பெயர் பெற்றிருந்தார். காரன்வாலிஸ் காலமான பொழுது, ஆலோசனைக் குழுவின் மூத்த உறுப்பினராயிருந்ததால், தலைமை ஆளுநராக்கப்பட்டார். ஆனல், தலைமை ஆளுநர் ஸர் ஜான் ஷோரைப் போன்று எதையும் சுயேச்சையாய் முடிவெடுத்து நிர்வாகத்தைத் திறம்பட நடத்த முடியவில்லை.

பார்லோ செய்த மாற்றங்களில் முக்கியமானவை நிருவாகச் செலவையும், மற்ற வீண் செலவுகளையும் குறைத்து வருவாயை உயர்த்தியதுதான். இயக்குநர் சொற்படி இந்திய அரசர்களின் உள்விவகாரங்களில் தலையிடாமல் நடந்துகொண்டார். பல இராஜபுத்திர அரசுகளை மராத்தியர் தாக்கியபோதும், இயக்குநர் கட்டளைப்படி, அவர்களின் உதவிக்குச்செல்ல மறுத்து விட்டார். ஆனல், இத் தலையிடாக் கொள்கையால், வணிகக்குழு ஏற்கெனவே பல இந்திய அரசுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களைக் காற்றில் பறக்கவிட வேண்டியதாயிற்று உண்மையாகவே தலையிடாக்கொள்கையைக் கடைப்பிடிக்க முயன்றும்கூட, பார்லோவால், நிஜாம் சிக்கந்தர் ஜா (Sikkandar Jah) ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபட முயன்றபோது, அவரை ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர, ஐதராபாத்தின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட வேண்டியதாயிற்று. 1806-ல் வேலூரில்

ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் இவரது பதவிக் காலத்தில் ஏற்பட்ட முக்கியமான நிகழ்ச்சியாகும். சிப்பாய்கள் அனைவரும் தம் தலை முடியை ஒரேவிதமாக வெட்டிக்கொள்ள வேண்டும் என்றும், ஒரே மாதிரியான மீசை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், நெற்றியில் சமயக் குறிகளை யிட்டுக்கொள்ளக் கூடாது என்றும், இராணுவச் சீருடைகளையே அணியவேண்டும் என்றும், கொண்டுவரப்பட்ட ஒழுங்குமுறைகளை எதிர்த்து வேலூரிலிருந்த சிப்பாய்கள் கலகம் செய்தனர். அப்பொழுது சென்னையின் ஆளுநராக இருந்த வில்லியம் பென்டிங்க் பிரபுவும், ஸர் ஜார்ஜ் பார்லோவும் இக் கலகத்தை ஒடுக்க மிகச் சிரமப்பட்டனர். மிக்க சிரமத்திற்குப் பிறகே இக் கலகம் ஒடுக்கப்பட்டது. இக் கலகத்தை ஒடுக்கத்தக்க நடவடிக்கையினை எடுக்கத் தவறினர் என்று குற்றம் சாட்டப்பட்டு ஆளுநர் வில்லியம் பென்டிங்கும், தலைமை ஆளுநர் ஸர் ஜார்ஜ் பார்லோவும் திருப்பி அழைத்துக் கொள்ளப்பட்டனர். வேலூர்ச் சிப்பாய்க் கலகக் காரணத்துடன், இங்கிலாந்து அமைச்சரவையில் ஏற்பட்ட மாற்றமும் பார்லோ திருப்பி அழைக்கப்பட்டதற்கு மற்றொரு காரணமாகும். பார்லோவிற்குப்பின் முதலாம் மின்டோ பிரபுவை (Lord Minto I) இந்தியாவின் தலைமை ஆளுநராக அனுப்பி வைத்தனர்.

முதலாம் மின்டோ பிரபு (1807—1813)

மின்டோ பிரபு, தலைமை ஆளுநராவதற்கு முன்பு இந்தியக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (Board of Control) தலைவராயிருந்தார். இதனால் இந்தியாவிற்குத் தலைமை ஆளுநராக வருவதற்கு முன்பே, இந்தியச் சூழ்நிலையை நன்கு உணர்ந்திருந்தார்; வாரன் ஹேஸ்டிங்ஸின்மீது சுமத்தப்பட்ட துரோகக் குற்றச்சாட்டு வழக்கு நடைபெற்ற காலத்தில், மேலாளராகப் பணிபுரிந்தவர்; பொறுமையும், முன்னெச்சரிக்கையும் கொண்டவர். தலையிடாக் கொள்கையின் பிரதிநிதியாக இந்தியாவிற்கு வந்த இவரால், இக் கொள்கையை அவ்வப்பொழுது தளர்த்தி நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நெப்போலியன் போனபார்ட்டின் எழுச்சி

மின்டோ பதவி வகித்த காலமும், நெப்போலியன் போனபார்ட்டுடன் இங்கிலாந்து போரிட்ட காலத்தின் உச்சநிலையும் முற்றிலும் ஒன்றாகப் பொருந்தி இருந்தது. நெப்போலியன் கீழ்ப் புத்துயிர் பெற்ற ஃபிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்க அச்சமே மின்டோவின் முதலாவதும், முதன்மையானதுமான கவலையாக

இருந்தது. நெப்போலியன், ரஷ்ய ஜார் (Tsar of Rusia) மன்னருடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். இதனால் ரஷ்யாவும், ஃபிரான்சும் சேர்ந்து ஐரோப்பா முழுவதையும் கட்டியாண்டன. அவை ஆசியாவையும், அச்சுறுத்தி வந்தன. கீழைநாட்டைக் கைப்பற்றுவது என்னும் கனவினை நெப்போலியன் என்றுமே மறந்துவிடவில்லை. ஆங்கிலக் கடல்வலிமை காரணமாகத் தரை மார்க்கமாக இந்தியாவைத் தாக்கும் எண்ணம் நெப்போலியன் மனத்தில் தோன்றியது. பாரசீகத்தின் மூலமாகப் ஃபிரெஞ்சு-ரஷ்யப் படையெடுப்புத் திட்டத்தினை (ஸ்பெயின், ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் மீது திரும்பும்வரை) எண்ணியவாறு இருந்தார். மேலும் ஃபிரான்சு, மொரீஷஸ் தீவினையும். போர்பன் தீவினையும், இந்தியப் பெருங்கடலின் தெற்குப் பகுதியில் பெற்றிருந்தது. ஹாலந்தில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டியதன்மூலம், டச்சுக்காரர்களுக்குரிய கிழக்கிந்தியத் தீவுகளையும் ஃபிரான்சு ஆட்சிபுரிந்து வந்தது. ஆகவே மின்டோ, வடமேற்குப் பகுதிகளைப் பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டார்.

பாரசிகத்திற்குத் தூதர்குழு அனுப்புதல்

ஸர் ஜான் மால்கம் (Sir John Molcolm) என்பவரைப் பாரசீகத்திற்குத் தூதுக்குழுவின் தலைவராய் அனுப்பி ஃபிரான்சுக்கு எதிராய்ப் பாரசீக மன்னருடன் 1809-ல் டெஹ்ரான் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி பாரசீக மன்னர் ஃபிரெஞ்சுத் தூதுவரைத் தம் சபையினின்றும் நீக்க ஒப்புக்கொண்டார். பாரசீகத்திற்கு அந்நியப் படையெடுப்பால் ஏதாவது ஆபத்து நேர்ந்தால், ஆங்கிலேயரின் உதவி பாரசீகத்திற்குக் கிடைக்குமென்ற உறுதியையும் இவ்வுடன்படிக்கையின் மூலம் மின்டோ பிரபு பாரசீக மன்னருக்களித்தார்.

ஆஃப்கானிஸ்தானத்திற்குத் தூதுக்குழு அனுப்புதல்

ஆஃப்கானிஸ்தானத்திற்கும் மவுன்ட் ஸ்டூவர்ட் எல்ஃபின்ஸ்டனின் (Mount Stuart Elphinstone) தலைமையில் ஒரு குழு அனுப்பி, அதன் அரசரான ஷா ஷுஜா (Shah Suja) வுடன் பெஷாவரில் ஓர் உடன்படிக்கையினைப் பிரான்சுக்கு எதிராகச் செய்துகொண்டார். ஆனால், சிறிது காலத்திற்கெல்லாம் ஷா ஷுஜாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டமையால், அவ்வுடன்படிக்கை பயனற்றுப்போயிற்று.

இரஞ்சித் சிங்குடன் ஒப்பந்தம்

அவ்விதமே சிந்துவை ஆண்ட அமீர் சகோதரர்களுடனும் ஓர் உடன்படிக்கையினைச் செய்துகொண்டார். சீக்கியத் தலைவர் இரஞ்சித் சிங்குடனும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். மற்ற எல்லா ஒப்பந்தங்களைக் காட்டிலும், இந்த ஒப்பந்தமே மிகச் சிறப்பு வாய்ந்தது. மெட் காஃப் (Met Calfe) தூதுக் குழு, அமிர்தசரஸ் உடன்படிக்கையை 1809-ல் இரஞ்சித்சிங்குடன் செய்துகொண்டது. இதன்படி இரஞ்சித்சிங் ஆங்கிலேயரின் ஆப்த நண்பரானார். மேலும், இரு தரப்பினருக்கும் இடையே சட்லெஜ் (Sutlej) எல்லையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. முதலாம் மின்டோவின் இவ்விதத் தற்காப்பு உடன்படிக்கைகள் நெப்போலியன் போனபார்ட்டின் ஆதிக்கவெறிக்கு இந்தியா பலியாகிவிடுமோ என்ற அச்சத்தினாலேயே மேற்கொள்ளப் பட்டன. ஆனால், இந்த ஏற்பாடுகள் யாவும் செய்துகொண்ட பின், எதிர்பார்த்த இன்னலும் இடர்ப்பாடுகளும் இந்தியாவிற்கு ஏற்படவில்லை.

அமீர்கானைத் தோற்கடித்தல்

1809-ல் பட்டாணியத் தலைவரான அமீர்கான் பிண்டாரி யர்களோடு சேர்ந்துகொண்டு பீரார் (Berar) நாட்டைச் சூறை யாடினான். பீரார் நாட்டு மன்னர், வெல்லெஸ்லியின் துணைப் படைத் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டவர் ஆவார். ஆகவே, ஆங்கிலேயர், பீரார் அரசருக்கு ஆதரவுகாட்டக் கடமைப்பட்ட வரல்லர். ஆயினும், மின்டோ பிரபு, அமீர்கானை எதிர்ப்பது மனிதத் தன்மை என நினைத்து, பீரார் அரசருக்கு உதவி, அமீர் கானைப் பீராரிலிருந்து துரத்தினார். இதனால் பீரார் மக்கள் கொள்ளைக் கூட்டத்தின் கொடுமையிலிருந்து காப்பாற்றப் பட்டனர்.

தென்கிழக்கு நாடுகளில் பிரிட்டிஷ் பேரரசு நிறுவப்படல்

நெப்போலியன் ஐரோப்பியப் போரில் படுதோல்வி அடைந்தார். அதனால் பாதுகாப்பிற்காகச் செய்த ஏற்பாடுகளை மின்டோ பிரபு வலுத்தாக்கலுக்குப் பயன்படுத்தினார். ஃபிரான்சின் குடியேற்ற நாடுகளான போர்பன் (Bourbon), மொரீஷஸ் (Mauritius) தீவுகளுக்குத் தம் படைகளை அனுப்பி அவ்விடங்களை மின்டோ பிரபு கைப்பற்றினார். போர்த்து

கல்லே ஃபிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றியபொழுது கோவா வினையும் கைப்பற்றிக்கொண்டார். டச்சுக் கிழக்கிந்தியத் தீவு களையும் நன்னம்பிக்கை முனையையும், (Cape of Good Hope) மின்டோ பிரபு கைப்பற்றினர். நெப்போலியப் போருக்குப் பின், 1815-ல் ஏற்பட்ட சமரசத்தின்படி மொரீஷஸ் தீவைத் தவிர மற்றவைகளை, அந்தந்த நாட்டிற்குத் திருப்பித் தந்தார். இவ்விதம் மின்டோ பிரபுவின் காலத்தில் வணிகக் குழுவின் அயல்நாட்டுக் கொள்கையில் ஒரு பெருத்த மாற்றம் ஏற்பட்டது அவர் காலத்தில் தென்கிழக்கு நாடுகளில் ஆங்கிலப் பேரரசு என்னும் பயிருக்கு விதை விதைக்கப் பெற்றது. வடமேற்கு மாநிலமென்ற உத்தரப் பிரதேசத்தை (Uttar Pradesh) உருவாக்கிய வித்தகரும் இவரே. 1902 வரை உத்தரப் பிரதேசத்திற்கு வடமேற்கு மாநிலம் என்ற பெயரே வழக்கி லிருந்தது.

வேலுத் தம்பி புரட்சி

மின்டோ பிரபு காலத்தில் திருவாங்கூரில் ஒரு புரட்சி ஆங்கிலேயருக்கு எதிராக ஏற்பட்டது. மிகச் சிறியதாக இருந்த திருவாங்கூரை ஆண்ட புகழ்பெற்ற அரசரான மார்த்தாண்ட வர்மா (1729-1758) பக்கத்திலிருந்த பகுதிகளையும் ஆக்கிரமித்து, கொச்சிமுதல் குமரிமுனைவரை தம் ஆட்சியைப் பரவச் செய்தார். 1723-ல் திருவாங்கூர் அரசர் வணிகக் குழுவின் நண்பரானர். திப்பு திருவாங்கூரை ஆக்கிரமித்தபோது, காரன்வாலிஸ் அதன் உதவிக்குச் சென்றார் என்று ஏற்கெனவே பார்த்தோம். இதன் பிறகு 1795-ல் திருவாங்கூரை ஆண்ட இராமவர்மா (1758-1798) என்பவர் வணிகக் குழுவுடன் ஒரு புதிய உடன் படிக்கையினைச் செய்துகொண்டார். அதன்படி வணிகக்குழு திருவாங்கூருக்கு எல்லாப் பாதுகாப்பும் அளிப்பதாக ஒப்புக் கொண்டது. ஆங்கிலப் படையை அதற்காக அங்கு நிறுத்தி வைக்கவும் ஏற்பாடாயிற்று. இவ்விதம் ஆங்கில ஆதிக்கம் அங்கு நிறுவப்பட்டது. வேலுத்தம்பி (Velu Thambi) என்ற அமைச்சர் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்தார். இப் புரட்சியினை விடுதலைப்போர் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆங்கிலேயர்களின் ஆதிக் கத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தவர்களில் குறிப்பிடத் தகுந்த சிலருள் வேலுத்தம்பியும் ஒருவராவர். மின்டோ பிரபுவால் அப் புரட்சி மிகச் சுலபமாக ஒடுக்கப்பட்டது. மின்டோவின் ஆட்சியில் நிகழ்ந்த கடைசி நிகழ்ச்சி இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றம் 1813ஆம் ஆண்டு நிறை வேற்றிய பட்டயச் சட்டமாகும். இச் சட்டத்தின் கோட்பாடுகளை இந்திய அரசியல் அமைப்பின் வளர்ச்சி என்ற பகுதியில் விரிவாகக் காணலாம்

8. மைசூர்ப் போர்கள்—ஐதரும் திப்புவும்

1. முதலாம் மைசூர்ப் போர் 1767-69

ராஜா உடையார் (1578-1617) காலத்திலிருந்துதான் மைசூரின் சிறப்பு ஓங்கலாயிற்று. அவர் விஜயநகர அரசர் இரண்டாம் வெங்கடாவின் (Venkata II) ஆதிக்கத்தை ஒப்புக் கொண்டார். வெங்கடாவின் ஆதரவுடன் ராஜா உடையார் மைசூரை விரிவுபடுத்தும் பணியினை மேற்கொண்டார். சீரங்கத்தை அடுத்த பகுதிகளை ஆக்கிரமித்து, சீரங்கத்தில் தம் ஆட்சியை நிறுவினார். பின்னர் விஜயநகரப் பேரரசு சரிவுற்றது. இதனால் மைசூர் தன் ஆதிக்கத்தைப் பலப்படுத்திற்று.

சுதந்திர மைசூர் அரசின் வித்தகர் சிக்க தேவராய உடையாராவார் (Chikka Devaraya Udyear), 1672-1704. தெற்கே பழனி வரையிலும், மேற்கே குடகு வரையிலும், வடக்கே தும்கூர் (Tumkur) வரையிலும் மைசூரின் எல்லையை விரிவடையச் செய்தார். தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னரிடமிருந்து, பெங்களூரை விலைக்கு வாங்கினார். இதனால் மைசூர் மிக விரிவடைந்தது. ஆனால், சீரங்கப்பட்டணமே மைசூரின் தலைநகராகத் தொடர்ந்து இருக்கவும் செய்தார். இவருக்குப்பின் வந்தவர்கள் ஆட்சித்திறன் அற்றவராயிருந்தனர். அதன் காரணமாய் ஐதர் அலி என்ற முகமதியர் அரசாட்சியைத் தம்கீழ்க் கொண்டுவர முடிந்தது. இவர் மைசூரில் பணிபுரிந்த ஃபதே முகம்மது (Fateh Muhammad) என்பவருக்கு 1722-ல் பிறந்தவர். தம் போர்த் திறமையால் 1749-ல் திண்டுக்கலின் பௌஜ்தாரானார் (Faujdar). இவர் ஒரு பிறவிப் போர்வீரராவார். சிவாஜியைப் போன்று தன்னிகரற்ற ஆற்றலால், நிலையான படையொன்றைப் பயிற்றுவித்துத் தமது இராணுவநிலையை உயர்த்திக்கொண்டார். நிர்வாகத் திறமை பெற்றிருந்தார். திண்டுக்கல்லின் ஆட்சியைச்

செம்மைப்படுத்தித் தம் நிதிநிலைமையையும் குறிப்பிடத் தக்க அளவில் உயர்த்திக்கொண்டார். மைசூர் அரசரின் படையினர், அரசருக்கு எதிராகக் கலகம் செய்யவே, அதை ஒடுக்க அரசர் ஐதரின் உதவியை நாடினர். கலகத்தை அடக்கியதுடன், அக் கலகத்திற்குக் காரணமாயிருந்த தலைவர்களுக்குக் கடுமையான தண்டனை விதித்து, யாவருடைய பாராட்டுதல்களையும் பெற்றார். 1759-ல் மராத்தியர்கள் பெங்களூரை முற்றுகையிட்டபோது, அவர்கள் முற்றுகையைக் கைவிடும்படி ஐதர் செய்தார். இத் தீரச் செயல்களுக்காக ஐதருக்கு மைசூர் அரசர் 'ஃபதே ஐதர் பஹதூர்' (வெற்றிச் சிங்கம் ஐதர்) என்ற பட்டத்தை வழங்கினர்.

ஐதர் அலி

மைசூர் மன்னர் சிக்க கிருஷ்ணராஜ், தம் அமைச்சர் நஞ்ச ராஜாவின் ஆதிக்கத்தில் சிக்கியிருந்தார். அதைப் போக்க ஐதரின் உதவியை நாடினர். ஐதர், நஞ்ச ராஜாவைப் பதவியிலிருந்து நீக்கியதுடன் தாமே அதிகாரங்கள் அனைத்தையும் மேற்கொண்டார். இவ்விதம் 1761-ல் மைசூரின் சர்வாதிகாரியானர். இரஞ்சித் சிங்கைப்போல் இவரும் 18ஆம் நூற்றாண்டில் நிலவிய அரசியல் குழப்பத்தால் முன்னுக்கு வந்தவர். குடகு, மலபார், கோயம்புத்தூர், கிருஷ்ணா, துங்கபத்ரா இடையிலுள்ள பகுதிகளைக் கைப்பற்றி மைசூரை மேலும் விரிவுபடுத்தினர். பேஷ்வா மாதவராவால் தோற்கடிக்கப்பட்டாலும், அவர் மறைவிற்குப்பின், மராத்தியப் பகுதிகளில் பலவற்றைக் கைப்பற்றிக்கொண்டார்.

ஐதர் அலியின் ஆதிக்கப்பற்று அண்மையிலிருந்த மராத்தியர், நிஜாம், ஆங்கிலேயர் ஆகியோருக்குப் பயத்தை ஏற்படுத்தின. நிஜாமும், மராத்தியரும் அவருக்கு எதிராகக் கூட்டுச்சேர்ந்து ஐதரைத் தோற்கடித்தனர். பிறகு, மூவரும் சமாதானம் செய்துகொண்டனர். கர்நாடக நவாபான முகமது அலியைத் தீவிரமாக ஐதர் வெறுத்தார். ஆகவே, நிஜாமையும் அவருடன் சேர்த்துக்கொண்டு கர்நாடகத்தைத் தாக்கினர். முகமது அலி ஆங்கிலேயரின் நண்பர். ஆகவே ஆங்கிலேயர் முகமது அலிக்கு உதவியாக ஐதருடன் போர் தொடங்கினர். இவ்வாறு முதல் ஆங்கில-மைசூர்ப் போர் 1767-ல் தொடங்கியது.

ஆங்கிலேயர் தந்திரமாக நிஜாமை ஐதரிடமிருந்து பிரித்தனர். அவருடன் ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டனர். நிஜாமுடன் ஆங்கிலேயர் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் விளைவால், அவர் ஐதரின் கூட்டிலிருந்து பிரிக்கப்பட்டார். இதனல்

மனந்தளராமல் ஐதர் அலி போரில் அரசியல் தந்திரத்தையும், சமயோசித புத்தியையுங் காட்டி ஆங்கிலேயரைத் திணற வைத்தார். சென்னையிலிருந்த ஆங்கிலேயரால் அவருக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. ஐதரின் குதிரைப்படை கர்நாடகத்தைச் சூறையாடியது. கரூரையும், ஈரோட்டையும் கைப்பற்றினார். ஆங்கிலேயர் எதிர்பாராத வகையில், திடீரென்று சென்னைக்கு மிக அருகில், தம் படையை அமைத்து, சென்னையை முற்றுகையிடக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தினார். இதனால் அச்சமடைந்த சென்னை வணிகக் குழுவினர் அவர் பணித்தபடி 1769–ல் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதன்படி இருவரும் ஆக்கிரமித்துக்கொண்ட பகுதிகளை அவரவர்களுக்கே திருப்பித்தர வேண்டும் என்றும் மேலும், ஆபத்துக் காலத்தில் ஒருவரை ஒருவர் ஆதரிக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்துகொண்டனர். இவ்வொப்பந்தப்படி முதல் மைசூர்ப் போர் முடிவடைந்தது.

சென்னை அரசாங்கம் இப்படி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது மிகத் தவறாகி விட்டது. ஏனெனில், 1771-ல் மராத்தியர் மைசூரைத் தாக்கியபோது, ஐதர் ஆங்கிலேயரின் உதவியை எதிர்பார்த்தார். இயக்குநர் உத்தரவுப்படி சென்னை அரசு ஐதருக்கு உதவ மறுத்தது. இதனால் ஐதர் ஆங்கிலேயர் பால் சீற்றமும் தணியாத வெறுப்பும் கொண்டார். பொய்யர்கள் என்றும் நன்றியற்றவர்கள் என்றும் ஆங்கிலேயரைக் கருதினார். இதனால் மராத்தியருடன் நட்புறவுகொண்டு, ஆங்கிலேயரைத் தாக்கிடத்தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். ஆங்கிலேயரின் பல தவறுகள் நிஜாம், மராத்தியர், ஐதர் மூவரையும் அவர்களுக் கெதிராகச் சேரும் வாய்ப்பை விரைவில் உருவாக்கித் தந்தது. ஐதர் அலி இப்போரில் வெற்றி பெற்றதற்கான காரணங்கள் என்ன என்று ஆராய்கின்றபோது, அவரது குதிரைப் படையே முதலாவது காரணமாகிறது. கர்நாடகத்திற்கும், தென்னிந்தியாவிற்கும் ஏற்ற குதிரைப்படை அவரிடமிருந்தது. ஆங்கிலத் தளபதிகளிடையே ஒற்றுமையில்லை. ஸ்மித், உட் ஆகியோர் ஒற்றுமையுடன் செயல்படவில்லை. சென்னை ஆலோசனைக் குழுவிலிருந்த படைத்துறை உதவியாளர்கள் அடிக்கடி தளபதிகளின் செய்திகளில் தலையிட்டு அவர்களைக் கட்டுப்படுத்தினர். ஐதரின் அஞ்சா நெஞ்சமும், துணிவும், போர்த் தந்திரங்களும் அவருடைய வெற்றிக்குத் துணை நின்றன. சென்னை ஆலோசனைக் குழுவிற்கும், இயக்குநர் வாரியத்திற்குமிடையே கருத்து வேறுபாடு நிலவியது. இயக்குநர் வாரியம்

இந்திய அரசுகளில் ஆங்கிலேயரின் தலையீட்டை விரும்பவில்லை. இத்தகைய காரணங்களே ஐதரின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தன.

இரண்டாம் மைசூர்ப் போர் (1780—1784)

அமெரிக்கச் சுதந்திரப் போரில் ஃபிரான்சு, ஆங்கிலேயருக்கு எதிராக அமெரிக்காவை ஆதரித்தது. இதனால் இங்கிலாந்திற்கும் ஃபிரான்சுக்கும் 1778-ல் போர் மூண்டது. இந்தியாவிலும் வழக்கம்போல, ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரரும் போரில் இறங்கினர். மேற்குப் பகுதியில் ஃபிரெஞ்சுக்காரரின் மிக முக்கியத் துறைமுகம் மாஹே (Mahe). இதைக் கைப்பற்ற ஆங்கிலேயர் முயன்றனர். மாஹே ஃபிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்தாலும், ஐதருக்கு வேண்டிய பல முக்கியப் பொருள்கள் இதன் மூலமே வந்துகொண்டிருந்தன. ஆகவே, அதைத் தாக்க வேண்டாமென்று ஆங்கிலேயரை ஐதர் கேட்டுக்கொண்டார். ஆங்கிலேயர் அதைப் பொருட்படுத்தாமல் தாக்கவே, ஐதர் ஆங்கிலேயருடன் போரைத் தொடங்கினார். இவ்விதம் இரண்டாம் மைசூர்ப் போர் 1780-ல் தொடங்கியது.

போர் நிகழ்ச்சிகள்

கர்நாடகத்தின்மேல் படையெடுத்து, கர்னல் பைய்லியைப் (Col. Baille) போலிலூர் (Polilur) என்ற இடத்தில் ஐதர் தோற்கடித்தார். ஸர் ஹெக்டர் மன்ரோவினால் (Sir Hector Munro) தலைமை தாங்கப்பட்ட மற்றொரு வணிகக் குழுவின் படை சென்னையை நோக்கிப் பின்னடைந்தது. கர்நாடக நவாபின் தலைநகரான ஆர்க்காட்டை ஐதர் கைப்பற்றினார். ஆங்கிலேயரின் மிக நெருக்கடியான காலம் 1780-81 என்று கூறலாம். இவ்விரண்டு ஆண்டுகளில் ஆங்கிலேயரின் செல்வாக்கு மிகக் கீழான நிலைக்குச் சரிந்துவிட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸின் மதிநுட்பமும், சாமர்த்தியமுமே வணிகக் குழுவை நிலைகுலையாமல் காத்தது. ஃபிரெஞ்சுக்காரரும் ஐதரின் உதவிக்கு விரைந்தனர். வாரன் ஹேஸ்டிங்ஸ் முதலாம் மராத்தியப் போரை மிகச் சாதுர்யமாக 1782-ல் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார். நிஜாமையும் ஐதரின் கூட்டிலிருந்து ஓர் உடன்படிக்கைமூலம் பிரித்தார். இதனால் ஐதர் தனித்து ஆங்கிலேயருடன் போரிடும் நிலை ஏற்பட்டது. இவற்றையெல்லாம் கண்டு மனம் கலங்காமல், ஐதர் போரைத் தொடர்ந்து நடத்தினார். வாரன் ஹேஸ்டிங்ஸ் மேலும் வந்தவாசிப் போரின் வீரரான சர் ஐர் கூட்டைக் (Sir Eyre Coote) கடல் மூலமும், பியர்ஸை (Pearce) ஒரு படையுடனும் வங்கா

ளத்திலிருந்து சென்னைக்கு அனுப்பினார். வந்தவாசிப் போர் வீரர் 1781-ல் ஐதரைப் பறங்கிப்பேட்டையில் (Portonovo) தோற்கடித்தார். இதைத் தொடர்ந்து போலிலூர், சோளிங்கர் போன்ற இடங்களிலும் ஆங்கிலப்படை வெற்றிகண்டது. இவ் வெற்றிக்குப் பிறகும் ஆங்கிலேயரால் ஐதரைக் கர்நாடகத்தைவிட்டு விரட்ட முடியவில்லை. அவருடைய குதிரைப்படை ஆங்கிலேயருடையதை விடச் சிறந்திருந்தது. அவர் மகன் திப்பு தஞ்சாவூர் அருகே பிரைத் வெய்ட்டால் (Braith Waite) தலைமை தாங்கப்பட்ட ஆங்கிலப் படையைக் கும்பகோணத்திற்கருகில் தோற்கடித்தார். ஐதர் ஃபிரெஞ்சுப் படையின் வரவை மிகவும் ஆவலுடன் எதிர் நோக்கி இருந்தார். ஃபிரெஞ்சுக் கடற்படை, சஃப்ரன் (Suffren) தலைமையின்கீழ், ஆங்கிலக் கப்பற்படையைச் சிதறடித்தது. ஆனால் ஐதருக்கு இதனால் நன்மை விளையவில்லை. ஐதருக்கு உதவுவதற்காக புஸ்ஸி (Bussy) தலைமையின்கீழ் அனுப்பப்பட்ட ஃபிரெஞ்சுப் படையும் மிகவும் காலதாமதப்பட்டே வந்தது. அதற்குமுன்பே 1782-ல் புற்றுநோயின் காரணமாக ஐதர் அலி காலமானார். மேலும், 1783-ல் இங்கிலாந்தும், ஃபிரான்சும் சமாதானமாயின. இதனால் திப்புவின் உதவிகொண்டு தென்னிந்தியாவைக் கைப்பற்ற இருந்த நல்ல வாய்ப்பை ஃபிரெஞ்சுக்காரர்கள் இழந்தனர் என்றே கூறலாம். திப்பு, ஐதரின் மறைவிற்குப் பின் போரைத் தொடர்ந்து மங்களூரைக் கைப்பற்றினார். சென்னை ஆளுநர் மக்கார்ட்டினி பிரபு (Mcartney) திப்புவுடன் சமாதானம் செய்துகொள்ள விருப்பம் காட்டினார். திப்புவும் இதற்கு இசையவே இரண்டாம் மைசூர்ப் போர் 1784ஆம் ஆண்டில் மங்களூர் உடன்படிக்கைப்படி முடிவுற்றது. இதன்படி இருவரும் போருக்கு முன்னிருந்த நிலைக்குச் செல்ல ஒப்புக்கொண்டனர். இந்த ஒப்பந்தம் மனமாரச்செய்து கொண்டதன்று. சூழ்நிலையின் காரணமாய்ச் செய்துகொண்டதால், போர் எந்த நிமிடத்திலும் மீண்டும் இருவருக்கும் இடையே ஏற்படலாம் என்ற ஐயம் இருக்கவே செய்தது. திப்புவின் ஒவ்வொரு செயலும் அதை உறுதி செய்தது. திப்பு ஆங்கிலேயரை வென்றதாகவே கருதினார். மேலும், படைபலத்தைப் பெருக்கி ஆங்கிலேயரைச் சந்திப்பதற்கான சூழ்நிலையினை எதிர்நோக்கி இருந்தார்.

மதிப்பீடு

ஐதர் அலி ஆங்கிலேயருடன் இவ்வாறு இருமுறை பலப் பரீட்சை செய்தார். இருமுறையும் வெற்றி தோல்வி இன்றியே முடிந்ததெனலாம். மைசூரின் போர்த்திறமைக்கு முக்கியக் காரணம் ஐதரேயாவார். ஐதர் படைநுணுக்கம் நன்கு தெரிந்

திருந்தார். ஐரோப்பியரின் படையைப் போலவே தம் படையையும் நன்கு நிறுவினார். அவர் குதிரைப்படை, ஆற்றலில் ஆங்கிலப்படையை விடச் சிறந்து விளங்கியது. கல்லாதவரா யிருந்தும் அக்பரைப் போல் மதிநுட்பமும் அரசியல் தந்திரமும் ஆற்றலும் மிக்கவர். இந்துஸ்தானி, கன்னடம், மராத்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளைத் தெரிந்தவர். மற்றவரின் ஆற்றலை மதிப்பிடுவதில் நிகரற்றவர். பூரணய்யா போன்ற தகுதி உள்ள இந்தியரைப் பெரிய உத்தியோகங்களில் அமர்த்தினார். சொன்ன சொல்லைக் காப்பதில் உறுதி வாய்ந்தவர். ஐதரிடம் மதப்பற்றிருந்த போதிலும், அவர் சமயப் பொறையுடன் நடந்து கொண்டார். அவர் வெளியிட்ட நாணயங்களில் இந்துக் கடவுளர்களின் உருவங்களைப் பதித்தலிலிருந்து அதனை அறியலாம். ஐதர் வெளியிட்ட பொன், செம்பு நாணயங்களில் அவருடைய பெயரின் முதலெழுத்தும், சிவன், பார்வதி, திருமால் ஆகியோரின் திருவுருவங்களும் இருந்தன. மேலும் சாமுண்டீஸ்வரி, நஞ்சன் கூடு (Nanjangud) போன்ற இந்து ஆலயங்களுக்குத் தாராளமாக உதவினார். கடமையில் தவறுபவர்களையும், குற்றவாளிகளையும் தண்டிக்கக் கசையடி முறை, உறுப்புகளைக் களைதல், இரும்புக் கூண்டுக்குள் அடைத்தல் போன்ற தண்டனைகளைக் கையாண்டார். இதனால் ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்கள், ஐதரை, 'மனித உருவில் வாழ்ந்த விலங்கு' என்றனர். விரோதியிடம் கொடூரமாய் இருந் தார் என்றால், அது 18ஆம் நூற்றாண்டின் பொதுப்படியான முறைச் செயலேயாகும். கடற்படையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு கடற்படையையும் அமைத்தார். ஆனால், பழக்க மின்மையாலும் போதிய பயிற்சி இன்மையாலும் அவர் கடற் படை சிறந்து விளங்கவில்லை.

மூன்றும் மைசூர்ப் போர் (1790—1792)

காரன்வாலிஸ் நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிப் பதே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தும், திப்புவுடன் போரிடாமலிருக்க முடியாதென்பதை உணர்ந்தார். ஐதர், மைசூர் அரசரைப் பெயரளவிலேயே வைத்திருந்தார். திப்பு 1786-ல் அவரை நீக்கிவிட்டுத் தாமே மைசூரின் அரசராக ஆனார்.

மராத்தியர்களிடமிருந்து துங்கபத்திரைக்கும் கிருஷ்ணா ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியைத் தம் மாட்சியுடன் இணைத்துக்கொண்டார். இந்துக்கள் முஸ்லிம்களாக மாற்றப் பட்டனர். தார்வார் மாவட்டத்திலுள்ள நர்குந்தின் தலைவரை

விரட்டிவிட்டு அதைத் தாமே ஆளத் தொடங்கியதோடு, பெல்காம் மாவட்டத்திலுள்ள கிட்டூரையும் தம்மாட்சியில் சேர்த்துக்கொண்டார். திப்புவிற்கு எதிராக மராத்தியர்களும், நிஜாமும் ஒன்றுசேர்ந்தனர். எனவே, ஆத்திரமடைந்த திப்பு இந்துக் கோவில்களை இடித்து, இந்துக்களைக் கட்டாயப்படுத்தி முஸ்லிம் ஆக்கினார். ஃபிரெஞ்சுக்காரருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு ஆங்கிலேயரை விரட்டமுயன்றார். 1785-ல் துருக்கிச் சுல்தானுக்கும், 1787-ல் 16ஆம் லூயிக்கும் தூதுக் குழுக்களை அனுப்பினார். அத் தூதுக் குழுக்களை மிகவும் மரியாதையுடன் அவ் வரசர்கள் நடத்தியது, திப்பு தம்மை மிகப் பலம் வாய்ந்த பேரரசர் என்ற எண்ணம் கொள்ளச் செய்தது. இவ்விதச் செய்கையினால் திப்பு ஆங்கிலேயரைப் பயமுறுத்திக்கொண்டிருந்தார்.

1768-ல் ஆங்கிலேயர்கள் நிஜாமுடன் மசூலிப்பட்டண உடன்படிக்கையினைச் செய்திருந்தனர். 1782-ல் குண்டூர் அரசராக, நிஜாமின் கீழ் இருந்துவந்த பசாலத் ஜங் இறந்துவிட, ஒப்பந்தப்படி குண்டூரை ஆங்கிலேயரிடம் நிஜாம் ஒப்படைக்கவில்லை. 1769-ல் ஏற்பட்ட சென்னை உடன்படிக்கைப்படியும், 1784-ல் ஏற்பட்ட மங்களூர் உடன்படிக்கையின்படியும் திப்பு, தம் ஆட்சிக்கு உரியதெனக் கூறிய நிலப்பகுதிகளை அடையும் உரிமையை ஆங்கிலேயர்கள் ஒத்துக்கொண்டனர். ஆனால், ஐதரிடமிருந்து, தம்முடைய பகுதிகளைப் பெற்றுத் தருமாறு நிஜாம் ஆங்கிலேயரைக் கேட்டார். அவ்வாறு கொடுத்தால்தான் குண்டூரை அவர்களுக்குக் கொடுக்க முடியும் என்று நிஜாம் சொல்லிவிட்டபடியால் காரன்வாலிஸ் நிஜாமுடன் திப்புவை எதிர்க்கவும், நிஜாமிற்கு உதவவும் உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொண்டார். இவ் வொப்பந்தப்படி குண்டூரை நிஜாம் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட ஆங்கிலேயர்மீது திப்பு போர் தொடுத்தார்.

காரன்வாலிஸால் திப்புவிற்கு எதிராக நேரடி நடவடிக்கை எதனையும் எடுக்க முடியவில்லை. நிஜாமுடன் திப்புவிற்கு எதிராக ஓர் உடன்படிக்கையினைச் செய்துகொண்டு, திப்புவுடன் போர் தொடங்கத் தக்க காரணத்தை மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். எதிர்பார்த்த காரணம் திருவாங்கூர் உருவத்தில் வந்தது.

திப்பு 1789-ல் திருவாங்கூரைத் தாக்கினார். திருவாங்கூர், வணிகக் குழுவினருடன் நட்புறவு கொண்டிருந்த காரணத்தால், காரன்வாலிஸ் திருவாங்கூரை ஆதரித்துத் திப்புவுடன் போரில்

இறங்கினார். இவ்விதம் மூன்றும் மைசூர்ப் போர் 1790-ல் மூண்டது. நிஜாமும் மராத்தியரும் வணிகக் குழுவுடன் கூட்டுச் சேர்ந்தனர்.

போர் நிகழ்ச்சிகள்

படைத்தலைவர் மிடோஸ் (General Meadows) படையினைத் தலைமைதாங்கிக் கோயம்புத்தூர், திண்டுக்கல், பாலக்காடு முதலிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டார். எனினும், மிடோஸால் திப்புவைத் தோற்கடிக்க இயலவில்லை. காரன்வாலிஸ் பெங்களூரைக் கைப்பற்றித் திப்புவை அரிக்கீர் (Arikere) என்ற இடத்தில் 1791-ல் தோற்கடித்தார். போக்குவரத்து, உணவுப் பற்றுக்குறைக் காரணங்களால் இவ் வெற்றியை அவரால் தொடர முடியாமல் இரு முறை பின்வாங்க நேர்ந்தது. 1791-ல் திப்புவினால் திருவண்ணாமலை கைப்பற்றப்பட்டது. புதுச்சேரி ஆளுநர் மூலம் ஃபிரெஞ்சு மன்னர் 16ஆம் லூயிக்குத் திப்பு விடுத்த தூது பலனளிக்கவில்லை. சென்னைக்கு வந்த காரன்வாலிஸ் திப்புவைத் தொலைத்துவிட்டு, மைசூரை அதன் அரச பரம்பரையினருக்குக் கொடுக்க நினைத்தார். பெங்களூரைக் காரன்வாலிஸ் கைப் பற்றினார். பெங்களூரிலிருந்து சீரங்கப்பட்டணத்தை நோக்கிச் சென்ற காரன்வாலிஸின் படையோடு மராத்தியப் படைகள், நிஜாமின் படைகள், பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலப்படையினர் ஆகியோர் சேர்ந்துகொண்டனர். சீரங்கப்பட்டணத்திற்குச் செல்லும் வழியிலுள்ள பாராமஹால் கோட்டை கைப்பற்றப் பட்டது. திப்புவின் தலைநகர் அரண்கள் தாக்கப்படவே வேறு வழியின்றிச் 'சீரங்கப்பட்டண உடன்படிக்கை' என்னும் உடன் படிக்கையினைச் செய்துகொண்டார். இவ் வுடன்படிக்கைப்படி திப்பு மூன்று கோடியே முப்பது இலட்ச ரூபாயைப் போர் இழப் பீட்டுத் தொகையாகக் கொடுக்கவேண்டியதிருந்தது என்றும், சிறைப்பட்டவர்கள் எல்லோரும் விடுதலை செய்யப்பட வேண்டு மென்றும் ஏற்பாடாகியது. திப்புவின் இரண்டு மக்களும் பிணை யாக (lostages) அனுப்பப்பெற்றனர். சிறிது காலத்திற்குள் போர் இழப்பீட்டின் ஒரு பகுதியைச் செலுத்திய திப்பு, 1794-ல் பாக்கித் தொகை முழுமையும் செலுத்தித் தம் புதல்வர்களிரு வரையும் திரும்பப் பெற்றார்.

மேலும், சீரங்கப்பட்டண உடன்படிக்கைப்படி மைசூரில் பாதிக்குமேல் ஆங்கிலேயருடைய அரசுடன் இணைக்கப்பட்டது. நிஜாமும், மராத்தியரும் சில பகுதிகளைப் பெற்றனர். மைசூரின் வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகள் நீங்கலாக மற்றப் பகுதிகளில்

எல்லாம் ஆங்கிலேயரின் அரசே சூழ்ந்திருக்கவேண்டும் என்னும் கருத்தினுல்தான் மைசூரின் ஒரு பகுதியைக் காரன்வாலிஸ் ஆக்கிரமித்துக்கொண்டார். வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளில் நிஜாமும், மராத்தியரும் முறையே மைசூரைச் சூழ்ந்திருந்தனர். மலபார், குடகு (Coorg) பகுதியையும் வணிகக் குழுவின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தமையால் திப்பு மேலைக் கடற்கரைப் பகுதியோடு எத்தகைய தொடர்பும் இல்லாமல் துண்டிக்கப்பட்டார். பாராமகாலையும் (Baramahal) ஆங்கிலப் பகுதியாக்கிக் கொள்ளப் பட்டதால், திப்பு சுற்றிலும் ஆங்கிலேயர்களால் சூழப்பட்டு உள்ளே அடைக்கப்பட்டார்.

காரன்வாலிஸ், திப்புவுடன் செய்துகொண்ட உடன் படிக்கையைப் பலர் பழித்துக் கூறுகின்றனர். திப்புவை அழிக்காமல் அவருடன் சமாதானம் செய்துகொண்டது தவறு என்று பலர் கருதுகின்றனர். இக் குற்றச்சாட்டுத் தவருகும். ஏனெனில், ஆங்கிலப்படை அப்போது பலவீனமாயிருந்தது. மேலும், அவருடன் கூட்டுறவு கொண்டிருந்த நிஜாமுக்கு மராத்தியர்களின் உறுதியில் நம்பிக்கையில்லை. எந்த நேரத்திலும் அவர்கள் மனம் மாறி, திப்புவுடன் சேரக்கூடும் என்ற நிலையிலிருந்தார். மேலும், திப்புவின் அரசு முழுமையும் கைப்பற்றி இருந்தால், ஆங்கிலேயரின் இந்திய நட்புறவு நாடுகளிடையே சந்தேகமும் சலசலப்பும் ஏற்பட்டிருக்கலாம்; அல்லது இங்கிலாந்து மக்களுடைய பொதுக் கருத்துக் காரன்வாலிஸிற்கு எதிராக மாறி இருக்கலாம். ஏனெனில், இங்கிலாந்து மக்களிடையே, ஆதரவற்ற இந்தியரை அநியாயமாக வணிகக் குழுவின் ஊழியர் கொடுமைப்படுத்துகின்றனர் என்ற எண்ணம் நிலவிய காலமது. அதனுடன் இயக்குநர் வாரியம் இந்திய அரசுடன் போரிடுவதை விரும்பவில்லை. மேலும், ஃபிரெஞ்சுப் புரட்சியின் காரணமாக, ஆங்கில—ஃபிரெஞ்சுப் போர் எப்பொழுதும் தொடரலாம் என்ற பயம் ஐரோப்பாவில் பரவியது. அப்படி நேர்ந்தால் ஃபிரெஞ்சுக்காரர்கள் திப்புவுடன் சேர்வர். திப்புவும் ஃபிரெஞ்சுக்காரரும் இணைவது வணிகக் குழுவிற்கு ஆபத்தென்று காரன்வாலிஸ் கருதினர். திப்புவின் படை பலமும், நாடும் குறைக்கப்பட்டதால், ஆங்கிலேயரை அவர் எதிர்க்கமாட்டார் என்று கருதியே மங்களூரைத் திப்புவுடன் விட்டுவைத்தார். அவ்வாறு விட்டுவைத்தது காரன்வாலிஸின் தவறேயாகும். ஏனெனில், ஃபிரான்சு போன்ற நாட்டுடன் தொடர்புகொள்ள, திப்புவிற்கு இதனுல் வாய்ப்பு ஏற்பட்டது. திப்புவிற்கு மங்களூரைத் திருப்பிக்கொடுத்தமைக்கும் காரன்

வாலிஸைக் குறைகூறுவதில் பயனில்லை. வின்சென்ட் ஸ்மித் கூறுவதைப் போல, '1956ஆம் ஆண்டில் வாழும் வரலாற்று ஆசிரியனுக்கு அரசியல் அடிவானம் தெளிவாகத் தோன்று வதைப் போன்று, 1793ஆம் ஆண்டில் வாழ்ந்த பார்வை யாளருக்குத் தோன்றவில்லை; அல்லது 1800ஆம் ஆண்டு அளவில்வாழ்ந்த அரசியல் விமரிசகர்களுக்கும்அவ்வாறே புலனாக வில்லை என்றே கூறலாம். மேலும், திப்பு என்னும் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுது என்றே காரன்வாலிஸ் சீரங்கப்பட்டண உடன்படிக்கையைத் திப்புவுடன் செய்து கொண்டார் என்றே கூறவேண்டும்.'

நான்காம் மைசூர்ப் போர் (1799)

மூன்றும் மைசூர்ப் போரின் முடிவில் ஏற்பட்ட உடன் படிக்கையால் அடிபட்ட புலியைப் போன்ற நிலையிலே திப்பு இருந்தார். காரன்வாலிஸின் பெருந்தன்மையான நிபந் தனைகளை அவரால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. சீரங்கப் பட்டண உடன்படிக்கையினால் தமக்கு நேர்ந்த இழப்பையும், அவமானத்தையும் அவரால் மறக்க முடியவில்லை. ஆங்கி லேயரைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமெனத் துடித்துக் கொண்டிருந்தார். அதற்கான ஆக்க வேலையில் முழு மூச்சுடனும் ஈடுபட்டிருந்தார். ஆங்கிலேயர்களின் எதிரிகளான ஃபிரெஞ்சுக்காரர்களுடன் நெருங்கிய நட்புறவு கொண்டார். ஃபிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகளையும், சாதனைகளையும் பாராட்டித் தம் தலைநகரத்தில் விழா நடத்தினர். ஜாக்கோபின் (Jacobin) மன்றமும் ஆரம்பித்தார். ஃபிரெஞ்சுப் புரட்சிக் கொடியையும் தம் தலைநகரில் பறக்கவிட்டார். இந்தியாவின் மேல் படையெடுக்கும்படி நெப்போலியனுக்குக் கடிதம் எழுதினர்.

வெல்லெஸ்லி தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்ற உடனே, திப்புவின் போக்கைக் கண்டு, அவருடன் போரிடாமல் இருக்க இயலாது என்பதைத் தெளிவாக உணர்ந்தார். எகிப்திலிருந்த நெப்போலியன் போன பார்ட்டிடமிருந்து மிக ஆதரவான கடிதமும் பெற்று, பாரசீக மன்னரான ஜாமன் ஷாவை (Zaman Shah) இந்தியாவின்மேல் படையெடுக்க அழைப்புவிடுத்துத் துருக்கி, அரேபியா போன்ற முகமதிய நாடுகளுடனும் ஆங்கிலேயருக்கு எதிராகச் சதியாலோசனை, செய்தார். ஆதிக்கப் பற்றுக்கொண்ட வெல்லெஸ்லிக்கு திப்புவின் போக்கும் செயலும் பிடிக்கவில்லை. இதனால் ஆங்கி லேயருக்கு எதிராகத் திப்பு சதிசெய்கிறார் என்ற குற்றத்தைச்


நிஜாம்
ராஜ்யம்
கிருஷ்ணா
கிருஷ்ணா நதி
கர்நூல்
துங்கபத்திரை நதி
பெண்ணையாறு
கடப்பை
சித்ரங்
-துர்க்
மைசூர்
பெட்னூர்
மங்களூர்
பெங்களூர்
வேலூர்
ஆற்காடு
பாலாறு
பழவேற்காடு
சென்னை
ஸ்ரீரங்கப்பட்டணம்
வந்தவாசி
குடகு
கண்ணனூர்
தலைச்சேரி
மாஹி
கள்ளிக்கோட்டை
பாரமஹால்
சேலம்
பாண்டிச்சேரி
தேவிகோட்டை
தரங்கம்பாடி
காவிரி
கோயம்புத்தூர்
திருச்சி
தஞ்சாவூர்
திண்டுக்கல்
பாலக்காடு
கொச்சி
மைசூர்ப்
போர்கள்

சுமத்தி 1799-ல் போரைத் தொடங்கினர். இவ்விதம் நான்காம் மைசூர்ப் போர் தொடங்கியது. நிஜாமும் ஆங்கிலேயருடன் கூட்டுச்சேர்ந்தார்.

போர் நிகழ்ச்சிகள்

வெல்லெஸ்லி பிரபுவின் சகோதரரான ஆர்தர் வெல்லெஸ்லியின் தலைமையில் ஆங்கிலப்படை திப்புவின் படையுடன் மோதியது. ஆர்தர் வெல்லெஸ்லிதான் பின்பு வெல்லிங்டன் கோமான் (Duke of Wellinton) என்றழைக்கப்பட்டவர். ஹாரிஸ் (Harris) என்ற படைத்தலைவரும் கிழக்கிலிருந்து மைசூரைத் தாக்கினர். பம்பாயிலிருந்து மற்றொரு படை ஸ்டூவர்ட் தலைமையில் மேற்கே தாக்கியது. ஜான்மால்கோம்(John Malcolm பிறகு பம்பாயின் ஆளுநராகப் பணிபுரிந்தவர்) நிஜாமின் படைக்குத் தலைமை தாங்கித் திப்புவைத் தாக்கினர். மாலவல்லி (Malavalli) என்ற இடத்தில் திப்பு தோல்வியடைந்தார். முப்பத்தைந்து நாள் முற்றுகைக்குப்பின் மைசூரின் தலைநகரான சீரங்கப்பட்டணம் (Srirangapatam) கைப்பற்றப்பட்டது. போரில் திப்பு மாண்டார். தோல்விக்குப் பிறகு திப்புவின் குடும்பத்தினர் வேலூருக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு ஒரு கணிசமான உதவித்தொகை வழங்கப்பட்டது. நிஜாமிற்கு இதில் கடப்பா, கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய வடகிழக்கு மைசூர் கொடுக்கப்பட்டது. இப் பகுதியைத்தான் நிஜாம் 1800-ல் துணைப்படை ஒப்பந்தத்திற்காக ஆங்கிலேயருக்கு மானியமாகக் கொடுத்தார். நிஜாமுக்குக் கொடுக்கப்பட்டுப் பிறகு ஆங்கிலேயருக்குத் திரும்பக் கொடுக்கப்பட்ட காரணத்தால்தான் 'கொடை மாவட்டங்கள்' (Ceded Districts) என்று பெயர்பெற்றன. ஆங்கிலேயர் தென் கன்னடம், கோயம்புத்தூர், வயநாடு (Wynaad) பகுதிகளை எடுத்துக்கொண்டு, மிஞ்சிய மைசூருக்குப் பழைய இந்து அரச குடும்பத்தைச் சார்ந்த கிருஷ்ணராஜ உடையாரை அரசராக்கினர். மேலும், அவருடன் ஒரு துணைப்படை ஒப்பந்தமும் செய்துகொண்டனர். கிருஷ்ணராஜ உடையார் சிறுபிள்ளையாயிருந்த காரணத்தால், மைசூரின் பொருளாதார ஆலோசகராயிருந்த பூர்ணையா (Purnaiya) என்பவரை நிலையராக (Resident) அமர்த்தினர். இவ்வாறு முடிவில் மைசூர் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

வெல்லெஸ்லியின் இவ் வெற்றியினுல் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் வணிகக் குழுவின் பெருமை மிக உயர்ந்த நிலைக்கு

8

உயர்த்தப்பட்டது. வின்சென்ட் ஸ்மித் இவ் வெற்றியைக் குறிப்பிடுகையில், 'நைல் நதியில் நெல்சன் பெற்ற வெற்றிச் செய்தியை அடுத்து, வெல்லெஸ்லியின் இவ் வெற்றி இங்கிலாந்தினைத் தொடர்ந்து விழாக்கோலம் கொள்ளச் செய்தது. நலிந்தும் மெலிந்துமிருந்த இங்கிலாந்திற்குத் தேவைப்பட்ட ஊட்டம் தரும் சிறந்த மருந்தாக அவ் வெற்றிகள் அமைந்தன. ஒரு வகையில் வெல்லெஸ்லியின் வெற்றி, நெல்சனின் கடல் வெற்றியைவிட ஆற்றல் மிக்கதாய் விளங்கியது. ஏனெனில், ஆங்கிலேயர் கடற்போரில் வெற்றி பெறுவதில் வரலாற்றுப் புகழ் பெற்ற சிறப்புப் பெற்றிருந்தனர். ஆனால், நிலத்திலே போரிட்டு வெற்றி பெறுவது இதுவரை ஆங்கிலேயருக்கு அரிய செயலாக இருந்து வந்தது' என்று குறிப்பிட்டார்.

திப்புவைப் பற்றிய மதிப்பீடு

கிர்மானி (Kirmani) என்ற பாரசீக எழுத்தாளர், திப்புவின் தோல்விக்கு அவருடைய அலுவலரின் துரோகச் செயலே முக்கியக் காரணம் என்கிறார். திப்புவின் குணாதிசயங்களையும், ஆற்றலைப் பற்றியும் பலவிதமாகப் பலர் கூறுகின்றனர். 'பண்பற்ற கொடூரமானவர்' என்று ஸ்மித் அவரைக் குறிப்பிடுகிறார். 'ஹைதர் ஒரு பேரரசு அமைக்கப் பிறந்தவர்; அதை இழக்கப் பிறந்தவர் திப்பு' என்று வில்க்ஸ் (Wilks) என்பவர் பழிக்கின்றார். பௌரிங் (Bowring), ராபர்ட்ஸ் (Roberts), ஹட்டன் (Hutton) என்போரும் அவரை மோசமான குணம் படைத்தவர் என்றே குறிப்பிடுகின்றனர். திப்பு கொடூரமானவர்; சந்தேகக் குணம் படைத்தவர்; தற்புகழ்ச்சியில் மயங்கியவர் என்பது உண்மை என்றாலும் நல்ல பண்பும், குணமும் இல்லாதவரல்லர். நல்லதும் கெட்டதும் கலந்த இயல்புகளைக் கொண்டவர் என்று கருதுவதே பாரபட்சமற்ற கருத்தாகும். அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்; கடின உழைப்பாளி; மைசூரின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவு அளித்தவர்; சிறந்த கல்விமான்; இந்துஸ்தான், பாரசீகம், கன்னட மொழிகளைக் கற்றவர்; ஒரு சிறந்த நூலகமும் வைத்திருந்தார்; புதுமுறையான நாட்குறிப்பும் (calendar), நாணய முறையும் புகுத்தினார்; தம்மைச் சார்ந்தவர்பால் அன்பும் ஆதரவும் காட்டியவர்; ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர்.

இஸ்லாமிய சமயத்திற்கு மாறும் இந்துக்களுக்கு உற்சாகமும் தனிச் சலுகையுமளித்தாலும், அப்போதைய சிருங்கேரி சங்கராச்சாரியாரிடமும் (Sankaracharya of Sringeri) மதிப்பும், அன்பும் வைத்திருந்தார். சீரங்கத்து

வைஷ்ணவ ஆலயத்திற்கு உதவினர்; இந்துக்களைப் பதவியில் அமர்த்தினர். ஐதருடன் ஒப்பிடும்போது, திப்பு அரசியல் தந்திரத்திலும், போரிடும் ஆற்றலிலும் குறைந்தவர் என்றே கூற வேண்டும். இடைவிடாத போர்களால் மக்கள் நலனை இவரால் கவனிக்க முடியவில்லை; அதற்கு அக்கறை கொள்ளவில்லை. இதனால் மக்கள் இவரை வெறுத்தனர். ஐதரின் ஆட்சியில் ஆக்கப் பணிகளே மிகுந்திருந்தன. ஆனால், திப்புவின் ஆட்சியில் அழிவுப் பணிகளே மலிந்திருந்தன. எந்த இந்திய அரசரைக் காட்டிலும், ஆங்கிலேயரே அவரின் பரம விரோதி; அவர்களை ஒழித்தால்தான் தமக்கு நிம்மதி என்பதை மிகத் தெளிவாய் திப்பு உணர்ந்தார். அந்த எண்ணத்தை அவர் மாற்றிக்கொள்ளவே இல்லை. ஆனால், அதை நிறைவேற்றும் வழியைத்தான் சரியாக நிர்ணயிக்கவில்லை. இதில்தான் ஐதருக்கும் இவருக்கும் மிக்க முரண்பாடு தோன்றுகிறது. ஐதர் சிறந்த விவேகி, அரச தந்திரம் உணர்ந்தவர் என்பது இதிலிருந்து புலப்படுகிறது. ஐதர் தம்முடைய எதிரிகள் யாவரும் ஒன்றாய் ஒரே சமயத்தில் சேராமல் பார்த்துக் கொண்டார். திப்பு இந்த அரசியல் தந்திரத்தைக் கையாளாததுடன், அதன் அவசியத்தையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஐதர் எல்லாப் பகைவர்களையும் ஒரே சமயத்தில் பகைத்துக் கொள்ளாதவாறு பார்த்துக்கொண்டார். மேலும், ஃபிரெஞ்சுக் காரரின் உதவியைக்கொண்டு ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு விரட்ட முயன்றார்.

1806-ல் வேலூரில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தில், திப்புவின் குடும்பத்தினர் பங்குகொண்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தில் அக் குடும்பம், வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டது. உடையார் அரசகுடும்பத்தாரால் மைசூர் 1835வரை ஆளப்பட்டது. 1835-ல் பெண்டிங் பிரபுவால் மைசூர் ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டு 1881வரை அவர்களால் ஆட்சி செய்யப்பட்டது. இந்த அரை நூற்றாண்டு ஆங்கிலேய நேராட்சியால் மைசூர் பல நன்மைகளைப் பெற்றது. ரிப்பன் பிரபு மைசூரைப் பழைய அரசகுடும்பத்தினரிடமே மீண்டும் ஒப்படைத்தார். இந்திய சுதந்திரத்திற்குப்பின், இந்தியாவுடன் இணையும் வரையில் உடையார் அரசகுடும்பமே மைசூரை ஆண்டு வந்தது.

9. ஹேஸ்டிங்ஸ் பிரபு
(1813—1823)

முதலாம் மின்டோவிற்குப்பின், ஹேஸ்டிங்ஸ் பிரபு தலைமை ஆளுநரானார். அவரது இயற்பெயர் மோய்ரா பிரபு (Lord Moira) என்பதாகும். நேப்பாளப் போரில் அவர் பெற்ற வெற்றியைப் பாராட்டும் வகையில் 1817-ல் அவர் ஹேஸ்டிங்ஸ் பிரபுவாகச் சிறப்புச் செய்யப்பட்டார். தலைமை ஆளுநராக இந்தியாவிற்கு வந்தபோது, ஐம்பத்தொன்பது வயதை அடைந்தவராக இருந்தார். அமெரிக்கச் சுதந்திரப் போரிலும், ஐரோப்பியப் போரிலும் படைத் தலைவராய்ப் பணியாற்றியவர்; திறமையும் விடாமுயற்சியும் உடையவர்; மனச்சாட்சிக்குப் பயந்தவர்; மற்றவரை மதிப்பிடுவதில் வல்லவர். இவரது திறமையான ஆட்சிக்கு இதுவே மிக முக்கியக் காரணமாகும். தகுந்த ஊழியர்களைத் தம்கீழ் அமர்த்தியதால் ஆட்சி செம்மையாய் நடைபெற்றது. போர் நிருவாகத்திலும், திறமை வாய்ந்தவராகவும் முற்போக்குக் கொள்கையுடையவராகவும் விளங்கினார். பத்திரிகை உரிமையிலும், இந்தியக் கல்வி விவகாரத்திலும் முற்போக்கான கருத்தையே கடைப்பிடித்தார். பல முக்கிய நிர்வாகச் சீர்திருத்தங்கள் இவர் காலத்தில் தொடரப்பட்டன.

தலையிடாக் கொள்கையில் நம்பிக்கைகொண்டு இந்தியாவிற்கு வந்தார். ஆனால், இந்தியச் சூழ்நிலையில் அக் கொள்கையைக் கடைப்பிடித்தல் கடினம் என்ற உண்மையை உணர்ந்தார். துணைப்படைத் திட்டத்தின்கீழ்ப் பூனா, பரோடா, ஐதராபாத், அயோத்தி, மைசூர், திருவாங்கூர் ஆகியவை ஆங்கிலேயருடன் இணைக்கப்பட்டிருந்தன. மராத்தியச் சுதந்திர அரசர்களான சிந்தியா, பான்ஸ்லே, ஹோல்கார் முதலியோர் அரசுகள் ஆங்கில அரசைச் சூழ்ந்திருந்தன. சீக்கியத் தலைவர் இரஞ்சித்

சிங்கும், நேப்பாள மன்னரும் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். மராத்தியத் தலைவர்கள் தங்கள் மனப்போக்குப்படி ஆங்கிலேயரைத் தாக்கிக்கொண்டிருந்தனர். இவர்கள் சீரழிந்த இராஜபுத்திரர்களுக்குப் பலவிதத்திலும் துன்பம் கொடுத்துக்கொண்டிருந்தனர்; பேஷ்வா ஆங்கிலேயருக்கு எதிராகச் சதியில் ஈடுபட்டிருந்தார்.

பிண்டாரிகள்

நாட்டில் நிலவிய சீர்கேடான நிலையைப் பயன்படுத்திப் பிண்டாரி என்ற கூட்டத்தினர் தீயிடல், கொலை, கொள்ளையடித்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டு மக்களைத் துன்புறுத்தி வந்தனர். பிண்டாரிகள் மராத்தியருக்குத் துணைப்படையினராக இருந்துவந்தனர். அவர்களுக்குச் சாதிப்பற்ருே, சமயப்பற்ருே, தாயகப்பற்ருே, தேசியப் பெருமையோ இருந்ததாகத் தெரியவில்லை. இவைதாம் மராத்தியர்களுக்கும் பிண்டாரிகளுக்கும் இடையே காணப்பட்ட வேறுபாடாகும். மராத்தியப் பெருந்தலைவர்கள் ஆற்றல் குன்றியவர்களாக மாறியபொழுது, பிண்டாரிகளின் தலைவர்கள், தங்களுடைய பண்ணைகளையே நாடுகளாக மாற்றிக்கொண்டனர். அவர்களுடைய குறிக்கோள் கொள்ளையடிப்பதாக இருந்தது. அப்படிக் கொள்ளை அடித்தபொழுது, எத்தகைய கொடுஞ்செயல்களையும் அஞ்சாது செய்து முடித்தனர். அவர்களால் எடுத்துக்கொண்டு செல்ல முடியாத பொருள்களை எல்லாம் அழித்தொழித்தனர்; திடீரென்று தோன்றித் தாக்குதலிலும் தன்னிகரற்றவர். அவர்கள் ஓடிச் செல்லக் கூடிய வழிகளில் ஒழுங்கான படைகள் செல்ல முடியாது அல்லற்படும். மலைகளுக்கு இடையே பாதுகாவலான இடங்களில் மிகப் பரவலாக வாழ்ந்து வந்தனர். இக் கொள்ளைக் கூட்டத்தினைப் போன்ற மற்ருெரு குழுவும் அக் காலத்தில் விளங்கியது.

பட்டாணியர்கள்

அக் குழு பட்டாணியர்களுடையதாகும். அவர்களுடைய சிறப்புமிக்க தலைவன் அமீர்கான் என்பவன் ஆவான். நாட்டுப்புற மக்களுக்கு இவர்களும் பிண்டாரியரைப் போன்று பேரச்சத்தை உண்டாக்கியிருந்தனர். ஆனல், அவர்கள் பிண்டாரியரைப் போன்று இல்லாமல் ஒழுங்கான காலாட் படையும், குதிரைப்படையும், பீரங்கிப்படையும் உடையவர்களாக இருந்தனர். பிண்டாரியர் தென்னிந்தியாவைத் துன்புறுத்தியதைப் போன்று, பட்டாணியர் இராஜபுதனத்தை அல்லோல

கல்லோலப்படுத்தினர். அதனுடன் நேப்பாளமும் அடிக்கடி வடக்கே படையெடுத்து, ஆங்கிலேயருக்குப் போக்குக்காட்டி வந்தது. ஹேஸ்டிங்ஸ் பிரபு, இத் துன்பங்களை எல்லாம் சமாளித்து, வெல்லெஸ்லியின் பணியை முடித்ததுடன், ஆங்கிலப் பேரரசை மேலும் உறுதிப்படுத்தினர்.

ஹேஸ்டிங்ஸ் இந்தியாவிற்கு வந்து சேர்ந்ததும், அவருக்கு முன்பு பதவியிலிருந்தவரைப்பற்றி மேலிடத்திற்கு வருத்தத்தோடு பல குறைகளையும், குற்றங்களையும் தெரிவித்தார். மின்டோ பதவியைவிட்டு நீங்கிச் செல்லும்பொழுது ஏழு சண்டைகளை உண்டாக்கிவிட்டுச் சென்றார் என்றும், அவை ஒவ்வொன்றும், 'போரிலேயே முடிவு காணக் கூடியனவாக உள்ளன' என்றும் ஹேஸ்டிங்ஸ் முறையிட்டுக்கொண்டார். அவற்றுள் மிகக் கடுமையானதாக இருந்தது பிண்டாரியின் அச்சுறுத்தலாகும். ஆனால், அந்தப் பிரச்சினைக்கு உடனடியாக முடிவுகாண வொட்டாதவாறு ஓத்திபோடுமாறு நேப்பாளத்தில் ஒரு பிரச்சினை தோன்றியது.

நேப்பாளப் போர்

நேப்பாளத்தைச் சார்ந்த கூர்க்காக்கள், இராஜபுத்திர வகுப்பைச் சார்ந்தவர்கள். கூர்க்க வகுப்பைச் சார்ந்த பிருத்வி நாராயன் ஷா (Prithvi Narayan Shah) நேப்பாளத்தைத் தம் கீழ் 1768-ல் கொண்டு வந்தார். 1786-ல் காட்மாண்டுப் பள்ளத்தாக்கினைக் கைப்பற்றிக்கொண்டார். அவருக்குப்பின் காட்மாண்டுவை மையமாகக் கொண்டு சிறிது சிறிதாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குமோவான் (Kumaon), கார்வல் (Garhvoul), சிம்லாக் (Simla) குன்றுகள் ஆகியவற்றைக் கூர்க்காக்கள் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால், சட்லெஜ் ஆற்றுப் பகுதியில் அவர்களை முன்னேற வொட்டாமல் சீக்கிய அரசு தடுத்து நிறுத்தவே, கங்கைச் சமவெளியின் பக்கம் திருப்பினர். இதனால் ஆங்கிலேயருடன் மோதினர். வெல்லெஸ்லி அயோத்தியின் சில பகுதிகளை வணிகக் குழுவின் நாட்டுப் பகுதிகளோடு இணைத்துக் கொண்டதற்குரிய விலையை இப்பொழுது வணிகக்குழு கொடுக்க வேண்டியதாயிற்று. ஏனெனில், வணிகக் குழுவிற்கு அயோத்தியால் மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்த கொரக்பூர், பஸ்திப் பகுதிகளையே கூர்க்காக்கள் சூறையாடினர். இதனால் 1814-ல் ஹேஸ்டிங்ஸ் நேபாளத்தின்மேல் போரைத் தொடங்கினர். மற்ற இந்திய விரோதிகளைப் போலன்றி, கூர்க்காக்கள் போருக்கென்றே பிறந்தவர்கள்; ஐரோப்பியப் போர்ப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினர்; மேலும், நேப்பாள நாட்டின் அமைப்பும் படையெடுப்புக்குச் சாதகமாயில்லை;

ஆங்கிலத் தளபதிகளும் மலைப்பிரதேசப் போர்முறையில் தேர்ச்சி யின்றி இருந்தனர். இதனால் ஆங்கிலேயரின் முயற்சி பயனளிக்க வில்லை. கடைசியில் 1816-ல் ஆஸ்டர்லோனி (Ochterlony) தலைமையில், உள்ளே நுழையமுடியாத கொடுமையான தரேய்க் (Terai) காட்டு வெளியினுள் நுழைந்து, பெருந்துன்பத்திற்குப் பின் காட்மாண்டினை முற்றுகையிட்டனர். இதன் பயனாய்ச் சகௌலி (Sagauli) என்ற உடன்படிக்கையை நேப்பாளம் ஆங்கி லேயருடன் செய்துகொண்டது. இந்த உடன்படிக்கையின்படி, காட்மாண்டுவில் ஆங்கில நிலையரை (Resident) அமர்த்திக் கொள்ள நேப்பாள அரசு உட்பட்டது. குமோவான் (Kumaon), கார்வல் (Garhwal), சிம்லாக் குன்றுகளும் தெற்கு எல்லைப் பகுதியிலிருந்த தரேய்க் (Tarai) காட்டுப் பகுதியும் ஆங்கிலே யருக்குக் கொடுக்கப்பட்டன. சீறுவின் எல்லைக்கு ஆங்கில அரசின் எல்லை இதனால் பரவியது. பெண்டிங்கின் வடக்குப் பகுதிப் பயணத்தின்போது, மருத்துவர்கள் கோடை காலத்தில் அவரை ஓய்வு எடுத்துக்கொள்ளுமாறு அறிவுரை கூறினர். எனவே, அவர் அந்தக் கோடையைச் சிம்லாவிலே கழித்தார். ஆக்லண்டு பிரபு, பெண்டிங்கின் அடிச்சுவட்டைப் பின்பற்றினார். இதன் பிறகு சிம்லா தலைமை ஆளுநரின் நிரந்தரக் கோடை இருப்பிடமாக ஆயிற்று.

இருபதாம் நூற்றாண்டு வரையில் நேப்பாளத்தில் முன் னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஆங்கிலேயருடைய வலிமை எத்தகையது என்பதை உணர்ந்த கூர்க்காக்கள், ஆங்கிலேய ரிடத்துப் பணிபுரிவதே தங்களுக்குப் பொருத்தமான பணி என்று முடிவு செய்தனர். ஆங்கிலேயரின் இந்தியப் படையில் கூர்க்காக் களின் துணைப்படை, முறையான ஒரு பகுதியாக இருந்து வரலா யிற்று. சிப்பாய்க்கலகம் முதல் அப் படை எல்லாப் போர்களிலும் தனக்கென்று தனிச் சிறப்புடையதாகப் பேரும் புகழும் பெற்று விளங்கத் தொடங்கியது. ஜப்பானியர்களுக்கு எதிராகப் பர்மா வில் நடத்தப்பட்ட போரில்தான் அவர்களுடைய இராணுவ அறிவுத்திறன் வேறெந்தப் போரைக்காட்டிலும் பேரொளிவிட்டுப் பிரகாசித்தது எனலாம்.

பிண்டாரிகளின் ஒழிப்பு

மதிநுட்பம் நிறைந்த ஹேஸ்டிங்ஸ் பிண்டாரிகளை ஒழிப்பதில் இருந்த சிக்கலை நன்குணர்ந்து அதற்குரிய விரிவான திட்ட மொன்றை 1817–18ஆம் ஆண்டுகளில் தீட்டினார். பட்டானியத் தலைவன் அமீர்கான் கைப்பற்றியிருந்த நிலப்பகுதிகளை எல்லாம்

அவனுக்கே உரியதாக ஒப்படைத்து, அவனைப் பிண்டாரியருக்கு உதவி செய்ய ஒட்டாதவாறு ஹேஸ்டிங்ஸ் தடுத்து நிறுத்தினார். இதனால் மராத்தியப் போரில் அமீர்கானின் உதவியையும் ஆங்கிலேயர் பெற முடிந்தது. பேஷ்வாவையும், பான்ஸ்லேயையும் இப் போராட்டத்தில் தலையிடாமல், துணைப்படைத் திட்டத்தின்படி அங்கிருந்த ஆங்கில நிலையர்கள் (British Residents) கவனித்து வந்தனர். மெட்காப் (Metcalf) இராஜபுத்திர அரசர்களுள் பத்தொன்பது பேர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அவற்றுள் ஜெய்ப்பூர், உதயபுரி, ஜோத்பூர் ஆகியவையும் சேர்ந்திருந்தன. போபாலும் துணைப்படைத் திட்ட உடன்படிக்கை செய்துகொள்ளுவதற்கு இசைந்தது. இவ்விதமான முன்னேற்பாடுகள் யாவும் செய்துகொண்டபின் பிண்டாரியரை அவர்களுடைய இடத்திலிருந்து விரட்டுவதற்காகத் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கிப் படைகளை முன்னேறும்படி செய்தார். பலதிறப்பட்ட சக்திகளும் இம் முயற்சியில் ஈடுபட்டதால் ஆங்கிலேயரின் ஆட்சிப் பகுதியிலிருந்து பிண்டாரியர் தப்பியோடி மறைந்துகொள்ள இயலாது போயிற்று. ஆனால், எதிர்பார்த்தபடியே பிண்டாரியரை ஒழிக்கும் திட்டம் மராத்தியருடனும் மோதும்படியாகியது. மூன்றும் மராத்தியப் போருடன் பிண்டாரி ஒழிப்புப் பிரச்சினையும் இணைக்கப்பட்டது. இதனால் பிண்டாரியரை ஒழிப்பதில் காலதாமதமானது. பிண்டாரியரின் தலைவர்களுள் அஞ்சா நெஞ்சம் படைத்த சித்து (Chithu) ஆங்கிலேயரின் தாக்குதலை எதிர்த்துப் போரிட முடியாமல் காட்டிற்கு ஓடிய பொழுது, அங்குப் புலியினால் தாக்கப்பட்டு இறந்தான். பிண்டாரியர் 1819ஆம் ஆண்டிற்குள் முழுமையாக ஒழிக்கப்பட்டனர். ஆகவே, பிண்டாரியரின் தொல்லைகளை இந்தியாவிலிருந்து ஒழித்த பெருமை, ஹேஸ்டிங்ஸ் பிரபுவையே சாரும்.

மூன்றும் மராத்தியப் போர்

ஹேஸ்டிங்ஸின் மூன்றும் மராத்தியப் போர் வரலாற்றில் சிறப்புப் பெற்றதாகும். இப் போரினைப்பற்றிய செய்திகள் மராத்தியப் போர் என்னும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. இவ் வெற்றிக்குப்பின் ஆங்கிலேயருக்கு மேற்கே சீக்கிய அரசையும், வடகிழக்கில் பர்மாவையும் தவிர வேறெந்தப் பகுதியிலிருந்தும் இன்னல் ஏற்பட வாய்ப்பின்றிப் போயிற்று. மராத்தியரிடமிருந்து பெற்ற பகுதிகளைக் கொண்டு, பம்பாய் மாநிலம் ஏற்படக் காரணமாயிருந்தவர் ஹேஸ்டிங்ஸே யாவார்.

மராத்திய மாபெரும் வெற்றியுடன், சில சிறிய வெற்றிகளையும் இவர் அடைந்தார். கொங்கணக் கடல் பகுதி, செங்கடல்,

பாரசீக விரிகுடா இவற்றைச் சூழ்ந்திருந்த கடற்கொள்ளைக் கூட்டத்தினரை ஒடுக்கி வாணிகம் தொல்லையின்றி நடைபெற வழி செய்தார். இதனால் கிழக்கிந்திய வாணிகம், டச்சுக்காரரிடமிருந்து ஆங்கிலேயருக்கு மாறியது.

சர் ஜார்ஜ் பார்லோ ஆட்சியில் முகலாயமன்னர் இரண்டாம் ஷா ஆலம் (Shah Alam II) காலமானவுடன், இரண்டாம் அக்பர் (Akbar II) என்னும் அவர் மகன் மன்னரானார். அவர் கர்வம், பேராசை உடையவர்; திறமையற்றவருமாவார்; முகலாய மன்னரே இந்தியாவின் மன்னர் என்று வணிகக்குழு தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு, அதற்காக ஆண்டுதோறும் திறைப் பொருள் செலுத்திவருகிறது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார். இதனால் சீற்றமடைந்த ஹேஸ்டிங்ஸ், முகலாய மன்னருக்குத் திறைப்பொருள் செலுத்தும் பழக்கத்தை நிறுத்தினார். அயோத்தியின் நவாபு என்பதை மாற்றி, அயோத்தியின் மன்னர் என்ற பட்டம் சூட்டிக்கொள்ளுமாறு தூண்டினார்.

உள்நாட்டு ஆட்சிமுறை

உள்நாட்டு ஆட்சிமுறையிலும் ஹேஸ்டிங்ஸ் பல நல்ல மாற்றங்களைச் செய்தார். 'நாடு முன்னேற்றப் பாதையில் முதல் அடியெடுத்து வைக்குமாறு செய்த பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரியவர் நம்முடைய ஹேஸ்டிங்ஸ் பிரபு என்று சொன்னால் அது மிகையாகாது' என்று V. A. ஸ்மித் கூறுகிறார். பேராற்றலும், பெருந்திறனும் வாய்க்கப்பெற்ற எல்ஃபின்ஸ்டன், மால்கோம், மெட்காப், மன்றோ போன்றோரை அதிகாரிகளாகப் பெற்றிருந்ததால், ஆட்சிமுறையில் பல நல்ல மாற்றங்களை இவரால் செய்ய முடிந்தது. ஹேஸ்டிங்ஸின் உள்நாட்டுச் சீர்திருத்தங்களுக்கு உறுதுணையாயிருந்த இவர்களைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளல் அவசியமாகும்.

சர் தாமஸ் மன்றோ (Sir Thomas Munro)

சர் தாமஸ் மன்றோ 1761-ல் ஸ்காட்லாந்தைச் சார்ந்த வாணிகருக்கு மகனாய்ப் பிறந்தவர். வணிகக் குழுவின் படையில் சேர்ந்து 1780ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார். மூன்றும் மைசூர்ப் போருக்குப்பின் படைத்துறையிலிருந்து ஆட்சித் துறைக்கு மாறினார். பல மாவட்டங்களுக்கு ஆட்சித்தலைவராக இருந்து பேரும் புகழும் பெற்றபின், சென்னையின் ஆளுநராகப் (1820—27) பணிபுரிந்தார். கடும் உழைப்பிற்கும், நேர்மைக்கும், மக்கள்பால் கொண்ட அன்பிற்கும் அவர் ஆட்சி பெயர்போனது.

ஆளுநராயிருக்கையில் 1827-ல் காலமானர். மக்களுக்குத் தொண்டு புரிவதே பணியின் பயன் என்ற கருத்தை அவர் கடைப்பிடித்தார். கர் நூல் போன்ற பகுதியில் இன்றும் அவரைப் போற்றுகின்றனர். இந்தியருக்கு நல்ல ஆட்சி மட்டுமன்றி, சுய ஆட்சியும் அளிப்பதே ஆங்கிலேயரின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதைத் தெள்ளத் தெளிவாய் 1824ஆம் ஆண்டே அறிவித்தார். மதக்கோட்பாட்டில் தலையிடாக் கொள்கையைக் கைக்கொள்ள வேண்டுமென்ருர். இரயத்வாரி (Ryotwari) முறையைச் சென்னையில் முதலில் செயல்படுத்திஞர். இம் முறைப் படி நேர் குடிவார முறையின்படி (Ryotwari system) ஜமீன் தார்கள் அல்லது பம்பாய் மாநிலத்தில் இருந்ததைப் போலக் கிராமச் சமூகப் பிரதிநிதிகள் போன்ற இடையீட்டாளர்களின் உதவியின்றிக் குடியானவரே நேரடியாக நிலவரியைச் செலுத் தினர். பள்ளிகளை நிறுவி, கல்வி பரப்ப வழி வகுத்தார்.

மவுண்ட் ஸ்டுவர்ட் எல்ஃபின்ஸ்டன் (Maunt Stuart Elphinstone)

மவுன்ட் ஸ்டுவர்ட் எல்ஃபின்ஸ்டன் (1779—1839) வங்காள ஆட்சித்துறையில் 1795-ல் சேர்ந்தார். 1804-ல் நாகபுரியின் துணைக்காப்பரசின் ஆளுநராஞர். ஆஃப்கானிய அரசர் ஷா ஷுஜாவிடம் சென்ற தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கியவர்; ஆஃப்கானிஸ்தானைப்பற்றித் தாம் எழுதிய நூலுக்கு, இத்தருணத் திலேயே ஆதாரங்களைச் சேகரித்தவர்; பிறகு பூனவிலும் ஆளுந ராய் இருந்து, பம்பாயின் ஆளுநராக 1819ஆம் ஆண்டு முதல் 1827 வரை இருந்தவர்; மன்ரேவைப்போல் இந்தியர்பால் அன்பும், அனுதாபமும், மதிப்பும் கொண்டவர். கிராமக் கூட்டாட்சியும், கல்வியும் பரவ வழி செய்தவர்; தம் ஓய்வுக் காலத்தை இந்திய வரலாறு எழுதுவதில் செலவிட்டவர்.

சர் ஜான் மால்கோம் (Sir John Malcolm)

சர் ஜான் மால்கோம் (1769—1833) சென்னைப் படையில் சேர்ந்து, நான்காம் மைசூர்ப்போரில் பங்கு கொண்டார்; பாரசீக மன்னருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள அனுப்பிய தூதர் குழுவின் தலைவராய்ச் சென்ருர்; எல்ஃபின்ஸ்டனுக்குப் பிறகு பம்பாயின் ஆளுநராய் 1827ஆம் ஆண்டு முதல் 1830ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார்; மன்ரேவைப் போன்றே இவரும் மக்களின்பால் அன்பும் ஆதரவும் கொண்டார். சிறந்த கல்வி மான்; பல வரலாற்றுப் புத்தகங்களின் ஆசிரியர்.

சர் சார்லஸ் மெட்காப் (Sir Charles Metcalf)

சர் சார்லஸ் மெட்காப் (1785—1846) கல்கத்தாவில் பிறந்து, வெல்லெஸ்லி பிரபுவின்கீழ்த் தம் அரசியல் வாழ்வைத் தொடங்கியவர்; இரஞ்சித் சிங்குடன் ஒப்பந்தம் செய்துகொண்ட தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கினர்; ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில் பிண்டாரியரை ஒழிப்பதற்காக இராஜபுத்திரத் தலைவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார்; பென்டிங்க் பிரபு காலத்தில் ஆலோசனைக் குழுவின் அங்கத்தினராய்ப் பணிபுரிந்தார்; பென்டிங்கின் முற்போக்குக் கொள்கைக்கு ஆதரவு அளித்தார்; வடமேற்கு மாநிலத்திற்கு 1834ஆம் ஆண்டு ஆளுநராக் கப்பட்டார். பென்டிங்கிற்குப் பிறகு, தலைமை ஆளுநராய்ப் பதவியேற்றார்; இந்தியப் பத்திரிகையின் உரிமையைப் பாதித்த கட்டுப்பாட்டை நீக்கினர். இதனல் இயக்குநர்கள் இவரை எதிர்த்ததன் விளைவால், பதவியை விட்டு விலகினர். இவ்வாறு, பின்பு பெரும் புகழும், பெரும் பதவிகளும் வகித்த ஆட்சி வல்லுநர்கள் ஹேஸ்டிங்ஸின் சிறப்பான ஆட்சிக்கு உறுதுணையாக இருந்ததால் உள்ளாட்சித் துறையில் பல மாற்றங்களை ஹேஸ்டிங்ஸால் செய்யமுடிந்தது.

நிருவாக நீதித்துறைச் சீர்திருத்தங்கள்

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ,நாட்டிலே உண்டான குழப்பங்களால் பாழடைந்தும் தூர்ந்தும் போயிருந்த பழைய நீர்ப்பாசனக் கால்வாய்களைப் பழுதுபார்க்கக் கட்டளைகள் பிறப்பித்தார்; சாலைகளைப் பழுதுபார்த்துப் புதுப்பித்தார். அதனல் நாட்டுப்புறப் பகுதிகளுக்குப் பாதுகாப்பு உண்டானதோடு, படைத்துறைப் பயன் மதிப்புடையனவாகவும் அச் சாலைகள் சிறப்புற்று விளங்கத் தொடங்கின. வங்காளத்தில் கல்வி வளர்ச்சிக்கு ஆதரவு தந்தார்; ஆங்கிலப் பள்ளிகளுக்குத் தனிப்பட்ட முறையில் தம்மால் இயன்ற உதவிகளை எல்லாம் செய்துவந்தார்; மேலும், கல்கத்தாவில் புதிதாக நிறுவப்பட்ட இந்துக் கல்லூரியின் புரவலராகவும் (Patron) அவர் விளங்கினர்.

நிர்வாகத் துறையும், நீதித்துறையும் தனித்தனியே இயங்கி வந்த நிலையினைப் போக்கி மாவட்ட ஆட்சித்துறைத் தலைவரின் அலுவலகத்தையும், மாவட்டக் குற்ற விசாரணை முறைவர் (Magistrate) அலுவலகத்தையும் ஒன்ருக இணைத்தார். காரன்வாலிஸ் இவ் விரு துறைகளையும் பிரித்தார். ஆனல், ஹேஸ்டிங்ஸ் பிரபு இவ் விரண்டையும் இணைத்தார். மேலும், காரன்வாலிஸ் போன்று, ஹேஸ்டிங்ஸ் பிரபு இந்தியரின் திறமையைத் தட்டிக்

கழிக்கவில்லை. படிப்படியாக இந்தியர்கள் உயர்ந்த பதவியில் அமர ஊக்கமளித்தார். இவ்வாறு நிர்வாகம், நீதித்துறை இரண்டிலும் காரன்வாலிஸிற்கு நேர் எதிரான மாற்றங்களைச் செய்தார். நீதித்துறையில் பணியாற்றிவந்த இந்தியத் துணை அதிகாரிகளின் பதவிகளை உயர்த்தினர். இதனால், இவர் எல்லாத் துறைகளிலும் இந்தியருக்குப் பணிபுரியும் வாய்ப்பை ஏற்படுத்தினர் எனலாம். காரன்வாலிஸ் காலத்தில் ஏற்படுத்திய தரோகா முறையை நீக்கினர். புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் நிலத்தீர்வை நிர்ணயம் செய்யப்பட்டது. சென்னை போன்ற தெற்குப் பகுதிகளில், 1813ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டயச் சட்டத்தின்படி (Charter Act) நிலத்தீர்வை நிர்ணயம் செய்வதில் நேர் குடிவாரமுறையைச் (Ryotwari system) செயற்படுத்தினர். இந்தியப் பத்திரிகையின்பால் இருந்த கட்டுப்பாட்டை நீக்கிய பெருமையும் இவரைச் சாரும். நாட்டு மொழிப் (vernacular) பத்திரிகைக்குக் கருத்து வெளியீட்டு உரிமையில் வெல்லெஸ்லி விதித்திருந்த தணிக்கையை 1817-ல் நீக்கினர். இதனால் முதன் முதலாக நாட்டு மொழிச் செய்தித்தாள் (சமாசார் தர்பன்) இவரது பதவிக் காலத்தில் தொடங்கப்பட்டது.

மதிப்பீடு

சிறப்புமிக்க தலைமைப் பதவிக்கு உரிய சிறந்த பண்பாகிய நெகிழ்ச்சி உள்ளமும், இணங்கிப் போகும் மனப்பண்பும் ஹேஸ்டிங்ஸ் பெற்றிருந்தார். இவ்விரு பண்புகள், இவருடைய ஏற்பாடுகள், செயல்முறைகள் அனைத்திலும் வெளிப்பட்டதைக் காணுகின்றோம். அவர் நேபாளத்தினை நடத்திய முறையும், மராத்தியர்களையும், இராஜபுத்திரர்களையும் நடத்திய முறையும் அவர் நாட்டினைக் கைப்பற்ற வேண்டும் என்ற மண்ணாசை பிடித்த வெறியரல்லர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. ஆங்கில ஆதிக்கத்தை நிலைபெறுமாறு செய்வதற்காக அவர் கடைப்பிடித்த பொதுத்துறை நீதியும் சமரச உடன்பாடும் மிகுந்த பயனும், மதிப்பும் உடையனவாகும். இவ் வரிய பண்பே, இந்தியருடைய உள்ளங்களில் ஆழப் பதிந்துபோயிருந்த வெல்லெஸ்லியின் வன்முறையில் கைப்பற்றும் சூழ்ச்சியும், அச்சுறுத்தி அடக்கியாளும் கொள்கையும் உண்டாக்கிய வடுக்களை மறையச் செய்ததோடு, ஆங்கிலேயர் பால் நல்லெண்ணத்தையும் அவர்களுடைய நீதிமுறையில் நம்பிக்கையையும் வளர்த்து உறுதிப்படுமாறு செய்தது எனலாம்,

ஆமர்ஸ்ட் பிரபு
(Lord Amherst, 1823-1828)

ஹேஸ்டிங்ஸ் பிரபுக்குப் பின் ஏழு மாத காலம் ஜான் ஆடம் (John Adam) என்பவர் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஷோரைப் போலவே, ஜான் ஆடமும் தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் முதன்மையான அங்கத்தினராயிருந்த காரணத்தால், தாற்காலிகத் தலைமை ஆளுநராகப் பொறுப் பேற்றார். சுயேச்சையாக எந்த முடிவும் எடுக்கும் இயல் பற்ற குறை இவரிடமும் குடிகொண்டிருந்தது. இவர் காலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி, பத்திரிகைகளின் உரிமையைப் பறிக்கும் சட்டமொன்று இயற்றப்பட்டதே ஆகும். இச் சட்டப் படி அனுமதியின்றிப் பத்திரிகைத் தொழில் நடத்தக் கூடா தென்றும், குறிப்பிட்ட சட்ட திட்டங்களுக்குட்பட்டே செய்திகளை வெளியிட வேண்டும் என்றும் தடைவிதித்தார். 1823ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆமர்ஸ்ட் இந்தியாவிற்கு வந்து தலைமைப் பதவியேற்றார். அவருடைய நாலரை ஆண்டு ஆட்சிக் காலத்தில் முதன்மையும், முக்கியத்துவமும் பெற்றிருந்தது போரேயாகும்.

முதல் பர்மியப் போர் (1824—1826)

பர்மாவின் கிழக்குக்கரை யோரமாக ஆங்கில ஆட்சியின் எல்லை பரவியிருந்தது. 1735-ல் அலம்பாரா என்பவர் ஆவாவில் ஓர் ஆட்சியை ஏற்படுத்த, 1787-க்குள் ஆரகான் நாட்டைச் சுற்றியுள்ள பல பகுதிகளைச் சேர்த்துக்கொண்டு அவ் வாட்சி ஒரு பெரிய ஆட்சியாக விளங்கத் தொடங்கியது. ஆரகானில் வசித்த மக்கள் ஆங்கிலேயரைச் சரண் அடைந் தார்கள். ஆவா அரசினர், ஆரகான் மக்களுக்கு ஆங்கிலேயர் அடைக்கலம் கொடுத்ததற்காக ஆங்கிலேயருக்கு உரிமையான ஷாஜ்பூர்த் தீவு, சிட்டகாங், அஸ்ஸாம் ஆகியவற்றையெல்லாம் 1822-க்குள் கைப்பற்றினர். பர்மியர்களின் அரசர் தம் படைத் தலைவர் மகாபந்துலா என்பவரை, ஆங்கிலத் தலைமை ஆளுநரைத் தோற்கடித்துக், கைதுசெய்து தங்கச் சங்கிலியால் பிணைத்துத் தம் தலைநகரான ஆவாவுக்குக் கட்டியிழுத்து வருமாறு ஆணையிட்டார். எனவே, ஆமர்ஸ்ட் பிரபு பர்மாமீது கடல்வழியாகப் படை எடுக்கத் தீர்மானித்தார். பர்மாவினை நில மார்க்கமாய் அணுக எடுத்த முயற்சியால் பேரிழப்பும் பெருஞ் செலவும் உண்டாயிற்றே தவிர பெருமையோ, மதிப்போ கிடைக்கவில்லை. தொடக்கத்தில் பர்மியர் வெற்றியடைந்த

போதிலும் பிறகு நிலைமை தலைகீழாக மாறியது. அதற்குக் காரணம் கடல்வழியாகச் சர் ஆர்ச்பால்ட் கேம்ப்பெல்லின்கீழ் (Sir Archibald Campell) அனுப்பிய இந்தியர் படை இரங்கூனைத் தாக்கிக் கைப்பற்றியதே ஆகும். சென்னை ஆளுநராயிருந்த சர் தாமஸ் மன்ரோ தக்க உதவி செய்யாதிருந்தால், இப் படையெடுப்புப் பெரும் தோல்வியில் முடிந்திருக்குமென்று வின்சென்ட் ஸ்மித் கருதுகின்றார். முடிவில் யாண்டபூ (Yanda boo) உடன்படிக்கையின்படி முதலாம் பர்மியப் போர் 1826-ல் முடிவடைந்தது. அதன்படி கீழ்ப் பர்மாவின் பெரும்பகுதி ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இதனால் தேக்குப் போன்ற பொருள்கள் இந்தியாவுக்குக் கிடைக்க ஏது வாயிற்று. போரின் இழப்பீடாக ஒரு கோடி ரூபாயும் ஆங்கிலேயர் பெற்றனர். நேபாளப் போரால் வடக்கு எல்லைப் பகுதியைக் காத்ததைப் போல், முதல் பர்மியப் போர் கிழக்கிந்திய எல்லையில் பாதுகாப்பு அளித்தது. ஆங்கில நிலையர் (Resident) ஒருவரைப் பர்மியத் தலைநகரான ஆவாவில் (Ava) வைத்துக் கொள்ளவும் இது வாய்ப்பு அளித்தது. இத் தோல்வியால் பர்மியர் கலக்க மடையவில்லை; தொடர்ந்து தொல்லைகளைக் கொடுத்துக்கொண்டே இருந்தனர். பர்மியப் போரின் முதல் கட்டத்தில் அடைந்த தோல்வி இந்தியாவில் அமைதியின்மையை உண்டாக்கியது. பரத்பூரில் (Bharatpur) பூசலும் எதிர்ப்பும் ஏற்பட்டன.

பரத்பூர்ப் பூசல்

பரத்பூர் அரியணையில் பல்வந்த் சிங் என்ற சிறுவனை, ஆமர்ஸ்ட் அமர்த்தினார். இதனை எதிர்த்து அச் சிறுவனின் உறவினர் துர்ஜன்சால் கலகம் செய்ததுடன், அரியணையையும் பலவந்தமாகக் கைப்பற்றிக் கொண்டார். ஆமர்ஸ்ட் பல்வந்த் சிங்கிற்கு ஆதரவாக ஒரு படையை அனுப்பினார். அப் படை பரத்பூரின் கோட்டையைத் தகர்த்துக் கலகத்தை ஒடுக்கியது. அசைக்க முடியாதென்று கருதிவந்த பரத்பூர் கோட்டையும் தகர்க்கப்பட்டுத் துர்ஜன்சாலும் சிறைப்படுத்தப்பட்டார். பல்வந்த் சிங் மறுபடியும் அரியணையில் அமர்த்தப்பட்டார். ஆங்கிலேயரின் படை வலிமைக்கு இருந்த பெருமையும், புகழும் பர்மியத் தோல்வியால் இழக்கப்பட்டதை, பரத்பூரிலடைந்த வெற்றி மறுபடியும் இந்தியா முழுவதிலும் சுடர்விட்டு பிரகாசிக்கச் செய்தது. 1828ஆம் ஆண்டு ஆமர்ஸ்ட் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். இவருக்குப் பின் வில்லியம் பென்டிங்க் பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராக அமர்த்தப்பட்டார்.

10. மராத்தியர்களின் பிற்கால வரலாறு

பேஷ்வாக்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்

முன்னுரை

சிவாஜியினால் உருவாக்கப்பட்ட மராத்தியப் பேரரசில் அவருக்குப்பின் திறமையாக ஆட்சி செலுத்தக் கூடியவர்கள் இல்லாமல் போயினர். வாரிசுப் போர்களும், பூசல்களும் மராத்தியர்களிடையே தோன்றின. சிவாஜியின் வாரிசுகளான சாம்பாஜி, இராஜாராம், சாகு ஆகியோர் அரசியலில் தேர்ந்த பயிற்சி பெறவில்லை. அரசர்கள் திறமையற்றவர்களாக இருந்த போது நாட்டின் பொறுப்பைப் பேஷ்வாக்கள் தாமே ஏற்று அரசை நடத்தினர். இதனால் அரசர்களின் பெயர் மங்கி பேஷ்வாக்களின் ஆட்சியே சிறப்புடையதாக மக்களால் கருதப் பட்டது. பாலாஜி விசுவநாத் மராத்தியர்களின் சிறப்பான எழுச்சியுற்ற முதல் பேஷ்வாவாகத் திகழ்ந்தார். எனவே 'பேஷ் வாக்களின் ஆதிக்கப் பெருக்கின் தந்தை' என்று பாலாஜி விசுவநாத்தை அழைக்கின்றனர்.

பேஷ்வாக்கள் (Peshwas)

பாலாஜி விசுவநாத் (1714-1720)

பாலாஜி விசுவநாத் என்பவரை 1714ஆம் ஆண்டு மராத்தியப் பேரரசர் சாஹு தமது பேஷ்வாவாக (முதல் அமைச்சராக) அமர்த்தினார். அவரிடம் தம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார். பாலாஜி விசுவநாத் ஓர் எளிய மராத்தியப் பிராமணக் குடும்பத்தைச் சார்ந்தவர். பாலாஜி விசுவநாத ராவ் தொடக்கத்தில் எழுத்தராகவும், பின்னர் வரித்துறை அலுவலரா கவும் பணியாற்றினார். தானாஜி ஜாதவ் என்னும் படைத் தலைவரின்கீழ்ப் பணியாற்றிப் பல வீரச் செயல்களி லீடுபட்டார்.

தாராபாய்க்கும், சாகுவிற்கும் இடையே ஏற்பட்ட போரில் சாகுவின் பக்கம் இருந்த இவர் 1708-ல் கலகக்காரர்களால் சிறைப்பிடிக்கப்பட்டார். சாகு பெரும் பொருள் கொடுத்து அவரை மீட்டார். தாஞஜி ஜாதவ் இறந்த பின்னர் அவர் மகன் தாராபாயுடன் சேர்ந்துகொண்டார். பாலாஜி தமது திறமையால் அவரை வென்று சாகு அரியணை ஏறத் துணை புரிந்தார். கி. பி. 1713-ல் சாகு இவரைத் தமக்குப் பேஷ்வாவாக ஆக்கிக்கொண்டார். பேஷ்வாவாகப் பதவியேற்ற அடுத்த ஆண்டிலேயே, தாராபாயின் கடற்படைத் தலைவர் கானோஜி ஆங்கிரேயுடன் மோதி, அவரைச் சாகுவின் கட்சியில் சேர்த்துச் சாகுவின் கப்பற்படைத் தலைவராக்கினார். கானோஜியின் வருகையால் கடற்படை வலிமை பெற்றது. சிறந்த கடற்படையினைக் கொண்டு ஆங்கிலேயர்கூட நான்குமுறை அவரிடம் தோற்றனர்.

சாகு சிவாஜியின் மரபில் வந்தவராயினும் முகலாயரிடம் பற்றும் நன்றிஉணர்வும் வைத்திருந்தார். இதற்குக் காரணம் இளமைக் காலத்தில் முகலாயரின் பாதுகாப்பில் அவர் இருந்ததே. சாகு விடுதலை செய்யப்பட்ட பிறகு காந்தேஷ், பேரார், அவுரங்கபாத், பீடார், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய தென்னிந்திய சுபாக்களில் சௌத்தும் சர்தேஷ்முகியும் வசூலிக்கும் உரிமையை ஆஸம் என்ற முகலாய அரசரிடம் பெற்றார். ஆனால், டெல்லியில் நடைபெற்ற அரசுரிமைப் போரில் ஆஸம் பகதூர் ஷாவிடம் தோற்றுவிடப் பகதூர்ஷா அவ்வுரிமைகளை நிறுத்திவிட்டார். டில்லியில் பகதூர் ஷாவின் மறைவிற்குப் பின்னும் அரசுரிமைப் போர் ஏற்பட்டது. சையது சகோதரர்களின் உதவியோடு ஃபரூக்சியர் பேரரசரானார். ஃபரூக்சியர் சையது அலியைத் தென்னிந்திய அரசு நிகராளராக அமர்த்தினர். சையது அலி 1719-ல் சாகுவுடன் ஓர் உடன்படிக்கையினைச் செய்துகொண்டார். இதன்படி,

1. முகலாயப் பேரரசர் மராத்தியர்களின் சுயராச்சிய நாடுகளையும், அரண்களையும் திருப்பித் தரவேண்டும்.

2. காந்தேஷ், பீரார், கோண்டுவானா, ஐதராபாத், கருநாடகம் போன்ற இடங்களில் வென்ற பகுதிகளைச் சாகுவிடம் அளிக்க வேண்டும்.

தென்னிந்தியாவிலிருந்த முகலாயர்களின் ஆறு சுபாக்களிலும் சௌத், சர்தேஷ்முகி ஆகியவற்றைப் பெறும்

மராத்தியப் பேரசு
காபூல்
ஆப்கானியர்
பெஷாவர்
காண்டஹார்
லாகூர்
முல்தான்
பாணிப்பட்டு
டில்லி
ஆக்ரா
அயோத்தி
மராத்தியப் பேரரசு
குவாலியர்
சிந்தியா
அலகாபாத்
காசி
மூர்ஷிதாபாத்
சந்திரநாகூர்
ஹூக்ளி
கல்கத்தா
ஹோல்கார்
போபால்
கேக்வார்
இந்தூர்
குசராத்
பரோடா
தார்
பான்ஸ்லே
நாகபுரி
சூரத்
ஒரிஸ்ஸா
கட்டாக்
பீஷ்வா
பம்பாய்
பூனா
கொலாபா
ஜஞ்சீரா
புரந்தர்
நிஜாம் இராச்சியம்
வடசர்க்கார்
சுவர்ணதுர்க்
சதாரா
ஐதராபாத்
விஜயதுர்க்
பீஜபூர்
கர்நூல்
கோவா
கடப்பை
பெங்களூர்
சென்னை
மங்களூர்
மைசூர்
மாஹி
புதுச்சேரி
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்
கொச்சி
மதுரை
தஞ்சாவூர்
திருவாங்கூர்
இலங்கை
இந்து மகா சமுத்திரம்
வ

உரிமையினை முகலாயர்கள் சாகுவிற்குக் கொடுத்தனர். சாகு சௌத் வரியைப் பெற்றுக்கொண்டு, மராத்தியப் படையினரைப் பேரரசரின் பணிக்கெனத் தனியே பிரித்துத் தாமே பாது காத்துத் தயாராக வைக்கவேண்டும். ஆறு சுபாக்களில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்புச் சாகுவிடம் விடப்பட்டது.

4. கோலாப்பூரிலுள்ள சாம்பாஜியைச் சாகு அழிக்க முற் படக் கூடாது.

5. பேரரசர் தம் பாதுகாப்பிலுள்ள சாகுவின் அன்னை, சாகுவின் துணைவி, இளைய சகோதரர், மற்றும் பல அரச குடும் பத்தினர் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

ஆனால், இவ் வுடன்படிக்கையைப் பேரரசர் ஏற்றுக்கொள்ள வில்லை. டில்லியில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு 15,000 மராத்தியப் படை பாலாஜி விசுவ நாத், தாபதேவ் ஆகியோருடன் டெல்லி நோக்கிச் சென்றது. பரூக்சையர் நீக்கப்பட்டு ரபி-உத்-தாஜத் என்பவர் பேரரசராக்கப் பட்டார். மராத்தியர்களை விடுதலை செய்து வெற்றியோடு பாலாஜி டெல்லியிலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்தார்.

இவரது அடுத்த பெரும் பணி மராத்தியரை ஒன்றுதிரட்டி, ஒரு மராத்தியக் கூட்டரசு அமைத்ததாகும். இம் முறைப்படி மராத்தியத் தலைவர்களைப் பல இடங்களில் ஆதிக்கம் செலுத்த அனுமதித்து, அவ் விடங்களில் சௌத் வசூலிக்கும் உரி மையையும் வழங்கினார். இதில் ஒரு பகுதியை அவர்களே வைத்துக்கொண்டு மீதியை மராத்திய அரசுக்குச் செலுத்தினால் போதும் என்றும் உரிமை வழங்கினார். இதனால் மராத்திய ஆதிக்கம் பல இடங்களில் பரவியதுடன், மராத்திய அரசுக்கு வருவாயும் பெருகியது. இம் முறை பொதுவான நலத்திற்குக் கேடு வராத வண்ணம் கூட்டிணைப்புத் தலைவர்கள் அனைவரும் ஒத்துழைத்த வரையில் கூட்டிணைவுக் கோட்பாடு நன்கு செயல் பட்டது. ஆனால், தலைவர்கள் பொதுநலன் கருதாமையால் அவர் களுக்குள்ளேயே பிளவு ஏற்பட்டது. இதுவே மராத்தியரின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கியக் காரணமாய் விளங்கிற்று. பாலாஜி விஸ்வநாத் 1720ஆம் ஆண்டு காலமானார். இவர் மறைவிற்கு முன்பே பேஷ்வா நிலையையும், அதன் அதிகாரத்தையும் நிலை யானதாக்கிவிட்டார்.

மராத்தியர் வரலாற்றில் முதல் பேஷ்வா பாலாஜியாவார்; நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார். தாம் பெற்றிருந்த சிறந்த

அரசியல் சுதந்திரத்தையும், பேராற்றலையும் பொருளாதார அறிவையும் மராத்தியரின் முன்னேற்றத்திற்கே பயன்படுத்தினர். பாலாஜியின் பணிகளில் சிறப்பு மிக்கவை தென்னிந்திய சுபாக்களில் அரசுக்கு வருவாய் தேடித் தந்ததும், அரச குடும்பத்தை முகலாயரின் பிடியிலிருந்து விடுவித்ததும், மராத்தியக் கூட்டரசை ஏற்படுத்தியதுமே ஆகும்.

'முகமதியரின் கல்லறைகளின்மேல் இந்துப் பேரரசை எழுப்பி அது தம் குடும்பத்தின் உடைமையாக மாறும்படி பாலாஜி செய்துவிட்டு மறைந்தார்' என்று சர் ரிச்சர்டு டெம்பில் உரைக்கிறார். அவருக்குப் பின்னர் எந்தப் பேஷ்வாவும் அவரைப் போல வைதிகப் பிராமணராய் இருக்கவில்லை. அமைதியான மனமும், தேவையான அதிகார நுண்ணறிவும், கற்பனைத் திறனும் பெற்றிருந்த அவர் ஒழுக்கத்தின் அடிப்படையிலேயே செயல்பட்டார். தமக்குச் சாவு வந்தாலும், அந்தச் சாவு நாட்டின் நன்மைக் கென்றால் அதை மனமுவந்து ஏற்கச் சித்தமாயிருந்தார். சிவாஜிக்குப் பின் இரண்டாம் மராத்தியப் பேரரசை ஏற்படுத்தியவர் என்று பாலாஜியைக் கூறலாம்.

முதலாம் பாஜி ராவ் (1720—1740)

அவருக்குப் பின் அவர் மகன் பாஜிராவையே பேஷ்வாவாகச் சாகு அமர்த்தினர். பாஜிராவ் பேஷ்வாப் பதவியினை ஏற்ற போது, 22 வயதே நிரம்பிய இளைஞராக இருந்தார். பாலாஜி விஸ்வநாத் ஆட்சி புரிவதில் வல்லுநர். ஆனால், அவர் மகன் பாஜிராவ் ஆட்சி, போர் ஆகிய இரண்டிலும் வலிமை பெற்றவர்; சிறந்த பேச்சாளர். ஆகவே, மராத்தியப் பேரரசின் மறுமலர்ச்சிக்கு அடிகோலியவர் இவரேயாவார். இவர் வயதில் இளைஞராயிருந்ததால் முதியோர் பலர் இவரைப் பேஷ்வாப் பதவியிலமர்த்துவதை எதிர்த்தனர். ஆனால், இவர் ஆற்றலில் அசையா நம்பிக்கை வைத்திருந்த பேரரசர் சாகு, பலரின் எதிர்ப்புக்கிடையே பேஷ்வாப் பதவியை இவருக்கு அளித்தார். சாகுவின் நம்பிக்கை வீண்போகவில்லை.

இவர் பேஷ்வாப் பதவி ஏற்றதும் சீரழிந்து கொண்டிருக்கும் முகலாய மன்னரை வீழ்த்தவேண்டுமென்றார். அவையிலிருந்த முதியோர், தென்னிந்தியா கருநாடகத்தைத் தாக்க வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தனர். முகலாய மன்னரை வீழ்த்துவதன்மூலம் மற்ற இந்தியச் சிற்றரசுகள் தாமே வீழ்ந்துவிடும் என்பதைத் தம் சொல்வன்மையால் 'இந்துக்களின் நாட்டி

லிருந்து அந்நியரை விரட்டி அழியாப் புகழ் பெற இதுதான் நல்ல சமயம்; பட்டுக்கொண்டிருக்கும் மரத்தின் அடிப்பகுதியைத் தாக்கினால் கிளைகள் தாமே விழுந்துவிடும். நம்முடைய வலிமையை நாட்டின் பக்கம் திருப்புவோம். மராத்தியக் கொடி கிருஷ்ணா ஆற்றிலிருந்து அட்டாக் வரை பறக்கும்' என்றார். இவரது கொள்கைக்குச் சாகுவின் ஒப்புதலைப் பெற்றார். சாகு 'அம் மரத்தை இமயமலைக்கும் அப்பால் கொண்டுபோய் நடு. நீ தகுதியுள்ள தந்தைக்குப் பிறந்த தகைமைசால் தனயன் என்பதை மெய்ப்பித்து விட்டாய்' என்றார். பேஷ்வாக் களிலேயே மிகச் சிறந்தவர் இவரேயாவார். இவர் வட இந்தி யாவின் அரசியல் விவகாரங்களில் தலையிடத் தொடங்கினார். 'சௌத்' என்ற வரி, பாலாஜி விஸ்வநாதர் காலத்தில் தென் னிந்தியாவிலிருந்த ஆறு மாநிலங்களில்மட்டும் வசூலிக்கப் பட்டது. ஆனால், பாஜிராவ் காலத்தில் மாளவத்திலும் பெற வழி செய்தார். தில்லி வரையில் மராத்தியர் படையைத் தலைமை தாங்கிச் சென்று வெற்றியுடன் திரும்பினார். குஜராத்தை மராத் தியர் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். கொரில்லாப் போர் முறையால் நிஜாமையும் தோற்கடித்தார்.

இவர் காலத்தில்தான் பின்பு பிரபலமான மராத்தியக் குடும் பங்களான ஸிந்தியா (Sindhia), ஹோல்கார் (Holkar), கெய்க் வார் (Gaekwar), பான்ஸ்லே (Bhonsle) போன்றவைகள் தோன்றின. போர்த்துகீசியரைத் தோற்கடித்து, தானா (Thana), சால்செட் (Salsette), பேஸினையும் (Bassein) கைப்பற்றினார். ஆங்கிலேயர் இவர் நட்பைப் பெறுவது வாணிக வளர்ச்சிக்கு நன்மை பயக்கும் எனக் கருதி, மராத்தியருடன் நட்புறவு ஒப்பந் தங்கள் செய்து தென்னிந்தியாவில் தடையில்லா வாணிகம் நடத்தும் உரிமை பெற்றனர். 1740ஆம் ஆண்டில் தம்முடைய நாற்பத்திரண்டாம் வயதில் பாஜிராவ் காலமானார். ஆனால், அதற்குள் மராத்திய அரசு என்றிருந்ததை மராத்தியப் பேரரசாகச் செய்துவிட்டார். மராத்திய ஆதிக்கம் தஞ்சாவூர் முதல் தில்லிவரை பரவச்செய்துவிட்டே இறந்தார். வரலாற்று ஆசிரியருள் சிலர், இவரை மராத்திய அரசின் வித்தகரான சிவாஜிக்கு ஈடானவர் எனக் கருதுகின்றனர். சிவாஜியிடமிருந்த படைவன்மையும், அரசியல் தந்திரமும் பாஜிராவிடமும் காணப் பட்டன. சிவாஜியைப் போன்று கொரில்லாப் போர் முறை இவரால் நன்கு பயன்படுத்தப்பட்டது. மேலும், இவர் பண்பார்ந்த நண்பராகவும், எவரையும் ஈர்க்கும் பேச்சாளராகவு மிருந்ததால், பல உடன்படிக்கை ஒப்பந்தங்களைத் தம் பகைவரி டத்தும் செய்துகொண்டார். இவர் அன்றைய இந்திய எழிலரசி

மஸ்தானியைத் தம் உயிர்க் காதலியாய்ப் பெற்றிருந்தார். இவள் ஒரு முகமதிய நடனமாது. அவளும் இவரிடம் உயிரையே வைத்திருந்தாள். அவள் பழக்கத்தால், தம் குல மரபுக்கு மாருக மது அருந்துதல், புலால் உண்ணல் முதலான பழக்கங்களில் ஈடுபட்டார். இத் தொடர்பை மராத்தியத் தலைவர்கள் விரும்பாததால், வஞ்சகமாய்க் குற்றம்சாட்டிச் சிறைப்படுத்தினர். பாஜிராவ் வெளிப்படையாய் ஒன்றும் செய்ய முடியவில்லை. மஸ்தானியும் மாண்டாள். அவள் இறப்புக் குறித்துப் பல்வேறு வகையில் கூறப்படுகிறது. முடிவில், இதே துயரால் அவர் உயிர் துறந்தார் என்று சிலர் கருதுகின்றனர்.

பாலாஜி பாஜிராவ் (1740—1761)

பாஜிராவிற்குப் பிறகு, அவர் மகன் பாலாஜி பாஜிராவை (நாஞ சாகிபு என்றும் அழைக்கப்பட்டார்) சாகு பேஷ்வாப் பதவியில் 1740-ல் அமர்த்தினர். இதனுல் பேஷ்வாப் பதவி ஏறக்குறைய வாரிசு உரிமையைப் பெற்றது எனலாம். பாலாஜி பாஜிராவ் தந்தையைப் போலவே போர் ஆற்றலும், நிர்வாகத்திறனும் நிரம்பப் பெற்றவர். அவருடைய தலைமையின்கீழ் மராத்தியரின் ஆதிக்கம் உச்சியின் எல்லையைத் தொட்டுவிட்டதென்றே கூறலாம். சாகு 1748ஆம் ஆண்டு காலமானர். பாலாஜி பாஜிராவ் எல்லா அதிகாரங்களையும் தம்கீழ்க் கொண்டுவந்தார். தமக்கு அப்படி ஒரு சலுகை, சாகு கொடுத்துவிட்டே இறந்தார் என்றுகூறினர். இதற்குப்பின் சாகுவின் சந்ததியினர் பேஷ்வாவின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்திடும் நிலையை அடைந்தனர். சதாரா (Satara) அரசரின் இருப்பிடமாயிருந்தது. பேஷ்வாவின் இருப்பிடமான பூனவே, சாகுவிற்குப்பின் நிருவாகத்தின் தலைநகராயிற்று. மராத்தியத் தலைவர்களான கெயிக்குவார் குஜராத்திலும், ஹோல்கார் மாள்வாவிலும், பான்ஸ்லே பேராரிலும், ஸிந்தியா வடமேற்கு மாள்வாவிலும் பேஷ்வாவின்கீழ் ஆட்சி புரிந்து வந்தனர்.

மூன்றும் பானிப்பட்டுப் போர் (1761)

1758-ல் மராத்தியர்கள் பஞ்சாப்பைக் கைப்பற்றி அட்டாக் கோட்டையில் மராத்தியக் கொடியைப் பறக்கச் செய்தனர். மராத்தியர் பஞ்சாப்பைக் கைப்பற்றியமையால் அகமது ஷா அப்தாலி ஆஃப்கானிஸ்தானத்திலிருந்து பஞ்சாப்பை மராத்தியர்களிடமிருந்து கைப்பற்றப் புறப்பட்டார். மராத்தியர்களும் அப்தாலியை எதிர்க்கத் தயாராயினர். கி. பி. 1761-ல் பானிப்பட்டுப் போர் நடைபெற்றது. 40,000 குதிரைப் படையினருட

னும், 35,000 காலாட் படையுடனும் அப்தாலி போருக்கு வந்தார். சதாசிவ பாவே 55,000 குதிரைப் படையுடனும், 15,000 காலாட் படையுடனும், 15,000 பிண்டாரிகளுடனும் அவரைப் போர்க் களத்தில் சந்தித்தார்.

அப்தாலியின் வாசீரான ஷா வாலிகான் தலைமை தாங்கினார். மராத்தியப் படையின் மத்தியப் பகுதிக்கு பாவேயும், விசுவாச ராவும் யானைகளின்மீது ஏறிக்கொண்டு 'பகவான் கொடி'யைப் பறக்கவிட்டனர். மற்றத் தலைவர்கள் முன்னும், பின்னும் வல இடப் புறங்களில் அணிவகுத்து நின்றனர். அப்தாலி தம் அணிவகுப்பின் பின்புறத்தில் தனியே பக்கவாட்டில் ஆயுத்தப் படையுடன் (Reserve) நின்றார். திடீரெனத் தாக்கும் குதிரை வீரர்கள் ஒருபுறம் நின்றனர். இப்ராகிம் கான், கார்டியின் திட்டப்படி மராத்தியப்படை பகுதி பகுதியாகப் பிரிந்து போரிடாமல் ஓரே திரட்டாகப் போருக்கு எழுந்தது.

போர் 1761-ல் ஜனவரி மாதம் 14ஆம் நாள் காலை ஒன்பது மணிக்குத் தொடங்கியது. சுமார் எட்டு அல்லது ஒன்பதாயிரம் ரோகில்லர்கள் கார்டியின் பீரங்கி வெடியில் மாண்டனர். சுமார் மூன்று மணி நேரம் சண்டை நடந்தது. அப்தாலி கார்டியின் கரம் ஓய்ந்தவுடன் ஆயத்தப் படையுடன் நாலாயிரம் காவல்படையினரை மராத்தியரைச் சுற்றிவளைத்து நிற்கச்செய்து, பத்தாயிரம் பேரைக் கார்டிக்கு எதிராக அனுப்பினார். பக்கவாட்டில் தாக்கும் படையினரைத் திடீரெனப் பக்கவாட்டில் தாக்கச் செய்தார். மராத்தியர்கள் முன்னேறும் பாகங்களில் ஆயத்தப் படையினர் புதிதாகப் போர்க்களம் புகுந்தனர். மராத்தியப் படையினர் பட்டினியால் வாடினர். இப்ராகிம்கான் காயமுற்றார். விசுவாச ராவ் குண்டடிபட்டு இறந்தார். சதாசிவராவும் மாண்டார். தலைவனை இழந்த மராத்தியர்கள் நாற்புறமும் சிதறியோடத் தொடங்கினர்.

சிதறி ஓடியவர்களை ஆஃப்கானியர்கள் துரத்தித் துரத்திக் கொன்றனர்; கூடாரங்களைக் கொளுத்தினர்; வயற்புறமும் ஊர்ப் புறமும் ஓடியவர்களை, உழவர்களைத் துன்புறுத்தினர். மேடு மேடாக 32 மேடுகளிருந்தனவென்றும், ஒவ்வொரு மேட்டிலும் 500-லிருந்து 1,000 பிணங்களிருந்தன வென்றும், குறைந்தது 28,000 பிணங்கள் மேடுகளிலும், 28,000 அகழிகளிலும், பானிப் பட்டைச்சுற்றி 9,000 பிணங்களும் காணப்பட்டன எனக் காசி ராஜ் என்பவர் குறிப்பிடுகின்றார்.

பானிப்பட்டுப் போரினால் மராத்தியர்கள் வரலாற்றில் மாறுதல் ஏற்படவில்லை என்று சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். சர் தேசாய் என்பார், 'பானிப்பட்டுப் போரால் மனித சக்தி வீணாகியதே தவிர இந்த இழப்பு எதையும் முடிவு செய்து விடவில்லை' என்கிறார். முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் ஆங்கிலேயரின் பாதுகாப்பில் இருக்க நேர்ந்தது. சர் தேசாய் இப் போரினை வரலாற்றின் திருப்பக் கட்டம் என்று உரைக்கின்றார். பிளாசிப் போர் ஆங்கிலேயரின் மேதகு நிலையை எடுத்துக்காட்டியது; பானிப்பட்டு அது வேரூன்றத் துணை புரிந்தது. மராத்தியர்களும் முகலாயர்களும் சண்டையிட்டுக் கொண்டிருந்த சூழ்நிலை ஆங்கிலேயர்களுக்கு உதவி செய்தது.

சதாசிவ பாவா உட்பட முக்கியத் தலைவர்கள் எல்லாரும் போரில் மடிந்தனர். தப்பிய தலைவர்களில் மிக முக்கியமானவர்கள், மகாதேஜி ஸிந்தியாவும் (Mahadaji Sindhia), நானா பத்னவிஸ் மாவர் (Nana Phadnavis). பேஷ்வா பாலாஜி பாஜிராவ் தோல்விச் செய்தியைக் கேட்டவுடன் மாரடைப்பால் இறந்தார். தோல்விக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

மராத்தியரின் தோல்விக்குக் காரணங்கள்

பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் மராத்தியர்களின் தோல்விக்கான காரணங்களை விவரிக்கையில் மராத்தியப் படையினருடைய திறமையின்மையும், எண்ணிக்கைக் குறைவும் முதலாவது காரணம் என்கிறார்.

ஆஃப்கானியர்களிடம் இருந்த போர் வீரர்களின் எண்ணிக்கை 60,000 ஆனால் மராத்தியர்களிடம் 45,000 போர்வீரர்களே இருந்தனர் என்று கூறுகின்றார்.

படை வீரர்கள் நன்கு போரிட வேண்டுமாயின் அவர்களுக்குப் போதிய உணவு வசதிகள் கிடைத்தல் வேண்டும். இரண்டு மாத காலம் உணவு கிடைக்காது பட்டினியால் வாடிய போது, அப்தாலியின் படையினர் தோஆப், டெல்லி முதலிய இடங்களில் இருந்து உணவுப் பொருள்களைப் பெற்றார்கள்.

படை வீரர்களுக்கு முறையான பயிற்சியும், கட்டுப்பாடும் மிக இன்றியமையாதன. அப்தாலியின் படை வீரர்கள் நல்ல திறமை மிக்க பயிற்சி பெற்றிருந்ததோடு, ஒழுங்குக் கட்டுப்பாட்டின்கீழும் இருந்தனர். மராத்தியப் படைவீரர்களோ எத்தகைய சிறந்த பயிற்சியும் ஒழுங்குக் கட்டுப்பாடுமின்றி வீண் ஆரவாரம், கர்வம்,

தாழ்வு மனப்பான்மை, இனவெறுப்பு முதலியனவற்றைக் கொண்டு வாழ்ந்தனர். எனவே, உறுதியான கட்டுப்பாடான ஆஃப்கானியப் படைக்கு இவர்கள் தோற்க நேரிட்டது.

மராத்தியர்கள் கனமான, பழமையான பீரங்கிப் படையை வைத்திருந்தனர். ஆனால், ஆஃப்கானியர்களோ, மிக எளிதாக ஒட்டகத்தின்மீது வைத்து எடுத்துச் செல்லத்தக்க பீரங்கிகளை வைத்திருந்தனர். அப்தாலியின் படையில் துப்பாக்கி வீரர்களும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

படைத் தளபதிகள் ஆற்றல் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் படையினைத் திறமையாக நடத்திச் செல்ல இயலும். மராத்தியத் தளபதிகள் ஆஃப்கானியத் தளபதிகளைவிட ஆற்றலில் குறைந்தவர்களாய் விளங்கினர். ஆஃப்கானியத் தளபதிகள் ஆசியாவிலேயே சிறந்த தளபதிகள் எனப் புகழ்பெற்றவர்கள்.

டெல்லியோடு செய்தித் தொடர்பும் உணவு கிடைப்பதற்கு மான வசதிகளைச் சதாசிவ பாவே செய்துகொள்ளவில்லை என்ப தோடு டெல்லியின் பாதுகாப்பிற்குப் போதுமான படை வீரர் களை நிறுத்தவில்லை என்பதும் ஒரு காரணம். அதுமட்டுமன்றித் தோஆப்பிலிருந்த ரோகில்லர்களுடன் சீரிய முறையில் நட்புறவு வைத்துக்கொள்ளவில்லை. டில்லியும், தோஆப்பும் அப்தாலி யின் வசமடைய, அதன் விளைவாகப் படை வீரர்களுக்கு உணவு வந்துசேர வேண்டிய பாதை தடைப்பட்டது.

மராத்தியர்கள் தங்களுடன் வாழும் மற்ற வீர இனத்தவர் களோடு சரியான நட்புறவை வளர்த்துக்கொள்ளாது, பகையை வளர்த்துக்கொண்டனர். எனவே, இரஜபுத்திரர்கள், ஜாட்டு கள், ரோகில்லர்கள் யாருமே மராத்தியர்களுக்கு இரக்கம் காட்டவில்லை.

மராத்தியர்கள் தங்கள் வழக்கமான போர்த் தந்திரத்தைக் கையாளவில்லை கொரில்லாப் போர் முறை என வழங்கப்பட்ட மறைந்திருந்து தாக்குதல் என்னும் பழக்கத்தை விட்டுவிட்டு, நிலையாக ஓரிடத்தில் படைகளுடன் நின்று போரிட ஆரம்பித் தனர். உணவு நெருக்கடி ஏற்பட்டவுடன் போரை ஒத்திவைக்க வில்லை. வேண்டிய பொருள் பற்றுக்குறையையும், தமக்கு வடக்கி லிருந்த பகைவர்களையும் உணர்ந்தாவது பேஷ்வா, அப்தாலி யின் பகைமையைத் தேடாமல் திரும்பும்படி தம் படையினருக்கு

உத்தரவிடவில்லை. எனவே, மூன்றும் பானிப்பட்டுப் போரில் மராத்தியர்களுக்குத் தோல்வி ஏற்பட்டது.

விளைவுகள்

பானிப்பட்டுப் போரினால் மராத்தியப் படையின் பெரும்பகுதி அழிந்தது. அவர்களின் படை ஆற்றல் குறைந்தது. குறிப்பிடத்தகுந்த மராத்தியத் தலைவர்கள் பலர் இப் போர்க்களத்தில் மாண்டார்கள். வட இந்தியா அரசியல் குழப்பத்தில் ஆழ்ந்தது. முகலாயப் பேரரசின் அழிவு உறுதிப்பட்டது. தென்னிந்தியாவில் ஐதர் அலி இதன் விளைவாக ஏற்றம் பெற்றார். மராத்தியப் பேஷ்வாவின் ஆதிக்கமும், அரசியல் ஒற்றுமையும் அழிந்தன. இப் போருக்குப் பின்னர் மராத்தியர்களின் முன்னேற்றம் தடைப்பட்டது. மராத்தியச் கூட்டரசு உடைந்தது. ஆங்கிலேயர்கள் வங்காளம், அயோத்தி, தென்னிந்தியா ஆகியவற்றில் நிலைபெற்றார்கள். மூன்றாவது பானிப்பட்டுப் போர் இந்திய வரலாற்றை நிர்ணயித்த போர்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

முதலாம் மாதவராவ் (1761—72)

பாலாஜி பாஜிராவின் திடீர் மறைவிற்குப்பின் அவருடைய மூத்த மகன் மாதவ ராவ் பேஷ்வா ஆனார். அவர் 17 வயதே நிரம்பியவராயிருந்ததால், அவர் மாமன் ரகுநாத ராவ் அவருக்குப் பாதுகாவலரா (Guardian) யிருந்தார். மாதவ ராவ் வயதில்தான் இளையவரே தவிர, ஆற்றலில் முதிர்ந்தவர் என்பதை அடுத்த ஆண்டே நிரூபித்தார். 1762-ல் ரகுநாத ராவின் மேற்பார்வையும், பாதுகாப்பும் தமக்குத் தேவை இல்லை என நீக்கினார். நானா பத்னாவிஸ் (தலைமைக் கணக்கர்) என்றழைக்கப்பட்ட பாலாஜி ஜனார்த்தனனைத் தம் அந்தரங்க ஆலோசகராக அமர்த்திக்கொண்டார்; ரகுநாதராவை விலக்கியதால் அவர் மாதவராவ்பால் மிகுந்த கோபம் கொண்டு ஆபத்து விளைவிக்கும் நேரத்தினை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருந்தார். மாதவ ராவ் தம் செய்கை மூலம், பலரைத் தம்பால் கவரும் ஆற்றல் பெற்றிருந்தார். ஐதர் அலியும், நிஜாமும் மராத்தியரைப் பயமுறுத்திக்கொண்டே இருந்தனர்.

கருநாடக நவாபும், ஆங்கிலேயரின் ஆதரவால் மராத்தியரை எதிர்க்கும் துணிவுடன் இருந்தார். நம்பமுடியாத ஆச்சரியத்துடன், இவ்வளவு ஆபத்துகளையும் மாதவராவ் சமாளித்தார். நிஜாமையும், ஐதர் அலியையும் தோற்கடித்துப் போர்

வல்லுநர் பலரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினர். பேராற்றலும், அரசியல் தந்திரமும் அவருடைய பிறவிக் குணங்களாய் இருந்தன. ஸின்ஹா என்ற வரலாற்று ஆசிரியர், 'மாதவராவின் எதிர்பாரா மறைவே ஐதர் அலியை அழிவிலிருந்து காத்தது,' என்று கூறுகிறார். வடஇந்திய அரசியலிலும் வெற்றியுடன் காரியத்தைச் சாதித்தார். மகாதேஜி ஸிந்தியா தலைமையில் ஒரு மராத்தியப் படையை அனுப்பி அலகாபாத்திலிருந்த முகலாய மன்னர் ஷா ஆலத்தைத் தில்லி அரசு கட்டிலில் அமரச் செய்தார். இச்சமயத்தில், 1772-ல் மாதவராவ் திடீரெனக் காச நோயால் இறந்தார்.

மாதவராவ் சிறந்த போர்த் தலைவர் மட்டுமல்லர்; சிறந்த அரசியல் மேதையும் ஆவார். பல குறைபாடுகளை நீக்கி நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தினர். இத்தனை ஆற்றலும் நிறைந்த மாதவராவை, 28ஆம் வயதிலேயே இயற்கை மராத்தியரிடமிருந்து பறித்துக்கொண்டது. அவர் மறைவு, பானிப்பட்டுப் போரைவிடத் துயரைத் தரும் செய்தியாகும்.

அவருடைய மறைவிற்குப்பின் ஏற்பட்ட பேஷ்வா வாரிசுப் போரே முதலாம் ஆங்கில - மராத்தியப் போருக்கு வித்திட்டது; மராத்தியரின் உள் விவகாரங்களிலும், ஆங்கிலேயரைத் தலையிடும்படி தூண்டியது. இறுதியில், மராத்தியரையும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ் அடைக்கலம் அடையும்படியும் செய்தது என்றும் கூறலாம்.

நாராயண ராவ் (1772)

நான்காம் பேஷ்வா மாதவராவ் 1772-ல் இறந்ததும் அவருக்கு ஆண்வாரிசு இல்லாமையால் அவருடைய இளவல் நாராயண ராவ் பேஷ்வா ஆனர். நாராயண ராவின் சித்தப்பா சிறையிலிருந்து தப்பி ஓடமுயன்றார். அவர் முயற்சி பலனளிக்கவில்லை. இரகுநாதராவைச் சிறையிலிருந்து விடுதலை செய்து, நாராயணராவைச் சிறையிலடைக்கச் சதி உருவாயிற்று. இதற்குக் காரணமானவர் இரகுநாதராவின் மனைவி ஆனந்தி ஆவார். நாரயண ராவ் கொலை செய்யப்பட்டார். இக் கொலையினை மராத்தியர்கள் வெறுத்தனர். இராம சாஸ்திரி என்பவரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இரகுநாத ராவே காரணம் என்று தெரிந்தது. நாராயண ராவ் இறந்தபோது அவருடைய மனைவி கருவுற்றிருந்தார். நாராயண ராவின் வாரிசாக ஆண் மகவு பிறந்தது. அதற்கு மாதவ ராவ் நாராயணன் என்று பெயரிட்டனர்.

மாதவராவ் நாராயணன் (1774—95)

நாராயணராவின் மறைவிற்குப் பின்னர் 1774-ல் பிறந்த அவருடைய புதல்வன் மாதவ ராவ் நாராயணன் அல்லது இரண்டாம் மாதவராவ் என்னும் குழந்தையைப் பேஷ்வா ஆக்க நானா பத்னவிசும் மற்றும் பதினொரு பெரியோர்களும் விரும்பினர். இவர்களைப் பன்னிரு சகோதரர்கள் அல்லது பாராபாயி என்று அழைப்பர். பன்னிரண்டு பேரும் இரண்டாம் நாராயணராவை 1774-ல் பேஷ்வாவாக்கித் தாம் அரசப் பிரதிநிதிகளாக இருந்து ஆட்சி புரிந்தனர். இதனால் பூனாவில் தாமே தனித்து வெற்றி பெற முடியாது என அறிந்த இரகுநாதராவ் பம்பாயிலிருந்த ஆங்கிலேயரின் உதவியை நாடினார். ஒழுங்குமுறைச் சட்டம், கல்கத்தா தலைமை ஆளுநர் மன்றம் இவற்றை மதியாமலும், அவர்களிடம் அனுமதி பெருமலும் ஆங்கிலேயர்கள் இரகுநாதராவுடன் 1775-ல் சூரத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு பூனா அரசை எதிர்க்கத் துணிந்தனர். இதுவே, முதல் மராத்தியப் போருக்குக் காரணமாயிற்று என்று கண்டோம்.

இரண்டாம் பாஜிராவ் (1796—1818)

1795-ல் இரண்டாம் மாதவராவ் இறந்துவிடவே மராத்திய அரசியலில் குழப்பம் ஏற்பட்டது. அவருடைய வாரிசாக யாரை நியமிப்பது என்பது குறித்துக் குழப்பம் நிலவியது. நானா பத்னவிஸ், பேஷ்வாவாக சின்னாஜி அப்பா என்பவரை நியமிக்க எண்ணம் கொண்டிருந்தார். பின்னர், இரண்டாம் பாஜிராவை ஆதரித்தார். 1796-ல் பாஜிராவ் பேஷ்வாவானார். புதிய பேஷ்வாவாகப் பதவியேற்ற பாஜிராவ் இரகுநாதராவின் மகன். பாஜிராவ் ஒன்றுக்கும் உபயோகமற்றவர். பேஷ்வாப் பதவிக்குப் பொருத்தமற்றவர். நானா பத்னவிசைச் சிறையிலடைத்தார்; பின்னர்ப் பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டார்.

இவருடைய காலத்தில்தான் இரண்டாவது மராத்தியப் போர் நடைபெற்றது. 1802-ல் பாஜிராவ் பேசின் ஒப்பந்தத்தினைக் கிழக்கிந்திய வணிகக்குழுவினருடன் செய்துகொண்டார். 1818-ல் மூன்ரும் மராத்தியப் போருக்குப் பின்னர்த் தோற்கடிக்கப்பட்ட பாஜிராவ் சரணடைந்தார். பேஷ்வாக்களின் பதவி ஒழிக்கப்பட்டுப் பாஜிராவிற்கு ஓய்வுத்தொகை வழங்கப்பட்டது. பாஜிராவ் தம்முடைய இறுதிக் காலத்தைச் சமயப்பணிகளிலே கழித்தார், பின்னர் 1851-ல் இறந்தார்.

மகாதேஜி சிந்தியா (1727—1794)

மராத்தியர்களின் வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த இருவர் மகாதேஜி சிந்தியாவும் நான பத்னவிசும் ஆவர். சர் தேசாய், இவர்களிருவரும் இல்லையாயின் முதல் மராத்தியப் போருடன் மராத்தியத்தின் வரலாறு மறைந்துவிட்டிருக்கும் என்று கூறுகின்றார். சிந்தியா ஒரு சிறந்த மராத்திய வீரராகவும், மராத்திய ஆதிக்கத்தைச் சிறப்படையச் செய்தவராகவும் விளங்கினார். சிந்தியா பருமனான நடுத்தரமான கருமை நிற உடல் அமைப்பைப் பெற்றிருந்தார். பானிபட்டுப் போரில் அவருடைய கால் முடமாயிற்று. இவர் முகலாயப் பேரரசரை டில்லிக்கு அழைத்துச் செல்லக் காரணமாயிருந்தார். 1774-ல் நடந்த ரோகில்லாப் போரில் ரோகிலாக்களைத் தோற்கடித்தார்.

முகலாயப் பேரரசின் படைத் தலைவராகவும், பேஷ்வாவின் துணைவராகவும் பணியாற்றிய அவர் ஆக்ரா, டில்லி ஆகிய மாநிலங்களின் ஆட்சித் தலைவராக அமர்த்தப்பட்டார். டில்லியில் தம் ஆதிக்கத்தை மேலாக வளர்த்துக்கொண்ட சிந்தியாவைப் பூனா அரசினர் அதிகம் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆங்கிலேயரிடம் செல்வாக்குப் பெற்றார். தலைமை ஆளுநரின் மதிப்பையும் பெற்றிருந்தார். ஆங்கிலேயர்களைக் கொண்டு தம் படைக்குப் பயிற்சி அளித்தார். இரஜபுத்திரர்களிடமிருந்து திறை பெறுவதற்காக அவர்களுடன் போரிட ஜெய்ப்பூர், ஜோத்பூர் மன்னர், ஆக்ராவின் ஆளுநர் முகமது பெக் ஆகியோர் ஒன்றாக இணைந்து சிந்தியாவை எதிர்த்தனர்.

அப்போரில் முகமது பெக் இறந்துவிட, முகமது பெக்கின் மருமகனான இஸ்மாயில் பெக் சிந்தியாவைத் தோற்கடித்துக் குலாம் காதர் என்ற ரோகில்லாத் தலைவருடன் ஒன்றுசேர்ந்து ஆக்ராவை முற்றுகையிட்டனர். ஆனால் தோற்கடிக்கப்பட்டனர். 1788-ல் மீண்டும் குலாம் காதரும், இஸ்மாயில் பெக்கும் முகலாயப் பேரரசரைத் தாக்கி, அவரைக் குருடாக்கினர். அரச குடும்பப் பெண்களை அல்லற்படுத்தினர். இதனை இஸ்மாயில் விரும்பவில்லை.

சிந்தியாவும் இஸ்மாயில் பெக்கும் ஒன்றுசேர்ந்தனர். குலாம் காதரை வடமதுரையில் கைது செய்து பின் அவரை வதை செய்து கண்களைப் பிடுங்கிப் பழிக்குப்பழி வாங்கிக் கொன்றார். முகலாயப் பேரரசர் ஷா ஆலத்தை அரியணையில் அமர்த்தித் தம்மிடமிருந்து விலகிச் சென்ற கௌன்ட்

துபாயின் என்னும் ஃபிரெஞ்சு வீரரைத் தம் படையில் சேர்த்துக் கொண்டார். கௌன்ட் துபாயின் 1790-ல் இஸ்மாயில் பெக்கைத் தோற்கடித்தார். இதன் காரணம் இஸ்மாயில் பெக் சிந்தியாவுக்கு எதிராக இரஜபுத்திரர்களுடன் சேர்ந்ததே. 1791-ல் ஜெய்ப்பூர், ஜோத்பூர் படைகள் தோற்கடிக்கப்பட்டன. உதயபுரி இராணு சிந்தியாவிற்கு அடிபணிந்தார்.

சிந்தியா தம் வலிமையினுல் வெற்றிகள் பல பெற்றவுடன், அவ் வெற்றியைக் கண்டு பொருமைகொண்ட நாணு பத்னுவிஸ், சிந்தியாவின் உதவியை உதறித்தள்ளினுர். மராத்தியக் கூட்டரசுக்குத் தலைமை வகித்த பேஷ்வாக்களும் சிந்தியாவின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சினர். தங்களுடைய பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று கவலை கொண்டனர். அவர்களுடைய அச்சம் சிந்தியாவின் செயலால் மறைந்தது. சிந்தியா மரபுபடி பேஷ்வாக்களுக்கு மரியாதை செய்தார். நாணு பத்னுவிஸ் மட்டும் நம்பிக்கை கொள்ளாது, துக்கோஜி ஹோல்காருடன் நட்புக்கொண்டார். 1794-ல் சிந்தியா இறந்தபின் அவருடைய பெயரரான தௌலத்ராவ் சிந்தியா தம்முடைய பதின்மூன்ருவது வயதில் பட்டமேற்ருர்.

சிந்தியாவின் செயல்கள், சிந்தியாவைப் பூணு அரசுக்கு துரோகி என்பது போல் காட்டின. ஆங்கிலேயர்களை வெற்றி கொள்வது என்பது இயலாது என்று உணர்ந்த அவர் வடநாட்டிலேயே தம் ஆதிக்கத்தைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டார். மராத்தியப் போர்முறை பழமையானது என்று கருதி ஐரோப்பியப் போர்முறைகளை மேற்கொண்டார்.

சிந்தியாவின் சாதனைகளைக் குறிப்பிடுதல் மிகவும் அவசியம். சிறந்த ஃபிரெஞ்சு வீரரைத் தம்முடைய படைத்தலைவராக ஆக்கிக்கொண்டு, இரஜபுத்திரர்கள், சீக்கியர்கள், முகலாயர்கள் ஆகியோரைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படச் செய்தார். பூணு அரசுக்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை ஆயினும், அதனை அழிக்க முயலவில்லை. நாணுபத்னுவிஸ் இவர்மேல் கொண்ட பொருமையின் விளைவாகத் தென்னிந்திய அரசியலில் இவர் பங்கு பெற இயலாது போய்விட்டது.

'தன்னந் தனிமையாக ஒவ்வொரு போரிலும் வெற்றிபெற்று மராத்திய வரலாற்றின் மகுடமாகத் திகழ்ந்த சிந்தியா, இந்தியாவில் யாருடனும் கூட்டுச் சேராது, எப் பிரிவிலும் இராது இணையற்ற அரசராக விளங்கினுர்.'

நானு பத்னுவிஸ் (1742—1800)

நானு பத்னுவிஸ் 1742-ல் பிறந்தார். மெல்லிய உயரமான அழகான உடலமைப்பைப் பெற்றிருந்தார். கடமையுள்ள பணியாளராகவும் விளங்கினுர். அறத்திலும், இறைவனிடத்தும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். ஏறத்தாழ இருபது முறைகள் இவரைக் கொலைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

நானு தளபதிக்கு வேண்டிய தன்மையோ படைப்பயிற்சியோ பெற்றிருக்கவில்லை. இவரிடம் ஒத்துப்போகும் மனப்பான்மையும், சமாதானமாகச் செல்லும் போக்கும் காணப்படவில்லை. அதிகாரத்தை விரும்பியதோடு செல்வத்தையும் விரும்பினுர். பேராசை கொண்டு பொருள் நிறையச் சேர்த்தார். சர் தேசாய் நானுவைப்பற்றிக் குறிப்பிடும்போது 'தம்முடைய அதிகார ஆசையையும், பண ஆசையையும் அடக்கி இருப்பாரேயானுல் வரலாற்றில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பார்' என்று கூறுகிறுர்.

மூன்றும் பானிபட்டுப் போரில் தப்பிப் பிழைத்த இவர், பேஷ்வா நாராயண ராவ் கொலைக்கு இரகோபாவைப் பழி வாங்குவதாகச் சூளுரைத்து இரண்டாம் மாதவ ராவைக் காக்கவும், அவரைப் பேஷ்வா ஆக்கவும் பாராபாயி அரசப் பிரதி நிதிகள் குழுவை ஏற்படுத்தினுர். 1779-ல் வார்கான் ஒப் பந்தத்தினை ஆங்கிலேயருடன் செய்துகொண்டு தம் நிபந் தனைகளை ஆங்கிலேயர் ஏற்குமாறு செய்தார். முதல் மராத்தியப் போரில் ஆங்கிலேயருக்கு எதிராக ஐதர், நிஜாம் ஆகியோரை ஒன்றுதிரட்டினுர். 1794-ல் சிந்தியாவின் மறைவிற்குப் பின்னர் நானு மராத்தியப் பேரரசின் தலைவரானுர்.

தௌலத் ராவ் சிந்தியா, துக்கோஜி ஹோல்கார், கோவிந்த ராவ், கெயிக்வார் ஆகியோருடன் கூட்டுச்சேர்ந்து நிஜாமைத் தாக்கினுர். நிஜாம் கர்டாவில் தோற்கடிக்கப்பட்டு, நானுவை இழிவுபடுத்திய தம்முடைய திவான் மஷீர் உல்முக்கைப் பேஷ்வா விடம் ஒப்படைத்தார். மராத்தியர்களுக்கு ஒரு பெரும் நிலப் பரப்பை வழங்கினுர். போரிழப்பீடாகவும் வரிகள் பாக்கிக்காகவும் மராத்தியர்கள் மூன்று கோடி ரூபாய் பெற்றனர். கர்டாப் போர் மராத்தியர்களுக்குத் தனிச் சிறப்பைத் தந்தது. பேஷ்வாவின் செலவுகளைக் குறைத்துத் தமது சொல்லுக்கு அவரைக் கட்டுப்பட வைத்தார்.

இரண்டாம் பாஜிராவைப் பேஷ்வாவாக ஆக்கினர். பேஷ்வா சிந்தியாவின் துணையோடு நானுவைச் சிறையிலடைத்தார். பின்னர், பேஷ்வா அவரை 1798-ல் தலைமை அமைச்சராக்கினர். 1800-ல் நானு இறந்தார். நானுவின் இறப்பைப் பற்றித் தளபதி பிரௌனிங் 'நானு மறைந்தவுடன், அவருடன் பிராமணர் ஆட்சியும் போயிற்று' என்றார். பால்மர் 'மராத்தியர்களுடைய அரசியல் அறிவும் மிதமான தன்மையும் நானுவுடன் மறைந்துவிட்டன' என்று கூறுகிறார்.

நானு பொது ஆவணங்கள், சிறந்த படங்கள், கலைப் பொருள்கள் முதலியவற்றைச் சேகரிக்கும் ஆர்வம் கொண்டிருந்தார். அதிகார வெறியும் பணவெறியும் மட்டுமன்றிக் காம வெறியும் கொண்டிருந்தார். 'மராத்திய ராட்சியின் வாய்மையும் திறமையும் நானுவின் இறப்புடன் மறைந்தன' என்று சர் ரிச்சர்ட் டெம்பில் கூறுகிறார்.

மராத்தியரின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்

மராத்தியரின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் பல கூறப்பட்டாலும் அடிப்படை உண்மை ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. எந்த ஆரம்பமும் வளர்ந்து கடைசியில் அழிந்துதான் போகும். இதற்கு மராத்திய அரசும் விதிவிலக்கன்று. இந்த விதிக்கு இலக்கானவைகளில் மௌரியப் பேரரசு, குப்தப் பேரரசு, முகலாயப் பேரரசு, ஆங்கிலப் பேரரசு போன்ற சிலவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும். இருப்பினும் அந்த வீழ்ச்சியைத் துரிதப்படுத்திய காரணங்களைக் காண்போம்.

ஒற்றுமையின்மை

மராத்தியப் பேரரசு பரந்த பேரரசாக விளங்கிய போதிலும், மராத்தியத் தலைவர்களிடையே ஒற்றுமை நிலவவில்லை. பெயரளவிற்கே தலைவராகப் பேஷ்வா விளங்கினர். ஹோல்கார், சிந்தியா, பான்ஸ்லே போன்ற தலைவர்களைத் தம்முடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவில்லை. ஒவ்வொரு மராத்திய அரசரும் தம் சுயநலம் கருதியே தம்முள் போர்களும் குழப்பங்களும் செய்து கொண்டு, அந்நியர்களோடு சேர்ந்து பிரிவினைகளை உண்டு பண்ணினர். மராத்தியர்களிடம் தேசிய உணர்வு இல்லை. பொதுப்பகைவனை ஒன்றுசேர்ந்து எதிர்க்கும் மனப்பக்குவத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஜாதுநாத் சர்க்கார், 'சிறப்பும் ஒழுங்கும் வாய்ந்த சமுதாய வளர்ச்சி, கல்வியைப் பரப்புதல் அல்லது மக்களை ஒன்றுபடுத்துதல் ஆகிய வகைகளுக்கான

முயற்சிகள் எதுவும் சிவாஜி காலத்திலோ, பேஷ்வாக்களின் காலத்திலோ செய்யப்பட வில்லை' என்று குறிப்பிடுகின்றார்.

பொருள் நெருக்கடி

ஓர் அரசு செம்மையாக நடைபெற்றிட நிலையான பொருளியல் அமைப்பு அவசியம். அத்தகைய அமைப்பு ஏதுமின்றிப் பொருள் தேவைப்பட்டபோது அண்டை நாடுகளில் படை எடுத்துக் கொள்ளையடித்துப் பொருளைத் திரட்டினர். அத்தகைய முறையினால் மக்களிடையே அரசுக்குச் செல்வாக்கு ஏதுமின்றிப் போயிற்று. கொள்ளைப் பொருளைக் கொண்டு நெடுநாள்களுக்கு அரசு நடத்துவது என்பது இயலாது. தங்கள் அரசு சிறியதாக இருக்கையில் மற்றப் பகுதிகளில் கொள்ளையிட வாய்ப்பிருந்தது. தங்கள் அரசு பரந்ததாக மாறியவுடன் கொள்ளைமுறை பலனளிக்கவில்லை. சிறந்த ஆட்சிமுறை இல்லை. மக்களின் நலனைப் பேணும் முறைகள் ஏதும் செய்யப்படவில்லை.

போர் முறைகள்

இதற்கு முன்னர் நாம் பயின்ற அரசுகளின் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்தபோது பழைய போர்முறைகளைக் கடைப்பிடித்தமையாலே தோல்வி அடைந்தனர் என்ற காரணத்தைச் சுட்டிக் காட்டினோம். ஆனால், மராத்தியர்கள் தங்களது பழைய போர்முறைகளைக் கைவிட்டமையாலேயே தோல்வி அடைந்தனர். கொரில்லாப் போர்முறை மராத்தியர்களுக்கே சிறப்பாக அமைந்திருந்தது.

படையினர் சீர்குலைவு

மராத்தியப் படை ஒழுங்கிற்கும் எளிமைக்கும் உட்பட்டிருந்த வரையில் வெற்றி பெற்றது. ஆதிக்கம் வளர வளரக் கட்டுப்பாடும், எளிமையும் தகர்க்கப்பட்டன. தங்கள் குடும்பத்தினரையும் மராத்தியப் போர்வீரர்கள் தங்களுடன் அழைத்துச் சென்றனர். போர்முறைகளில் நாட்டம் செலுத்த வேண்டிய அவர்கள் கேளிக்கைகளில் நாட்டம் செலுத்தினர்.

நிலவியல் அறிவின்மை

படைஎடுப்பில் வெற்றி பெறுவதற்கு நிலவியல் (geography) கூறுபாடுகள் பற்றிய அறிவு மிக இன்றியமையாததாகும். இதன் விளைவாகப் போரில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை இழந்

தனர். எந்த இடத்தில் மலை இருக்கிறது, எந்த இடத்தில் ஆறு இருக்கிறது என்று தெரியாது சென்று துயரடைந்தனர். ஆனால், ஆங்கிலேயரோ போதிய நிலவியல் அறிவு பெற்றிருந்தனர்.

ஆங்கிலேயரின் திறமை

ஆங்கிலேயர்கள் அரச தந்திரத்தில் சிறந்து விளங்கினார்கள். எண்ணிறந்த காலனிகளுக்குத் தலைவர்களாக இருந்தமையால், தேவையான அளவிற்குச் செல்வம் சேர்ந்திருந்தது.

இராணுவத் துறை

முறையான போர்ப்பயிற்சி, விஞ்ஞான அறிவு, நிருவள முறை ஆகியவைகளை மராத்தியர்கள் அறிந்திருக்கவில்லை. போர்த்துகீசியரிடமும் ஆங்கிலேயரிடமும் இருந்த பீரங்கிப் படையும், சிறந்த கப்பற் படையும் மராத்தியர்களிடமில்லை. பீரங்கி உற்பத்தி செய்வது, கப்பல்கள் கட்டுவது ஆகியவற்றில் கருத்தைச் செலுத்தவில்லை. சர் தேசாய், 'ஐரோப்பியர்களைப் பின் பற்றி நுண்ணறிவோடு செயல்பட்டிருந்தால் மராத்திய அரசு நிலைபெற்றிருக்கும்' என்று கூறுகிறார்.

அதிகாரப் பகுப்பு

மராத்தியர்களிடையே அதிகாரப் பகுப்புச் சரியாகச் செய்யப் படவில்லை. படையில் உள்ள சட்டதிட்டங்களும் இன்னின்ன வேலைகளை இவரிவர்தாம் செய்ய வேண்டுமென்ற வரம்புமில்லை. சுயநலன் கருதியே எதிலும் கலந்துகொண்டார்களே தவிரப் பொதுநலனை மனத்தில் கருதிக் கலந்துகொள்ளவில்லை. அதனாலேதான் பகைவர்களால் தனித்தனியே தோற்கடிக்கப்பட்டு விட்டனர்.

மராத்தியத் தலைவர்கள்

கி. பி. 1794-லிருந்து 1800-க்குள் மராத்திய வீரர்கள் பலர் இறந்துவிட்டனர். இராமசாஸ்திரி, அரிபண்ட்பாத்கா, அகல்யா பாய் ஹோல்கார், மாதவராவ், துக்கோஜி ஹோல்கார், பரசுராம் பாவே பட்வர்த்தன், நானா பத்னவிஸ் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். இரண்டாம் பாஜிராவ் அனுபவமும், ஆற்றலு முடைய மராத்தியரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுத் திறமை, பண்பு, மரபு யாவற்றிலும் குறைந்தவர்களையே தம் ஆட்சியில் அமர்த்தினார். ஆர்தர் வெல்லெஸ்லி, ஹென்றி வெல்லெஸ்லி,

எல்ஃபின்ஸ்டன், சர் ஜான் மால்கோம், சர் பர்ரிகுலோஸ்,டங்கன், சர் தாமஸ் மன்ரோ போன்றவர்களைப்போல் மராத்தியப் படையில் சிறந்த தளபதிகள் இருக்கவில்லை.

ஆங்கிலேயரின் ஆர்வம்

ஆங்கிலேயர்கள் எதனையும் துளைத்து அறிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள். மராத்தியர்களைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்திருந்தனர். அதுமட்டுமன்றி யாரை வெல்ல வேண்டும், யாருடன் சமாதானமாகப் போகவேண்டும் என்பதையும் தெரிந்து வைத்திருந்தனர். ஆங்கிலேயர்கள் மராத்திய மொழியிலும், மற்ற இந்திய மொழியிலும் எழுதவும், பேசவும், படிக்கவும் கற்றிருந்தனர். ஆனால், மராத்தியர்கள் ஆங்கில மொழியை அறிந்திருக்கவில்லை.

குறுகிய மனப்பான்மை

மராத்தியர்களிடம் குறுகிய மனப்பான்மையும், சாதிப் பிரிவினையும் அதிகமாகக் காணப்பட்டன. பிராமணர்களையே உயர்பதவியில் அமர்த்தினர். இரண்டாம் பாஜிராவ் போன்றவர்கள் அரசியலைவிடச் சமயத்தையே முக்கியமானதாகக் கருதினர்.

17-8-1817-ல் சர் தாமஸ் மன்ரோ எழுதிய கடிதம் ஒன்றிலிருந்து மராத்தியர்களைப்பற்றிய மதிப்பீட்டை அறிகிறோம்.

'மராத்தியர்கள் பொறுமையும் ஒருவருக்கொருவர் தன்னலமும் கொண்டிருந்தனர். அவர்களிடம் தேசிய உணர்வைவிடத் தன்னல உணர்வே மேலோங்கி இருந்தது. தேசிய உணர்வு கிளர்ந்தெழுந்த சிலரிடமும் நவீனமுறையில் நாட்டைக் காக்கும் வழிகளும், கருவிகளும், அரசியல் அறிவும் இருக்கவில்லை. அவர்கள் நாட்டைப் படைத்தலைவர்களுக்குப் பகிர்ந்தளித்து, படைப்பணியை அவர்களிடமிருந்து எதிர்பார்த்தது நாட்டின் ஆற்றல் மையத்தைச் சிதறடித்தது. நான் கண்டவரையில் மராத்தியர்கள் இல்லை என்பதற்காகக் கொள்ளையடிக்கவில்லை; அது அவர்களின் கலை; எதிரியை மடக்கும் ஆற்றல் அவர்களிடமுண்டு. ஆனால், முன்யோசனை, திட்டம், ஒற்றுமை ஆகியவை அவர்களிடமில்லை. தனித்தனியே பார்க்கும்போது அவர்கள் சிறந்த வீரர்களே. ஆயினும், தலைமைக்கும் ஒன்று சேர்ந்த பணிக்கும், உயரவும் பணிந்தாற்றவும் தகுதியற்றவர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மராத்தியரின் கலைகள்

சிற்பக் கலைகள்

பூனாவிலுள்ள பார்வதி கோயிலும், விஷ்ராம் பாக் அரண் மனையும் மராத்தியரின் சிற்பக்கலையை இன்னும் எடுத்துரைக் கின்றன. முதலாம் பாஜிராவின் காலத்தில் 'சன் வார் வதா' என்னும் மாளிகை கட்டப்பட்டது என்றும், எதிரிகளால் அழிக்கப் பட்டது என்றும் அறிகிறோம். மராத்தியருடைய ஆட்சிக் காலத்தில் சிற்பக்கலை சிறந்தோங்கியிருக்க வில்லை.

இலக்கியங்கள்

மராத்திய இலக்கியங்கள் சமய அடிப்படையிலேயே எழுந் தவை. கி. பி. 13ஆம் நூற்றாண்டில் ஞானேஸ்வரர், நாமதேவர் போன்ற கவிஞர்களும், சிவாஜியின் காலத்தில் ஏகநாத், துக்கா ராம், இராமதாஸ் போன்றவர்களும், 18ஆம் நூற்றாண்டில் வாமன் மோரோபந்த் முதலானவர்களும் குறிப்பிடத் தகுந்த வர்கள். மேற்கூறியவர்கள் சமயத் தத்துவங்களை அடிப்படை யாகக்கொண்டு உரைகலந்த பாடல்களை இயற்றினர்.

இரகுநாத பண்டிதர் போன்றவர்கள் சமயத்தைவிட்டு வர லாற்றிற்கும், வாழ்வியலுக்கும் ஏற்ற இலக்கியங்களைப் படைத் தனர். இரகுநாத பண்டிதர் சுயம்வரம் என்னும் நூலை இயற் றினார். ஞானேஸ்வரி என்ற பிராகிருதமொழி நூல், கவிதைகளால் பகவத்கீதையை விளக்கவுரைகளால் விளக்குகிறது. இன்று மராத்திய மக்கள் பக்தி உணர்வோடு அனுபவித்து உணருபவை நாமதேவர், துக்காராம் ஆகியோர் எழுதிய நூல்களே. நாம தேவர் சீக்கியர்களுடைய சமயக்கொள்கையை விவரித்து இனிய பாடல்களாக எழுதியுள்ளார். துக்காராம் எழுதிய கதைகள் பழ மொழிகளாகவும் வாழ்க்கைப் பயணக் கதைகளாகவும் மராத்திய நாடெங்கும் போற்றப்படுகின்றன. இராமதாசர் இயற்றிய தச போதம் என்னும் நூல் தெய்வீக நூலாகும். 18ஆம் நூற்றாண்டில் ஸ்ரீதர் என்பவர் இ ர ா ம வி ஜ ய ம், ஹரிவிஜயம், பாண்டவர் பிரதாபம், சிவாஜி அமிர்தம் போன்ற நூல்களை எழுதினார். மோரோபந்த் என்பவர் எழுதிய 'கேகாவளி' என்னும் நூல் ஓர் இலட்சம் வரிகளுக்குமேல் நீண்ட கவிதையாக அமைந்திருக் கிறது. மகிபதி என்பவர் எழுதிய 'பக்தி விஜயம்' என்னும் நூல் இக் காலத்தில் எழுதப்பட்டதே.

மராத்தியர்களுடைய வரலாற்றை அறியப் பரமானந்தர் எழுதிய சிவபாரதம் என்னும் நூலும், ஜெயராமன் என்பவர்

எழுதிய 'பர்ணல பர்வத கிரகணுக்கியானம்' என்னும் நூலும் நமக்குத் துணைபுரிகின்றன. சபாஸ்த் என்பவர் எழுதிய நூலும், சித்னி என்பார் எழுதிய 'சித்ர குப்தன்' என்ற நூலும், 'ஜேதி சகாவளி' என்ற நூலும் நாம் மராத்தியக் குலமுறையை அறிய உதவுகின்றன. மராத்தியரின் அரசியலை அறிய உதவும் நூல் 'அத்னபத்ரா' ஆகும்.

மராத்தியர்களின் ஆட்சியினால் மராத்திய மொழி ஏற்றம் பெற்றது. வடமொழிக்கு இருந்த ஆதரவு குறையத் தொடங்கியது என்று கூறலாம். 'வடமொழி இறைவனின் வாயிலிருந்து வந்த மொழி என்றால், நம்முடைய மொழிகளெல்லாம் திருடனின் வாயிலிருந்தா வந்தன' என்று ஏகநாதர் மக்களை வினவினார். இக் காலத்தில் ஏற்பட்ட சமய உணர்வினால் தாய்மொழிக்கே வளர்ச்சி ஏற்பட்டது. மராத்தியர்கள் கலைத்துறையில் ஆற்றிய பணிகள் குறைந்தனவே ஆகும். மராத்தியக்கலை என்று குறிப்பிடத்தகுந்த எதனையும் விட்டுச்செல்லவில்லை என்றே சொல்லவேண்டும்.

11. மராத்தியப் போர்கள்
(1775—1819)

முதலாம் மராத்தியப் போர் (1775—1782)

முதலாம் மாதவராவிற்குப் பின்னர் அவர் தம்பி நாராயணன் பேஷ்வாவானர். நாராயணன் சிறுவராயிருந்ததால், அவர் மாமா இரகுநாத ராவ், அவருக்குப் பாதுகாவலராக (regent) அமர்த்தப்பட்டார். இரகுநாத ராவ் போர், ஆட்சித்துறை இரண்டிலும் திறமை உள்ளவராயினும், பதவி மோகமும் தற் பெருமையும் மிக்கவர். குறிப்பாகத் தம் மனைவி ஆனந்தி பாயின் (Anandi Bai) ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டவர். ஆனந்தி பாய்க்குத் தம் கணவரே பேஷ்வாவாக வரவேண்டும் என்ற பேராவல் இருந்தது. அதனால் அவளால் தூண்டப்பட்டுப் பேஷ்வா நாராயணன் கொல்லப்பட்டார். பிறகு இரகுநாத ராவே பேஷ்வா பதவியில் அமர்ந்தார்.

சூரத் உடன்படிக்கை (1775)

இரகுநாத ராவ் பேஷ்வாப் பதவியில் அமர்ந்தது நானு பத்னு விஸ் கூட்டத்தினருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் நாராயண ராவின் கைக்குழந்தையைப்பேஷ்வாவாக அங்கீகரித்து, இரகுநாத ராவை எதிர்த்தனர். இரகுநாத ராவ் ஸிந்தியா, ஹோல்கார் போன்றவர்களின் ஆதரவை நாடினர். அவர்கள் இரகுநாத ராவிற்கு உதவ மறுக்கவே, வேறு வழியின்றி, பம்பாயிலிருந்த ஆங்கிலேயர்களுடன் சூரத்தில் 1775-ல் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். சூரத் உடன்படிக்கையின்படி இரகுநாத ராவை ஆங்கிலேயர் ஆதரிப்பதென்றும், அதற்காக சால்சட் (Salsette), பேசீன் (Bassein) என்ற இரு தீவுகளை ஆங்கிலேயருக்கு அவர் கொடுக்க வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பம்பாய்

அரசின் இவ் வுடன்படிக்கை, ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி தவறானது. தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் உத்தரவு பெற்றே மற்ற இந்திய அரசுகளுடன் பம்பாய், சென்னை மாநிலங்கள் எவ்வித உடன்படிக்கையையும் செய்து கொள்ளவேண்டும் என்ற விதியை மீறிச் செய்யப்பட்ட உடன் படிக்கை இது.

புரந்தர் உடன்படிக்கை (1776)

பம்பாய் அரசு, தலைமை ஆளுநர் ஆலோசனைக் குழுவினை மதியாமல், இரகுநாத ராவுடன் செய்துகொண்ட சூரத் உடன் படிக்கையை வங்காள அரசு ஏற்க மறுத்ததுடன், சூரத் உடன் படிக்கையை ஒதுக்கிவிட்டு அதற்கு எதிராகத் தலைமை ஆளுநர் ஆலோசனைக் குழு, நானா பத்னவிசுடன் புரந்தர் (Purandhar) உடன்படிக்கையினைச் செய்துகொண்டது. அதன்படி,

1. இரகுநாத ராவ் ஓய்வு ஊதியம் பெற்றுக்கொண்டு, பேஷ்வாப் பதவியை விட்டுவிட வேண்டும்.

2. நாராயணனின் கைக்குழந்தையைப் பேஷ்வாவாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

3. ஆங்கிலேயர் சால்செட் (Salsette) தீவைப் பெற வேண்டும் என்பதாகும். வாரன் ஹேஸ்டிங்ஸ், பம்பாய் அரசின் உடன்படிக்கையை ஆதரித்தாலும், பெரும் எண்ணிக்கையான வாக்குகளால் அவருக்கு எதிராக ஆலோசனைக் குழு பம்பாய் அரசின் உடன்படிக்கையை உதாசீனம் செய்ததுடன் அதற்கு எதிராகப் புரந்தர் உடன்படிக்கையையும் செய்துகொண்டது. பம்பாய் அரசு தான் செய்தது சரி என்று வாதாடியது. இதனால் சூரத், புரந்தர் உடன்படிக்கைகள் வணிகக் குழுவின் இயக்குநர் களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டன. இயக்குநர்கள் சூரத் உடன்படிக்கையை ஆதரித்தனர். இதனால் நானா பத்னவிஸ் ஆங்கிலேயருடன் போர் தொடுத்தார். இவ்வாறு முதலாம் மராத்தியப் போர் 1776ஆம் ஆண்டு தொடங்கியது.

போரின் போக்கு

போர் தொடங்கியபோது ஆங்கிலேயரின் படை மிக மோசமான நிலையிலிருந்தது. ஆங்கிலேயர் அதேநேரத்தில் அமெரிக்கச் சுதந்திரப் போரில் ஈடுபட்டிருந்தனர். மராத்தியரும் படை வலிமையில் சிறந்து விளங்கினர். அவர்களைத் தோற்கடிப்பது அவ்வளவு சுலபமான காரியமன்று. இந் நிலையில் ஐதர் அலியும்

ஆங்கிலேயருக்கு எதிராகப் போரைத் தொடங்கினர். ஃபிரெஞ்சுக் காரரும் அவர்களுக்கு எதிராகப் போரிலீடுபட்டனர். அதனுடன் வணிகக் குழுவின் நிதிநிலையும் மிகவும் மோசமாக இருந்தது. 1779ஆம் ஆண்டில் மகாதேஜி ஸிந்தியா பம்பாய்ப் படைகளைத் தோற்கடித்து அவர்களைத் தாழ்வடையச் செய்யும் வகையில் அமைந்த நிபந்தனைகளைக்கொண்ட வார்கான் (Wargon) என்ற உடன்படிக்கையில் கையொப்பமிடுமாறு செய்தார். அதன்படி இரகுநாத ராவைக் கைதியாக ஸிந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், இரகுநாத ராவ் தப்பி ஓடிவிட்டார். இவ் வுடன்பாட்டை வாரன் ஹேஸ்டிங்ஸ் ஏற்க மறுத்துவிட்டார். வாரன் ஹேஸ்டிங்ஸின் தனித் திறமையே வணிகக் குழுவை இக்கட்டான நிலையிலிருந்து காப் பாற்றியது எனலாம். ஆலோசனைக் குழுவில் இருந்த இடர்ப் பாடுகளும் இதற்குள் நீங்கிவிட்டதால், தம் முழுக் கவனத்தை யும் திறமையையும் மராத்தியப் போரில் அவரால் செலுத்த முடிந்தது. வார்கான் உடன்படிக்கையை ஏற்காததுடன், வாரன் ஹேஸ்டிங்ஸ், வங்காளத்திலிருந்து ஆங்கிலப் படை ஒன்றையும் தளபதி கோதார்த் தலைமையில் பம்பாய் அரசின் உதவிக்கு அனுப்பிவைத்தார். ஜெனரல் கோதார்த் (General Goddard) வங்காளத்திலிருந்து ஒரு படையை இந்தியாவின் குறுக்கே வெற்றியுடன் செலுத்திவந்து அகமதாபாத்தையும் பேசீனையும் கைப்பற்றினர். அதனுடன் கெயிக்குவாரையும் போரிலிருந்து விலகச்செய்தார். பான்ஸ்லேயுடனும், நான பத்னவிசுக்கு எதிராகச் சதிசெய்து அதில் வெற்றியும் பெற்றார். பான்ஸ்லேயும் போரிலிருந்து விலகினர். பூபம் (Popham) தலைமையில், மற்றோர் ஆங்கிலப் படை ஸிந்தியாவின் புகழ்மிக்க குவாலியர்க் கோட்டையைக் கைப்பற்றியது. ஆனால், நான பத்னவிஸ் மனந் தளரவில்லை. நிஜாம், ஹைதர் கூட்டுடன் மிக மும்முரமாக ஆங்கிலேயருடன் மோதினர். ஆனால், மகாதேஜி ஸிந்தியா தோல்வியால் மனந்தளர்ந்ததுடன், ஆங்கிலேயருடன் சமா தானத்திற்கான பேச்சு வார்த்தைகளையும் தொடங்கினர். இதற் கிடையில் தென்னிந்தியாவிலும் ஆங்கிலேயர் வெற்றிகொள்ள ஆரம்பித்தனர்; ஐதர் அலியையும் தோற்கடித்தனர். நான பத்னவிஸை ஆங்கிலேயருடன் சமரச உடன்படிக்கை செய்து கொள்ளும்படி ஸிந்தியா வற்புறுத்தவே, அவரும் அதற்குச் சம்மதித்தார். முதலாம் மராத்தியப் போர் 1782ஆம் ஆண்டு சால்பை (Salbai) உடன்படிக்கைப்படி முடிவுற்றது. இதன்படி இரகுநாத ராவ் ஓய்வு ஊதியம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நாராயணன் மகன் இரண்டாம் மாதவராவ் பேஷ்வா

வாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஆங்கிலேயர் சால்சட்டைப் (Salsette) பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் நிர்ணயிக்கப்பட்டன.

நானு பத்னுவிஸ் திட்டமே சால்பை உடன்படிக்கையில் கூறப் பட்டுள்ளது. இதனுல் நானு பத்னுவிஸ்தான் வெற்றிபெற்ருர் எனலாம். ஆனுல், மிகவும் பரவலாகப் பார்த்தால் இப்படித்தான் தோன்றும். உன்னிப்பாகப் பார்த்தால் உண்மையில் வெற்றி பெற்றது ஆங்கிலேயர்தான் என்பது புலனுகும். ஏனெனில், மராத்தியப் போர் முடிவடைந்ததால் ஆங்கிலேயரால் மைசூர்ப் போரில் வெற்றி பெறமுடிந்தது. மேலும் இரண்டாம் மராத்தியப் போர் 1803ஆம் ஆண்டு தொடங்கியது. இதற்கு இடைப்பட்ட காலத்தை ஆங்கிலேயர் தங்களைப் பலப்படுத்துவதிலும் மற்ற விரோதிகளை அழிப்பதிலும் செலவிட்டனர். இவ்விதம் ஆங்கி லேயரின் ஆதிக்கத்தின் வளர்ச்சிக்கு சால்பை உடன்படிக்கை மிகத் துணைசெய்தது என்பதில் ஐயமில்லை எனலாம்.

இரண்டாம் மராத்தியப் போர் (1803—1805)

பேஸீன் உடன்படிக்கைப்படி, ஆங்கிலேயர் பேஷ்வாவின் உதவிக்கு வந்தனர். இதனுல் இரண்டாம் மராத்தியப் போர் 1803ஆம் ஆண்டு மூண்டது. தலைமை ஆளுநரின் சகோதரர் சர் ஆர்தர் வெல்லெஸ்லி பேஷ்வாவைப் பூனுவில் மறுபடியும் பதவியில் அமர்த்தினர். பேஸீன் உடன்படிக்கை இந்திய வர லாற்றில் மிக முக்கியக் கட்டத்தைக் குறிப்பதாகும். இந்த உடன் படிக்கை, ‘இந்தியாவில் ஆங்கிலேயர் என்பதை மாற்றி, ஆங்கி லேயரின் இந்தியா’ என்ற நிலைமை ஏற்படக் காரணமா யிருந்தது என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

துணைப்படைத் திட்டத்தை ஏற்றது மராத்தியரின் சுதந் தரத்திற்கு மரணக்குழி தோண்டியதைப் போலாகும் என்று மராத்தியத் தலைவர்கள் கருதினர். மற்ற மராத்தியத் தலைவர் களையும், இத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவருவதற்கு இவ் வுடன் படிக்கை முன்னேடியாய் அமையும் என்றும் கருதினர். ஆகவே, துணைப்படைத் திட்டத்தை பேஷ்வா ஏற்றதை மற்ற மராத்தியத் தலைவர்கள் எதிர்ப்பதெனமுடிவுகொண்டனர். ஆனுல், இந்த முக்கியமான நேரத்திலும், ஹோல்காரும் கெயிக்குவாரும் மற்ற மராத்தியத் தலைவருடன் கூட்டுச்சேர மறுத்தனர்.

போர் நிகழ்ச்சிகள்

மராத்தியரை எல்லாப் பகுதியிலிருந்தும் ஆங்கிலேயர் தாக்கினர். ஆனுல், முக்கியத் தாக்குதல்கள் இரண்டு பகுதிகளில்

நடைபெற்றன. தென்னிந்தியாவில் சர் ஆர்தர் வெல்லெஸ்லி அகமதாபாத்தைக் கைப்பற்றினர். சிந்தியாவின் படைகளை நர்மதை ஆற்றுக்குத் தெற்கேயுள்ள அஸ்ஸே என்னுமிடத்தில் முறியடித்து வெற்றிபெற்றார். இதில் பான்ஸ்லேயின் படையும் தோற்றது. பான்ஸ்லேயைப் பீராரில் உள்ள ஆர்கான் என்னுமிடத்தில் தோற்கடித்துப் பர்ஹான்பூர், அஸ்ஸீர்கார் என்னுமிடங்களைக் கைப்பற்றினர். பான்ஸ்லேயின் தலைநகராகிய நாகபுரியை வெல்ல நினைத்து கவில்கார்க் கோட்டையை முற்றுகையிட்டு வெற்றிபெற்றார். அறிஞர் கிராண்ட் டப் என்பாரின் கருத்துப்படி, ஆர்தர் வெல்லெஸ்லியின் தென்னிந்திய வெற்றிகளில் அஸ்ஸே என்ற இடத்தில் பெற்ற வெற்றியே மிகச் சிறந்தது ஆகும். ஏனென்றால், சிந்தியாவின் ஃபிரெஞ்சுப் படையும் அஸ்ஸேப் போர்க்களத்தினால் தோல்வியுற்றது. ரகூஜி பான்ஸ்லே வெல்லெஸ்லியின் வெற்றிக்குப் பின்னர் ஆங்கிலேயரின் துணைப்படை முறையே ஏற்றுக்கொண்டமையால் கட்டாக்கும் பாலாசூரும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. ஸிந்தியா தொடர்ந்து போரை நடத்தினர். வட இந்தியாவில் ஜெனரல் லேக் (General Lake) ஸிந்தியாவிடமிருந்து அலிகாரைக் கைப்பற்றினர். டெல்லியையும் ஆக்ராவையும் பிறகு கைப்பற்றினர். இதனால் முகலாய மன்னர் ஷா ஆலம் மறுபடியும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப் பட்டார். தோல்விமேல் தோல்வி அடைந்ததால், சுர்ஜி அன்ஜென் கௌன் (Surji Anjen-gaon) என்ற உடன்படிக்கையினைச் செய்துகொண்டு, ஸிந்தியா போரிலிருந்து விலகினர். ஸிந்தியாவும் இதனால் துணைப்படைத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டார். ஆங்கிலேயரின் போர்த் தந்திரங்களும் மராத்தியரின் ஒற்றுமையின்மையும் அவர்களின் வீழ்ச்சிக்கு வழி கோலின. மராத்தியக் கூட்டரசிற்கு இதனால் சாவுமணியும் அடிக்கப்பட்டுவிட்டது. ஆங்கிலேயரின் அரசு மிகவும் விரிவு பெற்றது. பான்ஸ்லே கட்டாக்கையும், ஸிந்தியா யமுனை, கங்கை நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்தனர். ஆங்கில நிலேயர் (Resident) ஸிந்தியா, பான்ஸ்லே, தலைநகர்களில் வசிக்கலாயினர். உடன்படிக்கைக்கு உட்பட்டுத் தம் வாழ்நாள் வரை, ஸிந்தியா ஆங்கிலேயருடன் ஒற்றுமையாயிருந்தார்.

ஹோல்காரின் போர்

பான்ஸ்லேயும் ஸிந்தியாவும் உடன்படிக்கை செய்து கொண்டு போரிலிருந்து விலகிய பிறகு, ஹோல்கார் ஆங்கி


மராத்தியப் போர்கள்
இமாலய மலைகள்
டெல்லி (1803)
லாஸ்வரி (1803)
டிக் (1804)
பரத்பூர் (1805)
டோங்க்
குவாலியர் (1780)
கோடா
மஹித்பூர் (1818)
இந்தூர்
விந்திய மலை
போபால்
ஆர்கான்
அஸ்ஸேய் (1803)
நாகபுரி
சிதபால்டி (1817)
அஹமது நகர் (1803)
கார்டா (1795)
ஐதராபாத்
சூரத்
பம்பாய் (1817)
சால்செட்
பூனா
லக்னோ
பாட்னா
அலகாபாத்
வங்காள விரிகுடா
மைகல் மலைகள்
ஆரவல்லி மலைகள்
ரவிநதி
சட்லஜநதி
யமுனை
கங்கை
சாம்பல்நதி
நர்மதைநதி
தப்திநதி
கோதாவரிநதி
கிருஷ்ணாநதி
மகாநதி
அசீர்கார் (1819)
மகாதேவமலை

லேயருடன் 1804-ல் போர் தொடுத்தார். 'கொரில்லா'ப் போர் முறைப்படி தாக்கி முதலில் சில வெற்றிகளையும் பெற்றார். 1804-ல் முகுந்தராக் கணவாயில் (Mukundara Pass) ஹோல்கார், கர்னல் மான்சன் (Col. Monson) தலைமையில் இயங்கிய ஆங்கிலப் படையைத் தோற்கடித்தார். கொரில்லாப் போர் முறையால் ஆங்கிலேயரிடையே குழப்பத்தையும் திகைப்பையும் உண்டு பண்ணினார். இதனால் ஊக்கமடைந்த பான்ஸ்லே மறுபடியும் போரில் கலந்துகொண்டார். வெல்லெஸ்லியின் பேராவலை இயக்குநர் வாரியம் முதலிலிருந்தே ஆதரிக்கவில்லை. ஹோல்காரால் ஆங்கிலப் படைக்கு இழுக்கு ஏற்பட்ட உடனே, வெல்லெஸ்லியைத் தாயகத்திற்குத் திரும்பி அழைத்திட உத்தர விட்டனர்.

மூன்றும் மராத்தியப் போர் (1817—1819)

பிண்டாரிக் கொள்ளைக் கூட்டத்திற்கும் மராத்தியருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. மராத்தியர்கள் அவர்களைத் தாற்காலிகப் போர்வீரர்களாக அவ்வப்பொழுது பயன்படுத்தி வந்தனர். நிரந்தர ஊதியம் தராமல், சூறையாடப்பட்ட பொருளில் மட்டும் பங்குகொடுத்து வந்தனர். பிண்டாரியர்கள் நாட்டில் மக்களைச் சொல்லவொண்ணா இன்னல்கட்கு உட்படுத்தி வந்தனர். ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகளை அவர்கள் கொலை, கொள்ளை முதலிய கொடிய செயல்களுக்கு இலக்காக்கி வந்தனர்.

ஹேஸ்டிங்ஸ் பிரபு பிண்டாரியை ஒழிக்கத் தீவிரத் திட்டம் தீட்டினார். இதனால் மராத்தியருடன் மோதுதலைத் தடுக்க முடியாதென்றும் நன்கு உணர்ந்தார். அதை மனத்தில் கொண்டே பிண்டாரியரை ஒழிப்பதில் இறங்கினார். பேஷ்வா பாஜிராவ் துணைப்படைத் திட்டத்தினால் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டார் என்று ஏற்கெனவே கண்டோம். இவ் வாதிக்கத்தை நீக்கப் பாஜிராவ், மற்றத் தலைவர்களுடன் சதியாலோசனை நடத்தினார். பேஷ்வா பாஜிராவின் சதிச் செயல்களைப் புரிந்துகொண்ட ஹேஸ்டிங்ஸ், 1817ஆம் ஆண்டு ஒரு புது உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அவ் வுடன்படிக்கையின்படி பேஷ்வாவின் எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றிக் கொண்டார். ஆங்கிலேயரின் உத்தரவின்றித் தனித்து எதையும் செய்ய இயலா நிலைக்கு அவரை ஆக்கினார். ஆத்திரமடைந்த பேஷ்வா, ஆங்கிலேயருக்கு எதிராகப் போரில் இறங்கினார். பூனாவிலிருந்த ஆங்கில நிலையரின் (Resident)

நிலையத்தைத் தீக்கிரையாக்கினர். மூன்றும் மராத்தியப் போர் இதனால் 1817ஆம் ஆண்டு மூண்டது.

போர் நிகழ்ச்சிகள்

பேஷ்வாவை வெகு எளிதில் கிர்க்கி (Kirkee) என்ற இடத்தில் ஆங்கிலப் படை தோற்கடித்தது. பூனாவையும் மீண்டும் வெகு எளிதில் கைப்பற்றிக்கொண்டது. பேஷ்வாவுக்கு ஆதரவாகப் பான்ஸ்லேயும் போரில் இறங்கினர். அவரையும் சித்தபல்டி (Sitabaldi) என்ற இடத்தில் தோற்கடித்தனர். ஹோல்காரும் போரில் இறங்கினர். அவரையும் மஹித்பூர் (Mahidpur) என்ற இடத்தில் தோற்கடித்தனர். ஹோல்கார், 1818-ல் ஹேஸ்டிங்ஸுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். பான்ஸ்லே, ஜோத்பூருக்கு ஓடிச் சென்று, 1840-ல் அங்கு இறந்தார். புதிய பான்ஸ்லேயான ரகூஜி பான்ஸ்லே, ஆங்கிலேயருடன் நேச உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டார்.

பாஜிராவும் அஸ்தி (Asti), கோராகௌன் (Koragaon) என்ற இடங்களில் தோல்வியுற்றார். இதனால் 1818ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடம் சரணடைந்தார். மூன்றும் மராத்தியப் போர் 1819ஆம் ஆண்டு முடிவுற்றது. ஆண்டிற்கு எட்டு இலட்ச ரூபாய் ஓய்வு ஊதியம் கொடுக்கப்பட்டு, பாஜிராவ் பேஷ்வா பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதனால் மராத்தியர் ஒன்றுபட இயலாதவாறு செய்யப்பட்டது. கான்பூர் அருகிலுள்ள பிதூர் (Bithur) என்ற இடத்தில் பாஜிராவ் குடியேறினர். பேஷ்வாவின் பகுதி ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது. பம்பாய் மாநிலம் இப் பகுதியைக்கொண்டே உருவாகியது. மராத்திய மக்களின் உணர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில், சிவாஜியின் வழிவந்த பிரதாப்சிங் என்பவரை அரசர் என்ற உரிமையுடன் 'சதாராவை' ஆளும்படி ஹேஸ்டிங்ஸ் அனுமதித்தார். ஆனால், ஆங்கில நிலையர் (Resident) ஒருவரும் அங்கு அமர்த்தப்பட்டார். மராத்திய அரசர், ஆங்கிலேயருக்கு எதிராகச் சதியில் ஈடுபடாமலிருக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஹோல்காரின் அரசும் மிகக் குறுகியதாகச் செய்யப்பட்டது. துணைப்படை ஒன்றும் அங்கே வைக்கப்பட்டுப் புது உடன்படிக்கையும் செய்துகொள்ளப் பட்டது. ஸிந்தியா ஒருவருக்குத்தான் ஒரு தனிப் படை வைத்துக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. இராஜபுத்திர அரசர்களையும், மராத்தியரின் ஆதிக்கத்திலிருந்து நீக்கி ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தனர். மராத்தியர் அரசியல் வாழ்க்கை இவ்விதம் ஒடுங்கிப் போயிற்று.

12. வில்லியம் பெண்டிங்க் பிரபு
(1828—1835)

வில்லியம் பெண்டிங்கின் வருகை இந்திய வரலாற்றில் பல வகைகளில் புதிய சகாப்தத்தை உருவாக்கியது. ஏற்கெனவே சென்னையில் ஆளுநராய்ப் பணியாற்றிப் போதிய அனுபவம் பெற்றிருந்த அவர், இங்கிலாந்திற்குத் திருப்பி அழைக்கப்பட்ட பிறகு ஸ்பெயின் போரிலும், சிசிலிப் போரிலும், ஜெனீவாப் போரிலும் கலந்துகொண்டார். தலைமை ஆளுநர்களில் மக்கள் நலன் கருதி ஆண்ட முதல் ஆங்கிலேயர் இவரே. ஆளுநர் பதவியில் தனிச் சிறப்புகள் பெற்றார். போரினால் பெற்ற வெற்றிகளைவிடத் தாம் மேற்கொண்ட சீர்திருத்தங்களாலேயே புகழ் பெற்றார்.

பெண்டிங்க் பிரபு ஆட்சியில் அனுமதியையும், கட்டுப்பாட்டையும், சிக்கனத்தையும் கடைப்பிடித்தார். ஹேஸ்டிங்ஸ், ஆம்ஹர்ட்ஸ் ஆகியோர் செய்த போரினால் வணிகக் குழுவின் நிதிநிலை மிகவும் பாதிக்கப்பட்டது. இங்கிலாந்தில் ஆட்சி செலுத்திவந்த அமைச்சரவை, நிதிநிலை சீர்திருத்தம் பெற மேற்கொண்ட கொள்கையில் ஆதரவு அளித்தது. சிக்கனம், செலவுச் சுருக்கம், வருவாய் அதிகரிப்பு ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயல் திட்டங்களை அமைத்துக்கொண்டார்.

முதலில் பொருளியல் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். படைத்துறையிலும் பொதுத்துறையிலும் ஏற்படும் செலவுகளை எவ்வகையில் குறைக்கலாம் என்பதை அறிந்து அறிக்கை அளித்திட இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன. அக் குழுவின் அறிக்கைப்படி தேவையில்லாத பதவிகளை ஒழித்தும், படித் தொகையினைக் குறைத்தும், ஊரியல் அலுவலர் ஊதியத்தைக்

குறைத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இராணுவத்தினருக்குப் போர்க்காலப் படியினை அரைப்பங்காகக் குறைத்தார். இவர் பதவிக்கு வருவதற்கு முன்னர் இதே முயற்சியினை இயக்குநர்கள் மேற்கொண்டு தோல்வியடைந்தனர். இவருடைய முயற்சிக்குப் படையினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக அறிவித்தவுடன் அந்த எதிர்ப்பு அடங்கியது.

அபின் என்னும் போதைப் பொருளை அரசாங்கத்தின் தனி வணிகப் பொருளாக மாற்றினர். விற்பனையை ஒழுங்குபடுத்த ஒழுங்குமுறை கொண்டுவரப்பட்டது. வங்காளத்தில் பலர் வரி கொடாது நிலங்களை அனுபவித்து வந்தனர். 1828-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களை, அவ்வாறு அனுபவித்து வருகின்றவர்கள் உண்மையிலேயே தகுதி பெற்றவர்களா என்று விசாரித்து அறிக்கை அனுப்புமாறு கட்டளையிட்டார். தனி ஆணையாளர்களும் நியமிக்கப்பட்டு, அந் நிலங்கள் அரசாங்க நிலங்களாக மாற்றப்பட்டன. அவற்றிலிருந்து வரும் நில வருவாயைப் பெற்றுப் பொது வருவாயை உயர்த்தினர். இராபர்ட் பேர்டு என்பவரின் உதவியோடு வடமேற்கு மாநிலத்தில் நில வருமானத்தைச் சீர்திருத்தம் செய்து அரசாங்க வருவாயைப் பெருக்கினர். அரசாங்கம் மற்றவரிடமிருந்து பெற்ற கடனுக்கு அதிக வட்டி கொடுத்துவந்தது. அவ் வட்டி விகிதம் குறைக்கப்பட்டது. இந்தியர்களைப் பதவியில் அமர்த்தியதன்மூலம் அரசு செலவில் சிக்கனம் ஏற்பட்டது. இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் ஐரோப்பியர்களுக்குக் கொடுக்கப்பட்டதைவிடக் குறைவாகவே இருந்தது. 10 இலட்சம் ஸ்டர்லிங் நட்டத்துடன் இருந்துவந்த அரசுநிதி பெண்டிங்க் பிரபு காலத்தில் 20 இலட்சம் ஸ்டர்லிங் உபரி வருமானமாக மாறியது.

நீதித்துறை மாறுதல்கள்

நீதித்துறைச் சீர்திருத்தங்களுக்கு மெட்காப், பட்டர்வொர்த், பாய்லி, ஹோல்ட் மெகன்ஸி ஆகியோர் உதவி செய்தனர். 1829-ல் மாநில மேல்முறையீட்டு மன்றங்களையும், சுற்றுமுறைவர் நீதிமன்றங்களையும் பெண்டிங்க் நீக்கிவிட்டார். அதற்குப் பதிலாக வருவாய்த்துறை ஆணையாளர்களையும், சுற்று ஆணையாளர்களையும் நியமித்தார். வங்காளம் இருபது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிற்கும் ஓர் ஆணையாளர் நியமிக்கப்பட்டு, மாநில மேல்முறையீட்டு மன்ற நீதிபதிகளும், சுற்றுமுறைவர் நீதிபதிகளும் கவனித்து வந்த பணிகளை மேற்கொள்ளுமாறு

செய்யப்பட்டது. சதர் நிசாமத் அதாலத், வருவாய்த் துறை வாரியம் ஆகியவற்றின்கீழ் இந்த ஆணையாளர்கள் பணி யாற்றினர்.

மாநிலங்களில் விசாரணைகளும், குறுக்கு விசாரணைகளும் பாரசீக மொழியில் நடைபெற்று வந்ததை மாற்றி அந்தந்த மாநிலங்களின் பிரதேச மொழியிலேயே வழக்குகளை விசாரிக்கும் படி செய்தார். இந்தியர்களுக்கு உயர்ந்த பதவிகள் வழங்கப் படாது இருந்த நிலையை மாற்றி இந்தியர்களுக்கு உயர்ந்த பதவிகள் அளித்தார். ஆங்கில அதிகாரிகளுக்குக் கொடுக்கப் பட்டு வந்தது போலவே ஊதியமும் வழங்கப்பட்டது.

சமூகச் சீர்திருத்தங்கள்

சமூகச் சீர்திருத்தங்களின் வாயிலாக இந்திய மக்களின் உள்ளத்தில் அழியாத இடம் பெற்றிருப்பவர் பெண்டிங்க். மிகப் பண்டைக் காலத்திலிருந்து வந்த உடன்கட்டையேறுதல் என்னும் கொடிய வழக்கத்தினை நிறுத்தினார். அக் காலத்தில் சிறந்து விளங்கிய மன்பதை சீர்திருத்தவாதிகளான இராஜாராம் மோகன்ராய், துவாரகாநாத் தாகூர் போன்றவர்களின் ஒத் துழைப்புடன் 'சதி' என வழங்கப்பட்ட உடன்கட்டை ஏறுதலை ஒழித்தார். 1829-ல் இதற்கெனச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இந்துக்கள் எதிர்த்தபோதும் உறுதியாக நின்று அதனை நிறை வேற்றினார்.

இராஜபுத்திரர்கள் பெண்களைப் பாவத்தின் பிறப்பிடம் என்று கருதினர். எனவே 'பெண் குழந்தை' பிறந்தால் அதனைச் சுமை என்று எண்ணிக் கொலைசெய்தனர். இதனையும் ஒரு சட்டத்தால் தடுத்தார். இந்துக்களிடமிருந்த நரபலி கொடுக்கும் வழக்கமும் ஒழிக்கப்பட்டது.

தக்கர்கள் என்னும் கொள்ளைக் கூட்டத்தினர் மத்திய ஆசியா முழுவதும் பரவியிருந்தனர். அவர்கள் இந்திய எல்லைக்குள் புகுந்து இந்தியர்களைத் துன்புறுத்தினர். தக்கர்கள் என்னும் கூட்டத்தில் இந்துக்களும் முகமதியர்களும் இருந்தனர். வழிப் போக்கர்களைப் போல உடையணிந்து சாலையில் செல்வோரை மடக்கி அவர்கள் செல்வத்தைக் கொள்ளையடித்தும் கொலை புரிந்தும் வாழ்ந்தனர். பெண்டிங்க் பிரபு அவர்களது தலைவர் களில் சிலரை மடக்கிப் பிடித்து அவர்கள் மூலமாகவே பிறரைச் சிறைப்படுத்தியும், சிலரைச் சீர்திருத்தியும், சிலரை நாடு கடத்தியும் மக்களுக்கு நன்மை செய்தார். இப் பணியில் சர்

வில்லியம் சிலிமன் என்பவர் இவருக்குப் பேருதவியாக இருந்தார். சாலைகளில் இவர்கள் ஒழிக்கப்பட்ட பின்னர் அமைதி நிலவியது.

கல்வித்துறை மாறுதல்கள்

இந்திய ஆங்கிலக் கல்வி வரலாற்றிலும் பெண்டிங்கின் பெயர் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டும். 1813ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி ஆண்டுதோறும் ஓர் இலட்சம் ரூபாயை வணிகக் குழுவினர் இந்தியரின் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து ஆங்கிலக் கல்விக்குச் செலவிடுவதா வடமொழிக் கல்விக்குச் செலவிடுவதா என்ற போட்டியின் விளைவாகப் பணம் செலவு செய்யப்படாமலேயே பெண்டிங்க் காலம்வரை சேர்ந் திருந்தது. இராஜாராம் மோகன் ராய் போன்றவர்கள் அவ ருடைய பல சமூகச் சீர்திருத்தங்களை ஆதரித்ததைப் போலவே, ஆங்கிலக் கல்வியையும் ஆதரித்தனர். இதன் விளைவால் தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவின் சட்ட உறுப்பினரான மெக்காலே (Macaulay) என்பவரால் பிரேரேபிக்கப்பட்டு ஆங்கிலக் கல்விக்காகவே அப் பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இவ்விதமே ஆங்கில மொழி இந்தியாவில் பயிற்சி மொழியாகவும் • ஆட்சி மொழி யாகவும் வளர வித்திடப்பட்டது. பெண்டிங்கின் காலத்திலே தான், மெக்காலே பிரபு கீழ்த்திசை மொழிகளை ஆதரிப்பவர்கள் கொண்டிருந்த கருத்தைக் கடுமையாகக் கண்டித்து, ஆங்கில மொழியையும், மேலைநாட்டு விஞ்ஞானத்தையும் கற்பதிலுள்ள பலன்களை மிகைப்படுத்தியே விளக்கினர். கீழ்த்திசைக் கல்வியின் முக்கியத்துவத்தை இவர் அடியோடு தாழ்த்தியே மதிப் பிட்டார். 'ஆங்கிலக் கல்வி முறையில் பயின்ற இந்தியர், ஆங்கில நாட்டைப் போல் ஆட்சி முறையும் கேட்டால் ஆச்சரியப் படுவதற்கில்லை' என்றுர். பெரிய உண்மையினை அன்றே கூறினர். ஆங்கில மொழியின்றிச் சுதந்திர உணர்ச்சி இந்தி யாவில் ஏற்பட்டிருக்குமா இராதா என்ற வாதத்தை நீக்கிச் சார்பற்ற வரலாற்று ஆசிரியர் எவரும், ஆங்கிலக் கல்வி இந்திய சுதந்திரத்திற்கு அடிகோலிட்டதன்றி, நாட்டின் பல்வேறு மொழி யினரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், ஒருவரை ஒருவர் ஈர்க்கவும் பெரிதும் உதவியதென்பதை மறுக்க முடியாது. மேலும், ஆங்கிலக் கல்வி வணிகக் குழுவின் ஆட்சிக்கு இந்திய ஊழியரை உற்பத்தி செய்யவே இந்தியாவில் திணிக்கப் பட்டதென்று கூறுவதும் சரியில்லை. ஆங்கிலக் கல்வி இந்தி யாவில் பரவுவதை ஆங்கிலேயர் பலர் விரும்பவில்லை என்பதை

1813ஆம் ஆண்டிலிருந்து 1835ஆம் ஆண்டு வரை ஒரு முடிவு காணமுடியாத அளவுக்கு அதற்கு இருந்த கடும் எதிர்ப்பே நன்கு தெரிவிக்கின்றது.

மற்றச் சீர்திருத்தங்கள்

1835ஆம் ஆண்டில் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச்செல்லச் செலுத்த வேண்டிய வரியை (transit duties) ஒழித்தார். நீராவிப் படகு, கப்பல் போக்குவரத்தைத் தொடங்கி வைத்தார். கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு ஒரு நெடுஞ்சாலையை நிறுவி, பம்பாயிலிருந்து ஆக்ராவிற்கும் அவ்விதமே சாலையை அமைக்க வழிவகுத்தார். காப்பி, தேயிலை போன்ற வியாபாரப் பொருள்கள் (commercial crops) இந்தியாவில் பயிரிட வழிவகுத்தார். இரும்பு, நிலக்கரி முதலியன தோண்டி எடுத்திட வழிசெய்தார். நீர்ப்பாசன வசதிக்காக வடிகால் திட்டம் ஏற்படுத்தியதோடு கால்வாய்களை வெட்டவும் செய்தார். இந்தியப் படையில் கசையடி கொடுத்து வந்ததையும் நிறுத்தினார்.

வெளித்துறைக் கொள்கை

பெண்டிங்க் பிரபுவின் வெளித்துறைக் கொள்கை பெரிதாக மதிக்கப்படும் அளவிற்குச் சிறந்து விளங்கவில்லை. ஐதராபாத், அயோத்தி, பரோடா, இந்தூர், போபால், குவாலியர் ஆகிய இடங்களில் குழப்பங்களும் கலகங்களும் ஏற்பட்டபோது தம் தலையிடாக் கொள்கையை மீறி அவற்றில் தலையிடவில்லை.

மைசூர்

மைசூரில் மூன்றும் கிருஷ்ணராஜர் தம் அமைச்சர் பூர்ணையாவின் உதவியோடு ஆட்சி செய்தவரை அமைதி நிலவியது. ஆனால், தாமே எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார். அதன் பின்னர் எங்கும் குழப்பம் நிலவியது. மூன்றும் கிருஷ்ணராஜருக்கு அதனை அடக்கும் திறன் இல்லை. 1830-ல் நகரி என்னுமிடத்தில் பொதுமக்கள் கலகம் ஏற்படவே பெண்டிங்க் அவரைப் பதவியிலிருந்து நீக்கி, ஓய்வுகால ஊதியம் கொடுத்து மைசூரை ஆங்கில ஆட்சியுடன் இணைத்துக் கொண்டார். 1831 முதல் 1881 வரை ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் இருந்துவந்த மைசூர், ரிப்பன் பிரபுவின் காலத்தில் மீண்டும் அரச குடும்பத்திற்கே திருப்பி அளிக்கப்பட்டது.

காச்சார்

இது வங்காளத்திற்கு வடகிழக்குப் பகுதியிலுள்ள நாடாகும். 1832-ல் அதனை ஆண்ட அரசர் கொலை செய்யப்பட, நாட்டில் அமைதியின்மையும் அட்டூழியங்களும் பெருகின. மக்கள் பெண்டிங்க் பிரபுவைத் தலையிடுமாறு வேண்டினர். பெண்டிங்க் தலையிட்டு காச்சாரைச் சேர்த்துக்கொண்டார். தேயிலைப் பயிருக்கு ஏற்ற இடமாகக் காச்சார் விளங்கியதால் ஆங்கிலேயரின் தேயிலை வணிகம் பெருகியது.

கூர்ஜரம்

இதனை ஆட்சி செய்த வீர ராஜா என்பவரால் மக்கள் சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாகவே அவர்கள் தலைமை ஆளுநர் பெண்டிங் பிரபுவைத் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு வேண்டவே 1834-ல் கூர்ஜரத்தின்மீது படையெடுத்து, அக் கொடுங்கோல் மன்னரைக் கைது செய்து ஆங்கிலப் பேராட்சியுடன் அந் நாட்டைச் சேர்த்துக்கொண்டார். வீர ராஜா ஓய்வு கால ஊதியம் பெற்று இங்கிலாந்திற்குச் சென்றுவிட்டார்.

ரஷ்யர்கள்

ரஷ்யர்கள் மத்திய ஆசியாவில் முன்னேறிக் கொண்டிருப்பதைக் கண்ட பெண்டிங், ஆங்கில ஆட்சிக்கு இந்தியாவில் ரஷ்யர்களால் ஊறு ஏற்படும் என்பதை உணர்ந்து வடமேற்கு எல்லையிலுள்ள சிந்து, பஞ்சாப் ஆகிய நாடுகளுடன் நேச உறவு கொண்டார். பௌல்ஜர் என்பார், 'சிந்து நதியை ஆங்கிலேயரின் இந்தியக் கால்வாயாக மாற்ற வேண்டும் என்பதற்காகவே, சீக்கியர்களோடும் அமீர்களோடும் உறவு கொண்டாடினார்' என்று கூறுகின்றார். இந்திய அரசாங்கத்திற்குமிடையில் சிந்துவும் பஞ்சாபும் இடைப்பட்ட ஆட்சிகளாக மாறுவதால் ஆஃப்கானியரின் படையெடுப்பைப் பெண்டிங்க் பிரபுவால் தடுக்க முடிந்தது. சிம்லா, டார்ஜிலிங் ஆகியவற்றைக் கோடைக்கால மலைவாழ் தங்குமிடங்களாக மாற்றி ரஷ்யப் படையெடுப்பின் அச்சத்தைப் போக்கினார்.

மதிப்பீடு

மார்ச்சுத் திங்கள் 1835-ல் பெண்டிங்க் பிரபு உடல்நலக் குறைவால் இங்கிலாந்துக்குத் திரும்பினாலும், எப்போதும் இந்தியாவின் நலன்களிலேயே நாட்டம் கொண்டிருந்தார். உடல் நலத்தைத் தேற்றிக்கொள்ளப் பாரிஸ் சென்ற இவர் 1869-ல் பாரிஸில் உயிர் நீத்தார்.

வணிகக் குழுவின் பொருளாதாரம் செம்மைப்படுத்தப் பட்டது இவராலேதான். இந்தியாவை ஆண்ட பல தலைமை ஆளுநர்களில் பெண்டிங்க் பிரபுவே எல்லா வரலாற்று ஆசிரியர் களாலும் ஒருமனதாய்ப் புகழப்படுபவர். ஆங்கிலேயரின் தலையாய கடமை, அவர்களால் ஆளப்படுகின்ற இந்தியர்களுக்குக் கல்வியறிவையும் சுதந்திர உரிமையையும் தரவேண்டுவதே என உணர்ந்து அதைச் செயலளவில் காட்டிய முதல் தலைமை ஆளுநர் பெண்டிங்கே ஆவார்.

சர் சார்லஸ் மெட்காஃப் (1835—36)

பெண்டிங்க் பிரபுவிற்குப்பின், தாற்காலிகமாகச் சர் சார்லஸ் மெட்காஃப் (Sir Charles Metcalf) தலைமை ஆளுநராகப் பணி யாற்றினர். அவர் பதவியிலிருந்த ஓராண்டு காலம், பெண்டிங்க் காலத்திய கொள்கையை மாற்ருமல் பின்பற்றினர். அச்சகத்தார் செய்தித்தாளை வெளியிடுவதற்கு முன் அரசினரின் உரிமத்தினைப் (license) பெறவேண்டும் என்ற ஜான் ஆதாம் (John Adam) விதித்திருந்த விதிமுறையினை ஒழித்துவிட்டதன் காரணத்தால், இயக்குநர்கள் அவரைத் தலைமை ஆளுநர் பதவியிலிருந்து நீக்கினர். பிறகு ஆக்லண்டு பிரபுவை (Lord Aukland) தலைமை ஆளுநர் பதவியில் அமர்த்தினர்.

ஜார்ஜ் ஈடன் பாரன் ஆக்லண்டு பிரபு (1836—1842)

ஆக்லண்டு திறமை மிக்கவரும் நேர்மையானவருமாவர். ஆனால், சிக்கலில் சரியான முடிவு எடுக்கும் திறன் அற்றவராக விளங்கினர். ஆட்சியில் குறிப்பிடும் மாற்றங்கள் எதுவும் செய்ய வில்லை. பெண்டிங்க் தொடங்கிவைத்த நீர்ப்பாசனத் திட்டத்தைத் தொடர்ந்து விரிவுபடுத்தினர், 1837—38-ல் இந்தியாவில் மாபெரும் பஞ்சம் உண்டாயிற்று. ரூ 40 இலட்சம் செலவு செய்து பஞ்சத்தைச் சமாளிப்பதற்குரிய பெரியதொரு திட்டம் வகுத்தார். ஆனால், போக்குவரத்து இடையூறுகளால் அத் திட்டம் வெற்றி பெறவில்லை. இந்திய மக்களின் சமயத் துறையில் அரசு தலையிடாமல் நடுநிலைமையைக் கடைப்பிடித்தார். புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு விதிக்கப்பட்டு வந்த வரியை நீக்கினர். பொதுவாகத் தலையிடாக் கொள்கையைக் கடைப் பிடித்தாலும் சூழ்நிலையின் கட்டாயத்தினல் சில இந்திய அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டார். சதியாலோசனை செய்தார் என்ற காரணத்திற்காகச் சதாரா அரசரை நீக்கிவிட்டு, அவருடைய உறவினரைப் பதவியில் அமர்த்தினர். கர்னூலை (Karnal) ஆண்ட அரசரை நீக்கிவிட்டு,

அதை வணிகக் குழுவின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். இவர் காலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி முதல் ஆஃப்கானியப் போரேயாகும்.

முதல் ஆஃப்கானியப் போர் (1838—1842)

முதலாம் ஆஃப்கானியப் போருக்கு ஆக்லண்ட் பிரபுவே முக்கியக் காரணமாவார். ஆஃப்கானிஸ்தானஅமைப்பு, பிரிட்டன், ரஷ்யா ஆகிய பேரரசுகளின் ஆசிய ஆதிக்கத்திற்குப் பெரிதும் உதவும் நிலையில் இருந்தது. எந்த நாட்டுடன் ஆஃப்கானிஸ்தானம் தொடர்புகொண்டுள்ளதோ, அந் நாடு மற்றநாட்டிற்கு ஆபத்துத் தரக்கூடிய நிலையிலிருந்தது. ருஷ்யாவின் ஆதிக்கம் துருக்கியிலும், பாரசீகத்திலும் பரவவே, அதன் ஆதிக்கம் மேலும் பரவாமலிருக்க ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் ஆஃப்கானிஸ்தானம் இருத்தல் அவசியம் எனக் கருதப்பட்டது. இதனால் ஆக்லண்டு பிரபு, 1838ஆம் ஆண்டு ரஞ்சித் சிங்குடனும், பாரசீக மன்னரான ஷுஜாவுடனும் (Shuja Shah), ஆப்ஃகானிய மன்னர் தோஸ்த் முகமதிற்கு (Dost Muhammad) எதிராக ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இவ் உடன்படிக்கையின் படி தோஸ்த் முகமதை நீக்கிவிட்டு, ஆஃப்கானிஸ்தான அரசு கட்டிலில் ஷா ஷுஜாவை அமர்த்த வேண்டும் என்பதே முக்கியக் குறிக்கோள் என அறிகிறோம். இது ஒரு தவறான உடன் படிக்கையாகும்.

முதலாம் ஆஃப்கானியப் போர் 1838ஆம் ஆண்டில் தொடங்கியது. ஆங்கிலேயர், ஷா ஷுஜா, ரஞ்சித் சிங் மூவரும் தோஸ்த் முகமதிற்கெதிராக கூட்டுச்சேர்ந்தனர். சீக்கியர் கைபர் கணவாயிலிருந்து ஆஃப்கானிஸ்தானத்தைத் தாக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆங்கிலப் படை போலன் கணவாய் வழியாய்க் குவெட்டாவை அடைந்தது. தண்ணீர், மற்றத் தேவைக்காகவும் ஆங்கிலேய வீரர்கள் மிகவும் சிரமப்படலாயினர். போரின்றி 1839-ல் காந்தகாரைக் கைப்பற்றினர். தோஸ்த் முகமது, காபூலைவிட்டு ஓடிவிடவே 1839ஆம் ஆண்டு ஷா ஷுஜாவை ஆஃப்கானிய அரசராக்கினர். இதன் பிறகே ஆங்கிலேயருக்குக் கெட்ட காலம் ஆரம்பித்தது:

இரஞ்சித் சிங் இறந்துவிடவே, அவருக்குப் பின் பஞ்சாபின் பலம் சீர்குலைந்தது. ஆஃப்கானியப் போரை நடத்திய தளபதிகள் அவ்வளவு திறமை வாய்ந்தவர்கள் என்று சொல்லமுடியாது. ஆஃப்கானிய மக்கள், தோஸ்து முகமதுவின் மகன் அக்பர்கான்

தலைமையின்கீழ் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரண்டெழுந்தனர். ஆங்கிலத் தளபதிகளையும் வஞ்சகமாகக் கொலை செய்தனர். தலைமையற்ற ஆங்கிலப் படை காபூலைவிட்டு 1842-ல் பின்வாங்கியது. பின்வாங்கும் படைக்குப் பாதுகாப்புத் தரப்படுமென்று ஆஃப்கானியர் உறுதிமொழி கொடுத்திருந்தனர். ஆனால், ஆயுதம் எதுவுமின்றி பின்வாங்கிய ஆங்கிலப் படையினரை ஆஃப்கானியர் மூர்க்கத்தனமாய்த் தாக்கிக் கொன்றனர். இயற்கையின் கடுமையான குளிரின்மூலம் ஆங்கிலப் படை மேலும் துயரமடைந்தது. ஆங்கிலப்படை முழுவதும் அழிக்கப்பட்டது. ஆக்லண்டின் ஆஃப்கானியக் கொள்கை முன்னறிவின்றி மேற்கொள்ளப் பட்டதே. தோஸ்த் முகமதுவின் செய்தியில் வலிய ஈடுபட்டார். ஆஃப்கானியப் போருக்குப்பின் ஆங்கிலப் படைகளைத் தகுந்த பாதுகாப்பின்றித் தங்க வைத்ததும் தவறே. ஆங்கிலப் படைக்கு நேர்ந்த அவமதிப்புக்காகவும், தோல்விகளுக்காகவும் ஆக்லண்ட் தம் பதவியைத் துறந்து இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். ஆக்ண்லடின் ஆட்சியில இந்து சமயமும் கோயில்களும் சிறப்புடன் விளங்கின. ஆங்கிலேயர், முதல் ஆஃப்கானியப் போரில் 3½ கோடி ரூபாயை இழந்தனர்.

எல்லன்பரோ பிரபு (1842—44)

எல்லன்பரோ பிரபு ஆஃப்கானிஸ்தானை ஆங்கிலேயர்கீழ்க் கொண்டுவரும் எண்ணத்தைக் கைவிட்டார். ஆனால், ஆஃப்கானிஸ்தானத்தில் ஆங்கிலேயர் அடைந்த அவமானத்தை நீக்கி, அவர்களின் மதிப்பை அங்கு நிலைநிறுத்த வேண்டுமென நினைத்தார். ஆகவே, ஒரு சிறந்த ஆங்கிலப் படையை ஆஃப்கானிஸ்தானத்திற்கு அனுப்பிக் காபூல் கோட்டையைக் கைப்பற்றச் செய்தார். மேலும், ஆங்கிலப் படை ஆஃப்கானிஸ்தானத்தில் தன் ஆதிக்கத்தைச் சிரமமின்றி மறுபடியும் நிலைநாட்டியது. எல்லன்பரோவின் இச் செய்கையால் ஆங்கிலேயரின் மதிப்பு ஆஃப்கானிஸ்தானத்தில் உயர்ந்தது. இதற்கிடையில் ஷா ஷூஜா கொலை செய்யப்பட்டுவிட்டதால் எல்லன்பரோ பிரபு 1843-ல் தோஸ்த் முகமதுவை மறுபடியும் ஆஃப்கானிஸ்தானின் மன்னராக்கினர். தோஸ்து முகமதுடன் ஒரு நட்புறவு உடன்படிக்கையும் செய்து கொண்டார். அதன் பிறகு தோஸ்த் முகமது ஆங்கிலேயரின் நம்பிக்கையான நண்பராயிருந்தார். சிப்பாய்க் கலகத்தின் போதும் ஆங்கிலேயருக்குப் பெரிதும் உதவினர்.

சிந்து இணைப்பு

1838ஆம் ஆண்டு சிந்துவை ஆண்டுவந்த அமீர்த் தலைவருடன் எல்லன்பரோ பிரபு ஒரு கட்டாய உடன்படிக்கையினைச்

செய்துகொண்டார். ஓர் ஆங்கிலத் துணைப்படையையும், ஆங்கிலேய நிலையரையும் (Resident) சிந்துவின் தலைநகரான ஐதராபாத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டும் என உடன்படிக்கை செய்யப்பட்டது. அதற்காக ஆண்டிற்கு மூன்று இலட்சம் காப்புப் பணம் அளிக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அமீர்த் தலைவர்கள் ஆங்கிலேயருடன் நன்றியுடனே நடந்து வந்தனர். ஆனால், எல்லன்பரோ எப்படியாவது சிந்துவைக் கைப்பற்ற வேண்டும் என்ற பேராவலுடன் இருந்தார். ஆங்கிலேயருக்கு எதிராக எப்படியாவது ஒரு சிறு கலகமாவது செய்யும் சூழ்நிலையை ஏற்படுத்தி, அந்தக் காரணத்தைக் காட்டிச் சிந்துவை ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர நினைத்தார். அவ்வாறே ஸர் சார்லஸ் நேப்பியரைச் சிந்துவிற்கு அனுப்பி, அமீர்கள் மீது அநாவசியமாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்குமாறு தூண்டினர். இதனால் சிந்து மக்கள், ஆங்கில நிலையரின் நிலையத்தைத் தாக்கினர். இதைக் காரணம் காட்டிச் சிந்துவை முடிவில் 1843-ல் ஆங்கில் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார். இது அதிகார வெறியும், ஆக்கிரமிப்பு ஆசையும் கொண்டதால் விளைந்த விளைவு ஆகும். சிந்து நாட்டின் உள் நாட்டு அரசியலில் தலையிட்டார். 1843-ல் சிந்துவை ஆண்ட ஜங்கோஜிராவ் சிந்தியா காலமானர். அதைத் தொடர்ந்து குவாலியரில் கலகங்களும் பூசலும் தோன்றின. அவற்றைக் காரணங்காட்டி எல்லன்பரோ ஓர் ஆங்கிலப் படையைக் குவாலியருக்கு அனுப்பி அக் கலகத்தை அடக்கியதுடன், சிந்தியாவுடன் ஒரு பாதுகாப்புமுறை நேச உடன்படிக்கையும் செய்துகொண்டார்.

சீக்கியருடன் போரிடுவதும் தடுக்கமுடியாததென்று எல்லன்பரோ தெற்றத் தெளிவாய் இயக்குநருக்குத் தெரியப்படுத்தினர். அதற்கான ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கையில் அவருடைய பதவிக்காலம் முடிந்தது. எல்லன்பரோவுக்குப்பின் ஸர் ஹென்றி ஹார்டிஞ்ச் பிரபு (Sir Henry Hardinge) தலைமை ஆளுநரானர்.

ஸர் ஹென்றி ஹார்டிஞ்ச் பிரபு (1844—1848)

ஹார்டிஞ்ச் பிரபு நாட்டின் வளர்ச்சியில் ஊக்கங் காட்டினர். பென்டிங்க் பிரபு காலத்தில் தடைசெய்யப்பட்ட உடன்கட்டை ஏறும் பழக்கத்தையும், பெண்மகவுக் கொலையையும், மனிதபலி முதலியனவற்றையும் தீவிரமாகச் செயல்படுத்தும்படி மாநிலங்களுக்கு உத்தரவிட்டார். ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட இந்தியச் சிற்றரசர்களையும் இக் கொடிய பழக்கங்களை அவர்களின் பகுதியி

லிருந்தும் ஒழிக்கும்படி பணித்தார்; பழங்காலச் சின்னங்களைப் (Ancient monuments) பாதுகாப்பதில் அக்கறை காட்டினார்; தாஜ் மஹாலையும், குதுப்மினாரையும் பழுதுபார்த்தார். பலதிறப்பட்ட சுங்க வரிகளை நீக்கி, வாணிகத்திற்கு ஊக்கமளித்தார்; பல கால் வாய்களை வெட்டும் திட்டத்தைத் தொடங்கி வேளாண்மையின் வளர்ச்சிக்கு வழிவகுத்தார்; கல்வி வளர்ச்சிக்காகவும் அஸ்ஸாமில் தேயிலை வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார்; அரசாங்கத்தாராலும், தனிப்பட்டோராலும் நடத்தப்படுகின்ற கல்வி நிலையங்களி லிருந்து வெற்றிபெற்று வெளியேறும் மாணவர்களுக்கு அரசாங்கத் துறைகளில் வேலை தரப்படும் என உறுதியளித்தார்; அதனுடன் ஆங்கிலம் படித்த இந்தியர்களைப் பொதுப்பணி களிலும் அமர்த்தினார். இவ்விதம் ஹார்டிஞ்ச் பிரபு பொதுநலத் துறையில் சிறந்த பணிகளைச் செய்து நல்ல பெயரைப் பெற்றார். இவர் ஆட்சியில் நிகழ்ந்த மற்றொரு சிறப்புமிக்க நிகழ்ச்சி முதல் சீக்கியப் போரேயாகும்.

முதல் சீக்கியப் போர் (1845—1846)

காரணங்கள்

இரஞ்சித் சிங்கின் மறைவிற்குப்பின், சீக்கிய அரசு இருளில் சிக்கித் தவித்தது. உள்நாட்டுக் கலகங்களும், கொலைகளும் சீக்கிய அரசைச் சீர்குலைந்தன. 1840-ல் சீக்கிய அரியணையில் அமர்ந்த இரஞ்சித் சிங்கின் இரண்டாவது மகனான ஷேர் சிங், 1843-ல் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் அவர் தம்பி திலீப் சிங் அரசானார். அவர் வயதில் மிகவும் இளையவராயிருந்ததால், அவர் தாயார் இராணி ஜிண்டான் அவருக்குப் பாதுகாவலராக இருந்து ஆட்சியை நடத்திவந்தார் என்று கண்டோம். ஜிண்டா னால் ஆட்சியை ஒழுங்குபடுத்த முடியவில்லை. கல்சா படையின் தளபதிகளே உண்மையான அதிகாரம் பெற்றிருந்தனர். இப் படையினர் கட்டுக்கடங்காமல் தம் போக்குப்படி செயல்பட்டு வந்தனர்.

கல்சா படையினரின் போக்கைக்கண்டு சந்தேகங்கொண்ட ஹார்டிஞ்ச் பிரபு, சிந்து எல்லையில் ஆங்கிலப்படையை வைத்தார். இப் படை தற்காப்புக்காக வைக்கப்பட்டதென்றாலும் சீக்கியர் இப் படை தங்களைத் தாக்கவே வைக்கப்பட்டதாகச் சந்தேகப் பட்டனர். மேலும், முதலாம் ஆப்கானியப் போரில் ஆங்கிலேயர் அடைந்த இன்னலாலும், தோல்வியாலும் ஆங்கிலேயரின்

படை பலத்திற்கிருந்த பெருமை குறையலாயிற்று, ஆங்கிலேயரை வெகு எளிதில் வென்றுவிடக் கூடும் என்ற எண்ணம் இதனுல் சீக்கியருக்கு ஏற்பட்டது.

இதனுடன் சீக்கியருக்குள் இருந்த கலகத்தையும், தலைவர்களுக்குள்ளிருந்த மனக் கசப்பையும் பயன்படுத்தி, பஞ்சாபை ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்ற உள்நோக்கமும் ஹார்டிஞ்ச் பிரபுவிற்கு இருந்ததென்றே சொல்ல வேண்டும். கல்சாப் படையினரின் ஆதிக்கத்தை ஒடுக்க, இராணி ஜிண்டானும், சீக்கியரின் ஆவேசத்தை ஆங்கிலேயருக்கு எதிராகத் தூண்டிவிட்டாள். ஆங்கிலேயர் பஞ்சாபைக் கைப்பற்ற முயற்சி செய்கின்றனர் என்ற வதந்தியைக் கிளப்பி விட்டாள். சீக்கியர் ஆங்கிலேயரை எதிர்த்தனர். இவ்விதம் முதல் சீக்கியப் போர் 1845-ல் மூண்டது.

போரின் போக்கு

சீக்கியப் படையும் ஆங்கிலப் படையும் முட்கியில் (Mudki) முதன்முதலில் சந்தித்தன. ஆங்கிலப் படைத்தலைவர் ஹியூகப் இப் போரில் சீக்கியரைத் தோற்கடித்தாலும், ஆங்கிலேயர்கள் அதிகமாகக் கொல்லப்பட்டனர். சீக்கியப் படைத்தலைவர்களுக்குள் ஏற்பட்ட பூசலே ஆங்கிலேயரைக் காப்பாற்றியது. அடுத்து, பெரோஸ் ஷாப் (Feroz Shah) போரில் ஆங்கிலேயர் ஏறக்குறையத் தோற்ற நிலையையே அடைந்தனர். லால் சிங், டெஜ் சிங் (Tej Singh) என்ற இரு சீக்கியத் தலைவர்களின் வஞ்சனையினுல், அந்த இக் கட்டிலிருந்தும் ஆங்கிலேயர் தப்பினர். சீக்கியப்படை மிகத் திறமையுடன் போரிட்டது. ஆனுல், அதன் தலைவர்கள் செய்த சதியினுல் அது விழலுக்கு இறைத்த நீராயிற்று. தலைவர்களின் சதியினுலேயே அலிவால் (Aliwal) போரிலும், ஸப்ரான் (Sabraon) போரிலும் சீக்கியப்படை தோற்கடிக்கப் பட்டது. சீக்கியப்படை வெற்றிபெற்ருல், தங்களுக்கே ஆபத்து என்று சீக்கியத் தலைவர்கள் எண்ணினர். ஆகவே, சீக்கியப் படைக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவில்லை. இதனுல் முதலாம் சீக்கியப்போர் ஆங்கிலேயருக்குச் சாதகமாய் முடிந்தது. 1846ஆம் ஆண்டு இப் போர் லாகூர் உடன்படிக்கையுடன் முடிவுற்றது. அதன்படி ஸட்லஜும் அதைச் சார்ந்த நிலப் பகுதியும் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டன. சீக்கியப்படை பாதியாகக் குறைக்கப்பட்டது. 15 இலட்ச ரூபாயினைப் போர்

இழப்பீடாகச் சீக்கியர் கொடுக்க வேண்டியதாயிற்று. அப் பணத்தின் ஒரு பகுதியாகக் காஷ்மீர் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு கோடிப் பவுன்களுக்கு குலாப் சிங் (Gulab Singh) என்பவருக்குக் காஷ்மீரை ஆங்கிலேயர் விற்று விட்டனர். லாகூரில் ஓர் ஆங்கில நிலையர் (Resident) அமர்த்தப் பட்டார். ஹென்றி லாரன்ஸ் என்பவர் முதல் பிரதிநிதியாக அங்கே நியமிக்கப்பட்டார். லாகூரில் ஆங்கிலத் துணைப்படை யொன்றை வைத்திருக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆங்கில நிலையரின் உத்தரவிற்கு இணங்கிச் செயல்படக்கூடிய சீக்கிய சர்தார்கள் எட்டுப்பேர்கொண்ட பிரதிநிதித்துவ ஆட்சிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால், ஆட்சி அதிகாரம் ஆங்கில நிலையரிடமே இருந்ததால் பஞ்சாபின் உண்மையான ஆட்சி, ஆங்கிலேயருக்கு மாறியதெனலாம். எண்மர் ஆட்சிக்குழு சுய அதிகாரமற்றுப் பெயரளவிலேயே இயங்கி வரலாயிற்று.

13. சீக்கியரின் எழுச்சி

இராஜா இரஞ்சித் சிங் (1780—1839)

மராத்தியர் எழுச்சியைப்போன்று சீக்கியர் எழுச்சி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். முகலாய மாமன்னர், ஜஹாங்கீரின் கொடுமையால், சமய கலாச்சார நோக்கங்களில் ஈடுபட்டிருந்த சீக்கியர் போர்க்கோலம் பூண்ட சமயவாதிகளாயினர் என்று கண்டோம்; அதுமுதல் முகலாயர்களின் பரம விரோதிகளாயினர்; தொடர்ந்து, முகலாயருடன் போரிட்டும் வந்தனர். அவர்களின் பத்தாவது குரு கோவிந்து, 1708-ல் காலமானார். அவருக்குப்பின், தனிக் குருவின்கீழ் இயங்கிவந்த சீக்கியர், கூட்டாட்சியின்கீழ் இயங்க ஆரம்பித்தனர். இக் கூட்டாட்சி, மிஸில்ஸ் (Misls) அல்லது சர்தார் என்றழைக்கப்பட்ட தலைவர்களால் செயல் படுத்தப்பட்டு வந்தது. இவ்விதத் தலைவர்கள் பன்னிரண்டு பேர் இருந்தனர். அவர்களில் ஒருவர் மகன் சிங் (Mahan Singh) என்பவர். இவர் 1785 முதல் 1792 வரை பதவியிலிருந்தார். இவருடைய மகனே இரஞ்சித் சிங் என்பவராவார்.

இரஞ்சித் சிங் 1780ஆம் ஆண்டில் பிறந்தார். மகன் சிங் 1792-ல் காலமானார். அப்போது, இரஞ்சித் சிங்கிற்குப் பன்னிரண்டு வயது. அதனால் இரஞ்சித் சிங் 12ஆம் வயதிலேயே சீக்கியத் தலைவர்களுள் ஒருவரானார். ஆற்றலும், போர்த்திறனும் இளமையிலிருந்தே இவரிடம் குடிகொண்டிருந்தன.

இராஜாப் பட்டம் பெறல்

ஆஃப்கானிஸ்தான அரசர் ஜாமென் ஷா (Zaman Shah) 1799ஆம் ஆண்டு பஞ்சாபின்மீது படையெடுத்தார். அப் படையெடுப்பின்போது இரஞ்சித் சிங், ஜாமென் ஷாவிற்கு உதவினார். இதனால் 'இராஜா' என்ற பட்டத்தை இரஞ்சித் சிங்கிற்கு வழங்

கியதுடன், தாம் ஆஃப்கானிஸ்தானத்திற்குத் திரும்புகையில் அவரை லாகூரின் அரசராகத் தம் ஆதிக்கத்தின்கீழ் ஆளும்படி அமர்த்திவிட்டுச் சென்றார். பெயரளவில் பஞ்சாப் ஆஃப்கானிஸ்தானத்தின்கீழ் இருந்துவந்தது. உண்மையில் இரஞ்சித் சிங் பஞ்சாபின் சுதந்திர அரசராகச் செயல்பட்டார்.

அமிர்தசரஸைக் (Amirtsar) கைப்பற்றுதல்

1802-ல் இரஞ்சித் சிங், அமிர்தசரஸைக் கைப்பற்றினார். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த லாகூர், ஏற்கெனவே இரஞ்சித் கீழ் இருந்தது. அமிர்தசரஸ், சீக்கியரின் புண்ணியத் தலம். இவ்விரண்டும் இரஞ்சித் சிங்கின் ஆட்சியின்கீழ் இயங்கின. இவ்வாறு சீக்கிய அரசியலின் மையமாகக் கருதிய லாகூருக்கும், சீக்கிய சமயத்தின் மையமாக விளங்கிய அமிர்தசரஸுக்கும் இரஞ்சித் சிங் தலைவரானது, சீக்கிய வரலாற்றில் திருப்புமுனை என்றே கருத வேண்டும். இரஞ்சித் சிங்கின் புகழுக்கும் இது ஏணி போலாயிற்று.

ஹோல்காருடன் இணங்க மறுத்தல்

ஆங்கிலேயரைப் பகைத்துக் கொள்ளல், தம் அரசியல் வாழ்க்கைக்குத் தற்கொலை செய்துகொள்வதற்கு ஒப்பாகும் என்பதை, அரசியல் தந்திரம் தெரிந்த இரஞ்சித் சிங் நன்கு அறிந்து கொண்டார். இதனாலேயே 1805-ல் ஹோல்கார் ஆங்கிலேயருக்கு எதிராக இரஞ்சித் சிங்கை உதவும்படி கோரியதை ஏற்க மறுத்துவிட்டார். அதனுடன் ஆங்கிலேயரின் ஆப்த நண்பராகவும் பழகி அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவதில் கண்ணும் கருத்துமாயிருந்தார்.

சட்லெஜ் பகுதியைக் கைப்பற்றல்

ஆங்கிலேயரின் படைமுறையில், தம்முடைய படையையும் அமைத்துத் திறமைமிக்கதாய்ச் செய்தார். மற்றச் சீக்கியத் தலைவர்களையும் ஒருவர்பின் ஒருவராகத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தார். அதனுடன் சட்லெஜ் (Sutlej) பகுதியையும் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார்.

அமிர்தசரஸ் உடன்படிக்கை

இரஞ்சித் சிங்கின் படைத்திறனையும், நுண்ணறிவையுங் கண்டு, மின்டோ பிரபு, ஃபிரெஞ்சுக்காரருக்கு எதிராக இரஞ்சித் சிங்குடன் நட்புறவு கொள்ள முடிவு செய்தார். மின்டோ பிரபுவின் இந்த எண்ணத்திற்குத் தக்க ஆதரவு

இரஞ்சித் சிங்கும் காட்டியதால், மெட்காஃப் தலைமையில் ஒரு தூதர் குழுவை அமிர்தசரசுக்கு அனுப்பிவைத்தார். அக் குழு இரஞ்சித் சிங்குடன் அமிர்தசரஸ் உடன்படிக்கையை 1809ஆம் ஆண்டு செய்துகொண்டது. இவ் வுடன்படிக்கையினால், இரஞ்சித் சிங்கின் ஆட்சியின் எல்லை, சட்லெஜ் நதிக்குத் தெற்கே விரிவுபடுத்தக் கூடாதென கட்டுப்படுத்தப்பட்டது. இதனால் ஆங்கிலேயரின் அரசு, யமுனையிலிருந்து சட்லெஜ் வரையில் பரவியது. சட்லெஜ் நதிக்குத் தெற்கே, தம் ஆட்சியைப் பரப்ப முடியாததால், இரஞ்சித் சிங் தம் கவனத்தை அதன் மேற்கிலும் வடக்கிலும் செலுத்தி 1809-ல் கூர்க்கர்களையும், 1813-ல் ஆஃப் கானியர்களையும் தோற்கடிக்க முடிந்தது. ஆஃப்கானிஸ்தானத்தி லிருந்து துரத்தப்பட்ட ஷா ஷுஜாவிற்கு, 1813-ல் இவர் புகலிடம் தந்தார். உலகப் புகழ்பெற்ற கோஹினூர் வைரத்தை ஷா ஷுஜா இதற்காக இரஞ்சித் சிங்கிற்குக் கொடுத்தார். 1818-ல் மூல்தானை யும், 1819-ல் காஷ்மீரையும், 1823-ல் பெஷாவரையும் இரஞ்சித் சிங் கைப்பற்றினார்.

வில்லியம் பென்டிங்க் பிரபு, இந்தியாமீது ரஷ்யர் படை யெடுக்கக் கூடும் என்ற அச்சத்தினால் இரஞ்சித் சிங்குடன், சிந்து நதி நாவாய் உடன்படிக்கை (Indus Navigation Treaty) என்ற நட்புரிமை உடன்படிக்கை ஒன்றை 1831-ல் செய்துகொண்டார். இது ஏற்கெனவே செய்துகொண்ட அமிர்தசரஸ் உடன்படிக் கையை மீண்டும் புதுப்பிக்கும் வகையிலேயே செய்துகொண்ட தாகும்.

அரசியல் சீர்திருத்தங்கள்

அக்பர், சிவாஜி, ஐதர் ஆகியோர்களைப் போலவே இரஞ்சித் சிங் ஆழ்ந்த பொது அறிவும், அரசியல் நுட்பமும் பெற்றிருந்தார். ஆங்கிலேயரின் திறமையை நன்கறிந்த அவர், அவர்களுடன் நட் புறவுடன் பழகினார். இதனால் நாட்டைச் செப்பனிடவும், ஆட்சியை ஒழுங்குபடுத்தவும் முடிந்தது. இம் முறையில் அவர் ஐதருக்கும் திப்புவிற்கும் மாறுபட்டிருந்தார்; பஞ்சாபின் 'சிங்கம்' எனப் புகழப்பட்டார்; கொடிய வைசூரியில் தமது இடக்கண் பார்வையை இழந்தாலும் இனிமையான நடத்தை, பேச்சு ஆகிய வைகளைப் பெற்றிருந்தார்; சிறந்த விளையாட்டு வீரர்; ஆனால், மிகுந்த குடிப்பிரியர்; சுயநலக்காரர்; என்றாலும் மக்களின் நலனைக் காப்பதில் அக்கறை காட்டினார். அவர் மிகுந்த தைரிய சாலி; எந்த நிலையிலும் மனம் தளராதவர்.

நிலவரியை உழவர்களே நேரடியாகச் செலுத்த வழிசெய் தார்; ஆனால், அவர் கடைசிக் காலத்தில் வரி வசூலிக்கும் கிழார்

களை அமர்த்தியதாகத் தெரிகிறது. பொருள் சம்பந்தமான வழக்குகளைப் பஞ்சாயத்தார்மூலம் விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வழிசெய்தார். குற்றவியல் விசாரணை அதிகாரம், அரசு ஊழியர்களிடம் இருந்தது. பொதுவாக அவருடைய நிர்வாகம் நியாயமாகவும், ஒழுங்காகவும் நடைபெற்றது. மதவேறுபாடின்றி முகம்மதியர், ஐரோப்பியர், இந்து யாவரையும் அவரவர் தகுதிப்படி ஊழியத்தில் அமர்த்திய பெருமை அவரையே சாரும். உயர்ந்த முறையில் படையினை அமைத்தார். கட்டுப்பாடும் நாட்டுப்பற்றும் பெற்றிருந்த அப் படையினை ஆங்கிலேயராலும் தோற்கடிக்க மிகச் சிரமமாயிருந்தது. குதிரைப்படையுடன், காலாட்படை, பீரங்கிப்படைப் பிரிவினையும் உண்டாக்கினார். படைவீரர்களின் நலனை மிக அக்கறையுடன் கவனித்து அவர்கள் அன்பையும் ஆதரவையும் பெற்றார். அதனுடன் ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் முதலிடம் தந்தார். அவர் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள சர் லெப்பல் கிரிஃபின் (Sir Lepal Griffin), அவரை 'மாவீரர்' 'மக்களை ஆளும் அரசர்' 'வரலாறு புகழக்கூடிய ஒருசில அரசர்க்கிடையில் வைத்துப் போற்றத் தக்கவர்' என்றெல்லாம் புகழ்கின்றார்.

அவர் ஆட்சி, ஒரு சிறந்த அரசர்கீழ்த்தான் இயங்கும் நிலையிலிருந்தது. இரஞ்சித் சிங்கின் ஆட்சிமுறை மட்டுமன்று, ஏறக்குறைய எல்லா இந்திய அரசுகளின் ஆட்சிமுறையும் ஒரு அரசரின் தனித் திறமையை யொட்டியே செயல்படும் நிலையிலிருந்தது. இதனால் அரசர் ஆட்சித்திறன் குன்றியபோதோ, ஆட்சியில் ஊக்கமின்மை ஏற்படுங்காலோ, அவ் வரசு சரிந்து வீழ்ச்சியடையலாயிற்று. இராஜா இரஞ்சித் சிங் 1839ஆம் ஆண்டில் தமது 59ஆம் வயதில் காலமானார்.

அவருக்குப்பின், இரஞ்சித் சிங்கின் மூத்த மகன் கரக் சிங் அரசரானார். இரஞ்சித் சிங்கின் மற்றொரு மகனான ஷெர் சிங்கால் கரக் சிங் கொல்லப்பட்டார். பிறகு ஷெர் சிங் அரசரானார். அவருக்கு எதிராகப் புரட்சிசெய்து, அதிகாரம் அனைத்தையும் கல்சா என்ற படையினர் கைப்பற்றினர். ஷெர் சிங்கும் கொலை செய்யப்பட்டார். அவர் கொலைக்குப்பின், துலிப் சிங் என்ற ஐந்து வயதுப் பையனைக் கல்சாப் படை அரியணையில் அமர்த்தியது. அவருடைய பாதுகாப்பாளராக (guardian) அவருடைய அன்னை இராணி ஜிண்டான் அமர்த்தப்பட்டார். ஜிண்டான் அரசுக்குத் தகுந்த நற்பண்புகளைப் பெற்றவரல்லர். கீழ்த்தரமான இச்சைகளையும் மனநிலையையும் படைத்தவர். இவர் ஆதிக்கத்தின்கீழ்ச் சீக்கிய அரசு மேலும் சீர்குலையலாயிற்று.

இவ்வாறு இரஞ்சித் சிங்கின் மறைவுக்குப்பின், சீக்கிய அரசு சிக்கலில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தது.

சீக்கியர் ஆட்சிமுறை

அரசாட்சி என்பது ஓர் அரிய கலை; அபூர்வ ஆற்றல் படைத்த சிலர் முன்பயிற்சியின்றியே அரசாட்சியை மிகத் திறமையுடன் நடத்துகிறார்கள். இவர்களின் வரிசையில் சீக்கிய அரசர் இரஞ்சித் சிங்கும் (1780—1839) ஒருவர் எனலாம்.

இரஞ்சித் சிங் பெற்றிருந்த சில தனிப்பட்ட சிறப்பியல்புகள், அவருடைய திறமையான நிருவாகத்திற்கு உறுதுணை செய்தன. அவர் அரசியல் மதிநுட்பமும், இராணுவத் திறமையும், ஆளும் ஆற்றலும், மனத்திண்மையும் வாய்ந்தவர். பிறருடைய குண இயல்புகளை எளிதில் புரிந்துகொள்ளும் ஆற்றல் கொண்டவர். அவர் மக்களின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து அதன்படி செயல்பட்டார். நடைமுறைக்குப் பொருந்தாத திட்டங்களை இவர் சிந்திப்பதில்லை. சீக்கியர்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பி, அவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி ஒரு குடையின் கீழ்க் கொண்டுவரவேண்டுமென ரஞ்சித் விரும்பினார். ஆனால், சீக்கியரின் ஒரு பகுதியினர் ஆங்கிலேயரின் பாதுகாப்புக்குள் அடங்கி இருந்தமையால், அவருடைய எண்ணம் முழுமையாக ஈடேறவில்லை.

இரஞ்சித் சிங் குள்ளமாவனர்; அம்மை நோயின் வடுக்கள் அவர் முகத்தை விகாரப்படுத்தியிருந்தன. எனினும் எண்ணியதை முடிக்கும் மன உறுதியும், விடாமுயற்சியும் உடையவர்; ஆடம்பர ஆடை அணிகளை அவர் விரும்பவில்லை. மிக எளிய உடைகளையே அணிந்தார்; எளிய வாழ்க்கையே நடத்தினார்; கள்ளுண்பதிலும், பெண்ணின்பத்திலும் சற்று நாட்டமுடையவர்; ஆயினும், வல்லமை வாய்ந்த அரசராக விளங்கினார். சீக்கியரின் பெருமையை நிலைநாட்டுவதையே தம் நோக்கமாகக் கொண்டார். தம் நாட்டு மக்களின் நலனுக்கான காரியங்களையே செய்தார். இதனால் மக்கள் அவர்மீது பேரன்பு பூண்டிருந்தனர். இவரைத் தங்கள் தனிப்பெருந் தலைவராகக் கொண்டு அவர் காட்டிய வழியில் செல்லக் காத்திருந்தனர். இரஞ்சித் சிங்கின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள சர் லெப்பல் கிரிஃபின் (Sir Lepel Griffin) 'வரலாறு புகழக்கூடிய ஒரு சில அரசர்க்கிடையில் வைத்துப் போற்றத்தக்கவர் அவர்' என்று கூறுகிறார். முகலாயப் பேரரசர் அக்பர், சிவாஜி, ஐதர் அலி ஆகியோரைப் போன்றே இரஞ்சித் சிங்கும் கல்வி அறிவில்லாதவர்,

ஆனால், அவர்களைப் போலவே ஆழ்ந்த பொது அறிவும் அரசியல் நுட்பமும் பெற்றிருந்தார். சீக்கியப் பேரரசை நிலைநாட்டுவதற்காகச் சில சமயம் அவர் நேர்மையற்ற முறையைக் கையாண்டார். ஆனால், தமக்குக் கீழ்ப் பட்டவர்களிடமும் தம்மால் பாதிக்கப் பட்டவர்களிடமும் அவர் கருணையுடன் நடந்துகொண்டார்.

மத்திய அரசு

இரஞ்சித் சிங் ஒரு வலுவான மத்திய அரசை ஏற்படுத்தினார். மத்திய அரசு நிருவாகத்தின் சூத்திரதாரியாக விளங்கியவர் அரசரேயாவார். அரசருக்கு உதவியாக ஐந்து அமைச்சர்கள் இருந்தனர். அமைச்சர்களில் ஒருவர் முதலமைச்சர் (Chief Minister) என அழைக்கப்பட்டார். எல்லா அமைச்சர்களுள்ளும் உயர் அதிகாரம் படைத்தவர் முதலமைச்சரேயாவர். அரசரின் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவரே முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். முதலமைச்சருக்கு அடுத்தபடியாக முக்கிய அமைச்சராக விளங்கியவர் வெளிநாட்டுத் துறை அமைச்சர் (Foreign Minister) எனலாம். அரசர் தம்முடைய அந்தரங்க விவகாரங்களிலும் இவருடைய ஆலோசனையைப் பெற்றார். இராணுவ அமைச்சரும், நிதி அமைச்சரும் சாதர்-இ-தியோரி (Sadar-i Deori) எனப்பட்ட அரண்மனை விவகார அமைச்சரும் மற்ற மூன்று அமைச்சர்களாவர்.

1808-ல் இரஞ்சித் சிங் 'பவானி தாஸ்' என்பவரை நிதியமைச்சராய் அமர்த்தினார். இவர் நிதித்துறையைப் பல பகுதிகளாகப் பிரித்து வருவாய் (income), செலவினங்கள் (expenditure) முதலியவற்றை ஒழுங்குபடுத்தினார்.

மத்திய அரசு நிருவாகம் 12 நிருவாகத் துறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் ஒன்று நிலவருவாய், வரி வருமானம் முதலியவைபற்றிய கணக்குகளைக் கவனித்து வந்தது. அரண்மனைச் செலவினங்களைக் கவனிப்பதற்கு ஒரு துறை பொறுப்பேற்றிருந்தது. அரசு அதிகாரிகள், இராணுவத்தினர் ஆகியோரின் ஊதியப் பட்டுவாடாபற்றிய கணக்குகளை ஒரு துறை கவனித்தது. அரசரின் அன்றாடச் செலவு கணக்குகளைக் கவனிக்கும் பொறுப்பும் ஒரு துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது

உள்ளாட்சி நிருவாகம்

இரஞ்சித் சிங் தம் நாட்டைக் காஷ்மீர், மூல்தான், பெஷாவர் லாகூர் ஆகிய நான்கு மாநிலங்களாகப் பிரித்திருந்தார். இவை

தவிர, அரசருக்கு நேரடியாகத் திறை செலுத்தும் மலைப்பகுதிகளும் தனியாக இருந்தன. மத்திய அரசுக்குட்பட்டு ஜாகிர்களை ஆட்சி செலுத்தி வந்த சர்தார்களும், நவாப்களும் இருந்தனர்.

ஒவ்வொரு மாநிலமும் 'சுபா' (Suba) என வழங்கப்பட்டது. ஒவ்வொரு சுபாவும் பல பர்காணுக்களாகவும் (மாவட்டங்கள்), ஒவ்வொரு பர்காணுவும் பல தாலுகாக்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. தாலுகாவில் 50 முதல் 100 மௌசாக்கள் (Mauzas) அடங்கியிருந்தன. நிருவாக வசதிக்கும், வருவாய் வசதிகளுக்கும் ஏற்ப இந்த நிருவாகப் பிரிவுகள் அமைந்திருந்தன.

சுபாவை நிருவகித்த அதிகாரி 'நாஜிம்' (Nazim) என்று அழைக்கப்பட்டார். அரசரின் முழு நம்பிக்கையைப் பெற்றவரே இப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். பர்காணுவின் தலைமை அதிகாரிக்குக் 'கர்தார்' (Kardar) என்று பெயர். இவர் நிலவசூல் அதிகாரியாகவும், கருவூலக் கணக்காளராகவும், மாவட்ட நடுவராகவும் (Magistrate) சுங்க, கலால் வரி வசூலிப்பவராகவும் பணிபுரிந்தார். உள்ளாட்சி நிருவாகத்தின் மிக முக்கியமான அம்சம் கிராம ஊராட்சிகளாகும் (Panchayat). ஒவ்வொரு கிராமத்திலும் ஊராட்சி அமைக்கப்பட்டிருந்தது. ஊராட்சிக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவுடன் விளங்கியது.

நிதி நிருவாகம்

அரசுக்கு நிதி தேவைப்பட்டபொழுது பல வழிகளில் நிதி திரட்டப்பட்டது. நில வருவாயே அரசு வருமானத்தின் பெரும் பகுதியாக இருந்தது. அரசாங்கத்தின் மொத்த வருமானமான ரூ 3 கோடியில், நிலவரியினுல் மட்டும் ரூ 2 கோடி வருவாய் கிடைத்தது. நில வருமானத்தில் சராசரியாக ஐந்தில் இரண்டு பங்கை அரசு வரியாக வசூலித்தது. வரியை மக்கள் அறுவடையின் போது விளைபொருள்களாகச் செலுத்தலாம். இந்த வரி வசூல் முறைக்குப் 'பத்தாய்' (Batai) முறை என்று பெயர். இந்த முறையில் சில குறைகள் இருந்தன. சாகுபடியாளர்களை விதைப்புக்காலம் தொடங்கி அறுவடை வரையிலும் கண்காணித்து வருவதற்கு நிறைய அதிகாரிகள் தேவைப்பட்டார்கள். இதனுல் வரிவசூலுக்குச் செலவு மிகுதியாக ஆகியது. இக் குறை காரணமாக இம் முறை 1824-ல் நீக்கப்பட்டு காங்குட் (Kankut) என்னும் வேறொரு முறை கையாளப்பட்டது. இதன்படி, அறுவடைக்குத் தயாராக இருக்கும் பயிரினுல் எவ்வளவு

அறுவடை கிடைக்கும் என்பதை மதிப்பீடு செய்து, அதில் ஒரு பகுதியை வரியாக வசூலித்தனர். பழைய முறையைவிட இது சற்றுச் சிறந்ததாயினும் இதிலும் குறைகளிருந்தன. அறுவடை பற்றிச் சரியான மதிப்பீடு செய்வது சிரமமாக இருந்தது. இதனால், பயிர்நிலங்களை மூன்று முதல் நூறு ஆண்டுகள் வரை குத்தகைக்குவிடும் வழக்கம் அமலுக்கு வந்தது. ரஞ்சித் சிங்கின் இறுதிக் காலத்தில், வரியை விளைபொருள்களாகச் செலுத்துவதற்குப் பதிலாகப் பணமாகக் கொடுக்கும் முறை செயலுக்கு வந்தது எனினும், விரும்பினால் விளைபொருளாகவும் செலுத்த அனுமதி வழங்கப்பட்டது. சில இடங்களில் சில வகைப் பயிர்களுக்கு விளைபொருள்களாகவும், கரும்பு, பருத்தி, புகையிலை போன்ற பயிர்களுக்குப் பணமாகவும் வரி வசூலிக்கப்பட்டது.

சாகுபடி நிலம் அனைத்தும் அரசுக்கே சொந்தம் என்ற அடிப்படையில் நிலவரி விதிப்பு நடைபெற்றது. இதனால்தான் குத்தகை முறையைச் செயல்படுத்த முடிந்தது. சாகுபடியாளர் யாராவது வரி செலுத்தத் தவறினால், அவர் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, அந் நிலம் வேறொருவருக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. பொதுவாகச் சாகுபடியாளர்களுன் வரி கொடுக்கும் சக்தியைப் பொறுத்தே வரி கணக்கிடப்பட்டது. நிலத்தின் தராதாரம், நீர்ப்பாசன வசதி, விளைச்சலளவு முதலியவற்றைக் கருத்திற்கொண்டே வரி நிருணயிக்கப்பட்டது. நிலவரி ஆண்டுக்கு இரண்டு முறை வசூலிக்கப்பட்டது இவ்வாறு வசூலிக்கப்பட்ட பணம் அல்லது பொருள்கள் மாவட்டக் கருவூலங்களில் சேர்க்கப்பட்டன. மாவட்ட வரி வசூலிக்கும் துறையின் தலைவர் கர்தார் (Kardar) என்றும், வரி விகிதத்தை நிர்ணயிக்கும் துறையின் தலைவர் பத்வாரி (Patwari) என்றும் அழைக்கப்பட்டனர். கர்தாரே மாவட்டக் கருவூலத்தின் பொறுப்பாளராகவும் பணியாற்றினர்.

நிலவரி தவிர, சுங்கம், கலால் ஆகியவை அரசுக்கு வருவாய் தேடித்தந்த மற்ற முக்கிய நிதி ஆதாரங்களாகும். இவ் விரண்டினாலும் ரஞ்சித் சிங்கின் கருவூலத்திற்கு ஆண்டுக்கு ரூ 16,00,000 வருமானம் கிடைத்து வந்தது. இவ் வரிகள் பல முனைகளிலும் வசூலிக்கப்பட்டன. சில சமயங்களில், நிலவரி வசூலிக்கப்பட்ட சாகுபடி நிலத்திலிருந்து விளைந்த பொருள்களின்மீதும் கலால் வரிகள் விதிக்கப்பட்டன. எனினும், இவ் வரிவிதிப்புகள் மக்களுக்குப் பெருஞ்சுமையாக இருக்கவில்லை. நாடெங்கிலும் வாணிகம் செழித்து வளர்ந்தது.

இரஞ்சித் சிங் காலத்தில் தொழில் வரியும் வசூலிக்கப்பட்டது. நெசவாளர்கள், தச்சர்கள், தட்டார்கள், தோல் பதனிடுவோர் ஆகியோரிடம் வீட்டுக்கு ஆண்டுக்கு ஒரு ரூபாய் வீதம் தொழில் வரி வசூலித்தார்கள். வணிகர்களிடமும் ஆண்டுக்கு ரூ 2 வீதமும், 'காமின்கள்' (Kamins) எனப்பட்ட தாழ்ந்த வேலைகளைச் செய்பவர்களிடம் அரை ரூபாய் வீதமும் தொழில்வரி வசூலிக்கப் பட்டது. இவை தவிர, 'ஜாகிர் முறை' (Jagir) மூலமாகவும் அர சுக்கு ஓராண்டில் ரூ 87,54,590 வரை வருவாய் கிடைத்தது. நீதி நிருவாகத்தில் அபராதங்கள் வாயிலாகவும் அரசுக்குப் பெருமளவு வருவாய் வந்தது. நீதிமன்றங்கள் மூலம் கிடைத்த வருமானத்திற்கு 'மோகரானு' (Moharana) என்று பெயர்.

செலவினங்கள்

இரஞ்சித் சிங் காலத்தில் சீக்கியர் ஆட்சி வளரும் நிலையி லிருந்ததால், அரசு வருமானத்தில் பெரும்பகுதி இராணுவத் திற்கே செலவாகியது. இராணுவத்திற்காகமட்டும் ஓராண்டில் ரூ 1,27,96,482 செலவிடப்பட்டது. இதற்கு அடுத்தபடியாக, அரசு நிருவாகத்திற்கும், மற்றும் இது போன்ற இனங்களுக்கும் செலவாகியது. இரஞ்சித் சிங்கின் அரசாங்கம், ஒரு தேசிய அரசாங்கமாகவே விளங்கியது. அதனால், நிதி நிருவாகத்தைப் பொறுத்த வரையில், நிதியைக் கைம்மாற்று செய்வதே மத்திய அரசின் பொறுப்பாக இருந்தது. இதன் பலனாக, நாட்டின் செல்வம் வெளியே செல்லாமல் நாட்டு மக்கள் கையிலேயே புழங்கி வந்தது.

நீதி நிருவாகம்

இரஞ்சித் சிங் ஆட்சியில் எழுதப்பட்ட அரசியல் அமைப்போ சட்டமோ எதுவுமில்லை. மரபுகளும், பழக்கங்களுமே நீதி நிரு வாகத்தின் அடிப்படையாக விளங்கின. சில சமயங்களில், நீதிபதி தம் விருப்பப்படி நீதி வழங்கியதுமுண்டு. எனினும், எந்தத் தீர்ப்பையும் எதிர்த்து மேல்முறையீடுகள் (Appeals) செய் வதற்கு வசதிகளும், உரிமைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டி ருந்தன. இரஞ்சித் சிங் தம் நாட்டில் சமயச் சார்பற்ற நீதி நிருவாக முறையை ஏற்படுத்தியிருந்தார். ஒவ்வொரு சமயத் தார்க்கும், அவரவர்களின் சமயக் கொள்கைகள், மரபுகள், பழக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நீதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நீதித்துறையின் தலைமை நீதிபதியாக விளங்கியவர் அரசரே யாவர். மாநில உயர்நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகள்மீது

மேல்முறையீடுகளை அரசர் விசாரித்துத் தீர்ப்பு வழங்கினர். சில சமயம் சரியாக நீதி செலுத்தும்படி செய்வதற்காகக் கீழ் நீதி மன்றங்களின் நடவடிக்கைகளில் அரசர் நேரடியாகத் தலையிடுவதும் உண்டு. அரசருக்கு அடுத்து, உயர்ந்த நீதிபதியாக விளங்கியவர் 'அதாலத்-இ-ஆலா' (Adalat-i-Ala) என்ற மத்திய நீதிமன்றத்தின் (Central Court) நீதிபதியாவர். இந் நீதிமன்றத்தை இன்றுள்ள உயர்நீதி மன்றத்திற்குச் சமமாகக் கருதலாம். மாவட்டம், தாலுகா, கிராமம் ஆகியவற்றின் அளவிலும் நீதிமன்றங்கள் இருந்தன. இவை குற்ற வழக்குகள், உரிமை வழக்குகள் (civil cases) இரண்டையும் விசாரித்து வந்தன.

இரஞ்சித் சிங் கையாண்ட தண்டனைமுறை கடுமையானதாக இருக்கவில்லை. பெஷாவர் போன்ற எல்லைப்பகுதிகளில் தவிர, வேறு இடங்களில் மரண தண்டனை விதிக்கப்படவில்லை. சிறைத்தண்டனையும் மிக அரிதாகவே விதிக்கப்பட்டது. மிகவும் கடுமையான குற்றங்கள் செய்தவர்களுக்கு உடல் உறுப்புகளைத் துண்டிக்கும் தண்டனை வழங்கப்படுவதுண்டு. பெரும்பாலும் இத் தண்டனை அபராதமாகக் குறைக்கப்பட்டுவிடும். இவ்வாறு வசூலிக்கப்படும் அபராதத் தொகை அரசுக்கு முக்கியமான வருவாய் ஆதாரமாக அமைந்தது.

இராணுவ நிருவாகம்

சீக்கியர்கள் இயற்கையாகவே போர் மனப்பான்மை கொண்டவர்கள். எனவே, அவர்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டி, அவர்களை ஒழுக்கமும் திறமையும் வாய்ந்த படைவீரர்களாக மாற்றுவது ஏற்கெனவே இராணுவத் தந்திரங்களில் வல்லமை பெற்றிருந்த இரஞ்சித் சிங்கிற்கு எளிதான காரியமாக இருந்தது. அவருடைய இராணுவம் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவற்றுள் குதிரைப்படை வலிமை பெற்றதாக விளங்கியது. படைவீரர்களுக்கு ஆயுதம், உடை முதலியவற்றை அரசாங்கமே வழங்கியது. படைவீரருள், குதிரைப்படையினருக்கே உயர்ந்த ஊதியம் அளிக்கப்பட்டது. படையினருக்கு மாத ஊதியமே வழங்கப்பட்டது. எனினும், ஊதியம் வழங்குதல் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். பல மாதங்கள்வரை அவர்களின் ஊதியம் கொடுக்கப்படாமல் இருந்தது. ஆங்கிலேயருடன் போர் ஏற்பட்டால் அவர்களை எதிர்த்துப் போரிடத் தம் படையினருக்குத் தகுந்த ஆற்றல் வேண்டுமெனக் கருதினர். அதனால், படைவீரர்களின் திறமையை உயர்த்த ஐரோப்பிய முறைகளைப் புகுத்தினர். சீக்கியர்களுக்கு ஐரோப்பிய முறைப்படி பயிற்சியளிப்பதற்காக நெப்போலியனிடம் சிறப்பாகப் பணியாற்றிய தளபதி வென்ச்சுரா (Ventura) என்ற இத்தாலியரையும், தளபதி அல்லார்டு

(Allard) என்ற ஃபிரெஞ்சுக்காரரையும் இரஞ்சித் சிங் தம் படையில் சேர்த்துக்கொண்டார். இன்னும் பல அயல்நாட்டு வீரர்களும் சீக்கியப் படையில் இருந்தனர்.

ஒவ்வொருவரின் தனித் திறமையைப் புரிந்துகொண்டு, அவர்களைத் தக்க பணியில் அமர்த்திக்கொள்ளும் திறன் இரஞ்சித் சிங்கிட மிருந்தது. புதிய படைத் திட்டங்களைச் சில சீக்கிய சர்தார்கள் வெறுத்தனர். அவர்கள் மனத்தைத் தம் திறமையால் மாற்றிப் புதிய முறைகளை ஏற்றுக்கொள்ளும் படி செய்தார். தாமே இராணுவ உடைகளை அணிந்து கொண்டு, பலவகை இராணுவப் பயிற்சிகளைச் செய்துவந்தார். சீக்கியக் குதிரை வீரர்கள் முதலில் குதிரைப்படையை மட்டுமே சிறந்ததாகக் கருதி, காலாட் படையைப் புறக்கணித்து வந்தனர். அவர்களுடைய இக் கருத்தை மாற்றி, காலாட் படையையும் பீரங்கிப் படையையும் அவர்கள் விரும்பும்படி செய்தார். பீரங்கிப் படையையும் சிறந்த திறமை வாய்ந்ததாக அவர் சீர்திருத்தி அமைத்தார். மொத்தத்தில், ஆங்காங்கே சிறுசிறு பகுதியினராக இருந்த சீக்கியக் குதிரை வீரர்களை ஒன்றுதிரட்டி, ஒழுக்கமும், பயிற்சியும், போர்த்திறனும் வாய்ந்த ஒரு சிறந்த போர்ப்படையாக இரஞ்சித் சிங் மாற்றி யமைத்தார்.

குறைகள்

இரஞ்சித் சிங்கின் ஆட்சி ஓர் இராணுவ வல்லாட்சியாகவே விளங்கியது. அவருடைய ஆணையே நாட்டின் சட்டமாக இருந்தது. மக்களின் நலனில் அவர் கவனம் செலுத்தியதால், அவருடைய வல்லாட்சியை மக்கள் எதிர்க்காமல் பொறுத்துக் கொண்டனர். அதனுடன் சில அதிகாரிகள் தங்கள் அதிகாரங்களைத் தவறாகத் தங்கள் சுயநலத்திற்காகவும் பயன்படுத்தினர்கள். இலஞ்ச ஊழல் எங்கும் தாண்டவமாடியது. படிப்பறிவில்லாப் பாமரமக்களின் அறியாமையை அதிகாரிகள் தங்கள் தன்னலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர். வரிகள் கடுமையாக இருந்ததால், கிராம மக்கள் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து, குறைவாக வரி வசூலிக்கச் செய்தனர்.

அரசர் இராணுவத்தின் வலிமையைப் பெருக்குவதிலேயே கவனம் செலுத்தினர். கல்வி, கலைகள் இவற்றின் வளர்ச்சிக்கு அவர் ஊக்கமளிக்க வில்லை. புகழ் வாய்ந்த அறிஞர் ஒருவர்கூட அவருடைய அவைக்களத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. சீக்கியர்களிடம் இரஞ்சித் சிங் தூண்டிவிட்ட தேசிய உணர்வும், அவர்களிடம் அவருக்கு இருந்துவந்த பெருஞ் செல்வாக்குமே அவருடைய நாட்டை ஒருங்கிணைத்து வைத்திருந்தன. இரஞ்சித் சிங் மறைந்தவுடனேயே அவருடைய நாட்டின் கட்டுக்கோப்புத் தளர்ந்து நாடு சிதறுண்டது.

14. டல்ஹௌசி பிரபு
(1848—56)

ஹென்றி ஹார்டிஞ்ச் பிரபுவுக்குப்பின் டல்ஹௌசி பிரபு தலைமை ஆளுநராக 1848ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டபோது அவருக்கு வயது முப்பத்தாறு. இவருடைய இளமைப் பெயர் ஜேம்ஸ் ஹண்ட்ரூ பிரௌன் ராம்சே என்பதாகும். இந்தியாவின் தலைமை ஆளுநர் பதவி வகித்தவருள் மிகவும் இளையவர் இவரே; நெப்போலியனை எதிர்த்து வாட்டர்லூப் போர்க்களத்தில் போரிட்டுப் புகழடைந்தார். பிறகு கனடாவின் ஆளுநராகவும், 1829 முதல் 1832 வரை இந்தியாவில் படைத் தலைவராகவும், 1837-ல் ஆங்கிலப் பாராளுமன்ற உறுப்பினராகவும், 1845-ல் வணிகக் குழுவின் தலைவராகவும் பல்வேறு நிலைகளில் பணியாற்றினார். இளையவராயிருந்தாலும் செயலாற்றும் திறனும், ஆதிக்கம் செலுத்தும் மனப்பான்மையும் உடையவராக அவர் விளங்கினார். ஆனால், மிக்க இறுமாப்பு உடையவராக இருந்தார். அடிக்கடி உடல்நலமின்றி அவதிப்பட்டார். அவருடைய உடல் நலமின்மை குறித்துத் தெரிந்த எவராலும் அவர் சாதித்த சாதனைகளைக் கண்டு மலைக்காமல் இருக்க முடியாது. அவருடைய சளைக்காத மன உறுதியினால்தான் அத்தகைய சாதனைகளைச் சாதிக்க முடிந்தது. உடல் தளர்ந்த நிலையில் கடுமையாக உழைத்ததன் காரணத்தாலும், படையினர் புரட்சிக்கு அவர் செய்த பல சீர்திருத்தங்களே காரணமென்று பலர் வெளிப்படையாகவே அவரைக் குற்றஞ்சாட்டிய காரணத்தாலும் மனம் நொந்து வாழ்ந்து வந்த அவர் 1860ஆம் ஆண்டில், தம்முடைய நாற்பத்தெட்டாம் வயதில் காலமானார்.

அவர் தலைமை ஆளுநராயிருந்த எட்டாண்டுகளும் பல விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தன. ‘டல்ஹௌசி ஆட்சிக்கு

வந்தது, ஆங்கிலேய இந்தியாவின் வரலாற்றில் புதியதொரு சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது,' என்று ஸ்மித் கூறுகிறார். வெல்லெஸ்லி பிரபுவைப் போலவே ஆங்கில அரசு சுதேச அரசர்களின் ஆட்சியைவிட மேன்மையானது என்பது இவர் கருத்தாகும். இந்தியப் பகுதிகளை ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டு வருதல் அப் பகுதி மக்களுக்கு நன்மையே பயக்கும் என்ற கருத்தும் கொண்டவர். இந்தியாவிற்கு வரும்பொழுதே டல்ஹௌசி, இந்தியாவை மேல்நாட்டு நாகரிகப் பாங்குடையதாக மாற்றவேண்டும் என்னும் நோக்கத்தோடு வந்தார். மேலை நாட்டுப் படைக்கலன்கள் இந்தியாவினுடைய போர்க்கருவிகளைக் காட்டிலும் எவ்வாறு ஆற்றலும், திறமையும் உடையன என்பதை மெய்ப்பித்தனவோ, அவ்வாறே மேலை நாட்டு ஆட்சிமுறை இந்தியாவினுடைய ஆட்சிமுறையைக் காட்டிலும் சிறந்ததாக இருக்கும் என்று அவர் கருதினார். ஆங்கிலப் பேரரசை இந்தியாவில் நிறுவப் போர், சுவீகாரம் இழக்கும் கோட்பாடு, நல்லாட்சியற்ற நாடுகளைச் சேர்த்தல் ஆகிய மூன்று முறைகளையும் கையாண்டார்.

சுவீகாரம் இழக்கும் கோட்பாடு (Doctrine of Lapse)

ஆங்கிலேய அரசு, இந்தியத் தனியரசுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளின்படி, வெளிநாட்டுத் தாக்குதல்களிலிருந்தும், உள்நாட்டு ஆபத்துகளிலிருந்தும் பாதுகாக்கப் பட்டுவந்தன. இதன் விளைவாக இந்திய அரசர்கள் எல்லாம் உள்நாட்டு அரசப் பகைமைக்கு ஆளாகாமல் காப்பாற்றப் பட்டனர். மேலும், இந்தியாவின் செயல்முறைகள் எதிலுமே தலையிடுவதற்குரிய பங்கினைப் பெருதவர்களாய்த் தனித்து நிற்குமாறு அவர்கள் விடப்பட்டனர். பல அரசர்கள் அன்றாட ஆட்சித்துறை விவகாரங்களைக்கூடக் கவனிக்க உற்சாகமின்றி இருந்தனர். அதனால், பலவகைத் தீமைகள் பெருகின. அவர்கள் ஆடம்பர வாழ்க்கையிலும் கேளிக்கைகளிலும் காலத்தைச் செலவிட்டமையால் மக்கள் அல்லற்பட்டனர். அவர்களுடைய குறைகளையும், துன்பங்களையும் போக்க யாதொரு பரிகாரமும் செய்யப் படவில்லை. ஆங்கில அரசோ அவர்களுடைய உள்நாட்டுச் செயல்முறைகளில் தலையிட விரும்பவில்லை. ஆனால், மக்களினத்தின் நல்வாழ்வில் கருத்தைச் செலுத்த வேண்டும் என்னும் கொள்கை அவர்களை வற்புறுத்தியதனால் அவர்கள் அத் தனியரசுகளின் உள்நாட்டுச் செயல்களில் தலையிட வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. ஆங்கில அரசு கொடுத்த பாதுகாப்பினால் சில இந்திய அரசுகளின் ஆட்சிமுறை சீர்கெட்டு மக்கள் துன்பக்

கடலில் சிக்கித் தவித்தனர். அவர்களின் வரம்பற்ற கொடுஞ் செயல்களைக் கண்காணிக்க நேரிட்டது. அதன் விளைவாக அவ் வரசுகளுள் சிலவற்றை ஆங்கில அரசுடன் இணைத்துக்கொள்ள நேரிட்டது. இதற்கு எடுத்துக்காட்டாகப் பென்டிங்க் பிரபு கூர்க்கினையும் (Coorg) மைசூரையும் இணைத்துக்கொண்டதையும், 1831ஆம் ஆண்டில் அயோத்தியை அச்சுறுத்தியதையும் குறிப்பிடலாம்.

டல்ஹௌசி பதவி ஏற்றபோது, தனியரசுகளின் ஆட்சி மிகச் சீர்கேடான நிலையிலிருந்தது. அவர் மனத்தில் அவ் வாட்சியை நீக்கவேண்டும் என்ற எண்ணமும், மக்களின் துன்பத்தைக் துடைக்கவேண்டும் என்ற ஆவலும் எழுந்தன. இதன் விளைவே அவரின் புகழ்பெற்ற சுவீகாரம் இழக்கும் கோட் பாடு அல்லது நாடிழக்கும் கொள்கை (Doctrine of Lapse) ஆகும். மேலும், முறைகேடான தனி அரசுகள் இருப்பது, ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் களங்கத்தை உண்டாக்குவதாகவும் அவர் கருதினர். பண்டைய உரிமைகளைப்பற்றி அவர் கவலைப் படாதவராகவும் இல்லை; இரக்கம் காட்டாதவராகவும் இல்லை. ஆனல், மற்றச் சூழ்நிலைகள் இவ் வுரிமைக்கு ஈடாகவோ, மிகுதிப் பட்டோ இருக்கும்பொழுது இயலுமானல் அவ் வரசுகளைக் கைப் பற்றிக் கொள்ளுவதே சாலச் சிறந்தது என்று அவர் எண்ணினர். 'நேரடி.வாரிசு இல்லாவிட்டால், வணிகக் குழுவின் உத்தரவின்றி வாரிசாகத் தத்து எடுத்துக்கொள்ளக் கூடாது,' என்பதே நாடிழக்கும் கொள்கையின் முக்கியக் கோட்பாடாகும்.

ஆனல், இக் கொள்கையினை உருவாக்கியவர் டல்ஹௌசி அல்லர் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும். 1834ஆம் ஆண்டே இயக்குநர்கள் இவ் வுரிமையைத் தெளிவாக இந்தியத் தனி அரசுகளுக்கு அளித்திருந்தனர். ஆனல், வாரிசாகத் தத்து எடுத்துக்கொள்ள அனுமதி கேட்டவுடனேயே, அனுமதி கொடுக்கப்பட்டது. டல்ஹௌசிக்கு முன்பிருந்த தலைமை ஆளுநர்கள் சுதேச அரசுகளை ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவராமல் தடுக்கச்செய்யும் அளவிற்குக் கொள் கையைச் செயலாற்றினர். ஆனல், டல்ஹௌசி சட்டம் இடம் தருமானல் சுதேச அரசுகளைக் கைப்பற்றி, அவற்றை ஆங்கில அரசுடன் இணைத்துக்கொள்வதே மிகவும் பொருத்த முடையதாகும் என்னும் பொதுவான ஒரு கொள்கையுடன் பணி யாற்றினர்.

நேரடி வாரிசு இல்லாத இந்த அரசர்கள் தத்து எடுத்துக் கொள்ளத் தலைமை ஆளுநருடைய அங்கீகாரத்தைப் பெற

வேண்டுமென்று டல்ஹௌசி வற்புறுத்தினர். தலைமை ஆளுநர் தம்முடைய இசைவினை அளிக்கவில்லை என்றால், அவ் வரசு 'நாடி ழக்கும் கொள்கை' மூலம் ஆங்கில அரசிற்கு உரியதாகிவிடும் என்று அவர் அறிவித்தார். ஆங்கில அரசின் ஆதரவால் ஆட்சி நடைபெறும் சுதேச நாடுகளில்தான் இக் கொள்கை கடைப் பிடிக்கப்பட்டதென்றாலும், சில காரணங்களால் எந்தச் சுதேச நாடு ஆங்கில ஆதரவில் இயங்கியது, எது தனித்து இயங்கியது என்று திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில் இருந்தது. இதனால் நாடிழக்கும் கொள்கையை டல்ஹௌசி செயல்படுத்தியது இந்து அரசர்கள் அனைவருக்கும் அச்சம் அளித்தது. எந்தக் காரணம் கூறித் தங்கள் நாட்டை டல்ஹௌசி ஆக்கிரமித்துக் கொள்வாரோ என்ற பயம் இருந்துகொண்டே இருந்தது. சாக்குப்போக்குகளை அடிப்படையாகக் கொண்டு அவர் செயலாற்றியது முகமதிய அரசர்களிடையேயும் அமைதி யின்மையை உண்டாக்கிற்று.

சதாரா

1848-ல் வாரிசின்றி இறந்த சதாரா அரசர் தாம் இறப்பதற்கு முன் ஆங்கிலேயர் அனுமதியின்றி ஒரு மகனைச் சுவீகாரம் எடுத் திருந்தார். இதனை இயக்குநர் மன்றம் ஏற்க மறுத்துவிட்டது. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டபோது 1818-ல் சதாரா ஆங்கிலேயரால் வழங்கப்பட்டது. எனவே, அதனை இயக்குநர் மன்றம் ஏற்க மறுத்தது, 'இந்தியாவின் வழக்கப்படி சதாரா மன்னர் சுவீகாரம் எடுத்துக்கொண்டது சரியே ஆயினும், அவர் ஆங்கிலப் பேராட்சியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர். அவ் வாட்சியின் அனுமதியின்றி ஒரு மகனைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டதால் இது செல்லுபடியாகாது. எனவே, சதாரா ஆங்கில ஆட்சியுடன் இணைத்துக்கொள்ளப்பட வேண்டியது தான்' என்றனர். இதனை அர்னல்டு என்பார் 'இது இலாபமான செயலாயினும் நீதியானதில்லை' என்று கண்டித்தார்.

சாம்பல்பூர்

இது ஒரிஸ்ஸாவிலிருந்த சிறு நாடாகும். 1849-ல் அதன் அரசர் வாரிசின்றி இறந்துவிட ஆங்கிலப் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

ஜான்சி

பண்டேல் கண்டு நாட்டில் இருந்த ஜான்சி சிற்றரசு 1817-ல் ஆங்கிலப் பேரரசின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டது. 1853-ல்

இதனை ஆட்சிபுரிந்த அரசர் கங்காதர ராவ் வாரிசின்றி இறந்து விட, இவருடைய மனைவி இராணி இலட்சுமிபாய் தனக்கு ஒரு சுவீகாரப் புத்திரனைக் கொள்ள விரும்பியதை ஆங்கிலேயர் ஏற்க வில்லை. ஏற்கெனவே சுவீகார மெடுத்திருந்த ஆனந்த ராவ் என்பவரையும் இயக்குநர் வாரியம் நிராகரித்துவிட்டது. 1853-ல் ஜான்சியும் இணைக்கப்பட்டது.

நாகபுரி

இதனை ஆண்ட இரகூஜி பான்ஸ்லே வாரிசின்றி இறந்து விட, அவருடைய இராணியார் சுவீகார மெடுத்திருந்த யச்வந்த் ராவ் என்பவரை வாரிசாக ஏற்க மறுத்து, ஆங்கிலேயர்கள் தம் ஆட்சியுடன் இணைத்துக்கொண்டனர். நாகபுரியைக் கைப் பற்றியதும் அரண்மனையிலிருந்த நகைகளையும், மற்றப் பொருள் களையும் ஆங்கிலேயர் பகிங்கரமாக ஏலமிட்ட செய்கையைப் பண் புள்ளம் கொண்ட அனைவரும் வெறுத்தனர்.

ஜெய்ப்பூர், பஹாட், உதயபூர்

ஜெய்ப்பூர், பஹாட், உதயபூர் ஆகியவை சுவீகாரம் இழக்கும் கோட்பாட்டின்படி இணைக்கப்பட்டன. இரண்டாம் பாஜிராவுக்கு ஆங்கிலேயர்கள் கொடுத்துவந்த ஓய்வுகால ஊதியம், அவர் இறந்தபின் அவருடைய சுவீகாரப் புத்திரனுன நாஞ சாகிபிற்குக் கொடுக்காமல் நிறுத்தப்பட்டது. கருநாடக நவாபு 1853-ல் வாரிசின்றி இறந்துவிட, அவருடைய நிஜாம் என்னும் பட்டம் அவர் குடும்பத்தாருக்கு மறுக்கப்பட்டது. 1855-ல் வாரிசு இல்லாமல் தஞ்சை அரசர் சிவாஜி இறந்துவிட அவருக்குப்பின் வாரிசாக யாரும் ஏற்கப்படவில்லை:

நல்லாட்சியற்ற நாடுகளைச் சேர்த்தல்

அயோத்தி இணைப்பு

இதைத் தவிர தனியரசுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் டல்ஹௌசி பிரபு தலையிட்டார். கொடுங்கோல் அரசர்களை நீக்கி, அவர்களின் அரசுகளை ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். கொடுங்கோன்மையான அரசுகளைக் கைப் பற்றிக்கொள்ளுதல் நேர்மையான செயல் என்றே கருதினர். அயோத்தி இதன் காரணமாகவே வணிகக் குழுவின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1813ஆம் ஆண்டு முதலே அவ் வரசின் ஆட்சிமுறை நிலையாக நலிவுற்றுக்கொண்டே வந்தது. அயோத்தியின் அரசியல் அவல நிலையிலிருந்தது. டல்ஹௌ

சிக்கு முன்பு பதவி வகித்த தலைமை ஆளுநர்கள் திரும்பத் திரும்ப எச்சரிக்கை செய்தும் அயோத்தியில் தொடர்ந்து நிர்வாகம் சீர் கேடான முறையிலேயே இருந்தது. 1856-ல் அயோத்தி ஆங்கில அரசுடன் டல்ஹௌசியால் இணைத்துக் கொள்ளப்பட்டு, அயோத்தி நவாபிற்கு ஆண்டிற்கு ரூபாய் 12 இலட்சம் ஒய்வு ஊதியம் தரப்பட்டது. சிலீமென் (W. H. Sleeman) 'அயோத்தி யில் ஒழுங்கின்மையும் கொடுங்கோலாட்சியும் தலைவிரித்தாடின' என்று 1851ஆம் ஆண்டு நாட்குறிப்பில் கூறியுள்ளார்.

அயோத்தி ஆட்சியினை வணிகக்குழு எடுத்துக்கொண்டமை பாராட்டத்தக்கதாயினும் அதை எடுத்துக்கொண்ட முறை, டல்ஹௌசியின் அரசியல் தந்திரமின்மையைக் காட்டியது. சுவீகாரம் இழக்கும் கொள்கை எப்படி இந்து அரசர்களிடையே வெறுப்பையும், மனக்கசப்பையும் வளர்த்ததோ, அதைப்போன்ற நிலையினையே முகமதிய அரசர்களிடத்திலும் உண்டாக்கியது. 1857ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்தியப் பெரும் கலகத்திற்கு அயோத்தி இணைப்பு முக்கியமான காரணங்களில் ஒன்றாக அமைந்தது.

1853ஆம் ஆண்டு நிஜாமின் ஆட்சியிலும் தலையிட்டார். முறையற்ற ஆட்சிமுறை நிலவியதே அதற்கும் முக்கியக் காரணம். ஆனால், ஐதராபாத்தை ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டு வராமல் நிஜாமை ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தார். இதனால் நிஜாம் படையினர் புரட்சியின்போது வணிகக் குழுவுடன் நட்புக்கொண்டு, அவர்களுடன் இருந்தார்.

சிறப்புப் பெயர்கள் ஒழிப்பு

டல்ஹௌசியின் கைப்பற்றுத் திட்டத்தின் மூன்றாவது பகுதி அரசர்களுக்குப் பெயரளவில் இருந்துவந்த இறைமாட்சியை (Sovereignty) அழித்தொழித்தமை யாகும். டல்ஹௌசி சிறப்புப் பெயர்கள் எல்லாம் வழக்கிறந்து போய்விட்டன என்று கருதின மையால் இவ்வாறு செய்யத் துணிந்தார். கர்நாடக நவாபினுக் குரிய சிறப்புப் பெயரினை நீக்கிவிட்டார். சிறப்புப் பெயர் தனி மனிதருக்கு உரியதேயன்றி, மரபுவழிப் பெயரன்று என்பதே இதற்கு அவர் காட்டிய காரணமாகும். ஆனால், 1867ஆம் ஆண்டில் அக் குடும்பத்தின் தலைவர் 'ஆர்க்காட்டின் அரசர்' என்ற பட்டம் பெற்றார்.

முகலாயப் பேரரசர் என்ற பட்டத்தை நீக்க அவர் விரும் பினார். இயக்குநர் அதை ஆட்சேபிக்கவே, பகதூர் ஷாவின்

மரபுரிமையை அடுத்துப் பெறப்போகும் அரசிளங் குமாரரிடத்து டல்ஹௌசி ஓர் உடன்படிக்கையினைச் செய்துகொண்டார். அதன்படி அவ் வரசர் மரபுரிமைப்படி பதவி ஏற்றவுடன் பேரரசர் என்ற பட்டத்தை விட்டுவிடவேண்டும் என்றும், பேரரசருடைய அரண்மனையிலேயே அவர் குடியிருக்கக் கூடாது என்றும் வற்புறுத்தப்பட்டார்.

உள்துறைச் சீர்திருத்தங்கள்

அவருடைய இந்திய நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற உள்ளார்வம், ஆங்கிலேய ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநிறுத்தும் ஆவலுக்கு எந்த வகையிலும் குறைந்ததன்று. இவருடைய நிருவாகச் சீர்திருத்தங்கள் பெயரும் புகழும் பெற்றவை. அவருடைய 'நாடிழக்கும் கொள்கை' அவருக்கு உள்துறைச் சீர்திருத்தங்களால் வர வேண்டிய புகழை நீக்கிவிட்டது. இந்திய வரலாற்றில் 'இரக்க மற்ற ஆக்கிரமிப்பாளர்' என்றே அவர் சித்திரிக்கப்பட்டுள்ளார். அவருடைய புகழும், பெருமையும் குறித்து இதனால் சரிவரத் தெரிந்துகொள்ள முடியவில்லை. பல வகையிலும் அவர் புதிய இந்தியாவைத் தோற்றுவித்தவராவார். எல்லை மீறி வளர்ந்து விட்ட வங்காளத்தினைத் தலைமை ஆளுநர் நேரடியாக ஆட்சிபுரிவதற்குப் பதிலாகத் துணை ஆளுநர் (Lieutenant Governor) ஒருவரைப் பதவியில் அமர்த்தும்படி செய்தார். 1853ஆம் ஆண்டு சாசனச் சட்டப்படி தலைமை ஆளுநரின் செயற்குழுவின் (Executive Council) எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. வங்காளம், வடமேற்கு மாநிலம், பம்பாய், சென்னை மாநிலங்களிலிருந்து ஒவ்வோர் உறுப்பினரையும் இரண்டு நீதிபதிகளையும் தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் சேர்த்துக் கொண்டார். சட்டப் பணியைச் (Legislative) செய்வதற்காக இக் குழுவின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இதனுடன் ஏற்கெனவே இருந்த சட்ட உறுப்பினரும் (Law member) நிரந்தர உறுப்பினராக ஆகக்ப்பட்டார்.

பொதுப்பணித் துறை

டல்ஹௌசி பொதுப்பணித் துறையை (Public Works Department) 1855-ல் நிறுவினார். அவர் தம்முடைய பொதுப் பணித் திட்டங்களைச் செயலாற்றுவதற்கு அதைச் சிறந்த கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார். முன்னரே தொடங்கப்பெற்ற கங்கைக் கால்வாய் போன்ற, நீர்ப்பாசனத் திட்டங்களை விரிவுபடுத்தும் பணியில் அவர் ஈடுபட்டார். அப் பொதுப்பணித்

திட்டத்தில் நெடுஞ்சாலைகள் அமைத்தல், இரயில் பாதைகள் அமைத்தல் போன்ற பலவகைத் திட்டங்கள் இடம்பெற்றன. நெடுஞ்சாலைகள் அமைக்கும் திட்டம் பென்டிங்கினுடைய அவாவினை நிறைவேற்றுவதாக அமைந்தது. கல்கத்தாவிலிருந்து பெஷாவருக்கு அமைக்கப்பட்ட பெரும் நெடுஞ்சாலை மிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

இரயில் பாதை அமைத்தல்

இரயில் பாதைகளை இந்தியாவில் நிறுவியது அவருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்தது. இவரை 'இந்திய இருப்புப் பாதைத் திட்டத்தின் தந்தை' என்றும் கூறலாம். 1844ஆம் ஆண்டு முதற்கொண்டு இந்தியாவில் இருப்புப் பாதை அமைப்பதைப்பற்றிய பேச்சும், திட்டங்களைப்பற்றிய ஆராய்ச்சியும் இருந்து வந்தன. 1853ஆம் ஆண்டு அவர் தாயகத்திற்கு அனுப்பிய செயல்முறைக் குறிப்பில், உள்நாட்டுத் துறைமுகங்களை இணைப்பதற்கும், படைத்துறைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், வாணிக வளர்ச்சியைப் பெருக்குவதற்கும் இருப்புப் பாதைகள் எவ்வாறு பயன்படும் என்பதை விரிவாக விளக்கியிருந்தார். இக் குறிப்பே இயக்குநர்களை இந்தியாவில் இருப்புப் பாதை அமைக்க இசைவு தரும்படி செய்தது. 1853ஆம் ஆண்டில் இந்தியாவில் முதல் இருப்புப் பாதை பம்பாய்க்கும் தாணுவிற்கும் (Thana) இடையே போடப்பட்டது. 1854—55-ல் ஹௌராவிலிருந்து இராணிகஞ்சுக்கும் 1856-ல் சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கும் இருப்புப் பாதைகளைப் போட வழிசெய்தார். இவர் இந்தியாவைவிட்டுத் திரும்பிச் செல்லும் பொழுது 200 மைல்கள் நீளமுடைய இருப்புப் பாதை அமைக்கப்பட்டிருந்ததோடு அத் திட்டம் பெரு வெற்றி பெற்றதைச் செயல்முறையில் கண்டும் மகிழ்ந்தார்.

அஞ்சல்துறைச் சீர்திருத்தம்

இந்தியப் போக்குவரத்து வசதிகளில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கிய இருப்புப் பாதையோடு அஞ்சல் துறையினையும் சீர்திருத்தினர். பொது அஞ்சல்துறை 1838ஆம் ஆண்டு இந்தியாவில் நிறுவப்பட்டது. 1850-ல் அரையணு அஞ்சல்முறையைப் புகுத்தினர். மேலும், கட்டணத்தைக் பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாக அஞ்சல் தலைகளை ஒட்டும் முறையை நடைமுறைக்கு முதன்முதலாகக் கொண்டுவந்தார். டல்ஹௌசிக்கு முன், அஞ்சல் கட்டணம் தூரத்தைக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டது. டல்ஹௌசியினுடைய ஆட்சிக் காலத்திற்கு

முன்பு கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்குக் கடிதம் அனுப்புவ தென்றால் ஒரு ரூபாய் செலவாயிற்று என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. டல்ஹௌசி தம்முடைய ஆட்சிக் காலத்தில் 753 அஞ்சல் நிலையங்களை இந்தியாவில் ஏற்படுத்தினார். அஞ்சல் நிலையங்கள் யாவும் ஒரு தனியான அஞ்சல் துறையின்கீழ்க் கொண்டுவரப்பட்டு, ஒரு தலைமை அஞ்சல் இயக்குநரின்கீழ்ச் செயல்படுத்தப்பட்டன. உலகத்திலேயே முதன் முதலில் 1825-ல் இங்கிலாந்தில்தான் ஸ்டாக்டன்னிலிருந்து டார்லிங்டன் வரையில் முதல் இருப்புப் பாதை போடப்பட்டது. இந்தியாவில் அதற்கடுத்தாற்போல் டல்ஹௌசி இம் முறையை 1853-ல் புகுத்தியது அவருடைய முற்போக்கான எண்ணத்தையே பிரதிபலிக்கிறது. மேலும், தந்திமூலம் செய்தியனுப்பும் முறையினையும் அவர் புகுத்தினார். 1854ஆம் ஆண்டு 800 மைல்கள் நீளமான தந்திவழிச் செய்திப் போக்குவரத்து, கல்கத்தாவிலிருந்து ஆக்ரா வரையில் அமைக்கப்பட்டது. 1857ஆம் ஆண்டில் இத் திட்டம் லாகூருக்கும், பெஷாவருக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

கல்விச் சீர்திருத்தங்கள்

டல்ஹௌசி காலத்தில் கல்வித் துறையிலும் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. 1854ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட சர் சார்லஸ் உட்டின் (Sir Charles Wood) குறிப்பே பிற்காலத்தில் இந்தியாவில் பல்கலைக்கழகங்கள் தோன்ற அடிகோலிற்று எனலாம். ஆனால், அது டல்ஹௌசியினுடைய முழு ஆதரவையும் பெற்றதோடு, இந்தியாவில் கல்வித் துறையில் முன்னேற்றத் திட்டங்களுக்கு அடிப்படையாகவும் அமைந்தது. உதவித் தொகை (Grant in aid) அளிக்கும் திட்டத்தின்மூலம் பள்ளிகளையும், கல்லூரிகளையும் போற்றி ஆதரிக்க டல்ஹௌசி ஏற்பாடு செய்தார். இத் திட்டத்தில் தனியார் தங்களுடைய விதி முறைகளுக்கும் வசதிக்கும் ஏற்பக் கல்விப் பணியில் ஈடுபடுவது ஊக்குவிக்கப்பட்டது. 1857ஆம் ஆண்டில் கல்கத்தா, சென்னை, பம்பாய் நகரங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. ரூர்க்கியில் (Roorke) ஒரு பொறியியல் கல்லூரியையும் நிறுவினார். இவ்விதம் தொழில்நுட்பக் கல்விக்கு இந்தியாவில் வித்திட்ட வித்தகரும் டல்ஹௌசியே ஆவார். இதனால் இவரை இந்தியாவின் 'தொழில்நுட்பக் கல்வி முறையின் தந்தை' என்று அழைக்கலாம். மக்களின் பொதுநலனிலும் நாட்டம்கொண்டு, பல மருத்துவ மனைகளையும் அமைக்க ஏற்பாடு செய்தார். சுருக்கமாகக் கூறவேண்டுமானால், அவரால் சீர்திருத்தப்படாத உள்ளாட்சித் துறையே இல்லை எனலாம்.

இவர் காலத்தில் இரண்டாம் சீக்கியப் போரும், இரண்டாம் பர்மியப் போரும் நிகழ்ந்தன.

இரண்டாம் சீக்கியப் போர் (1848—49)

டல்ஹௌசி பிரபு, தலைமை ஆளுநர் பதவியேற்றவுடனே, பஞ்சாபில் புதியதொரு நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சீக்கியத் தலைவர்களுடன் முதலாம் சீக்கியப் போருக்குப் பின் ஹார்டிஞ்ச் பிரபு செய்துகொண்ட ஏற்பாடுகள் நீடித்து நிலைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று. சீக்கிய வீரர்கள், தங்கள் தோல்விக்குத் தங்கள் தலைவர்களின் துரோகச் செயலே காரணம் என்று திட்டவட்டமாக நம்பினர்; பஞ்சாபில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதை வெறுத்தனர்; ஆங்கிலேயருக்கு எதிராகக் கலகம் செய்யத்தக்க தருணத்தை எதிர் பார்த்திருந்தனர்.

எதிர்பார்த்த தருணம் மூல்தான் (Multan) நகரில் நடந்த கலகத்தின்மூலம் வந்தது. மூல்தானின் ஆளுநர் மூல்ராஜ் என்பவர் வரிவசூல் கணக்கைச் சரிபார்க்க வந்த இரு ஆங்கில அதிகாரிகளைக் கொலை செய்ததோடு மூல்தானில் ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கிளர்ச்சியையும் உண்டாக்கினார். டல்ஹௌசி, இதை உடனே கவனிக்கத் தவறினார். மேலும், முறைப்படி லாகூர் அரசுதான், அக் கலகத்தை அடக்கக் கடமைப்பட்டுள்ளது என்பதும் நோக்கத்தக்கது. கால தாமதம் செய்ததால் ஷெர் சிங் (Sher Singh) தலைமையின்கீழ்ச் சீக்கியத் தலைவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக மூல்தானுடன் சேர்ந்துகொண்டனர். இவ்விதம் மூல்தானில் ஏற்பட்ட கலகம் சீக்கிரத்திலேயே சீகிகியர்களின் சுதந்திரப் போராட்டமாய் மாறியது. பெஷாவரை ஆஃப்கானியர்களுக்குக் கொடுப்பதாய்க் கூறி, அவர்களையும் சீக்கியர்கள் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள். இதனால் இரண்டாம் சீக்கியப் போர் மூண்டது.

1849ஆம் ஆண்டு சில்லியன் வாலா (Chillian Wallah) என்னுமிடத்தில் ஒரு கடுமையான போர் நிகழ்ந்தது. சீக்கியர்கள் மிக்க வீரத்துடன் போரிட்டு, ஏராளமான ஆங்கிலேய வீரர்களைக் கொன்றனர். உறுதியான வீரத்துடன் சீக்கியர்கள் போரிட்டாலும் ஆற்றலுள்ள தலைமை இல்லாததால், கடைசியில் தோல்வியுற்றனர். சீக்கியப் படையின் தோல்வி மிகவும் வருந்தத்தக்கது. தகுதியான தலைமை இல்லாத காரணத்தால்,

அவர்கள் ஆற்றல் விழலுக்கு இறைத்த நீர்போல் வீணாயிற்று. ஆஃப்கானியர்கள், சர் வால்டர் கில்பர்ட் (Sir Walter Gilbert) என்பவரால் காபூல்வரையிலும் துரத்தியடிக்கப்பட்டனர். இராணுவ மன்றத்தால் மூல்ராஜ் விசாரணை செய்யப்பட்டு. இறக்கும் வரையில் சிறைத் தண்டனையை அனுபவிப்பதற்காகக் கடலுக்கு அப்பால் அனுப்பப்பட்டு அங்கே இறந்தார்.

பஞ்சாப் ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டது. அதன் அரசரான திலீப் சிங்கிற்கு ஆண்டிற்கு ஐந்து இலட்சம் ரூபாய் ஓய்வுகால ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. அவருடைய தாயாரான ஜிண்டான் ராணியுடன் திலீப் சிங் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார். அங்கே கிறித்துவ மதத்தைத் தழுவி நார்ஃபோக் (Norfolk) என்னுமிடத்தில் ஆங்கில நிலக்கிழாராய் வாழ்க்கையை நடத்தினார். சிறிது காலம் கழித்து இந்தியாவிற்கு வந்து, சீக்கிய மதத்தை மறுபடியும் தழுவினார். இருந்தாலும் அவருடைய பழைய நிலைமையைப் பெற முடியவில்லை. ஜிண்டான் ராணி இலண்டனிலேயே இறந்தார்.

பஞ்சாப், ஆங்கில அதிகாரிகள்கொண்ட ஒரு குழுவினால் ஆட்சி செய்யப்பட்டது. சர் ஹென்றி லாரன்ஸைத் தலைவராகவும், ஜான் லாரன்ஸ், சார்லஸ் மான்சன் என்பவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட அக் குழு, இராணுவம், காவற் படை (Police) நீதி, நிலவரி, தொழில், வேளாண்மை முதலிய துறைகளில் பல சீர்திருத்தங்களைச் செய்தது. 1853ஆம் ஆண்டு இக் குழு கலைக்கப்பட்டது. தலைமை ஆளுநரின் பிரதிநிதியாகச் சர் ஹென்றி லாரன்ஸ் இராசபுதனத்திற்கு அனுப்பப்பட்டார். ஜான் லாரன்ஸைப் பஞ்சாபுக்கு முதல் தலைமை ஆணையாளராக (Chief Commissioner) அமர்த்தி, அவரிடத்துப் பஞ்சாபின் நிர்வாகத்தை ஒப்படைத்தார். அவர் பாதைகளை அமைத்தும் நீர்ப் பாசன வசதிகளைச் செய்தும் விவசாயத்தை ஊக்குவித்தார். இக் காலத்தில்தான் பல கால்வாய்த் திட்டங்கள் அமைக்கப்பட்டன. வரிகளைக் குறைத்தார்; வழிப்பறிக் கொள்கைகளை ஒழித்தார்; ஒழுங்கான நிருவாகத்தின்மூலம் பஞ்சாபில் அமைதியும் வளமும் ஏற்படுத்தினார். பஞ்சாபை ஆங்கில ஆட்சிக்குள் கொண்டு வந்தபின் வடமேற்கில் இந்திய அரசின் எல்லை இந்தியாவின் இயற்கை எல்லையாகிய இமயமலைப் பிரதேசத்தை எட்டியது. இரண்டாம் சீக்கியப் போருக்குப் பிறகு, சீக்கியர், ஆங்கிலப் பேரரசுக்கு உறுதுணையாக நின்று நட்புடன் நடந்துகொண்டனர். இரண்டாம் ஆங்கில-பர்மியப் போரின்போதும்

இந்தியப் பெரும் புரட்சியின்போதும் ஆங்கிலேயருக்குத் தக்க உதவி புரிந்தனர்.

சீக்கியப் போரை வெற்றியுடன் நடத்தியதைப் போன்றே, பர்மியர்களுடன் நடந்த இரண்டாம் பர்மியப் போரிலும் வெற்றி வாகையே சூடினர்.

இரண்டாம் பர்மியப் போர் (1852)

தாராவட்டி (Tharrawaddy) என்பவர் பர்மாவின் அரசராக 1837-ல் பதவியேற்றார். பர்மிய அரசியல் மரபின்படி, புதிய அரசருக்கு முன்பிருந்த உடன்படிக்கை எதுவும், மறுபடியும் உறுதிப்படுத்தினாலன்றிப் புதிய அரசரைக் கட்டுப்படுத்தாது. இக் கொள்கையின்படி ஆங்கிலேயர் ஏற்கெனவே செய்து கொண்டிருந்த அரசியல், வாணிக உடன்படிக்கைகள் செயலற்றுப் போயின. ஆங்கில வாணிகம் மிகவும் பாதிக்கப்பட்டது. இதனுடன் பர்மியர், ஆங்கிலேயர்களைக் கொடுமைப்படுத்தவும், அவமானப்படுத்தவும் ஆரம்பித்தனர். ஆதிக்கப் பற்றுக்கொண்ட டல்ஹௌசியால் இக் கொடுமைகளைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. பர்மாவை ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்ற ஆதிக்கப்பற்றுக்கு, பர்மிய அரசின் போக்கு ஓர் அரிய வாய்ப்பைத் தந்தது. 1845-ல் தாராவட்டி இறந்துவிடவே, அவரது மகன் பாகன் (Pagan) அரசுகட்டிலில் அமர்ந்தார். பாகனும் தம் தந்தையின் கொள்கையையே பின்பற்றினார். பாகனுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்த டல்ஹௌசியால் அனுப்பப்பட்ட லாம்பெர்ட்டின் (Lombert) கோரிக்கைகளுக்கு, பாகன் மரியாதையான முறையில் பதிலை அனுப்பினாலும், பாகனின் அதிகாரிகள் லாம்பர்ட் அதிகாரிகளை அவமானமாக நடத்தினர் என்ற குற்றம் பாகன்பால் சாட்டப்பட்டது. இதனால் இரங்கூன் துறைமுகம் முற்றுகையிடப்பட்டது. பாகனுக்குச் சொந்தமான ஒரு கப்பலையும் கைப்பற்றினர். இரண்டாம் பர்மியப் போர் 1852ஆம் ஆண்டு மூண்டது.

போரின் போக்கு

முதலாம் பர்மியப் போர்போலன்றி இரண்டாம் பர்மியப் போரை டல்ஹௌசி மிகவும் திறமையுடன் நிர்வகித்தார். முதலாம் பர்மியப் போரில் ஏற்பட்ட இன்னல்களை மனத்தில் கொண்டு, போக்குவரத்து, மருத்துவ வசதி இவைகள் நன்கு கிடைக்க வசதி செய்தார். முதல் பர்மியப் போரில் ஈடுபட்ட இணையற்ற வீரர்களான ஜெனரல் காட்வின் (General Godwin),

அட்மிரல் ஆஸ்டின் (Admiral Austin) ஆகியோரின்கீழ் பிரிட்டிஷ் படை இரங்கூனை அடைந்தது. இரங்கூனிலிருந்த புகழ்பெற்ற கோயிலைப் பர்மியர் ஒரு கோட்டையாய்ப் பயன் படுத்தினர். அதனால் அதைத் தாக்கிக் கைப்பற்றினர். டல்ஹெளசியே இரங்கூனுக்குச் சென்றார் (செப். 1852). புரோம் (Prome), பெகுப் (Pegu) பகுதிகளையும் ஆங்கிலேயர் கைப் பற்றினர். டல்ஹெளசி பெகு (அல்லது) கீழ்ப் பர்மாவை இரங்கூன் உட்பட்ட ஆங்கில அரசுடன் இணைத்துக்கொண் டார். இதனால் வங்காள விரிகுடாவின் கிழக்குக் கடற்கரை முழு வதிலும் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. மூன்றில் இரண்டு பங்கு பர்மா, ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ்க் கொண்டு வரப்பட்டது. பர்மிய அரசும் கடலுடன் தொடர்புகொள்ளாத படி துண்டிக்கப்பட்டது. கீழ்ப் பர்மாவை இணைத்ததுடன் டல்ஹெளசி திருப்திகொண்டார். கீழ்ப் பர்மாவை ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்ததைப் பர்மிய அரசர் அதிகார பூர்வமாக ஒப்புக்கொள்ள, டல்ஹெளசி விடுத்த கோரிக்கையைப் புதிதாக வந்த பர்மிய அரசரான மின்தான் ஒப்புக்கொள்ள மறுத்தார். மின்தான் 1852-ல் பதவியேற்றார். இவர் ஆங்கிலே யருடன் நட்புறவு கொள்ள மறுத்ததுடன், கீழ்ப் பர்மாவை மீண்டும் பெறும் எண்ணத்துடன், ஆங்கிலேயருக்கு எதிராகத் தூதுக்குழு ஒன்றை ஃபிரான்சுக்கு அனுப்பி ஆலோசனையும் நடத்தினர். இரங்கூனை, ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டதால், மாண்டலே (Mandalay) என்ற புதிய நகரத்தை 18575-ல் அமைத் தார். ஒரு கோட்டையையும் அரண்மனையையும் கட்டினர்.

இரண்டாம் பர்மியப் போர் இவ்விதம் கீழ்ப் பர்மா இணைப் புடன் 1852-ல் முடிவுற்றது. டல்ஹெளசி கீழ்ப் பர்மாவில் மேற் கொண்ட நடவடிக்கைகள் யாவும் ஃபிரான்சின் பயத்தை மனத்தில் கொண்டே செய்யப்பட்டது எனலாம். ஆங்கிலேயரின் வடமேற்கு எல்லைக் கொள்கை ரஷ்யரின் பயத்தை மனத்தில் கொண்டு பின்பற்றப்பட்டதைப் போன்று, வடகிழக்குக் கொள்கையும் ஃபிரான்சின் அச்சத்தினால் பின்பற்றப்பட்டது.

மதிப்பீடு

டல்ஹெளசியின் ஆட்சிக்காலம், சாதனைகள் நிறைந்த காலம் என்பதில் ஐயமில்லை. அச் சாதனைகள் யாவும், மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன்தாம் செய்யப்பட்டன. இத்தனை சாதனைகள் செய்தும், மக்களால் அவரை உயர்வாகக் கருத முடியவில்லை; இதற்கு முக்கியக்

காரணம், மக்களின் மனப்பான்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற அருளுணர்வும், மரபுகளைப் போற்றி மதிக்கும் பண்பும் அற்றவராக அவர் இருந்ததே ஆகும். உணர்ச்சியற்ற, கடமையுணர்வுகொண்ட கர்மவீரரைப் போன்று செயலாற்றினாரே தவிர, அன்புடனும், இரக்கத்துடனும் மக்களிடம் நடந்துகொள்ளத் தவறினார், செயல்திறனுக்கு மதிப்பிட்டாரே தவிரச் செயல்படும் மனிதரின் உள்ளத்திற்கு மதிப்புத்தர மறந்துவிட்டார். இக் குறைபாட்டிற்குத் தண்டனையாக டல்ஹௌசி பிரபு, படையினர் பெரும் புரட்சிக்கு மூலகர்த்தா என்ற குற்றச்சாட்டை ஏற்கவேண்டியவ ரானார். சிறிது இரக்கத்துடனும், மனிதத் தன்மையுடனும் நடந்திருப்பாரேயானால், போற்றத்தக்க இந்திய ஆட்சி வல்லுநர்களில் ஒருவராகப் போற்றிப் புகழப்பட்டிருப்பார். 'நல்லதே செய்தாலும், மக்களின் மனமறிந்து, தக்க முறையில் அதைச் செய்யவேண்டும்' என்ற அரசியல் படிப்பினையை இவர் நிர்வாகம் நமக்குப் புகட்டுகிறது.

ஆனால், இராம்சே மூர் '1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்திற்குப்பின் இந்தியா அடைந்த மாறுதலைக் காட்டிலும், அதனை அடுத்து உருவாகிய இந்திய அரசியல் மாறுதல்களைக் காட்டிலும், டல்ஹௌசியின் சீர்திருத்தங்கள் பல அரிய மாற்றங்களை ஏற்படுத்திப் புதிய இந்தியாவைப் படைத்தன' என்று புகழ்கிறார்.

கானிங் பிரபு (1856—1862)

டல்ஹௌசி பிரபுவுக்குப்பின், கானிங் பிரபு 1856-ல் தலைமை ஆளுநர் பதவியில் அமர்த்தப்பட்டார். இவர் 1812-ல் பிரிட்டனின் பிரதமராயிருந்த ஜார்ஜ் கானிங் பிரபுவின் புதல்வராவர்; அரசியல் அனுபவமும், திறமையும், ஊக்கமும் மிக்கவர்; தன்னலம் அற்றவர். ஆனால், கூர்ந்து ஆராய்ந்தறியும் திறனும், உடனடியாக நடவடிக்கை எடுக்காத தாமதகுணமும், அவரிடமிருந்த இரண்டு மிகப் பெரிய குறைகளாகும். இதனாலேயே, படையினர் புரட்சி ஏற்படும் எனத் தெரிந்திருந்தும், அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினார். இவர் பதவி ஏற்ற உடனே பாரசீகத்துடன் போரிட வேண்டியதாயிற்று.

பாரசிகப் போர்

1856-ல் பாரசீகம், ஹீரட்டைத் (Herat) தாக்கியது. இதை எதிர்த்துக் கானிங் பிரபு, பாரசீக வளைகுடாவுக்கு ஒரு கப்பற்படையை அட்மிரல் ஜேம்ஸ் அவுட்ராம் (James Outram) தலைமை


டல்ஹௌஸி காலத்தில்
பிரிட்டிஷ் இந்தியா
காபூல்
பெஷாவர்
காஷ்மீரம்
பஞ்சாப்
காண்டஹார்
குஜராத்
அமிர்தசரஸ்
ராம்நகர்
லாகூர்
முல்தான்
மீரட்
டில்லி
அயோத்தி
நேபாளம்
ராஜபுத்திரர்கள்
ஆக்ரா
சிந்து
ஜோதிபுரி
ஆஜ்மீர்
குவாலியர்
பீஹார்
அஸ்ஸாம்
ஐதராபாத்
ஜான்ஸி
அலகாபாத்
காசி
ஹோல்கார்
ரீவா
போபால
முர்ஷிதாபாத்
வங்காளம்
இந்தூர்
பர்ஹாம்பூர்
குசரத்
கல்கத்தா
சம்பல்பூர்
நாகபுரி
பேரார்
பம்பாய்
அரபிக்
கடல்
நிஜாம்
அரசு
சதாரா
ஒரிஸ்ஸா
ஐதராபாத்
கோலாப்பூர்
வங்காளக்
குடாக்கடல்
கோவா
மைசூர்
பெங்களூர்
சென்னைப்பட்டினம்
மங்களூர்
மைசூர்
புதுச்சேரி
கொச்சி
திருவாங்கூர்
இலங்கை
வ
இந்து மகா சமுத்திரம்

யில் அனுப்பினர். இப் படை பாரசீகத்தைத் தோற்கடித்தது; அதனுடன் ஓர் உடன்படிக்கையையும் செய்துகொண்டது. அவ்வுடன்படிக்கைப்படி, பாரசீகர்கள் ஹீரட்டை விட்டு வெளியேறினர். அதனுடன் ஆஃப்கானிஸ்தானத்தின் விவகாரங்களில் தலையிடாமலிருக்கவும் ஒப்புக்கொண்டனர். ஆஃப்கானிஸ்தான அரசர் தோஸ்த் அலியுடன் மீண்டும் கானிங் பிரபு, ஒரு நேச உடன்படிக்கையைச் செய்துகொள்ளவே பாரசீகப் போர் வெற்றியுடன் முடிந்தது.

பொதுச் சேவைச் சட்டம்

1856-ல் பொதுச் சேவைக்காகப் படையில் சேரும் சட்டம் (The General Service Enlistment Act) என்பதை நிறைவேற்றினர். இச் சட்டத்தின்படி இந்தியாவில் மட்டுமன்றி, அயல் நாடுகளுக்கும் சென்று போரிட விருப்பம் உள்ளவர்களே படையில் சேர்க்கப்படுவர் என விதிக்கப்பட்டது. சமயக் கட்டுப்பாட்டின் காரணமாகக் கடலைக் கடந்து செல்வது பாவம் என்று எண்ணியமையாலும் இந்தியர் இச் சட்டத்தினுல் படையில் சேர இயலாது போயிற்று.

விதவை மறுமணச் சட்டம்

1856ஆம் ஆண்டிலேயே விதவை மறுமணச் சட்டமும் அவரால் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி விதவைகள் மறுமணம் செய்துகொண்டால் அவர்களுக்கும் அவர்களுடைய சந்ததியாருக்கும் குடும்பச் சொத்தில் உரிமை உண்டு என்பது உறுதியாக்கப்பட்டது.

இவ் விரு சட்டங்களும் சமயப்பற்றுள்ள இந்துக்களின் மனத்தைப் புண்படுத்தின. இந்துக்களைக் கிறித்துவராக்கவே இச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் அவர்கள் கருதினர்.

1857-ல் நிகழ்ந்த படையினர் பெருங் கலகத்திற்குப்பின், இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை இங்கிலாந்துப் பேரரசியாரே, தம் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். இதனுல் தலைமை வைஸ்ராய் (அரசப் பிரதிநிதி) என்றும் அழைக்கப்பட்டார். இந்த மாற்றத்தின்படி முதல் அரசப் பிரதிநிதியாக, கானிங் பிரபுவே அமர்த்தப்பட்டார். வைஸ்ராயாக 1858 முதல் 1862 வரை கானிங் பிரபு பதவியிலிருந்தார்.

வங்காளக் குடிவாரச் சட்டம்

1859-ல் உழவர்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் வங்காளக் குடிவாரச் சட்டம் ஒன்றை நிறைவேற்றினர். இதன்படி பன்னிரண்டு ஆண்டுகளாய் ஒரு நிலத்தைத் தொடர்ந்து வேளாண்மை செய்துவரும் வேளாளரிடமிருந்து நீதிமன்ற உத்தரவின்றி, அதிக வரியைப் பெறக்கூடாது; பன்னிரண்டு ஆண்டுகள் முடிந்தவுடன் எவ்விதத் தடையுமின்றி அந் நிலத்தின் உரிமையையும் அக் குடியானவரே அனுபவிக்கலாம்.

படையினர் கலகத்தினால், இந்தியக் கருவூலத்தின் நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டது. பொருளாதார வல்லுநர் ஆலோசனைப் படி, இந்தியக் கருவூலத்தைப் பெருக்கப் பல முயற்சிகள் செய்யப் பட்டன. இதன் விளைவாக இந்தியப் படையில் பல பிரிவுகள் கலைக்கப்பட்டன. வாணிகம், தொழில் முதலியவற்றை நடத்துவதற்கான உரிமை வரியும் (licence), புகையிலைமீது சுங்க வரியும், வருமான வரியும் விதிக்கப்பட்டன. உப்பு வரி உயர்த்தப் பட்டது. இவ்வித முயற்சிகளால் வரவு செலவு சமநிலைக்குக் கொண்டு வரப்பட்டது. படைப் பகுதியிலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

வெள்ளையர்படைக் கலகம்
(The White Mutiny)

இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை, இயக்குநர்களிடமிருந்து தம் இசைவின்றிப் பேரரசியார் ஏற்றுக்கொண்டதை எதிர்த்து இந்தியப் படையிலிருந்த வெள்ளையர்கள் 1859-ல் ஒரு கலகம் செய்தனர். இக் கலகம் வெள்ளையர் படைக் கலகம் என வழங்கப்பட்டது. ஆனால், இக் கலகம் வெகு எளிதில் அடக்கப்பட்டுவிட்டது.

கானிங் காலத்தில் 1861ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டமும், இந்திய உயர்நீதி மன்றங்களின் சட்டமும் இயற்றப் பட்டன. 1861ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டத்தின் கோட்பாடுகளைத் தனியே காணலாம். உயர்நீதி மன்றங்களின் சட்டப்படி, தலைமை நீதிமன்றத்தையும், சதர் நீதிமன்றங் களையும் நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக கல்கத்தா, சென்னை, பம்பாய் போன்ற மாநிலங்களில் தனித்தனியே உயர்நீதி மன்றங்கள் (High Courts) ஏற்படுத்தப்பட்டன. 'இந்திய வரலாற்றில் இரக்கத்திற்கும் அதே சமயத்தில் பெரும் வீரத் திற்கும் பெயர்பெற்ற கானிங் பிரபு, இங்கிலாந்தின் பண்பை

இந்திய மண்ணில் எடுத்துக்காட்டாய் விதைத்தவர்' என்று கர்சான் பிரபு கூறுகிறார். இவர் 1862ஆம் ஆண்டு அரசப் பிரதிநிதிப் பதவியிலிருந்து விலகினார். முதலாம் எல்ஜின் பிரபு இவருக்குப்பின் அப் பதவியை ஏற்றார்.

மதிப்பீடு

இந்திய வரலாற்றின் மிக முக்கியமான கட்டத்தில் ஆட்சியில் மிக உயர்ந்த பதவியிலிருந்த பெருமை கானிங் பிரபுவையே சாரும். 1857ஆம் ஆண்டு நடைபெற்ற படையினர் பெரும் புரட்சியின்போது, உணர்ச்சிவசப்பட்டுச் செய்த சில செய்கைகளுக்காகப் படையினரைப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று சில ஆங்கிலேயர் கூக்குரலிட்டதைச் செவிசாய்க்காததுடன், அவருக்கே உரிய பொறுமையுடனும் அமைதியுடனும், இந்தியருக்கும் ஆங்கிலேயருக்கும் நட்புறவை ஏற்படுத்தப் பாடுபட்ட பெருமை அவரையே சாரும். அதற்காக அவரைச் சிலர் சாடினாலும் அதைப் பொருட்படுத்தாமல் அமைதியையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்திய செம்மல் கானிங் பிரபு ஆவார். இவர் குணத்தின் சிறப்பு, டல்ஹௌசி, கர்சான் போன்றோருடன் ஒப்பிட்டு நோக்குங்கால், மேலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறதெனலாம்.

15. படையினரின் பெரும் புரட்சி

1857ஆம் ஆண்டு ஒரு பெரும் புரட்சி இந்தியாவில் ஏற்பட்டது. இப் புரட்சியைப் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். இதனைப் படைவீரர்களின் கலகம் என்றும், மிகச் சாதாரண நிகழ்ச்சி என்றும், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை அழிக்கச்செய்த முதலாம் மாபெரும் விடுதலைப் போர் என்றும், மிக முக்கிய அரசியல் நிகழ்ச்சி என்றும் பலவாறாகக் கருதுகின்றனர். சவர்க்கார் (V. D. Savarkar) என்பவரே முதன்முதலாக இதை விடுதலைப் போர் என்று அழைத்தார். இந்திய மக்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்று ஏற்படவே இதை விடுதலைப் போராக மிகைப்படுத்திக் கூறியதாக அவரே ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே, இதை விடுதலைப் போர் என்று அழைப்பது வரலாற்று ரீதியாகப் பார்த்தால் சரியாகத் தோன்றவில்லை. அவ்விதமே இதைப் படையினரின் கலகம் என்று எளிதில் புறக்கணிக்கவும் கூடாது. இதன் உண்மை நிலையை அறிய, அது நடைபெற இருந்த காரணங்களை நன்கு ஆராய்ந்தறிதல் அவசியமாகும்.

அரசியற் காரணங்கள்

டல்ஹௌசி பிரபுவின் நாடிழக்கும் கொள்கை, நாட்டில் பெருத்த குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. அயோத்தி ஆங்கில நாட்டுடன் இணைக்கப்பட்டதும், முகலாயப் பேரரசை அப் பதவியிலிருந்து விலக்கச் செய்த ஏற்பாடும் முகமதியர் மனத்தைப் புண்படுத்தியது. பேஷ்வா இரண்டாம் பாஜிராவுக்கு அளித்துவந்த ஓய்வுகால ஊதியத்தை அவர் வளர்ப்பு மகன் நானா சாகிபுக்கு அளிக்க மறுத்தது, மராத்தியரின் மனத்தைப் புண்படுத்தியது. டல்ஹௌசியின் ஆக்கிரமிப்பு ஆசைக்குப் பல இந்திய அரசுகள் பலி ஆயின. சதாரா, ஜெய்ப்பூர், சாம்பல்பூர், உதயபூர், ஜான்சி, நாகபுரி முதலியன நேர்மையற்ற முறையில் ஆங்கில ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு

வரப்பட்டன. உண்மையில் இக் கலகம் நடப்பதற்கு முன்பே, முன்னுள் அரசர்களும், அவர்களுடைய ஆதரவாளர்களும் வணிகக்குழுவின் ஆட்சிக்கு எதிராகச் சதிச்செயலில் ஈடுபட்டிருந் தனர். முன்னுள் அயோத்தி அரசரின் ஆலோசனையாளரான அஹமது உல்லா (Ahmed Ullah), நானு சாகிபு (Nana Sahib), அவர் ஆதரவாளரான தாந்தியா தோபி (Tantia Topi), அஜிமுல்லா கான் (Azimullah Khan), ஜான்ஸி ராணி, முகலாயப் பேரரசரான பஹதூர் ஷா என்பவரின் உறவினரான பிரோஸ் ஷா (Firuz Shah) ஆகியவர்கள் ஏற்கெனவே ஆங்கில ஆட்சிக்கு எதிராக நாடு முழுவதிலும் புரட்சி செய்யும் பணியில் ஈடுபட்டிருந் தனர்.

பொருளாதாரக் காரணங்கள்

நாடிழக்கும் கொள்கையால், அரச குடும்பம் மட்டுமே பாதிக்கப்படவில்லை; அதைச் சார்ந்திருந்த எண்ணற்ற குடும் பங்கள் வேலை நீக்கம் பெற்றுப் பொருளாதாரக் கொடுமைக்கு உள்ளாயின. தீர்வையற்ற உரிமை முறையை பென்டிங்க் பிரபு புகுத்தியது, நாட்டின் வருவாயை அதிகப்படுத்தியது உண்மை யாளுலும் இதனுல் பல பெரும் நிலக்கிழார்கள் தங்கள் நிலங்களை இழந்தனர். இதனுல் பல நிழக்கிழார்கள் வணிகக் குழுவின் மீது சீற்றமும் வெறுப்பும் கொண்டனர். படையினரின் கலகம் ஏற்பட ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே, நிலச்சுவான்தார்களின் உரிமை களைப்பற்றி ஆராய்வதற்காக பம்பாயில் டல்ஹௌசி ஒரு குழுவை (Inam Commission) நியமித்தார். இந்தக் குழு நில உரிமைப் பத்திரங்களை ஆய்வுசெய்து, உரிமைப் பத்திரம் இல்லாதிருந்த 20,000 பண்ணைகளைத் (ஜமீன்களை) தென் இந்தியாவில் பறிமுதல் செய்தது. இவ்விதமான தீவிர நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதார நிலையில் பல சிக்கல்களை ஏற்படுத்தின.

சமூக சமயக் காரணங்கள்

இதனுடன் இந்தியாவில் புகுத்தப்பட்ட மேலை நாகரிகத்தைக் கண்டு பழமைப் பற்றுளர்கள் (Conservatives) மிகவும் அச்சம் கொண்டனர். இரயில், தந்தி, மேற்கிந்தியக் கல்விமுறை, சதி (Sati) ஒழிப்பு, சிசுக்கொலை சட்டவிரோதமாக்கல், கிறித்துவ மதத்திற்கு மாறியவர்களுக்குச் சொத்துரிமை, விதவை மறுமணச் சட்டம் முதலிய சீர்திருத்தங்கள் இந்தியர் அச்சத்தை மேலும் வலுப்பெறச் செய்தன. இந்தியச் சமூக அமைப்பை அழிக்கவும், இந்துப் பழக்கவழக்கங்களை மாற்றி மேலைய முறைகளைப்

புகுத்தவும், இந்தியரைக் கிறித்துவ மதத்திற்கு மாற்றவும் முயலுகின்றனர் என எண்ணினர். இந்த உணர்வுகள் முகமதிய சமூகத்தைக் காட்டிலும் இந்துச் சமூகத்தினரிடம் தீவிரமாக இருந்த தென்றாலும், முகமதியரையும் அவ் வுணர்வுகள் தாக்கிய தென்றே கூறவேண்டும். இதுவரையில் குற்றவியல் நீதி மன்றங்களில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த 'மௌல்விகள்' எனப்படும் இஸ்லாமியக் குருமார்கள் தங்கள் செல்வாக்கினை இழந்துவிட்டனர். இது முகமதியருக்குள் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

படையினர் குறைகள்

இத்தகைய காரணங்கள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து வங்காளத்திற்கு வெளியே வட இந்தியாவிலும், நடு இந்தியாவிலும் ஆங்கிலேயருக்கு எதிராகப் பொதுவாக அமைதியின்மையையும் வெறுப்பு உணர்ச்சியையும் பரப்பின. இதனுடன் போர் வீரர்களின் அதிருப்தியும் கலந்துகொண்டது. இந்தியச் சிப்பாய்களைக்கொண்ட படையானது வணிகக் குழுவிற்கு நன்றியுடன் இருந்திருந்தால், இக் கலகம் நேர்ந்திருக்காது என்றே உறுதியாகக் கூறலாம். பல காரணங்களால், படையினர் வணிகக் குழுவினர்பால் அதிருப்தி கொண்டிருந்தனர். அயல் நாடுகளில் தொடர்ந்து நடந்த போரில் அவர்களை ஈடுபடுத்தியதை அவர்கள் வெறுத்தனர். அயல்நாடுகளில் போரிட அதிகப்படியான ஊதியம் கொடுக்க மறுத்ததால் 1857ஆம் ஆண்டிற்கு முன்பே பலமுறை, 1806, 1824, 1849, 1850, 1852 ஆகிய ஆண்டுகளில் கலகம் செய்திருக்கின்றனர். அக் காலத்தில் படைத் துறையும் ஆட்சித்துறையும் இணைந்தே செயல்பட்டன. ஆகையால், படைத்துறையிலிருந்து ஆட்சித்துறைக்கு உயர்தர அதிகாரிகளை அடிக்கடி மாற்றிக்கொண்டிருந்தனர். இதனால் படைத்துறைத் திறன் குன்றியது. மேலும், ஓய்வுபெறும் வயதை நிர்ணயம் செய்யவில்லை. இதனால் மிக வயதானவர்கள்கூடத் தொடர்ந்து படையிலிருந்தனர். திறமைக்கு மதிப்பு அளியாமல் மூத்தவர்களுக்கே மேல்பதவி அளிக்கும் கொள்கை பின்பற்றப் பட்டது. அதனுடன் உயர் சாதியினர் படையில் சேர்ந்திருந்தனர். கானிங் பிரபுவின் (Lord Canning) பொதுப்பணிப் பதிவுச் சட்டத்தின்படி (General Service Enlistment Act) படை வீரர்கள் இந்தியாவின் வெளியிலும், உள் நாட்டிலும் எங்கும் பணிபுரியத் தயாராக இருக்க வேண்டுமென வற்புறுத்தப் பட்டனர். இதை உயர் சாதியினர் வெறுத்தனர். அச் சமயத்தில் ஐரோப்பிய வீரர்களின் எண்ணிக்கைக்கும் இந்திய வீரர்களின்

எண்ணிக்கைக்கும் மிகுந்த வேறுபாடு இருந்தது. அதுமட்டு மன்றி டில்லி, அலகாபாத் போன்ற முக்கியப் பகுதிகள் இந்தியப் படைவீரர்களிடமே இருந்தன. கிரிமியப் போர் (Crimean War), பாரசீகப் போர், சீனப் போர் போன்ற இந்தியாவிற்குச் சம்பந்தமில்லாத போர்களில் இங்கிலாந்து ஈடுபட்டமையால் ஆங்கிலேயர் மிக்க துன்பங்களுக்கு ஆளாயினர். இங்கிலாந்து இதனால் மிக ஆபத்தான நிலையில் இருக்கிறதாலும், இந்தியா வில் உள்ள ஆங்கிலப் படை எண்ணிக்கையில் மிகச் சிறியதாய் இருப்பதாலும், இந்திய அரசின் பாதுகாப்பு, இந்தியப் படை யினரின் தயவிலேதான் இருக்கிறது என்ற எண்ணத்தையும் இந்திய வீரர்கள் கொண்டிருந்தனர். இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் மிருகக் கொழுப்புத் தடவிய என்ஃபீல்டு துப்பாக்கியினை (Enfield rifles) அப்பொழுது புகுத்தியது எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தாற் போன்றிருந்தது. அந்தக் கொழுப்பு, பசு அல்லது பன்றியினுடையதாக இருக்கும் என்ற சந்தேகம் படைவீரர்களிடையே பரவியது. பசுவின் கொழுப்பை இந்துக்களும், பன்றியின் கொழுப்பை முகமதியர்களும் வெறுத் தனர். 'இப்படிப்பட்ட எரியக்கூடிய மூலப்பொருள்மீது உண்மை யற்ற தோட்டாவின் கதை, காய்ந்த விறகின்மீது விழுந்த நெருப்புப் பொறி போலாயிற்று. அதனால் சட்லெஜ் நதியிலிருந்து நருமதை நதி வரையிலும் இருந்த பகுதியில் கோபம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது' என்று அட்கிசன் (Atchison)என்பவர் கூறுகிறார்.

இவ்வாறு அரசியல், பொருளாதாரம், சமூகம், இராணுவம் ஆகிய துறைகளில் இருந்த குறைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து படையினர் புரட்சி என்ற வடிவில் வெளிப்பட்டது. படையினர் புரட்சி செய்யவே, ஏற்கெனவே அதிருப்தி யடைந்திருந்த பலர் அதில் கலந்துகொண்டனர். படையினரின் கலகம் என்ற உருவில் தோன்றி, பல காரணங்களால் அரசியல் கலகமாக மாறிற்று. ஆகவே, இக் கலகத்தைச் சாதாரணக் கலகம் என்று ஒதுக்கிவிட முடியாது. முதலாம் விடுதலைப்போர் என்று மிகைப் படுத்திக் கூற இயலாவிட்டாலும், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை விரட்ட, பல இந்திய அரசுகள் ஒரே சமயத்தில் பாடுபட்ட ஒரு நிகழ்ச்சியாக இக் கலகத்தைக் கருதுவது சாலச் சிறந்தது.

புரட்சியின் போக்கு—மீரத், தில்லி

1857ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் தேதி, மீரத்தில் இருந்த படைவீரர்கள் வெளிப்படையாக, பெருங் கலகத்தை உண்டாக்கி,

சிறைச்சாலைகளில் புகுந்து, சிறைப்படுத்தப்பட்ட படைவீரர்களை விடுவித்தனர். அங்கிருந்த ஐரோப்பியரையும் கொன்று, அவர்களுடைய வீடுகளுக்கும் தீ வைத்தனர். இக் கலகம் இவ்வாறு திடீரென்று ஆரம்பிக்கப்பட்டது. டில்லிக்கு இக் கலகக்காரர்கள் விரைந்து சென்று, அதைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தனர். அங்கிருந்த பல ஐரோப்பியர்களைக் கொன்றதுடன், அவர்களுடைய வீடுகளையும் அழித்தனர். டில்லி அரண்மனையைக் கைப்பற்றி, வயது முதிர்ந்தவரும், பெயரளவில் பேரரசருமாயிருந்த இரண்டாம் பஹதூர்ஷாவை இந்தியாவின் பேரரசராகப் பிரகடனம் செய்தனர். ஆங்கிலேயர் டில்லியை இழந்தது அவர்களின் மதிப்பை வெகுவாகக் குறைத்தது. பல இன்னல்களுக்கு இடையில், பஞ்சாபிலிருந்து வந்த படையைக்கொண்டு ஜான் நிக்கல்சன் டில்லியைத் திரும்பவும் கைப்பற்றினர். பழிக்குப்பழி, இரத்தத்திற்கு இரத்தம் என்ற வெறியுடன், பல இந்தியர்களை ஆங்கிலப் படையினர் கொன்று குவித்தனர். முகலாயப் பேரரசர் கைதியானர். அவருடைய இரண்டு மக்களும் டில்லித் தெரு ஒன்றில் சுட்டுத் தள்ளப்பட்டனர். டில்லியின் மீட்சி, ஆங்கிலேயருக்கு உற்சாகத்தையும் இந்திய அரசுகளுக்கு நடுக்கத்தையும் ஏற்படுத்தியது.

பஞ்சாபு

மீரத்தில் ஆரம்பித்த செய்தி வட இந்தியாவின் பல இடங்களுக்குப் பரவியது. மேல் கங்கை மாநிலங்கள், மத்திய இந்தியாவின் சில மாநிலங்கள், இராஜபுதனத்திலிருந்த நசிராபாது (Nasirabad), ரோகில்கண்டிலிருந்த பரெய்லி (Bareilly), கான்பூர், அயோத்தியிலிருந்த லக்னோ, வாரணாசி, பீஹாரின் சில பாகங்கள் ஆகியவற்றில் கலகங்கள் உண்டாயின. அர்ரா (Arrah) என்னுமிடத்திற்கு அருகிலிருந்த ஜகதீஸ்பூர் (Jagadishpur) என்னுமிடத்தில் கன்வார் சிங் (Kanwar Singh) என்பவரின் தலைமையின்கீழ் ஏற்பட்ட பீஹார் இயக்கம், பாட்னாப் பகுதிக்கு ஆணையாளராய் இருந்த வில்லியம் டெய்லர் (William Tayler) என்பவராலும், வங்காளப் பீரங்கிப் படையைச் சேர்ந்த மேஜர் வின்சென்டு அயர் (Major Vincent Eyre) என்பவராலும் ஒடுக்கப்பட்டன. வாரணாசியில் ஏற்பட்ட கலகத்தை, முதல் சென்னைத் துப்பாக்கிப் 'படையைச்' சேர்ந்த (1st Madras Fusiliers) கர்னல் நீல் (Colonel Neil) என்பவர் அடக்கினர். கைப்பற்றப்பட்ட எல்லாக் கலகக்காரர்களையும் அவர் கொன்று விட்டார்.

கான்பூர்

நானு சாகிபு தலைமையில் கான்பூரில் கலகம் நடந்தது. அவர் நண்பர் தாந்தியா தோபி (Tantia Topi) அவருக்கு உதவியாயிருந்தார். கான்பூரிலிருந்த ஐரோப்பியரைக் கைதாக்கிச் சிறிதும் இரக்கமின்றிக் கொன்றுகுவித்தனர். கான்பூர்ப் படுகொலையின் விளைவுகள் மிக வருந்தத் தக்கனவாய் இருந்தன. இச்செயல், இந்தியாவிலும் இங்கிலாந்திலும் இருந்த ஆங்கிலேயர்களின் மனத்தில் பழிவாங்கும் எண்ணத்தை ஏற்படுத்தியது. முடிவில் சர் காலின் கேம்பெல் (Sir Colin Campbell) என்பவரால் கான்பூர் கைப்பற்றப்பட்டது.

லக்னே, அயோத்தி

லக்னேவிலும், அயோத்தியிலும், ரோகில் கண்டிலும் நடந்த கலகத்தை அடக்குவதற்கு, சர் காலின் கேம்பெல் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். ஆற்றல் வாய்ந்த கூர்க்காப் படையுடன் நேப்பாளத்தைச் சேர்ந்த ஜங் பஹதூர் என்பவர் கேம்பலுடன் சேர்ந்துகொண்டார். இவர்களின் உதவியினல் இவ்விடங்களில் நடந்த கலகங்கள் ஒடுக்கப்பட்டன.

ஜான்ஸி

மத்திய இந்தியாவின் கலகக்காரர்கள் தாந்தியா தோபியைத் தலைவராகக் கொண்டனர். 20,000 பேர் கொண்ட குவாலியர் கலகப் படையுடன் அவர் நானு சாகிபுடன் சேர்ந்துகொண்டார். ஆனல், தாந்தியா தோபி, சர் காலின் கேம்பலால் தோற்கடிக்கப்பட்டுத் துரத்தியடிக்கப்பட்டார். அதன் பிறகு, தாந்தியா தோபி, ஜான்ஸியின் அரசியான இலட்சுமி பாயுடன் சேர்ந்து மிகத் தீவிரமாக மத்திய இந்தியாவில் போராடினர். ஸர் ஹூக் ரோஸ் (Sir Hugh Rose) என்பவர் பெட்வா (Betwa) நதிக் கரையில் தாந்தியா தோபியைத் தோற்கடித்து, 1858ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் தேதி ஜான்ஸியை முற்றுகையிட்டார். இலட்சுமி பாய் ஏப்ரல் 4ஆம் தேதி இரவில் ஜான்ஸிக் கோட்டையை விட்டு வெளியேறி, வீரர் சிலருடன் கல்பி (Kalpi) என்னும் நகரத்தை அடைந்தார். அந் நகரமும், மே மாதம் 22-ல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. இதனல் இராணியும், தாந்தியா தோபியும் குவாலியருக்குச் சென்றனர். அங்கிருந்த சிந்தியாவின் படை சிந்தியாவிற்கு எதிராக ராணியுடன் சேர்ந்துகொண்டது. சிந்தியா ஆக்ராவிற்கு ஓடிவிட்டார். கலகக்காரர்கள், மோரார் (Morar), கோட்டா (Kottah) என்னும் இடங்களில் முறியடிக்கப்பட்டுக் குவாலியரைக் கைப்பற்றினர். சோவார் (Sowar) என்கிற

பெயருடன் ஆண் உடையில் இருந்த ஜான்ஸி ராணி, இங்கு நடந்த ஒரு போரில் 1858, ஜூன் 17-ல் கொல்லப்பட்டார். தாந்தியா தோபி பல இடங்களுக்குத் துரத்தப்பட்டு, இறுதியில் 1859, ஏப்ரல் மாத ஆரம்பத்தில் சிந்தியாவின் சிற்றரசரான மான்சிங்கு என்பவரால் பிடிக்கப்பட்டு, ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டார். கலகம், கொலை ஆகிய குற்றங்கள் சாட்டப்பட்டு இவர் தூக்கிலிடப்பட்டார். நானு சாகிபு நேப்பாள நாட்டின் காடுகளுக்குத் துரத்தப்பட்டு அவ்விடத்தில் இறந்த தாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு பெருங் கலகம் ஒரு முடிவுக்கு வந்தது. டில்லி செம்டம்பர் மாதம்வரை ஆங்கிலே யர்கள் வசம் இருந்தது. அதனை மீட்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். இம் முயற்சியில் ஆங்கிலத் தளபதி நிக்கல்ஸன் உயிரிழந்தார். கடைசியாக, டில்லியை ஆங்கிலேயர்கள் மீட்டனர். பகதூர் ஷா கைது செய்யப்பட்டு இரங்கூனுக்கனுப்பப் பட்டார். அவருடைய இரண்டு பிள்ளைகளும் சுட்டுக் கொல்லப் பட்டனர். பகதூர் ஷாவின் ஒரு மகள் ஆசிரியைத் தொழிலை மேற் கொண்டார். மற்றொரு மகள் நடனமாது ஆக்கப்பட்டார். பகதூர் ஷா 1862-ல் இரங்கூனில் காலமானர்.

1857-ல் மீரத்தில் தொடங்கிய பெருங்கலகம் 1858-ல் குவாலியர்க் கோட்டையை மீட்டவுடன் முடிந்தது.

தோல்விக்கான காரணங்கள்

இந்தியா முழுமையும் பரவவில்லை: கலகம் ஆபத்தான ஒன்ருக இருந்தாலும், இந்தியா முழுமையும் பரவவில்லை என்பதை நன்கு மனத்தில் கொள்ளவேண்டும். நருமதை நதிக்குத் தெற்கே இருந்த இந்தியப் பகுதி, இக் கலகத்தால் பாதிக்கப்படவில்லை. கோலாப்பூரில் ஓர் இந்தியப்படை கலகஞ் செய்தபோதிலும் பம்பாய் மாநிலத்தின் அமைதியை எல்ஃபின்ஸ்டன் பிரபு என்பவர் பாதுகாத்தார். இரஜபுதனத்தின் அமைதியை ஜார்ஜ் லாரென்ஸ் என்பவர் பாதுகாத்தார். நேபாள மன்னர் தன் கூர்க்காப் படையை அனுப்பிக் கலகத்தை அடக்க ஆங்கிலே யருக்கு உதவினுர்.

இந்திய அரசுகளின் ஆதரவு: பஞ்சாபு, முக்கியமாக அதனு டைய சீக்கியத் தலைவர்கள், காஷ்மீரத்தின் குலாப் சிங், ஜமீந் தார்கள், இந்திய அதிகாரிகள் ஆகியவர்கள் வணிகக்குழுவிடம் மிக விசுவாசமாய் இருந்தார்கள். சிந்தியா, அவருடைய அமைச்சரான சர் சாலார் ஜங் (Sir Salar Jung), நேப்பாளின் அமைச்சரான சர் ஜங் பஹதூர் (Sir Jung Bahadur) ஆகிய

பிரபல இந்திய அரசர்களும் அமைச்சர்களும், இக் கலகம் பரவாமல் தடுப்பதற்குச் சிறந்த சேவைகளைச் செய்தனர். இன்ஸ் (Innes) என்பவர் 'சிந்தியாவின் விசுவாசத்தினால், இந்தியா ஆங்கிலேயர்களுக்காகக் காப்பாற்றப்பட்டது. ஆஃப்கானிய அரசர், தோஸ்து அலி, சீக்கியர்கள் ஆகியோர் நன்றியுடன் நடந்துகொண்டது, ஆங்கிலேயருக்கு மிகவும் உதவியாயிருந்தது' என்று கூறுகிறார்.

விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்தாமை : இந்தியக் கலகக் காரர்களின் ஆயுதங்கள், ஆங்கிலேயருடையதைவிட மிக மட்டமாயிருந்தன. உதாரணமாக, துப்பாக்கியின் வாயில் மருந்தை அடைத்து உபயோகிக்கும் பழைய துப்பாக்கியைக் கலகக்காரர்கள் உபயோகித்தார்கள். அதைவிட நெடுந்தூரம் சுடக்கூடிய புதிய துப்பாக்கியை ஆங்கிலேயர்கள் உபயோகப்படுத்தினர். மேலும், ஆங்கிலேயர்கள் விஞ்ஞானத்தின் முன்னேற்றங்களின் பலனை தந்தி, இரயில் போக்குவரத்து இவைகளைப் பயன்படுத்தி, நாட்டின் பல பாகங்களிலிருந்து வரும் செய்திகளைப் பெறவும், அவைகளைப் பறிமாறிக்கொள்ளவும், நடவடிக்கைகளை அதற்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ளவும் முடிந்தது. கலகக்காரர்கள் அதைப் பயன்படுத்தும் முறை தெரியாமலும் அதைக் கண்டு அஞ்சியும் ஒதுங்கினர்.

ஆற்றல் மிகுந்த தலைவர்கள் இல்லாமை : ஆற்றல் வாய்ந்த தலைவர் கலகக்காரர்களிடத்தில் இல்லை. நானா சாகிபு, தாந்தியா தோபி, இலட்சுமி பாய் போன்றோரால் கலகக்காரருள் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த இயலவில்லை. அவர்களுக்குள் மத வேறுபாடு, கருத்து வேறுபாடுகளும் நிலவின. எனவே, பயிற்சி பெற்ற படை ஒழுக்கமுள்ள ஆங்கிலேயர்களிடம் தோற்றது.

ஆங்கிலத் தளபதிகள் : ஜான் லாரன்ஸ், ஹென்றி லாரன்ஸ், சவுட்ரம், ஹெளலாக், நிக்கல்சன், நீல், எட்வர்டு போன்ற தனித்திறம் படைத்த ஆங்கிலத் தளபதிகள் ஆங்கிலேயர் பக்கம் இருந்தனர். தாங்கள் பங்கேற்ற இடங்களில் தம் உயிரைப் பணயம் வைத்துப் போரிட்டனர்.

கானிங் பிரபுவின் பெருந்தன்மை : அதுமட்டுமன்றிக் கானிங் பிரபு, நீதி நியாயமற்ற பழிக்குப் பழி முறையைக் கண்டித்தும் எதிர்த்தும் வந்தார். இக் கொள்கையால் இந்திய மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற முடிந்தது. மேலும், பொது

மக்களின் முழு ஆதரவைக் கலகக்காரர்கள் பெற முடியவில்லை. ஏனெனில், தொடர்ந்து ஏற்பட்ட கலகத்தினால், பொதுமக்கள் அதிகத் துன்பத்திற்குள்ளானார்கள். இதனால் அவர்கள், கலகக் காரர்களைப் பகைவர்களாகக் கருதி வெறுத்தார்கள். இங்கிலாந் திலும் இந்தியாவிலுமிருந்த சில ஆங்கிலேயர், பழிவாங்கும் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று கோரினர். ஆனால், கானிங் பிரபு இக் கூப்பாடுகளுக்குச் செவிசாய்க்காமல், அரசியலுக்குரிய தந்திரத்துடன், குற்றம் செய்தவர்களை மட்டும் விசாரணை செய்து தண்டிப்பதற்கான வழியை வகுத்தார். இதற்கு 'அவர் இரக்க மனப்பான்மை கொண்ட கானிங்' (Clemency Canning) என்று ஏளனப் பட்டம் பெற்றார். ஆனால், தலைமை ஆளுநர் கானிங் பிரபு பின்பற்றிய முறைதான் அரசியலில் நடைமுறைக்கு உகந்ததாகும்.

இந்தியப் பெருங் கலகத்தைப்பற்றி இருவிதமான கருத்து கள் நிலவுகின்றன. அவற்றிலொன்று, இது படைக் கலக மென்பது; மற்றொன்று இது முதல் சுதந்திரப் போர் என்பது. இக் கருத்துகளில் எக் கூற்றினை ஏற்றுக்கொள்ளுதல் பொருத்தம் என ஆராய்தல் அவசியம் ஆகும்.

இது ஒரு படையினரின் கலகமே தவிர, ஆங்கில ஆட்சியை ஒழிக்கத் தொடங்கிய புரட்சி அன்று என்றும், துப்பாக்கிகளில் கொழுப்புத் தடவப்பட்ட செய்தி ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது ஆகும் என்றும் சர் ஜான் லாரன்ஸ் கூறினார். இதே கருத்தினை மார்ஷ்மென், ஜி. எஸ். விட்ச் முதலியோரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஆனால், டாக்டர் வின்செண்ட் ஸ்மித், இதை மக்களின் புரட்சி என்று கூறுவதோடு, முன்னர் இராணுவப் புரட்சியாகத் தொடங்கப்பட்டுப் பின்னர் மக்களின் கைக்கு மாறியது என்று கூறுகிறார். சர் ஜேம்ஸ் அவுட்ரம், 'இது மக்களின் புரட்சிக்கு ஒரு முதற்படி' என்றார். இதனை அரசியல் கிளர்ச்சி என வழங்க லாமா என்றாலும் பொருத்தமில்லை. இதனை உள்நாட்டுப் போர் எனவும் வழங்க முடியாது. ஏனென்றால், இதில் கலந்து கொண்டவர்கள், ஒருமனப்பட்ட எதிர்ப்போடு, உத்வேகத் தோடு, பொது நோக்கத்திற்குச் செய்யப்படும் தியாக உணர் வோடு கலந்துகொள்ளவில்லை என்பதை ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக, கூர்க்கர்கள் போன்றவர்கள் கலந்துகொண்டது நிரூபிக்கிறது. இதில் கலந்துகொண்டவர்கள் ஆட்சியை இழந்தவர்கள், வேலையற்றவர்கள், உதவிப் பணத்தை இழந்

தவர்கள், நிலங்களை இழந்தவர்கள் தங்கள் நலம் பறிபோனதற்தாகக் கிளர்ந்து எழுந்து போரிட்டனரே தவிர, வெள்ளையரை வெளியேற்ற வேண்டும் என்ற உணர்வுகொண்டோ, நாடு விடுதலை பெற வேண்டுமென்ற பொது நோக்கங்கொண்டோ போரிடவில்லை. அதனால்தான் பாதிக்கப்பட்டவர்களே கலந்து தோற்றனர். அரசியல் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட முகலாயர்கள், பேஷ்வாக்களின் வழிவந்த ஓய்வுகால ஊதியத்தை இழந்த நானா சாகிபு, அவருடைய மருமகனை இரங் சாகிப், தாந்தியா தோபி, அஸிமுல்லாகாஸ், இலட்சுமி பாய், குன்வார் சிங், பிரோஷா, பகதூர் ஷா போன்றவர்களுக்கு எல்லாம் அந்நியரின் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற விடுதலை உணர்ச்சி இருக்கவில்லை. எனவே, படையினரின் கலகமே என்று கூறப்படுகிறது.

ஆயினும், நேரடியாகக் கலந்துகொள்ளாதவர்கள் ஆங்கிலேயருடன் ஒத்துழைக்க மறுத்தனர். தளபதி ஒளலாக் தம் படைகள் ஆற்றைக் கடப்பதற்குப் படகுகளைப் பயன்படுத்துவதைப் பொதுமக்கள் மறுத்தனர். கான்பூர் மக்கள் ஆங்கிலேயருக்கு உதவாமல் இரவோடு இரவாய் வெளியேறிவிட்டனர். இறந்த படைவீரர்களின் எண்ணிக்கையும் பொதுமக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையும் சமமாகக் காணப்படுவதால் பொதுமக்களின் ஒத்துழைப்பும் உத்வேகமும் இதில் காணப்படவில்லை என்று கூறுவது பொருத்தமில்லை என்று வாதிடப்படுகிறது. முகமதியர்கள் தங்கள் பழியைத் தீர்த்துக்கொள்ள இந்துக்களைத் தூண்டினர் என்று அவுட்ரம் கூறுவதையும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இந்துக்களுக்கும் முகமதியருக்கும் ஒருமனப்பட்ட உணர்ச்சி இதில் காணப்படவில்லை என்று கூறுவது பொருத்தமில்லை. மௌலானா ஆசாத், அறிஞர் சென் முதலிய வரலாற்று அறிஞர்கள் இதனை இந்தியாவின் விடுதலைப் போரென்று கூறுகின்றனர். அசோக் மேத்தா, '1857ஆம் ஆண்டின் பெரும் புரட்சி' என்னும் தம்முடைய நூலில் படையினரே இப் புரட்சிக்கு அடிப்படைக் காரணமாயினும், நாட்டின் அடிமைத்தளையை அறுத்தெறிய வேண்டுமென்னும் அவர்களது விடுதலை வேட்கையே காரணம் என்று கூறுகின்றார்.

இப் புரட்சியில் இந்திய நாட்டின் ஒட்டுமொத்தமான வலிமையும், திறமையும் பயன்படுத்தப்படவில்லைஎன்று தாம்சனும் காரட்டும் உரைத்தனர். பி. ஈ. இராபர்ட்ஸ் காரணங்கள் பல இருந்தும், அதைச் செயல்பட வைத்தவர்கள் படைவீரர்களே என்று உரைக்கிறார். இப் பெருங் கலகத்தை எப்படி அழைத்தாலும் அதற்குச் சார்பான கருத்துகளும், மாறான கருத்துகளும் காணப்படுகின்றன.

இதனை ஆங்கிலேயருக்கு எதிராக எடுத்த முதல் பெரிய விடுதலைப் போர் என்று கொள்ளுதல் பொருத்தமாகும். ஏனென்றால், அவர்கள் விடுதலை உணர்வு, உத்வேகம் ஆகியவற்றோடு கலந்துகொள்ளவில்லையேனும், தந்நலத்தினால் புரட்சி செய்தார்கள் என்றாலும், அந்நியரை எதிர்த்துப் போரிட்டார்கள். எனவே, இதனைப் பெரும் அளவில் நடந்த விடுதலைப் போர் என்று கூறலாம்.

புரட்சியின் விளைவுகள்

இந்திய வரலாற்றில், 1857ஆம் ஆண்டு நடந்த கலகம் ஒரு திருப்புமுனையைக் குறிக்கின்றது. மூன்று முக்கிய மாற்றங்களை ஆட்சிமுறையிலும், அரசாங்கத்தின் கொள்கையிலும் இக் கலகம் உண்டாக்கியது.

1773ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்துப் பாராளுமன்றம் இந்திய ஆட்சியை வணிகக் குழு ஊழியர்கள் மூலமே நடத்தி வந்தது. இப் புரட்சிக்குப்பின், வணிகக் குழுவின் ஆட்சியை நீக்கி, இந்தியாவை இங்கிலாந்து ஆட்சியின்கீழ் நேரடியாகக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. இதற்காக 1858ஆம் ஆண்டு ஆகஸ்டு 2ஆம் தேதி ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது, இது 'இந்தியாவில் மிகச் சிறந்த அரசை உண்டாக்குவதற்கான சட்டம் (Act for the Better Government of India) என வழங்கப் பட்டது.' அரசராலும் அவர் பெயராலும், நாட்டின் முக்கியச் செயலாளர்களுள் ஒருவர் மூலம், பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆலோசனை மன்றத்தின் உதவியுடன் இந்தியா ஆட்சி செய்யப்படும் என அச் சட்டம் அறிவித்தது. இந்த மாற்றத்தின் சின்னமாகத் தலைமை ஆளுநர், அரசரின் பிரதிநிதி என்ற 'வைஸ்ராய்' எனப்படும் பெயர் பெற்றார். பிரிட்டன், இந்திய அரசாங்கத்தைத் தன் நேராட்சியின்கீழ் ஏற்றுக்கொண்டதை, அலகாபாத்து தர்பாரில், அப்பொழுது பிரிட்டனை ஆண்ட மகாராணி விக்டோரியாவின் பெயரால், ஒரு பிரகடனத்தினைக் கானிங் பிரபு அறிவித்தார். கானிங் பிரபுவே முதல் அரசப் பிரதிநிதி (Viceroy) ஆனார்.

இந்தப் பிரகடனம், இந்திய மக்களின் மகா சாசனம் (Magna Carta) என்று புகழப்படுகின்றது. இப் பிரகடனம், இந்திய அரசர்களுடன் வணிகக் குழு செய்துகொண்ட உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் ஏற்றுக்கொண்டது. இந்திய சுதேச மன்னர்களின் உரிமைகள், மதிப்பு, புகழ் ஆகியவையும்

மதிக்கப்படும் என்றும், இந்தியாவின் பழமையான உரிமைகள், வழக்கங்கள் ஆகியவைகளுக்கு உரிய மரியாதை கொடுக்கப்படும் என்றும் அது உறுதி கூறியது. ஆங்கிலக் குடிமக்களின் கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் ஒரு பொதுக் குற்றமன்னிப்பையும் அது அளித்தது. இந்தியர், ஆங்கிலேயர் என்ற பாகுபாடின்றித் தகுதிக்குத் தக்கவாறு பதவியில் அமர்த்தும் கொள்கை பின்பற்றப் படும் என்றும் அறிவித்தது.

இரண்டாவதாக, இக் கலகத்திற்கு மூலகாரணமாயிருந்த படை திருத்தி அமைக்கப்பட்டது. பிரிட்டனின் வீரர்களாக எல்லோரும் பிரகடனப்படுத்தப்பட்டனர். ஐரோப்பியப் படை வீரர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. பீரங்கிப் படை ஐரோப்பியப் படையின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

மூன்றாவதாக, இந்திய சுதேச அரசுகள், இங்கிலாந்து அரசரின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். அவை இந்திய ஆட்சியின் பிரிவுகளாகக் கருதப்படும். இதைத் தவிர, அவ் வரசுகளை இந்திய அரசுடன் இணைக்கும் எண்ணம் இல்லை என்றும் தெளிவாக அறிவிக்கப்பட்டது. நாடிழக்கும் கொள்கை கைவிடப்பட்டது. தத்து எடுத்துக்கொள்ளும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

ஆனால், கலகத்தால் ஏற்பட்ட வடு, என்றும் இந்திய மக்களிடத்திலிருந்து மறையவில்லை. இக் கலகம் இந்திய, ஆங்கிலேய இனத்தாரிடையே அளவற்ற வெறுப்பையும் பகைமை உணர்ச்சியையும் உண்டாக்கியது. இதனால் இந்திய அரசியலில் ஒரு தீவிர மனப்பான்மை ஏற்பட்டு வளர்ந்தது ஒரு மறைமுகமான விளைவு எனலாம். இந்த மனப்பான்மையே பிற்காலத்தில் இந்தியாவில் பின்பற்றப்பட்ட அரசியலின் கருத்தையும் ஆட்சிமுறையையும் நிர்ணயித்தது.

இக் கலகத்தின் விளைவாக இந்துக்கள் முஸ்லிம்களிடையே வேற்றுமை உணர்வும் இன உணர்ச்சியும் வளரத் தொடங்கின. தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள இரு இனத்தவர்களும், தனித்தனி இயக்கங்களை வலுப்படுத்தினர். இதன் விளைவே பிற்காலப் பாகிஸ்தான் பிரிவிற்கு வழிகாட்டியதோடு, பிற்காலத்தில் ஏற்பட்ட இந்து முஸ்லிம் கலங்கங்களுக்கும் அடிப் படையாக அமைந்தது.

இந்தியாவின் வெளித்துறைக் கொள்கை இங்கிலாந்தினால் தீர்மானிக்கப்பட்டமையால், இந்தியாவின் சிறப்பியல்பு இங்கிலாந்தின் மையமாக மாறியது.

16. அரசப் பிரதிநிதிகளின் ஆட்சியின்கீழ் இந்தியா

கானிங் முதல் லிட்டன் வரை

படையினர் பெரும் புரட்சிக்குப்பின், 1858ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டுவரை இந்தியா அரசப் பிரதிநிதிகளால் (Viceroys) ஆளப்பட்டு வந்த இந்த ஆட்சிக் காலத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். 1858ஆம் ஆண்டு முதல் 1876ஆம் ஆண்டுவரை உள்ள காலத்தை, முதலாம் பகுதி என்று கூறலாம். கானிங் பிரபு, முதலாம் எல்கின் பிரபு (Lord Elgin I) லாரன்ஸ் பிரபு (Lord Lawrence), மேயோ பிரபு (Lord Mayo), நார்த்புருக் பிரபு (Lord Northbrook) முதலியோர் இப் பகுதியில் அரசப் பிரதிநிதிகளாகப் பணியாற்றினர். இதைப் பொதுப் படையாகப் போரற்ற சமாதானப் பகுதி என்றே சொல்லலாம்.

1876ஆம் ஆண்டு முதல் 1905ஆம் ஆண்டு வரை உள்ள காலத்தினை இரண்டாம் பகுதியாகப் பிரித்து வழங்கலாம். இப் பகுதி அயல்நாட்டுப் போர்களும் உள்நாட்டு அமைதியின்மையும் கொண்டதாகும். லிட்டன் பிரபு (Lord Lytton), ரிப்பன் பிரபு (Lord Ripon), டஃபெரின் பிரபு (Lord Dufferin), லேன்ஸ் டௌன் பிரபு (Lord Lansdowne), இரண்டாம் எல்கின் பிரபு (Lord Elgin II), கர்சன் பிரபு (Lord Curzon) போன்றோர் இக் காலத்தில் அரசப் பிரதிநிதிகளாயிருந்தனர்.

1905ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டுவரை உள்ள காலத்தை மூன்றாம் பகுதி எனக் குறிப்பிடலாம். இரண்டாம் மிண்ட்டோ பிரபு (Lord Minto II), இரண்டாம் ஹார்டின்ஞ்ச் பிரபு (Lord Hardinge II) செம்ஸ் ஃபோர்ட் பிரபு (Lord

Chelmsford), ரீடிங் பிரபு (Lord Reading), இர்வின் பிரபு (Lord Irvin), வில்லிங்டன் பிரபு (Lord Willingdon), லின்லித்கோ பிரபு (Lord Linlithgow), வேவல் பிரபு (Lord Wavell), மவுன்ட் பேட்டன் பிரபு (Lord Mount Batten) முதலியவர்கள் அரசப் பிரதிநிதிகளாயிருந்த இப் பகுதி, அரசியல் உரிமைகளுக்கும் சீர்திருத்தங்களுக்கும் பெயர் பெற்றது ஆகும்.

கானிங் பிரபு (1858—1862)

1858ஆம் ஆண்டுச் சட்டப்படி கானிங் பிரபு இந்தியாவின் முதல் அரசப் பிரதிநிதி (Viceroy) ஆனார் என்பதை ஏற்கெனவே பார்த்தோம். இவர் ஆட்சியில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளன.

எல்கின் பிரபு (1862—63)

கானிங் பிரபுவுக்குப்பின் எல்கின் பிரபு, அரசப் பிரதிநிதி ஆனார். இதற்கு முன் 1842 முதல் 1846 வரை ஜமெய்காவின் ஆளுநராகவும், 1847 முதல் 1854வரை கனடாவின் தலைமை ஆளுநராகவும் இருந்தார். பதினெட்டு மாதங்களே பதவியிலிருந்த இவர் கானிங் பிரபுவின் ஆட்சிமுறையையே பின்பற்றினார். இவர் காலத்தில் வடமேற்கு எல்லையிலிருந்த வஹாபிகள் (Wahabis) என்ற ஆஃப்கானிய வகுப்பினர் ஆங்கிலேயருக்குத் தொல்லை தந்தனர். எல்கின் பிரபு, வஹாபிகளைத் தோற்கடித்து அவர்களின் முக்கிய இடமான மல்காவைக் (Malkha) கைப்பற்றினார். அவருக்குப்பின் சர் ஜான் லாரன்ஸ் (1864—1869) என்பவர் பதவியேற்றார்.

சர் ஜான் லாரன்ஸ் (1864—1869)

இவர் 1831ஆம் ஆண்டு கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஊழியராகச் சேர்ந்தவர். பஞ்சாபைக் கைப்பற்றியபின், அதன் முதல் ஆணையராக (Chief Commissioner) அமர்த்தப்பட்டுச் செவ்வனே அதை ஆட்சி செய்தார். படையினர் கலகத்தை அடக்க மிகவும் உறுதுணையாயிருந்தார். பஞ்சாபின் ஆணையராக ஓய்வுபெற்ற பிறகு, இந்தியக் குழுவில் (Indian Council) உறுப்பினராகப் பணிபுரிகையில் அரசப் பிரதிநிதியாய் இந்தியாவிற்கு 1864-ல் வந்தார். சர் ஜார்ஜ் பார்லோவிற்குப் பின், தலைமை ஆளுநர் பதவிக்குப் பழைய வணிகக்குழுவின் ஊழியரை அமர்த்துவதில்லை என்ற கொள்கையைத் தளர்த்தி, இவரை அப் பதவியில் அமர்த்தினர். இவர் காலத்தில் ஆஃப்கானிஸ்தானில் வாரிசுப் போர் மூண்டபோது மிகவும் தந்திரமாக ஆஃப்கானிஸ்

தான் தகராறில் மாட்டிக்கொள்ளாமல் நிலைமையை ஆங்கிலேயருக்குச் சாதகமாய்ச் சமாளித்தார். ஆஃப்கானிஸ்தானின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாமல், கடைசியில் அரசுக்கு வந்த ஷேர் அலியுடன் (Shere Ali) ஒரு நட்புடன்படிக்கை செய்துகொண்டார். இக் கொள்கையை இவருக்குப் பின்வந்த மேயோ பிரபு, நார்த்புரூக் பிரபு முதலானோரும் பின்பற்றினர். இதை மாற்ற நினைத்ததால் லிட்டன் பிரபு, ஆஃப்கானிஸ்தானுடன் அநாவசியமாகப் போரிட நேர்ந்தது என்பதை உணர வேண்டும்.

பூதான் போர்: லாரன்ஸ் பிரபு பூதானுடன் (Bhutan) போரிட வேண்டியதாயிற்று. பூதான் இமயமலைத் தொடரில், இந்தியாவின் வடகிழக்கெல்லையாய் அமைந்த நாடு. லாரன்ஸ் பதவிக் காலத்தில் பூதானுடன் எல்லைத் தகராறு மூண்டபோது அமைதியை விரும்பிய லாரன்ஸ், ஆஷ்லி ஈடன் என்பவரைப் பூதானுக்குஅனுப்பி, நட்பு முறையில் தகராறைத் தீர்த்துக் கொள்ள விரும்பினர். பூதான், லாரன்ஸின் நட்பு நடவடிக்கைகளை ஏற்க மறுத்தது. இதனால் லாரன்ஸ் பூதானுடன் போரிட்டார். பல இன்னல்களுக்குப் பிறகு, பூதான் 1865ஆம் ஆண்டு ஓர் உடன்படிக்கைக்குச் சம்மதித்தது. அதன்படி துவார் (Duar) என்ற தேயிலைக்குப் பெயர் பெற்ற பகுதியை ஆங்கிலேயருக்குக் கொடுக்கச் சம்மதித்தது. அதற்குப் பதிலாகக் காப்புப் பணம் (subsidy) தருவதாக லாரன்ஸ் ஒப்புக்கொண்டார். மெட்ரிக் முறை (Metric System) நடைமுறைக்குக் கொண்டுவர 1870ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. ஆனால், இந்திய அமைச்சரால் அது நிராகரிக்கப்பட்டதால் கைவிடப்பட்டது. இந்திய சுதந்திரத்திற்குப் பிறகே இம் முறை செயல் முறையில் வந்தது. இவரது ஆட்சியில் இருமுறை 1866-ல் ஓரிஸாவிலும், 1868 - 69-ல் இராஜபுதனத்திலும், பண்டேல் கண்டு ஆகிய இடங்களிலும் பஞ்சம் ஏற்பட்டது. கால்வாய்களை வெட்டுதல், பாதைகள் போடுதல் முதலிய பஞ்ச நிவாரண நடவடிக்கைகளை இதற்காக மேற்கொண்டார். 1869-ல் இங்கிலாந்திற்குத் திரும்பினர்.

மேயோ பிரபு (1869—72)

அவருக்குப்பின் மேயோ பிரபு (1869—72) அரசப் பிரதிநிதி ஆனர். அவர் ஆட்சியில் ஆஜ்மீரில் மேயோ கல்லூரி நிறுவப்பட்டது. விவசாயத்திற்காக ஒரு புதிய துறையைத் தொடங்கினர். இவர் ஆட்சியில்தான் மக்கள்தொகைக் கணிப்பு (Census)

முதன்முதலாக எடுக்கப்பட்டது. நிதிப் பற்றுக்குறையைப் போக்க உப்பு வரியையும், வருமான வரியையும் உயர்த்தினர். லாரன்ஸின் ஆஃப்கானியக் கொள்கையையே பின்பற்றினர். விக்டோரியா மகாராணியாரின் இரண்டாவது மகன் எடின்பர்க் கோமகன் (Duke of Edinburg) இந்தியாவிற்கு 1869ஆம் ஆண்டு வருகை தந்தார். 1870ஆம் ஆண்டு இந்தியாவையும், இங்கிலாந்தையும் இணைக்கும் கேபிள் என்ற தந்தி நிலையம் அமைக்கப்பட்டது. பழம்பொருள் ஆய்வியல் துறை (Archaeological Survey of India) ஏற்படுத்தப்பட்டது.

நிதி பன்முகப்படுத்தும் முறை : நிதி பன்முகப்படுத்தும் முறை (Financial decentralisation) முதன்முதலில் 1870ஆம் ஆண்டு அமலாக்கப்பட்டது. இத் திட்டத்தின்படி சில வரிகள் வசூலிக்கும் உரிமை மாநில அரசுக்கே ஒதுக்கப்பட்டன. இவ் வருவாயைக் கொண்டே மாநில அரசின் செலவைச் சரிக்கட்டிக் கொள்ள வேண்டும். வருவாயில் மீதம் ஏற்பட்டால், அதை அடுத்த ஆண்டிற்கு வைத்துக்கொள்ளலாம். இவ்வாறு வருவாயிலும் செலவிலும், மாநிலங்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டது. இதற்குமுன், ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையை மானியமாக இந்திய அரசு கொடுத்தது. அவ்வாண்டின் முடிவில். மாநில அரசு செலவுபோக மீதித் தொகையை இந்திய அரசுக்குத் திருப்பித் தந்துவிடல் வேண்டும். இதனால் மாநிலங்கள் பணத்தை வீண்செலவு செய்தன. மேயோவின் பன்முகப்படுத்தும் முறையால் மாநில அரசுகள் பொறுப்புடன் செலவு செய்தன. அத் தீர்மானமே (resolution) ஊராட்சிக்கு வழிவகுத்தது என்று சொல்லலாம். பல மாநிலங்களில் நகராட்சிக் கழகச் (Municipality) சட்டங்கள் இயற்றப்பட்டன. இக் கழகங்களின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கவும்பட்டனர். மாநில வரி (Cess) விதிக்கப்பட்டு, அப் பணத்தைக் கொண்டு பாதைகள், பாலங்கள், வடிகால்கள், கல்வி முதலிய மாநிலத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வழிவகுத்தது. மேயோ பிரபுவின் தீர்மானம் (resolution) ரிப்பன் பிரபு காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

1870ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டப்படி, சட்டசபையைக் கலந்து ஆலோசிக்காமலே, சட்டங்களை இயற்றும் அதிகாரம் அரசப் பிரதிநிதியின் நிருவாகக் குழுவிற்குக் கொடுக்கப்பட்டது. அதனுடன் நிருவாகக் குழுவின் பெரும்பான்மையான வாக்குகளை மீறும் அதிகாரம் அரசப் பிரதிநிதிக்கு உண்டு என்பதை இச் சட்டம் மீண்டும் வலியுறுத்தியது.

ஆனால், அரசப் பிரதிநிதியின் சுயேச்சை ஆதிக்கம் 1870ஆம் ஆண்டிலிருந்து வெகுவாகக் குறைந்துவிட்டதென்றே கூற வேண்டும். இந்திய அமைச்சரின் ஆதிக்கத்தின்கீழ்ச் செயல்பட வேண்டும் என்று 1858ஆம் ஆண்டுச் சட்டம் கூறியது. 1878ஆம் ஆண்டு கடல்தந்திமூலம் இங்கிலாந்துடன் இந்தியாவிற்கு நேரடித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக அரசப் பிரதிநிதி சுயமாகச் செயல்படாமல், இந்திய அமைச்சரின் கைப் பாவையாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, முக்கியமான முடிவுகளை இந்திய அமைச்சருடன் கலந்தே செயல்படவேண்டிய கட்டாயம் இவர் காலத்திலிருந்து ஏற்பட்டது. சிறைக் கைதிகளின் நலனைப் பார்வையிட அந்தமான் தீவிற்கு மேயோ பிரபு வந்திருந்தபோது பத்தானியக் (Pathan) கைதியால் 1872ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார்.

நார்த் புருக் பிரபு (1872—1876)

நார்த்புருக் பிரபு மேயோ பிரபுவுக்குப்பின் அரசப் பிரதிநிதிப் பதவிக்கு 1872ஆம் ஆண்டு வந்தார். அதற்குமுன் இங்கிலாந்து அமைச்சரவையில் ஒரு துணை அமைச்சராகவும் இங்கிலாந்தின் கப்பற் படைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். 1874ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டப்படி அரசப் பிரதிநிதியின் நிருவாகக் குழுவின் எண்ணிக்கை ஐந்திலிருந்து ஆறாக உயர்த்தப்பட்டது. இப் புதிய உறுப்பினர் 'பொதுப் பணி' (Public Works) உறுப்பினர் என்றழைக்கப்பட்டார். நார்த் புருக் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டார். தமக்கு முன்னிருந்த ஆட்சி முறையையே பின்பற்றினார். உழவர்களின் நலனுக்காகச் சில மாற்றங்களைச் செய்தார். 1873—74 ஆண்டுகளில் வங்காளம், பீகார் ஆகிய இடங்களில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் பஞ்ச நிவாரண முறைகளைப் பின்பற்றினார். பஞ்சப் பகுதிகளிலிருந்து உணவுத் தானியங்களை வெளியேற்றக் கூடாதென உத்தரவிட்டார். வருமான வரியை நீக்கினார். இளவரசர் ஏழாம் எட்வர்ட் இவர் பதவிக் காலத்தில், 1875—76-ல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தார்.

பரோடா மன்னரை நீக்குதல்: பரோடா மன்னரான இரண்டாம் மல்ஹார் ராவ் கெயிக்குவார் பதவிநீக்கம் செய்யப் பட்டார். மல்ஹார்ராவ் கொடுங்கோலராய் மாறி மக்களைத் துன்புறுத்தியமையால் இங்கிலாந்து அரசாங்கம் அவரைப் பதவிநீக்கம் செய்யும்படி கோரியதற்கு இணங்க, நார்த் புருக்

தத்துப் பிள்ளையான மூன்ரும் சயாஜிராவைப் பரோடாவின் அரச ராக்கிஞர். புதிய கெயிக்குவாருக்குத் துணையாகத் திறமை வாய்ந்த சர் டி. மாதவராவைத் திவாஞக்கிஞர்.

பதவி விலகல் : சாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) இந்திய அமைச்சரானவுடன், அவருக்கும் நார்த்புரூக்குக்கும், இந்திய உள்நாட்டு, அயல் நாட்டுக் கொள்கைகளில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. மான்செஸ்டரிலிருந்து இறக்குமதியான உயர்ந்த பருத்தி வகைக்கு ஐந்து சதவீத இறக்குமதி வரியை நார்த்புரூக் விதித்தார். மான்செஸ்டர் தொழிலதிபர்கள் இதை எதிர்த்தனர். அவர்களின் ஆட்சேபணைக்கு இணங்கும் வகையில், சாலிஸ்பரி பிரபு, அவ் வரியை நீக்கும்படி நார்த்புரூக் பிரபுவிற்கு ஆணை பிறப்பித்தார். இந்திய வாணிக வளர்ச்சியில் நாட்டம்கொண்ட நார்த்புரூக் பிரபு இதை ஏற்க மறுத்தார். அதனுடன் சாலிஸ்பரிக்கும், நார்த்புரூக்கிற்கும் ஆஃப்கானிய உறவு முறையில் கருத்துவேற்றுமை ஏற்பட்டது.

நார்த்புரூக் பிரபு, தமக்கு முன் லாரன்ஸ், மேயோ ஆகியோர் கையாண்ட கொள்கையையே வடமேற் கெல்லைப்புறக் கொள்கையாகக் கடைப்பிடித்தார். ருஷ்யர்கள் தங்கள் ஆதிக்கத்தைத் துருக்கியில் பரவச் செய்தனர். இதைக் கண்டு அஞ்சிய ஆஃப்கானிஸ்தான அரசர் ஷெர் அலி ஆங்கிலேயரின் உதவியை நாடிஞர். நார்த்புரூக் ஷெர் அலிக்கு உதவ மறுத்துவிட்டார். இதஞல் ஷெர் அலி, ருஷ்யரின் உதவியை நாடிஞர். ருஷ்யர்களின் ஆதிக்க வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய டிஸ்ரேலி அமைச்சரவை நார்த்புரூக் பிரபுவை ஆஃப்கானிய நடவடிக்கைகளில் தலையிடும்படி பணித்தபோது தம் கொள்கைக்கு மாருகத் தாம் தலையிடுவதைவிடத் தம் பதவியை இழப்பதே மேல் என்று கருதிய நார்த்புரூக் 1876-ல் பதவியைத் துறந்து தாயகம் திரும்பியதால், அவருக்குப்பின் லிட்டன் பிரபு, இந்தியாவின் அரசப் பிரதிநிதி ஆக்கப்பட்டார். இங்கிலாந்து திரும்பிய நார்த்புரூக் பிரபுவிற்குக் 'கோமகன்' (Duke)'பட்டம் கொடுக்கப்பட்டது. சீரும் சிறப்புடன் வாழ்ந்து 1904ஆம் ஆண்டு இயற்கை எய்திஞர்.

லிட்டன் பிரபு (1876—1880)

லிட்டன் பிரபுவின் தந்தை புல்வெர் லிட்டன் என்ற புகழ் பெற்ற நாவலாசிரியரின் மகஞவார். லிட்டன் பிரபு இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்படுவதற்கு முன்பே, இந்திய

வெளிநாட்டுக் கொள்கையை நன்கு அறிந்திருந்தார். 1852ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து அரசின் அயல்நாட்டுத் துறையில் பணியாற்றிய இவர் ஆட்சித்திறன் மிக்கவராகவும், சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் விளங்கினர். இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புற நிலைமைக்கு ஒரு நல்ல தீர்வு காணவும், ருஷ்யரின் செல்வாக்கை ஒடுக்கவும், இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் டிஸ்ரேலியால் இவர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். லிட்டன் பிரபுவின் ஆட்சியில் நடந்த மிக முக்கிய நிகழ்ச்சி இரண்டாம் ஆஃப்கானியப் போரேயாகும்.

இரண்டாம் ஆஃப்கானியப் போர் (1878—1880)

நார்த்புருக் அரசப் பிரதிநிதியாயிருந்தபோது இங்கிலாந்தின் தலைமை அமைச்சராயிருந்தவர் கிளாட்ஸ்டன் (Gladstone) ஆவார். நார்த்புருக்கினைப் போலவே, கிளாட்ஸ்டனும் ருஷ்யாவை விரோதித்துக்கொள்ள விரும்பவில்லை. மேலும், மத்திய ஆசியாவில் ஏற்பட்ட ருஷ்ய முன்னேற்றத்தினல் ஆஃப்கானிஸ்தானத்தின் பாதுகாப்பிற்கோ இந்தியாவின் பாதுகாப்பிற்கோ எவ்வித ஆபத்தும் இல்லை என்று கிளாட்ஸ்டன் கருதியதைப் போல அவர் அமைச்சரவையும் கருதியதால் நார்த்புருக் ஆஃப்கானிய அரசர் ஷெர் அலியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை ஆதரித்தார். இதற்கிடையில் இங்கிலாந்து அமைச்சரவையில் மாறுதல் ஏற்பட்டது. 1874ஆம் ஆண்டில் கிளாட்ஸ்டனுக்குப் பிறகு டிஸ்ரேலி (Disraeli) தலைமை அமைச்சரானர். அவர் கட்சியைச் சார்ந்த சாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) இந்திய அமைச்சரானர். 1877ஆம் ஆண்டில் நடந்த ருஷ்ய-துருக்கிப் போரினல் ருஷ்யாவிற்கும், இங்கிலாந்திற்கும் இடையே இருந்த உறவு பாதிக்கப்பட்டு இவ் விரு நாடுகளுக்கும் இடையே போர் ஏற்படும் நிலைமை உருவானது. எனவே, ஆஃப்கானிய விவகாரங்களில் உறுதியுடன் இருந்து அப் பகுதியில் ருஷ்யரின் செல்வாக்கைத் தடுப்பதற்குப் புதிய அமைச்சரவை முடிவு செய்தது. அம் முடிவை நிறைவேற்ற லிட்டன் உறுதிகொண்டார். லிட்டன் ஆஃப்கானிய அமீரான ஷெர் அலியை ஓர் ஆங்கில நிலையரைத் தம் தலைநகரில் வைத்துக் கொள்ளுமாறு கூறி, சிம்லாவிலும் பெஷாவரிலும் அமீரின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அமீர் ஆங்கில நிலையரை வைத்துக்கொள்ள மறுத்துவிட்டதால் பேச்சுவார்த்தை மூலம் சாதிக்காததை, போர்மூலம் சாதிக்க லிட்டன் பிரபு நினைத்ததன் விளைவே இரண்டாம் ஆஃப்கானியப் போராகும்.

ஆஃப்கானியருடன்போரிடவேண்டுமென்ற எண்ணத்தினால் ஏற்கெனவே லிட்டன் குவெட்டாவை (Quetta) 1876ஆம் ஆண்டே கைப்பற்றிக் கொண்டார். குவெட்டா காந்தகாருக்குச் (Kandahar) செல்லும் பாதையில் இருந்ததால், வடமேற்கு எல்லையில் ஒரு முக்கிய இடமாயிருந்தது. கைபர் கணவாய் வழியாக இந்தியாவைத் தாக்கும் படையின் ஒரு பாகத்தை இவ்விடத்திலிருந்து அழிக்க இயலும். இதற்கிடையில் ருஷ்யாவும், இங்கிலாந்தும், ஐரோப்பாவில் செய்துகொண்ட உடன்படிக்கையால் அமீரின் உதவிக்கு ருஷ்யா வர இயலாமல் போயிற்று.

போர் நிகழ்ச்சிகள் : லிட்டன், ஆஃப்கானிஸ்தானத்தை ஒரே சமயத்தில் மும்முனையிலிருந்து தாக்க ஏற்பாடு செய்து போலன் கணவாய், கைபர் கணவாய், குரம் கணவாய் ஆகியவற்றின் வழியாக ஆஃப்கானிஸ்தானத்தைத் தாக்கினார். 1878ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் தேதி ஆங்கிலேயப் படைகள், ஆஃப்கானிஸ்தானத்தின்மீது படையெடுத்தன. ஜெனரல் ஸ்டூவர்ட்ஸ் என்பவர் காந்தகாரைக் (Kandahar) கைப்பற்றவே ஷெர் அலி துருக்கிக்குத் தப்பி ஓடி அங்கு 1879ஆம் ஆண்டில் இறந்தார். ஷெர் அலியின் இரண்டாவது மகன் யாகூப்கானுடன் கந்தமக் (Gandamak) என்னும் உடன்படிக்கை செய்துகொள்ளப் பட்டு, ஆஃப்கானிஸ்தானத்தின் அயல்நாட்டுக் கொள்கையை ஆங்கிலேயரிடம் விட்டுவிட வேண்டும் எனவும், கைபர், போலன், கோமால் கணவாய்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்து விட வேண்டும் எனவும், ஆங்கில நிலையர் (Resident) ஒருவரைக் காபூலில் வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் ஒப்புக்கொள்ளப் பட்டது. ஆஃப்கானிய மக்கள் இவ் வேற்பாடுகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து சர் லூயிஸ் கவக்னரி (Sir Louis Cavagnari) என்ற காபூலிலிருந்த ஆங்கில நிலையரையும் 1879-ல் கொன்று விடவே போர் மறுபடியும் தொடங்கியது. ஜெனரல் ராபர்ட்ஸ் (Roberts) என்பவரின் தலைமையில் ஆங்கிலப் படை காபூலைக் கைப்பற்றியது. யாகூப் கான் ஆளத் தகுதியற்றவர் என்று அவரை நீக்கிவிட்டு இந்தியாவிற்கு அனுப்பி வைத்தனர். ஷெர் அலியின் மருமகனை (nephew) அப்துல் ரகிமானை அமீர் ஆக்க முயற்சி செய்கையில், இங்கிலாந்தில் அமைச்சரவை மாற்றம் ஏற்பட்டுக் கிளாட்ஸ்டன் மீண்டும் பதவிக்கு வந்தார். கிளாட்ஸ்டன் ஆஃப்கானிஸ்தானத்தில் ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டித்தவர். எனவே, லிட்டன் பிரபு பதவியை ராஜிநாமா செய்தார். அவருக்குப்பின் ரிப்பன் பிரபு (Lord Ripon) இந்தியாவின் அரசப் பிரதிநிதி (Viceroy) ஆனார். ரிப்பன் பிரபு.அப்துல் ரகிமானுடன் செய்துகொண்ட உடன்படிக்

கையின்படி ஆஃப்கானிஸ்தானத்தின் அயல்நாட்டுக் கொள்கை ஆங்கிலேயரிடம் விடப்பட்டது. இதற்கீடாக ஆண்டுதோறும் ஈர்ப்புப் பணம் (Subsidy) அமீருக்கு ஆங்கிலேயர் கொடுக்கச் சம்மதித்தனர். ஆஃப்கானியப் போருக்கு முக்கியக் காரணம், ருஷ்யாவும் இங்கிலாந்தும் தத்தம் ஆதிக்கத்தை அங்கே நிலை நாட்ட வேண்டும் என்று கொண்டிருந்த ஆசையாகும். இங்கிலாந்து, ருஷ்யாவின் ஆதிக்கம் ஆஃப்கானிஸ்தானத்தில்ஏற்பட்டு விட்டால் இந்தியாவிற்கு ஆபத்து என்று பயந்ததே இரண்டாம் ஆஃப்கானியப் போருக்கு உண்மையான காரணம் எனலாம். இரண்டாம் ஆஃப்கானியப் போர் இவ்விதம் முடிவுற்றது.

சீர்திருத்தங்கள் : அரசப் பிரதிநிதிக்கு ஆலோசனை கூறச் சுதேச மன்னர்கள் அடங்கிய பிரிவி கவுன்சில் (Privy Council) என்ற குழுவை நியமிக்க லிட்டன் பிரபு கூறிய யோசனையை இங்கிலாந்து அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், 1919ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டத்தின்படி சுதேச அரசர்களின் குழு (Chamber of Princes) ஒன்று அமைக்கப்பட்டது. அலிகாரில் முகமதியர்களுக்காக 'ஆங்கிலப் போதனுமொழிக் கல்லூரி' ஒன்றையும் லிட்டன் பிரபு திறந்து வைத்தார். இதுவே தற்கால 'அலிகார் முகமதியப் பல்கலைக்கழகம்' எனத் திகழ்கின்றது.

பஞ்ச நிவாரண ஆய்வுக் குழு : லிட்டன் பிரபு காலத்தில் ஒரு கடும் பஞ்சம் நாட்டை ஒரு கலக்குக் கலக்கியது. 1876ஆம் ஆண்டு தொடங்கி, இரண்டு ஆண்டுகள்வரை நீடித்த இப் பஞ்சத்தினுல் சென்னை, மைசூர், ஐதராபாத்து, பம்பாய், ஐக்கிய மாநிலங்கள் முதலிய மாநிலங்கள் பாதிக்கப்பட்டன. பஞ்ச நிவாரணம் அளிக்க, லிட்டன் பிரபு பல நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இந்த ஏற்பாடு சில நிருவாகத் திறமையின் மையால் சரியான பலனைத் தரவில்லை. இதனுல் பொதுக் கொள்கைகளை ஏற்படுத்த வேண்டுமென லிட்டன் பிரபு எண்ணி ஜெனரல் சர் ரிச்சர்டு ஸ்ட்ராச்சியின் (General Sir Richard Strachey) தலைமையின்கீழ் ஒரு பஞ்ச நிவாரண ஆய்வுக் குழுவை நியமித்தார். 1880ஆம் ஆண்டில் அக் குழு தன் அறிக்கையை வெளியிட்டது. இந்திய அரசாங்கத்தால் 1883ஆம் ஆண்டில் பின்னர் நிறைவேற்றப்பட்ட பஞ்ச நிவாரணச் சட்டத்திற்கு அடிப்படையாக இக் குழுவின் சிபாரிசுகளே அமைந்தன. மக்களைப் பஞ்சத்திலிருந்து காப்பது அரசாங்கத்தின் தலையாய கடமை என்பதை அக் குழு ஏற்று, அதற்குத் தக்கபடி தன் கருத்துகளை வெளியிட்டது. லிட்டன் பிரபு இவ்விதம்

பஞ்சத்தைப் போக்கப் பெரும் பாடுபட்டார் என்றாலும், அவருடைய ஆடம்பர வாழ்க்கை அதற்காக அவரைப் பாராட்ட இயலாமல் செய்துவிட்டது. மக்கள் பஞ்சத்தில் வாடும்போது 1871ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணி இங்கிலாந்தில் 'இந்தியாவின் பேரரசி' என்ற பட்டம் ஏற்ற வைபவத்தை, தில்லியில் மிக ஆடம்பரமாகக் கொண்டாடினர்.

இறக்குமதி வரியை நீக்கல்: பருத்தித் துணியின்மேல் விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரியை, சாலிஸ்பரியின் வேண்டுகோளுக்கிணங்கி நீக்கியதால் இந்தியப் பருத்தித் துணிகளின் விற்பனை குறைந்து இறக்குமதியான உயர்ந்தரக மான்செஸ்டர் பருத்தித் துணியுடன் போட்டி போட இயலாமல் முடங்கப் பெற்று, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரத் தேக்கம், இந்தியக் கைத்தொழில் நசிவு முதலியன ஏற்படக் காரணமாயிற்று. பொது ஆட்சித் துறையில் (I. C. S.) மொத்த ஊழியர்களில் ஆறில் ஒரு பகுதி (1/6)-க்குக் குறையாமல் இந்தியரை நியமிக்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்ட சட்டம் ஒன்றை 1879-ல் நிறைவேற்றினர். மாநில அரசுகளின் சிபாரிசுகளின் பேரில் இவ் வூழியர்களை அரசப் பிரதிநிதியின் மன்றக் குழு நியமிக்கும் என்றும், நல்ல குடும்பத்தையும், தகுதி உள்ள நிலையிலும் உள்ளவர்களையே அப் பதவிக்கு மாநிலஅரசு சிபாரிசு செய்யவேண்டும் என்றும் அச் சட்டம் கூறியது. படைக்கலச் சட்டம் (Arms Act) ஒன்றை நிறைவேற்றினர். இதன்படி இந்தியர் படைக்கலங்கள் வைத்திருப்பது வரையறுக்கப்பட்டது. நாட்டுமொழிப் பத்திரிகைச் சட்டம் (Vernacular Press Act) ஒன்றையும் 1878ஆம் ஆண்டு நிறைவேற்றி நாட்டுமொழிச் செய்தித்தாளுக்கிருந்த உரிமையைப் பறிக்கப் பார்த்தார். இவ் விரு சட்டங்களும் நாட்டில் மக்களால் எதிர்க்கப்பட்டன.

17. ரிப்பன் பிரபு
(1880—1884)

ரிப்பன் பிரபு, 1880ஆம் ஆண்டு லிட்டன் பிரபுவுக்குப் பிறகு அரசப் பிரதிநிதி ஆனார். நம் நாட்டுக்கு வந்த அரசப் பிரதிநிதிகளுள் தலைசிறந்தவராகக் கருதப்படுகின்றவர் ரிப்பன் பிரபுவே யாவர். அவர் மிகப் பரந்த நோக்கமும் மக்கள் ஆட்சியில் பற்றுதல் கொண்டவரும் ஆவர். அரசப் பிரதிநிதியாய் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே இந்திய அமைச்சர் போன்ற உயர்ந்த பதவியை வகித்தவர்; இந்தியரின்மேல் உண்மையான அன்பும், இரக்கமும் கொண்டவர்; இந்தியர்களின் உணர்ச்சிக்கும், அவர்களின்தேவைக்கும் இங்கிலாந்து மதிப்புத்தந்து ஆவன செய்யவேண்டும் என்ற கருத்துக்கொண்ட முற்போக்குவாதி. இந்தியாவில் ஏற்பட்டுள்ள தேசிய உணர்ச்சி ஆங்கிலேய ஆட்சி முறையினால் ஏற்பட்டது என்ற கருத்துள்ளவர். இந்தியர்களிடம் அவ் வுணர்ச்சி வளரவும்வேண்டும் என்ற உண்மையான கருணை உள்ளம் கொண்டவர். ஆங்கிலேயரின் முற்போக்கான கருத்திற்கும், ஆட்சிமுறைக்கும், இந்தியரை அவர்களின் நாட்டின் ஆட்சியிலிருந்து நீக்கிவைத்தல் முறையன்று என்பதை உணர்ந்தவர். இவருக்கு முன்னிலிருந்த தலைமை ஆளுநர் பென்டிங்கிற்கு இவரை ஒப்பிடலாம். அவரைப்போலவே இந்தியரைப் பல உயர்ந்த பதவிகளில் அமர்த்தவேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவர். 'அரசியல் தகுதி, திறன் குறைந்துவிடும்' என்று கூறி அவர்களுக்கு உயர்ந்த பொறுப்புள்ள பதவிகளை அளிக்காமல் இருப்பது மக்களாட்சியில் முன்னணியில் இருக்கும் ஆங்கில அரசுக்கே இழுக்கு என்று கருதினார். இவர் 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் விளங்கிய ஜனநாயக முற்போக்குவாதிகளுள் முதன்மையானவர். 'அந்த நூற்றாண்டின் அக் கொள்கையின் பதிப்பு அல்லது குழந்தை ரிப்பன்' (The Child of the Century) என்று கூறினாலும் மிகையாகாது.

உள்ளூராட்சி முறை

இந்தியர் சுய ஆட்சியில் பயிற்சி பெற நகர சபை, உள்ளூராட்சி (Local-Self-Government) முதலிய அங்கங்களில் இந்தியரை அமர்த்த 1882ஆம் ஆண்டு ஒரு புதிய திட்டத்தைச் செயல் படுத்த முனைந்தார். ரிப்பன் பிரபுவிற்கு முன்பே உள்துறை ஆட்சிமுறையில் மாநிலங்களுக்குச் சிறிது பயிற்சி இருந்தது. மேயோப் பிரபுவின் பன்முகப் பொருள் அமை திட்டத்தால் இப் பயிற்சி ஏற்பட்டது எனலாம். இப் பழக்கத்தையே மேலும் விரிவு படுத்த ரிப்பன் பிரபு விழைந்தார். உள்ளூர் ஆட்சித் திட்டமே ரிப்பன் பிரபுவின் தலைசிறந்த சீர்திருத்தமாகும். இத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன : நிர்வாகத்தில் பொதுமக்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கும்பொருட்டு உள்ளூர் ஆட்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தினர். மாவட்ட வாரியங்களையும் (District Boards), வட்ட வாரியங்களையும் (Taluk Boards), மாநகரங்களில் நகராண்மைக் கழகங்களையும் ஏற்படுத்தி, இந்தியர்களுக்கு நிருவாகத்தில் பயிற்சி அளிக்க விரும்பினர்.

இக் கழகங்களின் உறுப்பினர்களில் ஒரு பங்கினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகாரிகளைவிட அதிகம் இருக்க வேண்டும் என்றும், அதிகாரிகள் அவ் வாட்சிக் கழகத்திற்குத் தலைமை தாங்கக் கூடாது என்றும் கூறப்பட்டது. இதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு உயரிய அதிகாரமும், அதிகாரிகளின் நேரிடையான தலையீடும் இல்லா உள்ளூர் ஆட்சி அளிப்பதே ரிப்பனின் குறிக்கோளின் முக்கிய அம்சமாகும். அரசின் கட்டுப்பாடு, இக் குழுவின் உள்ளிருந்து வரக்கூடாது. ஆட்சித் திறனை வெளியிலிருந்து மேற்பார்வை இடவேண்டும். சில்லறை வரிகளை வசூல் செய்து, தொடக்கக் கல்விக்கூடங்கள் அமைக்கவும், சாலைகள் அமைக்கவும், விளக்குகள் போடவும், குடிநீர் வழங்கவும், பொதுச் சுகாதாரத்தைக் கண்காணிக்கவும் இக் கழகங்கள் அனுமதிக்கப்பட்டன. கிராமப் பகுதிகளிலும் இவ்விதக் குழுக்களை அமைக்கத் திட்டமிட்டார். ஆனால், இக் குறிக்கோள்களைச் சரிவர மற்றவர்கள் புரிந்துகொள்ளவில்லை. மேலும், பல மாநிலங்கள் இம் முறையினைப் பின்பற்றவில்லை.

'உள்ளாட்சிக் குழு தவறு செய்யாது என்று கூறமுடியாது. ஆனால், தவறு செய்யும் என்பதனல் சுய ஆட்சிப் பயிற்சியை இந்தியருக்கு அளிக்க மறுப்பது மிகத் தவருகும்' என்றும் ரிப்பன் தெளிவாய்க் கூறினர். மேலும், 'இம் முறையினை ஆட்சியைச் செப்

பணிடும் முக்கியக் குறிக்கோளாகச் செய்யவில்லை. இதன் வாயிலாகச் சுயஆட்சி அரசியல்முறைப் பயிற்சியை இந்தியருக்கு அளிப்பதற்காகத்தான் செயல்படுத்தப்பட்டது, அதுவே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்' என்பதையும் தெள்ளத் தெளிவாய்க் கூறினர். 'இந்தியர்கள் சுயஆட்சியில் நாட்டம் கொள்ளவில்லை. அதில் அவர்களுக்கு விருப்பமும் இல்லை என்பதையும் நான் மறுக்கிறேன்' என்ருர்.

இந்தியாவில் உள்ளூர் ஆட்சியினை மக்களாட்சி முறையில் இயங்க ரிப்பன் பிரபு வித்திட்டார். அவர் நோக்கங்கள் யாவும் உடனே பயனளிக்காவிட்டாலும், சிறிது சிறிதாக இந்தியரால் பிறகு பெறப்பட்டது. இதனல் அவரை இந்தியாவின் 'உள்ளூர் ஆட்சியின் தந்தை'என்று குறிப்பிடுவதில் தவறில்லை. ஏனெனில், அவர் விதைத்த விதையினுல்தான் உள்ளூர் ஆட்சிமுறை இந்தியாவில் வளர்ந்து, இறுதியில் பயனும் அளித்தது.

ஹண்டரின் கல்விக் குழு

இந்தியக் கல்வித் துறையிலும் ரிப்பனின் பெயர் மிகச் சிறப்பான இடத்திற்கு உரியதாகும். 1882ஆம் ஆண்டு ஹண்டர் (Hunter) தலைமையின்கீழ் ஒரு கல்விக் குழுவை நியமித்தார். 1854ஆம் ஆண்டு வுட் (Wood) என்பவரின் கல்வித் திட்டத்தின் பலனை அறியவே இக் குழு நியமிக்கப்பட்டது. உயர்தரக் கல்வி ஆட்சித் துறையின் நேரடி ஆதிக்கத்தின்கீழ்க் கல்லூரிகளைத் தொடங்கச் சாதாரண அல்லது சிறப்பு உதவிக் கொடைகள் (Ordinary or Special grants) அரசாங்கம் கொடுக்கலாம் என்ற ஆலோசனையை இக் குழு கூறியது. மேலும், அரசாங்கக் கல்வி அதிகாரிகளைக் கொண்டு, ஆரம்பப் பள்ளிகளை மேற்பார்வை இடவேண்டும். மாநில வருவாயில் ஒரு பகுதி இதற்காக ஒதுக்கப்படவேண்டும் என்பதும் இக் குழுவின் ஆலோசனைகளாகும். இக் குழுவின் ஆலோசனைகளை ரிப்பன் பிரபு ஏற்று நாட்டில் ஆரம்பக் கல்வியையும், நடுத்தரக் கல்வியையும் தழைத்தோங்கச் செய்தார். மேயோப் பிரபுவால் புகுத்தப்பட்ட பொருளாதார உரிமையைப் பன்முகப்படுத்தும் (Decentralisation of Finance) துறையிலும் ரிப்பன் பிரபு சில மாற்றங்களைச் செய்தார். பொருளாதாரத் துறையை மைய (Imperial), பிரிவினைப்பட்ட (Devided) மாநில (Provincial) வருவாய்த் துறைகள் என மூவகைப்படுத்தினர். மையத் துறை வருவாய் மைய அரசுக்கும், மாநில அரசின்கீழ் உள்ள துறையின் வருவாய் முழுமையும் மாநிலக் கருவூலத்திற்கும், பிரிவினைக்குட்பட்ட பகுதியின் வரு

வாய் மைய அரசுக்கும் மாநிலங்களுக்கும் பங்குபோட்டுக் கொள்ளும் முறையையும் செயல்படுத்தினர். மாநிலத்தின் பற்றுக் குறையை (deficit) மையஅரசின் நிலவருவாயிலிருந்து ஒரு குறிப் பிட்ட சதவீதம் கொடுத்து ஈடுகட்ட வேண்டும் என்றும், இவ்வித நிர்ணயம் ஐந்து ஆண்டுக்கொரு முறை செய்ய வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார். 1887, 1892, 1897ஆம் ஆண்டுகளில் இதன்படியே எவ்வளவு சதவீதம் நிதி மாநிலங் களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்டது.

பிற சீர்திருத்தங்கள்

மேயோப் பிரபு காலத்தில் குடிக் கணக்கு (Census) முதன் முதலாக எடுக்கப்பட்டது. ஆனால், அது தாறுமாறாக எடுக்கப் பட்டது. இவர் காலத்தில்தான் 1881-ல் முதன்முதலாக மக்கள் பிறப்புஇறப்புக் கணக்கு (Census) எடுக்கப்பட்டது. அவ் வாண்டிலிருந்து 10 ஆண்டுகளுக்கொரு முறை குடிக்கணக்கு (Census) எடுக்கப்படுகிறது.

தொழிலாளிகளின் நலனில் மிக்க ஆர்வம் காட்டினர். 1881ஆம் ஆண்டு முதலாம் தொழிற்சாலைச் சட்டம் (Factory Act) நிறைவேற்றினர். தொழிற்சாலையின் சூழ்நிலையையும், தொழி லாளிகளின் நலனையும் கவனித்து ஆவன செய்வதே இச் சட்டத்தின் நோக்கமாகும். இச் சட்டப்படி 7 வயதிற்கும் 12 வயதிற்கும் உட்பட்ட சிறுவர்களை 9 மணி நேரத்திற்குமேல் வேலை வாங்கக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டது. ஆபத்து விளைவிக்கக்கூடிய பயங்கரமான தொழிற்கருவிகளைத் தக்க வேலி போட்டுப் பாதுகாப்பாய் வைக்க வேண்டும் என்றும் கூறப் பட்டது. இதன்படி தொழிற்சாலைகள் நடைபெறுகின்றனவா என்று மேற்பார்வையிடத் தொழிற்சாலை மேற்பார்வையாளர்களும் (Inspector of Factories) அமர்த்தப்பட்டனர். நாட்டு மொழி களில் வெளிவந்த செய்தித்தாள்களின் உரிமைகள் லிட்டன் பிரபு அரசப் பிரதிநிதியாக இருந்த காலத்தில் குறைக்கப்பட்டன. 1881ஆம் ஆண்டில் ரிப்பன் பிரபு காலத்தில் அவைகளின் உரிமைகள் மறுபடியும் அளிக்கப்பட்டன.

மைசூரைத் திருப்பிக் கொடுத்தல்: மைசூர் மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டிய செய்கை மைசூரைப் பழைய அரசப் பரம்பரைக்கே ஒப்படைத்ததாகும். அரசப் பிரதிநிதியின் அனுமதியின்றி எவ்வித மாற்றமும் அதன் அரசியலில் செய்யக் கூடாதென்ற தடையுடன் மைசூரைப் பழைய அரச மரபினரான உடையார் குடும்பத்திடம் ஒப்படைத்தார்.

தடையற்ற வாணிகம்: வாணிக உரிமையில் நாட்டம்கொண்ட ரிப்பன், எல்லா இறக்குமதி வரியையும் நீக்கிவிட்டார். உப்பு, மதுவகை (wine) போன்ற பொருள்களின்மேல் மட்டும் வரி வசூலிக்கப்பட்டது. அவர் உப்பு வரியை எல்லா மாநிலங்களிலும் குறைத்தாலும், உப்புவரி நீக்க வேண்டிய கோரிக்கை மேலிடத்துத் தலையீட்டினால் நீக்கப்படவில்லை. அவ் வரியும் அரசியல் காரணங்களுக்காகத்தான் வசூலிக்கப்பட்டது. விளைநிலங்களை அளந்து தீர்வை நிர்ணயிக்கப்பட்ட மாவட்டங்களில், தீர்வையை விலைவாசி உயர்ந்தால் தவிர, உயர்த்தக் கூடாதென்ற திட்டம் ஒன்றைச் செயல்பட நினைத்தார். ஆனால், இத் திட்டத்தை இந்திய மந்திரி ஏற்க மறுத்ததால் கைவிடப்பட்டது.

இல்பெர்ட் வரைவு தகராறு (Ilbert Bill)

ரிப்பன் பிரபுவுக்கு இந்திய வரலாற்றில் அழியாத புகழும், இந்திய மக்கள் உள்ளத்தில் நீங்காத இடமும் பெற வைத்தது 'இல்பெர்ட் வரைவு தகராறு' என்பதே ஆகும் (Ilbert Bill Controversy). அரசப் பிரதிநிதியின் மன்றத்தின் சட்ட உறுப்பினர் இல்பர்ட் என்பவர் 1883ஆம் ஆண்டுச் சட்டமன்றத்தில் ஒரு வரைவை நிறைவேற்ற முற்பட்டார். இவ் வரைவு இல்பர்ட் வரைவு எனப் பெயர்பெற்றது. மாவட்டங்களில் இருக்கும் ஐரோப்பியர்கள் குற்றம் புரிந்தால், ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிகளால் மட்டும் விசாரித்துத் தண்டனை வழங்கும் உரிமை கொண்டிருந்தனர். ரிப்பன் பிரபு காலத்திற்குள் பல இந்தியர்கள் மாவட்ட நீதிபதிகள் பதவியை வகிக்கலாயினர். ஆகவே, ஐரோப்பியக் குற்றவாளிகளை இந்திய மாவட்ட நீதிபதிகளும் விசாரணை செய்து தண்டிக்கலாம் என்ற சலுகையை வழங்குவதற்காக இவ் வரைவைக் கொண்டுவந்தார். ஐரோப்பியச் சமூகத்தினர் இதைக் கடுமையாக எதிர்த்தனர். இந்தியாவிலும், இங்கிலாந்திலும் அவர்கள் இதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து அவர்கள் பாதுகாப்புக் கழகம் (Defence Association) ஒன்றையும் அமைத்து, இந்தியா முழுமையும் அதற்குக் கிளைக் குழுக்களை நிறுவி இல்பர்ட் வரைவை எதிர்த்தனர். ரிப்பன் பிரபுவை நேரடியாகவே அவமதித்தனர். அக் கிளர்ச்சிக்கு அரசாங்கம் தலைவணங்கிற்று. இல்பர்ட் வரைவு கைவிடப்பட்டது. அதற்குப் பதில் ஒரு சாதாரண வரைவைக் கொணர்ந்து பிறகு சட்டமாக்கப்பட்டது. இப் புதிய வரைவின் படி செசன்ஸ் நீதிமன்றத்திலும், மாவட்ட நீதிமன்றத்திலும் ஐரோப்பியக் குற்றவாளிகளை விசாரணை செய்யும் உரிமை

இந்திய நீதிபதிகளுக்கு அளிக்கப்பட்டது. ஆனால், அப்படி விசாரணை செய்யும்போது தீர்ப்புச் சான்றாளர் குழுவில் (Jury) பாதிப்பேர் ஐரோப்பியர் அல்லது அமெரிக்கர்களாயிருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது இச் சலுகை இந்தியருக்கு அளிக்கப்படவில்லை. இல்பர்ட் வரைவிற்கு எதிராக நடை பெற்ற கிளர்ச்சியின் வெற்றி, 'படித்த இந்தியர்களின்' மனத்தில் கோபத்தையும், உயர்வு மனப்பான்மையையும் ஏற்படுத்தியது. அதே நேரத்தில் ஒன்றுசேர்வதால் ஏற்படும் நன்மையையும், ஒரு தேசியக் கழகத்தால் ஏற்படும் மதிப்பையும் அது தெளிவாகக் காட்டியது. இந்த அனுப அறிவைப் படித்த இளைஞர்கள் மறக்கவில்லை. இதன் விளைவே 'இந்திய தேசியக் காங்கிரசு தோன்ற வழிகாட்டி ஆயிற்று' என்று தாம்சன்-காரட் என்ற வர லாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

மதிப்பீடு

ரிப்பன் பிரபு இந்தியர்பால் காட்டிய பரிவையும், பாசத் தையும், செருக்கும் ஆதிக்கப்பற்றுங் கொண்ட சில ஆங்கிலேயர் களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஸ்மித் இவரை 'ஒரு சாதாரண மனிதர், ஆற்றல் அற்றவர்' என்று குறைத்து மதிப்பிடுகின்றார். 1884ஆம் ஆண்டு தம் பதவியைவிட்டு விலகியபோது இந்திய மக்கள் உளமார வருந்தினர். பம்பாய்த் துறைமுகம் முழுதும் அழுத முகமும், ஓலமிட்ட வாயுமாய் இந்தியர் அவருக்குப் பிரியாவிடை கொடுத்தனுப்பினர். எந்தத் தலைமை ஆளுநருக்கும் அத்தகைய வழியனுப்பு விழா நடக்க வில்லை. ஆங்கிலேயர் அன்பைப் பெற இயலாத ரிப்பன், இந்தியர்களின் உள்ளங்களில் என்றும் நீங்கா நிலையைப் பெற்றார்.

> 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்ற தெய்வமறையை வேதமாகக் கொண்டுள்ள தமிழ் நாட்டு மக்கள் தங்கள் அன்பையும், நன்றியையும் காட்டும் முகத்தான்தான் அவரை 'ரிப்பன் எங்கள் அப்பன்' என்றார்கள். இவற்றின் அறிகுறியாகவே சென்னை மாநகரத்தில் அவரது உருவச்சிலை அமைக்கப்பட்டிருப்பதுடன் சென்னை மாநகராண்மைக் கழகக் கட்டடமும் இன்றும் அவரது பெயராலேயே அழைக்கப்பட்டு வருகின்றது.

18. டப்பரின் முதல் எல்ஜின் II வரை

டப்பரின் பிரபு (1884—1888)

1884ஆம் ஆண்டு டப்பரின் பிரபு அரசப் பிரதிநிதிப் பதவியை ஏற்ருர். டப்பரின் பிரபு ஆட்சித் துறையிலும், அரசியல் தந்திரத்திலும் மிகவும் அனுபவப்பட்டவர். ருஷ்யா, துருக்கி போன்ற நாடுகளில், இங்கிலாந்தின் தூதராகவும் பணி புரிந்தவர். கனடாவின் (Canada) தலைமை ஆளுநராகவும் பணியாற்றியவர்; பேச்சு வன்மை மிக்கவர்.

அகில இந்தியக் காங்கிரசு நிறுவப்படல்

ரிப்பன் பிரபு காலத்தில் இந்திய மக்களுள் எழுந்த ஒற்றுமை உணர்ச்சி, அகில இந்தியக் காங்கிரசு என்ற வடிவில் வெளிப்பட்டது. ரிப்பன் பிரபு காலத்திற்கு முன்பே இந்தியாவில் தேசிய உணர்ச்சி பல காரணங்களால் ஏற்பட்டது. ஆங்கில இலக்கியத்தையும், ஐரோப்பிய வரலாற்றையும் படித்ததால், மக்களாட்சி மனப்பான்மையையும், நாட்டுப்பற்றையும் பெற்ருர்கள். இங்கிலாந்தும் இந்தியாவில் இந்த எண்ணங்கள் வளர ஆரம்பத்தில் ஆதரவு தந்தது. இந்திய மக்களின் நலத்தைப் பேணுவதே ஆங்கிலேயரின் தலையாய கடன் என்பதை 1813, 1838, 1853ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றிய இந்தியப் பட்டயச் சட்டங்களிலும், 1858ஆம் ஆண்டு அறிவித்த பேரரசியாரின் அறிக்கையிலும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. ஆங்கிலேயரின் நேர்மையான போக்கினுல், படித்த இந்தியர்கள் மனத்தில் இங்கிலாந்தின்பால் ஒரு மதிப்பும் வளர்ந்தது. இன வேறுபாடு இன்றி இந்தியரும், பொதுப்பணித் துறையில் அமர்த்தப்படுவர் என்று அறிவித்ததை நடைமுறையில் லிட்டன் பிரபு போன்ருேர் கடைப்பிடிக்காமல் வந்தது, படித்த இந்திய இளைஞர்களின் உள்ளத்தைப் புண்படுத்தியது. சுரேந்திரநாத்

பானர்ஜிக்கு (Surendranath Banerji) எதிராக ஐ.சி.எஸ். (I.C.S.) பதவியில் அரசாங்கம் காட்டிய போக்கு, இந்தியரிடையே உள்ளக் குமுறலை ஏற்படுத்தியது. பானர்ஜி அப் பரீட்சையில் (I.C.S.) தேறினர். ஆனால், தேறியவர்கள் பட்டியலிலிருந்து அவர் பெயரை நீக்க முயற்சிகள் செய்யப்பட்டன. அரசியாரின் மன்றத்தில் (Queen's Bench) முறையிட்டதன் பயனாக, அப் பதவியில் அவர் அமர்த்தப்பட்டார். பிறகு சில காரணங்களைக் காட்டி, அவர் அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதனால் மனம் வெறுத்த அவர் தம் வாழ்க்கையைப் பொதுப்பணியில் ஈடுபடுத்த உறுதிபூண்டு 1876-ல் கல்கத்தாவில் இந்தியக் கழகம் (Indian Association) ஒன்றை நிறுவினர். இந்தியரைப் பொதுத்துறைப் பணியில் மிக உயர்ந்ததான ஐ.சி.எஸ். (I.C.S.) பதவிக்கு வராமலிருக்க எவ்வளவு தடைசெய்ய முடியுமோ அவ்வளவையும் லிட்டன் பிரபு செய்தார். அத் தேர்வுக்கிருந்த அதிகபட்ச வயதான இருபத்தொன்றைப் பத்தொன்பதாக 1877-ல் குறைத்தார். இதை இந்தியக் கழகம் எதிர்த்தது. பானர்ஜி ஆக்ரா, லாகூர், அமிர்தசரசு, மீரத், அலஹாபாத், கான்பூர், லக்னோ, அலிகார், அயோத்தி போன்ற இடங்களில் கூட்டங்களைக்கூட்டி அதை வன்மையாகக் கண்டித்தார். மக்களின் பேராதரவு அவருக்குக் கிடைத்தது. இனம், மொழி, சமுதாய வேறுபாடுகளைக் கடந்து, ஒரு பொதுவான அரசியற் குறிக்கோளை அடைவதற்காக இந்திய மக்கள் ஒன்றுசேர முடியும் என்பதை பானர்ஜி தெளிவாகத் தெரிந்துகொண்டார். இந்தியக் கழகம், பொதுக்கூட்டத்தினால் (public meetings) மக்களைக் கவர்ந்ததுடன், மற்றொரு வழியையும் பின்பற்றியது. இக் கூட்டங்களில் அவர்கள் குறைகள் அடங்கிய மனுக்களைத் (petitions) தயாரித்து, அதை மக்கள்முன் படித்து அவர்களின் ஆதரவைப் பெற்றபின் அம் மனுக்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பும் நேரடி முறை பின்பற்றப்பட்டது.

பானர்ஜியால் கல்கத்தாவில் நடந்த ஒரு கூட்டத்தில் கருணை விண்ணப்பம் (Memorial) தயாரிக்கப்பட்டு, மற்ற இடங்களில் நடந்த கூட்டங்களிலும் அது ஆதரிக்கப்பட்டபின், அஞ்சல் மூலமாக (postal) அவ் விண்ணப்பத்தை அனுப்பாமல், கல்கத்தாவிலிருந்த பிரபல சட்ட நிபுணர் லால் மோகன் கோஷ் (Lal Mohan Ghosh) என்பவரை இந்தியச் சங்கத்தின் சார்பாக, அவ் விண்ணப்பத்தை நேரடியாகப் பாராளுமன்றத்தில் ஒப்படைக்கும்படி அனுப்பிவைத்தார்.

அவ் விண்ணப்பத்தில்,

(1) இந்தியப் பொதுத்துறைப் பணியாளர் தேர்வுக்கு நடத்தப்படும் தேர்வை (I. C. S. Examination) இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே சமயத்தில் நடத்தவேண்டும்.

(2) அத் தேர்வுக்கான உச்சவயது வரம்பைக் குறைக்கக் கூடாதென்றும் கோரப்பட்டிருந்தது.

கோஷ் சிறந்த ஆங்கிலப் பேச்சாளர். இங்கிலாந்தில் ஜான் பிரைட் (John Bright) என்பவரின் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் நடத்தி, இங்கிலாந்து மக்களை, இந்தியரின் குறைகளை உணரும்படி செய்தார். அதன் விளைவே பிற்காலத்தில் பொதுத்துறைப் பணியாளர் சட்டம் (Statutory Civil Service) என வழங்கப்பட்ட சட்டம் இயற்றப்பட்டது.

லிட்டனின் படைக்கலச் சட்டம் (Arms Act), நாட்டு மொழிகளின் பத்திரிகைச் சட்டம் (Vernacular Press Act) ஆகியவைகளை எதிர்த்தும் கிளர்ச்சிகள் செய்யப்பட்டன. லிட்டனின் பொதுப்பணித்துறைச் சட்டம், படைக்கலச் சட்டம், நாட்டு மொழிப் பத்திரிகைச் சட்டம் இவற்றை எதிர்த்துச் செய்யப்பட்ட கிளர்ச்சி நாட்டில் தேசிய உணர்ச்சி வளர உரம் ஊட்டியது. இக் கிளர்ச்சிகள் இந்தியாவின் அரசியல் வாழ்க்கைக்கு ஓர் உருவத்தைக் கொடுத்ததுடன், இந்தியரின் மறைந்திருந்த திறமையையும் முன்னணிக்குக் கொண்டு வந்தது. உயர்ந்த பதவிகள் வகித்தால் மட்டும் போதாது, இறுதியில் முழு ஆட்சியையும் மக்கள் பிரதிநிதிகளின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் மங்கலாக அப்பொழுதே இந்தியத் தலைவர்களின் உள்ளங்களில் உதிக்கலாயிற்று எனலாம்.

இப் புதிய குறிக்கோளை அடைவதற்கு, அகில இந்தியக் கழகம் ஒன்று தேவைப்பட்டது. இல்பர்ட் வரைவை எதிர்க்கத் தொடங்கிய 'ஐரோப்பியர் பாதுகாப்புக் கழகம்' (Defence Association) இதற்கு முன்னோடியாக விளங்கியது. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் அடங்கிய இந்திய தேசிய மாநாடு (Indian National Conference) கல்கத்தாவில் 1883-ல் கூடியது. அதே ஆண்டில், ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (Allan Octavian Hume) என்கிற ஓய்வுபெற்ற ஆங்கில அதிகாரி, கல்கத்தாப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு வெளிப்படையான ஒரு கடிதம் எழுதினார். இந்திய மக்களின் எண்ணங்களை ஆட்சியினர் தெரிந்துகொள்ள ஒரு கழகம் அவசியம்

என்று அதில் குறிப்பிட்டிருந்தார். இப்படிப்பட்ட கழகம் பொது மக்களுக்கும் உதவியாய் இருக்கும் என்று அப்பொழுது தலைமை ஆளுநராய் இருந்த டப்பரின் பிரபுவும் கூறினார்.

அன்னிபெசன்ட் அம்மையார் 1884ஆம் ஆண்டு அடையாற்றில் (Adyar) நடந்த தியோசா.ஃபிகல் கூட்டத்திற்கு (Theosophical Society) இந்தியாவின் பல பாகங்களிலிருந்து பலர் வந்திருந்தனர். அவர்களில் 24 பேர் பிறகு தனியே ஒன்று கூடிப் பேசியதன் விளைவே இந்திய தேசியக் காங்கிரசு தோன்றக் காரணமாயிற்று என்று கூறுகின்றார். அகில இந்தியக் காங்கிரசின் வித்தகர் யாரென்று சரியாகச் சொல்ல முடியாவிட்டாலும், அது தோன்றவேண்டும் என்ற குறிக்கோள் ஏற்கெனவே இந்தியத் தலைவர்களுக்குள் இருந்தது என்பதை மறுக்க முடியாது. அவ் வெண்ணம் செயல்பட ஹியூம் போன்றோரின் ஊக்கமும் ஆதரவும் உறுதுணையாய் இருந்தன எனலாம். டப்பரின்பிரபுவின் ஆட்சியில் இந்தியக் காங்கிரசு சபை 1885ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் அரசாங்கம் காங்கிரசு இயக்கத்தை ஆதரவுடன் நோக்கிற்று. ஆட்சித் துறையினர் காங்கிரசின் முதல் கூட்டத்தில் கலந்துகொண்டதோடு, அதனுடைய விவாதங்களிலும் கலந்துகொண்டனர். டப்பரின் பிரபு 1886ஆம் ஆண்டு கல்கத்தாவிலும், சென்னை ஆளுநர் 1887ஆம் ஆண்டும் காங்கிரசு உறுப்பினர்களை அழைத்து விருந்தளித்துக் கௌரவித்தனர். ஆனால், மிக விரைவிலேயே ஆட்சியினர் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டனர். கல்கத்தாவில் செயின்டு ஆண்டுருஸிற்காகக் (St. Andrews) கொடுக்கப்பட்ட விருந்தொன்றில், டப்பரின் பிரபு இந்திய தேசியக் காங்கிரசின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் தாம் ஆதரிக்கவில்லை என்று வெளிப்படையாகவே கூறினார். காங்கிரசு சபை, படித்த சிறுபான்மையினரின் குழு (Microscopic minority) என்றும் அதைக் குறிப்பிட்டார். அச் சபை பெரும்பான்மையான இந்திய மக்களின் கட்சி அன்றென்றும் இகழ்ந்துரைத்தார்.

காங்கிரசின் இயக்கத்திற்கு எல்லாப் பகுதியினரும் முதலில் ஆதரவு தரவில்லை. முகமதியத் தலைவர்கள் கலந்துகொண்டாலும், முகமதியருள் பெரும் பகுதியினர் காங்கிரசிலிருந்து விலகியே இருந்தனர். இதற்குக் காரணம் சந்தேகமும் அவர்களின் பிற்போக்கான தன்மையுமேயாகும். சர் சையது அஹமது (Sir Syed Ahamed) என்பவர் ஒரு தீவிரத் தேசியவாதி. 'இந்தியர்களும் முகமதியர்களும் இந்தியாவின் இரண்டு கண்கள். ஒரு கண்ணுக்குச் செய்த தீங்கு மற்றொன்றிற்கும்

செய்த தீங்காகும். மனத்திலும், ஆன்மாவிலும் ஒன்றுசேர்வதற்கு நாம் முயல வேண்டும்; ஒருமையுடன் செயலாற்ற வேண்டும்,' என்றெல்லாம் முகமதியருக்கும், இந்தியருக்கும் ஒற்றுமை நிலவப் பாடுபட்டாலும் காங்கிரசு இயக்கத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்க்க வேண்டுமென எதிர்த்து வந்தார். முகமதியர் அதிலிருந்து ஒதுங்கியே இருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு அறிவுரை பகர்ந்தார். ஆங்கிலேயரின் 'பிரித்து ஆளும் கொள்கை' (Devide and rule) ஓரளவு இதற்குக் காரணமாயிருக்கலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வித மனப்பான்மையே 'முஸ்லிம் லீக்' (Muslim League) என்ற தனிக் கட்சி தோன்றவும், தனி வாக்காளர் தொகுதியைப் (separate electorate) பெறவும், கடைசியில் இந்தியாவைப் பாகிஸ்தான், பாரத் என இரு கூறுகளாக்கவும் காரணமெனலாம். இவ்விதம் டப்பரின் பிரபு காலத்தில் அகில இந்தியக் காங்கிரசு தோற்றுவிக்கப்பட்டது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். மற்றொரு முக்கிய நிகழ்ச்சி மூன்றும் பர்மியப் போராகும்.

மூன்றும் பர்மியப் போர் (1885—1886)

டல்ஹௌசி காலத்தில் இரண்டாம் பர்மியப் போர் மூண்டதையும், அதன் விளைவுகளையும் கண்டோம். டப்பரின் பிரபு காலத்தில் மூன்றும் பர்மியப் போர் மூண்டது. இதற்குப் பல அடிப்படைக் காரணங்களிருந்தாலும் மிகவும் முக்கியமானது, பர்மிய அரசர் மின்தானுக்குப் பின் அரியணையிலமர்ந்த அவர் மகன் திபா (Thibaw) ஆங்கிலேயரின் வாணிக ஒப்பந்தத்தை மீறியதுடன், அதற்கெதிராகப் ஃபிரான்சுடன் வாணிக ஒப்பந்தமும் செய்துகொள்ள முயற்சி செய்தார்.

ஃபிரெஞ்சு ஆதிக்கம் பர்மாவில் அதிகரிப்பதை ஆங்கிலேயர் அச்சத்துடன் நோக்கினர். 1884ஆம் ஆண்டிற்குள் பல ஃபிரெஞ்சுக்காரர்கள் மேல்பர்மாவில் குடியேறினர். 1885ஆம் ஆண்டு பர்மிய அரசும் ஃபிரஞ்சு அரசும் ஒரு வர்த்தக உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி ஒரு ஃபிரெஞ்சுத் தூதரகமும் (Consulate) மாண்டலேயில் நிறுவப்பட்டது. அதனுடன் ஃபிரெஞ்சு இரயில்வேயும், ஃபிரெஞ்சு வங்கியும் (bank) நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஃபிரெஞ்சின் செல்வாக்கைக் கண்டு ஆங்கிலேயர் உண்மையிலேயே பீதி அடைந்தனர். மேலும், இந்திய அரசுக்கு இதனால் இடையூறு ஏற்பட ஏதுவாகும் என்றும் நம்பினர். ஆகவே, பர்மியரைத் தாக்கத்தக்க வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர். 1885ஆம் ஆண்டு பர்மிய அரசர் திபா

(Thibaw) பம்பாய்-பர்மா என்ற ஆங்கில வாணிகக் குழுவின்மேல் 2,30,000 பவுன் அபராதம் விதித்தார். இவ் வணிகக் குழு பர்மியத் தேக்கு வியாபாரத்தில் ஈடுபட்டு இருந்தது. இவ் வணிகக் குழுவை மூடிவிட்டு, ஃபிரெஞ்சுக்காரர்களுக்குப் பர்மியத் தேக்குமர வியாபாரத்தைக் கொடுக்க வேண்டும் என்பதே அவரின் குறிக்கோள். இதனால் கோபமடைந்த டப்பரின், திபா தம்மிடம் முறையிட வேண்டுமேயன்றித் தாமே அவ் வணிகக்குழு மீது அபராதம் விதித்தது தவறு; எனவே, அபராதத்தை விலக்க வேண்டும், இன்றேல் போர் தொடங்கப்பெறும் என்று அறை கூவல் விட்டார். திபா அதற்கு உடன்பட மறுக்கவே டப்பரின் பிரபு 1885-ல் பர்மாமீது போர் தொடுத்தார். இவ்விதம் மூன்றும் பர்மியப் போர் தொடங்கியது.

போரின் போக்கு

ஜெனரல் ஹென்றி ஃபிரெண்டர் காஸ்ட் (General Henry Phrender Gast) தலைமையில் இயங்கிய ஆங்கிலப் படை ரங்கூனி லிருந்து மேல்பர்மாவைத் தாக்கி மாண்டலேயைக் கைப்பற்றியது. திபாவும் இறுதியில் சரணடைந்தார். திபா கைது செய்யப்பட்டுச் சென்னைக்கு அனுப்பப்பட்டார். 1886ஆம் ஆண்டு சனவரி முதலாம் தேதி அறிவித்த பிரகடனத்தின்படி மேல்பர்மாவையும் ஆங்கிலேயர் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தனர். ஆனால், ஆங்கிலேயருக்குப் பர்மியர்களால் தொல்லைகள் இருந்து கொண்டே இருந்தன. கொரில்லாப் போர்முறையில் அவர்கள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் வரை தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருந்தனர். மேல்பர்மாவையும் இணைத்துக் கொண்டதால், ஆங்கில இந்திய அரசு சீனா, இந்தோ-சீனா (Indo-China) நாடுகளின் எல்லைவரையில் பரவியது. 1897ஆம் ஆண்டு மேல்பர்மா, கீழ்பர்மா இரண்டும் இணைக்கப்பட்டு ஒரு துணை ஆளுநர் (Lieutenant-Governor) ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் படி பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனி அரசாக்கப் பட்டது. ரங்கூனைத் தலைநகராகக்கொண்டு ஒரு தனி ஆளுநரின் ஆட்சியில் பர்மா 1935ஆம் ஆண்டு முதல் இயங்கி வரலாயிற்று.

பிற சீர்திருத்தங்கள்

மாதம் ஐந்நூறு ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவர்கள் நான்கு சதவீதம் (4%) வருமான வரியும், இருநூறுக்கும் ஐந்நூறுக்கும் இடையில் மாத வருமானமுள்ளவர்கள் இரண்டு

சதவீதம் (2%) வருமான வரியும் செலுத்த வேண்டும் என்றிருந்தது 1865 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. ஆனால், டப்பரின் பிரபு காலத்தில் 1886ஆம் ஆண்டு மீண்டும் இவ்வித வருமான வரிமுறை கொண்டுவரப்பட்டது. விவசாய வருமானம் தவிர மற்ற எல்லா வருமானங்களுக்கும் வருமானவரி செலுத்தவேண்டுமெனச் சட்டம் ஆக்கப்பட்டது. அயோத்தியில் 30 ஆண்டுகளுக்குமேல் குத்தகைகாரர்களாயிருந்தவர்களுக்கு (occupancy rights) 1886ஆம் ஆண்டு ஒரு சட்டம் நிறைவேற்றினர். தாற்காலிகக் குத்தகைகாரர்களின் குத்தகையை அதிகப்படுத்தாமல் பாதுகாக்க, ஏழாண்டிற்கு முன் குத்தகை அளவை உயர்த்தக் கூடாதென வரையறுத்தார். விவசாயிகளின் நிலங்களைப் பொதுப்பணிக்காக எடுக்க நேரிட்டால், நஷ்டஈடு கொடுக்க வேண்டுமெனவும் செய்தார். சட்டமன்றத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை அதிகப்படுத்த வேண்டும் என்றும் அவர்களுக்கு அதிக ஆட்சி அதிகாரங்களும் வழங்க வேண்டும் என்றும் காங்கிரசு கோரியது. இக் கோரிக்கை நியாயமானதென டப்பரின் பிரபு உணர்ந்தார். இதற்காக ஒரு குழுவையும் அமைத்து அதைப்பற்றி விரிவாக ஆராய்ந்தார். அதன் பயனாய் நாட்டின் பொது நிர்வாகத்தில் இந்தியருக்கு அதிகப் பங்குகொடுக்க வேண்டுமென இங்கிலாந்து மந்திரி சபைக்குச் சிபாரிசு செய்தார். 1892ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டசபைச் சட்டத்திற்கு அவர் செய்த சிபாரிசும் ஒரு காரணமாகும். அவர் சிபாரிசுபடி அதிகப்படி அதிகாரங்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

லேன்ஸ்டௌன் பிரபு

Lord Lansdowne, (1888—1894)

டப்பரின் பிரபுவிற்குப் பின் அரசப் பிரதிநிதியான லேன்ஸ்டௌன் பிரபு, சாதாரணத் திறமையுள்ளவர்; வடமேற்கு எல்லையின் பாதுகாப்பில் தனிக் கவனம் செலுத்தினர்.

துராண்ட் எல்லைக் கோடு: சர் மார்டிமர் துராண்ட் (Sir Martimer Durand) என்பவரைக் காபூலுக்கு அனுப்பிவைத்தார். துராண்ட் எவ்விதப் படையுமின்றித் தனியே சென்று ஆங்கிலேயர்பால், ஆஃப்கானியரை நல்லெண்ணம் கொள்ளுமாறு செய்தார். இந்தியா ஆஃப்கானிஸ்தான் இரு நாடுகளிடையே எல்லைக்கோடு ஒன்றும் நிர்ணயிக்கப்பட்டு 'துராண்ட் எல்லைக் கோடு' என்று வழங்கலாயிற்று.

மணிப்பூர் தகராறு : மணிப்பூரில் ஒரு வாரிசுத் தகராறு ஏற்பட்டது. இதை விசாரிக்கச் சென்ற அஸ்ஸாம் ஆணையாளரை (Commissioner) வஞ்சகமாகக் கொன்றுவிட்டனர். இதனால் இந்தியப் படை ஒன்று மணிப்பூருக்கு அனுப்பப்பட்டது. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டனர். ஒரு சிறு அரசகுமாரனை மணிப்பூர் அரியணையில் அமர்த்தியதுடன் ஆட்சியைக் கவனித்துக் கொள்ள ஒரு நிலையரையும் அங்கே 1891-ல் அமர்த்தினர்.

காஷ்மீர் விவகாரம் : காஷ்மீர் அரசர்மீது சில குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன. இதன் விளைவால், அவரை அப் பதவியிலிருந்து விலக்கி, 1889-ல் காஷ்மீரின் நிருவாகத்தை ரீஜென்ஸிக் குழுவிடம் (Council of regeny) ஒப்படைத்தார். 1905ஆம் ஆண்டுதான் காஷ்மீர் அதன் பழைய அரச மரபிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

தொழிற்சாலைச் சட்டம் : தொழிலாளர் நலனில் நாட்டம் செலுத்தினர். தினசரி 18மணி நேரத்திற்குமேல் தொழிலாளிகள் வேலை செய்தனர். தொழிற்கூடங்கள் நல்ல வெளிச்சம், காற்றோட்டம், மற்றச் சுகாதார வசதிகள் அற்று, நோய் விரைவில் பற்றக் கூடிய நிலையில் இயங்கி வந்தன. ரிப்பன் பிரபு காலத்தில் நிறைவேற்றப்பட்ட தொழிற்கூடச் சட்டம் சரிவரச் செயல்படாமலிருந்தது. சுரங்க வேலைக்குத் தாய்மார்களும், குழந்தைகளும் அமர்த்தப்பட்டனர். இதனால் தொழிற்கூடங்களை ஒழுங்குபடுத்தும் பொருட்டு ஒரு குழு அமைத்து, அதன் ஆலோசனையின் பேரில் ஒரு தொழிற்சட்டம் 1891ஆம் ஆண்டு நிறைவேற்றினர். அதன்படி 9 வயதிற்குட்பட்ட சிறுவர்களை வேலையில் அமர்த்தக் கூடாது. 9 வயதிற்குமேல் 14 வயதிற்குள் உள்ள சிறுவர்களையும் பெண்டிரையும் 11 மணி நேரத்திற்குமேல் வேலை வாங்கக் கூடாது. வாராந்தர விடுமுறை, சுகாதார வசதி போன்ற சில வசதிகளையும் தொழிற்கூடங்களில் செய்து தர வேண்டுமென வகைசெய்யப்பட்டது. ஆனால், சிறிய தொழிற்கூடங்களும், பருத்தி ஆலைகள், அரிசி குத்தும் ஆலைகள், சுரங்கங்கள் போன்ற நிரந்தரமற்ற தொழிற்கூடங்களும் இச் சட்டத்தின்கீழ் வரவில்லை.

திருமண உடன்படு வயதுச் சட்டம் : 1891-ல் உடன்படு சட்டம் (The Age of Consent Act) இயற்றப்பட்டது. இச் சட்டப்படி மகளிர் திருமண உடன்படு வயது 10-லிருந்து 12ஆக உயர்த்தப்பட்டது.

1892ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டம் : இவர் ஆட்சியில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்ச்சி 1892ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டசபைச் சட்டமேயாகும். இந்திய அரசியலமைப்பு அதிகாரத்தில் அச் சட்டத்தின் கோட்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன.

1894ஆம் ஆண்டில் இவர் பதவியிலிருந்து விலகினார். இவருக்குப்பின் இரண்டாம் எல்கின் பிரபு பதவியேற்றார்.

இரண்டாம் எல்கின் பிரபு (1894—1899)

பஞ்ச நிவாரணம் : இவர் முதலாம் எல்கின் பிரபுவின் மகன். 1876ஆம் ஆண்டிற்குப் பிறகு இவர் காலத்தில் 1896—97ஆம் ஆண்டில் ஒரு கடும் பஞ்சம் நாட்டைத் தாக்கியது. ஐக்கிய மாநிலங்கள், பீகார், மைய மாநிலங்கள், சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களிலிருந்த மக்கள் இக் கடும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டனர். பஞ்ச நிவாரண ஆலோசனைக்காக சர் ஜேம்ஸ் லையால் (Sir James Lyall) தலைமையின்கீழ் ஒரு குழுவினை அமைத்தார். 1880ஆம் ஆண்டில் பின்பற்றப்பட்ட பஞ்ச நிவாரணக் கொள்கைகள் அனைத்தையும் பின்பற்றும்படி அக் குழு சிபாரிசு செய்தது. அக் கொள்கைகளை விரிவாக நடத்துவதிலேதான் ஒருசில மாறுதல்கள் செய்யப்பட்டனவே தவிர வேறு எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. எல்கின் பிரபுவின் ஆட்சியில் பல கலகங்கள் ஏற்பட்டன. அவற்றில் வடமேற்கெல்லைப்புறத்திலுள்ள சித்ரல் (Chitral) கலகம் மிகவும் முக்கியமானது. டுராண்டு எல்லைக்கோட்டுக்குப்பின் சித்ரல் என்ற பகுதி ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் வந்தது. 1895-ல் சித்ரல் மக்கள் ஆங்கிலேயருக்கு எதிராகக் கலகம் செய்தனர். கலகம் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் நடந்தது. கடைசியில் கலகம் ஒடுக்கப்பட்டது.

மலபார்க் கலகம் : 1896-ல் மாப்பிளாக்கள் (Moplahs) மலபாரில் ஒரு கலகம் செய்தனர். இக் கலகத்தையும் எல்கின் ஒடுக்கினார்.

அபின் ஆய்வுக்குழு : அபின் உண்ணுவதால் மக்களின் நலம், ஒழுக்கம் கெடுகின்றன என்பதால் அபின் ஆய்வுக் குழு ஒன்றினை 1893-ல் நியமித்தார். இக் குழு, பொருளாதாரக் காரணத்திற்காக, அபின் வாணிகத்தின்மீது அரசாங்கம் கொண்டுள்ள தனியுரிமையைத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டது.

இராணுவச் சீரமைப்பு : இவர் காலத்தில் மாநிலங்களில் தனித் தனியே இயங்கி வந்த படைத் தலைமை முறை அகற்றப்பட்டு 1893-ல் இந்தியப் படைகள் யாவும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, அவை பொதுவான இந்தியத் தலைமைப் படை அதிகாரியின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இவரின்கீழ் நான்கு துணைப்படைத் தலைவர்கள் அமர்த்தப்பட்டனர்.

தீவிரத் தேசியவாதிகள் கை ஓங்கல் : இந்தியாவில் தோன்றிய தேசிய விழிப்புணர்ச்சியை அவரால் புரிந்துகொள்ள இயல வில்லை. படித்த இந்திய இளைஞர்களிடையே பெருகிவரும் அரசியல் ஆதிக்க உணர்ச்சியை உணர்ந்து அதன்படி நடந்து கொள்ளும் திறமையும், அவர்களுக்கு ஆதரவு தரும் எண்ணமும் அவரிடம் இல்லையென்றே கூறலாம். லங்காஷையர் (Lancashire) ஆலை முதலாளிகளின் விருப்பப்படி இந்தியத் தொழிலுக்குப் பாதுகாப்பாய் அமைந்த இறக்குமதித் தீர்வையை இந்திய அரசாங்கம் நீக்கிவிட்டது. ஆனால், பணமுடை ஏற்படவே இறக்குமதித் தீர்வை (import duty) மறுபடியும் விதிக்கப்பட்டது என்று கண்டோம். லங்காஷையர் ஆலை முதலாளிகள் இதை எதிர்த்துக்கொண்டே வந்தனர். இதனால் அவர்கள் வாணிகம் பாதிக்கப்படுகின்றது என்றும் கூறிக்கொண்டு வந்தனர். இரண்டாம் எல்கின் அவர்களைச் சமாதானப்படுத்தும்பொருட்டு, பம்பாயில் உற்பத்தியாகும் பருத்தித் துணிகள்மீது அவர்கள் கொடுக்கும் இறக்குமதித் தீர்வைக்குச் சமமான ஆயத்தீர்வையை (excise duty) விதித்தார். இதனால் இந்தியப் பருத்தித் துணி களின் விலை ஏறவே, விற்பனை குறையலாயிற்று. இதை எதிர்த்து இந்தியர் கிளர்ச்சி செய்தனர். அக் கிளர்ச்சி பால கங்காதர திலகரின் தலைமையில் வலுப்பெற்றது. பஞ்சாபைச் சேர்ந்த லாலா லஜபதிராயும், வங்காளத்தைச் சார்ந்த பெபின் சந்திர பாலும் (Bepin Chandra Pal) அவருக்கு உறுதுணையாயிருந் தனர். பால கங்காதர திலகர் காங்கிரசின் சமாதான முறை பயனளிக்காது எனக் கருதினார். ஒவ்வோர் ஆண்டும் காங்கிரசு, அரசாங்கத்திற்கு மிகப் பணிவான முறையில் விண்ணப்பங்கள் செய்வதையும், அவற்றை அரசாங்கம் முறையற்ற முறையில் ஒதுக்கித் தள்ளுவதையும் இவர்கள் இகழ்ந்து கூறினர். அரசியல் தேவைகளைப் பேச்சினால் பெற இயலாது என்றும், வன்முறைச் செயல்களால்தாம் பெற இயலும் என்றும் அவர்கள் நம்பினார்கள். இப்படி நம்பியவர்கட்கு ஊக்கம் அளித்தவர் பால கங்காதர திலகர் (1856—1920). அவர் பிரபல பேஷ்வாக்களின் மரபைச் சேர்ந்த மராத்தியராவார். வரலாற்றில் புகழ்பெற்ற இந்தி யாவின் பழம்பெருமையை எடுத்துரைத்து, இந்திய மக்களி

டையே ஆற்றல்வாய்ந்த தேசிய உணர்ச்சியை உண்டாக்கத் திலகர் முயன்ருர். சமூகக் கோட்பாடுகளில் ஆட்சியினர் தலையிடு வதைத் தடுப்பதற்காக, அவர் ஓர் எதிர்ப்பியக்கத்தையும் உண்டாக்கிஞர்; சிவாஜியின் நினைவு ஆண்டு விழாக்களைக் கொண்டாடிஞர்; கேசரி (Kesari) என்ற ஒரு செய்தித்தாளையும் ஆரம்பித்தார். திலகருடைய பேச்சுகளும் கட்டுரைகளும், தீவிரக் கொள்கையுடைய பிரிவினர் (Extremists) வளர்வதற்குக் காரணமாய் இருந்தன. இப் பிரிவு மிக விரைவிலேயே காங்கிரசின் ஆற்றல் வாய்ந்த ஒரு பகுதியாய் வரலாயிற்று. தேசிய உணர்ச்சி வசப்பட்ட சில இளைஞர்கள் இரகசியக் குழுக்களை அமைத்து, ஐரோப்பிய அதிகாரிகளைக் கொல்லுதல், பொருள்களைக் கொள்ளை யிட்டு நிதிசேர்த்தல் போன்ற வன்மையான செயல்களில் ஈடுபட்டனர். 19ஆம் நூற்ருண்டில் இத்தகைய குழுக்கள் ருஷ்யா, அயர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் இயங்கியதால், சில இந்திய இளைஞர்களும் அம் முறைகளைக் கடைப்பிடித்தனர் எனலாம். ஆனல், பெரும்பான்மையான காங்கிரசு உறுப்பி னர்கள் முதலிலிருந்தே இவ் வன்மையான முறைகளை ஆதரிக்காத துடன், வெளிப்படையாகவே அம் முறைகளைக் கண்டிக்கவும் செய்தனர். தீவிரவாதிகளின் கை சிறிது காலம் ஓங்கும் நிலை இவர் ஆட்சியில் ஏற்பட்டது. இவ்வித அரசியல் சூழ்நிலையில் தான் கர்சன் பிரபு இவருக்குப்பின் அரசப் பிரதிநிதியாகப் பதவியை ஏற்ருர்.

19. கர்சன் பிரபு

(Lord Curzon, 1899—1905)

தலைமை ஆளுநர் பதவி வகித்தவர்களிலேயே டல்ஹௌசியைத் தவிர, மற்றவர்களைக் காட்டிலும் கர்சன் பிரபுதாம் வயதில் மிகவும் இளையவர்; பாராளுமன்ற நடவடிக்கைகளில் நன்கு பழகியவர். கன்சர்வேடிவ் (Conservative) கட்சியைச் சார்ந்த இவர் தம் 27ஆம் வயதிலேயே (1886) பாராளுமன்ற உறுப்பினரானவர்; அரசப் பிரதிநிதி ஆவதற்கு முன்பு இந்திய அமைச்சரின் உபசெயலாளராகப் (Under Secretary of State for India) பணியாற்றியவர். பதவி வகிப்பதற்கு முன்பே, நான்குமுறை இந்தியாவிற்கு வந்துள்ள இவர், கீழைநாட்டு அரசியல் நிலையை நன்கு தெரிந்தவர். ஆசியப் பிரச்சினைகளைக் குறித்து மூன்று புத்தகங்களும் எழுதியுள்ளார். தாம் பதவியிலிருந்த ஆறு ஆண்டுகளையும் ஆக்கப் பணியில் செலவிட்டார். அவருடைய கடும் உழைப்பு, அவர்கீழ்ப் பணிபுரிந்தவர்களையும் கடுமையாக உழைக்கத் தூண்டியது.

ஆனால், தற்பெருமை மிக்கவர். 'ஆங்கிலேயர் இந்தியாவை ஆளப் பிறந்தவர்கள்; இந்தியர்கள் அவர்கள் சொற்படி நடத்தல் அவசியம்' என்ற மனப்பான்மை கொண்டவர்; ஆங்கிலேயர்கள் உயர்ந்தவர்கள் என்ற இறுமாப்பு உள்ளமும் கொண்டவர். இதை அவர் செயலில் மட்டும் பின்பற்றவில்லை; வார்த்தையிலும் அடிக்கடி வெளிப்படுத்தினர். இதனல் அவர் இந்தியரின் உள்ளத்தில் நீங்கா வெறுப்பையும் குமுறலையும் உண்டாக்கினர். அவர் செய்த ஆக்கப்பணியினையும் அகம்பாவத்துடன் செய்ததால், இந்தியரால் அவற்றை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இந்தியத் தேசிய உணர்ச்சியை உதாசீனம் செய்ததுடன், அவமதித்தும் அடிக்கடி பேசினர். இதனல் காங்கிரசின் ஆதர

வையும் அன்பையும் இழந்தார். மிதவாதிகள்கூட அவர் செய்த பணியைச் சந்தேகக் கண்ணுடன் நோக்கினர். இதனால் சுதந்திர உணர்ச்சி அவர் காலத்தில் கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

அயல்நாட்டுக் கொள்கை—வடமேற்கு எல்லை: இவர் பதவி யேற்ற உடனே, வடமேற்கு எல்லைப் பிரச்சினையை உடனடியாகக் கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவருக்கு முன், இரண்டாம் எல்கின் பிரபு காலத்தில் சித்ரால் (Chitral) பகுதியில் கலகம் ஏற்பட்டபோது அதை அடக்குவதற்கு ஓர் ஆங்கிலப் படை அனுப்பிவைக்கப்பட்டது. அப் படையைத் திருப்பி அழைத்துக்கொள்ள கர்சன் பிரபு விரும்பவில்லை. அதே சமயத்தில் அம் மலைச் சாதியினரையும் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, கைபர் கணவாய், குர்ரம் பள்ளத் தாக்கு, வாஜிரிஸ்தான் (Waziristan) போன்ற இடங்களிலிருந்த ஆங்கிலப் படைகளைப் பின்வாங்கச் செய்தார். ஆனால், சக்தாரா (Chakdara), மலகண்டு (Malakand), தர்காய் (Dargai) ஆகிய இடங்களிலிருந்த படையினரை அங்கேயே இருக்க வைத்ததுடன், அவ் விடங்களை மேலும் பலப்படுத்தினர். முக்கிய இடங்களான ஜாம்ரட் (Jamrud), தல் (Thal) முதலிய இடங்களையும் இருப்புப் பாதைகள் மூலம் இணைத்தார். கர்சன் பிரபுவிற்குமுன் வடமேற்கு எல்லை மாவட்டங்கள் பஞ்சாபிலிருந்த ஒரு துணை ஆளுநரின் (Lieutenant Governor) ஆட்சியின்கீழ் இருந்தது. அவர் ஆதிக்கத்தை நீக்கி 1901ஆம் ஆண்டு வடமேற்கு எல்லைப்புற மாநிலம் என்ற தனி மாநிலம் ஏற்படுத்தினர். அப் புதிய மாநிலத்திற்கு 'ஆக்ரா-அயோத்தியின் ஐக்கிய மாநிலங்கள்' (United Provinces of Agra and Oudhi) என்ற பெயரையும் வழங்கினர். அதைத் தனி மாநிலமாக்க வேண்டும் என்று ஏற்கெனவே லிட்டன் பிரபு ஆலோசனை சொன்னார். ஆனால், அதை ஆங்கில அரசு ஏற்கவில்லை. அந்தக் கருத்தைக் கர்சன் பிரபு செயல்படுத்தினர். ஒரு தலைமை ஆணையாளரின் (Chief Commissioner) ஆட்சியின்கீழ் அப் புதிய மாநிலத்தைப் பெஷாவரைத் தலைநகராகக் கொண்டு இயங்கும்படி செய்தார். இதனால் அம் மாநிலத்தில் பல முன்னேற்றங்கள் விரிவாகச் செயல்பட முடிந்தன. இதனால் எல்லைப் பிரச்சினைகள் முழுதும் தீர்க்கப்படவில்லை. என்றாலும் இராணுவச் செலவு கணிசமான அளவில் குறைக்கப்பட்டது உண்மைதான். 'கர்சன் எல்லைப் புறச் சிக்கலை நிரந்தரமாக ஒழித்துக்கட்டவில்லை. அதன் பல சிக்கல்கள் அவ்வாறே இருந்தன. ஆனால், அவர் புகுத்திய புதிய கொள்கையால் சிக்கல்கள் தீர வழி ஏற்பட்டது' என்று தாம்சனும் காரட்டும் (Thompson and Garret) கூறுகின்றனர். ஆனால்,

மலைச் சாதியினரிடையே தீவிரமாகப் பரவியிருந்த அமைதியற்ற உணர்ச்சியை அவர் திட்டங்களால் தடுக்க இயலவில்லை. முதலாம் உலகப் போரினால் (1914—1918) அவர் செய்திருந்த ஏற்பாடுகள் சிதறுண்டு போயின. 1919ஆம் ஆண்டிற்குப்பின் ஆங்கில அரசாங்கம் கடுமையான கொள்கையைப் பின்பற்றலாயிற்று. அதன்படி முக்கிய இடங்களில் காவல் நிலையங்கள் வைத்திருத்தல், நாட்டின் பல பாகங்களையும் இணைப்பதற்குப் பாதைகள் அமைத்தல், மலைவாசிகளிடம் நாகரிகத்தைப் பரப்புவதற்கு முயற்சி செய்தல் போன்றவைகள் செய்யப்பட்டன. இருந்தும் தொடர்ந்து கலகங்கள் நடந்துகொண்டே இருந்தன. 1925ஆம் ஆண்டில் ஏற்பட்ட மசூதுகளின் கலகம், 1930—31ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வாஜிரிகள், மகமண்டுகள், ஆப்ரிதிகள் ஆகியவர்களின் மிகப் பெரிய புரட்சி, 1933ஆம் ஆண்டில் உண்டான முகமண்டுகளின் கலகம், 1936-37ஆம் ஆண்டில் உண்டான தோரிகேல்களின் புரட்சி போன்ற கலகங்களால் இந்திய அரசாங்கம் மிகப்பெரிய இராணுவ ஏற்பாடுகளை அண்மைக் காலத்தில் அப் பகுதியில் செய்ய நேரிட்டது.

ஆஃப்கானிஸ்தான் : ஆங்கிலேயருடன் நட்புறவுடன் பழகிய அப்துல் ரகிமான் என்கிற அமீர் 1901ஆம் ஆண்டு இறந்தார். அவருக்கு வாரிசான ஹபிபுல்லாவோடு பழைய நட்புறவுடன் பழகக் கர்சன் முயற்சி செய்தார். ஆனால், கர்சன் பிரபு வட மேற்கு எல்லை மாநிலத்தில் செய்த ஏற்பாடுகளை விரும்பாத ஹபிபுல்லா ஆங்கிலேயருடன் எவ்விதத் தொடர்பும் கொள்ள விரும்பவில்லை. தம்மை மேன்மைதங்கிய அரசர் என்றும் அழைத்துக்கொண்டார். ஆங்கிலேயரின் உதவித்தொகையையும் ஏற்க மறுத்தார். இதற்கிடையில் கர்சன் பிரபு விடுமுறையில் 1904-ல் இங்கிலாந்து செல்ல வேண்டியதாயிற்று. தாற்காலிக அரசப் பிரதிநிதிப் பதவி வகித்த ஆம்ப்தில்பிரபு (Lord Ampthil) 1904ஆம் ஆண்டு சர் லூயி டேன் (Sir Louis Dane) என்பவரின் தலைமையின்கீழ் ஒரு தூதுக்குழுவைக் காபூலுக்கு அனுப்பினார். சர் லூயி டேன் 1905ஆம் ஆண்டு ஹபிபுல்லாவோடு ஓர் உடன்படிக்கையினைச் செய்துகொண்டார். அதன்படி காலஞ் சென்ற அப்துல் ரகிமானுக்கும், ஆங்கில அரசாங்கத்திற்கும் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த எல்லா ஏற்பாடுகளும் புது அமீர் ஹபிபுல்லாவுடன் புதுப்பிக்கப்பட்டன. ஹபிபுல்லா விரும்பிய 'மேன்மை தங்கிய அரசர்' (His Majesty) என்ற பட்டத்தை அவர் வைத்துக்கொள்ளவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

1907ஆம் ஆண்டு ஆங்கில-ருஷ்ய உடன்படிக்கைப்படி, இங்கிலாந்திற்கும், ருஷ்யாவிற்கும் ஆஃப்கானிஸ்தானத்தில் சரி சமமான வாணிகச் சலுகைகள் கொடுக்கப்பட்டன. இதை ஹபிபுல்லா ஆட்சேபித்தார். ஆனால், அதை ருஷ்யா-இங்கிலாந்து இரு நாடுகளும் பொருட்படுத்தவில்லை. இதனால் ஹபிபுல்லா மறுபடியும் ஆங்கிலேயர்களிடமிருந்து ஒதுங்கியே நடந்தார். ஆனால், முதல் உலகப் போரின்போது ஹபிபுல்லாவை ஆங்கிலேயருக்கு எதிராகத் தூண்டியபோதும், உறுதியான நடுவுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றினார். இக் கொள்கை ஆங்கிலேயருக்குப் பெரிதும் உதவியாய் இருந்தது.

பாரசீகக் கொள்கை: பாரசீக நாட்டின் மீதும் கர்சனின் பார்வை சென்றது. ருஷ்யாவின் வாணிக, அரசியல் ஆதிக்கத்தின்கீழ் தெற்குப் பாரசீகம் வருவதை அவர் விரும்பவில்லை. பாரசீக வளைகுடாவில் மற்ற ஐரோப்பியரின் ஆதிக்கத்தை அமைப்பதையும் அவர் விரும்பவில்லை. இதனால் 1903ஆம் ஆண்டு தாமே பாரசீக வளை குடாவிற்கு வருகை தந்து, அங்கு ஆங்கில ஆதிக்கத்தை நிலைநிறுத்தினார். ஆனால், இப் பிரச்சினைக்கு அவருக்குப் பின்வந்த மின்டோ பிரபு காலத்தில்தான், ஒரு முடிவு காணப்பட்டது.

திபெத்: கர்சன், திபெத்தின் அரசியலையும் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர முயற்சித்தார். அப்பொழுதிருந்த தலைலாமா ருஷ்யரின் ஆதரவாளராக இருந்ததுடன் திபெத்திய தூதுக் குழுக்களையும் 1898, 1900, 1901ஆம் ஆண்டுகளில் ருஷ்யாவிற்கும் அனுப்பி வைத்தார். இக் குழுக்கள் ருஷ்யாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களின்படி, திபெத் ருஷ்யாவின் பாதுகாப்பில் இருப்பதாக ஒரு வதந்தி பரவலாயிற்று. ருஷ்யா அதிகாரப் பூர்வமாக அப்படி ஒன்றும் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்று மறுப்பு விடுத்தது. செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த ஆங்கிலத் தூதரிடம், அக் குழு சமய சம்பந்தமான ஒப்பந்தம்தான் செய்து கொண்டது என்றும் எடுத்துக் கூறப்பட்டது. இதனாலெல்லாம் இங்கிலாந்தின் சந்தேகம் தீரவில்லை. இந் நிலையைத் தீர்ப்பதற்காக 1903ஆம் ஆண்டு ஒரு தூதுக் குழுவைக் கர்சன் திபெத்திற்கு அனுப்பி வைத்தார். கர்னல் யங் ஹஸ்பெண்டு (Young Husband) தலைமையின்கீழ் இத் தூதுக்குழு திபெத்தியத் தலைநகரான லாஸாவை (Lasha) 1904ஆம் ஆண்டு அடைந்தது. தலைலாமாவை ஓர் ஒப்பந்தத்திற்கும் யங் ஹஸ்பெண்ட் உடன்படச்

செய்தார். அதன்படி, கியான்ட்சே (Giyantse), கார்டோக் (Gartok), யாதுங் (Yatung) என்னும் இடங்களில் இங்கிலாந்து வாணிக நிலையங்களை ஏற்படுத்த அனுமதிப்பதற்கும், இருபத்தைந்து இலட்ச ரூபாய் இழப்பீடாகக் கொடுப்பதற்கும், அதைக் கொடுக்கும் வரையில் தாற்காலிகமாகச் சும்பிப் பள்ளத்தாக்கை (Chumhi Valley) ஆங்கிலேயர்கள் மூன்று ஆண்டுகளுக்கு வைத்துக்கொள்வதற்கும், திபெத் ஒப்புக்கொண்டது. இதை அடுத்து 1906ஆம் ஆண்டு இங்கிலாந்தும், சீனாவும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி இங்கிலாந்து, திபெத்தை இணைத்துக்கொள்வதில்லை என்றும் உறுதிமொழி அளித்தது. சீனாவும் எந்த அயல்நாட்டு வல்லரசையும் திபெத்தின் உள்நாட்டு ஆட்சியில் தலையிட அனுமதிப்பதில்லை என்றும் உறுதி அளித்தது. யங் ஹஸ்பெண்டின் (Young Husband) தூதினால், திபெத்தில் எவ்வித முக்கிய அரசியல் விளைவுகளும் ஏற்படவில்லை. மேலும், 1907ஆம் ஆண்டு ருஷ்யாவும், இங்கிலாந்தும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி சீனா மூலமாகத் திபெத்துடன் அரசியல் உறவுகொள்ள இங்கிலாந்தும், ருஷ்யாவும் ஒப்புக்கொண்டன. இதனால் திபெத்தின் மேல் சீனாவின் மேலாட்சி உரிமை உறுதிப்படுத்தப்பட்டது. அதைப் பயன்படுத்திக்கொண்டு திபெத்தைச் சீனா தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரச் சீனப்படை ஒன்றைத் திபெத்திற்கு அனுப்பியது. இதனால் தலைலாமா, இந்திய அரசாங்கத்திடம் தஞ்சம் புகுந்தார். சீனாவின் இச்செய்கையை இந்தியா கடுமையாக எதிர்த்ததுடன், திபெத்திற்கும் ஆதரவு அளிக்க முன்வந்தது. உள்நாட்டுப் புரட்சி காரணமாக சீனாவிலும் இந்த நேரத்தில் குழப்பம் ஏற்பட்டது. இதனால் சீனாவின் மேலாட்சியை எதிர்த்துத் திபெத்தியர்களால் வெற்றியடைய முடிந்தது. 1918ஆம் ஆண்டு திபெத் சுதந்திர நாடாயிற்று. அதிலிருந்து திபெத்தும், இங்கிலாந்தும் நட்புறவைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டன. இங்கிலாந்து நல்லெண்ணக் குழு 1936-37ஆம் ஆண்டுகளில் திபெத்திற்குச் சென்றது. இக் குழு திபெத்துடன் இருந்த நட்புறவை மேலும் வலுப்படுத்தியது. நேப்பாளம், சிக்கிம், பூடான் ஆகிய நாடுகளுடனும் நல்லுறவு நீடித்தது. சீனாவின் ஆக்கிரமிப்பு ஏற்படுமானால், அவைகளை இந்தியா காக்கும் என்றும் 1930ஆம் ஆண்டு உறுதி அளிக்கப்பட்டது.

உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்

பெரியதொரு பஞ்சம்: கர்சன் பிரபு உள்நாட்டு ஆட்சி முறையிலும் பல மாற்றங்களைச் செய்தார். இவர் காலத்தில்

1900-ல் பெரியதொரு பஞ்சம் ஏற்பட்டது. பஞ்ச நிவாரண ஆலோசனைக்காகச் சர் அந்தோனி மெக்டானல் (Sir Antony Macdonnell) தலைமையின்கீழ் ஒரு குழு அமைத்தார். பல சிபாரிசுகளை அக் குழு செய்தது. அவற்றுள் முக்கியமானவை:

(1) பஞ்ச நிவாரண வேலைகளில் முக்கியமாய் இருந்த பெரிய மராமத்து வேலைகளுக்குப் பதிலாக, உள்ளூர் வேலைகளுக்குக் குறிப்பிட்ட சில சமயங்களில் அதிக முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.

(2) பஞ்ச நிவாரண உதவியை அளிக்கும்போது, அதிகாரிகள் அல்லாதவர்களின் உதவியை அதிகமாகப் பயன் படுத்தல் வேண்டும்.

(3) விவசாய வங்கிகளை ஏற்படுத்தி, தானிய வித்துகளையும், மாடுகளையும் வாங்குவதற்குக் கொடுக்கப்படும் முன்பணத்தைத் தாமதம் இன்றிக் கொடுக்க வழி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் விவசாயக் கடன் சங்கங்கள் நிறுவுதல் வேண்டும்.

(4) நீர்ப்பாசன வசதிகளை அதிக அளவில் விரிவுபடுத்தல் வேண்டும்.

(5) முன்னேற்ற முறைகளை விவசாயத்தில் புகுத்தவேண்டும்.

(6) அதிக அளவில் பஞ்ச நிவாரணம் அளிக்கப்படும் பிரதேசங்களில் பஞ்ச நிவாரண ஆணையாளர் (Famine Commissioner) ஒருவரை நியமிக்க வேண்டும் என்று அக் குழு செய்த பல சிபார்சுகளை ஏற்றுக் கர்சன் பிரபு செயல்படுத்தினர்.

வேளாண்மைத்துறைச் சீர்திருத்தங்கள் : கர்சன் பிரபு விவசாயம் பெருகவும் வழிசெய்தார். இப்பொழுதுள்ள வேளாண்மைத் துறை கர்சன் பிரபுவால் ஏற்படுத்தப்பட்டது. உயர்ந்த விவசாயப் பயிற்சியைத் தருவதற்காக, வங்காளத்தில் பூசா விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை (Agricultural Research Institute at Pusa) 1903-ல் ஆரம்பித்தார். நீர்ப்பாசன வசதியையும் செய்தார். 1901-ல் ஒரு நீர்ப்பாசனக் குழுவினை நியமித்தார். அதன் சிபாரிசுப்படி 1903ஆம் ஆண்டு 6½ மில்லியன் ஏக்கராவைப் பாசன வசதியுள்ளதாகச் செய்யக்கூடிய இருபது ஆண்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தினர்.

இரயில்வேத் திட்டம்: இரயில்வேத் துறையிலும் சில மாற்றங்களைச் செய்தார். இவருக்கு முன் இரண்டு விதமான இரயில்வேத் திட்டங்கள் இருந்தன. ஒன்று அரசாங்கத்தின் பொதுப்பணித் துறையின் (Public Works Department) நேரடியான ஆதிக்கத்தின்கீழ் இயங்கியது. மற்றொன்று தனியார் துறையில் இயங்கியது. சர் தாமஸ் ராபர்ட்சன் (Sir Thomas Robertson) தலைமையில் ஒரு குழு அமைத்து, அக் குழுவின் ஆலோசனைப்படி, இரயில்வேத் துறையைப் பொதுப்பணித் துறையிலிருந்து விலக்கி, தனியார் துறையில் சேர்த்து மூவர் அடங்கிய ஒரு மேற்பார்வைக் குழுவின்கீழ் இயங்கும்படி செய்தார். புதிய இருப்புப் பாதைகளையும் போட வழிவகுத்தார். இதனுடன் வாணிகத்தையும் கைத்தொழிலையும் கவனிக்க ஒரு புதிய துறையையும் கர்சன் பிரபு ஏற்படுத்தினர்.

வருமான வரி: இவர் காலத்தில் உப்பு வரி முன்னிருந்த அளவில் பாதியாகக் குறைக்கப்பட்டது. அவர் ஆட்சிக்கு வருவதற்குமுன் ரூபாய் 500-க்கு மேற்பட்ட வருமானத்திற்கு வருமான வரி விதிக்கப்பட்டிருந்தது. இவர் ஆட்சிக் காலத்தில் இருந்து ரூபாய் 1000-க்கு மேற்பட்ட வருமானத்திற்கு வரி விதிக்கப்பட்டது. ஆங்கிலப் பவுன் (gold) இந்தியாவில் செல்லுபடியாகும் என்றும், அதன் மதிப்பு ரூபாய் 15 என்றும் இவர் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது.

காவற்படைச் சீர்திருத்தங்கள்: காவற்படையிலுள்ள குறைகளைக் களைந்தெறிவதற்கான வழிகளைச் சொல்ல ஃபிரேஸர் (Fraser) தலைமையில் ஒரு குழு அமைத்தார். அக் குழு காவற்படையின் நிறுவனத்தில் பல பிரிவுகளைப் பற்றி விரிவான ஆலோசனைகள் செய்தது. அதன் விளைவாக ஒவ்வொரு மாநிலத்திலும் குற்றவியல் புலன் விசாரணைத் துறை (Criminal Investigation Department) அமைக்கப்பட்டது. அதனுடன் மாநிலக் காவற்படைகள் ஒன்றுக்கொன்று இணைந்து பணிபுரியவும், எல்லா மாநிலங்களிலிருந்த குற்றவியல் புலன் விசாரணைத் துறைகளிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கவும், இந்திய அரசாங்கத்தின் உள்நாட்டுத் துறையின்கீழ் ஒரு மத்தியக் குற்றவியல் தகவல் சேகரிக்கும் மனையினையும் (Central Intelligence Bureau) ஏற்படுத்தினர். காவற்படையினரின் ஊதியம் மிகவும் குறைவாய் இருந்தது. ஆகவே, அவர்கள் இலஞ்சம் வாங்கி மக்களைத் துன்புறுத்திவந்தனர். இக் குறையை நீக்குமுகத்தான் காவல் படையினரின் குறைந்த ஊதியம்

மாதத்திற்கு ரூபாய் எட்டுக்குமேல் இருக்க வேண்டுமென உத்தரவிட்டார். அவர்களின் ஊதியம் இதனால் உயர்த்தப் பட்டது. காவற்படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சிக் கூடங்களை நிறுவினர். உயர்ந்த பதவிகளுக்கு நேரடி யாக அமர்த்தும் முறையையும் செயல்படுத்தினர். காவற் படை யினர் மக்களின் தொல்லைகளை நீக்கும் பணியினர் என்ற கருத்தை ஏற்படுத்தினர்.

இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் (1904)

மற்றத் துறைகளைப் போலவே, கல்வித் துறையிலும் கர்சன் பிரபு பல மாற்றங்களைச் செய்தார். 1901-ல் சிம்லாவில் கல்வித் துறை வல்லுநர்கள் மாநாடு ஒன்றைக் கூட்டினர். பிறகு சர் தாமஸ் ராலி (Sir Thomas Raleigh) என்பவரின் தலைமையின்கீழ் ஒரு குழு அமைத்தார். அக் குழுவின் கருத்துகளை 1904ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பல்கலைக்கழகங்களின் சட்டத்தின் மூலம் செயற்படுத்தினர். இச் சட்டம் பல்கலைக்கழகச் செனேட்டர்களின் (Senate)எண்ணிக்கையையும், சிண்டிகேட்டின் (Syndicate) எண் ணிக்கையையும் வரையறைசெய்தது. செனேட்டில் நியமிக்கப்பட்ட (nominated) அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டது. கல்வி நிறுவனங்களின்மேல் அரசாங்கத்திற்கு இருந்த கட்டுப்பாட்டு உரிமையை மேலும் அதிகப்படுத்தியது. மாணவர் களுக்குக் கல்வி புகட்டல், பேராசிரியர்களையும் விரிவுரையாளர் களையும் நியமித்தல், பரிசோதனைச் சாலைகள், அரும்பொருட் காட்சி சாலை (Museum) அமைத்தல் போன்ற பல்கலைக்கழகத்தின் மேன்மைமிக்க பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. பல்கலைக்கழகங்கள் ஆண்டுதோறும் தேர்வுகள் வைத்து, அவற்றுள் தேறியவர்களுக்குப் பட்டங்களை அளிக்க ஏற்பாடும் செய்யப்பட்டது. ஆனால், இச் சட்டம் பல்கலைக்கழகத்தின் சுதந் திரத்தை மிகவும் கட்டுப்படுத்தியதால், இதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. கோகலே போன்ற சிறப்பு வாய்ந்த இந்தியத் தலைவர்கள் இச் சட்டத்தை மிகக் கடுமையாக எதிர்த்தனர்.

தொல்பொருள் பாதுகாப்புச் சட்டம்: தொல்பொருள் பாது காப்புச் சட்டத்தை 1904–ல் நிறைவேற்றினர். இதனால் பழங்கால வரலாற்றைக் குறிக்கும் சான்றுகளையும், கட்டடங்களையும், சிற்பங்களையும் பாதுகாக்கத் திட்டம் வகுத்தார். இச் சின்னங்களைப் பாதுகாக்கத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை ஒன்றையும் ஏற்படுத்தினர். இதுவரை இவ் வாராய்ச்சி மேல்

நாட்டு ஆராய்ச்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நம் நாட்டு வரலாற்று ஆராய்ச்சி நம்மிடம் இருத்தல் வேண்டுமென்று இந்திய வரலாற்று மாணவர்கள் உணர்ந்தனர். கர்சன் பிரபு காலத்தில் இத் துறையில் இந்தியர்கள் இடம்பெற்றனர்.

வங்காளப் பிரிவினை (1905)

1905ஆம் ஆண்டில் வங்காள மாநிலத்தை இரண்டாகப் பிரித்தார். அம் மாநிலம் மிகப் பெரியதாக இருந்ததால், நிருவாக வசதிக்காக அதை இரண்டாக்கினார். கிழக்கு வங்காளத்தையும் அஸ்ஸாமையும் இணைத்து ஒரு மாநிலமாகவும், மேற்கு வங்காளம், பீகார், ஒரிசாப் பகுதிகளை இணைத்து ஒரு மாநிலமாகவும் செய்தார். இப் பிரிவினை திறம்பட அப் பகுதிகளை நிர்வகிக்கும் பொருட்டே செய்தாலும், செய்த நேரமும், செய்த விதமும் மக்களின் உள்ளங்களில் சந்தேகத்தை உண்டாக்கின. தேசிய உணர்ச்சியை வங்காளத்தில் அழிக்க இத் திட்டம் கொண்டுவரப்பட்டது என மக்கள் நினைத்தனர். இதற்கு எதிராக இந்தியா முழுமையும் கிளர்ச்சி செய்யப்பட்டது.

இக் கிளர்ச்சி ‘அந்நியப் பொருள் எதிர்ப்பு’ என்ற சுதேசி இயக்கக் கிளர்ச்சியுடன் (Swadeshi movement) கலந்து வலுப் பெற்றது. வ. உ. சிதம்பரம் பிள்ளை தேசியப் பற்றில் ஊறியவர்; ஆங்கிலேயக் கப்பல் போக்குவரத்து வாணிகத்தை எதிர்த்துச் சுதேசிக் கப்பல் போக்குவரத்து வாணிகம் ஒன்றைத் தூத்துக்குடியில் தொடங்கினார். ஆனால், ஆட்சியாளரின் ஆதரவு இன்மையாலும், பொருளாதார நெருக்கடியாலும் அம் முயற்சி படு தோல்வி அடைந்தது. இரண்டாம் ஹார்டிஞ்ச் அரசப் பிரதிநிதிப் பதவிக்காலத்தில் 1911ஆம் ஆண்டு, கர்சன் பிரபுவின் வங்காளப் பிரிவினை கைவிடப்பட்டு, வங்காளம் மீண்டும் இணைக்கப்பட்டது.

கிச்சினருடன் தகராறு : படை நிர்வாகத்தில் சில சீர்திருத்தங்களையும் கர்சன் செய்தார். இதனால் படைத் தலைவரான கிச்சினர் பிரபுவுக்கும் (Lord Kitchener) இவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. படைத்தலைவர் கிச்சினர் பிரபு, அரசப் பிரதிநிதியின் ஆலோசனைக் குழுவிலிருந்த இராணுவ உறுப்பினரின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென்றார். படையின் எல்லா நிருவாகத்திற்கும் படைத்தலைவரே பொறுப் பேற்க வேண்டுமென்றும், அரசப் பிரதிநிதியின் ஆலோசனைக் குழுவிலுள்ள இராணுவ உறுப்பினர் தலையிடக் கூடாதென்றும் வாதாடினார். மேலும், படைத்தலைவரே அரசப் பிரதிநிதியின்

ஆலோசனைக் குழுவில் இராணுவ உறுப்பினராகவும் இருக்க வேண்டும் என்பதும் கிச்சினர் கருத்து. இதனைக் கர்சன் பிரபு எதிர்த்தார். படைத்துறையின் எல்லாப் பொறுப்புகளையும் படைத் தலைவரிடமே விட்டுவிட்டால், பல கேடுகள் விளையும் எனக் கர்சன் கருத்துத் தெரிவித்தார். இவ் விரண்டு கருத்துகளும் இங்கிலாந்து இந்திய அமைச்சரின் முடிவுக்கு அனுப்பப்பட்டன. அரசப் பிரதிநிதியின் ஆலோசனைக் குழுவில் படை நிருவாகத்தை மேற்பார்வையிடும் அதிகாரங் கொண்ட ஓர் இராணுவ உறுப்பினர்கீழ் கிச்சினர் பணிபுரிய வேண்டும் என்ற கருத்தைக் கர்சன் பிரபு வலியுறுத்தினார். ஆனால், இந்திய அமைச்சர், கிச்சினரின் கூற்றை ஆமோதித்தார். இதனால் கர்சன் பிரபு 1905-ல் அரசப் பிரதிநிதிப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இரண்டாம் மின்டோ பிரபு அவருக்குப்பின் அரசப் பிரதிநிதி ஆனார்.

மதிப்பீடு: கர்சன் பிரபுவின் சாதனைகள் குறித்துக் கருத்து வேறுபாடுகள் ஏராளம் உள்ளன. இந்தியர்களை அவர் மதித்து நடக்கவில்லை. ஆட்சித்துறையில் இந்தியர்களுக்கு ஏதும் சலுகைகள் வழங்கினால், இறைவனின் ஆணையைத் தாம் மீறி நடப்பதற்குச் சமம் என்று கருதினார். கடமை உணர்வு மிக்கவராகவே கர்சன் விளங்கினார் என்பதோடு, மிகுந்த ஆர்வமும், மன உறுதியும், ஆற்றலும் மிக்கவர் என்றும் கருத வேண்டியுள்ளது. மான்டேகு என்பவர் கர்சன் பிரபுவை ஒரு காரோட்டிக்கு ஒப்பிடுகின்றார். தன்னுடைய காரைத் துடைத்து அதனைச் செம்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுச் செல்லுமிடம் தெரியாமல் வாழ்ந்த காரோட்டியைப் போன்றவர் அவர் என்று கூறுகின்றார்.

20. மின்டோ பிரபுவின் காலம் முதல் இன்று வரை

இரண்டாம் மின்டோ பிரபு (1905—1910)

இவர் இந்தியாவில் அரசப் பிரதிநிதியாகப் பணியாற்றிய முதலாம் மின்டோ பிரபுவின் (1807—1813) பெயரன் ஆவார். இந்தியாவில் அரசப் பிரதிநிதிப் பதவி ஏற்பதற்குமுன், இரண்டாம் மின்டோ பிரபு, கனடாவின் தலைமை ஆளுநராகப் பதவி வகித்தவர். இந்தியாவில் நடைபெற்ற இரண்டாம் ஆஃப் கானியப் போரில் பங்கேற்றுள்ளார். ஆகவே, இந்திய ஆட்சித் துறையில் ஏற்கெனவே அனுபவம் உள்ளவர். வங்காளப் பிரிவினை, தேசியக் கிளர்ச்சி, ருஷ்யாவின் ஆதிக்க வளர்ச்சியால் அச்சம் போன்ற பல சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டிய நிலை இவருக்கு ஏற்பட்டது.

வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சி : வங்காளப் பிரிவினையை யொட்டி எழுந்த கிளர்ச்சிகளை ஒடுக்கக் கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளைக் கையாண்டார். 1908, 1910ஆகிய ஆண்டுகளில் கடுமையான சட்டங்களை இயற்றிக் கிளர்ச்சிகளை ஒடுக்க நினைத்தார். 1908-ல் சட்ட எதிர்ப்புக் குற்றத்திற்காகப் பால கங்காதர திலகர் ஆறு ஆண்டுகள் தண்டனை பெற்றுப் பர்மாவிலுள்ள மாண்டலே நகரில் கைதியாக வைக்கப்பட்டார். 1910-ல் நிறைவேற்றிய இந்தியப் பத்திரிகைகளின் சட்டத்தின்படி, கிளர்ச்சியை ஆதரித்த பத்திரிகைகளின்மேல் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கடுந் தண்டனைகள் விதிக்கப்பட்டன. கடுந் தண்டனைகள் கிளர்ச்சியை அடக்குவதற்குப் பதிலாக, மேலும் அதை வலுப்படுத்தின. அந்நியப் பொருள் புறக்கணித்தல், அரசப் பிரதிநிதியையும் அவர் குடும்பத்தினரையும்

கூடக் கொலை செய்ய முயற்சித்தல் போன்றவற்றில் சில தீவிர வாதிகள் ஈடுபட்டனர். இக் கிளர்ச்சிக்கு மூலகாரணமான வங்காளப் பிரிவினையைக் கைவிடாமல், ஆங்கில அரசாங்கம் கலகத்தை ஒடுக்கவே முயன்றது.

ஆங்கிலேய-ருஷ்ய உறவு : 1907-ல் ஆங்கிலேய-ருஷ்ய மாநாடு நடைபெற்றது. இதன் விளைவால், இரண்டு நாடுகளும் ஒருவித நல்லுறவு கொண்டன. இதனால் இரண்டாம் மின்டோ காலத்தில் இங்கிலாந்தும் ருஷ்யாவும் ஆஃப்கானிஸ்தானம், பாரசீகம், திபெத் ஆகிய நாடுகளில் தங்கள் நடவடிக்கைகளை வரையறுத்துக் கொண்டன.

மார்லி–மின்டோ சீர்திருத்தம் : இரண்டாம் மின்டோ பிரபுவின் ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சி 'மார்லி-மின்டோ சீர் திருத்தங்கள் அல்லது 1909ஆம் ஆண்டு இந்தியச் சட்டம்' என்ற இந்தியச் சட்டம், பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டதேயாகும். இதனைக் குறித்து இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியினைக் குறிக்கும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் மின்டோ பிரபுவிற்குப்பின் 1910ஆம் ஆண்டு இரண்டாம் ஹார்டிஞ்ச் பிரபு அரசப் பிரதிநிதியாக அமர்த்தப் பட்டார்.

இரண்டாம் ஹார்டிஞ்ச் பிரபு (1910—1916)

இரண்டாம் ஹார்டிஞ்ச் பிரபு 1910ஆம் ஆண்டில் அரசப் பிரதிநிதி ஆனார். இவர் முதலாம் ஹார்டிஞ்ச் பிரபுவின் பெயரனு வார். 1911ஆம் ஆண்டு இங்கிலாந்துப் பேரரசராய் ஐந்தாம் ஜார்ஜ் அரியணை ஏறினார்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வருகை : அவர் இதுவரையில் வரலாற்றில் நடக்காத அதிசயம் ஒன்றைச் செய்தார். இது வரையில் எந்த ஆங்கில மன்னரும் இந்தியாவிற்கு வந்ததில்லை. இவர் இந்தியாவிற்கு வருகை தந்தார். அவ் வருகையின்போது இரண்டு முக்கிய மாற்றங்களைச் செய்தார். கல்கத்தா இது வரையில் அரசப் பிரதிநிதியின் இருப்பிடமாயும், இந்தியாவின் தலைநகரமாயும் இருந்தது. கல்கத்தாவிற்குப் பதிலாக டில்லியை அரசப் பிரதிநிதியின் இருப்பிடமாகவும், இந்தியாவின் தலைநகர மாகவும் மாற்றினார். 1912-ல் ஹார்டிஞ்ச் பிரபு ஒரு யானையின் மீதமர்ந்து டில்லியினுள் நுழைகையில் தீவிரவாதிகளில் ஒரு

வரால் அவர்மீது குண்டு வீசப்பட்டது. அவர் சிறு காயங்களுடன் தப்பினர். இரண்டாவது, மக்களின் கிளர்ச்சிக்கு இணங்கி வங்காளப் பிரிவினையை நீக்கி, வங்காளத்தை மறுபடியும் ஒன்றுபடுத்தினர். இதனுல் அஸ்ஸாம், பீகார், ஒரிஸ்ஸா முதலியன தனி மாநிலங்களாக்கப்பட்டன. ஹார்டிஞ்ச் காலத்தில் தேசிய உணர்ச்சி மேலும் தீவிரமாக மக்களிடையே பரவியது. விலகி இருந்த மிதவாதிகளும் தீவிரவாதிகளும் ஒன்றுசேர்வதற்கான சூழ்நிலைகள் நாட்டில் உருவாயின. மிதவாதிகளின் தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே 1915-ல் மறைந்தார். இதனுல் தீவிரவாதிகளின் கை ஓங்கியது. ஹார்டிஞ்ச் பிரபு காலத்தில் முதலாம் உலகப் போர் மூண்டது (1914—1918). அப் போரில் ஆங்கிலேயருக்கு இந்தியர்கள் பலவிதங்களில் திறம்பட உதவினர். ஹார்டிஞ்ச் பிரபு 1916-ல் பதவியிலிருந்து விலக, செம்ஸ்போர்டு பிரபு அப் பதவியில் 1916-ல் அமர்த்தப்பட்டார்.

செம்ஸ்போர்டு பிரபு (1916—1921)

செம்ஸ்போர்டு பிரபு இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக 1916-ல் பதவி ஏற்றார். இதற்குமுன் ஆஸ்திரேலியாவில் நியூ சௌத் வேல்ஸ் மாநிலத்தின் ஆளுநராகப் பணியாற்றியவர். இந்திய சுதந்திரக் கிளர்ச்சியை அடக்க ரௌலட் என்ற சட்டம் 1919ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சிகள் செய்யப்பட்டன.

அமிர்தசரசு படுகொலை : அமிர்தசரசில் நிலைமை மிகவும் மோசமாகியது. தீவிரவாதிகள் நான்கு ஐரோப்பியர்களைக் கொன்றனர்; ஐரோப்பியப் பெண்மணி அவமானப்படுத்தப்பட்டார்; பல ஐரோப்பியர் இல்லங்களுக்கும் தீ வைத்தனர். இதனுல் நாடெங்கிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் அனைத்தும் தடைசெய்யப்பட்டன. ஆயினும், 1919-ல் அமிர்தசரசிலுள்ள ஜாலியன்வாலாப் பூங்காவில் ஒரு மாபெரும் கூட்டம் கூடியது. ஊரடங்குச் சட்டத்திற்கு மாறுகக் கூடிய இக் கூட்டத்தின்மீது முன்னெச்சரிக்கை எதுவும் செய்யாமல் தளபதி டையர் (Dyer) தன் படையைக்கொண்டு குண்டுமாரி பொழிந்தான். இப் பூங்காவிலிருந்து வெளியேற இருந்த ஒரே வழியையும் தன் இராணுவத்தினரைக்கொண்டு மறைத்துக்கொண்டு, கண்மூடித்தனமாய்ச் சுட்டுத் தள்ளினுன். இதை அடுத்து, ஐரோப்பியப் பெண்ணை அவமானப்படுத்திய தெருவழியாகச் செல்கிற ஒவ்வோர் இந்தியனும் விலங்குகளைப் போல் ஊர்ந்து செல்ல வேண்டு

மென்றும் டையர் ஆணை பிறப்பித்தான். பலத்த எதிர்ப்பின் பின்னரே தளபதி டையர் பதவி நீக்கம் செய்யப்பட்டான். இப் படுகொலையின் விளைவால் நாடெங்கிலும் தேசியப் புரட்சி தீவிரமாகக் கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

மான்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் : இவர் ஆட்சிக் காலத்தில் 1919-ல் மான்டேகு-செம்ஸ்போர்டு என்ற சீர்திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. அது இந்திய அரசியல் அமைப்பு வளர்ச்சி என்ற அதிகாரத்தில் விளக்கப் பட்டுள்ளது.

மூன்றும் ஆஃப்கானியப் போர் : இவர் காலத்தில் மூன்றும் ஆஃப்கானியப் போர் மூண்டது. 1919-ல் ஆஃப்கானிய அமீரான ஹபிபுல்லா கொலைசெய்யப்பட்டார். இதற்குக் காரணம் ஹபிபுல்லா ஆங்கிலேயருக்கு ஆதரவாக ருஷ்யரையும் ஜெர்மனி யரையும் எதிர்த்ததேயாகும். அவருக்குப்பின் அவர் மகன் அமானுல்லா அமீரானுர். இவர் ஆங்கிலேயர்பால் நட்புறவு கொள்ள நினைத்தாலும், ஆஃப்கானிய மக்கள் ஜானியன்வாலா அட்டூழியத்திற்குப்பின் ஆங்கில உறவு வேண்டாமெனக் கிளர்ச்சி செய்தனர். அமானுல்லா மக்களின் எண்ணத்திற்குக் கட்டுப்பட வேண்டியவரானுர். அதனுடன் அவர்களின் தூண்டுதலின் பேரில், வடமேற்கு எல்லையிலுள்ள ஆங்கிலப் பகுதிகளைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார். இதனுல் மூன்றும் ஆஃப் கானியப் போர் மூண்டது.

ஆங்கிலப் படை காபூல், ஜலாலாபாத், ஆகிய நகரங்களில் குண்டுமழை பெய்து மிக்க நாசம் விளைவித்தது. இதனுல் அச்சங்கொண்ட ஆஃப்கானிய அமீர் ஆங்கிலேயருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள இசைந்தார். ராவல் பிண்டி (Rawalpindi) உடன்படிக்கை என்ற சமாதான உடன் படிக்கையை ஆங்கிலேயருடன் செய்துகொண்டார். இதற்குப் பிறகு ஆஃப்கானியர்கள் ஆங்கிலேயருடன் நட்புடன் பழகினர்.

இந்தியப் பொதுப்பணிக்கான (I.C.S.) தேர்வை இங்கி லாந்தில்மட்டும் நடத்தி வந்தனர். இதை எதிர்த்து அத் தேர்வை ஒரே சமயத்தில் இங்கிலாந்து, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் நடத்த வேண்டுமென்று காங்கிரசு பல ஆண்டு களாகக் கோரி வந்தது. அக் கோரிக்கை இவர் ஆட்சிக் காலத்தில்தான் நிறைவேற்றப்பட்டது. 1920-ல் அத் தேர்வை இந்தியாவிலும் நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டது. 1921 ஆம்

ஆண்டில் அவர் பதவியிலிருந்து ஓய்வு பெறவே, ரீடிங் பிரபு என்பவர் அரசப் பிரதிநிதியாகப் பதவியில் அமர்த்தப்பட்டார்.

ரீடிங் பிரபு (1921—1926) (Lord Reading)

புதிய அரசப் பிரதிநிதி ரீடிங் பிரபு அரசியல் அனுபவம் நிரம்பப் பெற்றவர். இதற்குமுன் இங்கிலாந்தில் தலைமை நீதிபதியாகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தவர். சுதந்திர உணர்ச்சி நாட்டில் கொழுந்துவிட்டு எரிந்ததால், அமைதியின்மை நிலவியது. அத்தகைய அரசியல் சூழ்நிலை இவர் ஆட்சியை மிகவும் பாதித்தது. கர்சன் பிரபுவின் ஆட்சியிலிருந்தே இந்தியரின் தேசிய உணர்ச்சி மிகத் தீவிரமாக வெளிப்படுத்தப்பட்டதெனலாம்.

மாப்பிளாக் கலகம் : மலபாரில் மாப்பிளாக்கள் என்ற முகமதியர்கள் மதவெறி காரணமாக ஒரு பெரும் கலகத்தை 1921-ல் செய்தனர். தக்க நடவடிக்கை எடுத்து 1922-ல் ரீடிங் பிரபு இதை ஒடுக்கினார்.

1923-ல் இந்தியக் காப்புவரிக் குழு ஒன்றை நிறுவினர். இதனால் பருத்தி வரி நீக்கப்பட்டதோடு டாடா இரும்பு எஃகு தொழிற்சாலை போன்ற இந்தியரின் தொழில் நிலையங்களும் பாதுகாக்கப்பட்டன. இவர் காலத்தில் 1921-ல் டாக்காவிலும், 1922-ல் தில்லியிலும், 1923-ல் நாகபுரியிலும் பல்கலைக்கழகங்கள் தோன்றின. இந்தியப் பல்கலைக்கழகங்களை ஒன்றுபடுத்த 1925-ல் அனைத்து இந்தியப் பல்கலைக்கழக நிறுவனம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. ரீடிங் பிரபு அடக்குமுறையின் மூலம் ஒத்துழையாமை இயக்கத்தை ஒடுக்கப் பார்த்தார். 1922ஆம் ஆண்டு காந்திஜியைக் கைது செய்து, ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார். இந் நிலையில் ரீடிங் பிரபுவின் பதவிக் காலம் 1926-ல் முடிவு பெற்றது.

இர்வின் பிரபு (1926—1931)

ரீடிங் பிரபுவிற்குப் பிறகு 1926ஆம் ஆண்டில் இர்வின் பிரபு அரசப் பிரதிநிதி ஆனார். இவர் சர் சார்லஸ் வுட் (Sir Charles Wood) என்பவரின் பெயரன். இந்தியரின்பால் அனுதாபம் கொண்டவர். ஆனால், அவர் அனுதாபம் ஒரு வரம்புக்குள்தான் இயங்க முடிந்தது.

சைமன் குழுவின் வருகை : அவர் காலத்தில் வரலாற்றுப் புகழ் பெற்ற சைமன் குழு இந்தியாவிற்கு வருகை தந்தது. 1919ஆம் ஆண்டுச் சட்டத்தில் குறிப்பிட்டபடி, அதன் செயற்படு விதத்தினை ஆய்வதற்காகச் சர் ஜான் சைமன் (Sir John Simon) தலைமையில் ஒரு குழு 1928ஆம் ஆண்டு பம்பாயில் வந்து இறங்கியது. இக் குழுவினை முகமதியர்களும் காங்கிரசுக்காரர்களும் நிராகரித்தனர். அக் குழுவில் இந்திய உறுப்பினர் ஒருவரும் இல்லாமையே நிராகரித்ததன் காரணம் என்று காங்கிரசு கூறியது. சைமன் குழு, தன் சிபாரிசுகளை இங்கிலாந்து இந்தியாவின் பிரதிநிதிகளையும், சுதேச அரசுகளின் பிரதிநிதிகளையும் கூட்டி அவர்களின் கருத்தைத் தெரிந்துகொள்வதன் அவசியத்தை முன்கூட்டியே வலியுறுத்தியது. இந்த நிபந்தனையை இங்கிலாந்து மந்திரி சபை ஏற்றுக்கொண்டது. அதன்படி அரசப் பிரதிநிதியாய் இருந்த இர்வின் பிரபு 1929ஆம் ஆண்டு ஓர் அறிக்கையை வெளியிட்டார். சைமன் குழு வெளியிடும் சிபாரிசுகளை விவாதிப்பதற்காக எல்லாக் கட்சிகளையும் கொண்ட ஒரு வட்டமேசை மாநாடு, இலண்டனில் நடத்தப்படும் என்று இர்வின் பிரபு அவ் வறிக்கையின் மூலம் அறிவித்தார். 1929ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் லாகூரில் கூடிய காங்கிரசு மாநாடு வட்டமேசை மாநாட்டை நிராகரிக்கவும், சட்ட மறுப்புத் திட்டத்தை மேற்கொள்ளவும் தீர்மானித்தது. 1929ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31ஆம் தேதி நள்ளிரவில் காங்கிரசின் தலைவரான ஜவஹர்லால் நேரு, இந்தியாவின் தேசியக் கொடியை ஏற்றினர். 1930ஆம் ஆண்டு சனவரி 26ஆம் தேதி இந்தியா முழுவதும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் அந்த நாளைச் சுதந்திர நாளாகக் கொண்டாடும் வழக்கமும் ஏற்படுத்தப்பட்டது. கடுமையான அடக்குமுறைகளை அரசாங்கம் மேற்கொண்டு மாபெரும் மக்கள் இயக்கமாகிய காங்கிரசை ஒடுக்கப் பார்த்தது.

1930ஆம் ஆண்டு சைமன் குழு தன் அறிக்கையை வெளியிட்டது.

சைமன் குழுவின் முக்கிய ஆலோசனைகளாவன : மாநிலங்களில் மக்களுக்குப் பொறுப்புள்ள அரசாங்கத்தை ஏற்படுத்தவேண்டும். பாதுகாப்புத் துறை, நீதித் துறைகளைச் சட்டசபைக்குப் பொறுப்புள்ள மந்திரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். பரவலான வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளை

ஏற்படுத்த வேண்டும். இந்திய சுதேச அரசுகளின் உறவு எப்படி அமைய வேண்டும் என்பதனையும் அது குறிப்பிட்டது.

வட்டமேசை மாநாடுகள்: முன்பு அறிவித்தபடியே, சைமன் குழுவின் ஆலோசனைகளை ஆராய ஒரு வட்டமேசை மாநாட்டை லண்டனில் இங்கிலாந்து அரசாங்கம் கூட்டியது. 1929ஆம் ஆண்டு இந்தியாவின் சுய ஆட்சிக் கோரிக்கைக்கு ஆதரவு தந்த தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. தொழிற்கட்சி அரசாங்கமே இம் மாநாட்டிற்கும் வழிவகுத்தது. சர் தேஜ்பஹதூர் சாப்ரு, சீனிவாச சாஸ்திரியார் C. Y. சிந்தாமணி, டாக்டர் P. R. அம்பேத்கார், சர் முகமது ஹபி போன்ற முக்கிய இந்தியர் உட்பட 57 பிரதிநிதிகளும், இங்கிலாந்து இந்தியாவிலிருந்து 16 பிரதிநிதிகளும், இந்திய சுதேச அரசுகளின் 16 பிரதிநிதிகளும், மூன்று இங்கிலாந்துக் கட்சிகளிலிருந்து பல பிரதிநிதிகளும் அம் மாநாட்டில் கலந்துகொண்டனர். அம் மாநாட்டின் முதற் கூட்டம் 1930ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 12ஆம் தேதி முதல் 1931ஆம் ஆண்டு சனவரி மாதம் 19ஆம் தேதி வரையில் நடந்தது. இம் மாநாட்டின் முதற் கூட்டத்தில் காங்கிரசு கலந்து கொள்ளவில்லை.

இர்வின்–காந்திஜி ஒப்பந்தம்: தொழிற்கட்சியின் தூண்டுதலால் இர்வின்-காந்திஜி ஒப்பந்தம் 1931-ல் செய்யப்பட்டது. அதன்படி காந்திஜி வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள சம்மதித்தார். சட்ட மறுப்பு இயக்கத்தைக் கைவிடவும் சம்மதித்தார். அரசாங்கமும் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டவர்களையன்றிப் பொதுமக்களைத் துன்புறுத்துவதில்லை என்றும் உறுதி மொழி அளித்தது. அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தது. இதனால் 1931ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் தேதி முதல், டிசம்பர் மாதம் 1ஆம் தேதி வரை நடந்த இரண்டாம் கூட்டத்தில், காங்கிரசின் தனிப் பிரதிநிதியாக காந்திஜி கலந்துகொண்டார். காந்திஜியின் கோரிக்கையை அம் மாநாடு ஆதரிக்கவில்லை. ஆகவே, அவர் மனச்சோர்வுடன் இந்தியாவுக்குத் திரும்பினார்.

இர்வின் பிரபுவின் பதவிக் காலம் முடியவே, அவருக்குப்பின் வில்லிங்டன் பிரபு அரசப் பிரதிநிதியானார்.

வில்லிங்டன் பிரபு

இர்வினுக்குப் பின்வந்த வில்லிங்டன் பிரபு (1931—1936) காங்கிரசின்மேல் அடக்குமுறைக் கொள்கையைக் கையாண்டார்.



இங்கிலாந்தில் தொழிற்கட்சிக்குப் பதிலாக 1931ஆம் ஆண்டு 'தேசிய ஆட்சி' அமைக்கப்பட்டது. இதில் இந்திய சுதந்திர உணர்ச்சியை மதிக்காத கட்சியான கன்சர்வேட்டிவ் அதிக ஆதிக்கம் செலுத்தியது. வில்லிங்டன் பிரபு பழைய கோட்பாடான 'அடக்குதலும் சலுகை அளித்தலு'மான (Repression and Reform) கொள்கையைப் பின்பற்றினர். ஒருபுறம் சலுகை அளிப்பதற்கான வட்டமேசை மாநாடு நடத்தப்பட்டது. மறுபுறம் காங்கிரசின் தலைவர்களான காந்திஜி போன்ருேர் சிறையில் அடைக்கப்பட்டனர். வட்டமேசை மாநாட்டின் மூன்ருவது கூட்டம், 1937ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 17ஆம் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 24ஆம் தேதி வரையிலும் நடைபெற்றது. இதில் காங்கிரசு கலந்துகொள்ளவில்லை.

வெள்ளையறிக்கை வெளியிடல்: இம் மாநாடுகளின் விளைவாக, வெள்ளை அறிக்கை ஒன்று 1933ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அவ் வெள்ளையறிக்கையைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த ஒரு கூட்டுக் கமிட்டி ஆராய்ந்தது. இக் கூட்டுக் கமிட்டி, பின்பு அரசப் பிரதிநிதியாக வந்த லின்லித்கோ பிரபு தலைமையில் நடந்தது. அக் கமிட்டி அவ் வெள்ளை அறிக்கையை ஆராய்ந்து சில மாற்றங்களைச் செய்து, பின்பு அங்கீகரித்தது. இம் மடலே 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இந்திய அரசியல் அமைப்பு வளர்ச்சியின் அதிகாரத்தில் இச் சட்டம் விளக்கப்பட்டுள்ளது.

லின்லித்கோ பிரபு (1936—1944)

வில்லிங்டன் பிரபுவின் அரசப் பிரதிநிதிப் பதவி 1936ஆம் ஆண்டு முடிந்தது. அவருக்குப்பின் லின்லித்கோ பிரபு 1936-ல் அரசப் பிரதிநிதிப் பதவி ஏற்றார். இவர் காலத்தில் இரண்டாம் உலகப்போர் மூண்டது. இங்கிலாந்து இந்தியாவையும் இப் போரில் ஈடுபடச் செய்தது. இந்தியத் தலைவர்களின் அனுமதி யின்றி, இவ்வாறு இங்கிலாந்து இந்தியாவைப் போரில் ஈடு படுத்தியதை எதிர்த்துக் காங்கிரசு சட்டசபைகளிலிருந்து வெளி யேறியதுடன், மாநிலங்களில் அமைத்திருந்த தங்கள் அமைச்சர் குழுக்களையும் கலைத்துவிட்டது. அமைச்சர் குழுக்களைக் கலைத்த பின் காங்கிரசு மிகத் தீவிரமாகச் சுதந்திரப் போரைத் தொடர்ந்து நடத்தியது. இந்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்ணய சபையே (Constituent Assembly) இந்தியாவின் வருங்கால அரசியல் அமைப்பைத் (Constitution) தீர்மானிக்க வேண்டு மெனக் கோரியது. மகாத்மா காந்தி தனி நபர் சட்ட மறுப்பு இயக்கத்தை (Individual Satyagraha) 1940ஆம் ஆண்டு ஆரம்பித் தார். முஸ்லிம் லீக் இந்தியர்களுடன் ஒத்துழைக்க மறுத்ததுடன், இந்தியாவைப் பிளவுபடுத்தல் வேண்டும் என்றும் கோரியது. காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகிற்கும் இருந்த வேறுபாட்டைக் காண் பித்து, அரசப் பிரதிநிதி காங்கிரசின் கோரிக்கையை நிராகரித் தார். காங்கிரசின் தேசிய நிகழ்ச்சிகள் மக்கள் மத்தியில் பரவாத படி செய்தித்தாள்களும் கட்டுப்படுத்தப்பட்டன. பல தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். ஜவஹர்லால் நேருவுக்கு நான்கு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கிரிப்ஸ் தூதுக்குழு: இங்கிலாந்து அமைச்சரவையில் அங்கத் தினராயிருந்த சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps) என்பவர் தலைமையின்கீழ் ஒரு தூதுக்குழு இந்தியாவிற்கு

1942ஆம் ஆண்டு இவருடைய காலத்தில் அனுப்பி வைக்கப் பட்டது. போரில் ஒத்துழைக்குமாறும், போர் முடிந்தவுடன் ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கி இந்தியர்களுக்கு அதிகார மாற்றம் வழங்க ஏற்பாடு செய்வதாகவும் அவர் பரிந்துரைத்தார். ஆனால், பிற்காலத்தே ஏற்பட இருக்கும் அரசியல் நிர்ணய சபையிலும், சுதந்திர இந்தியாவிலும் சேராமல் தனித்து நிற்கும் உரிமையை அவர் முஸ்லிம்களுக்கு வழங்கவேண்டுமென்றதாலும், இடைக்கால அரசாங்க அமைப்புப்பற்றிச் சிக்கல் ஏற்பட்டதாலும் அவரது பரிந்துரை இந்தியர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வேவல் பிரபு (1944—1947)

சிம்லா மாநாடு : லின்லித்கோ பிரபுவுக்குப் பிறகு, வேவல் பிரபு அரசப் பிரதிநிதியானர். 1945-ல் லண்டனுக்குச் சென்று ஒரு திட்டத்துடன் இந்தியா திரும்பி, சிம்லாவில் காங்கிரசு-லீகு மாநாடு ஒன்றைக் கூட்டினர். ஜின்னு, இந்தியப் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தியதுடன் பாகிஸ்தான் கொடுத்தால் தான் உடன்பாட்டிற்கு வர இயலும் என்றும் பிடிவாதம் பிடித்தார். அவருடைய இப் பிடிவாதத்தினல் சிம்லா மாநாடு வெற்றியின்றி முடிந்தது. காங்கிரசும் லீகும் எவ்வித ஒப்பந்தத்திற்கும் வர முடியாததால், அம் மாநாடும் முறிந்தது. இதற்கிடையில் இந்திய சுதந்திரக் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்த தொழிற்கட்சி (Labour Party) இரண்டாம் உலகப் போருக்குப்பின் இங்கிலாந்தில் பதவிக்கு வந்தது.

அமைச்சரவைக் குழு : தொழிற்கட்சித் தலைவர் கிளமென்ட் அட்லி (Clement Attlee) இங்கிலாந்தின் பிரதம மந்திரி ஆனர். அவர் இந்திய சுதந்திரத்திற்கு ஆதரவாக இந்தியத் தலைவர் களுடன் ஆலோசனை நடத்துவதெனவும் தீர்மானித்தார். அதற்காக ஆங்கில அரசின் மந்திரி சபைத் தூதர்குழு ஒன்றை 1946ஆம் ஆண்டில் அனுப்பிவைத்தார். பெத்விக் லாரன்ஸ் (Pethwick Lawrence), ஸர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps), A. V. அலெக்ஸாண்டர் (A. V. Alexander) ஆகிய மூவர் கொண்ட அக் குழு இந்தியாவிற்கு வருகைதந்து, இந்தியத் தலைவர்களைக் கலந்து புதியதொரு அரசியல் திட்டத்தை வெளியிட்டது. அதன்படி இந்தியாவுக்கு அரசியலமைப்புத் திட்டத்தை வகுக்க அரசியல் நிர்ணய சபை ஒன்றைக் கூட்டுவ தென்றும், அதற்கிடையில் இந்திய அரசை நடத்த இடைக்கால அரசாங்கம் (Interim Government) ஒன்றை அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்தியா வருங்காலத்தில் வடமேற்கு,

வடகிழக்குப் பகுதிகளில் இரு முஸ்லிம் நாடுகளாகவும் இடையில் ஓர் இந்திய நாடாகவும் பிரிக்கப்பட்டு ஒரு கூட்டாட்சியாகத் தொழிற்பட வேண்டுமென அது பரிந்துரைத்தது.

முஸ்லிம் லீகின் ஒத்துழையாமை: முஸ்லிம் லீக் மந்திரி சபைக்குழுவின் முடிவை ஏற்றுக்கொண்டு, சுதந்திரப் பாகிஸ்தான் வேண்டும் எனக் கோரியது. ஆனால், காங்கிரசு இடைக்கால அரசாங்கம்பற்றிய முடிவை ஏற்க மறுத்தது. எனினும், அரசியல் நிர்ணயசபையில் பங்கு கொள்ளத் தீர்மானித்தது. முஸ்லிம் லீக் இடைக்கால அரசாங்கத்தை நிறுவ வேண்டும் எனக் கோரினாலும், காங்கிரசு அதற்கு ஆதரவு தரவில்லை என்பதால் அரசப் பிரதிநிதி இடைக்கால அரசை அமைக்க அனுமதிக்கவில்லை. இவ்வாறு பலத்த வேறுபாடுகளுடன், முஸ்லிம் லீக் மந்திரிசபைக் குழுவின் நிர்ணய சபையின் திட்டத்தை ஏற்க மறுத்தது. அரசப் பிரதிநிதியின் முயற்சியால், காங்கிரசு இடைக்கால அரசை அமைக்க ஒப்புக்கொண்டது. காங்கிரசின் இப் பூரண வெற்றியைக் கண்டு ஆத்திரமடைந்த லீகு 1946ஆம் ஆண்டில் நேரடி நடவடிக்கையைக் கைக்கொண்டது. எழுத்தில் அடங்காக் கொடுமைகளை இந்து மக்களுக்கு இழைக்க முகமதியர்களைத் தூண்டியது. இதனால் நாட்டின் பல பாகங்களில் இந்து-முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள் மூண்டன. நூற்றுக் கணக்கில் இந்துக்கள் கொல்லப்படவே, தற்காப்புக்காக இந்துக்களும் முஸ்லிம்களைக் கொல்ல வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப் பட்டனர். அதே ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பண்டித ஜவஹர்லால் நேருவும் மற்றத் தலைவர்களும் அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களாகப் பதவி ஏற்றனர். அரசியல் நிர்ணய சபை 1946ஆம் ஆண்டில் கூடி இந்தியாவின் அரசியல் அமைப்புத் திட்டத்தை வகுக்கத் தொடங்கியது. அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இராசேந்திரப் பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முஸ்லிம் லீக் இச் சபையில் சேர மறுத்துவிட்டது. 1947ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் நாள் இங்கிலாந்து அரசாங்கம் ஒரு முக்கியக் கொள்கையை வெளியிட்டது. அதன்படி ஆங்கில அரசாங்கம் 1946ஆம் ஆண்டு சனவரி மாதத்திற்குள் இந்தியாவைவிட்டு வெளியேறுவதாகக் குறிப்பிட்டு, அதைத் துரிதமாக நிறைவேற்றும் ஏற்பாடுகளைச் செய்வதற்காக மவுன்ட்பேட்டன் பிரபுவை (Lord Mount Batten) 1947ஆம் ஆண்டு அனுப்பிவைத்தது.

மவுன்ட் பேட்டன் பிரபு (1947—1948)

மவுன்ட் பேட்டன் பிரபு இங்கிலாந்தை ஆண்ட அரச குடும்பத்தைச் சார்ந்தவர்; ஆக்க வேலைகளை அமைதியாகவும்

திறமையாகவும் செய்வதில் ஆற்றல் மிக்கவர்; கண்ணியமும் கடமை உணர்வும் உள்ளவர்; இந்திய சுதந்திர வேட்கைக்கும், சுய ஆட்சி உணர்வுக்கும் உளமார ஆதரவு தந்ததுடன், அவ் வெண்ணம் விரைவில் நிறைவேற வேண்டுமென்ற எண்ணம் கொண்டு 1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் தேதி ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதன்படி, இந்தியா இந்தியா, பாகிஸ்தான் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். பெரும்பான்மையான முகமதியர்கள் உள்ள பகுதிகள் பாகிஸ்தானகவும் மற்றவை இந்தியாவாகவும் கருதப்படும். வங்காளமும் பஞ்சாபும் இரண்டிரண்டாகப் பிரிக்கப்பட்டுக் கிழக்கு வங்காளமும் பாகிஸ்தானைச் சாரும். கிழக்குப் பஞ்சாபும், மேற்கு வங்காளமும் இந்தியாவைச் சாரும் என்றும் கூறினர். அதே ஆண்டு ஜூலை மாதம் முதல்நாள் ஆங்கிலப் பாராளுமன்றம் இந்திய சுதந்திரச் சட்டத்தை நிறை வேற்றியது. 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி யன்று அதிகார மாற்றம் ஏற்பட வேண்டுமென்று அச் சட்டம் கூறியது. அதன்படி ஆகஸ்டு மாதம் 14, 15ஆம் தேதி நடு நிசியில், இந்தியா முழுச் சுதந்திர நாடாக மாறியது. இந்தியா சுதந்திர நாடானலும் இங்கிலாந்துக் காமன்வெல்த்தில் (Common Wealth) தொடர்ந்து அங்கம் வகிக்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது. சுதந்திர இந்தியாவிற்கு, மவுன்ட் பேட்டன் பிரபுவே முதல் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டு, சூன் 1948 வரை பதவி வகித்தார். முஸ்லிம் லீகின் தலைவர் ஜின்னு, பாகிஸ்தானின் முதல் தலைமை ஆளுநரானர். இந்திய சுதந்திரப் போராட்டம் இவ்விதம் முடிவடைந்தது. மவுன்ட் பேட்டனிற்குப் பிறகு இராசாசி எனப் புகழ்பெற்ற இராச கோபாலாச்சாரியார் முதல் இந்தியத் தலைமை ஆளுநராகப் பதவியேற்ருர்.

இராசகோபாலாச்சாரியார் (1948–1950)

இராசகோபாலாச்சாரியார் சுதந்திரப் போராட்டத்தில் தொண்டாற்றியவர்; சிறந்த அரசியல் மேதை; 1937ஆம் ஆண்டில் சென்னையில் காங்கிரசு மந்திரிசபை அமைத்தபோது முதல் அமைச்சராய் அமர்ந்து, இந்தியரின் ஆட்சித் திறனுக்கு ஓர் உதாரணமாய்த் திகழ்ந்தவர்; அண்ணல் காந்திஜிக்கு நெருங்கிய உறவினரும்கூட. 1946-ல் அமைக்கப்பட்ட இடைக்கால இந்திய அமைச்சரவையில் நிதித் துறையின் அமைச்சராய்ப் பணி புரிந்தவர். தமது திறமையை உலகம் கண்டு வியக்கும் படி செய்தார். இந்தியப் பிரிவினையைத் தடுக்க முடியாது;

முகமதியர்களுக்குத் தனிநாடு கொடுத்தே தீரவேண்டி வரும் என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்த தீர்க்கதரிசியுமாவார்.

டாக்டர் இராசேந்திர பிரசாத் (1952—1962)

மவுன்ட் பேட்டன் பிரபுவிற்குப்பின், இராசகோபாலாச்சாரியார் தலைமை ஆளுநர் பதவியேற்று, 1920ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26ஆம் நாள் வரை பதவி வகித்தார். அவரே முதல் இந்தியத் தலைமை ஆளுநரும், கடைசித் தலைமை ஆளுநரும் ஆவார். இந்தியா குடியரசு நாடாக மாறியதால், தலைமை ஆளுநர் பதவி நீக்கப்பட்டு, அதற்குப்பதில் குடியரசு தலைவர் என்ற பதவி உருவாக்கப்பட்டது, இம் மாற்றம் 1950 சனவரி 26 முதல் செயல்படுத்தப்பட்டது. இத் திருநாளையே நாம் இந்தியக் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்.

அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்த அறிஞர் டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்களையே முதல் இந்தியக் குடியரசின் தலைவராகத் தாற்காலிகமாகத் தேர்ந்தெடுத்தனர். இந்தியக் குடியரசின் முதல் தேர்தல் 1951—52-ல் நடைபெற்றது. அத் தேர்தலுக்குப் பின்னும் அவரே 1952-ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப் பதவியை 1962 வரை வகித்த அவர் சாந்தமும், ஆழ்ந்த அரசியல் அறிவும், சிறந்த கல்வி அறிவும் நிரம்பப் பெற்றவராவார். சுதந்திரப் போராட்டத்தில் அண்ணல் காந்திஜிக்கு உறுதுணையாயிருந்தவர். இவர் வாழ்க்கை வரலாறு தனியே ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது.

துணைக் குடியரசு தலைவராய் அறிஞர் இராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சிறந்த பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் பெற்ற பெரும் தத்துவ மேதை. ருஷ்யாவில் இந்தியத் தூதராய்ப் பணிபுரிந்து, ஸ்டாலினின் மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றவர்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் (1962—1967)

டாக்டர் இராசேந்திர பிரசாத்திற்குப் பிறகு, டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தியக் குடியரசின் தலைவராகவும், டாக்டர் ஜாகீர் உசேன் துணைத் தலைவராகவும் தேர்ந் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஜாகீர் உசேனும் சிறந்த கல்விமான் ஆவார்.

டாக்டர் ஜாகீர் உசேன் (1967—1969)

டாக்டர் ஜாகீர் உசேன், டாக்டர் இராதாகிருஷ்ணனுக்குப் பின், ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; ஆனால், தம் பதவிக் காலம் முடியு முன்பே மறைந்தார். ஒரு முஸ்லிமை இந்தியாவின் பொறுப்புள்ள மிக உயர்ந்த பதவிக்குத் தேர்ந்தெடுத்ததன் மூலம், இந்தியாவின் சமயபேதமின்மைக் கொள்கையினை உலகம் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எவ்விதப் பேதமோ, தீங்கோ இழைப்பதில்லை என்று அரசியல் சட்டத்தில் மட்டும் உறுதி அளிக்கவில்லை; உண்மையிலேயே நடைமுறையிலும் பின்பற்றப்படுகிறது என்பதை உலகுக்கு இது எடுத்துக் காட்டியது. அவரின் திடீர் மறைவு, நாட்டிற்கு மாபெரும் சோதனைக் காலமாக மாறியது. அவருக்குப் பிறகு அப் பதவிக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதில் தலைமை அமைச்சர் இந்திராகாந்திக்கும், காங்கிரசின் தலைவர் நிஜலிங்கப்பாவிற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் காங்கிரசுக்கு கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது. டாக்டர் வி. வி. கிரி அவர்கள் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

டாக்டர் வி. வி. கிரி (1969)

இப்போது நம் நாட்டின் தலைவராக டாக்டர் வி. வி. கிரி அவர்களும், துணைத்தலைவராக டாக்டர் பதக் அவர்களும் பதவி வகிக்கின்றனர். டாக்டர் வி.வி. கிரி அவர்கள் தொழிலாளர்களின் நலனில் குறிப்பாக நாட்டங் கொண்டவர்; சிறந்த அறிவாளி; சென்னையிலும், மைய அரசிலும், அமைச்சராய்ப் பணிபுரிந்து, நாட்டு மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். துணைத் தலைவரான பதக் அவர்களும் சிறந்த அரசியல் மேதை மட்டுமன்றி, நிகரற்ற சட்ட வல்லுநரு மாவார்.

21. இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி
(1773 முதல் 1861 வரை)

இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சிக்கான அடிக்கல் 1773ஆம் ஆண்டு இங்கிலாந்துப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டத்தின்மூலம் நாட்டப்பட்டதென்றே கொளல் வேண்டும்.

பிளாசிப் போரின் வெற்றியால் கிழக்கிந்திய வணிகக்குழு, திடீரென வாணிகப் பணியுடன் நிருவாகப் பொறுப்பினையும் ஏற்கும்படியாயிற்று. வணிகக் குழுவினருக்குக் கிழக்கிந்திய வாணிகத்திற்குத்தான் உரிமையளிக்கப்பட்டதேயன்றி, நாட்டைக் கைப்பற்றும் உரிமையும், அதை ஆளும் அரசியல் அதிகாரமும் அளிக்கப்படவில்லை. இதனால் இங்கிலாந்தில் அரசியல் வாதிகளுக்குள் ஒரு பெருங் குழப்பம் எழுந்து. அதன் விளைவாக ஒழுங்குமுறைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act): ஒழுங்குமுறைச் சட்டம் இந்திய ஆட்சிமுறையின் வளர்ச்சியில் முதல் படியாகும். இச் சட்டம் 1773ஆம் ஆண்டில் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 1774ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இங்கிலாந்தின் பாராளுமன்றம் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியில் தலையிட வேண்டிய சூழ்நிலை பல காரணங்களால் தடுக்கமுடியாமல் போயிற்று. இந்தியாவிலிருந்து ஓய்வுபெற்று இங்கிலாந்து திரும்பிய வணிகக் குழு ஊழியர்கள் இங்கிலாந்தில் ஆடம்பரமான வாழ்க்கை நடத்தினர். தங்களை 'இந்திய நவாபு'கள் என்று அவர்கள் தம்மை அழைத்துக் கொண்டனர். இப் புதுப் பணக்காரர்களின் செல்வச்

செழிப்பு, இங்கிலாந்தில் பொருமையையும் பூசலையும் உண்டாக்கிற்று. ஆதரவற்ற இந்தியரை ஏமாற்றி இவர்கள் பொருள் சேகரித்திருக்க வேண்டும் என்ற எண்ணம் இங்கிலாந்து மக்களிடம் வலுப்பெற்றது. நியாய வழியில் அவ்வளவு பொருள் சேர்க்க இயல்வது கடினம் என்பதையும் அன்னூர் உணர்ந்தனர். இத் திடீர்ப் பணக்காரர்கள் நசித்துப் போன பரோக்கள் (Rotten borough) என்னும் தேர்தல் தொகுதிகளை வாங்கிப் பாராளுமன்றத்திலும் உறுப்பினராயினர். இது பழைமையில் ஊறிய, இங்கிலாந்துப் பெருநிலக்கிழார்க்கு ஆத்திர மூட்டியது. ஆங்கிலேயர்கள் இந்தியாவைப் பணம் காய்க்கும் மரமாகக் (Pagoda tree) கருதினர்.

வணிகக் குழுவின் ஆட்சியில் பாராளுமன்றம் தலையிட்டு, வணிகக் குழுவின் செல்வத்தில் ஏன் பங்குபெறக் கூடாது என்று அரசியல் வாதிகள் வாதிட்டனர்.

மேலும், வணிகக் குழுவின் நிதிநிலைமையும் உண்மையில் மோசமாயிருந்தது. வணிகக் குழுவின் ஊழியர்கள், தங்கள் சொந்த வாணிகத்தைச் செம்மையாகச் செய்து அதிக வருவாய் பெற்றனர். ஆனால், வணிகக் குழுவின் வாணிகத்தைச் சரிவரக் கவனிக்கவில்லை. இதனால் வணிகக்குழு நட்டத்தில் நடந்து கொண்டு வந்தது. பாராளுமன்றம் கடன் கொடுத்தாலன்றி, வணிகக்குழு நடைபெறாது என்ற நிலைமை 1773ஆம் ஆண்டு ஏற்பட்டது. வணிகக் குழுவின் இயக்குநர்கள் கடனுக்காகப் பாராளுமன்றத்தை அணுகினர். வணிகக் குழுவின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த இந்த வாய்ப்பைப் பாராளுமன்றம் பயன்படுத்திக் கொண்டது.

1773ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பாராளுமன்றம் இரண்டு சட்டங்களை இயற்றியது. முதல் சட்டத்தின்படி 4 சதவீத வட்டியில் 1,400,000 பவுன்கள் வணிகக் குழுவிற்குக் கடனாகக் கொடுக்கப்பட்டன. இரண்டாவது சட்டம் ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act) என்பதாகும். வணிகக் குழுவின் நிருவாகத்தை ஒழுங்குபடுத்தும் பொருட்டு நிறைவேற்றப்பட்டதால் அது 'ஒழுங்குமுறைச் சட்டம்' என்று பெயர்பெற்றது.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் முக்கியக் கோட்பாடுகள்

அச் சட்டம் வணிகக் குழுவின் இயக்குநரைத் தேர்ந்தெடுக்கும் முறையினையும், இயக்குநர் வாரியத்திற்கும் (Board of Directors) இந்திய நிருவாகத்திற்கும் உள்ள உறவுகளையும் அறுதியிட்டுக்

கூறியது. இச் சட்டம் இயற்றுவதற்கு முன்னால் கிழக்கிந்திய வணிகக் குழுவைக் கண்காணித்து வந்த 24 இயக்குநர்கள், குழுவின் பங்குதாரர்களால் (Share holders) ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். 6 மாதத்திற்குமேல் 500 பவுன்களுக்குக் குறையாமல் முதலீடு செய்து பங்குதாரர்களாயிருந்தவர்களுக்கே அவ்வித இயக்குநரைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டிருந்தது.

1. அதை மாற்றி ஓர் ஆண்டிற்காவது 1000 பவுன்களுக்கு மேல் முதலீடு வைத்துள்ள பங்குதாரர்களுக்கே, இயக்குநரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை இச் சட்டம் வழங்கியது. ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த இயக்குநர்கள் நான்கு ஆண்டிற்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படவும் இது வழி செய்தது. அதனுடன் இயக்குநர்களில் நான்கில் ஒரு பங்கினர் (ஆறு பேர்) ஆண்டுதோறும் பதவியிலிருந்து விலக வேண்டும். புதிய இயக்குநர்கள் அவர்களுக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். இரண்டாவது முறை இயக்குநர் தேர்தலுக்கு நிற்கவேண்டுமென்றால், முதல் இயக்குநர் பதவிக் காலத்திற்கும் இரண்டாவது முறை இயக்குநர் பதவிக் காலத்திற்கும் இடையில் குறைந்தது ஓராண்டாவது இருக்க வேண்டும் என்ற விதியும் புகுத்தப்பட்டது.

2. வணிகக் குழுவின் வரவுசெலவுக் கணக்கு அமைச்சரவையின் முன்னர் வைக்கப்பட வேண்டும் என்பது இச் சட்டத்தின் முக்கிய விதிகளுள் ஒன்றாகும். இங்கிலாந்து அமைச்சரவைக்கு வணிகக் குழுவின் நிருவாகத்தில் தலையிடும் உரிமை இதனால் வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி 20 ஆண்டிற்கு ஒரு முறை பாராளுமன்றம், கிழக்கிந்திய வணிகக்குழு தொடர்ந்து இயங்க வேண்டுமா, வேண்டாமா என்பதை நிர்ணயிக்கும் உரிமையைப் பாராளுமன்றத்துக்கு இச் சட்டம் வழங்கியது. இதனால் 20 ஆண்டிற்கொரு முறை வணிகக் குழுவின் ஆட்சியில் குறைபாடுகளைக் கண்டால் அவற்றைச் செப்பனிடப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. 1793 1813, 1833, 1853ஆம் ஆண்டுகளில் இந்தியச் சாசனச் சட்டங்கள் தோன்றவும் இது வழிசெய்தது.

3. வங்காளத்தின் ஆளுநர் (Governor), தலைமை ஆளுநராக (Governor General) ஐந்தாண்டிற்கு அமர்த்தப் பெற்றார்,

இவர் வில்லியம் கோட்டையின் தலைமை ஆளுநரேயன்றி இந்தியாவின் தலைமை ஆளுநர் அல்லர்.

4 நிருவாகத்தில் தலைமை ஆளுநருக்கு உதவி செய்ய நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அவையும் அமைக்கப்பட்டது. அந்த அவையின் பெரும்பான்மை வாக்குப்படியே (majority vote) அவர் ஆட்சி நடத்த வேண்டும். ஒரு தீர்மானத்துக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் அளிக்கப்பெறும் வாக்குகள் சரிசமமாக இருக்குமானால், தம் வாக்கினை வழங்குவதன் மூலம் இறுதித் தீர்வு காணும் உரிமை (Casting vote) தலைமை ஆளுநருக்கு வழங்கப்பட்டது. தலைமை ஆளுநர், அவையின் நான்கு அங்கத்தினர்களின் பெயர்களும் பிலிப் ஃபிரான்ஸிஸ் (Philip Francis), கிளாவரிங் (Clavering), மான்சன் (Monson), பார்வல் (Barwell) என்று அச் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்கள் நால்வரும், ஐந்து ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டனர். ஐந்து ஆண்டிற்குப்பின், அப் பதவியில் அவர்களை நீடிக்கச் செய்யும் உரிமை வணிகக் குழுவினரின் விருப்பத்திற்கே விடப்பட்டது.

5 சென்னை, பம்பாய் மாநிலங்களை மேற்பார்வையிடும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கும், அவருடைய அவையினருக்கும் கொடுக்கப்பட்டது. அம் மாநில ஆளுநர்கள், இந்தியச் சுதேச அரசுகளுடன் போர் தொடங்கவோ சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளவோ, தலைமை ஆளுநர் அவையின் அனுமதியைப் பெற வேண்டும் என்றும் இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டது.

6 ஒரு தலைமை நீதிபதியையும், மூன்று சாதாரண நீதிபதிகளையும் கொண்ட தலைமை நீதிமன்றம் (Supreme Court) ஒன்றும் இச் சட்டத்தின்படி கல்கத்தாவில் அமைக்கப்பட்டது.

7 தலைமை ஆளுநருக்கு 25,000 பவுன்களும், ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களுக்குப் 10,000 பவுன்களும், தலைமை நீதிபதிக்கு 8,000 பவுன்களும், சாதாரண நீதிபதிகளுக்கு 6,000 பவுன்களும் ஓர் ஆண்டிற்கு ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டது.

ஒழுங்குமுறைச் சட்டத்தினால் ஏற்பட்ட நன்மைகள்

இதுவரையில் இந்தியாவில் வாணிகம் செய்து வந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகக் குழுவினர் தங்கள் நாட்டு அரசாங்கத்தின் கட்டுப்பாடு ஏதும் இல்லாமையால், இந்திய

மக்களைத் தங்கள் மனம் போனபடி எல்லாம் கொள்ளையடித்து வந்தனர். கொள்ளை அடித்தவர்கள் வணிகக் குழுவினர் என்றாலும் அது இங்கிலாந்து நாட்டின் நற்பெயருக்கு இழுக்கை ஏற்படுத்தியது. இச் சட்டத்தின் மூலமாகப் பாராளுமன்றம் மறைமுகமாக இந்திய நிருவாகத்தைப் பார்வையிடும் வாய்ப்பைப் பெற்றது. பாராளுமன்றம் 20 ஆண்டிற்கொரு முறை கிழக்கிந்திய வணிகக் குழுவின் இந்திய நிருவாகத்தைச் சீர்நோக்கும் நியதியையும் இச் சட்டம் ஏற்படுத்தியதால், வணிகக் குழுவினர் இந்திய மக்கள்பால் பொறுப்புடன் நடந்துகொள்ளுமாறு தூண்டப்பட்டனர்.

ஐந்நூறு பவுன்கள் முதலீடு செய்தவர்களின் வாக்குரிமை ரத்து செய்யப் பெற்றதால் சற்றுப் பொருள்வசதி படைத்தவர்களும், இயல்பாகவே தகுதி படைத்தவர்களுமே பங்குதாரர் சபையில் வாக்குரிமை பெற்றனர். இம் மாற்றம் தகுதி வாய்ந்த இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளித்தது.

இயக்குநர்களின் பதவிக்காலம் ஓராண்டாக இருந்தமையால், அவர்களால் உருப்படியாக ஏதும் செய்ய இயலாது போயிற்று. நடைமுறையினைத் தெரிந்துகொள்வதற்கே அவர்களுக்கு ஓர் ஆண்டு ஆயிற்று. அதன் பின்னர் பதவியைவிட்டு விலக நேர்ந்தமையால் முழுமையாகப் பணிகளை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. நான்கு ஆண்டுகள் என ஆன பின்னர் அதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

மாநில ஆளுநர்களிடையே யார் பெரியவர் என்ற ஐயப்பாடு எழாத வகையில் வங்க ஆளுநர் தலைமை ஆளுநராக நியமிக்கப் பட்டார். இந்திய நிருவாக ஒருமைப்பாட்டிற்கு இம் மாற்றத்தை முதல்படியாகக் கருதலாம்.

இச் சட்டம் முதன் முதலாக நீதித்துறையை நிர்வாகச் செயல் துறையின் பிடியிலிருந்து பிரித்துத் தனியே இயங்க வைத்தது. எதிர்காலத்தில் அரசியலமைப்பில் அதிகாரப் பிரிவினை ஏற்பட (Separation of Powers) இது வழிவகுத்தது எனலாம்.

ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைபாடுகள்

'தெளிவற்ற ஓர் அரைகுறைச் சட்ட'மென்றே இச் சட்டத்தை P.E. இராபர்ட்ஸ் குறிப்பிடுகிறார். இச் சட்டத்தால் வணிகக் குழுவில் ஒழுங்கு ஏற்படுவதற்குப் பதிலாக, ஒழுங்கீனங்களே ஏற்பட்டன. இந்த ஒழுங்குமுறைச் சட்டம் அரசு, வணிகக் குழுவின்மீது திட்டவட்டமான அதிகாரம் செலுத்தவும், இயக்கு

நர்களின் பணியாளர்கள்மீது உறுதியான கட்டுப்பாட்டைக் கையாளவும், தலைமை ஆளுநர் தம் அவையைக் கட்டுப் படுத்தவும் வங்கம், சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களைக் கட்டுப்படுத்தவும் அதிகார வரம்பைக் கொடுக்கவில்லை.

1. தலைமை ஆளுநர், தம் அவையின் பெரும்பான்மை யோரின் வாக்கிற்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டுமென்ற நிலை பல அரசியல் குழப்பங்களுக்கு இடமளித்தது. அவை உறுப்பினர் நால்வரில் மூவர் எதற்கும் எதிர்ப்பையே தெரிவித் தனர்.

2. இச் சட்டத்தில் 'வங்க அரசு' சென்னை, பம்பாய் அரசு களின்மீது தன்அதிகாரத்தைச் செலுத்தலாம் என்றும், 'இக்கட் டான அவசரச் சந்தர்ப்பம் இல்லாத மற்றக் காலங்களில் மட்டும் அவற்றின்மீது அவ் வதிகாரம் செலுத்தலாம்' என்றும் கூறு கிறது. இதில் அவசரச் சந்தர்ப்பம் என்பது எப்படிப்பட்ட சந்தர்ப்பம் என்று குறிப்பிடப்படவில்லை. அவசரச் சந்தர்ப் பத்தில் கல்கத்தாவையோ, தாய்நாட்டையோ கலந்து கொள்வது எளிதன்று. பம்பாய், சென்னை மாநில வணிகக் குழுவின் ஆட்சியாளர்களே எதையும் செய்துவிட்டுத் 'தவிர்க்க முடியாத சந்தர்ப்பம்' என்று கூறிவிட வாய்ப்பு இருந்தது. இத் தகைய தெளிவற்ற நிலையினால்தான் பம்பாய் ஆளுநர் முதல் மராத்தியப் போரில் யாருடைய உத்தரவுமின்றித் தம் விருப்பம் போல் நடந்துகொண்டார். அதுபோலவே சென்னை ஆளு நரும் தம் விருப்பம்போல் கர்நாடக நவாபோடும், ஐதர் அலியோடும் உடன்படிக்கைகளைச் செய்துகொண்டார்.

நீதிபதிகள் நேரடியாக இங்கிலாந்து அரசரால் நியமிக்கப் பட்டவர்கள். எனவே, தலைமை ஆளுநருக்குத் தாங்கள் கீழ்ப்படிய வேண்டியவர்கள் அல்லர் என்றே அவர்கள் எண்ணிச் செயல் பட்டனர். இந்தியாவில் யாருக்கும் அவர்கள் கட்டுப்பட வேண் டியதில்லை என்று கருதியதற்கொப்பச் சட்டத்திலும் அதுபற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை. சென்னை, பம்பாய் மாநில நீதி மன்றங்களுக்கும் கல்கத்தா உயர்நீதி மன்றத்திற்கும் எத்தகைய தொடர்பு இருத்தல் வேண்டும் என்பதும் விளக்கப்படவில்லை.

வணிகக் குழுவை இயக்கிய இயக்குநர் வாரியமும், உரிமை யாளர் குழுவும் ஒன்றுக்கொன்று கட்டுப்படாது வணிகக் குழுவை இருவேறு முனைகளுக்கு இழுத்துச் சென்றன. வணிகக் குழுவின் பணியாளர்கள் யாருக்கும் அடங்கவில்லை. அவ்வாறு

செயல்புரிவோர்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் வரையறை செய்யப்படவில்லை.

வணிகக் குழுவினருக்கு ஏதாவது ஐயம் ஏற்பட்டால், உடனடியாக அதனைத் தீர்த்து வைத்திட எவ்வித அமைப்பையும் இச் சட்டம் தரவில்லை எனவே, அவர்கள் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த இலண்டனோடு தொடர்புகொள்ள நேரிட்டது.

பொதுமக்களுக்கும் ஒரே குழப்பநிலை ஏற்பட்டது. யாருக்குக் கட்டுப்படுவது என்றே புரியாமல் விழித்தனர். இதற்குக் காரணம் பல்வேறு வகையில் ஆட்சி நடைபெற்றதே. ஒரு மேலாளர் என்ற நிலை இல்லை. நவாபுகள் ஆட்சி, தலைமை ஆளுநர் ஆட்சி, இயக்குநர் வாரியம், உரிமையாளர் குழு, தலைமை நீதிமன்றம், மாநில ஆளுநர் ஆட்சி, மாநில நீதிமன்றம் இவற்றின் இடையே அவர்கள் சிக்கித் தவித்தனர்.

தலைமை நீதிமன்றத்தின் அமைப்பு இங்கிலாந்து மரபுபடி ஆங்கிலச் சட்டங்களின் அடிப்படையில் எழுப்பப்பட்டதால், இந்தியக் குற்றவாளிகள்மீது ஆங்கிலச் சட்டத்தின்படி தீர்ப்பு வழங்கலாமா? என்பது குறித்து ஒழுங்குமுறைச் சட்டத்தில் தெளிவான விளக்கம் ஏதுமில்லை. இச் சிக்கல் நந்தகுமார் வழக்கின்போது ஏற்பட்டது.

ஆங்கிலக் குடிமக்கள்மீது நெறி செலுத்த உயர்நீதி மன்றத்திற்கு இச் சட்டம் அதிகாரம் வழங்கியபோது, ஆங்கிலக் குடிமக்கள் என்பவர்கள் யார்? ஆங்கிலேயர் மட்டுமா அல்லது ஆங்கிலேயர் ஆட்சியின் கீழுள்ள இந்தியர்களும் சேர்ந்தா? வணிகக் குழுவின் பணியிலமர்ந்த இந்தியர் மட்டும் ஆங்கிலக் குடிமக்களா? அல்லது அனைவருமா? என்ற விளக்கங்களுக்கு இச் சட்டம் விடையளிக்கவில்லை. தலைமை ஆளுநர் அவைக்கும் தலைமை நீதிமன்றத்திற்குமிடையே உள்ள உறவைத் தெளிவாகத் தெரியப்படுத்தவில்லை. இதனால், தலைமை ஆளுநர் அவைக்கும் தலைமை நீதிமன்றத்திற்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன.

1779-ல் தலைமை நீதிமன்றம் காசி ஜீரா அரசருக்கு எதிராக ஆணையிட்டது. தலைமை ஆளுநரின் அவை, காசி ஜீரா அரசர் தலைமை நீதிமன்றத்திற்குக் கட்டுப்பட்டவரல்லர் என்று கூறியது. அவரைக் கைது செய்யும்படி தலைமை நீதிமன்றம்

ஆணையிட்டது. தலைமை நீதிமன்றத்தின் ஆள்கள் அவரைக் கைது செய்ய முயன்றபோது தலைமை ஆளுநர் அவையின் உத்தரவுப்படி வணிகக் குழுவின் படைவீரர்கள் நீதிமன்ற ஊழியரை எதிர்த்தனர்.

இந் நிலையை மாற்ற வாரன் ஹேஸ்டிங்ஸ் சாதர் திவானி அதாலத்தையும், தலைமை நீதிமன்ற நீதிபதியின்கீழ் இயங்கும் படி கேட்டுக்கொண்டாலும், இயக்குநர் வாரியம் இம் முறையை ஏற்றுக்கொள்ள மறுத்ததால் இம் முறை கைவிடப்பட்டது. இவ்வாறு ஒழுங்குமுறைச் சட்டத்தில் பல குறைகள் இருந்தன.

இருப்பினும் இந்திய அரசியல் வரலாற்றில் ஒழுங்குமுறைச் சட்டம் ஒரு முக்கிய மைல் கல்லைக் குறிப்பிடுகிறதென்றே சொல்ல வேண்டும். இந்திய ஆட்சி படிப்படியாகச் செப்பனிடப் பட இச் சட்டம் வழிவகுத்தது.

இச் சட்டத்தில் இருந்த குறைகள் படிப்படியாகத் தீர்க்கப் பட்டன. 1781-ல் ஆங்கிலப் பாராளுமன்றம் எட்மண்டு பர்க், ஹென்றி தண்டாஸ் ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட இரு குழுக்களை அமர்த்தி இந்தியாவில் நீதி பரிபாலனத்தைப் பற்றியும், மைசூர்ப் போரினைக் குறித்தும் விசாரணை நடத்தச் செய்தது. இதன் பயனாகவே 1781-ல் சீர்திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. கல்கத்தா நீதிமன்றத்திற்கு அனை வரும் உட்பட வேண்டுமெனவும், வாரிசுரிமை வழக்குகளில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அவரவர் சமயச் சட்டங் களின்படியே நீதி வழங்கப்பட வேண்டும் எனவும் முடிவாயிற்று. தலைமை ஆளுநரின் அரசியல் செயல்களில் நீதிமன்றம் தலை யிடக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது. தலைமை நீதி மன்றத்தில் தலைமை ஆளுநரின் அவை வெளியிடும் விதிகள் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் இச் சட் டத்தால் நீக்கப்பட்டது. ஒழுங்குமுறைச் சட்டத்தில் குறை பாடுகள் ஓரளவிற்குத் தீர்க்கப்பட்டன. ஆயினும், அவை அறவே களையப்படவில்லை. ஆதலால் பிட் இந்தியச் சட்டம் அதற்காகக் கொண்டுவரப்பட்டது. 1781ஆம் ஆண்டு திருத்தச் சட்டப்படி (Amending Act) தலைமை நீதிமன்றத்திற்கும், தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவுக்குமிருந்த முரண்பாடு தீர்க்கப் பட்டது. தலைமை ஆளுநரின் அரசியல் செயல்களைத் தலைமை நீதிமன்றம் கட்டுப்படுத்தக் கூடாது எனக் கூறப்படடது. இத் திருத்தச் சட்டத்தின்மூலம் தலைமை ஆளுநரது ஆலோசனைக்

குழுவின் ஆதிக்கமானது உயர்த்தப்பட்டு, தலைமை நீதி மன்றத்தின் ஆதிக்கமானது குறைக்கப்பட்டது.

ஃபாக்ஸ் இந்திய வரைவு
(Fox India Bill, 1783)

இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியில் பிட் இந்தியச் சட்டம் மற்றொரு முக்கியக் கட்டத்தைக் குறிப்பதாகும். ஒழுங்குமுறைச் சட்டத்தின் விளைவுகளை அலசி நோக்கும் வாய்ப்பு இச் சட்டம் இயற்றும்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டது. வணிகக் குழு இயக்குநர், நிதி உதவிக்காக மறுபடியும் பாராளு மன்றத்தை 1883ஆம் ஆண்டு அணுகினர்.

ஹென்றி தண்டாஸ் நீண்டதோர் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். இவருடைய தீர்மானங்களை நாடாளுமன்றம் தள்ளிவிட்டது.

குறைபாடுகள் முழுவதும் நீங்கவில்லை. 1783–ல் ஃபாக்ஸ் என்பார் மசோதா ஒன்றினைக் கொண்டுவந்தார். அவருடைய மசோதாவில் இயக்குநர் குழுவும், உரிமையாளர் குழுவும் நீக்கப் படவேண்டுமெனவும் ஆணையாளர்கள் அடங்கிய இரண்டு புதிய அவைகள் அமைய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டி ருந்தது. அவற்றுள் ஒன்று, ஏழு உறுப்பினர்களைக் கொண்டு அரசியல் பணிகளைக் கவனிக்க வேண்டும். மற்றொன்று, 9 உறுப் பினர்களைக் கொண்டு வணிகப் பணிகளைக் கவனிக்க வேண்டும். இந்த 9 பேரும் கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து (Board Control) தேர்ந்தெடுக்கப்படுவர். வணிகக் குழுவின்மீது ஆணை பிறப்பிக்க அரசுக்கு அதிகாரமுண்டு. புதிய ஆணையாளர்களை அமர்த்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

இம் மசோதா மக்கள்சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், மன்னரின் தலையீட்டால் மேல்சபையில் நிராகரிக்கப் பட்டது.

பிட் இந்தியச் சட்டம்

1784-ல் வில்லியம் பிட் இங்கிலாந்தின் தலைமை அமைச்ச ராகப் பதவியேற்றார். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை யினரின் வாக்குகளைப் பெற்று, இந்திய நிருவாகத்தைச் செப்பனிட ஒரு சட்டத்தை அவர் நிறைவேற்றினார். இச் சட்டம் இவரது பெயராலேயே பிட் இந்தியச் சட்டம் என வழங்கப்

படுகிறது. ஃபாக்ஸ் கொண்டுவந்த மசோதாவே ஏறக்குறையப் பிட் நிறைவேற்றிய சட்டமாகும். இச் சட்டப்படி,

(1) இந்தியாபற்றிய அரசியல் செய்திகளை மேற்பார்வையிட இங்கிலாந்தில் கட்டுப்பாட்டு வாரியம் (Board of Control) ஒன்று ஏற்பட்டது. இவ் வாரியத்தில் கருவூலத் தலைவர், இந்திய அமைச்சர், அரசரின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் நால்வர் ஆகியோர் இருந்தனர். அரசரே இவர்களைப் பதவியில் அமர்த்தினர். இவர்களுக்கு இப் பணிக்கெனத் தனி ஊதியம் ஏதும் வழங்கப்படவில்லை. இவ் வாரியத்தினரின் இசைவின்றி இயக்குநர் வாரியம் (Board of Directors) எவ்வித ஆணையையும் அனுப்பக் கூடாது. இவ் வாரியத்திற்கு இந்தியாவில் வாழும் ஆங்கிலேயரைக் கட்டுப்படுத்தும் அதிகாரமுண்டு. மூன்றுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட இரகசியக் குழு (Secret Committee) இயக்குநர் வாரியத்திற்குள்ளேயே ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் கட்டுப்பாட்டு வாரியத்திற்குத் துணை நிற்பார்கள். இயக்குநர்களைக் கட்டுப்பாட்டு வாரியம் ஆதரித்தால் உரிமையாளர் குழு இயக்குநர்களைக் கட்டுப்படுத்த முடியாது. இந்தியாவின் தலைமை ஆளுநரின் அவையில் நான்கு உறுப்பினர்களுக்குப் பதிலாக மூன்று உறுப்பினரே இருத்தல் வேண்டும். வாக்கெடுப்பில் நெருக்கடி ஏற்பட்ட போது தலைமை ஆளுநருக்கு இறுதி வாக்களிக்கும் உரிமை (casting vote) உண்டு. சென்னை, பம்பாய் ஆளுநரின் அவையில் ஆளுநரையும் சேர்த்து நான்கு உறுப்பினர் இருத்தல் வேண்டும். உறுப்பினர் மூவருள் ஒருவர் மாநிலத் தானைத் தலைவராக இருத்தல் வேண்டும். தலைமை ஆளுநர், மாநில ஆளுநர்கள், அவர்களின் ஆலோசனையாளர்கள் ஆகிய அனைவரையும் இயக்குநர்களே அமர்த்திட வேண்டும். அவர்களைப் பதவியிலிருந்து நீக்கும் உரிமை அவர்களுக்கும் அரசருக்குமே உண்டு. பம்பாய், சென்னை மாநிலங்களின் மீது மேலதிகாரம் செலுத்தும் உரிமை தலைமை ஆளுநருக்கு வழங்கப்பெற்றது. நாடுகளைப் பிடிப்பது ஆங்கிலேயரின் நோக்கமன்று என்பதை இச் சட்டம் வற்புறுத்தியது.

இச் சட்டமானது மற்றொரு இரட்டையாட்சி முறையை இந்தியாவில் ஏற்படுத்தியது. கட்டுப்பாட்டு வாரியம் வணிகக்குழுவின் இயக்குநர்களை அரசியலில் ஈடுபடாமல் தடுத்து, அரசியல் செய்திகளைத் தானே பார்த்துக்கொண்டது. இயக்குநர்களுக்கு வணிக உரிமைகளும், சமூகப் பொருளாதார உரிமைகளுமிருந்தன. ஆங்கில இந்திய ஆட்சியில் அரசியல் பகுதியானது கட்டுபாட்டு வாரி

யத்தின் கீழும், வணிக, சமூக, பொருளாதாரப் பிரிவுகள் இயக்குநர் வாரியத்தின் கீழும் இயங்கி வந்தபடியால் இதை ஓர் இரட்டையாட்சி எனலாம். ஒழுங்குமுறைச் சட்டத்தில் இருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டு வணிகக் குழுவின் கையிலிருந்த அதிகாரம் தலைமை ஆளுநரின் கைக்கு மாறியது. இந்தியாவின் அரசியல் மன்னர் கண்காணிப்பின்கீழ் வந்தது.

1786ஆம் ஆண்டுச் சட்டம்: காரன்வாலிஸ் தலைமைப் பதவியை ஏற்பதற்காக 1786ஆம் ஆண்டு ஓர் இந்தியச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி காரன்வாலிஸிற்கு, ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மையான வாக்குகளை நிராகரிக்கும் உரிமையும் (Veto) தலைமை ஆளுநர் பதவியுடன் வணிகக் குழுவின் படைக்குத் தளபதியாக (Commander-in-chief) இருக்கும் உரிமையும் அளிக்கப்பட்டது.

1793ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டம்: இந்தியாவில் வணிகக் குழுவின் ஆட்சி நீடித்த வரையில், பிட் இந்தியச் சட்டம் ஏற்படுத்திய அரசியல் அமைப்பு எவ்வித அடிப்படையான மாறுதல்களும் இல்லாமல் பின்பற்றப்பட்டது.

1. 1786ஆம் ஆண்டிற்கும் 1858ஆம் ஆண்டிற்கும் இடையில், ஒழுங்குமுறைச் சட்டத்தில் குறிப்பிட்டபடி, 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை வணிகக்குழுவின் ஆட்சி உரிமையானது புதுப்பிக்கப்பட்டு வந்தது. 1793ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டயச் சட்டப்படி வணிகக் குழுவின் ஆட்சி உரிமையானது மேலும் 20 ஆண்டிற்கு நீடிக்கப்பட்டது.

2. தலைமை ஆளுநருக்குப் பம்பாய், சென்னை மாநிலங்களின் மீதுள்ள அதிகாரம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

3. தலைமை ஆளுநருக்குச் சென்னை, பம்பாய் மாநிலங்களில் சென்று, வங்காளத்தைப் போலவே அந்தந்த மாநிலங்களில் ஆட்சி செலுத்த உரிமை அளித்தது. அதாவது அவர் அம் மாநிலங்களில் இருக்கையில், ஆளுநர் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என இச் சட்டம் கூறியது. சுருக்கமாகக் கூறின், 1793ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டம் குறிப்பிடும் மாற்றங்கள் எதையும் செய்யவில்லை. இதற்குமுன் இருந்த அரசியலமைப்பையே மீண்டும் வலியுறுத்தியதெனலாம். 1793ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டத்தின்படி 1813ஆம் ஆண்டு மறுபடியும் வணிகக் குழுவின் ஆட்சி உரிமையைப் புதுப்பிக்க வேண்டிய

தாயிற்று. அதற்காக 1813ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1813ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டம்: 1813ஆம் ஆண்டு வணிகக் குழுவின் ஆட்சி உரிமையை நீட்டித்து ஒரு பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1. அதன்படி வணிகக் குழுவிற்கு இந்திய வாணிகத்தில் இருந்த தனி உரிமை (Monopoly) நீக்கப்பட்டது. ஆனால் தேநீர், கஞ்சா முதலிய பொருள்களைச் சீனாவுக்கு விற்பதில் பெற்றிருந்த தனி உரிமை வணிகக் குழுவிற்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டது.

2. ஊரியல் பணித்துறை, படைத்துறை ஆகியவற்றில் பணியாற்றுவோருக்குத் தக்க பயிற்சி அளிக்க, பயிற்சி நிலையங்கள் நிறுவ இச் சட்டம் வழி செய்தது.

3. இந்தச் சட்டத்தின் முக்கியப் பகுதி, இந்தியக் கல்வி, பண்பாட்டு வளர்ச்சிக்கு வணிகக் குழுவின் இலாபத்திலிருந்து ஆண்டிற்கு ஓர் இலட்ச ரூபாய் ஒதுக்கவேண்டும் என்பதேயாகும். இதற்குமுன் இந்தியக் கல்வி, வணிகக் குழுவின் பொறுப்பில் இல்லை. இச் சட்டத்தின்படி முதன்முதலாய் அப்பொறுப்பை, வணிகக் குழு ஏற்கும்படி நேர்ந்தது. வணிகக் குழுவின் வாணிகத் தனி உரிமையை நீக்கியது, இந்தியக் கல்வி வளர்ச்சிக்கு வணிகக்குழு இலாபத்தில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டும் என்றது ஆகிய இரண்டு விதிகளும் மிகச் சிறந்த கோட்பாடுகள் என்பதில் ஐயமில்லை. ஆனால், வாணிகத் தனி உரிமையை நீக்கியதால், ஐரோப்பியப் பொருள்கள் இந்தியாவில் குவிந்தன. இதனால் இந்தியத் தொழில்கள் பாதிக்கப்பட்டுக் கடைசியில் அழிந்தே போயின என்ற குற்றச் சாட்டிற்கும் இச் சட்டம் இடந்தருகிறது. வணிகக் குழுவின் ஆட்சியைப் புதுப்பிக்க 1833ஆம் ஆண்டு மீண்டும் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1833ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டம்

1. 1833ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டம் சீனாவுடன் இருந்த தனி வாணிகச் சலுகையையும் நீக்கிவிட்டது. இதனால் வணிகக் குழு தனி வாணிக உரிமைகளை எல்லாம் இழந்துவிட்டது.

2. வங்காளத் தலைமை ஆளுநர் இந்தியத் தலைமை ஆளுநர் என அழைக்கப்பட்டார். தலைமை ஆளுநரின் ஆலோசனைக்

குழுவிற்கு, இந்தியா முழுமைக்கும் சட்டம் இயற்றும் அதிகாரமும் கொடுக்கப்பட்டது. இதற்காகத் தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் சட்ட அங்கத்தினர் என்ற நான்காவது அங்கத்தினர் ஒருவரும் அமர்த்தப்பட்டார். சட்ட சம்பந்தமான செயலில் தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழு ஈடுபடும்போது மட்டும் இந்த அங்கத்தினர் அதன் வாதங்களில் பங்குகொண்டு தம் வாக்கை (vote) அளிக்கும் உரிமை பெற்றிருந்தார். இதனால் மாநிலங்களின் சட்டம் இயற்றும் உரிமையானது பறிக்கப்பட்டு விட்டது. சட்டத்தின் மிக முக்கிய விதி இதுவேயாகும். இந்தியச் சட்டசபை (Indian Legislative) தோன்ற இந்தச் சட்டம் அடிகோலியது எனலாம்.

3. எந்த இந்தியனும் சமயம், சாதி, நிற வேறுபட்டால், வேலைபெறும் வாய்ப்பை இழக்கக் கூடாதென இச் சட்டம் கூறியது. இதனால் இந்தியர் வணிகக் குழுவின் குடிமக்கள் என்ற உரிமை முதன்முதலாக ஏட்டளவிலாவது ஒப்புக் கொள்ளப்பட்டது எனலாம்.

1853ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம் : 1853ஆம் ஆண்டு இயற்றப் பட்ட பட்டயச் சட்டமானது அரசியலமைப்பில் மேலும் பல மாறுதல்களைச் செய்தது. அதன்படி,

1. வணிகக்குழு இயக்குநர்களின் எண்ணிக்கை இருபத்து நான்கிலிருந்து பதினெட்டாகக் குறைக்கப்பட்டது. அவர்களுள் மூவர் (பின்பு ஆறுபேர்) மன்னரால் நியமிக்கப்படவும் (nominated) இது வழிசெய்தது. இதனால் தேர்தலின்றி இயக்குநர் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்படும் முறை புகுத்தப் பட்டது.

2. ஆட்சிப் பணிக்குத் (Civil Service) தேர்வுப் போட்டி நடத்தித் தேர்ந்தெடுக்க வேண்டும் என இச் சட்டம் கூறியது. இதனால் இயக்குநர்கள் வணிகக்குழு ஊழியர்களை அமர்த்தும் அதிகாரத்தை இழந்தனரெனலாம்.

3. தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவிலிருந்த சட்ட உறுப்பினர், நிரந்தர உறுப்பினராக்கப்பட்டார்.

4. இந்திய நிருவாகச் சட்டங்களை இயற்றுவதற்காக ஆறு புதிய அங்கத்தினர்கள் தலைமை ஆலோசனைக் குழுவில் சேர்க்கப்

பட்டனர். வங்காளம், பம்பாய், சென்னை, வடமேற்கு மாநிலம் இவற்றிலிருந்து ஒவ்வொரு அங்கத்தினரும், இரண்டு நீதிபதிகளுமே அவ்வாறு புதிதாகச் சேர்க்கப்பட்ட ஆறு உறுப்பினராவர். இவ்வாறு மையச் சட்டசபைக்கு மாநிலப் பிரதிநிதிகளை அனுப்பும் முறையை இச் சட்டம் செயல்படுத்தியது. மையச் சட்டசபையின் (Legislative Council) தொடக்கம் இவ்வாறு இச் சட்டத்தினுல் முதன்முதலில் இந்திய அரசியலில் புகுத்தப்பட்டதெனலாம். தலைமை ஆலோசனைக் குழுவானது நிர்வாகக் குழுவாக (Executive) மாறியது. புதிதாகச் சேர்க்கப்பட்ட ஆறு அங்கத்தினர்களின் எண்ணிக்கையானது படிப்படியாக உயர்த்தப்பட்டு, பின்பு அதுவே, சட்டசபையாகவும் வளர வழிவகுக்கப்பட்டது. சட்டசபை நிறைவேற்றிய சட்டங்களைத் தள்ளுபடி செய்யும் அதிகாரம் தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

5. இந்தியச் சட்டங்களைத் தொகுப்பதற்காக இலண்டனில் ஒரு சட்டக்குழு ஏற்படுத்தவும் இச் சட்டம் வழிவகுத்தது. தண்டனை விதித் தொகுப்பு (Penal Code), குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (Civil Proceedure Code) ஆகியவற்றை அக் குழு சட்டமாக்கியது,

இவ்வாறு ஒழுங்குமுறைச் சட்டத்திலிருந்து வணிகக் குழுவின் ஆதிக்கம் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டுக் கடைசியில் பாராளுமன்றமே இந்திய ஆட்சியை எடுத்துக்கொள்ளக்கூடிய நிலை உருவாகி வந்தது. இத்தகைய நிகழ்ச்சி சிறிதுகாலம் தாழ்ந்து நடந்திருக்கலாம். ஆனுல் 1857ஆம் ஆண்டு நடந்த படையினர் பெரும் புரட்சி அம் முடிவை உடனடியாக அமல் நடத்தச் செய்தது. இந்திய ஆட்சியானது வணிகக் குழுவின் பொறுப்பிலிருந்து, ஆங்கில அரசின் நேரடி ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட வேண்டுமென 1858ஆம் ஆண்டுப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டமானது திட்டவட்டமாய்க் கூறியது. இத்தகைய மாற்றத்தைக் குறிப்பதற்காகத் தலைமை ஆளுநர் என்று இருந்த பதவியின் பெயரை வைஸ்ராய் (அரசப் பிரதிநிதி) என்று மாற்றினர்.

1858ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம் விக்டோரியாப் பேரரசியாரின் அறிக்கைப்படி நிறைவேற்றப்பட்டது. இச் சட்டப்படி கிழக்கிந்திய வணிகக்குழு தன் அரசியல் அதிகாரங்களை இழந்தது. அவைகளை ஆங்கில அரசாங்கம் எடுத்துக் கொண்டது. தலைமை ஆளுநர், ஆங்கில அரசப் பிரதிநிதி

(Viceroy) என அழைக்கப்பட்டார். கட்டுப்பாட்டு வாரியம், இயக்குநர் வாரியம் ஆகிய இரண்டும் கலைக்கப்பட்டன.

அவைகளின் அதிகாரங்கள் யாவும் கிழக்கிந்திய வணிகக் குழுவிடமிருந்து ஆங்கில அரசின் உறுப்பினரான இந்திய அமைச்சருக்கு மாற்றப்பட்டன. இவர் இங்கிலாந்துப் பாராளு மன்ற உறுப்பினராயினும், இவருக்கு மட்டும் இந்திய வருமா னத்திலிருந்து ஊதியம் கொடுக்கப்பட்டது. இவருக்கு உதவி புரியப் பதினைந்து பேர்களடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக் குழுவின் பாதிக்கு மேற்பட்ட அங்கத்தினர்கள், இந்தியா வில் குறைந்தது பத்து ஆண்டுகளாவது வாழ்ந்து இந்தியா வைப்பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கப் பட்டது. அவர்களின் ஊதியமும் இந்தியக் கருவூலத்திலிருந்தே கொடுக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டது.

இந்தியக் குழு (Indian Council) என்று வழங்கப்பட்ட இக் குழு, இந்திய அமைச்சரின் தலைமையின்கீழ் இயங்கும் என்றும், பெரும்பான்மையான வாக்குகளின் பேரிலேயே இந்திய அமைச்சர் ஆட்சிபுரியவேண்டும் என்றும் வரையறுக்கப்பட்டது. ஆனால், சில துறைகளில் இந்திய அமைச்சருக்குப் பெரும்பான்மை யாரின் முடிவை மீறும் அதிகாரமும் வழங்கப்பட்டது. இந்திய அமைச்சருக்கும் அரசப் பிரதிநிதிக்கும் இரகசியக் கடிதத் தொடர்புகொள்ளும் உரிமையும் தரப்பட்டது. இவ் வுரிமையில் இந்தியக் குழு உறுப்பினர்கள் தலையிடக்கூடாது. இந்திய அமைச்சர் ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின்முன் இந்தியாவின் ஆட்சிமுறையைப்பற்றி ஓர் அறிக்கையினை வைப்பார். பாராளுமன்றம் அதை விவாதித்து, இந்திய ஆட்சிமுறைக்குத் தக்க நடவடிக்கைகளைக் கூறலாம். இவ்வாறு 1858ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்தியச் சட்டப்படி இந்தி யாவின் ஆட்சி இந்திய அமைச்சரின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தைத் தொடர்ந்து பல சட் டங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் முதன்மையானது 1861ஆம் ஆண்டின் இந்தியச் சட்டசபைச் சட்டமாகும்.

1861ஆம் ஆண்டின் இந்தியச் சட்டசபைச் சட்டம்: 1861ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டசபைச் சட்டம் இந்தியச் சட்டமன்ற வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இங்கிலாந்தில் நிலவிய கிளாட்ஸ்டனின் சுதந்திர மனப்பான்மையின் எதிரொலியை இச் சட்டத்தில் காண

முடிகிறது. உள்நாட்டு ஆட்சித்துறையில் உள்ள குறைகளை மக்களால் அரசியல் முறையில் (Constitutional) எடுத்துக்கூற எவ்வித வழியும் இல்லை. அதேபோல் ஆட்சியினர் செய்யும் அரசியல் மாற்றம் அல்லது சீர்திருத்தங்களை மக்கள் எவ்விதம் வரவேற்கிறார்கள் என்றும் தெரிந்துகொள்ள வழியும் இல்லை. இப்பெரும் குறையைப் படையினர் புரட்சி தெள்ளத் தெளிவாக விளக்கியது. மக்களின் குறைகளையோ எதிர்ப்பையோ கலகம் மூலம் தெரிவிப்பதைத் தவிர வேறு எவ்வித வழியும் இல்லை. இக் குறையை அரசப் பிரதிநிதியாயிருந்த கானிங் பிரபு அப்பொழுது இந்திய அமைச்சராயிருந்த வுட் பிரபுவுக்குத் (Lord Wood) திட்ட வட்டமாக எடுத்துக்கூறியதுடன், இந்தியப் பிரதிநிதிகளை ஆட்சிக் குழுவில் சேர்த்துக்கொள்வதன் அவசியத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார். அதனுடன் 1858ஆம் ஆண்டு ஆங்கிலப் பேரரசியார் அறிக்கையின்படி அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது என்று ஏற்கெனவே கண்டோம். இக் குழுவை இந்தியப் பாராளு மன்றத்தின் தொடக்கம் என்று இந்தியத் தலைவர்கள் கருதினர். இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றத்தைப் போன்று இந்தியாவிலும் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் ஆரம்ப அறிகுறிதான், அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவை விரிவு படுத்தியதன் நோக்கம் என்று மேலைநாட்டு ஆட்சிமுறையில் மோகம் கொண்ட இந்திய இளைஞர்கள் கருதினர். இங்கிலாந்திலும் இவ்வித எண்ணங்களுக்குப் பலர் ஆதரவு தந்தனர். இவ்விதச் சூழ்நிலையில்தான் 1861ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

I. அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் செய்த மாற்றங்கள்

1. 1861ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தப்பட்டது. அதன்படி சட்ட வல்லுநர் ஒருவர் அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

2. அரசப் பிரதிநிதியின் அதிகாரங்கள் மிகவும் விரிவு படுத்தப்பட்டன. சட்டமியற்றும் பணியைத் தவிர்த்து, மற்றப் பணிகளில், அவருடைய நிர்வாகக் குழுவின் உத்தரவு இன்றி எதையும் செய்யலாம் என்று அவருக்கு அதிகாரம் அளிக்கப் பட்டது.

3. அவர் இல்லாத நேரத்தில் நிர்வாகக் குழுவிற்குத் தலைமை தாங்க ஒரு தாற்காலிகத் தலைவரை(President)நியமிக்கும் அதிகாரமும் அவருக்கு வழங்கப்பட்டது. தற்காலத்தே வழக்காற்றில் இருந்துவரும் தொழில் அரங்க முறையினைக் (Port folio system) கானிங் பிரபுதான் முதன்முதலாக அமலுக்குக் கொண்டு வந்தார். இதன்படி நிருவாகக் குழு உறுப்பினர் ஒவ்வொருவரும், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துறையை நிர்வகிப்பர். அத் துறை சம்பந்தப்பட்ட சாதாரணப் பிரச்சினைகளை அவரே முடிவு செய்வார். முக்கியப் பிரச்சினைகளை அரசப் பிரதிநிதியுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்வார். இம் முறையினால் வேலை துரிதமாகக் கவனிக்கப்பட்டது. நிருவாகக் குழுவின் அங்கத்தினர்களின் நிருவாகத் திறமையானது அதிகரித்தது. மேலும், காலதாமதமின்றிக் காரியங்களைச் செய்ய முடிந்தது. அதனுடன் துறைகளைப் பிரித்துக் குறிப்பிட்ட ஓர் உறுப்பினரின் நேரடியான பொறுப்பில் வைத்ததால், அந்த உறுப்பினர் முடிவுசெய்து செயலாற்றுவதில் மிக்க எச்சரிக்கையாய் நடந்து கொண்டார். நிருவாகக் குழுவின் பொது ஆதிக்கத்தை இம் முறை குறைத்தாலும், அரசப் பிரதிநிதியின் தனி ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் உயர்த்தியது. ஏனென்றால், ஒவ்வோர் உறுப்பினரும் அவரைக் கலந்தாலோசித்தே முக்கிய முடிவு எடுத்தனர்.

II. மையச் சட்டசபை

1861ஆம் ஆண்டு இந்தியச் சட்டம், மையச் சட்டசபையிலும் (Central Legislature) பல மாற்றங்களைச் செய்தது. இந்தியாவின் உள்ளாட்சிக்கான சட்டங்கள் இயற்றுவதற்காக அரசப் பிரதிநிதியின் சட்டக் குழுவில் புதிதாக ஆறு அங்கத்தினர்களுக்குக் குறையாமலும், பன்னிரண்டு அங்கத்தினர்களுக்கு மேற்படாமலும் சேர்க்கப்பட்டனர். அவர்களுள் பாதிப்பேர், ஆட்சிப்பணியில் (Civil Service) இல்லாத உறுப்பினர்களாக இருக்கவேண்டும். இதனால் சட்டமியற்றும் பணியில் இந்தியர்கள் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. கூடுதலாக நியமிக்கப்படும் உறுப்பினர்கள் அரசப் பிரதிநிதியால் இரண்டாண்டுகளுக்கு நியமிக்கப்படுவர். சட்டங்கள் இயற்றுவது ஒன்றுதான் இச் சட்டக் குழுவின் பணி என்று தெள்ளத்தெளிவாய் அறிவிக்கப்பட்டது. இங்கிலாந்து, இந்தியா முழுமைக்கும் இச் சட்டசபை சட்டங்கள் இயற்றலாம். ஆனால், அச் சட்டங்கள் செயல்பட அரசப் பிரதிநிதியின் அங்கீகாரம் மிகவும் அவசியம். அதனுடன் இந்திய அமைச்சரின் அங்கீகாரத்தையும் அது பெற வேண்டும்.

இந்த மையச் சட்டசபை (Central Legislature) எல்லா ஆட்சித் துறைக்கும் சட்டம் இயற்றலாம். ஆனால், பொதுக் கடன்கள் (Public debts), பொது வருமானம், இந்தியரின் சமயச் சடங்குகள், படைக் கட்டுப்பாடு, இந்திய சுதேசி அரசர்கள் சம்பந்தப்பட்ட கொள்கைகள் போன்ற சில குறிப்பிட்ட துறைகள் சம்பந்தமாகச் சட்டமியற்ற வேண்டுமானால், தலைமை ஆளுநரின் அங்கீகாரத்தை முன்கூட்டியே பெறவேண்டும். இரண்டாவதாக, இங்கிலாந்தின் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு உட்பட்டே இச் சட்டங்கள் இயற்றப்படவேண்டும். மூன்றாவதாக, இந்தியச் சட்டசபை செய்த எந்தச் சட்டத்தையும் எந் நிலையிலும் மறுப்பாணை (Veto) செய்யும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கு உண்டு. மேலும், ஆங்கில அரசாங்கம் அச் சட்டத்தை எந்த நிலையிலும் தடை செய்யலாம்.

III. மாநிலச் சட்டசபை

1853ஆம் ஆண்டு இந்தியச் சாசனச் சட்டம் மாநிலங்களின் சட்டம் இயற்றும் அதிகாரத்தை நீக்கியது. 1861ஆம் ஆண்டுச் சட்டம் அதைத் திரும்பவும் மாநிலங்களுக்கு வழங்கியது. சட்டமியற்றுவதற்காக ஆளுநரின் நிர்வாகக் குழுவில், அரசு தலைமை வழக்கறிஞர், மற்றும் நால்வருக்குக் குறையாத ஆனால், எண்மருக்கு மேற்படாத புதிய உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டனர். இவ் வதிகப்படியான உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். நியமிக்கப்பட்ட உறுப்பினருள் பாதிப்பேர் ஆட்சிப்பணியில் இல்லாமலிருக்க (non-officials) வேண்டும். மாநிலங்கள் நிறைவேற்றிய சட்டங்களைத் தள்ளவோ மாற்றவோ தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. தாற்காலிக அவசரச் சட்டங்களை (Ordinances) தலைமை ஆளுநர் பிறப்பிக்கலாம். அவை அதிகப்பட்சம் ஆறு மாதத்திற்கு அமலில் இருக்கும். அதற்குமுன், வேண்டுமானால் இந்திய அமைச்சரால் அவை நீக்கப்படலாம்.

நீதித் துறையில் மாற்றங்கள் : நீதித் துறையிலும் இச் சட்டம் மூக்கியமான மாற்றங்களைச் செய்தது. சாதர் நீதிமன்றங்களையும் (Sadr Courts), தலைமை நீதிமன்றத்தையும் (Supreme Court) நீக்கிவிட்டுக் கல்கத்தா, சென்னை, பம்பாய் மாநிலங்களில் உயர் நீதி மன்றங்களை (High Courts) ஏற்படுத்தியது. காவற்படையை (Police) நன்கு மாற்றி அமைத்தது. மாவட்ட நீதிபதியின் (District Magistrate) ஆணைப்படி, மாவட்டங்களின் ஒழுங்கும் அமைதியும் நிலைநாட்டப்படவேண்டும் எனக் கூறப்பட்டது.

1861ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்தியச் சட்டசபைச் சட்டம் பல குறைகளைக் கொண்டிருந்தது என்பதில் ஐயமில்லை. மையச் சட்டசபையின் சுயேச்சை அதிகாரம் தலைமை ஆளுநரின் ஆதிக்கத்தினால் பயனற்றுப் போனதென்றாலும், இந்திய அரசியலமைப்பில் ஒரு பெரும் மாற்றத்தை அச் சட்டம் ஏற்படுத்தியது என்றே கூறவேண்டும். பிறகு செய்யப்பட்ட எல்லா மாற்றங்களும் ஏற்படுவதற்கு அச் சட்டம் ஓர் அடிப்படைத் (foundation) திட்டத்தைக் கொடுத்ததென்றே சொல்ல வேண்டும். இந்தியச் சட்டசபையில் இந்தியரைப் பங்குகொள்ள வழிவகுத்ததும் இச் சட்டமே யாகும்.

22. இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி
(1861 முதல் இன்று வரை)

1861ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்தியச் சட்டசபைச் சட்டம் மக்களின் குறைந்தபட்சத் தேவைகளைக்கூடத் தீர்க்கவில்லை. 1885-ல் இந்திய தேசியக் காங்கிரஸ் தொடங்கப்பெற்றது. இந்திய தேசியக் காங்கிரஸ் வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்களைப்போல் மற்ற மாநிலங்களிலும் சட்டமன்றங்களை நிறுவ வேண்டும்; சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும்; சட்டசபைக்கு அதிகப்படியான அதிகாரங்களை வழங்க வேண்டும்; முக்கியமாக இந்திய வரவுசெலவுத் திட்டத்தை விவாதிக்கவும், கேள்விகளைக் கேட்கவும் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தது. அதன் கோரிக்கைகளில் சிலவற்றை நிறைவேற்றும் வகையில் 1892ஆம் ஆண்டுச் சட்டசபைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1892ஆம் ஆண்டின் இந்தியச் சட்டசபைச் சட்டம்

1. அரசப் பிரதிநிதியின் சபையில் மிகுதி உறுப்பினரின் எண்ணிக்கை பத்துக்குக் குறையாமலும், பதினாறுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டுமென்றும், இவர்களில் ஆறுக்கு மேற்படாத உறுப்பினர்கள் அதிகாரிகளாக இருக்க வேண்டுமென்றும் இச் சட்டம் கூறியது. மீதி உள்ள அரசு பணியில் இல்லாத பத்து உறுப்பினர்களில் நால்வர் மாநிலச் சட்டசபைப் பிரதிநிதிகளாகவும், ஒருவர் கல்கத்தா வணிக மன்றத்தின் பிரதிநிதியாகவும், மீதி ஐவர் அரசப் பிரதிநிதியால் நியமிக்கப்பட்டவராயுமிருக்க வேண்டும்.

2. சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களின் சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தது எட்டு ஆகவும்,

உயர்ந்தபட்சம் 20 ஆகவும் இருக்க வேண்டுமெனவும் வட மேற்கு, அயோத்தி மாநிலங்களுக்கு உயர்ந்தபட்சம் 15 உறுப்பினர்கள் இருக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விதம் உயர்த்தப்பட்ட உறுப்பினருள் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

3. வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கும் உரிமை முதன் முதலாகச் சட்டசபைக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அவ் விவாதம் தலைமை ஆளுநரின் நிர்வாக சபையினரைக் (Executive Council) கட்டுப்படுத்தாது. அவ் விவாதத்தை அவர்கள் எண்ணப்படி ஏற்கவோ ஒதுக்கவோ இயலும்.

4. பொதுப் பொருள்களைப் (General Subjects) பற்றிக் கேள்வி கேட்கும் உரிமையும் அளிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பதில் அளிக்கும் அவசியமோ அதைத் தொடர்ந்து உபரிக்கேள்வி கேட்கும் உரிமையோ வழங்கப்படவில்லை.

1892ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டம் இந்திய தேசியக் காங்கிரசின் கோரிக்கைகளைச் சிறிதே நிறைவேற்றியது எனலாம். இச் சட்டத்தினால் முன்பு இருந்ததைவிட அதிக உரிமைகள் சட்டசபை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டன. சட்டசபை உறுப்பினரை நியமிப்பதைவிடத் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும், சட்டசபைக்கு நிருவாகக் குழுவின் செயலைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் இச் சட்டம் கொடுத்தது. இவை யாவற்றையும்விடப் பல சலுகைகளைப் பிற்காலத்தே சட்ட சபையானது பெற இச் சட்டம் வழி வகுத்ததென்றே கூற வேண்டும்.

மார்லி-மின்டோ சீர்திருத்தங்கள் : இந்திய தேசியக் காங்கிரசின் கோரிக்கைகள் அனைத்தையும், 1892ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டம் நிறைவேற்றவில்லை. ஆகவே, காங்கிரசு தொடர்ந்து அரசியல் உரிமைகளுக்காகப் போராடியது. இதற்கிடையில் முற்போக்குக் கொள்கை கொண்ட லிபரல் கட்சி இங்கிலாந்தில் அமைச்சர் அவை அமைத்தது. மார்லி (Morely) என்பவர் இந்திய அமைச்சரானார்.

அடக்குமுறைக் கொள்கையால் தேசிய உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது என்றும், மிதவாதிகள், முஸ்லிம்கள் ஆதரவை இழந்துவிடக் கூடாது என்றும் ஆங்கில அரசு கருதியது. அதன் விளைவாக மார்லி பிரபு 1909ஆம் ஆண்டு ஒரு

சட்டத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றினர். இச் சட்டம் மார்லி-மின்டோ சட்டம் என்று வரலாற்றில் புகழ் பெற்றது.

அரசப் பிரதிநிதியின் நிருவாக சபை : இச் சட்டப்படி அரசப் பிரதிநிதியின் நிருவாகக் குழுவில் நடைமுறையில் இந்திய உறுப்பினருக்காக ஓர் இடம் ஒதுக்கப்பட்டது. அவ்வாறு முதல் இந்திய உறுப்பினராக ஆக்கப்பட்ட பெருமை சத்தியேந்திர பிரசன்ன சின்ஹா (Satyendra Prasanna Sinha) என்பவருக்குக் கிடைத்தது. சென்னை, பம்பாய் ஆளுநர்களின் நிருவாகக் குழுக்களின் உறுப்பினர் எண்ணிக்கையும் நான்காக உயர்த்தப் பட்டது. நிருவாகக் குழுக்களில் இந்தியர்களை நியமிக்க வேண்டுமென்று, 1909ஆம் ஆண்டின் சட்டம் குறிப்பாகத் தெரிவிக்கா விட்டாலும், செயலளவில் இந்தியர்களையே நியமிக்கும் முறை உண்டாயிற்று.

மத்திய சட்டசபை : சட்டசபைகளின் அமைப்பிலும் உரிமைகளிலும் முக்கிய மாறுதல்களை 1909ஆம் ஆண்டுச் சட்டம் செய்தது. மத்திய சட்டசபையில் அதிகமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினாறிலிருந்து அதிகப்பட்சமாக அறுபது வரையில் அதிகரிக்கப்பட்டது. அவர்களுள் இருபத்தெண்மருக்கு மேற்படாத உறுப்பினர்கள் அதிகாரிகளாய் (officials) இருப்பர். அதனுடன் குறிப்பிட்ட சில சமூகங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக அதிகாரிகள் அல்லாத மூவரை நியமிக்க அரசப் பிரதிநிதிக்கு உரிமையும் அளிக்கப்பட்டது. அவசியமிருந்தால் மேலும் இரண்டு இடங்களுக்குக்கூட உறுப்பினரை நியமிக்கும் உரிமை (nominated non-officials) அவரிடமிருந்தது மீதி இருக்கும் இருபத்தேழு இடங்களில், அதிகாரிகள் அல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் (Elected non-officials) நிரப்பப்படுவர். ஏழு மாநிலங்களில் நிலக்கிழார்கள் (Land owners), ஐந்து மாநிலங்களில் முகமதியர்கள், கல்கத்தாவிலும் பம்பாயிலுமிருந்த வாணிபக் குழுக்கள் (Chambers of Commerce) போன்ற பிரத்தியேகமான தொகுதிகள் மூலம் அவர்களுள் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுள் பதின்மூன்று பேர்களை ஒன்பது மாநிலச் சட்டசபையில் இருக்கும் அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள் (non-officials) தேர்ந்தெடுப்பார்கள். இவ்விதம் மத்திய சட்டசபையில் அதிகாரிகளின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிடச் சற்று அதிகமாய் இருக்கும்படி அமைக்கப் பட்டது.

மத்திய சட்டசபையின் சட்டமியற்றலும், நிருவாகச் செயலும், இங்கிலாந்துப் பாராளுமன்றத்தைப் பாதிக்காத வகையில் செயல்பட வேண்டுமென அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டது.

மாநிலச் சட்டசபை: சென்னை, பம்பாய் போன்ற மாநிலங்களின் சட்டசபைகளில் அதிகப்படியாய் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையின் உச்சவரம்பு (maximum) ஐம்பதாக உயர்த்தப்பட்டது. அதிகாரிகளையும் (officials) நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்களையும் (nominated non-officials) சேர்த்தால், அவர்களது எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிடச் சிறிது அதிகமாக இருக்கும்படி அமைக்கப்பட்டது. அதிகப்படுத்தப்பட்ட அதிகாரிகளல்லாத உறுப்பினர்கள் உள்ளாட்சித்துறை, நிலக்கிழார்கள், வாணிகக் குழுக்கள் (Chambers of Commerce), பல்கலைக்கழகங்கள் போன்றவைகளின் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முகமதியர்களுக்குத் தனித்தொகுதி அளிக்கப்பட்டது. 1909ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை அங்கீகரித்ததுடன், அதன் அடிப்படையிலேயே பிரதிநிதித்துவமும் அமைக்க வழிவகுத்தது.

1892ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தைவிடச் சில அதிகமான சலுகைகளை 1909ஆம் ஆண்டுச் சட்டம் சட்டசபைக்கு வழங்கியது. நிதிநிலை அறிக்கை (Budjet) பற்றிப் பொதுவாக விவாதிக்கும் உரிமை அதற்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், விவாதத்தின் முடிவை அரசு ஏற்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. முடிவான தீர்ப்பு அரசப் பிரதிநிதியாலேயே எடுக்கப்படும். சட்டசபையில் தீர்மானங்களைக் கொண்டுவந்து விவாதிக்கலாமே தவிர அவைகளைத் தள்ளவோ ஒப்புக்கொள்ளவோ தலைமை ஆளுநருக்குத் தாம் உரிமை உண்டு. மேலும், இராணுவம், அயல்நாட்டுக் கொள்கை, இந்திய சமஸ்தானங்கள் போன்றவைகளைப்பற்றி விவாதிக்கவும், தீர்மானங்கள் கொண்டுவரவும் சட்டசபைக்கு அதிகாரம் இல்லை. இவ்வாறே மாநிலங்களின் சட்டசபைச் செயல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் ஆளுநருக்கு வழங்கப்பட்டது. இதனால் சட்டசபையின் அதிகாரம் ஏட்டளவில் மிகுதியாக்கப்பட்டதேயன்றி உண்மையாகவே சட்டசபைக்கு வழங்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

ஏமாற்றம்: இந்திய மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு மார்லி-மின்டோ சீர்திருத்தங்கள் இல்லை. முதலில் பேராதரவு காட்டிய

கோகலே போன்றவர்கள் பின்னர்த் தங்கள் அதிருப்தியை வெளிப்படையாகவே தெரிவித்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் சட்டசபையில் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் அவர்களின் வாதத்தினாலும், தீர்மானங்களாலும் அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை மாற்ற இயலாது. மேலும் வகுப்புவாரித் (communal) தேர்தல் தொகுதிமுறையை இச் சட்டம் முதன்முதலில் இந்திய அரசியலில் புகுத்தியது. இதுவே இச் சட்டத்தின் முக்கிய அம்சமாகும். இதனால் பல வகுப்புக் கலவரங்கள் தோன்ற இச் சட்டம் வழிவகுத்தது. 1918ஆம் ஆண்டில் இந்திய அரசியல் சீர்திருத்தங்களைப்பற்றி அறிக்கையைத் (Report on Indian Constitutional Reforms) தயாரித்தவர்கள், 1909ஆம் ஆண்டுச் சட்டத்தின் குறைகளை மிகத் தெளிவாக இவ்விதம் கூறினர். 'மக்கள் ஆட்சிக்குச் சுவையாக இருப்பது அவர்களுக்குக் கொடுக்கப்படும் பொறுப்புத்தான். இப்போதுள்ள சபைகளுக்கு அச் சுவை முழுவதும் தேவையாய் இருக்கிறது. மறைமுகமான தேர்தலும், தனியான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் மறுக்க முடியாத தீமைகளாகும்.' இவ்விதம் பல குறைகள் மிகுந்திருந்தாலும் மார்லி-மின்டோ சீர்திருத் தங்கள், மக்களாட்சியைப் புகுத்துவதில் ஒரு முக்கிய அடிச் சுவட்டைக் குறிப்பதென்பதில் ஐயமில்லை.

செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் (1919)

ஆங்கில ஆட்சியில் நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்டிருந்த மிதவாதிகள்கூட 1909ஆம் ஆண்டுச் சட்டத்தால் மிக்க ஏமாற்றமே கொண்டனர். கோகலே போன்றோர் சட்டசபையில் உறுப்பினர்களாய் அமர்ந்து, அச் சட்டத்தினால் உண்மையான மக்களாட்சிக்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்பதை நேரடியாக அறிந்துகொண்டனர். இங்கிலாந்துப் பாராளு மன்றம் ஏமாற்றிவிட்டது என்பதை இந்தியர்கள் நன்கு புரிந்து கொண்டனர். இதனால் 1907-ல் பிளவுபட்ட மிதவாதிகளும் தீவிரவாதிகளும் 1916ஆம் ஆண்டில் ஒன்றாய் இணைந்தனர். அன்னிபெஸன்ட் அம்மையார் 1916ஆம் ஆண்டில் சுய ஆட்சி (Home Rule) இயக்கம் ஒன்றைத் தொடங்கினார். அதன்மூலம் காங்கிரசின் கொள்கைக்கு ஆதரவு அளித்தார். இதற்கிடையில் முஸ்லிம் லீகும் நாட்டில் நிலவிய தேசிய உணர்ச்சியை உணர்ந்து, அதை ஆதரிக்க ஆரம்பித்தது. 1913ஆம் ஆண்டு முஸ்லிம் லீகும் ஒரு தீர்மானத்தின்மூலம் 'இங்கிலாந்துப் பேரரசுக்குள் இயங்கும் சுய ஆட்சியை'த் தன் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டது. பிரிட்டன் முகமதிய நாடுகளான துருக்கி

போன்றவைகளுடன் போரிட்டதனால், ஆங்கில ஆட்சிக்கு எதிரான உணர்ச்சி, பெரும்பான்மையான முஸ்லிம்களிடம் தோன்றியது. இதனால் லீகும் காங்கிரசும் ஒத்துழைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. 1916ஆம் ஆண்டில் காங்கிரசும் லீகும் 'லக்னோ உடன்படிக்கை'யைத் (Lucknow Pact) தமக்குள் செய்துகொண்டன. அதன்படி தனித் தேர்தல் தொகுதி முறையைக் காங்கிரசு ஏற்றுக்கொண்டது. டொமினியன் அந்தஸ்தை (Dominion Status) அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் அமைப்பை இரண்டு சபைகளும் சேர்ந்து உருவாக்கின. இச் சூழ்நிலையில், இந்தியர் முதலாம் உலகப் போரில் ஈடுபட்ட பிரிட்டனுக்கு உதவி செய்தனர். போரின் பல முக்கியக் கட்டங்களில் இந்தியப் போர் வீரர்கள் சிறந்த சேவைகளை இங்கிலாந்துப் பேரரசுக்கு ஆற்றினர்.' இந்தியாவின் உதவி இல்லாவிடில், உலகப் போர் இன்னும் நீடித்திருக்கும். அந் நாட்டின் உதவி இல்லாவிடில் இப் போர் வெற்றிகரமான முடிவுக்கு வந்திருக்குமா என்பது உண்மையில் ஐயத்தைத் தரக் கூடியதுதான்' என்று ஒரு பொறுப்புமிக்க ஆங்கிலப் பிரபு வெளிப்படையாகவே கூறினர். இந்தியாவிற்கு அரசியல் சீர் திருத்தங்களை வழங்கி, அதன் உதவிக்குக் கைம்மாறு செய்ய வேண்டியது இங்கிலாந்தின் தலையாய கடன் என்றும் கருதப் பட்டது. மேலும், உலகத்தில் குடியரசைப் பாதுகாப்பதற்காகத் தான் இங்கிலாந்து முதலாம் உலகப் போரில் இறங்கிற்று என்று இங்கிலாந்துப் பாராளுமன்றம் பிரகடனம் செய்தது. ஆகவே, சுதந்திரமற்ற மக்களுக்குத் தன்னாட்சியை வழங்குவதே அக் கொள்கையை உண்மையிலே பிரிட்டன் பின்பற்றுவதற்கு அறிகுறி எனப் பாராளுமன்றம் நினைத்தது. இதன் விளைவாக இந்திய அமைச்சர் மான்டேகு பிரபு, 1917ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17ஆம் தேதி பின்வரும் பிரபல அறிக்கையை வெளி யிட்டார் : 'ஆங்கிலப் பேரரசின் ஓர் உறுப்பாய் உள்ள இந்தியா வில், பொறுப்புள்ள ஆட்சியைப் படிப்படியாக ஏற்படுத்தும் நோக்கத்துடன், ஆட்சியின் ஒவ்வொரு பிரிவிலும் அதிகப்படி யான இந்தியர்களைச் சேர்த்துக் கொள்வதும், தன்னாட்சி நிறுவ னங்களைப் படிப்படியாக வளர்ப்பதுமே மேன்மை தங்கிய பேரரசரின் கொள்கையாகும். இதை இந்திய அரசாங்கமும் ஏற்றுக்கொள்கிறது.' மான்டேகு பிரபு இந்தியாவிற்கு 1917ஆம் ஆண்டு வந்தார். பொதுமக்களின் கருத்தைத் தெரிந்து கொண்டு, இங்கிலாந்து திரும்பியவுடன் மான்டேகு-செம்ஸ்-ஃபோர்டு சீர்திருத்தங்கள் (Montagu-Chelmsford) என்னுமோர் அறிக்கையை வெளியிட்டார். இவ் வறிக்கையே 1919ஆம்

ஆண்டில் இந்திய அரசு சட்டமாக நிறைவேற்றப்பட்டது. 1919ஆம் ஆண்டில் இச் சட்டம் இயற்றும்போது செம்ஸ்ஃபோர்டு பிரபு இந்தியாவில் அரசப் பிரதிநிதியாக இருந்ததால் இச் சட்டத்தை மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு சட்டம் என்பர்.

சட்டத்தின் முக்கிய விதிகள் : 1919ஆம் ஆண்டுச் சட்டம் இந்திய ஆட்சிமுறையில் பல மாற்றங்களைச் செய்தது.

1. இந்திய அமைச்சரின் ஊதியம், இதுவரையில் இந்திய நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு வந்த வழக்கத்தை நீக்கி இங்கிலாந்து நிதியிலிருந்து அவருடைய ஊதியத்தைக் கொடுக்கும்படி இச் சட்டம் வகைசெய்தது. இந்திய அமைச்சரின் அதிகாரங்களும் வெகுவாகக் குறைக்கப்பட்டன. படை, அயல் நாட்டுத் தொடர்புகள், அரசியல் கடன்கள், நாணயச் செலாவணி போன்ற குறிப்பிட்ட காரியங்களுக்கு மட்டுமே அரசப் பிரதிநிதி அடங்கிய ஆலோசனைக் குழுவானது இந்திய அமைச்சரைக் கலந்து செயல்பட வேண்டுமென இச் சட்டம் அறிவித்தது.

2. இந்தியக் குழுவின் உறுப்பினரின் எண்ணிக்கை எட்டுக்குக் குறைவுபடாமலும் பன்னிரண்டுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. அவ் வுறுப்பினர்கள் ஐந்தாண்டுகள் பதவியில் இருக்கலாம் என்று நிர்ணயிக்கப்பட்டது.

3. இங்கிலாந்தில் இந்தியரின் தேவைகளைக் கவனிக்கும் பொருட்டு இந்திய உயர் ஆணையாளர் (High Commissioner for India) என்ற புதிய அதிகாரியை இச் சட்டம் நியமித்தது. இவர் தலைமை ஆளுநரின் நிருவாகக் குழுவின் தூதராக இங்கிலாந்தில் பணியாற்றினர். இந்தியா சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களுக்கும் அவரே ஆங்கில அரசுக்குப் பொறுப்பாளியாக விளங்கினர். அவர் ஊதியம் இந்திய நிதியிலிருந்து கொடுக்கப்பட்டது.

மத்திய-மாநில ஆட்சித் துறையினைப் பிரிவினைப்படுத்தல் : மத்திய, மாநில அரசுகளின் பணிகளை (functions) முடிந்த அளவுக்கு இச் சட்டம் தெளிவாகப் பிரிவினை செய்தது. பாதுகாப்பு, அயல்நாட்டு விவகாரங்கள், படைப் போக்குவரத்து, தபால் தந்தி, நாணயம், பொதுக் கடன், வாணிகம், பொருளியல், குற்றவியல் சட்டம், மத சம்பந்தமான நிருவாகம், இந்தியப் பணித்துறை, மாநில அரசு பட்டியலில் குறிப்பிடாத

மற்றத் துறைகள் அனைத்தும் மத்திய ஆட்சியின்கீழ்க் கொண்டு வரப்பட்டன.

மாநிலங்களின் அரசுக்கு உள்நாட்டுச் சட்டம், அமைதி, நீதி பரிபாலனம், சிறைச்சாலைகளின் நிர்வாகம், நீர்ப்பாசனம், காடுகள், தொழிற்சாலைகளைப் பார்வையிடல், பஞ்ச நிவாரணம், நிலவரி நிர்வாகம், தல சுய ஆட்சி, கல்வி, மருத்துவம், சுகாதாரம், மராமத்து வேலைகள், வேளாண்மை, ஆயத் தீர்வை, கூட்டுறவுச் சங்கங்கள் கொடுக்கப்பட்டன.

மத்திய சட்டசபைகள் : ஈரங்க மத்திய சட்டசபை (Bi-Cameral Legislature) ஒன்று அமைக்கப்பட்டது. அவை நாட்டு மேல்சபை (Council of States), சட்டசபை (Legislature Council) எனப்பட்டன.

நாட்டு மேல்சபை : மேல்சபை என்று அழைக்கப்பட்ட ராஜ்ய சபை அதிகப்பட்சம் 60 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவர்களுள் 34 உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். நியமிக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகள் 20 பேருக்கு மேல் இருக்கக் கூடாது என வரையறுக்கப்பட்டது. மற்ற 6 உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகளல்லாதவர்களாக நியமனம் செய்யப்பட்டனர் (nominated non-officials). நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 34 உறுப்பினருள் 19 பேர் பொதுத்தொகுதியின் மூலமும், 11 பேர் முஸ்லிம்களாலும், ஒருவர் சீக்கியராலும், மூவர் ஐரோப்பியராலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ராஜ்ய சபை உறுப்பினர்கள் ஐந்து ஆண்டு காலம் பதவியிலிருப்பர். ஆனால், அரசப் பிரதிநிதி விரும்பினால் அவர்களின் பதவிக் காலம் நீடிக்கவும் குறைக்கவும் படலாம்.

மத்திய சட்டசபை : மத்திய சட்டசபையில் 145 உறுப்பினர்கள் இருப்பர். அவர்களுள் 105 உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். 26 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகளாகவும் (nominated officials), 14 உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் அல்லாதவர்களாகவும் நியமனம் செய்யப்படுவர் (nominated non-officials). நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினருள், பொதுத் தொகுதியின் மூலம் 53 பேரும், முகமதியர்களால் 30 பேரும், சீக்கியரால் 2 பேரும், ஐரோப்பியரால் 9 பேரும், நிலக்கிழார்களால் 7 பேரும், வாணிகக் குழுக்களால் (Chambers of Commerce) 4 பேரும் தேர்ந்தெடுக்கப்படுவர். அரசப் பிரதிநிதியின் நிருவாகக்

குழுவின் உறுப்பினர்கள், இரண்டு சபைகளுள் ஏதாவது ஒன்றில் உறுப்பினர்களாய் இருக்கலாம். எந்தச் சபையில் அவர்கள் உறுப்பினராயிருக்கலாம் என்பதை வைஸ்ராய் நிர்ணயிப்பார். மூன்று ஆண்டுகளுக்குச் சட்டசபை உறுப்பினர்கள் பதவி வகிப்பர். ஆனால், அதற்குமுன் சட்டசபையைக் கலைக்கவோ நீடிக்கவோ செய்யும் உரிமையை அரசப் பிரதிநிதி பெற்றிருந்தார்.

உரிமைகள் : இரண்டு சபைகளுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட்டன. நிதி சம்பந்தப்பட்டவை மட்டும் சட்டசபையில் சமர்ப்பிக்கப்படவேண்டும். மற்றத் துறையில் இரு சபைகளுக்கும் வேற்றுமை கிடையாது. இரு சபைகளுக்கிடையே முட்டுநிலை (dead lock) ஏற்பட்டால், அரசப் பிரதிநிதி அவ் விரு சபைகளையும் ஒன்றாய் அமரச் செய்து அச் சிக்கலை நீக்க வழி செய்யலாம். நாட்டு மேல் சபைக்குத் தலைவர் ஒருவர், அரசப் பிரதிநிதியால் நியமிக்கப்படுவார். சட்டசபைக்கும் தனித் தலைவர் உண்டு. அத் தலைவரை முதல் நான்கு ஆண்டுகளுக்கு அரசப் பிரதிநிதி நியமிப்பார். பிறகு அச் சபையே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

மத்திய சட்டசபைகளின் அதிகாரங்கள் மிகவும் விரிவு படுத்தப்பட்டன. ஆங்கிலேய இந்தியா முழுவதற்கும் சட்டங்களை இயற்றும் உரிமை மத்திய சட்டசபைகளுக்குத் தரப் பட்டது. ஆனால், மத்திய சட்டசபை நிராகரித்த வரைவை (Bill), அரசப் பிரதிநிதி நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்தால் அதைச் செயல்படுத்தும் உரிமை அவருக்குத் தரப்பட்டது. இதனால் மத்திய சட்டசபையின் சட்டமியற்றும் அதிகாரம் பெயரளவில் இருந்தது என்றே கூறவேண்டும். மேலும், இந்தியாவின் பாதுகாப்பிற்கும், அமைதிக்கும் அவசியம் என்று அரசப் பிரதிநிதி சட்டசபைக்கு எதிராக எந்த வரைவையும் சட்டமாக்கலாம். அதனுடன் நெருக்கடி காலத்தில், அவசரச் சட்டங்களைப் (Ordinances) பிறப்பிக்கவும் அவருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டது.

மேலும், சில குறிப்பிட்ட துறைகளில் சட்டசபை தலையிடக் கூடாதென்றும் வரையறுக்கப்பட்டது. சுருக்கமாகக் கூறினால் அரசப் பிரதிநிதி சட்டசபையின் உரிமைகளை எந்த நிமிடத்திலும் செயல்படாமல் செய்யும் அதிகாரம் பெற்றிருந்தார். அரசப் பிரதிநிதிக்கு அளிக்கப்பட்டிருந்த அளவுகடந்த அதிகாரத்தினால் சட்டசபை பெயரளவில் இயங்கியதே அன்றி

உண்மையான பொறுப்புள்ள அவையாக இயங்கவில்லை என்றே கூறலாம்.

மாநிலங்களில் இரட்டை ஆட்சி
(Dyarchy in the Provinces)

1909ஆம் ஆண்டுச் சட்டத்தின் தனிச் சிறப்பு, வகுப்புவாரித் தொகுதி முறையைப் புகுத்தியது. அவ்விதமே 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் முக்கியப் பகுதி மாநிலங்களில் இரட்டையாட்சியைப் (Dyarchy) புகுத்தியதேயாகும். இந்த இரட்டையாட்சி, கிளைவ் வங்காளத்தில் புகுத்திய இரட்டையாட்சியைப் போன்றதன்று. மத்திய மாநிலங்களுக்கென்று சில துறைகள் பிரிவினை செய்யப்பட்டதாகப் பார்த்தோம். அவ்வித மாநிலங்களுக்கிடையே பிரிவினை செய்யப்பட்ட துறைகள் நிருவாகத்தின் பொருட்டு மீண்டும் இரு கூறுகளாகப் போடப்பட்டன. ஒரு கூறு 'ஒதுக்கப்பட்ட துறை' (Reserved subjects) என்றும், மறு கூறு மாற்றப்பட்டதுறை' (Transferred subjects) என்றும் வழங்கப்பட்டன. நீதி நிர்வாகம், காவற் படை, நீர்ப்பாசனம், நிலவரி, விவசாயக் கடன், பஞ்ச நிவாரணம், செய்தித் துறை, சிறைச் சாலைகள் போன்றன ஒதுக்கிய துறையின்கீழ் இயங்கின. உள்ளாட்சிமுறை, மருத்துவம், கல்வி, பொதுப்பணி போன்றன மாற்றப்பட்ட துறையின்கீழ் இயங்கின. ஒதுக்கப்பட்ட துறைகளின் நிருவாகம் ஆளுநரின் நிருவாகக் குழு உறுப்பினர்களால் ஆட்சி செலுத்தப்பட்டது. 'மாற்றப்பட்ட துறை' அமைச்சர்களால் நிர்வகிக்கப்பட்டது. மாநிலச் சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து இவ் வமைச்சர்களை ஆளுநர் நியமித்தார். அவர்கள் ஆளுநர் விரும்பும் காலம் வரை பதவியில் இருப்பர். அவர்கள் மாநிலச் சட்டசபைக்குக் கட்டுப்பட்டவரல்லர். மாநிலங்களில் ஓரங்கச் சட்டசபை மட்டும் (Uni-Cameral) இருந்தது. அதன் அதிகப்பட்ச எண்ணிக்கை வங்காளத்தில் 140-ம் சென்னையில் 132-ம், உத்தரப் பிரதேசத்தில் 120-ம் பம்பாயில் 114-ம், பீகார் ஓரிஸ்ஸாவில் 103-ம், பஞ்சாபில் 94-ம் மத்திய மாநிலங்களில் 73-ம், அஸ்ஸாமில் 53-ம் ஆக நிர்ணயிக்கப்பட்டன. உறுப்பினர்களுள் 70 சதவீதம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் 20 சதவீதத்திற்குமேல் அதிகாரிகள் இருக்கக் கூடாது என்றும் வரையறுக்கப்பட்டது. நிலக்கிழார்கள், வாணிகக் குழுக்கள், பல்கலைக்கழகங்கள், முகமதியர்கள், சீக்கியர்கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், இந்தியக் கிறித்துவர்கள் ஆகிய சமுதாயத்தினருக்கும் அவர்களுடைய வாக்காளர்கள் மூலம்

தனித்தனியான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 'நேரடித் தேர்தல்' முறை செயற்பட்ட போதிலும் வாக்குரிமை மிகவும் கட்டுப்படுத்தப்பட்டே இருந்தது. இதனால் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளித்ததாகக் கருத முடியாது. மாநிலங்களின் சட்டசபை 3 ஆண்டுகள் இயங்கும். இதற்குமுன் அதைக் கலைக்கவோ அதற்கு மேல் அதை நீடிக்கவோ ஆளுநர் அதிகாரம் பெற்றிருந்தார்.

குறைகள் : (1) இரட்டை ஆட்சி 1921ஆம் ஆண்டிலிருந்து 1937ஆம் ஆண்டுவரை மாநிலங்களில் நிலவியது. பல காரணங்களால் இவ் வாட்சிமுறை வெற்றி பெறவில்லை. முக்கியமான இரு கூறுகள் சரியாக வரையறுக்கப்படவில்லை. சர் கே.வி. ரெட்டி (Sir K.V. Reddy) சென்னையில் இவ் வாட்சியில் அமைச்சராய்ப் பணிபுரிந்தார். இவர் இதைப்பற்றி, "நான் வளர்ச்சித் துறை (Development) அமைச்சராயிருந்தேன். ஆனால், காட்டைப் பராமரிக்கும் பணி அதன்கீழ் வரவில்லை. அப்படியே நான் வேளாண்மை (Agriculture) அமைச்சராயிருந்தேன். நீர்ப்பாசனத் துறை அதன்கீழ் இயங்கவில்லை. வோண்மைத் துறை அமைச்சராயிருந்த எனக்கும், உழவர்களின் கடன் உதவிச் சட்டத்திற்கும் அல்லது சென்னை நிலப் பகுதியின் முன்னேற்றத்திற்கான கடன் சட்டத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. பஞ்ச நிவாரணப் பகுதியை வேளாண்மை மந்திரி தொடக்கூட முடியாது உழவர்களின் கடன் வசதிக்கோ நீர்ப்பாசனப் பகுதிக்கோ பஞ்ச நிவாரணத்திற்கோ யாதொரு சம்பந்தமுமில்லாத வேளாண்மை மந்திரியின் ஆட்சித் திறனை எடுத்துச் சொல்வதைவிட நினைத்துப் பார்ப்பது சுலபமான செயல். பிறகு நான் தொழில் அமைச்சராயிருந்தேன். தொழிற்சாலை, மின்சாரம், சுரங்கத் தொழிலாளர் நலன் போன்ற துறைக்கும் தொழில் அமைச்சருக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. ஏனென்றால், அவை எல்லாம் 'ஒதுக்கப்பட்ட துறை'யின்கீழ் இயங்கின. கல்வி 'மாற்றப்பட்ட துறை'யைச் சார்ந்தது. ஆனால், ஐரோப்பிய, ஆங்கிலோ-இந்தியர் கல்வி ஒதுக்கப்பட்ட துறையைச் சார்ந்தது. இவ்விதக் குறைபாடுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்" என்று கூறுவர்.

2. 'ஒதுக்கப்பட்ட துறை'யும் 'மாற்றப்பட்ட துறை'யும் யாதொரு ஒற்றுமையுமின்றி இயங்கின. பொதுவாக ஆளுநர் ஒதுக்கப்பட்ட துறையையே ஆதரித்தார். இதனால் வெளிப்படையாகவே பொது இடங்களிலும் இவ்விரு துறையைச் சார்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசிக் கொண்டனர்.

3. அமைச்சர்களின் நிலைமை மிகவும் பரிதாபமான நிலையில் இருந்தது. சட்டசபையிலிருந்து அமைச்சர் அமர்த்தப்பட்டாலும், அவர்களின் பதவி ஆளுநரின் கையி லிருந்தது. ஆகவே, அவர்கள் மக்களின் பிரதிநிதியாகப் பணியாற்ற இயலவில்லை. ஆளுநருக்கே அவர்கள் பொறுப்பானவர்கள் என்ற கருத்தே அமைச்சர்கள் மனத்தில் நிலவியது. ஏனெனில், எந்த நிமிடத்திலும், ஆளுநர் அவர்களை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிடமுடியும். பனகல் இராஜா (Raja of Panagal) என்பவர் சென்னையில் இச் சட்டத்தின்கீழ் அமைச்சராகப் பணிபுரிந்தவர். இவர் வெளிப்படையாகவே இவ் வுண்மையை ஒப்புக்கொண்டார்.

4. அமைச்சர்களுக்குள்ளும் ஒற்றுமை இல்லை. அவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியையும் சார்ந்தில்லை. ஆகவே, பொறுப் புணர்ச்சி அவர்களிடமில்லை. அவர்களுக்குள்ளேயே போட்டியும் பொறுமையும் மிகுந்திருந்தன.

5. அடுத்த முக்கியக் குறை நிதி. நிதி 'ஒதுக்கிய துறை'யைச் சார்ந்தது. ஆகவே, அமைச்சர்களால் எவ்வித முன்னேற்றத் திட்டத்தையும் அமல்செய்ய இயலவில்லை. நிதி அமைச்சர் ஆதரவு கிடைத்தால்தான் எந்தச் செயலையும் செய்கையில் நிறை வேற்ற முடியும்.

இவ்விதக் குறைகள் இருந்த போதிலும், 1919ஆம் ஆண்டுச் சட்டம் இந்திய அரசியல் வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல் கல்லைக் குறிக்கின்றதென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. இச் சட்டத்தின்படி, பரந்த வாக்குரிமைமூலம் முதன்முறையாக உண் டாக்கப்பட்ட நேரடித் தேர்தலை ஒரு முக்கியச் சலுகையாகவே கருத வேண்டும். மேலும், அரசியல் பயிற்சி பெறுவதற்கும், அரசின் நடவடிக்கையின்மீது தம் செல்வாக்கை உபயோகிப் பதற்கும் ஒரு முக்கியச் சந்தர்ப்பத்தை இச் சட்டம் இந்தியருக்கு அளித்தது. அதனுடன் இச் சட்டம் அமலுக்கு வந்த பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, பாராளுமன்றத்தின் அனுமதியுடன் ஒரு விசாரணைக் குழு அமைத்து, இச் சட்ட விளைவுகளை நன்கு ஆராய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. அப்படி அமைக்கப்பட்ட குழு, பொறுப்பாட்சியை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று கூறினால், அதன்படி புதிய சட்டம் இயற்ற வேண்டும் என்றும் வழிவகுத்தது. இதற்கேற்ப 1929-ல் அமைக்கப்படவிருந்த குழுவானது 1927ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டது. அதுவே சைமன் குழு எனப்படுவதாகும்.

சைமன் குழுவும் வட்டமேசை மாநாடுகளும்

சைமன் என்பாரின் தலைமையில் ஏற்பட்ட குழுவில் ஏழு உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் எவரும் இந்தியர் அல்லர். இந்தியர் எவரும் இக் குழுவில் இடம்பெருததைக் கண்டு இந்திய மக்கள் ஆத்திரமடைந்தனர். 1928, 1929 ஆகிய ஆண்டுகளிலும் சைமன் குழு இருமுறை இந்தியாவிற்கு வந்தது. அக் குழுவை இந்தியத் தலைவர்கள் புறக்கணித்தார்கள். எனினும், சைமன் குழு தனது அறிக்கையை 1930-ல் வெளியிட்டது. இதில், மாநிலங்களில் இரட்டை ஆட்சியை ஒழித்து முழுத் தன்னுட்சியை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டிருந்தது. ஆனால், மத்திய அரசு நிருவாகத்தில் எத்தகைய மாறுதல் செய்வதையும் அது விரும்பவில்லை. இத் திட்டத்தை மிதவாதிகள் உட்பட இந்தியர்கள் அனைவரும் கண்டித்தனர். இந் நிலையில் வட்டமேசை மாநாடு ஒன்றை இலண்டனில் இங்கிலாந்து அரசு கூட்டியது. இதற்குக் காங்கிரஸ் அழைக்கப்படவில்லை. இதில் கலந்து கொள்ளக் காங்கிரஸ் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் பலனளிக்க வில்லை. காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினர். பின்னர், 1931 மார்ச் மாதத்தில் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் பயனுகைச் சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டது. 1931 செப்டம்பர்—டிசம்பர் மாதங்களில் இரண்டாவது வட்டமேசை மாநாடு இலண்டனில் கூட்டப் பட்டது.

இம் மாநாட்டில் காந்தியடிகள் இந்திய தேசியக் காங்கிரசின் ஏகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். இம் மாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் குறித்து இந்தியத் தலைவர்களிடையே எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. இதனுல் இம் மாநாடு தோல்வி கண்டது. எனினும், இந்தியாவுக்கு ஓர் அரசியல் அமைப்பை உருவாக்குவதில் ஆங்கில அரசினர் தொடர்ந்து ஆர்வம் காட்டி வந்தனர். 1931 இறுதியில், வாக்குரிமைபற்றி ஆராய்வதற்கென ஒரு குழுவும், பொருளாதார நிலையை ஆராய்வதற்கென ஒரு குழுவும் நியமிக்கப்பட்டன. இச் சமயத்தில் சட்டமறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ் மீண்டும் தொடங்கியது. தலைமை ஆளுநர் வெல்லிங்டன் பிரபு, இவ்வியக்கத்தை இரும்புக்கரங்கொண்டு கடுமையாக அடக்கினர். காந்தியடிகள் கைதானர். காங்கிரஸ் சட்ட விரோதமான இயக்கமென அறிவிக்கப்பட்டது. 1932 ஆகஸ்டு மாதத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதி அமைக்கும் தன் திட்டத்தை ஆங்கில அரசு வெளியிட்டது. இந்தத் திட்டத்தைக்

காந்தியடிகள் விரும்பவில்லை. அதனால், அவர் இத் திட்டத்தை மாற்ற வேண்டுமெனக் கோரிச் சிறையிலிருந்தவாறே சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். உடல்நிலை மோசமடையவே காந்தியடிகளை அரசு விடுதலை செய்தது. 1932 செப்டம்பரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தலைவரான டாக்டர் அம்பேத்காருக்கும், காந்தியடிகளுக்குமிடையே பூனாவில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி தாழ்த்தப்பட்டோருக்கான தனித்தொகுதி முறை கைவிடப்பட்டது. பதிலாகப் பொதுத் தொகுதியிலிருந்தே தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டது.

மூன்றாவது வட்டமேசை மாநாடு 1931 நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இங்கிலாந்தில் நடந்தது, இதற்குக் காங்கிரஸ் அழைக்கப்படவில்லை. அரசியல் அமைப்புக் குறித்து இதுவரை ஏற்பட்டிருந்த உடன்பாட்டின்படி வெள்ளை அறிக்கை (White Paper) ஒன்றை 1933 மார்ச் மாதத்தில் ஆங்கில அரசு வெளியிட்டது. அதே ஆண்டில் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் இதற்கெனக் கூட்டு ஆய்வுக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. லின்லித்கோ பிரபு தலைமையிலான இக் குழு 1934 நவம்பரில் தன் அறிக்கையை அளித்தது. இவ் வறிக்கையின் அடிப்படையில் 1935 பிப்ரவரியில் பாராளுமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது. இதுவே, 1935ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்பதாகும்.

1935ஆம் ஆண்டுச் சட்டம்: 1935ஆம் ஆண்டுச் சட்டம், மத்தியில் பிரிட்டிஷ் இந்தியா என அழைக்கப்பட்ட மாநிலங்களும் (Provinces), சுதேச அரசுகளும் (Indian States) சேர்ந்த ஒரு கூட்டாட்சி (Federation) அரசு அமைப்பதற்கு இடமளித்தது. மாநில அரசுகளுக்கும், மத்தியக் கூட்டாட்சி அரசுக்குமிடையே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ் வதிகாரப் பங்கீடு பற்றி மூன்று பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. அவை கூட்டாட்சி அதிகாரப் பட்டியல், மாநில அதிகாரப் பட்டியல், இரண்டு அரசுகளுக்கும் பொதுவான அதிகாரப் பட்டியல் என்பன. முதற் பட்டியலில் 59 இனங்களும், இரண்டாம் பட்டியலில் 54 இனங்களும், மூன்றும் பட்டியலில் 36 இனங்களும் இடம் பெற்றிருந்தன. மூன்றும் பட்டியலில் கண்டவற்றைப்பற்றிக் கூட்டாட்சி அரசும், மாநில அரசும் முரணான சட்டங்களை இயற்றினால், கூட்டாட்சி அரசின் சட்டங்களே செல்லுபடியாகும். இம் மூன்று பட்டியல்களிலும் காணாத அதிகாரம் ஏதேனும்

இருந்தால், அதை மாநில அரசுக்கோ, மத்தியக் கூட்டாட்சி அரசுக்கோ தலைமை ஆளுநர் வழங்கலாம்.

மாநிலங்கள் அனைத்தும் மத்தியக் கூட்டாட்சியில் கட்டாயமாகச் சேர்ந்தாக வேண்டும். ஆனால், சுதேச அரசுகள் விரும்பினால் கூட்டாட்சியில் சேரலாம்; இல்லையெனில் சேராமலிருக்கலாம். அவ்விதம் சேராத சுதேச அரசுகள் ஆங்கில அரசின் மூலம் மேலாண்மையின்கீழ்த் தொடர்ந்து இருந்து வரும். கூட்டாட்சியில் சேர்ந்த சுதேச அரசுகள், சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கூட்டாட்சி அரசுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும். இவ்விதம் விட்டுக்கொடுத்த அதிகாரங்களை அவை திரும்பப்பெற இயலாது; வேண்டுமானால் மேலும் சில அதிகாரங்களைக் கூட்டாட்சிக்கு விட்டுக்கொடுக்கலாம். மாநில அரசுகள் மீதும், சுதேச அரசுகளின் மீதும் கூட்டாட்சி அரசு செலுத்தும் அதிகாரம் வேறுபட்டிருந்தது. எல்லா மாலநிங்களின் மீதும் ஒரே மாதிரியான அதிகாரத்தைக் கூட்டாட்சி அரசு செலுத்தும். ஆனால், சுதேச அரசுகளைப் பொறுத்த வரையில் கூட்டாட்சியின் அதிகாரங்கள் அரசுக்கு அரசு வேறுபடும். சட்டம் இயற்றும் அதிகாரம் கூட்டாட்சிக்கு இருந்தது. எனினும், சுதேச அரசுகள் ஒப்புதல் தெரிவிக்காவிடில் கூட்டாட்சியின் சட்டங்கள் செல்லாமல் போய்விடும்.

மத்தியச் சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதிலும் மாநிலங்களுக்கும், சுதேச அரசுகளுக்குமிடையே வேறுபாடு இருந்தது. மாநிலங்களிலிருந்து உறுப்பினர்கள் மக்கள் தொகை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால், சுதேச அரசுகள் தங்கள் பிரதிநிதிகளைத் தங்கள் விருப்பம்போல் நியமித்துக்கொள்ளலாம். மேலும், சுதேச அரசுகளின் உறுப்பினர் எண்ணிக்கை அவற்றின் பரப்பு, மக்கள்தொகை அடிப்படையில் நிருணயிக்கப்படவில்லை. மத்தியச் சட்டமன்றத்தின் (Council of State) மொத்த உறுப்பினர்கள் 156 பேரில், சுதேச அரசுகளின் உறுப்பினர்கள் 106 பேர் என நிருணயிக்கப்பட்டிருந்தது. மத்தியக் கீழ்ச்சபையில் (Federal Assembly) மொத்த இடங்களில் 250 பேரில் சரிபாதி (125) சுதேச அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டன.

கூட்டாட்சி அமைச்சரவை : 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, மத்திய அரசில் இரட்டை ஆட்சி (Diarchy) ஏற்பட்டது. நிருவாகத் துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Departments) என்றும், மாற்றப்பட்ட துறைகள் (Tranferred

Departments) என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. நாட்டுப் பாதுகாப்பு, அயல்நாட்டு உறவு, சமயம் போன்றவை மாறுத் துறைகள் என வரையறுக்கப்பட்டன. இத் துறைகளைத் தலைமை ஆளுநருக்குப் பொறுப்பான மூன்று ஆலோசகர்கள் நிருவகித்து வருவார்கள். இவை தவிர்த்த மற்றத் துறைகள் அனைத்தும் மாற்றப்பட்ட துறைகள் ஆகும். இத் துறைகளை 10 பேருக்கு மேற்படாத அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை நிருவகித்து வரும். இத் துறைகளில், அமைச்சர்களின் ஆலோசனைப் படி தலைமை ஆளுநர் நடக்க வேண்டும். இவ்வாறு மாற்றப் பட்ட துறைகளிலும், நாட்டின் சட்டம் ஒழுங்கு, மத்திய அரசின் நிதி, சிறுபான்மையோர் நலம், அரசு அதிகாரிகள் நிலை, இறக்குமதி, சுதேச அரசுகளின் உரிமைப் பாதுகாப்பு போன்ற வற்றில் தம் விருப்பப்படி நடக்கத் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. தலைமை ஆளுநரின் இந்த அதிகாரம், சட்டமன்றத் தின் உரிமைகளைக் குறைப்பதாக அமைந்தது. மேலும், அமைச் சரவை சுதந்திரமாக இயங்குவதைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த அதிகாரம் பயன்பட்டது. மத்திய அரசில், அரசியல் நெருக்கடி ஏற்படுமாயின், அமைச்சரவையைக் கலைத்துவிட்டுத் தலைமை ஆளுநரே எல்லா அதிகாரங்களையும் செலுத்தலாம். இந் நிலை ஆறு மாதங்களுக்குமேல் நீடிக்கக்கூடாது. அவ்வாறு நீடிக்க வேண்டுமெனில், இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் அனுமதி பெறவேண்டும். அதுவும் மூன்றுண்டுகளுக்குமேல் வழங்கப்படமாட்டாது. இவ்வாறு மத்திய அரசில் இரட்டை ஆட்சி ஏற்பட்டது. இந்த இரட்டை ஆட்சி முறையைத்தான் முன்பு சைமன் குழு கண்டனம் செய்திருந்தது. அதே இரட்டை ஆட்சிமுறைதான் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் மீண்டும் அமைந்தது.

மத்திய மேல்சபை (Council of State): மத்தியக் கூட் டாட்சிச் சட்டமன்றத்தில் (Federal Legislative), மேல்சபை, கீழ்ச்சபை (Federal Assembly) என இரு சபைகள் அமைக்க 1935ஆம் ஆண்டுச் சட்டம் வழிவகுத்தது. மேல்சபையின் மொத்த உறுப்பினர்கள் 250. இவர்களில் மாநிலங்களின் பிரதி நிதிகள் 156; சுதேச அரசுகளின் உறுப்பினர்கள் 104. மேல்சபை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் மூன்றுண்டுகளுக்கு ஒரு முறை பதவி நீங்குவர். அதே எண்ணிக்கையுடைய புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். மாநிலப் பிரதிநிதிகள் 156 பேரில் அறுவரைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிலிருந்து தலைமை ஆளுநர் நியமிப்பார். மீதி 150 பேரும் ஒவ்வொரு வகுப்பினரிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சுதேச அரசு

களுக்கான 104 பிரதிநிதிகளை அவற்றின் அரசர்களே நியமிப்பார்கள்.

மத்தியக் கீழ்ச்சபை : மத்தியக் கீழ்ச்சபையில் மொத்தம் 250 உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மொத்த உறுப்பினர்களில் மாநிலங்களின் உறுப்பினர்கள் 125 பேர்; சுதேச அரசுகளின் பிரதிநிதிகள் 125 பேர். மாநிலங்களின் பிரதிநிதிகளை, அந்தந்த மாநிலக் கீழ்ச்சபைகளிலுள்ள இந்துக்களும், முஸ்லிம்களும், மற்ற உறுப்பினர்களும் ஒற்றைமாற்று வாக்குமுறை (Single Tranferrable Vote) மூலம் தேர்ந்தெடுப்பார்கள். இதில் 105 பேர் பொதுத் தொகுதியிலிருந்தும், மற்றவர்கள் அந்தந்த வகுப்பினரிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

கூட்டாட்சி அரசு கொண்டுவரும் மசோதா சட்டமாக வேண்டுமானால், அது மத்தியச் சட்டமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற வேண்டும். இரு சபைகளில் எந்தச் சபையிலும் மசோதாவை முதலில் கொணரலாம். நிதி மசோதாக்களைக் கீழ்ச்சபையில்தான் முதலில் கொண்டுவர வேண்டும். ஒரு மசோதா குறித்து இரு சபைகளுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்படுமானால், தலைமை ஆளுநர் இருசபைகளின் கூட்டுக் கூட்டத்தைக் (Joint Sitting) கூட்டி, அதில் பெரும்பான்மை வாக்குப்படி முடிவு செய்யலாம். இரு சபைகளிலும் நிறைவேறிய மசோதாவுக்குத் தலைமை ஆளுநர் ஒப்புதல் அளித்தால் அது சட்டமாகிவிடும். தலைமை ஆளுநர் நினைத்தால், ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல், அதைச் சட்டமன்றத்தின் மறு ஆய்வுக்குத் திருப்பி அனுப்பலாம். அயல்நாட்டு உறவு, சுதேச அரசுகளின் நிலை போன்றவைபற்றித் தலைமை ஆளுநரின் அனுமதியின்றிச் சட்டமன்றம் விவாதிக்க முடியாது. தலைமை ஆளுநரின் ஊதியம், சுதேச அரசுகளின் செலவினங்கள்பற்றியும் விவாதிக்கச் சட்டமன்றத்திற்கு உரிமை இல்லை. பாதுகாப்பு, வெளி உறவு, சமயம்பற்றிய நிதி மசோதாக்களைச் சட்டமன்றம் விவாதிக்கலாம். சட்டமன்றம் விவாதிக்கும் ஒரு மசோதா நாட்டின் சட்டம் ஒழுங்கிற்குப் பங்கம் விளைவிக்கும் எனக் கருதினால் அதை விவாதிக்காமல் தலைமை ஆளுநர் தடுக்கலாம்.

மாநில ஆட்சி : மாநில ஆளுநர்களும், தலைமை ஆளுநரைப் போலவே சில தனி அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு முதலியவற்றில் ஆளுநருக்குத் தனி அதிகாரம் உண்டு. மற்றத் துறைகளில் அவர் மாநில அமைச்சரவையின் ஆலோசனைப்படி நடக்க வேண்டும். மாநிலத்திலும்

அரசியல் நெருக்கடி தோன்றினால், தலைமை ஆளுநரின் அனுமதி பெற்று, மாநிலச் சட்டசபையையும் அமைச்சரவையையும் கலைத்துவிட்டு, ஆளுநர் தாமே மாநில நிருவாகத்தை மேற்கொள்ளலாம். ஆளுநரின் நிருவாகம், இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் ஒப்புதல்பெற்று மூன்றாண்டுகள்வரை நடைபெறலாம்.

மாநிலங்களில் சட்டசபைகளில் பெரும்பான்மை பெற்றோர் ஆதரவு பெற்ற பொறுப்பான அரசுகள் அமைவதற்கு 1935ஆம் ஆண்டுச் சட்டம் வழி செய்தது. இச் சட்டத்தின்படி சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாநிலம், பீகார், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் இரு சபைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் அமைந்தன. மற்ற மாநிலங்களில் ஒரே சபையையுடைய சட்டமன்றங்கள் அமைந்தன.

மாநில மேல்சபை (Legislative Council): மத்தியக் கூட்டாட்சியின் மேல்சபையைப் போலவே மாநில மேல்சபையும் நிரந்தரமானது. இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பதவியிலிருந்து விலகுவர். அவர்களின் இடத்தில் புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மாநில மேல்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த மாநில மக்கள்தொகை அடிப்படையில் நிருணயிக்கப்பட்டது. ஒவ்வொரு வகுப்பாருக்கும் இத்தனை இடங்கள் என்று வரையறுக்கப்பட்டு, அதன்படி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; அல்லது ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

மாநிலக் கீழ்ச்சபை (Legislative Assembly): மாநிலக் கீழ்ச்சபை உறுப்பினர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர். மாநிலச் சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அந்தந்த மாநில மக்கள்தொகை அடிப்படையில் அமைந்திருந்தது. முஸ்லிம்கள், ஆங்கிலோ-இந்தியர், ஐரோப்பியர், பிற்பட்ட வகுப்பினர், வணிகர், நிலவுடைமையாளர்கள், பல்கலைக்கழகங்கள், பெண்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் சட்டசபையில் இடம்பெற வகைசெய்யப்பட்டிருந்தது.

மத்தியச் சட்டசபையைப் போன்றே. மாநிலச் சட்டசபையிலும் சட்டங்கள் இயற்றும் முறை இருந்து வந்தது. ஆளுநரின் ஊதியம், அவரின் தனி அதிகாரங்களை நிருவகிக்கத் தேவையான நிதிபற்றிச் சட்டசபை தனது கருத்துகளைத் தெரிவிக்கலாம். ஆனால், வாக்கெடுப்பின் மூலம் எவ்விதக் கட்டுப்பாடும் செய்ய முடியாது.

மத்திய, மாநில மேல்சபைகளுக்கான உறுப்பினர்களை, மாநிலக் கீழ்ச்சபைகளின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தார்கள். மத்திய, மாநிலக் கீழ்ச்சபைகளின் உறுப்பினர்களை, சொத்துரிமை அடிப்படையில் வாக்குரிமை பெற்ற வாக்காளர்கள் தேர்ந்தெடுத்தார்கள். இதன்படி, நாட்டின் மொத்த மக்களில் 14% பேரே வாக்குரிமை பெற்றனர்.

கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) : கூட்டாட்சி நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதற்கும் 1935ஆம் ஆண்டுச் சட்டம் இடமளித்தது. இதில் ஒரு தலைமை நீதிபதியும், மற்றும் ஆறு நீதிபதிகளும் இருப்பார்கள். இந் நீதிபதிகள் அனைவரையும் இங்கிலாந்து அரசினரே நியமிப்பார்கள். இந் நீதிபதிகள் 65 வயதுவரை பதவி வகிக்கலாம். இந் நீதிமன்றத்தின் தலைமை அலுவலகம் தில்லியில் இருந்து வரும்.

கூட்டாட்சி அரசில் சட்டம்பற்றி எழும் வழக்குகளை விசாரிக்க இந் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. கூட்டாட்சி அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையிலும், கூட்டாட்சி அரசுக்கும் சுதேச அரசுகளுக்குமிடையிலும், இரு மாநில அரசுக்களுக்கிடையிலும் எழும் வழக்குகளையும் இந்த நீதிமன்றம் விசாரிக்கலாம். இவ் வழக்குகளில் இங்கிலாந்து அரசப் பேரவையின் (Privy Council) தீர்ப்பே இறுதியானது. மாநில உயர்நீதி மன்றங்களின் தீர்ப்பின் மீதும், சுதேச அரசுகளின் உயர்நீதி மன்றங்களின் தீர்ப்பின்மீதுப் எழும் மேல்முறையீடுகளைக் (Appeals) கூட்டாட்சி நீதிமன்றம் விசாரிக்கும்.

இந்தியா அமைச்சர் : இங்கிலாந்து அரசிலிருந்த இந்தியா அமைச்சருக்கு உதவியாக இருந்துவந்த இந்தியா சபையை (Indian Council) ஒழிக்க 1935ஆம் ஆண்டுச் சட்டம் வழி செய்தது. அதற்குப் பதிலாக, மூவருக்குமேல் அறுவருக்குட்பட்ட ஆலோசகர்கள் அவருக்கு உதவியாக இருந்துவருவார்கள். இந்த ஆலோசகர்கள் ஐந்தாண்டுகளுக்குப் பதவி வகிப்பார்கள். இச் சட்டத்தினால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால், இந்தியா அமைச்சரின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைந்தன.

1935ஆம் ஆண்டுச் சட்டப்படி ஏற்பட்ட அரசியல் அமைப்பை, கூட்டாட்சிச் சட்டமன்றமோ மாநிலச் சட்டமன்றங்களோ திருத்தமுடியாது. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, தகுதிகள், தேர்வுமுறை ஆகியவற்றைப்பற்றி இங்கிலாந்து

அரசப் பேரவை சிற்சில மாறுதல்களைச் செய்யலாம். மற்றப்படி 1935ஆம் ஆண்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கு இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கே உரிமை உண்டு.

குறைகள் : ஒரு கூட்டாட்சிக்கு மூன்று முக்கியமான அம்சங்கள் தேவை. அவை: (1) எழுதிய அரசியலமைப்பு (Written Constitution), (2) மத்திய அரசு, மாநில அரசுகளிடையே அதிகாரப் பகிர்வு, (3) தலைமை நீதிமன்றம் என்பன. இந்த மூன்று அம்சங்களும் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் இடம்பெற்றிருந்தன. ஆனால், உண்மையான கூட்டாட்சியின் இன்றியமையாத பல அம்சங்கள் இதில் இடம்பெறவில்லை.

கூட்டாட்சியில் சேர்ந்துள்ள எல்லா மாநிலங்களும் ஒரே மாதிரியான அதிகாரங்களை உடையனவாக இருக்க வேண்டும். அவற்றின்மீது கூட்டாட்சி அரசு செலுத்தும் அதிகாரங்களும் ஒரே சீராக அமைதல் வேண்டும். கூட்டாட்சி அரசும், மாநில அரசுகளும் ஒன்றையொன்று சார்ந்து ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருத்தல் அவசியம். இந்த அம்சம் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் இல்லை என்றே சொல்ல வேண்டும். கூட்டாட்சியில் சுதேச அரசுகள் விரும்பினால் சேரலாம் என்றும், இல்லையெனில் சேராமலிருக்கலாம் என்றும் இச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தது. இதனால், சுதேச அரசர்கள் பலர் கூட்டாட்சியில் சேர இணங்கவில்லை. மேலும், கூட்டாட்சியில் சேர்ந்த சுதேச அரசுகளின்மீது கூட்டாட்சி செலுத்தும் அதிகாரங்களும் அரசுக்கு அரசு வேறுபட்டிருந்தன. இதனால், மத்திய அரசில் திறமையான கூட்டாட்சி அமைக்க இயலாமல் போயிற்று.

கூட்டாட்சியில் அடங்கிய மாநிலங்கள் சுயமாக இயங்குவதற்குப் போதிய சுதந்திரம் வழங்கப்படவில்லை. மாநில அமைச்சர்கள் தாமாக நிருவகிப்பதற்கெனச் சில துறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அந்தத் துறைகளைக்கூட அமைச்சர்கள் தம் விருப்பப்படி நிருவகிக்க இயலவில்லை. தலைமை ஆளுநரும், மாநில ஆளுநர்களும் பெற்றிருந்த தனி அதிகாரங்கள், பொறுப்பாட்சி சரிவர இயங்குவதற்கு இடையூறு விளைவித்தன.

நிதி விவகாரங்களில் அமைச்சர்களுக்கு மிகக் குறைந்த அதிகாரங்களே வழங்கப்பட்டன. அரசின் மொத்தச் செலவில் 20 சதவிகிதத்திற்குக் குறைந்த அளவு நிதிபற்றிய நிருவாகப் பொறுப்புகளே அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மீதமுள்ள 80% நிதிபற்றிய முடிவுகளைத் தலைமை ஆளுநரும், மாநில ஆளுநர்களும் தத்தம் விருப்பப்படி எடுத்தனர்,

மத்திய அரசின் விவகாரங்களில் ஒரு பகுதியை இங்கிலாந்து அரசும், இன்னொரு பகுதியை இந்தியக் கூட்டாட்சி அரசும் நிருவகிப்பதற்கு 1935ஆம் ஆண்டுச் சட்டம் வழி செய்தது. இத்தகைய இரட்டை ஆட்சி முறையைத்தான் சைமன் குழு ஒழிக்கவேண்டுமெனக் கூறி இருந்தது. அதே இரட்டை ஆட்சி முறையை மீண்டும் ஏற்படுத்துவதற்கே இச் சட்டம் வகை செய்தது. மொத்தத்தில் இந்தியத் தலைவர்களின் பொறுப்பாட்சிக் கோரிக்கையைத் தட்டிக் கழிக்கும் வகையிலேயே இச் சட்டம் அமைந்திருந்தது. எனவே, இச் சட்டத்தைக் காங்கிரஸ் தலைவர்களும், முஸ்லிம் லீக் தலைவர்களும் ஒருமுகமாகக் கண்டித்ததில் வியப்பில்லை.

1935ஆம் ஆண்டுச் சட்டம் இவ்வாறு பல குறைகளையுடைய தாக இருந்த போதிலும், அது மத்திய அரசிலும், மாநில அரசு களிலும் ஓரளவு பொறுப்பாட்சிகளை ஏற்படுத்துவதற்கு வழி வகுத்தது. அந்த வகையில், இந்தியாவின் அரசியலமைப்பு வளர்ச்சியில் இச் சட்டத்திற்கு ஓரிடம் உண்டு.

இந்திய அரசியல் நிர்ணயச் சட்ட வளர்ச்சி (1935 முதல்—1950 வரை)

1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டம் முழுவதும் அமல் படுத்தப்படாது மாநில சுயாட்சிபற்றிய பகுதி மட்டுமே 1937 ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. மாநில சுயாட்சி (Provincial Autonomy) என்பது, மாநிலங்களுக்கு என ஒதுக்கப்பட்ட பணிகளில் மைய அரசுபோன்ற வெளி அதி காரங்கள் தலையிடாதிருப்பதும், மாநிலங்கள் தன்னிச்சையாகச் செயல்படுவதும் ஆகும். 1935ஆம் ஆண்டுச் சட்டப்படி வெளி யிடப்பட்ட பிரிவில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் ஒதுக்கப் பட்டதாகத் தோன்றினும்கூட, மாநிலங்கள் கட்டுப்பாடற்று அந்த அதிகாரங்களைச் செயல்படுத்த முடியவில்லை. இதற்குக் காரணம் தலைமை ஆளுநருக்குச் சில சிறப்பான பொறுப்புகள் இருந்ததும், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைப் பாதுகாத்தல் சிறுபான்மையோர், பொதுஊழியர்கள் நலன்களைப் பாதுகாத்தல் ஆகிய பணிகளைக் கவனித்தல் பொருட்டு அவர்கள் மாநிலங் களின் பணிகளில் தலையிடலாம் என்று விதிக்கப்பட்டு இருந்ததுமேயாகும்.

இவ்வித நிலைமை இருந்ததனால் மாநில சுயாட்சி என்பது மாநில ஆளுநர்களின் சுயஆட்சியேயன்றி மாநிலச் சட்டசபை

களுக்கோ, அமைச்சர்களுக்கோ அளிக்கப்பட்ட சுயஆட்சி அன்று என்று சிலர் கூறுவதுண்டு. எனவே, தலைமை ஆளுநருக்கு இருந்த தனிப்பட்ட பொறுப்பு, தன்னிச்சையாகச் செயல்படும் அதிகாரம், பொது அதிகாரம் ஆகியவை மாநிலச் சுயஆட்சிக்கு மதிப்பின்றிச் செய்துவிட்டன.

1939ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஒரு திருத்த வரைவின்படி நெருக்கடியான காலங்களில் மாநிலங்களின் நிருவாகத்தில் மைய அரசு தலையிடலாம் என ஏற்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் 1939ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் பெரும்போரில் இந்தியாவும் ஈடுபட்டுள்ளதாக மாநிலச் சட்ட அவைகளைக் கலக்காமலே தலைமைஆளுநர் அறிவித்துவிட்டார். அதுமட்டுமன்றிப் பாதுகாப்புச் சட்டம் (Defence of India Act) என்ற ஒன்றை இயற்றி அதன்மூலமாகச் சட்ட அவைகளின் எல்லாப் பணிகளையும் தாமே மேற்கொண்டார். நாட்டின் பாதுகாப்பிற்கு எந்த ஒரு குடிமகனாலும், தீங்கு நேரிடும் என்ற ஐயப்பாடு ஏற்பட்டால், மைய மாநிலக் குடிமக்கள் எவரையும் சிறையிலிடத் தலைமை ஆளுநர் அதிகாரம் பெற்றதன் வாயிலாக, மாநிலப் பணிகளிலும் தலைமை ஆளுநர் தலையிடலாம் என்ற நிலை ஏற்பட்டது.

1940ஆம் ஆண்டு லின்லித்கோ பிரபு ஆகஸ்டு அறிவிப்பு என்னும் அறிவிப்பை ஆங்கில அரசின் சார்பில் வெளியிட்டார். அந்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு :

(1) தலைமை ஆளுநர் குழுவின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி விரிவுபடுத்தலும், போர்க்கால ஆலோசனைக் குழு ஏற்படுத்தலும் விரைவுபடுத்தப்படும்.

(2) சிறுபான்மையோர் நலனைப் பாதுகாத்திட எதிர்காலத்தில் ஏற்படும் அரசியல் சட்டங்களில் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும்.

(3) புதிதாக ஏற்படும் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் வடிவம் இந்தியர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப அமைக்கப் பெற்று வெளியிடப்படும்.

(4) அரசியல் சட்ட நடவடிக்கைகள் ஏதும் நாட்டு நெருக்கடி நிலைமையில் மேற்கொள்ளப்படமாட்டாது.

எனினும், இந்த அறிக்கையின் விளைவாக ஏதும் நடைமுறைக்கு வரவில்லை. இதற்குக் காரணம் காங்கிரசு அதனை ஏற்றுக்கொள்ளாமையே. காங்கிரசு போர் நடவடிக்கைகளில் ஆங்கிலேயருக்கு ஆதரவு தரவில்லை. இந் நிலையில் ஜப்பான் நாடு, இங்கிலாந்து அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு எதிராகப் போரில் கலந்துகொண்டது. எனினும், இந்தியத் தலைவர்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவு அளிக்க முன்வரவில்லை.

1942ஆம் ஆண்டு சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் சில தீர்மானங்களோடு ஆங்கிலேயர்களின் சார்பில் இந்தியாவிற்கு வந்தார். கிரிப்ஸ் தூதுக்குழுவின் நகல் தீர்மானங்கள் இவையே:

(1) போர் முடிந்த உடனேயே, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினால் புதிய அரசியல் சட்டம் கீழ்க்கண்ட வகையில் உருவாக்கப்படும்.

(2) வருங்கால அரசியல் நிர்ணயசபையில் இந்திய மாநிலங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வகை செய்யப்படும்.

(3) ஆங்கிலோ இந்தியாவில் இருக்கும் எந்த மாநிலமும் அதனுடைய அப்போதைய அரசியல் சட்ட நிலையை மேற்கொள்ள வேண்டுமானால் மேற்கொள்ளலாம்; அல்லது புதிதாக உருவாக்கப்படுகின்ற அரசியல் சட்டத்தின்படி நடந்து கொள்ளலாம்.

மாநிலச் சட்டமன்றங்களில் பத்தில் ஒரு பங்கினர் புதிய அரசியல் சட்டம் உருவாக்கும் அமைப்பில் இருப்பார்கள்.

(5) நெருக்கடியான இந்தச் சமயத்திலும், புதிய அரசியல் சட்டம் உருவாகி அரசுகள் பொறுப்பேற்றுக் கொள்ளும்வரையிலும் மாநிலங்களின் முழுப் பொறுப்பையும் ஆங்கிலேய அரசு கவனித்துக் கொள்ளும். இந்தியத் தலைவர்களுடன் முக்கியச் சந்தர்ப்பங்களில் விவாதம் நடத்தும்.

கிரிப்ஸ் தூதுக்குழுவின் நகல் தீர்மானங்களைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனுடைய தீர்மானங்களின் பரிசுத்தத் தன்மையை அது சந்தேகித்தது. இதற்குக் காரணம் இருந்தது. முதலில் கிரிப்ஸ் கூறியபோது இராணுவப் பாதுகாப்புத் தவிர மற்றவை எல்லாம் இந்தியர்களிடமே இருக்குமென்று கூறினார். ஆனால், பின்னர் அந்தக் கூற்றைத் திரும்பப்

பெற்றுக்கொண்டார். கிரிப்ஸ் தூதுக்குழுவின் தீர்மானங்களைக் காங்கிரசும், காந்திஜியும் ஏற்கவில்லை. ஆங்கிலேயரிடமிருந்து உருப்படியாக எந்த அரசியல் உரிமையும் போராட்டமின்றிப் பெறமுடியாது என்ற முடிவிற்கு இந்தியர்கள் வந்தனர்.

1946ஆம் ஆண்டு அமைச்சரவைத் தூதுக்குழு இந்தியாவிற்கு வந்தது. காங்கிரசு, முஸ்லிம்லீக் ஆகிய இயக்கங்களின் தலைவர்களுக்கும், அமைச்சரவைத் தூதுக்குழுவினருக்கும் இடையே நீண்ட விவாதங்கள் நடைபெற்றன. எனினும் முஸ்லிம் லீக், காங்கிரஸ் ஆகிய இரு இயக்கங்களுக்கிடையே ஒற்றுமையின்மையால் ஒருமித்த கருத்து ஏதும் அமையவில்லை. எனவே, அமைச்சரவைக் குழுவும், வேவல் பிரபுவும் கூட்டாக இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அக் கூட்டறிக்கையில் புதிய அரசியல் சட்டம் அடிப்படையான கருத்துகளாகக் கீழ்க்கண்டவற்றைக் கொண்டிருக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

1. இந்தியாவில் இருந்த மாநிலங்களும், ஆங்கிலேய இந்தியாவும் இணைந்து 'ஐக்கிய இந்தியா' என்னும் அமைப்பு ஏற்பட வேண்டும். அயல்நாட்டுச் செய்திகள், பாதுகாப்பு, தொடர்பு ஆகியவற்றை மேற்கூறிய அமைப்பு நிருவகித்திடப் போதிய அதிகாரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

2. ஆங்கிலேய இந்தியாவின் பிரதிநிதிகள், மாநிலங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய செயல்துறை, சட்டமியற்றும் துறை இருத்தல் வேண்டும். முக்கியமான வகுப்புகளைக் குறித்த பிரச்சினைகளில் கூடியுள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் ஆதரவுகொண்டே தீர்மானித்தல் வேண்டும்.

3. ஐக்கிய இந்தியாவிற்கு உரிய அதிகாரங்கள், தனிப்பட்ட அதிகாரங்கள் தவிர மற்றவை மாநிலங்களின் பொறுப்பில் விடப்பட வேண்டும்.

4. ஐக்கிய இந்தியாவிற்குப் பிரித்துத் தரப்பட்ட அதிகாரங்கள் தவிர்த்த மற்ற அதிகாரங்கள் மாநிலங்களிடமே விடப்பட வேண்டும்.

5. செயல்துறை, சட்டமியற்றும் துறை ஆகியவற்றுடன் இணைந்து மாநிலங்கள் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் குறித்து விவாதிக்கலாம்.

மாநிலங்களில் சட்டமியற்றும் உரிமை பெற்ற சட்டசபைகளுக்கு உறுப்பினர்கள் பத்து இலட்சம் பேருக்கு ஒருவர் என்னும் விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்பட விதிசெய்யப்பட்டது. சீக்கியர்களும், முகம்மதியர்களும் தங்கள் பிரிவினருக்கு என ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையுடைய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஏ, பி, சி என மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். 'ஏ' பிரிவில் சென்னை, பம்பாய், ஐக்கிய மாநிலம், பீகார், மத்திய மாநிலம், ஒரிஸ்ஸா ஆகியவையும், 'பி' பிரிவில் பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாநிலம், சிந்து ஆகியவையும், 'சி' பிரிவில் வங்காளம், அஸ்ஸாம் ஆகியவையும் அடங்கியிருந்தன.

இடைக்கால அரசு ஒன்று ஏற்படுத்தும் திட்டமும் இவ்வறிக்கையில் வெளியிடப்பட்டது.

அமைச்சர் குழுவின் திட்டம் நன்மையும், தீமையும் கலந்ததாக அமைந்து இருந்தது. மக்கள்தொகைக் கணக்கின்படி உறுப்பினர் தேர்வு நடைபெற்றது. சிறுபான்மையோர் நலன் பாதுகாக்கப்பட்டது. பாகிஸ்தான் பிரிவினையை ஏற்கவில்லை. எனினும் முஸ்லிம்கள், சீக்கியர்கள் போன்ற சிறுபான்மையோர் நலனைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யப்பட்ட அளவிற்கு, மற்றச் சிறுபான்மையோர் நலனைக் காத்திட ஏற்பாடு ஏதும் செய்யப்படாதது ஒரு குறைபாடு ஆகும்.

மாநிலங்களில் குழு அமைப்பது குறித்துத் தெளிவான விளக்கமில்லை. வேவல் பிரபு பண்டித ஜவஹர்லால் நேருவை இடைக்கால அரசை அமைக்க அழைத்தார். முஸ்லிம் லீக் இடைக்கால அரசில் பங்கேற்க மறுத்தது. பின்னர் இடைக்கால அரசில் பங்கெடுத்துக் கொண்டது. தொழிற்கட்சி இங்கிலாந்தின் ஆட்சியைக் கைப்பற்றியபின், பிரதமர் அட்லி விரைவிலேயே இந்தியாவுக்கு விடுதலை அளிக்கப் போவதாக அறிவித்தார். அவரது முயற்சியின் விளைவாக இந்திய விடுதலைச் சட்டம் என்னும் சட்டம் வரைவு வடிவத்தில் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் 1947 ஜூலை மாதம் 18ஆம் தேதி நிறைவேறியது.

இந்தச் சட்டம் இந்தியப் பிரிவினைக்கும், இரண்டு டொமினியன் அந்தஸ்து உள்ள நாடுகள் உருவாகவும் வழிவகுத்தது. இரண்டு டொமினியன்களின் சட்டமன்றங்களுக்கும்

சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது. இங்கிலாந்து அரசுக்கு டொமினியன்களின் பணியில் தலையிட உரிமை தரப்படவில்லை. நடப்பில் இருந்த சட்டமன்றங்கள் புதிய சட்டமன்றங்கள் கூடும்வரை தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்பட்டன. இந்தியச் செயலாளர் பதவி ஒழிக்கப்பட்டது. இந்தியப் பேரரசர் என்று இங்கிலாந்துப் பேரரசர் அழைக்கப்பட்டது நிறுத்தப்பட்டது. 1947ஆம் ஆண்டுச் சட்டம் இந்தியர்கள்-ஆங்கிலேயர்கள் தொடர்பு வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். இச் சட்டமே ஆங்கிலேயர் ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவந்தது. எனவே, இதனை இந்தியர்கள் நினைவில் கொள்ளுதல் அவசியமாகும். இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் 1949 நவம்பர் 26 அன்று முழுமை பெற்றது. 1950 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்தியாவின் இன்றைய அரசியலமைப்பு

அரசியலமைப்பின் உருவாக்கம்: அரசியல் நிர்ணயசபை 1946ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் தேதி தில்லியில் கூடியது. டாக்டர் இராசேந்திர பிரசாத் இச் சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இச் சபையின் நடவடிக்கைகளை நடத்திவைத்தார். இச் சபை 2 வருடம் 11 மாதம் 18 நாள்கள் நீடித்தது. 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் தேதி புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை இச் சபை உருவாக்கியது. அத் திட்டத்தில் 1949ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் டாக்டர் இராசேந்திர பிரசாத் கையொப்பமிட்டார். நம் நாட்டு மக்கள் 1930ஆம் ஆண்டு சனவரி 26-ல் சுதந்திர சபதம் எடுத்துக் கொண்ட நினைவிற் கறிகுறியாக இவ் வரசியல் அமைப்புத் திட்டம் சனவரி 26ஆம் நாளிலிருந்து செயல்பட வேண்டும் எனக் கருதிய நம் இந்தியத் தலைவர்கள், 1950ஆம் ஆண்டு சனவரி 26ஆம் தேதியை இந்தியக் குடியரசு நாளாகக் குறித்தனர். அன்றிலிருந்து இந்திய அரசியலமைப்புச் செயல்பட ஆரம்பித்தது. இந்திய அரசியலமைப்புத் திட்டம் (Indian Constitution) 395 விதிகளைக் கொண்டதாகும். நம் அரசியல் நிர்ணயசபை ஆழ்ந்த சிந்தனையுடன் புதிய இந்திய அரசியல் அமைப்பை உருவாக்கியது. இவ் வுலகில் உள்ள பல நாடுகளின் அரசியல் திட்டங்களையெல்லாம் நன்கு பரிசீலனை செய்து முடிவில் நம் நாட்டுப் பண்பாட்டிற்கேற்ப அமைக்கப்பட்ட ஒரு திட்டமே நம் அரசியல் அமைப்பாகும்.

அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்: இந்தியா அல்லது பாரதம், மத்திய மாநில அரசுகள் கொண்ட கூட்டாட்சி முறைப்படி

அமைக்கப்பட்டது. அரசியலமைப்புத் திட்டத்தில் சில அடிப்படை உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. நம் அரசியல் அமைப்பில் உள்ள சில முக்கிய விதிகளைக் காண்போம்.

1. மத்திய அரசாங்கத்தின் நிருவாகம் குடியரசு தலைவரின் பெயரால் நடத்தப்படும். பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், மாநிலச் சட்ட சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் கொண்ட ஒரு தேர்தல் குழு குடியரசு தலைவரைத் தேர்ந்தெடுக்கும்.

2. பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த உறுப்பினர்களால் ஒரு துணைத்தலைவர் (Vice-President) தேர்ந்தெடுக்கப்படுவார். இவ்விதம் தலைவரும், துணைத்தலைவரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவர்.

3. குடியரசு தலைவருக்கு ஆலோசனை கூறி உதவிபுரியத் தலைமை அமைச்சருடன் கூடிய ஓர் அமைச்சரவை உண்டு. குடியரசு தலைவர், பொதுத் தேர்தலில் பெரும்பான்மையாய் வெற்றி பெற்ற கட்சியால் நியமிக்கப்படும் தலைவரை, தலைமை அமைச்சராய் அமர்த்துவார். இதர மத்திய அமைச்சர்களைத் தலைமை அமைச்சரின் ஆலோசனையுடன் குடியரசு தலைவர் நியமிப்பார். மந்திரி சபை கூட்டாக மக்கள் சபைக்குப் பொறுப்பானது. மக்கள் சபையின் நம்பிக்கையை இழந்தால், மந்திரி சபை கூட்டாகப் பதவி இழந்துவிடும்.

4. ராஜ்ய சபை (Rajya Sabha), மக்கள் சபை (Lok Sabha) என்ற இரு சபைகளைக் கொண்டதாக இந்தியப் பாராளுமன்றம் அமையும்.

5. ராஜ்ய சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைத் தவிர, 12 பேர்களைக் குடியரசு தலைவர் நியமிப்பார். இவர்கள் இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவும், அனுபவமும் உள்ளவர்களாக இருப்பர். ராஜ்ய சபையில் 238 பேருக்கு மேற்படாத, மாநிலங்களின் பிரதிநிதிகள், மாநிலச் சட்டசபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. மக்கள் சபையில் (Lok Sabha) 500-க்கு மேற்படாத உறுப்பினர்கள் இருப்பர். இவர்கள் மாநிலங்களில் உள்ள வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஐந்து இலட்சம் மக்களுக்குக் குறையாமலும் ஏழு இலட்சத்து ஐம்பதி

னுயிரம் மக்களுக்கு மேற்படாமலும், உள்ள தொகுதிகளாக நாடு பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

7 ராஜ்ய சபை ஒரு நிரந்தரமான சபையாகும். ஆனால், இரண்டு ஆண்டுக் காலம் முடிந்ததும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் விலகி, அவர்களுக்குப் பதிலாகப் புதிய உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவர். மக்கள் சபையின் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். இரண்டு சபைகளும் ஆண்டிற்கு இரு முறையாவது கூடவேண்டும்.

8, இந்தியக் குடியரசின் துணைத்தலைவர், தம் பதவியின் காரணமாக ராஜ்ய சபையின் தலைவராகவும் (Ex-Officio Chairman), பணியாற்றுவார். மக்கள்சபை ஓர் அவைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும். இரண்டு சபையின் அதிகாரிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் குறிப்பிட்ட ஊதியமும், உபரிப் படியும் (allowance) வழங்கப்படும்.

9. பண வரைவைத் தவிர மற்ற வரைவுகள் நாடாளு மன்றத்தின் எச் சபையிலும் முதன்முதலில் கொண்டுவரப்படலாம். இரு சபைகளும் அந்த வரைவை ஒப்புக்கொண்டால்தான் அது சட்டமாக நிறைவேறும். இவ் விரு சபைகளுக்குள் முட்டு நிலை ஏற்பட்டால் இரண்டு சபைகளும் கூட்டாக அமர்ந்து, பெரும்பான்மையான வாக்குகளின்மூலம் முடிவு செய்யப்படும். பணவரைவு மக்கள்சபையிலேதான் முதலில் கொண்டுவரப்பட வேண்டும். ராஜ்யசபை அதை அங்கீகரிக்காவிட்டாலும் அவ் வரைவு நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும்.

10· ஒரு வரைவு சட்டமாவதற்குமுன் அது குடியரசு தலைவரின் கையொப்பத்தைப் பெறவேண்டும். அதைக் கையொப்பமிடாமல் தம் குறிப்புகளுடன் மன்றத்திற்குத் திருப்பியனுப்ப அவருக்கு உரிமையுண்டு. ஆனால், மறுபடியும் அவ் வரைவு அப்படியே நிறைவேற்றப்படுமானல் அவர் கையொப்பமிடத் தான் வேண்டும்.

11. இந்திய அரசியல் சட்டப்படி தலைமை நீதிபதியைக் கொண்ட ஒரு தலைமை நீதிமன்றம் உண்டு. பாராளுமன்றம் சட்டத்தின்மூலம் நீதிபதிகளின் ஊதியத்தை உயர்த்தலாம். மாநிலங்களிடையே ஏற்படும் தகராறுகளை இந்த நீதிமன்றம் தீர்த்து வைக்கும். சாதாரணமாக, இந்தியாவின் தலைமை நீதி

மன்ற நீதிபதிகளையும், மாநிலங்களிலுள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் பதவியிலிருந்து நீக்க முடியாது. ஆனால், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையோர் (அதாவது மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்டோர்) விரும்பினால் குறிப்பிட்ட நீதி பதியைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

மாநிலங்கள்

மாநிலத்தின் அரசியலமைப்பும் மத்திய ஆட்சியை ஒன்றியே அமைக்கப்பட்டுள்ளது.

12. ஒவ்வொரு மாநிலத்திற்கும் குடியரசு தலைவரால் நிய மிக்கப்பட்ட ஓர் ஆளுநர் உண்டு. இவர் ஐந்தாண்டுக் காலத் திற்கு ஒருமுறை நியமிக்கப்படுவார்.

13. ஒவ்வொரு மாநிலத்திலும் முதலமைச்சரைத் தலைவ ராகக் கொண்ட ஓர் அமைச்சரவை உண்டு. இச் சபை ஆளு நருக்கு ஆலோசனை கூறி உதவிபுரியும். ஆளுநர், முதலமைச் சரையும், அவருடைய ஆலோசனையின்பேரில் மற்ற மந்திரி களையும் நியமிப்பார். மாநில மந்திரி சபைகள் கூட்டாக மாநிலச் சட்டசபைகளுக்குப் பொறுப்புள்ளனவாகச் செயல்படும்.

14. சில மாநிலங்கள் அதன் கருத்துப்படி ஈரங்க அல்லது ஓரங்கச் சட்டசபையைக் கொண்டதா யிருக்கும். பம்பாய், சென்னை, பீகார், பஞ்சாபு, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங் களில் சட்டசபையான கீழ்ச்சபையுடன், மேல்சபையும் (Legislative Council) உண்டு.

15. அதிகபட்சம் எழுபதாயிரம் மக்களுக்கு ஒருவர் வீதம், மாநிலச் சட்டசபை உறுப்பினர்கள் நேரடியாக ஐந்தாண்டிற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர்.

16. மேல்சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, சட்டசபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கிற்குமேல் இருக்கக் கூடாது. இவர்களுள் மூன்றில் ஒரு பங்கினரை நகராட்சிக் கழகங்கள் (Municipalities), மாவட்ட ஆட்சி வாரியங்கள் (District Boards) போன்ற பல உள்ளூர் ஆட்சி நிலையங்கள் தேர்ந்தெடுக்கும்; பன்னிரண்டில் ஒரு பகுதியினரை பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று மூன் றாண்டுக் காலம் கழிந்தவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். பன்னி ரண்டில் ஒரு பகுதியினரைக் குறைந்தது மூன்றாண்டுக் காலம்

ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்; மூன்றில் ஒரு பகுதியினரைச் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள். மற்ற உறுப்பினர்களை ஆளுநர் நியமிப்பார். இவர்கள் இலக்கியம், விஞ்ஞானம், கலை, கூட்டுறவு இயக்கம், சமூக சேவை ஆகிய வகைகளில் சிறந்த ஞானமும் தகுந்த அனுபவமும் பெற்றவர்களாய் இருப்பார்கள். மேல்சபை உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால், அவர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் இரண்டு ஆண்டுகளில் விலகும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

17. ஒவ்வொரு சட்டசபைக்கும், அவைத்தலைவரும் உதவி அவைத்தலைவரும் இருப்பர். ஒவ்வொரு மேல்சபைக்கும் தலைவரும், துணைத்தலைவரும் இருப்பர்.

18. பணவரைவு சட்டசபையிலேதான் முதலில் கொண்டு வரப்படும்; மேல்சபை அதை எதிர்த்தாலும், அது சட்டசபையால் நிறைவேற்றப்படும். மற்ற வரைவுகளை எச் சபையிலும் முதலில் கொண்டுவரலாம். இரு சபைகளும் ஒப்புக்கொண்டால் தான் அவ் வரைவு நிறைவேறியதாகக் கொள்ளப்படும். சட்டசபை இரண்டாம் முறையும் அதே வரைவை நிறைவேற்றினால், அவ் வரைவு மேல்சபையின் அங்கீகாரமின்றியே சட்டமாகி விடும்.

19. சட்டசபைகள் நிறைவேற்றிய வரைவுகளை ஆளுநர்கள் ஏற்றுக்கொண்டு கையொப்பமிட்ட பின்பே அவை சட்டமாகும். சில சமயங்களில் ஆளுநர்கள் தங்கள் கையொப்பமிடாமல், சட்டமன்றங்கள் நிறைவேற்றிய வரைவுகளைக் குடியரசு தலைவரின் கையொப்பத்திற்காக என்று அனுப்பி வைக்கலாம். அச் சமயங்களில் குடியரசு தலைவர் கையொப்பமிட்ட பின்னரே அவை சட்டமாகும்.

மத்திய-மாநிலங்களின் உறவு

அரசியலமைப்பில், மத்திய அரசு பட்டியல் (Union List), மாநில அரசு பட்டியல் (State List), இருதிறப் பொதுப் பட்டியல் (Concurrent List) எனச் சட்டமியற்றும் உரிமைகளில் மூன்று விதப் பட்டியல்கள் தரப்பட்டுள்ளன. முதற்பட்டியல் சம்பந்தப்பட்ட வரையில் பாராளுமன்றமும், இரண்டாவது பட்டியல் சம்பந்தப்பட்ட வரையில் மாநிலச் சட்டசபைகளும் சட்டமியற்றும் தனி உரிமையைப் பெற்றுள்ளன. மூன்றாவது பட்டியல் சம்பந்தப்பட்ட வரையில், சட்டமியற்றும் அதிகாரத்தைப் பாராளுமன்றமும், மாநிலச் சட்டசபைகளும் பொதுவாகப் பெற்றுள்ளன,

ஆனால், பொதுவாக இந்தியா முழுவதற்கும், அல்லது எந்த ஒரு பகுதிக்கும் பாராளுமன்றம் சட்டமியற்றலாம். மாநிலச் சட்ட சபைகள் மாநிலத்தின் முழுவதற்குமாவது, அதன் ஒரு பகுதிக்காவது சட்டமியற்றலாம்.

மத்திய அரசு பட்டியலில் (Union List) கீழ்க்கண்டவை அடங்கியுள்ளன: இந்தியாவின் பாதுகாப்பு, கடல் இராணுவ விமானப் படைகளை நிர்வகித்தல், அரசியல் தூதுவர்களை நியமித்தல் போன்ற அயல்நாட்டு விவகாரங்கள், இரயில்வேக்கள், தபால் தந்தி, நாணயம், வெளிநாட்டு வாணிகம், மாநிலங்களுக்கிடையே நடக்கும் உள்நாட்டு வாணிகம், வங்கித் தொழில், ஆயுள் பாதுகாப்புக் கழகங்கள், சுரங்கக் கட்டுப்பாடும் தாதுப் பொருள்களின் அபிவிருத்தியும், தொழிலாளர் சட்டம், உப்பு உற்பத்தி, உயர்நீதிமன்றங்கள், அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த சில நிறுவனங்கள், வருமான வரியைப் போன்ற சில வரிகள், சுங்கத் தீர்வைகள், ஆயத் தீர்வைகள் விதித்தல் ஆகியவைகளாகும்.

மாநில அரசு பட்டியலில் காவல் துறை, நீதி நிர்வாகம் (உயர்நீதிமன்றங்களை ஏற்படுத்துவதைத் தவிர), சிறைச் சாலைகள், ஊராட்சித்துறை, மாநிலத்திற்குள் நடக்கும் கல்வி, போக்குவரவு, காடுகள், மீன்பிடிக்கும் தொழில், பலவித வரிகள் ஆகியவை அடங்கியுள்ளன.

இருதிறப் பொதுப் பட்டியலில், குற்றவியல் சட்டம், குற்றவியல் நடப்புச் சட்டம், நாட்டின் பாதுகாப்பிற்காகச் சந்தேகப் பட்டவர்களைச் சிறையிலிடுதல், தொழிற்சங்கங்கள், துறை முகங்கள், உள்நாட்டுக் கப்பல் வியாபாரமும் கப்பல் பயணமும், வாணிகம், விலைக் கட்டுப்பாடு முதலியனவும் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு மாநிலத்தின் நிர்வாக அதிகாரமும் பாராளுமன்றத்தின் சட்டங்களுக்குட்பட்டுத்தான் செயற்பட வேண்டும். மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் செலுத்தப்படுவதற்கு அவை தடையாக இருக்கக் கூடாது. அவசியமானால் மத்திய அரசு கருதுமானால், மாநில அரசின் பட்டியலிலுள்ள துறைக்கும் சட்டம் இயற்றும்படி மாநிலச் சட்டசபைக்கு ஆணை பிறப்பிக்கலாம்.

வருவாய்களை (revenues) மத்திய, மாநில அரசுகளுக்குள் பங்கீடு செய்வதற்குப் பல விரிவான ஒழுங்கு விதிகள் செய்யப் பட்டுள்ளன. பங்கீட்டு முறையைத் திருத்தி அமைப்பதற்குக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை ஒரு நிதிக் குழு ஏற்படுத்தவும் வழி செய்யப்பட்டிருக்கிறது.

வாக்குரிமை : இருபத்தொரு வயதிற்கு மேற்பட்ட ஆண்-பெண் என்ற பாகுபாடின்றி இந்தியக் குடியுரிமை பெற்ற ஒவ்வொருவருக்கும் பாராளுமன்றத் தேர்தலிலும், மாநிலச் சட்டசபைத் தேர்தலிலும் வாக்களிக்கும் உரிமை தரப்பட்டுள்ளது.

இராஜ்யசபைக்கோ (Rajya Sabha), மாநில மேல்சட்டசபைக்கோ உறுப்பினராக முப்பது வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். மக்கள்சபை (Lok Sabha), மாநிலச் சட்டசபைகளுக்குப் போட்டியிடக் குறைந்தது இருபத்தைந்து வயதாவது ஆகியிருக்க வேண்டும்.

நெருக்கடிநிலைப் பிரகடனம்
(Emergency Proclamation)

குடியரசு தலைவரோ, ஒரு மாநில ஆளுநரோ உடனடியான நடவடிக்கை எடுப்பது அவசியமென நினைத்தால், சட்டசபையால் நிறைவேற்றக் கூடிய சட்டத்தைப் போன்று அதிகாரபூர்வமான கட்டளையைப் (Ordinance) பிறப்பிக்கலாம். அவ்விதம் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் சட்டசபை கூடிய ஆறு வாரங்களுக்குள், சட்டசபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். சட்டசபை அதை அங்கீகரிக்க மறுத்தால் அப்படிப்பட்ட கட்டளைகள் அதிகார மற்றுப் போய்விடும்.

மிக நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு, அதனால் இந்தியா அல்லது அதனுடைய ஒரு பாகத்தின் பாதுகாப்பு ஆபத்திலிருப்பதாகக் குடியரசு தலைவர் உணர்ந்தால் அதை அறிவிக்கும் வகையில் ஒரு பிரகடனம் (Proclamation) வெளியிடலாம். பிரகடனத்தின்மூலம் வெளியிட்ட நெருக்கடிநிலை நீடிக்கும் வரை, மாநிலங்களின் நிர்வாகமும், சட்டசபையின் அதிகாரமும் இந்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டதாகவிருக்கும்.

அரசியலமைப்பு விதிகளின்படி ஒரு மாநில அரசாங்கம் இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது எனக் குடியரசு தலைவர் நினைத்தால், அவர் ஒரு பிரகடனத்தின் மூலம் அந்த மாநில அரசாங்கத்தின் அதிகாரங்களையும், வேலைகளையும் முழுமையாகவோ ஒரு குறிப்பிட்ட அளவிற்குமட்டுமோ எடுத்துக் கொள்ளலாம்; அல்லது அவ் வதிகாரத்தைப் பாராளுமன்றத்திற்குக் கொடுத்துவிடலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு பிரகடனங்களையும் இரண்டு மாதங்களுக்குமேல் அமல்நடத்தக் கூடாது. அதற்குமேல்

நீடிக்க வேண்டுமானால், குறிப்பிட்ட தேதி முடியு முன்னரே, அதைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் அங்கீகரிக்க வேண்டும். அச் சமயத்தில் மக்கள்சபை கலைக்கப்பட்டிருக்கு மானால், அது திரும்பக் கூடிய முப்பது நாள்களுக்குள் பிரகடனம் நீடித்ததை அங்கீகரிக்க வேண்டும்.

பலவித விதிகள்
(Miscellaneous)

குடியரசு தலைவர் அரசியலமைப்பை மீறி நடந்தால் அதற்காக அவர்மீது சாட்டப்பட்ட அரசியல் துரோகக் குற்ற விசாரணையைப் (Impeachment) பாராளுமன்றத்தின் எச் சபையும் நடத்தலாம். ஒரு சபையின் மூன்றில் இரண்டு பங்கினர், அதை ஆதரித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றித் தகுந்த விசாரணைமூலம் அது உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, மற்றச் சபையின் மூன்றில் இரண்டு பங்கினர் அதை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினால், குடியரசு தலைவர் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

சட்டத்தால் விதிக்கப்பட்ட சில பொதுத் தடைகளைத் தவிர, மற்றபடி நாட்டின் எல்லாப் பாகங்களுக்கிடையிலும் தடையில்லா வாணிகமும் தொடர்பும் கொள்ளலாம்.

மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் தனித்தனியான அரசாங்கப் பணியாளர் தேர்வுக் குழு (Public Service Commission), இந்திய அட்டார்னி ஜெனரல் (Attorney General), இந்தியாவின் தணிக்கைத் தலைவர் (Auditor General), மாநிலங்களுக்கு வழக்குரை தலைவர் (Advocate General) ஆகியவர்களை நியமிக்கவும், உயர்நீதி மன்றங்களை ஏற்படுத்துவதற்கும் இவ்வரசியலமைப்பு இடமளிக்கிறது.

பதினைந்து ஆண்டுகள் வரையில் ஆங்கிலமொழி மத்திய அரசின் அரசாங்க மொழியாய் நீடிக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு தேவநாகரி லிபியைக்கொண்ட இந்திமொழிதான் அரசாங்க மொழியாய் இருக்க வேண்டும். ஒரு மாநிலச் சட்ட சபை, சட்டத்தின்மூலம் அம் மாநிலத்தின் மொழியை அரசாங்க மொழியாக ஏற்கலாம். ஆனால், இரு மாநிலங்களுக்கு இடையில் ஏற்படும் கடிதப் போக்குவரத்து மத்திய அரசின் அரசாங்க மொழியிலேதான் நடத்தப்பட வேண்டும்.

1951ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்திய அரசியலமைப்பில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுப் புதிய விதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமானவை :

1. சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கிய வகுப்புகள் அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது மலைச்சாதி வகுப்பினர் ஆகியவர்கள் முன்னேறுவதற்கு வேண்டிய பிரத்தியேக முறைகளைக் கையாளுவதற்கு ஒரு திருத்த வரைவுமூலம் அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

2. நாட்டின் பாதுகாப்பு, அயல்நாடுகளுடன் கொண்டுள்ள நட்புறவு, பொது அமைதி, நேர்மை, நல்லொழுக்கம் ஆகிய வகைகளை முன்னிட்டும், நீதிமன்றத்தை அவமதித்தல், அவதூறு, குற்றத்தைச் செய்யத் தூண்டுதல் ஆகியவைகளைக் கருதியும் நியாயமான கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு ஒரு திருத்த வரைவு மூலம் அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

3. உடைமைகளைக் கட்டாயமாக அடைதல் அல்லது பெறுதல் சம்பந்தமாகவும், அரசாங்க விற்பனைத் தனியுரிமை (State monopoly) சம்பந்தமாகவும் உள்ள விதிகளில் முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டன.

4. 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து இந்தியக் குடியரசின் பல மாநிலங்களும், பிரதேசங்களும் (Pradesh) திருத்தி அமைக்கப்பட்டன. இதன் பயனாகப் பதினான்கு மாநிலங்களும், ஆறு மத்தியக் குடியரசின் பிரதேசங்களும் ஏற்பட்டன.

மத்தியக் குடியரசின் பிரதேசங்கள் : டில்லி, இமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, அந்தமான் நிக்கோபார்த் தீவுகள், மினிகாய் அமீன்திவித் தீவுகள். அண்மையில் இமயமலைச் சாரலிலுள்ள அருணாசலப் பிரதேசம் எனும் நிலப்பகுதி மத்தியக் குடியரசு நாடாக ஆக்கப்பட்டுள்ளது.

பதினான்கு மாநிலங்கள் : ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், பீகார், பம்பாய், கேரளா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், ஜம்மு–காஷ்மீர். முன்பு ‘அ’ பகுதியில் இருந்த பத்து மாநிலங்களில் அஸ்ஸாம், ஒரிசா, உத்தரப் பிரதேசம் ஆகியவைகளின் பிரதேசங்கள் மாநிலப் புனரமைப்புக் காரணமாகப் பாதிக்கப்படவில்லை. மேற்கு

வங்காளம், பீகார், சென்னை ஆகிய மாநிலங்களின் எல்லைகள் திருத்தியமைக்கப்பட்டன. சென்னை மாநிலத்தின் வடபகுதியைக் கொண்டு 1953ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஆந்திர மாநிலம் ஆந்திரப் பிரதேசம் எனப் பெயரிடப்பட்டது. ஐதராபாத்தின் ஒரு பாகமான தெலிங்கானவை அதனுடன் சேர்த்து அது விரிவுப்படுத்தப்பட்டது. கட்சு, சௌராஷ்டிரா ஆகிய பிரதேசங்களும், மத்தியப் பிரதேசம், ஐதராபாத் ஆகியவை களில் இருந்த மராட்டிய மொழி பேசப்படும் மாவட்டங்களும் பம்பாயுடன் சேர்க்கப்பட்டதால், பரப்பளவு சம்பந்தப்பட்ட வரையில் அது மிகப்பெரிய மாநிலமாக விளங்கத் தொடங்கியது. மராட்டிய மொழி பேசப்படும் எட்டு மாவட்டங்களை மத்தியப் பிரதேசம் இழந்தாலும், மத்திய பாரதம், போபால், விந்தியப் பிரதேசம் ஆகியவை அதனுடன் சேர்க்கப்பட்டதால் அது இரண்டாவது மிகப் பெரிய மாநிலமாகத் திகழ்கிறது. பாட்டியாலாவும், கிழக்குப் பஞ்சாப் சமஸ்தானங்களின் யூனியனும் பஞ்சாப்புடன் இணைக்கப்பட்டன. மைசூருடன், ஐதராபாத்திலிருந்த கன்னட மொழி பேசும் மாவட்டங்கள் இணைக்கப்பட்டன. திருவாங்கூர், கொச்சி சில பிரதேச மாறுதல்களுக்குப்பின் கேரளா என வழங்கப்பட்டது.

மாநிலப் புனரமைப்பின் விளைவால் 'சுதேச அரசப் பிரதிநிதிகள்' பதவி ஒழிக்கப்பட்டது. மாநிலங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளையும், எல்லைத் தகராறுகளையும் ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காக மண்டலச் சபைகள் (Zonal Council) ஏற்படுத்தப்பட்டன. மொழிகளைக் காப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பம்பாய் புனரமைப்புச் சட்டப்படி பம்பாய் மாநிலம் மாற்றி அமைக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் தேதி அது இந்தியக் குடியரசு தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்றது. அதன்படி, அந்த மாநிலம் குஜராத், மகாராஷ்டிர மாநிலங்களாகப் பிரிந்தது. மொழிவழி மாநிலம் அமைக்கும் திட்டம் முடிவின்றி வளர்ந்துகொண்டே போகின்றது. அரியானா, பஞ்சாப்பிலிருந்து பிரிந்து தனி மாநிலமாகவும், அஸ்ஸாமிலிருந்து மேகாலயா எனத் தனி மாநிலமும் பிரிந்தன. ஆந்திராவிலிருந்து தெலிங்கானப் பகுதியைத் தனி மாநிலமாக்க வேண்டுமென கிளர்ச்சி செய்து வருகின்றனர். சென்னை மாநிலம் என்பது தமிழ்நாடு என 1969ஆம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்டது.

23. இந்திய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு

இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி தொடங்கி நூருண்டுகள் முடிவதற்குள் (1757—1868), இந்திய வரலாற்றில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. சிதறிக் கிடந்த நாட்டின் பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, உறுதியான அரசாங்கம் நிறுவப்பட்டது. சமூக, சமயக் கருத்துகளில் புரட்சிகரமான மாறுதல்கள் உண்டாயின. அனைத்துக்கும் மேலாக, ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டதன் பலனுக, மேனுட்டு முற்போக்குக் கொள்கைகளும், மனித சுதந்திரம்பற்றிய கருத்துகளும் இந்தியர்களிடம் பரவின. இக் கருத்துகள் பாரத மக்களை விழித்தெழச் செய்து, அவர்களின் அரசியல் உணர்வைத் தட்டி எழுப்பின. புதிய பாரதத்தில் ஏற்பட்ட இந்த அரசியல் எழுச்சிதான், இந்திய தேசியக் காங்கிரஸ், முஸ்லிம் லீக் போன்ற அரசியல் கட்சிகள் தோன்றுவதற்கு வழிவகுத்தது.

இந்திய ஒற்றுமை, மக்களின் சுயஆட்சி உரிமை ஆகிய இரண்டு தத்துவங்களின் அடிப்படையில் எழுந்த பல காரணங்கள், இந்திய மக்களின் தேசிய உணர்வுக்குப் புத்துயிரளித்தன. முதலாவதாக, கற்றறிந்த அறிஞர்கள் மேற்கொண்ட அறிவூட்டும் பணியைக் குறிப்பிட வேண்டும். 19ஆம் நூற்றுண்டில் ஆங்கில அரசியலிலும், இலக்கியத்திலும் ஏராளமான முற்போக்குக் கொள்கைகளும், புரட்சிக் கருத்துகளும் புகுந்தன. அவ்விலக்கியங்களைக் கற்றறிந்த இந்திய அறிஞர்களிடமும் ஜனநாயக உணர்வும், தேசபக்தியும் ஊற்றெடுத்தன. அவர்கள் அக் கருத்துகளை நாட்டு மக்களிடையே பரப்ப முற்பட்டார்கள். இக் கருத்துகள் இந்தியாவில் பரவுவதை ஆங்கிலேய அரசினரும் தடுக்கவில்லை; மாருக ஊக்குவித்தார்கள்,

இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிக் கொள்கை தொடக்க முதலே தாராளப் போக்குடனேயே இருந்தது. 'ஆங்கிலேய இந்திய மக்களின் நலனையும், மகிழ்ச்சியையும் பெருக்குவதே இங்கிலாந்து அரசின் கடமை' என்று 1813, சாசனச் சட்டத்தில் (Charter Act of 1813) திட்டவட்டமாகக் கூறப்பட்டது. 'இந்தியக் குடிகளின் நலன்கள் சம்பந்தப்பட்டமட்டில், இந்தியர்களின் கருத்துக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்' என்று 1833ஆம் ஆண்டுப் பாராளுமன்றக் குழு வலியுறுத்தியது. இறுதியாக, 1858ஆம் ஆண்டு வெளியிட்ட பிரகடனத்திலும், 'ஆங்கிலேயப் பேரரசின் மற்றக் குடிகளின் நலன்களைப் பேணுவதில் அரசுக்கு எந்த அளவுக்குக் கடமைப் பொறுப்புகள் உண்டோ அதே அளவுக்கு இந்தியக் குடிகள் விஷயத்திலும் உண்டு' என்று விக்டோரியா அரசி அறிவித்தார். அவருடைய ஆட்சிக் காலத்திலேயே கனடாவுக்கு ஜனநாயக அரசியலமைப்பு வழங்கப் பட்டது. தொடர்ந்து வேறு சில குடியேற்றங்களுக்கும் சுயஆட்சி உரிமை வழங்கப்பட்டது. இவையெல்லாம்பற்றிப் படித்த இந்தியர்களின் மனத்தில் சுதந்திர வேட்கை உண்டாயிற்று.

முற்போக்குக் கொள்கைகளும், தாராள மனப்போக்கும் கொண்ட ஆங்கிலேய அரசியல் தலைவர்கள் நியாய உணர்வோடு நீதி வழுவாமல் நடந்துகொள்வார்கள் என்று படித்த இந்தியர்கள் மனதார நம்பினார்கள். எனவே, நியாயமான காரணங்களோடு தங்கள் கோரிக்கைகளைத் தொகுத்துச் சமர்ப்பித்தால், அவற்றை இங்கிலாந்து ஆட்சித் தலைவர்கள் ஏற்க மறுக்கமாட்டார்கள் என்றும் கருதினார்கள். ஆகவே, ஐ.சி.எஸ். (Indian Civil Service) போன்ற உயர்பதவிகளில் இந்தியர்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற தங்களது முதல் கோரிக்கையை எழுப்பினார்கள். ஆங்கிலேய ஆட்சியின் முதுகெலும்பாக விளங்கியவர்கள் ஐ.சி.எஸ். அதிகாரிகளேயாவர். ஆகவே, இப் பதவிகளில் இந்தியர்கள் பெருமளவில் நுழைவதால், நிருவாகத்தில் இந்தியர்கள் சட்டபூர்வமாகப் பங்கு பெறுவதற்கு வழி ஏற்படும் என்று படித்த இந்தியர்கள் எண்ணினார்கள். எனவே, அவர்கள் இக் கோரிக்கையை வலுவாக வற்புறுத்தினார்கள். இப் பதவிகளை வழங்குவதில், இந்தியர்களுக்கு எவ்விதப் பாகுபாடும் காட்டப்படாதென 1833ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்திலும், 1858ஆம் ஆண்டுப் பேரரசியாரின் பிரகடனத்திலும், 1861ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டத்திலும் திரும்பத் திரும்ப வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தும், ஐ.சி.எஸ். பதவிகளை இந்தியர்களுக்கு அதிக அளவில் கொடுப்பதை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. வாக்குறுதிகள்

ஏட்டளவிலேயே இருந்தன. அவ் வாக்குறுதிகளை மீறுவதிலேயே அவர்கள் ஆர்வம் காட்டினார்கள். இதனால், ஆங்கில அரசியல் தலைவர்களின் நியாய உணர்விலும் நீதிமனப்பான்மையிலும் ஆங்கிலக் கல்வி கற்ற இந்தியர்கள் வைத்திருந்த அசையா நம்பிக்கை குறையலாயிற்று. ஆங்கிலேய நிருவாகத்தினரின் போக்கினால் ஏற்பட்ட ஏமாற்றம் இவர்களின் மனத்தில் வெறுப் புணர்ச்சியை வளர்த்தது. இந் நிலையில் எரியும் தீயில் எண்ணெய் வார்த்ததுபோல் ஒரு நிகழ்ச்சி நடந்தது,

ஐ.சி.எஸ். தேர்வில் சுரேந்திரநாத் பானர்ஜி சிறப்பாக வெற்றி பெற்றிருந்தார். எனினும், வெற்றி பெற்றோர் பட்டியலி லிருந்து அவர் பெயரை நீக்கிவிட்டார்கள். இதை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டது. இறுதியில், நீதிமன்றத் தீர்ப்பின் படி அவருடைய பெயர் அப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவர் ஐ.சி.எஸ். அதிகாரியாக நியமிக்கப்பட்டார். ஆனால், விரைவி லேயே அற்பக் காரணங்காட்டி அவரைப் பதவியிலிருந்து நீக்கி னார்கள். இவரே ஐ.சி.எஸ். தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் ஆவார்.

இவ்வாறு, ஆங்கில அரசின்கீழ்ச் சேவை புரியும் வாய்ப்பை இழந்த சுரேந்திரநாத் பானர்ஜி, இந்தியாவில் தொடங்கிய மாபெரும் தேசிய இயக்கத்தின் தலைவராக ஆனார். அவர் அரசியலில் இறங்கி, கல்கத்தா இந்தியர் சங்கம் (Indian Association of Calcuttah) என்ற நிறுவனத்தை 1876 ஜூலை 26-ல் நிறு வினார். படித்த மத்தியதர வகுப்பு மக்களை உறுப்பினர்களாகக் கொண்டது இந் நிறுவனம். மக்களுக்கு நேரடியாக முறை யீடுகள் செய்து, அரசுக்கு எதிராகப் பொதுமக்களின் கருத்தைத் திரட்டுவதே இந் நிறுவனத்தின் நோக்கம். இந் நோக்கத்தைச் செயலாக்குவதற்குரிய பெரும் வாய்ப்பு 1877-ல் பானர்ஜிக்கு ஏற்பட்டது. அவ் வாண்டில், ஐ.சி.எஸ். தேர்வுக்கான வயது வரம்பை 21-லிருந்து 19 ஆக ஆங்கிலேய அரசு குறைத்தது. இந்தியர்கள் இத் தேர்வுகள் எழுதுவதற் கான வாய்ப்பைக் குறைக்கும் முயற்சியே இது என்று நாடெங்கு முள்ள இந்தியர்கள் கருதினார்கள். எனவே, இப் பிற்போக்கு நடவடிக்கையை எதிர்த்து நாடு முழுவதிலும் இந்தியச் சங்கம் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. பானர்ஜி இந்தியாவெங்கும் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்து, பல பெரிய நகரங்களில் பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார். அவருடைய சுற்றுப் பயணம் பெரும் வெற்றி தந்தது. இந்திய மக்களிடையே அர சியல் விழிப்புணர்வையும், ஒற்றுமை உணர்ச்சியையும் தூண்டு

வதற்கு இத் தேசியக் கிளர்ச்சி பேருதவியாக இருந்தது. பல் வேறு மதங்களையும், சாதிகளையும் சேர்ந்த இந்திய மக்களை ஒரு பொதுவான முயற்சிக்கு ஆதரவாக ஒரே குரல் எழுப்பும்படி செய்வதற்கு இக் கிளர்ச்சி வழிவகுத்தது. மேலும் சமயம், மொழி, சாதி, சமூகம் போன்ற பல வேறுபாடுகள் நிலவினாலும், ஒரு பொதுவான அரசியல் குறிக்கோளை அடைவதற்கு இந்திய மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்ட முடியும் என்பதையும் இக் கிளர்ச்சி புலப்படுத்தியது.

இக் கிளர்ச்சிக்கு முத்தாய்ப்பாக, கல்கத்தாவில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. ஐ.சி.எஸ். தேர்வுக்கான வயது வரம்பைக் குறைக்கக் கூடாதென்றும், இத் தேர்வுகளை இந்தியாவிலும், இங்கிலாந்திலும் ஒரே சமயத்தில் நடத்த வேண்டுமெனவும் இங்கிலாந்து மக்கள்சபையை (House of Commons) வற்புறுத்தும் தீர்மானம் ஒன்று இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்தை வழக்கம்போல் கோரிக்கை மனுவாக எழுதி இங்கிலாந்துக்கு அனுப்பியதுடன் இந்தியச் சங்கம் நின்றுவிடவில்லை. இக் கோரிக்கையை நேரில் எடுத்துரைப்பதற்காக இந்தியச் சங்கத்தின் பிரதிநிதியாக லால் மோகன் கோஷ் என்ற புகழ்பெற்ற வங்காள வழக்கறிஞரை இங்கி லாந்துக்கு அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கோஷ் சிறந்த சட்ட அறிஞர்; திறமையான பேச்சாளர். அவர் இங்கிலாந்து சென்று, அங்கு ஆங்கிலேயக் குடிகள் பெரு மளவில் கலந்துகொண்ட பல கூட்டங்களில் உரை நிகழ்த்தினர். இந்தியர்களின் குறைகளை அவர்கள் மனத்தில் நன்கு பதியு மாறும், அவர்களின் உணர்ச்சியைத் தூண்டுமாறும் மிகத் திறம்பட எடுத்துரைத்தார். அவருடைய உரைக்கு உடனடி யாகப் பலன் கிடைத்தது. இந்தியச் சங்கத்தின் கோரிக்கை மனுவை இங்கிலாந்து மக்கள்சபை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டது. ஐ.சி.எஸ். தேர்வுக்கான விதிமுறைகளில் சில திருத்தங்களைச் செய்தது.

ஐ.சி.எஸ். தேர்வுக் கிளர்ச்சியைத் தொடர்ந்து லிட்டன் பிரபு கொண்டு வந்த ஆயுதச் சட்டம் (Arms Act), தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம் (Vernacular Press Act) ஆகியவற்றை எதிர்த்தும் கிளர்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்தியர்கள் ஆயு தங்கள் வைத்திருப்பதை ஆயுதச் சட்டம் தடை செய்தது. தாய் மொழிப் பத்திரிகைகளின்மீது பல கடுமையான கட்டுப்பாடு களைத் தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம் விதித்தது. அப்போது

இந்தியா அமைச்சராக இருந்தவரும், கடைந்தெடுத்த பிற் போக்குவாதியுமான சாலிஸ்பரி பிரபுவின் தூண்டுதலால் கொண்டுவரப்பட்ட இச் சட்டங்கள், ஒன்றுபட்ட தேசிய இந்தியாவை உருவாக்கும் முயற்சிகளை உருக்குலைக்கும் சதி என்று இந்தியர்கள் கருதினர்கள். இவ் விரு சட்டங்களையும் எதிர்த்து எழுந்த பெருங் கிளர்ச்சியானது, இந்தியாவின் அரசியல் வாழ்வுக்கு ஒரு வடிவங் கொடுத்ததுடன், இந்தியர்கள் தங்களுடைய வலிமையையும் ஆற்றலையும் உணர்ந்து கொள்வதற்கும் வழி செய்தது. உயர்பதவிகளில் அதிகமான இந்தியர்கள் இடம் பெறவேண்டுமென்ற குறிக்கோள், நாட்டின் நிருவாகம் முழுதும் மக்கள் கைக்கு மாற வேண்டுமென்ற குறிக்கோளாக மாறுதலடைந்தது. இதையொட்டி, மக்கள் பிரதிநிதித்துவ நிருவாக நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டவட்டமான கோரிக்கையும் எழுந்தது.

இல்பர்ட் மசோதா : இக் கோரிக்கையை அடைய நிரந்தரமான அகில இந்திய நிறுவனம் ஒன்று தேவைப்பட்டது. இச் சமயம் வெளியிடப்பட்ட இல்பர்ட் வரைவின் (Ilbert Bill) மீது ஒரு சர்ச்சை தோன்றியது. அதுவரையிலும், இந்தியாவிலுள்ள இங்கிலாந்துக் குடிமக்கள் ஏதேனும் குற்றம் புரிந்தால், அவர்களை ஆங்கிலேய நீதிபதிகள்தாம் விசாரிக்க வேண்டும் என்ற விதிமுறை இருந்தது. இந்த விதியை மாற்றி, இந்திய நீதிபதிகளும் அவர்களை விசாரிக்க வழிசெய்யும் வரைவை அரசப் பிரதிநிதியின் (Viceroy) ஆலோசனை சபையின் உறுப்பினரான இல்பர்ட் 1883-ல் கொண்டு வந்தார். இந்த மசோதாவை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் இருந்த ஆங்கிலோ-இந்தியர்கள் எதிர்த்தார்கள். அவர்கள், பாதுகாப்புச் சங்கம் (Defence Association) என்ற ஒன்றை அமைத்துக்கொண்டு, நிதி திரட்டிக் கிளர்ச்சியைத் தீவிரமாக்கினர்கள். இவர்களுடைய கிளர்ச்சிக்கு எதிராகப் படித்த இந்தியர்கள் கிளர்ச்சி தொடங்கினர்கள். இறுதியில் இவ் வரைவை அரசாங்கம் திரும்பப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக மிதமான ஒரு வரைவைக் கொணர்ந்தது. அப்போது செசன்ஸ் நீதிபதிகள் என அழைக்கப் பட்டவர்களும் மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகளாகவும் இருந்த இந்தியர்கள்மட்டும் ஐரோப்பியர்களை விசாரிப்பதற்கு இவ் வரைவு அதிகாரம் அளித்தது. இல்பர்ட் மசோதாவுக்கு எதிராக ஆங்கிலேயர் நடத்திய இக் கிளர்ச்சியை, இந்தியர்களை இழிவுபடுத்த அவர்கள் மேற்கொண்ட முயற்சியாகப் படித்த இந்தியர்கள் கருதினர்கள். ஒற்றுமையுடன் ஓர் அமைப்பின் வாயிலாக நடத்தும் கிளர்ச்சி வெற்றிபெறும் என்பதையும் இக் கிளர்ச்சி

மூலம் இந்தியர்கள் உணர்ந்து கொண்டனர். எனவே, இந்தியர்களுக்கென அகில இந்திய நிறுவனம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபடலாயினர். இதற்கும், முன்பு போலவே, சுரேந்திரநாத் பானர்ஜியே வழிகாட்டினார். ஓராண்டுக்குள் நிதி ஒன்று திரட்டப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த பிரதிநிதிகள்கொண்ட இந்திய தேசிய மாநாடு (Indian National Conference) 1883-ல் கல்கத்தாவில் கூட்டப்பட்டது.

காங்கிரசின் தோற்றம் : அதேஆண்டில், ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (Allan Octavian Hume) என்னும் ஆங்கிலேயர், கல்கத்தாப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குப் பகிரங்கக் கடிதம் ஒன்றை எழுதினார். அவர் உயர்அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். இந்தியர்களுக்கு விரைவில் சுயஆட்சி வழங்கவேண்டுமென்ற கருத்துடையவர். இக் கருத்தை இவர் அவ்வப்போது வெளிப்படையாக எடுத்துரைத்து வந்தார். தாம் ஓய்வு பெற்றதும், இந்தியர்களின் ஒருமுகமான கருத்தை ஒன்றுதிரட்டுவதில் ஈடுபட்டார். இம் முயற்சியின் ஓர் அங்கமே இவர் எழுதிய பகிரங்கக் கடிதமாகும். இதில் இந்தியர்களின் அறிவார்ந்த, தார்மீக, சமூக, அரசியல் மறுவாழ்வுக்குப் பாடுபடும் ஒரு சங்கத்தை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். இச் சங்கத்திற்கு அரசாங்க ஆதரவையும் இவர் கோரியிருந்தார். இதற்குத் தலைமை ஆளுநர் டஃபெரின் பிரபுவிடமிருந்து சாதகமான பதிலும் கிடைத்தது. ‘இந்திய மக்களின் உண்மையான விருப்பங்களை அறிவது எனக்குக் கடினமாக இருக்கிறது. அவர்களுக்கெனப் பொறுப்பான ஒரு நிறுவனம் இருந்தால், அதன் மூலம் இந்தியமக்களின் எண்ணங்களை அரசுக்குத் தெரிவிக்க இயலும்’ என்று அப்போது தலைமை ஆளுநராக இருந்த டஃபெரின் பிரபு (Lord Dufferin) கருத்துத் தெரிவித்தார்.

இதனால் ஊக்கமடைந்த ஹியூம், சில முக்கியமான இந்திய அறிஞர்களின் ஆதரவோடு இந்திய தேசியக் காங்கிரஸ் (Indian National Congress) என்ற அரசியல் அமைப்பை நிறுவினார். இதன் முதல் மாநாடு 1885-ல் கிறிஸ்துமஸ் வாரத்தில் பம்பாயில் புகழ்பெற்ற வங்காளி வழக்கறிஞர் டபிள்யூ. சி. பானர்ஜியின் தலைமையில் நடந்தது. இதே சமயத்தில் சுரேந்திரநாத் தலைமையில் இந்திய தேசிய மாநாட்டின் இரண்டாது கூட்டம் கல்கத்தாவில் நடைபெற்றது. இவ் விரு இயக்கங்களும் ஒரே சமயத்தில் தனித்தனியே நடந்தன. இந்திய தேசியக் காங்கி

ரசைப்பற்றி இந்திய தேசிய மாநாட்டினர் அறிந்துகொண்டதும், ஒரே நோக்கமுடைய இருவேறு அமைப்புகள் நாட்டின் இரு பகுதிகளில் இயங்கி வருவது விரும்பத்தக்கதல்ல என்பதை உணர்ந்து, சிறிதும் காலந்தாழ்த்தாமல் இந்திய தேசியக் காங்கி ரசுடன் இந்திய தேசிய மாநாட்டை இணைத்துவிட்டார்கள். இந்தியாவின் ஒற்றுமை உணர்வு பெருகி வந்ததற்கு இது ஒரு சான்றாக அமைந்தது.

இந்திய தேசியக் காங்கிரசின் முதல் மாநாட்டில் 70 பிரதி நிதிகளே கலந்துகொண்டார்கள். இதற்குக் காரணம், அதே சமயத்தில் கல்கத்தாவில் இந்திய தேசிய மாநாடு நடந்ததே யாகும். சுரேந்திரநாத் பானர்ஜி போன்ற தலைவர்கள் கல்கத்தா மாநாட்டில் கலந்துகொண்டதால், அவர்களால் பம்பாயில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு வரமுடியவில்லை. இதன் பிறகு, காங்கிரஸ் மாநாடு ஒவ்வோராண்டும் கிறிஸ்துமஸ் வாரத்தில் ஏதாவது ஒரு பெரிய நகரில் நடைபெறுவது வழக்கமாகியது. இம் மாநாடு நடந்த இடங்களில் எல்லாம் அது அங்குள்ள மக் களின் உற்சாகத்தைத் தூண்டியது. ஆண்டுதோறும் இந்தியா வின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் பிரதிநிதிகளின் எண் ணிக்கை பெருகிக் கொண்டேயிருந்தது. இந்திய மக்கள், படித் தவர் முதல் பாமரர் வரை, எல்லோரும் ஆண்டுதோறும் ஓரிடத்தில் கூடி ஒருவரையொருவர் அறிந்துகொள்ள இந்த மாநாடு வழிசெய்தது. புதிய ஆண்டில் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி விவாதித்து முடிவெடுக்கவும் இம் மாநாடு வாய்ப்பளித்தது. அனைத்திற்கும் மேலாக, பிரதி நிதித்துவ நிறுவனங்களை அமைப்பதற்கும், அவற்றை ஆள்வ தற்கும் இந்தியர்கள் தகுதியற்றவர்களென்ற ஆங்கிலேயரின் கருத்து அடியோடு தவறானது என்பதை இம் மாநாடு நடைமுறை யில் நிரூபித்து வந்தது.

19ஆம் நூற்றாண்டு முழுவதும், அரசாங்கத்தின் கொள் கையைக் கண்டிப்பதும், சீர்திருத்தங்களை வற்புறுத்துவதுமே காங்கிரசின் கொள்கையாக இருந்து வந்தது. காங்கிரஸ் தன் கருத்துகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றி, அவற்றை அர சாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. இவ் வாறு, நாட்டுமக்களின் பயங்கர வறுமையை அரசின் கவனத் திற்குக் கொண்டுவந்தது. இதுபற்றி முறையான விசாரணை நடத்தி, குறைகளைப் போக்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டுமெனவும் வற்புறுத்தியது. ஆயுதச் சட்டத் தையும், மற்றும் கலால்வரி, உப்புவரி போன்றவற்றையும் காங் கிரஸ் வன்மையாகக் கண்டித்தது.

அரசியல் உரிமைகளைப் பொறுத்தவரையில், மத்திய அளவிலும், மாநில அளவிலும் பிரதிநிதித்துவச் சட்டசபைகளை நிறுவ வேண்டுமெனக் காங்கிரஸ் வற்புறுத்தியது. இந்தியா சபையைக் (Indian Council) கலைத்துவிட வேண்டுமெனக் கோரியது. பொதுக் கல்வியையும், தொழில்நுட்பக் கல்வியையும் தீவிரமாகப் பரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. இன்னும், இராணுவச் செலவைக் குறைக்க வேண்டுமெனவும், இந்தியர்களுக்கும் இராணுவப் பயிற்சியளிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியது. குற்றஞ் சார்ந்த நீதி நிருவாகத்தில் நீதித் துறையையும் நிருவாகத் துறையையும் தனித் தனியே பிரிக்கவேண்டுமெனவும் கோரியது. அரசாங்கத்தின் உயர்பதவிகளில் இந்தியர்களுக்கு அதிக இடம் கொடுக்க வேண்டும் என்றும், ஐ.சி.எஸ். தேர்வுகளை இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்த வேண்டுமெனவும் காங்கிரஸ் வற்புறுத்தியது.

அரசின் கொள்கையைக் கண்டிப்பதில் காங்கிரஸ் மிகவும் பெருந்தன்மையோடும் நிதானத்துடனும் நடந்துகொண்டது. இங்கிலாந்து மன்னரிடம் தனக்குள்ள குன்றாத விசுவாசத்தையும், இங்கிலாந்துத் தலைவர்களின் நியாய உணர்வில் தனக்குள்ள குறையாத நம்பிக்கையையும் காங்கிரஸ் அடிக்கடி வெளிப்படுத்தி வந்தது. இந்தியர்களின் கோரிக்கைகளிலுள்ள அடிப்படை நியாயத்தை ஆங்கிலேய அரசினர் உணரும்படி செய்வதற்கே காங்கிரஸ் முழு முயற்சி எடுத்துக்கொண்டது.

தொடக்கத்தில் காங்கிரஸ் இயக்கத்தை இங்கிலாந்து அரசாங்கம் வெறுக்கவில்லை; ஓரளவு பரிவுடனேயே, அதைக் கவனித்து வந்தது. காங்கிரசின் முதல் மாநாட்டில் அரசின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டதுடன், அதன் விவாதங்களிலும் பங்கு பெற்றார்கள். தலைமை ஆளுநரும் ஆளுநர்களும் நடத்திய விருந்துகளுக்குக் காங்கிரஸ் தலைவர்கள் அழைக்கப்பட்டார்கள். ஆனால், விரைவிலேயே அரசின் போக்கு மாறியது. தலைமை ஆளுநர் டஃபெரின் பிரபுவுக்கு நடத்தப்பட்ட வழியனுப்பு விருந்தில், இந்திய தேசியக் காங்கிரசின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் டஃபெரின் கண்டித்துப் பேசினார். இதன் பிறகு, அரசு அதிகாரிகள் படிப்படியாகக் காங்கிரசுடன் தங்கள் தொடர்பைத் துண்டித்துக் கொண்டார்கள்.

காங்கிரசில் இருப்பவர்கள் படித்த இந்தியர்கள் மட்டுமே என்றும், இவர்கள் இந்திய மக்கள்தொகையில் மிகச் சிறிய அளவினரே என்றும், அவர்களை இந்திய மக்களின் பிரதிநிதிகளாகக்

கருத இயலாதென்றும் அரசாங்கம் கருதியது. நாட்டின் மூளையாகவும் மனச்சாட்சியாகவும் விளங்குபவர்கள் படித்த இந்தியர்களே என்றும், இந்திய மக்களின் விருப்பு வெறுப்புகளை நன்கறிந்தவர்கள் அவர்களே என்றும், எனவே படிப்பறிவில்லாத கோடிக்கணக்கான இந்தியர்களின் சார்பாகப் பேச அவர்களுக்கே சட்டபூர்வமாக உரிமை உண்டு எனவும் காங்கிரஸ் சார்பில் வாதிடப்பட்டது. ஆனால், இதை அரசினர் ஏற்கத் தயாராக இல்லை. இந் நிலையில். காங்கிரசின் தீர்மானங்களை அரசினர் குப்பைக் கூடையில் போட்டு வந்ததில் வியப்பில்லை. அரசின் இப் போக்கினால் ஏமாற்றமடைந்த காங்கிரஸ், இங்கிலாந்திலும் இந்தியாவிலும் அரசுக்கு எதிராகப் பொதுக் கருத்தைத் திரட்டுவதெனத் தீர்மானித்தது. இவ் வியக்கத்தைச் 'சட்டபூர்வக் கிளர்ச்சி' (Constitutional agitation) என்பர். இதன்படி, இந்தியாவெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இங்கிலாந்திலும் பல்வேறு பகுதிகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு மக்கள் கருத்தைத் திரட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டது. விரைவிலேயே 'இந்தியா' என்ற வார இதழையும் இங்கிலாந்தில் காங்கிரஸ் தொடங்கியது.

இங்கிலாந்தில் நடத்திய கிளர்ச்சிக்கு உடனடியாகப் பலன் கிடைத்தது. பாராளுமன்ற உறுப்பினரான சார்லஸ் பிராட்லா (Charles Brodlaugh) என்பவர், 1889-ல் பம்பாயில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். இந்தியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பிறகு, சட்டசபைகளை விரிவுபடுத்தவும், சீர்திருத்தியமைக்கவும் வகைசெய்யும் மசோதா ஒன்றைத் தயாரித்து, 1890-ல் இங்கிலாந்து மக்கள்சபையில் அவர் கொணர்ந்தார். இதற்கு எதிர் மசோதா ஒன்றை அரசாங்கம் தானே தயாரித்து 1892-ல் நிறைவேற்றியது. இந்த மசோதா தான் 1892ஆம் ஆண்டு இந்தியச் சட்டசபைச் சட்டம் (India Councils Act of 1892) என்பதாகும்: இச் சட்டத்தைக் காங்கிரசின் மறைமுகமான சாதனை எனலாம்.

தீவிரவாதிகள் : காங்கிரசின் மற்றக் கோரிக்கைகளைப் பொறுத்தவரையில், அரசினர் கேளாச் செவியினராகவே இருந்தனர். ஒவ்வோராண்டும் காங்கிரஸ் இக் கோரிக்கைகளை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியவண்ண மிருந்தது. ஆனால், அரசினர் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை, இதனால் காங்கிரசில் ஒருவித மனத்தளர்ச்சி தோன்றியது. அது படிப்படியாக அரசுக்கெதிரான தீவிர வெறுப்புணர்ச்சியாக உருவெடுத்தது. காங்கிரஸ் திட்டத்தின் திறமையில் ஒரு பிரிவினர் நம்பிக்கை

இழக்கலாயினர். ஆண்டுதோறும் அரசுக்கு மனுக்களை அனுப்புவதையும், அவற்றை அரசு உடனடியாக நிராகரிப்பதையும் இவர்கள் எள்ளி நகையாடினர். 'வெறும் பேச்சினால் எவ்விதச் சீர்திருத்தமும் ஏற்பட்டுவிடாது; செயலில் இறங்கவேண்டும்' என்று இவர்கள் வற்புறுத்தினார்கள். இந்தத் தீவிரவாதப் பிரிவினருக்குத் தலைமை தாங்கியவர் மராட்டியத்தைச் சேர்ந்த பாலகங்காதர திலகர் ஆவர்.

திலகர் உணர்ச்சியைத் தூண்டும்வகையில் பேசும் நாவன்மை வாய்ந்தவர்; சிறந்த எழுத்தாளர். இந்தியாவின் தொன்மையான பாரம்பரியத்தை நினைவுபடுத்தி இந்தியமக்களிடம் தேசிய உணர்வை எழுப்பிவந்தார். இந்தியர்களின் சமூக விவகாரங்களில் அரசினர் தலையிடுவதைக் கடுமையாக எதிர்த்தார். 'கேசரி' என்ற பத்திரிகைமூலம் தமது தீவிர அரசியல் கொள்கைகளை அவர் மக்களிடம் பரப்பிவந்தார். திலகரின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் காங்கிரசில் 'தீவிரவாதிகள் பிரிவு' ஒன்று உருவாவதற்கு முக்கியக் காரணமாக அமைந்தன.

ஆரம்பத்தில் இந்திய மக்களில் எல்லாப் பிரிவினரும், வகுப்பினரும் ஒரே அளவில் காங்கிரஸ் இயக்கத்தில் ஆர்வம் காட்டியதாகக் கூறமுடியாது. காங்கிரசின் ஆண்டு மாநாட்டில் சில முஸ்லிம் தலைவர்கள் கலந்துகொண்டார்கள். சில சமயம் காங்கிரசின் தலைவர்களாகவும் முஸ்லிம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுண்டு. எனினும், முஸ்லிம்களில் பலம் வாய்ந்த ஒரு பிரிவினர், தொடக்கத்திலிருந்தே காங்கிரசிடம் ஆதரவு காட்டாமலிருந்து வந்தார்கள். இதற்கு ஆழ்ந்த காரணங்களும் இருந்தன. மேனாட்டுக் கல்வியைக் கற்பதில் இந்து சமூகத்தினர் காட்டிய அளவு ஆர்வத்தை முஸ்லிம்கள் காட்டவில்லை. அவர்கள் தங்களின் பாரம்பரியச் சமயக் கல்வியைக் கற்பதிலேயே கவனம் செலுத்தினார்கள். ஆங்கிலேயர் வருகைக்குமுன் இந்தியாவின் பெரும்பகுதியில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தியதை அவர்கள் இன்னும் நினைத்து ஏங்கிக்கொண்டிருந்தார்கள். இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி மறைந்ததற்கு ஆங்கிலேயரே காரணம் என அவர்கள் கருதினார்கள். எனவே, ஆங்கிலேயரிடம் அவர்களுக்கு வெறுப்பு இருந்துவந்தது. ஆகையால், 1857ஆம் ஆண்டுப் புரட்சி, வகாபி இயக்கம் போன்றவற்றை அவர்கள் ஆதரித்தார்கள். பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு முஸ்லிம்களை இந்துக்களிடமிருந்து பிரித்துத் தங்கள் பக்கம் இழுக்க ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தொடக்கத்திலிருந்தே முயன்று வந்தார்கள். இந்துக்களிடம் தேசிய உணர்வு மேன்மேலும்

பெருகவே அவர்களிடமிருந்து முஸ்லிம்களைப் பிரிக்கும் ஆங்கிலேயரின் முயற்சி தீவிரமாகியது. இதில் அவர்கள் ஓரளவு வெற்றியும் பெற்றார்கள்.

இச் சமயத்தில், சர் சையது அகமது என்பவர் முஸ்லிம்களின் தலைவராக ஆனார். இவர் முஸ்லிம்களின் கொள்கைக்கும் நடவடிக்கைகளுக்கும் புதிய திருப்பம் கொடுத்தார். மேனாட்டுக் கல்வி பெறுவதில் இந்துக்களைவிட முஸ்லிம்கள் மிகவும் பின் தங்கி யிருப்பதையும், அதனால் அரசாங்கப் பதவிகள் இந்துக்களின் தனியுடைமையாகியிருப்பதையும் அவர் நன்குணர்ந்து, முஸ்லிம்களிடையே மேனாட்டுக் கல்வியைப் பரப்புவதற்குத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டார். இதற்கென 1875-ல் அவர் அலிகாரில் ஒரு பள்ளியை நிறுவினார். இப் பள்ளி விரைவில் ஒரு கல்லூரியாக வளர்ந்தது. முஸ்லிம்களிடையே நவீன உயர் கல்வியையும் பண்பாட்டையும் வளர்ப்பதில் இக் கல்லூரி ஆற்றிய பணி மகத்தானது. பின்னர், இதுவே அலிகார் பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது.

சர் சையது அகமது சிறந்த தேசபக்தர்; தேசியவாதி. அவர் இல்பர்ட் மசோதாவையும், ஐ.சி.எஸ். தேர்வுக் கிளர்ச்சியையும் ஆதரித்தார். 'இந்துக்களும் முஸ்லிம்களும் இந்தியாவின் இரு கண்கள். ஒரு கண்ணைக் காயப்படுத்தினால், மறுகண்ணும் காயமடையும். இரு வகுப்பாரும் மனப்பூர்வமாக ஒன்றுபட்டுச் செயலாற்றினால் பரஸ்பரம் உதவியாக இருக்கலாம். ஒருவரையொருவர் எதிர்த்துச் செயற்பட்டால், இருவருமே அழிவது உறுதி' என்று அவர் கருதினார். இத்தகைய முற்போக்குக் கொள்கைகளை உடையவராக இருந்தும், சையது அகமது காங்கிரஸ் இயக்கத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவந்தார். காங்கிரசின் கொள்கைகளை அவர் கண்டித்தார். முஸ்லிம்கள் அதில் சேரக்கூடாதென்றார். அரசியல் விவகாரங்களை விவாதித்துக் கொண்டிருப்பதால் முஸ்லிம்களுக்கு ஒரு பயனுமில்லை என்று கருதினார். அதனால், காங்கிரசுக்குப் போட்டியாகக் 'கல்விக் காங்கிரஸ்' (Educational Congress) என்ற அமைப்பை நிறுவினார். இது தவிர, காங்கிரசை எதிர்க்க மேலும் இரு சங்கங்களையும் தொடங்கினார். அவற்றுள் ஒன்று 'ஐக்கிய இந்தியத் தேசபக்தர் சங்கம்' (United Indian Patriotic Association, 1888) என்பதாகும். 1888ஆம் ஆண்டில் தொடங்கிய இதில் இந்துக்கள், முஸ்லிம்கள் இருசாராரும் உறுப்பினர்களாக இருந்தனர். இரண்டாவது நிறுவனம் 'முகம்மதியர் ஆங்கிலோ-கீழ்த்திசையினர் பாதுகாப்புச் சங்கம்' (Muhammadan Anglo-Oriental

Defence Association) என்பது. 1893-ல் நிறுவப்பட்ட இச் சங்கத்தில் ஆங்கிலேயரும், முஸ்லிம்களும் மட்டுமே உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

பிரித்தாளும் கொள்கை: சர் சையது அகமதுவின் போக்கில் இத்தகைய மாறுதல் ஏற்பட்டதற்குப் பிரிட்டிசாரின் பிரித்தாளும் கொள்கையே காரணம். முஸ்லிம்களை இந்துக்களோடு சேர விடாமல், தங்கள் ஆதரவில் வைத்துக்கொள்வதில் ஆங்கிலேயர் கண்ணும்கருத்துமாக இருந்தார்கள். அவர்களின் முயற்சியால், காங்கிரசுக்குச் சையது அகமதுவின் எதிர்ப்பு மேலும் தீவிரமாகியது. மக்கள் பிரதிநிதித்துவ அரசாங்கம் அமைக்க வேண்டுமென்ற காங்கிரசின் கோரிக்கையையும் அவர் ஐயக் கண் கொண்டு பார்க்கலானார். காங்கிரஸ் வலியுறுத்திய ஜனநாயக முறை அரசாங்கம் அமைந்தால், அதில் பெரும்பான்மையான இந்துக்களின் ஆதிக்கமே ஏற்படும் என்றும், சிறுபான்மை முஸ்லிம்களுக்கு இடமிராது என்றும் அவர் எண்ணினார். இக் கருத்தை மற்ற முஸ்லிம் தலைவர்களும் ஆதரித்தார்கள். 1898-ல் சையது அகமது இறந்த பின்னரும் இக் கொள்கை நீடித்தது. எதிர்கால முஸ்லிம் அரசியலில் அடிப்படைக் கொள்கையாகவும் இக் கருத்து அமைந்தது.

வங்காளப் பிரிவினை: 1885 முதல் 1905 வரையில் 20 ஆண்டுக் காலத்தில் காங்கிரசின் முயற்சிகளினால் ஏற்பட்ட பலன் இந்தியப் பிரதிநிதித்துவ சபைச் சட்டம் (1892) ஒன்றுதான். வேறு குறிப்பிடத்தக்க சாதனைகள் எதையும் காங்கிரசினால் செய்ய முடியாததைக் கண்டு, தீவிரவாதிகள் கொதிப்படைந்தார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் துணிவான புரட்சி நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமென அவர்கள் வற்புறுத்தினார்கள். 1905-ல் நிருவாக வசதிக்கெனக் காரணங் கூறி வங்காளத்தைக் கர்சன் பிரபு பிரிவினை செய்தார். உண்மையான தேசிய உணர்வு வளர்வதற்கு இப் பிரிவினை ஊறு விளைவிக்கும் என இந்தியர்கள் கருதினார்கள். வங்காளத்தில் மட்டுமன்றி, நாடெங்கிலும் இந்துக்களும் முஸ்லிம்களும் வங்காளப் பிரிவினையைக் கடுமையாக எதிர்த்தார்கள். தேசியவாதிகளின் இக் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், வங்காளம் இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஆட்சியாளர்களின் இந்தப் பிடிவாதப் போக்கு, தேசியவாதிகளிடம் கிளர்ச்சி உணர்வைத் தூண்டியது, சுரேந்திரநாத் பானர்ஜி, விபின் சந்திரபால், ஏ. ரசூல், அஷ்வினி குமார் தத்தா, அரவிந்த கோஷ் போன்ற தலைவர்களின் தலைமையில் வங்கம் முழுவதிலும் காட்டுத்தீப்போல் கிளர்ச்சி மூண்டு, பிற மாநிலங்களிலும் தீவிரமாகப் பரவியது.

காங்கிரஸ் பிளவு : வங்காளிகள் பகிரங்கமாக அரசாங்கத்தை மீறினார்கள். இங்கிலாந்துப் பொருள்களைப் புறக்கணித்து, உள் நாட்டுப் பொருள்களையே பயன்படுத்துவதென உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். 1906-ல் நடந்த காங்கிரஸ் மாநாடு இத் திட்டங்களுக்கெல்லாம் இசைவளித்ததுடன், காங்கிரசின் வரலாற்றிலேயே முதன்முறையாகப் பூரண சுதந்திரம் பெறுவதே தனது குறிக்கோள் என்று தீர்மானம் நிறைவேற்றியது. இப் புரட்சி நடவடிக்கைகளைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் திலகர், விபின் சந்திரபால், லாலா லஜபதிராய் போன்ற தீவிரவாதத் தலைவர்களாவர்.

இக் கொள்கைகளைத் தமிழகத்தில் பரப்பிய தலைவர்களுள் தலைசிறந்தவர் 'கப்பலோட்டிய தமிழர்' எனப் புகழ்பெற்ற வ. உ. சிதம்பரம்பிள்ளை ஆவார். நாடு முழுதும் விடுதலை வேட்கையும் போராட்டமும் கிளர்ந்தெழுந்தபோது, தென்னாட்டில் விடுதலைப் போர்த் தளபதியாகச் சிதம்பரம்பிள்ளை விளங்கினார். அயல் நாட்டுப் பொருள்களைப் புறக்கணித்து உள்நாட்டுப் பொருள்களுக்கு ஆதரவு வளர்ந்தோங்கியபோது, தூத்துக்குடியில் தரும சங்க நெசவுச் சாலையையும் சுதேசிப் பண்டகசாலையையும் வ. உ. சி. நிறுவினார்; தமிழ்நாடெங்கும் சென்று மக்களிடம் விடுதலை உணர்வைத் தூண்டினார். அமரகவி சுப்பிரமணிய பாரதியாரும், சுப்பிரமணிய சிவா என்ற தலைவரும் இவருக்கு உறுதுணையாக இருந்தனர்.

தூத்துக்குடியில் கடல் வாணிகத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் செலுத்திவந்தார்கள். அவர்கள் இந்திய வணிகர்களை இழிவாக நடத்தினார்கள். இதைக் கண்டு வ. உ. சி. மனங்கொதித்தார், கடல் வாணிகத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை ஒழிக்க எண்ணினார். தாமே கப்பல் நிறுவனம் ஒன்றைத் தொடங்கினார். இந்திய வணிகர்கள் இந்த நிறுவனத்தின் கப்பல்களிலேயே பொருள்களை அனுப்பலாயினர். 'கப்பலோட்டிய தமிழன்' என்று மக்கள் வ. உ. சி.யை அழைக்கலாயினர். வெள்ளையரின் கப்பல்களுக்கு வருவாய் குறையலாயிற்று. அவர்கள் போட்டிக் காகக் கட்டணத்தைக் குறைத்தார்கள். அரசினரும் வ.உ.சி.யின் கப்பல் நிறுவனத்தை நசுக்க முயன்றனர். இதனால் கப்பல் நிறுவனத்தை வ. உ. சி. மூடநேர்ந்தது. வ. உ சி. யை அடக்கிவிட வெள்ளையர் அரசாங்கம் தீவிரமாக முயன்றது. அவர்மீது அதிகாரிகள் பல வழக்குகளை அடுக்கடுக்காகத் தொடர்ந்தனர். ஆனால் அவற்றில் தோல்வியுற்றனர். 1908 மார்ச் மாதம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதற்காக, அவர் மீது அரச நிந்தனை

வழக்குத் தொடரப்பட்டது. இதில் அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்தனர். உயர்நீதிமன்ற முறையீட்டில் இது ஓர் ஆயுள் தண்டனையாகக் குறைந்தது. கோயம்புத்தூர்ச் சிறையில் வ. உ. சி. மாடுபோல் செக்கிழுத்து நலிந்தார். பிறகு சிறைத் தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையானார்.

இத்தகைய சூழ்நிலையில் 1908ஆம் ஆண்டு சூரத்தில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது.

சுரேந்திரநாத் பானர்ஜி பிரோஸ் ஷா மேத்தா, கோகலே போன்ற மிதவாதத் தலைவர்கள், திலகர் முதலியவர்கள் கலந்து கொண்டனர். 1907-ல் நடந்த சூரத் காங்கிரசில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் பகிரங்க மோதல் உருவாயிற்று. காங்கிரஸ் இரு கூறுகளாகப் பிளவுபட்டது. தீவிரவாதிகளும், மிதவாதிகளும் தனித்தனியே கூட்டங்களை நடத்தினார்கள். இதிலிருந்து சுமார் 9 ஆண்டுகள்வரை தீவிரவாதிகள் காங்கிரசிலிருந்து விலகியே இருந்தார்கள்.

இந்த 9 ஆண்டுகளில் பல முக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. கர்சனின் வங்காளப் பிரிவினையினால் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு மற்றொரு வெற்றி கிடைத்தது. 1906-ல் நவாப் சாலிமுல்லா என்பவர் டாக்காவில் முஸ்லிம்களுக்கென முஸ்லிம் லீக் என்ற பெயரில் ஓர் அரசியல் நிறுவனத்தை ஏற்படுத்தினார். இந் நிறுவனம் வங்காளப் பிரிவினையை ஆதரித்தது. இங்கிலாந்துப் பொருள்களைப் புறக்கணிப்பதை எதிர்த்தது.

அடக்குமுறை: வங்காளப் பிரிவினையை எதிர்த்துக் காங்கிரஸ் தொடங்கிய கிளர்ச்சியை ஒடுக்க அரசாங்கம் அடக்குமுறையை ஏவியது. வங்காளத்தில் ஏராளமானோர் சிறையிலடைக்கப்பட்டார்கள். பிற மாநிலங்களிலும் இக் கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டிய திலகர் போன்றவர்களும் கைது செய்யப்பட்டார்கள். சில தலைவர்கள் விசாரணையின்றி நாடுகடத்தப்பட்டார்கள். அமைதியாக மறியல் செய்த தொண்டர்கள் காட்டுத்தனமாகத் தாக்கப்பட்டனர்; சிறையில் தள்ளப்பட்டனர்; பொதுக்கூட்டங்களைக் காவல் படையினர் (Police) தடியடி செய்து கலைத்தார்கள். அரசு இத்தகைய கொடிய நடவடிக்கைகளை எடுத்தும், தேசிய இயக்கத்தை அவர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை. மாறாக, தலைமறைவாகச் செயல்படும் இரகசிய இயக்கம் ஒன்று தோன்றியது. இவ் வியக்கத்தினர், அரசு அதிகாரிகளைக் கொன்று அரசாங்கத்திற்கு அச்சம் விளைவித்தார்கள்.

கல்கத்தாப் புறநகர்ப் பகுதிகளில் மறைமுகமாக வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்டன. நிலைமையைக் கட்டுப்படுத்த அரசு அடுக்கடுக்காகப் பல அடக்குமுறைச் சட்டங்களை நிறைவேற்றியது. பொதுக்கூட்டங்கள் நடத்துவது கட்டுப்படுத்தப்பட்டது. வெடிகுண்டுகள் தயாரிக்கும் பொருள்களை வைத்திருப்பவர்களுக்குக் கடும் அபராதம் விதிக்கப்பட்டது. தனிப்பட்டவர்களையும், அரசியல்வாதிகளையும் விசாரணையின்றிச் சிறையிலடைக்க அரசு அதிகாரம் பெற்றது. அரசாங்கத்தைக் கண்டிக்கும் பத்திரிகைகளுக்குக் கடும் அபராதம் விதிக்கவும், அவற்றைப் பறிமுதல் செய்யவும் அரசுக்கு அதிகாரமளிக்கும் இந்தியப் பத்திரிகைச் சட்டம் 1910-ல் நிறைவேறியது. ஏராளமானவர்மீது வழக்குகள் தொடரப்பட்டன. இவ் வழக்குகளில் கடுந் தண்டனைகள் விதிக்கப்பட்டன. இத்தனை அடக்குமுறையைக் கையாண்டும் நிலைமை அரசினரின் கட்டுமீறிப் போய்க் கொண்டிருந்தது.

காங்கிரசில் ஒற்றுமை: தங்களின் அடக்குமுறைக் கொள்கை படுதோல்வியைத் தழுவியது கண்ட அரசினர், மின்டோ-மார்லிச் சீர்திருத்தங்கள் (1909), வங்காளப் பிரிவினையில் திருத்தம் (1910) போன்ற நடவடிக்கைகள் மூலம் காங்கிரஸ் மிதவாதிகளைத் தம்வசம் இழுக்க முயன்றனர். அரசின் இந் நடவடிக்கைகளை முதலில் சில மிதவாதிகள் வரவேற்றனர். ஆனால், மின்டோ-மார்லிச் சீர்திருத்தத்தின் சில அம்சங்களை, குறிப்பாக முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி அமைத்தல் போன்றவற்றை, அவர்களில் பெரும்பாலோர் வன்மையாக எதிர்த்தனர். பிரித்தாளும் சூழ்ச்சியான இந் நடவடிக்கையானது, மிதவாதிகளுக்கும் அரசுக்குமிடையே கருத்து வேற்றுமையை அதிகமாக்கியது. இறுதியில், 1916-ல் இலட்சுமணபுரியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்குமிடையே ஒற்றுமை உண்டாகவும் வழிவகுத்தது.

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இணக்க இயலாப் பிணக்கை ஏற்படுத்த மின்டோ பிரபுவும் அவருடைய அதிகாரிகளும் நடத்திய நாடகமே முஸ்லிம்களுக்கான தனித்தொகுதி முறையாகும். தங்களுக்குத் தனித்தொகுதி வேண்டுமெனக் கோரும்படி, முஸ்லிம்களை அதிகாரிகள் தூண்டிவிட்டார்கள். அவ்வாறே முஸ்லிம் தூதுக்குழு ஒன்று தலைமை ஆளுநர் மின்டோ பிரபுவிடம் சென்று. கோரியது. அக் கோரிக்கையை மின்டோ பிரபு ஏற்றுக்கொண்டார். அதன்படி மின்டோ-மார்லிச் சீர்திருத்தத்தில் முஸ்லிம் தனித்தொகுதி முறையும் சேர்க்கப்பட்டது.

1906-ல் நிறுவப்பட்ட முஸ்லிம் லீக் முதலில் தேசியத்திற்குப் பதில் சமயப் பிணைப்பை வலியுறுத்தும் ஓர் இயக்கமாகவே இருந்தது. நாளடைவில் அதன் உறுப்பினர்கள் எண்ணிக்கை பெருகவே, நாட்டு மக்களுக்கு எழுச்சியூட்டிய தேசிய உணர்வு முஸ்லிம் லீகையும் ஆட்கொண்டது. 1913-ல் நடந்த மாநாட்டில், பேரரசுக்குள் அடங்கிய சுயஆட்சி அமைப்பதைத் தனது குறிக்கோளாக முஸ்லிம் லீக் அறிவித்தது. இந் நிலையில், 1914-ல் முதல் உலகப்போர் மூண்டது. ஐரோப்பாவிலுள்ள ஒரே முஸ்லிம் நாடான துருக்கியை பிரிட்டனும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் தாக்கின. இதனால், இந்திய முஸ்லிம்களுக்கு ஆங்கிலேயர் பால் வெறுப்புத் தோன்றியது. ஆங்கிலேய அரசை எதிர்த்து அவர்கள் 'கிலாபத் இயக்க'த்தை (Khilafat Movement) தொடங்கினார்கள். இவ் வியக்கத்தைக் காந்தியடிகள் ஆதரித்தார். இதனால் காங்கிரஸ்-முஸ்லிம் லீக் நட்புறவு ஏற்பட வழி ஏற்பட்டது. 1916-ல் காங்கிரசுக்கும் லீகுக்குமிடையே இலட்சுமண புரியில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி, முஸ்லிம்களுக்கென த் தனித்தொகுதி முறையைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. டொமினியன் அந்தஸ்து அடிப்படையில் அரசியலமைப்புத் திட்டம் ஒன்றை இரண்டு கட்சிகளும் கூட்டாக வகுத்தன. அதே ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் லோகமான்ய திலகரும், அதற்கு ஐந்து மாதங்கள் கழித்து அன்னிபெசன்ட் அம்மையாரும் 'சுயஆட்சிக் கழகங்களை'த் (Home Rule Leaques) தொடங்கினார்கள். இவ் விரண்டும் கூட்டுச் சேர்ந்து, காங்கிரசும் லீகும் அரசியல் சீர்திருத்தங்கள்பற்றி வகுத்த திட்டத்திற்கு ஆதரவாக நாடெங்கும் தீவிரமாகப் பிரசாரம் செய்யலாயின.

ஒத்துழையாமை இயக்கம்: காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்குமிடையே நட்புறவுக்கு வழிவகுத்த முதல் உலகப் போர் (1914—1918), வேறு வழிகளிலும் இந்தியாவுக்கு உதவியது. இப் போரில் இங்கிலாந்துக்கு உதவிபுரிந்தால், போர் முடிந்ததும் பொறுப்பாட்சி கிடைக்கும் என இந்திய மக்கள் எதிர்பார்த்தனர். அதனால், இப் போர் நடந்தபோது, இந்தியா பொன்னையும் பொருளையும் போர்வீரர்களையும் கொடுத்துப் பிரிட்டனுக்கு உதவியது. மிகவும் இக்கட்டான நேரத்தில் இந்திய வீரர்கள் மிகுந்த தீரத்துடன் போராடி ஆங்கிலேயருக்கு வெற்றி தேடித் தந்தனர். இதனால், 1919-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியருக்குச் சில உரிமைகளை வழங்க இசைந்தது. இந்தியா அமைச்சரான மான்டேகு, இந்திய அரசியல்பற்றிய அரசின் கொள்கையை விளக்கி ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில், இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சியளிப்பதே அரசாங்கத்தின்

நோக்கமென்றும், அதற்குப் படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதைத் தொடர்ந்து மான்டேகு இந்தியாவுக்கு வந்து, பலரோடு கலந்துபேசி நிலைமையை அறிந்தார். இதன்பயனாக 1919ஆம் ஆண்டுச் சட்டம் வெளிவந்தது.

இதன்படி, மத்திய அரசாங்கத்தில் இரண்டு சட்டசபைகள் ஏற்பட்டன. மாநிலச் சபைகளில் அதிகமான உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். அவருள் 70% பேர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பொழுதுதான் வரி செலுத்தும் மக்களால் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை முதல் தடவையாக இந்தியருக்குக் கிடைத்தது. இச் சட்டத்தால் ஏற்பட்ட பெரும் மாற்றம் மாநிலங்களில் ஒருவிதப் பொறுப்பாட்சி ஏற்பட்டதாகும். அரசியல் நிருவாகத்தை இரண்டாக வகுத்து, ஒரு பகுதியிலடங்கிய அதிகாரங்கள் சட்டசபையிலிருந்து அமைக்கப்பட்ட அமைச்சரவைக்கு அளிக்கப்பட்டன. இந்த அமைச்சர்களின் அதிகாரம் பலவகையிலும் குறைவாக இருந்தபோதிலும், பொறுப்பாட்சி வளர்ச்சிக்கு இதுவே தொடக்கமாகும்.

ஜாலியன்வாலா பாக் படுகொலை : 1919-ல் தோன்றிய அரசியல் அமைப்பினால் கிடைத்த அரைகுறை உரிமைகளை ஏற்றுக்கொள்ள காங்கிரஸ் மறுத்தது. காந்தியடிகளும் இவற்றை வன்மையாகக் கண்டித்தார். 1919ஆம் ஆண்டுச் சட்டப்படி நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியினர் கலந்துகொள்ளவில்லை. மிதவாதிகள் மட்டுமே தேர்தலில் நின்று சட்டசபை உறுப்பினர்களாயினர். காங்கிரசின் போக்குக் கண்டு அரசு வெகுண்டது. போரில் இந்தியா இங்கிலாந்துக்குச் செய்த பேருதவியையும் மறந்து, இந்தியர்களைக் கடுமையாக அடக்கியாள எண்ணங் கொண்டு கொடிய 'ரௌலத் சட்டங்களை' அரசு நிறைவேற்றியது. இச் சட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டாமென்று அரசப் பிரதிநிதிக்குக் காந்தியடிகள் எழுதினார். அது பயனளிக்கவில்லை. உடனே, காந்தியடிகள் அச் சட்டங்களை எதிர்க்கச் சத்தியாக்கிரகச் சபைகளை ஏற்படுத்தினார். இந்தியா முழுதும் கடைகளை மூடி, வேலை நிறுத்தம் செய்து, ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்தி ரௌலத் சட்டங்களைக் கண்டிக்க ஒரு நாள் (ஏப்ரல் 6) நிருணயிக்கப்பட்டது. ஒவ்வொரு நகரத்திலும் பெருங்கூட்டங்கள் நடந்தன. தில்லியிலும், அமிர்தசரசிலும் அப்படிக் கூடிய கூட்டங்கள்மீது இராணுவமும், காவல் படையினரும் ஏவப்பட்டனர். அவர்கள் பல மக்களைச் சுட்டு வீழ்த்தினர். பஞ்சாபில் அமிர்தசரசில் ஜாலியன்வாலா பாக் என்னுமிடத்தில் பெண்

களும், குழந்தைகளும், முதியவர்களும் அடங்கிய மாபெரும் கூட்டம் அமைதியாக அமர்ந்து சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, டயர் என்ற ஆங்கிலத் தளபதி இராணு வத்துடன் திடீரென வந்து, எச்சரிக்கை ஏதுமின்றி, அக் கூட்டத் தின்மீது சுடச்சொல்லி உத்தரவிட்டான். குண்டடிபட்டு ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டனர். அளவிலாதார் காயமடைந் தனர். ஒரு தெருவில் காலால் நடக்காமல் மார்பால் ஊர்ந்து செல்லும்படி அதிகாரிகள் மக்களைக் கட்டாயப்படுத்தினர். பஞ்சாப் முழுதும் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. வெளி மாநில மக்கள் பஞ்சாபுக்குள் நுழையத் தடை விதிக்கப் பட்டது. மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளா னார்கள்.

ஒத்துழையாமை இயக்கம்: இச் சமயத்தில், முதல் உலகப் போரில் தோல்வியுற்ற துருக்கியைத் தமக்குள் பங்கிட்டுக்கொள்ள பிரிட்டனும் அதன் உறவு நாடுகளும் முயன்றன. இந்த அநீதி யால் இந்திய முஸ்லிம்கள் இங்கிலாந்துமீது கோபங்கொண் டார்கள். அவர்கள் முகம்மது அலி, ஷௌக்கத் அலி, மௌலானா அபுல்கலாம் ஆசாத் ஆகியோர் தலைமையில் கிலாபத் இயக் கத்தைத் தீவிரப்படுத்தினர். இந்திய முஸ்லிம்கள் அனைவரும் ஒருமனதாகக் காந்தியடிகள் என்ன சொன்னாலும் கேட்கத் தயாராக இருந்தார்கள்.

1919-ல் காங்கிரஸ் இலட்சுமணபுரியில் கூடியது. அங்கேயே முஸ்லிம் லீக் மாநாடு நடந்தது. இரண்டிலும் காந்தியடிகளுக்குப் பெருஞ் செல்வாக்கு இருந்தது. இச் சமயம், ஜாலியன்வாலா பாக் படுகொலைபற்றி விசாரிக்க அரசு நியமித்த குழுவின் அறிக்கை வெளிவந்தது. டயர் சுட்டதும், இராணுவச் சட்டம் அமலாக் கப்பட்டதும் குற்றங்கள் அல்ல என்பதுபோல் இவ் வறிக்கையில் மழுப்பப்பட்டிருந்தது. இதைக் கண்டு காந்தியடிகள் அதிர்ச்சி யடைந்தார். இனி ஆங்கில அரசுடன் ஒத்துழைக்கக் கூடாதென உறுதி பூண்டார். நாட்டில் உருவாகியிருந்த கொந்தளிப்பு உணர்வை ஒருமுகப்படுத்தி, தேசிய விடுதலைப் போராட்டமாக மாற்ற முடிவு செய்தார். 1920 செப்டெம்பரில் கல்கத்தாவில் காங்கிரசின் சிறப்பு மாநாடு ஒன்றைக் கூட்டி, அதில் தம்முடைய புகழ்பெற்ற சாத்துவிக ஒத்துழையாமைத் திட்டத்தை நிறை வேற்றினர். இத் திட்டத்தின்படி, இந்தியா முழுவதிலும் மாண வர்கள் பள்ளிகளைப் புறக்கணிக்க வேண்டும்; வழக்கறிஞர்களும் கட்சிக்காரர்களும் நீதிமன்றங்களைப் புறக்கணிக்க வேண்டும்; பட்டதாரிகள் தங்கள் பட்டங்களைத் துறக்க வேண்டும். இத்

திட்டத்தை மாநாடு பேராதரவுடன் ஏற்றுக்கொண்டது. பின்னர், டிசம்பரில் நாகபுரியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிலும் இத் திட்டம் ஒருமனதாக ஏற்கப்பட்டது. இவ் வியக்கத்தை நடத்தும் முழுப் பொறுப்பும் காந்தியடிகளிடம் ஒப்படைக்கப் பட்டது. நாடு முழுவதிலும் ஒத்துழையாமை இயக்கம் தீவிர மாகத் தொடங்கியது. அரசினர் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, தொண்டர்களையும் தலைவர்களையும் சிறை செய்தார்கள். மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, சி. ஆர். தாஸ் உட்பட 30,000 பேருக்கு அதிகமானவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள்.

மக்களிடையே அரசவிசுவாச உணர்வை எழுப்பக் கருதி இங்கிலாந்து அரசாங்கம் வேல்ஸ் இளவரசரை இந்தியாவுக்கு அழைத்து வந்தது. 1921-ல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தார். அவரை வரவேற்பதை மறுப்பதற்கு அடையாளமாகக் காந்தியடிகள் அயல்நாட்டுத் துணிகளை எரிக்கும் இயக்கத்தை நடத்தினர். இந்தியாவெங்கும் ஏராளமான சீமைத் துணிகள் எரிக்கப்பட்டன. ஆவேசம் மிகுந்த மக்கள் சில இடங்களில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். அதனால் மனம் வருந்திய காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைச் சிறிது காலத்திற்கு நிறுத்தி வைத்தார். அவரை 1922 பிப்ரவரியில் அரசு சிறைப் பிடித்தது.

சைமன் குழுவின் தோல்வி: இவ் வியக்கம் நின்றதால், மக்களிடையே உற்சாகம் குறைந்தது. இந்துக்களையும், முஸ்லிம்களையும் பிணைத்துவந்த பொதுவான திட்டம் வேறு ஏதும் இல்லாமையால், அவர்களிடையே உறவு சீர்கெடலாயிற்று. 1923-ல் இந்து-முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள் மூண்டன. முஸ்லிம் லீகின் செல்வாக்குப் பெருகியது. லீகின் செல்வாக்கைக் குறைப்பதற்காக, முஸ்லிம் தேசியவாதிகளைத் தனக்கு ஆதரவாகத் திரட்ட காங்கிரஸ் முயன்றது.

இந் நிலையில், இந்திய அரசியல் வளர்ச்சியைப் பார்வையிட்டு, இந்தியா சுயஆட்சிக்கு எந்த அளவு தகுதியுடையதாக இருக்கிறது என்பதைப்பற்றி விசாரிப்பதற்காக 1927-ல் சர் ஜான் சைமன் என்பவர் தலைமையில் ஒரு குழுவை ஆங்கிலேய அரசு இந்தியாவுக்கு அனுப்பியது. ஆனல், இக்குழுவில் இந்தியர் எவரும் இடம்பெறுமையால் நாட்டு மக்கள் இக் குழுவோடு ஒத்துழைக்க மறுத்தனர். சைமன் குழுவுடன் பேச்சு நடத்தக் காந்தியடிகளையும் மற்றத் தலைவர்களையும் அரசப் பிரதிநிதி இர்வின் பிரபு அழைத்தார். அந்தச் சைமன் குழுவை ஒத்துக்

கொள்ள முடியாதென்றும், இந்தியாவுக்கு உடனடியாகச் சுதந்திரம் வழங்கவேண்டும் என்றும் காந்தியடிகள் யோசனைப்படி காங்கிரஸ் தீர்மானித்தது. சைமன் குழுவைப் புறக்கணித்துக் கடையடைப்பும், கறுப்புக்கொடி ஊர்வலங்களும் நடந்தன. பல தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். சைமன் குழுப் புறக்கணிப்பு இயக்கமானது, பல்வேறு வகுப்பினர், கட்சிகளிடையே மீண்டும் ஒற்றுமை ஏற்பட வழி வகுத்தது. 1928 இறுதியில் காங்கிரஸ், முஸ்லிம் லீக், மிதவாதிகள் கட்சி ஆகிய அனைத்தும் கலந்துகொண்ட சர்வகட்சி மாநாடு ஒன்று நடந்தது. முஸ்லிம்கள் சார்பில் ஜின்னு எழுப்பிய கோரிக்கையை இம் மாநாடு ஏற்கவில்லை. இதனுல், அவர் மற்ற முஸ்லிம் தலைவர்களுடன் சேர்ந்து, 1929 ஜனவரி 1-ல் அகில இந்திய முஸ்லிம் மாநாடு ஒன்றை நடத்தினுர். இதில் முஸ்லிம்களின் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. பின்னர், ஜின்னு வகுத்த 14 அம்சக் கோரிக்கைகளுக்கு இக் கோரிக்கைகள்தாம் அடிப்படையாக அமைந்தன.

சட்டமறுப்பு இயக்கம் : 1927-ல் சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பரிபூரண சுதந்திரம் அடைவதைக் காங்கிரஸ் தனது குறிக்கோளாகக் கொண்டது. எனினும், 1929 டிசம்பருக்குள் டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டால், அதை ஏற்றுக்கொள்வதென்றும், தவறினுல், பரிபூரண சுதந்திரம் பெற வரிகொடா இயக்கம் தொடங்குவதெனவும் காங்கிரஸ் தீர்மானித்தது. இதற்கிடையில் இங்கிலாந்தில் 1929-ல் தொழிற்கட்சி தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்தது. இந்தியர்களின் விருப்பத்திற்கு ஆதரவு காட்டி வந்த அக் கட்சியின் தலைவர் ஒரு வட்டமேஜை மாநாட்டைக் கூட்டி, அதில் கலந்துகொள்வதற்குக் காந்தியடிகளை இங்கிலாந்துக்கு அழைத்தார். ஆனுல், இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிப்பதாக உறுதி கூறப்படாமையால், காந்தியடிகள் அம் மாநாட்டிற்கு வர மறுத்துவிட்டார். தொடர்ந்து சட்டமறுப்பு இயக்கத்தையும் தொடங்கினுர். உப்புச் சத்தியாக்கிரகம் செய்யத் தீர்மானித்து, 1930 மார்ச் 12-ல் காந்தியடிகள் சில தொண்டர்களுடன் தண்டியாத்திரை புறப்பட்டார். வழி நெடுகிலும் இலட்சக்கணக்கான மக்கள் அவரை வரவேற்ருர்கள். ஏப்ரல் 6-ல் தண்டியை அடைந்து, கடற்கரையில் உப்பெடுத்தார். அதே நாளில், இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் உப்புச் சத்தியாக்கிரகம் நடந்தது. அரசாங்கம் வழக்கம் போல் அடக்குமுறையைக் கையாண்டது. ஜவஹர்லால் நேரு உட்படப் பல தலைவர்கள் சிறைப்பட்டார்கள். பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. நூற்றுக்கணக்காஞேர்

கொல்லப்பட்டனர்; காந்தியடிகளும் கைதானர். நாட்டில் கொந்தளிப்பு அதிகரித்தது. இங்கிலாந்தில் செய்யப்பட்ட பொருள்கள் எரிக்கப்பட்டன; வேலைநிறுத்தங்கள் நடந்தன; பல அவசரச்சட்டங்கள் பிறந்தன; இலட்சக்கணக்கானோர் சிறை புகுந்தார்கள். பல அரசாங்க அதிகாரிகள் தம் வேலைகளை உதறினர்கள்.

வட்டமேஜை மாநாடு: வேலைநிறுத்தமும், புறக்கணிப்பும் அரசை மிகவும் பாதித்தது. கிளர்ச்சி எரிமலையை அரசினரால் அடக்க இயலவில்லை. அதனால் சமரச முயற்சிகளில் இறங்கலாயிற்று. 1930 நவம்பரில், காங்கிரஸ் பங்கு கொள்ளாத ஒரு வட்டமேஜை மாநாடு இலண்டனில் நடந்தது. அதில் இந்தியாவுக்குச் சிறுகச் சிறுகச் சுயஆட்சி வழங்குவதெனப் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அறிக்கை வெளியிட்டார். அதே சமயத்தில் காந்தியடிகளும் மற்றத் தலைவர்கள் மட்டும் விடுதலை செய்யப்பட்டார்கள். 1931 மார்ச் மாதம் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டது; அடக்குமுறைச் சட்டங்கள் நீக்கப்பட்டன; சிறைப்பட்டவர்கள் எல்லாம் விடுதலையாயினர். அரசாங்கம் மீண்டும் இலண்டனில் ஒரு வட்டமேஜை மாநாட்டைக் கூட்டி அதற்குக் காந்தியடிகளை அழைத்தது. காந்தியடிகள் காங்கிரசின் ஏகப் பிரதிநிதியாகப் பூரண அதிகாரத்துடன் அம் மாநாட்டுக்கு அனுப்பப்பட்டார். அம் மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் பெரும்பாலும் ஆங்கில அரசினரால் நியமிக்கப்பட்டவர்கள். காந்தியடிகளும், இந்தியப் பெண்களின் பிரதிநிதியாகச் சென்றிருந்த சரோஜினி தேவியும் தவிர, இந்தியாவுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமெனச் சுதந்திரமாகப் பேசக் கூடியவர்கள் யாருமில்லை. வெறும் வகுப்புவாதப் பேச்சுகளே அதிகம் நடைபெற்றன. அதிலும் ஒரு முடிவு ஏற்படவில்லை. இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குவதுபற்றித் தட்டிக்கழிக்கப்பட்டது. அங்கு நடந்த எதையும் ஏற்க முடியாமல், பெரும் ஏமாற்றத்துடன் காந்தியடிகள் இந்தியா திரும்பினர்.

காந்தியடிகள் இந்தியா வந்து சேர்வதற்கு முன்னரே, இந்திய அரசினர் காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை மீறி, அடக்குமுறையைத் தொடங்கிவிட்டார்கள். 10,000-க்கும் மேற்பட்டவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்; டிசம்பர் 28-ல் பம்பாய் வந்திறங்கிய காந்தியடிகள் இந்த விவரங்களை அறிந்து, மறுநாளே அரசப் பிரதிநிதி வெலிங்டன் பிரபுவைக் கண்டு பேச விரும்பினர். ஆனல், அவர் பேட்டியளிக்க மறுத்துவிட்டார். சட்ட மறுப்பு இயக்கத்தை மீண்டும் தொடங்க 1932 ஜனவரி 1-ல் காங்கிரஸ்

முடிவெடுத்தது. காந்தியடிகள் கைது செய்யப்பட்டு எரவாடாச் சிறையில் அடைக்கப்பட்டார். காங்கிரஸ் சட்ட விரோதமானதென அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் காவலில் வைக்கப்பட்டார்கள். அவற்றைக் கண்ட இந்திய மக்கள் மறியல்களையும், புறக்கணிப்புகளையும் அதிகமாக நடத்தினார்கள். அவற்றை ஒடுக்க அரசினர் தடியடிகள் நடத்தித் தண்டத் தீர்வைகளையும் விதித்தார்கள்.

1935, இந்திய அரசியல் சட்டம்

1932 ஆகஸ்டு மாதத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இந்து சமூகத்தினின்றும் பிரித்து, அவர்களைத் தேர்தலில் தனித் தொகுதியாக ஆக்கப் போவதாக அப்போது இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த ராம்சே மாக்டோனல்டு அறிவித்தார். அப்பொழுது சிறையிலிருந்த காந்தியடிகள் இதைக் கேட்டு, தாழ்த்தப்பட்டவர்களை இந்து சமூகத்திலிருந்து பிரிக்கக் கூடாதென்பதற்காகச் சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கினார். உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாகியும் உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்தார். பிறகு, இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் சேர்ந்து செய்துகொண்ட விண்ணப்பத்தினால், ராம்சே மாக்டோனல்டு காந்தியடிகளின் விருப்பத்தின்படி தாழ்த்தப்பட்டவர்களை இந்து சமூகத்திலிருந்து பிரிக்காமலிருக்க ஒப்புக்கொண்டார். அதேசமயம், பூனாவில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, தாழ்த்தப்பட்டவர்களுக்கென ஒதுக்கப்படும் இடங்களை இரட்டிப்பாக்குவதெனவும், அவ்விடங்களுக்குப் பொதுத்தொகுதியிலிருந்தே உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதெனவும் எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொண்டனர். காந்தியடிகள் உண்ணாவிரதத்தை நிறுத்தினார். இறுதியாக 1932-ல் இலண்டனில் மூன்றாவது வட்டமேஜை மாநாடு கூட்டப்பட்டது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை 1935-ல் இங்கிலாந்துப் பாராளுமன்றம் இந்திய அரசியல் திட்டமாக அங்கீகரித்தது. இதுவே 1935, இந்திய அரசியல் சட்டமாகும்.

1935, இந்திய அரசியல் சட்டத்தின்படி, மாநிலங்களும் சுதேச சமஸ்தானங்களும் சேர்ந்த கூட்டாட்சி அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மாநிலங்களில் மட்டும் பொறுப்பாட்சி தொடங்கத் தீர்மானிக்கப்பட்டது.

1935, இந்திய அரசியல் சட்டப்படி தில்லிச் சட்டசபைக்குத் தேர்தல்கள் நடந்தன. இச் சட்டத்தின் சீர்திருத்தங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்று சோதித்துப்பார்க்கக் காங்கிரஸ்

முடிவு செய்தது. சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டிருந்ததால், சட்டசபைகளில் புகுந்து வேலைசெய்யப் பெரும்பான்மையான தலைவர்கள் விரும்பினார்கள். காந்தியடிகளும் இதை எதிர்க்க வில்லை. அதனால் காங்கிரஸ்காரர்களும் தேர்தலில் நின்று வெற்றிபெற்றுச் சட்டசபையில் வலிமையான எதிர்க்கட்சியாக விளங்கினார்கள். 1937-ல் 11 மாநிலச் சட்டசபைகளுக்கும் தேர்தல்கள் நடந்தன. ஏழு மாநிலங்களில் காங்கிரஸ்காரர்கள் பெரும்பான்மை இடங்களைப் பிடித்து அமைச்சரவைகளை அமைத்தார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் காங்கிரசும் முஸ்லிம் லீகும் கூட்டு அமைச்சரவை (Coalition Ministry) அமைக்கவேண்டுமென முஸ்லிம்கள் விரும்பினார்கள். ஆனால், காங்கிரசின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாத எவரையும் தன் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள முடியாதெனக் காங்கிரஸ் கூறி விட்டது. இதனால் காங்கிரஸ்-லீக் கருத்து வேற்றுமை மேலும் முற்றியது.

காங்கிரஸ் அமைச்சரவைகள் மிகத் திறமையாக நிருவாகத்தை நடத்தின. இதனால் காங்கிரசின் செல்வாக்கு மக்களிடையே பெருகியது. ஆனால், விரைவிலேயே காங்கிரசில் 'இடசாரிப் பிரிவு' (Left wing) ஒன்று தோன்றியது. இப் பிரிவின் தலைவராக விளங்கியவர் சுபாஷ் சந்திரபோஸ். இவர், 1937-ல் நடந்த, காங்கிரஸ் தலைவர் தேர்தலில் காந்தியடிகளின் ஆதரவுபெற்ற வேட்பாளர் பட்டாபி சீத்தாராமையாவைத் தோற்கடித்து வெற்றிபெற்றார். எனினும், அவர் தலைவராக நீடிக்க வில்லை. மிதவாதிகள் அவருடன் ஒத்துழையாமையால், தலைவர் பதவியிலிருந்து போஸ் விலக நேர்ந்தது. விலகிய அவர் தமது ஆதரவாளர்களுடன் சேர்ந்து 'முன்னேற்றக் கட்சி' (Forward Bloc) என்ற தனிக் கட்சியைத் தொடங்கினார். இப் பிளவினால் காங்கிரஸ் வெகுவாகப் பலவீனமடைந்தது.

கிரிப்ஸ் தூது: இந் நிலையில் இரண்டாம் உலகப்போர் 1939-ல் தொடங்கியது. இந்தியச் சட்டசபைகளின் ஆலோசனையைப் பெருமலே பிரிட்டன் இந்தியாவையும் இப் போரில் ஈடுபடுத்தியது. இதைக் கண்டித்து, மாநிலங்களிலுள்ள காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகின. இதைத் தொடர்ந்து காந்தியடிகள் தலைமையில் மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தை 1940-ல் காங்கிரஸ் தொடங்கியது. இதற்கு எதிராக அரசப் பிரதிநிதி லின்லித்கோ பிரபு தீவிரமான அடக்குமுறையைக் கையாண்டார். 1942-ல் இங்கிலாந்து அரசாங்கத்தின் பிரதிநிதியாக சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் என்பவர் இந்தியாவுக்கு வந்து, போருக்குப் பின்

அமைக்கப்பட வேண்டிய அரசியல் திட்டத்தைப்பற்றி இந்தியரைக் கலந்தாலோசித்தார். ஆனால், உடனடியாக மாறுதல் ஏதும் ஏற்படுத்த ஆங்கில அரசினர் ஆயத்தமாக இல்லாததால், கிரிப்சின் திட்டங்களைக் காங்கிரசும், முஸ்லிம் லீகும் ஏற்க மறுத்து விட்டன.

இதற்கிடையில், 1940-ல் முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னா, முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள பகுதிகள் அடங்கிய பாக்கிஸ்தான் என்ற தனிநாடு அமைக்கவேண்டுமென்ற பிரிவினைக் கோரிக்கையை வெளியிட்டார். இதன் பிறகு, காங்கிரசும் லீகும் எவ்விதச் சமரசத்திற்கும் வர இடமில்லாமல் போய்விட்டது. அரசினரும், முஸ்லிம்களின் கோரிக்கையைச் சாக்குப் போக்காகக் காட்டி, காங்கிரசின் கோரிக்கைகளை யெல்லாம் நிராகரித்து வந்தனர்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம்

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் : பம்பாயில் 1942 ஆகஸ்டு 8-ல் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் குழுக் கூட்டத்தில், 'வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும்' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனுடன், இந்திய அரசின் பொறுப்பை முஸ்லிம் லீகிடமோ, அல்லது காங்கிரசல்லாத வேறு கட்சியிடமோ ஒப்படைத்துவிட்டு, வெள்ளையர்கள் வெளியேறினாலும் சரி என்று காந்தியடிகளும் மற்றத் தலைவர்களும் கூறினார்கள். மறுநாள் விடிவதற்குள், காந்தியடிகளும் செயற்குழு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டார்கள். காங்கிரஸ் கட்சி சட்டவிரோதமானதென அறிவிக்கப்பட்டது. காந்தியடிகளும், மற்றத் தலைவர்களும் கைதான செய்தி காட்டுத் தீப்போல் நாடெங்கும் பரவியது. மக்கள் கட்டுக்கடங்காத பெருங் கூட்டங்களாக ஆங்காங்கே கூடிக் கடையடைப்புகளும், வேலைநிறுத்தங்களும், ஊர்வலங்களும் நடத்தினார்கள். அவர்களைப் போலீசார் வன்முறையைக் கையாண்டு கலைத்தார்கள். பல இடங்களில் பெருங் கலவரங்களும், நாச வேலைகளும் நடந்தன. தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன; தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன; கம்பங்கள் வீழ்த்தப்பட்டன. இரயில் நிலையங்களும், அஞ்சலகங்களும், காவல் நிலையங்களும் தீக்கிரையாயின. இக் குற்றங்களுக்கெல்லாம் காந்தியடிகளே பொறுப்பாளி என்று அரசப் பிரதிநிதி பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டினர். காந்தியடிகள் அதை மறுத்துச் சிறையிலிருந்தவாறே உண்ணாவிரதம் தொடங்கினர். அவ் விரதத்தின்

இரண்டாவது வாரத்தில் அவர் மிகவும் அபாயநிலையை அடைந்தார். நாடெங்கும் மக்கள் கூட்டங்கள் கூட்டி, அவரை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரினார்கள். பல கட்சித் தலைவர்களும் தில்லியில் கூடி அவரை விடுவிக்கும்படி அரசப் பிரதிநிதியிடம் வலியுறுத்தினார்கள். ஆனால், அரசாங்கம் இசையவில்லை. காந்தியடிகள் 21 நாள்களுக்குப் பின் விரதத்தை முடித்தார்.

இதனிடையில், போர்முனையில் ஆங்கிலேயருக்குப் பெருந் தோல்வி ஏற்பட்டுவந்தது. இச் சமயத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போரிட்டால், சுதந்திரம் எளிதில் கிடைத்துவிடுமெனச் சுபாஷ்போஸ் எண்ணினார். இதனால், 1941 ஜனவரி மாதம் அவர் மாறுவேடம் பூண்டு ஊமையாகவும், செவிடராகவும் நடித்து ஆஃப்கானிஸ்தானம் வழியாக ஜெர்மன் தலைநகரான பெர்லினுக்குச் சென்றார். அங்கிருந்து டோக்கியோ வழியாகச் சிங்கப்பூரை அடைந்தார். அங்கு ஆங்கிலேயர்கள் போரில் தோல்வியுற்றபோது விட்டுச்சென்ற இந்திய வீரர்களையும் மற்ற இந்தியர்களையும் திரட்டி, 'இந்திய தேசிய இராணுவம்' (Indian National Army) என்ற படையை திரட்டினார்; ஒரு சுதந்திர அரசாங்கத்தையும் அமைத்தார். இவருடைய படையினர் இந்தியாவிற்குள் நுழைந்து மணிப்புரி சமஸ்தானத்தில் பல இடங்களைக் கைப்பற்றினர்.

வேவல் திட்டம் : சிறையிலிருந்த காந்தியடிகள் கடுமையான மலேரியாக் காய்ச்சலுக்கு ஆளானார். அதனால் 1944 மே 6-ல் அவரை அரசு விடுதலை செய்தது. உடல் நலம் பெற்றவுடன், பம்பாயில் ஜின்னாவைச் சந்தித்து அவருடைய தனிநாடு கோரிக்கைபற்றிப் பேச்சுகள் நடத்தினார். இப் பேச்சுகள் பலனளிக்கவில்லை. இச் சமயம் வேவல் பிரபு, புதிய அரசப் பிரதிநிதியாக இந்தியா வந்தார். அவர் 1945 மே மாதத்தில் இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்குவதற்கான 'வேவல் திட்டம்' ஒன்றை வகுத்தார். அரசப் பிரதிநிதியின் ஆலோசனைக் குழுவில், அரசப் பிரதிநிதியும் இராணுவத் தளபதியும் தவிர, மற்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்திய அரசியல் கட்சிகளிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று இத் திட்டம் கூறியது. இத் திட்டத்தைப் பரிசீலிப்பதற்காக, சிறையிலிருந்த காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். சிம்லாவில் காங்கிரஸ்-லீக் கூட்டு மாநாடு நடந்தது. ஆனால், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதுபற்றிக்

காங்கிரசுக்கும் லீகுக்குமிடையே உடன்பாடு ஏற்படாததால், இம் மாநாடு தோல்வியடைந்தது.

இச் சமயம் உலகப் போரின் போக்கு மாறி, ஜெர்மனியும் ஜப்பானும் தோல்வியடைந்தன. சுபாஷ்போஸின் இந்திய தேசிய இராணுவம் பிரிட்டிசாரிடம் சரணடைந்தது.

1945-ல் போர் முடிந்தபின் பிரிட்டனில் தொழிற்கட்சி பதவிக்கு வந்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு தந்த அட்லி பிரதமரானார். அவர் காங்கிரஸ் மீதிருந்த தடையுத்தரவுகளையெல்லாம் நீக்கினார். இந்தியா முழுதும் பொதுத்தேர்தல் நடத்த உத்தரவிட்டார். இந்தியாவுக்குச் சுயஆட்சி வழங்குவதுபற்றிக் கலந்தாலோசிக்க வேவல் பிரபுவை இலண்டனுக்கு அழைத்தார். இலண்டன் சென்று வந்த வேவல் பிரபு, இந்தியாவுக்குப் பூரண சுயஆட்சி அளித்துவிட பிரிட்டிஷ் அரசு முடிவு செய்திருப்பதாக அறிவித்தார்.

இதனிடையே, பாக்கிஸ்தான் கிளர்ச்சி தீவிரமாகியது. 1946-ல் நடந்த தேர்தலில் பொது இடங்களில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது. முஸ்லிம் லீக், முஸ்லிம்களுக்கான இடங்களை வென்றது. காங்கிரசும் லீகும் ஒற்றுமையுடன் அரசியல் நடத்துவது சாத்தியமாகத் தோன்றவில்லை. 1946 மார்ச் மாதத்தில் பெதிக் லாரன்ஸ், ஏ.வி. அலெக்சாந்தர், ஸர் ஸ்ட்ராஃபோர்ட் கிரிப்ஸ் ஆகிய இங்கிலாந்து அமைச்சர் களடங்கிய தூதுக்குழு (Cabinet Mission) ஒன்று இந்தியாவுக்கு வந்தது. இக் குழு எவ்வளவு முயன்றும் காங்கிரசுக்கும் லீகுக்கு மிடையே சமரசம் ஏற்படுத்த முடியவில்லை.

1946 மே 15-ல் கல்கத்தாவில் இந்து–முஸ்லிம் கலவரங்கள் தோன்றின. ஏராளமான உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன. அடுத்து, கிழக்கு வங்காளத்தில் வகுப்புக் கல வரங்கள் மூண்டன. காந்தியடிகள் அங்குச் சென்று அரும்பாடு பட்டுக் கலவரங்களை அடக்கி, துன்பமடைந்தவர்களுக்கு உதவி யளிக்க ஏற்பாடு செய்தார்.

சுதந்திரம்: 1947 ஆகஸ்டு 15ஆம் தேதி இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்படும் என்று இங்கிலாந்து அரசு அறிவித்து, ஆட்சி மாற்றத்திற்கு ஏற்பாடு செய்ய மவுன்ட் பேட்டன் பிரபுவை அரசப் பிரதிநிதியாக இந்தியாவுக்கு அனுப்பிவைத்தது. 1946-ல் ஜவஹர்லால் நேரு தலைமையில்

இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைந்தது. ஆனால், இந்த அரசில் முஸ்லிம் லீக் சேர்ந்துகொள்ளவில்லை. தங்கள் தனிநாட்டுக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமையால், லீக் கிளர்ச்சி தொடங்கியது. மீண்டும் பஞ்சாபிலும், வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திலும் பயங்கர வகுப்புக் கலவரங்கள் தோன்றின. இனி இதுபோன்ற கலவரங்களினால் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுக்க, நாட்டுப் பிரிவினைக்கு இசைவதே வழி என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதலானார்கள். இதைத் தொடர்ந்து, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த வடமேற்கு எல்லைப்புற மாநிலம், சிந்து, மேற்குப் பஞ்சாப், கிழக்கு வங்காளம் ஆகியவை அடங்கிய தனிப் பாக்கிஸ்தான் நாடு அமைக்கக் காங்கிரஸ் இசைந்தது. 1947 ஆகஸ்டு 15-ல் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இந்தியா, பாக்கிஸ்தான் என இரண்டு தனிச் சுதந்திர நாடுகள் ஏற்பட்டன. ஜவஹர்லால் நேரு தலைமையில் முதல் சுதந்திர இந்திய அரசாங்கம் பதவி ஏற்றது. மவுன்ட்பேட்டன் பிரபு சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராகவும், ஜின்னு பாக்கிஸ்தானின் முதல் தலைமை ஆளுநராகவும் பதவி ஏற்றனர்.

24. இந்தியாவின் தனிப்பெரும் தலைவர்கள்

தாதாபாய் நெளரோஜி (1825—1916)

இந்தியாவின் தலைசிறந்த தேசபக்தர்களில் ஒருவராக விளங்கிய தாதாபாய் நெளரோஜி 'தேசபக்தியின் சின்னம்' என்று பாராட்டப்பெறும் பெருமையுடையவர். இவர் பம்பாயில் 1825 செப்டம்பர் 4ஆம் நாள் ஓர் எளிய பார்சிப் புரோகிதர் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய நான்காம் வயதிலேயே இவரது தந்தை இறந்தார். தாயே இவரை வளர்த்து வந்தார். பதினோராம் வயதில் இவருக்கும் குல்பாய் என்ற ஏழு வயது பெண்ணுக்கும் திருமணம் நடந்தது.

பம்பாயிலிருந்த சுதேசக் கல்விச் சங்கத்தினரின் பள்ளியில் தாதாபாய் கல்வி கற்றார்; வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்ந்தார்; பல பரிசுகள் பெற்றார். இவருடைய மாணவத் தோழர்கள் இவருக்குப் புத்தகங்கள் கொடுத்து உதவினர். பின்னர், எல்ஃபின்ஸ்டன் கல்லூரியில் கல்வி பயின்றார். பம்பாய் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த சர் எர்ஸ்கின் பெர்ரி என்பவர் அரசு கல்வித்துறையின் தலைவராகவும் இருந்தார். அவர் இவருடைய கல்வித் திறமையைக் கண்டு, கல்வி பயில இவரை இங்கிலாந்து அனுப்பவும், அதற்காகும் செலவைத் தாம் ஏற்கவும் முன்வந்தார். ஆனால், இங்கிலாந்து சென்றால், இவர் கிறித்துவப் பாதிரியாராக மாறிவிடக்கூடுமென அஞ்சி, தாதாபாயின் உறவினர்கள் இவர் அங்குச் செல்வதைத் தடுத்து விட்டார்கள். அதனால், தாதாபாய் 1851-ல் எல்ஃபின்ஸ்டன் உயர்நிலைப் பள்ளியில் உதவித் தலைமை ஆசிரியராக நியமிக்கப் பட்டார். 1853-ல் எல்ஃபின்ஸ்டன் கல்லூரியில் கணித உதவிப் பேராசிரியரானார். இரண்டாண்டுகளில், கணிதப் பேராசிரியராக உயர்ந்தார். பேராசிரியர் பதவி பெற்ற முதல் இந்தியர் இவரே.

தாதாபாய் பேராசிரியர் வேலையுடன் நின்றுவிடவில்லை. இந்திய மக்களுடைய நலன்களுக்குத் தேவையான இயக்கங்களில் எல்லாம் இடைவிடாது பணிபுரிந்தார். பார்சிமதச் சீர்திருத்தச் சங்கத்தின் அமைச்சராகப் பணியாற்றினார். இந்துக்களிடையே நடைபெற்று வந்த விதவை மறுமண இயக்கத்திலும் சேர்ந்து தொண்டாற்றினார். இவர் பெரிதும் முயன்று, இந்தியாவிலேயே முதன்முதலாகப் பெண்பள்ளி ஒன்றை நிறுவினார். இதனால் இவரைப் 'பெண் கல்வியின் தந்தை' என்று மக்கள் பாராட்டினர். பம்பாய் இலக்கியச் சங்கத்தார் நிறுவிய பெண்பள்ளிகளில் ஊதியம் பெறாமல் கல்வி கற்பித்தார்.

தாதாபாய், 1851 முதல் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தார். 'உண்மை விளம்பி' (Rast Goftar) என்னும் மாத மிருமுறை இதழைத் தொடங்கி, இரண்டாண்டுகள் ஊதியம் பெறாமல் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் பலவிதமான சொற்பொழிவுகள் ஆற்றிவந்தார். அரசியற் சொற்பொழிவு களில் அரசினரை அஞ்சாமல் கண்டித்தார். கிளர்ச்சி செய்வதே அரசியல் முன்னேற்றத்திற்குச் சிறந்த வழி என்று வற்புறுத்தினார்.

பார்சி வகுப்பைச் சேர்ந்த காமா என்பவர் இலண்டனில் வாணிக நிறுவனம் ஒன்றை நடத்திவந்தார். இதுவே அக் காலத்தில் இங்கிலாந்தில் தோன்றிய முதல் இந்திய நிறுவனம். இந் நிறுவனத்தில் கூட்டுச் சேருமாறு தாதாபாயைக் காமா அழைத்தார். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு ஏற்படுத்தவேண்டும் என்றும், இந்திய மாணவர்கள் இங்கிலாந்து சென்று ஐ. சி. எஸ். தேர்வில் கலந்துகொள்ள வசதியாக இலண்டனில் ஒரு விடுதி கட்டவேண்டுமென்றும், இந்தியாவின் குறைகளை பிரிட்டிஷ் மக்களிடம் எடுத்துக்கூறி, நாட்டுக்கு நலன் தேடவேண்டுமென்றும் திட்டமிட்டிருந்த தாதாபாய் பேராசிரியர் வேலையைவிட்டுக் காமா நிறுவனத்தில் சேர்ந்து வாணிகத்தில் இறங்கினார். வாணிகத்தில் அவருக்குப் பெரும் வெற்றி கிடைத்தது.

காமா நிறுவனம் அபின், ஒயின் முதலிய போதைப் பொருள் களிலும் வாணிகம் செய்துவந்தது. அதனால் வரும் இலாபத்தில் பங்கு பெறுவது தவறு எனக் கருதினார். எனவே, மூன்றாண்டுகள் கழித்து பம்பாய் திரும்பினார். சில மாதங்கள் தங்கிவிட்டு, மீண்டும் 1858-ல் இங்கிலாந்து சென்று சொந்தமாக ஒரு வாணிக நிறுவனத்தைத் தொடங்கினார். வாணிகத்தைக் கவனித்துக் கொண்டே, இந்தியரின் நலனுக்காகவும் பாடுபட்டார். இங்கி

லாந்திலிருந்த எல்லாச் சங்கங்களிலும் கலந்துகொண்டார். இந்தியர்களுடைய நிலைமையைப்பற்றியும், கலை, பண்பாடு குறித்தும் பத்திரிகைகள், சொற்பொழிவுகள், அரசுக்கு எழுதும் கடிதங்கள் வாயிலாக ஆங்கில மக்களுக்கு நன்கு தெரியுமாறு செய்தார். 'இந்திய மக்கள் உரிமைகளின் காவலன்' என்று எல்லோராலும் அவர் பாராட்டப் பெற்றார். இலண்டன் பல்கலைக் கழகத்தின் கல்லூரியில் குஜராத்தி மொழிப் பேராசிரியராகச் சிறிது காலம் பணியாற்றினார்.

இங்கிலாந்தில் இவர் நிறுவிய வாணிக நிறுவனத்தில் 1870-ல் பெருத்த நட்டம் ஏற்பட்டது. ஆயினும். தாதாபாய் மிகுந்த நாணயத்துடன் நடந்துகொண்டமையால், அவருக்குக் கடன் கொடுத்தவர்கள் அவருக்கு மீண்டும் புதுக் கடன்கள் வழங்கி வாணிகத்தை மறுபடியும் தொடங்க உதவ முன்வந்தனர். அதே ஆண்டில் பரோடா சுதேச அரசின் திவான் பதவி இவருக்குக் கிடைத்தது. இப் பதவியை ஏற்று, நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்தார். ஆனால், இவருடைய சீர்திருத்தங்களை நிறைவேற்றத் தடங்கல்கள் ஏற்பட்டதால், இவர் திவான் பதவியை ஓராண்டுக்குப்பின் துறந்தார். 1875-ல் தாதாபாய் பம்பாய் மாநகராட்சியின் உறுப்பினரானார். அப்போது, மாநகராட்சி உறுப்பினருக்கு வழங்கப்பட்டுவந்த ரூ 32 நாட்படியை ஏற்காமல் பல ஆக்கப் பணிகளைச் செய்தார். இவர் செய்த அரிய சேவைக்காக மாநகராட்சி இவருக்கு நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. இந்திய அரசியல் விவகாரங்களில் தாதாபாய் பெரும் வல்லுநர் என்பது இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பரவியது.

'இந்தியாவின் குரல்' (Voice of India) என்னும் மாத இதழை 1883-ல் தாதாபாய் தொடங்கினார். இதன்மூலம் இந்தியப் பத்திரிகைகளின் கருத்தை பிரிட்டனிலுள்ள மக்களுக்குத் தெரியும்படி செய்தார். 1885-ல் பம்பாய்ச் சட்டசபையில் ஓர் இணை உறுப்பினராகத் தாதாபாயை பம்பாய் ஆளுநர் நியமித்தார். அதே ஆண்டில் பம்பாயில் இந்திய தேசியக் காங்கிரசின் முதல் மாநாடு நடந்தபோது, அதில் தாதாபாய் தீவிரமாகக் கலந்து கொண்டார்.

தாதாபாய் மீண்டும் 1886-ல் இங்கிலாந்து சென்றார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மக்கள்சபைக்கு ஒரு தொகுதியில் போட்டியிட்டார்; ஆனால், தோல்வியுற்றார். மீண்டும் 1891-ல் மக்கள்சபைக்குப் போட்டியிட்டு வென்றார். பிரிட்டிஷ் பாராளு

மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். இந்தியா முழுதும் பாராட்டுக் கூட்டங்கள் நடந்தன. டிசம்பரில் இந்தியா வந்தபோது, அவருக்குப் பெரிய வரவேற்புகள் அளிக்கப்பட்டன. லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். 1895-ல் இங்கிலாந்தில் நடந்த தேர்தலில் மீண்டும் வேட்பாளராகப் போட்டியிட்டார். ஆனால், வெற்றி பெறவில்லை.

தாதாபாய்க்குச் 'சர்' பட்டம் வழங்க வேண்டுமென இவருடைய ஆங்கில நண்பர்கள் இங்கிலாந்து அரசிடம் வற்புறுத்தினர். ஆனால், இப் பட்டத்தை ஏற்கத் தாதாபாய் மறுத்துவிட்டார். இந்தியாவில் நடைபெறும் தவறான ஆட்சி (Misrule in India) என்பதுபற்றி இங்கிலாந்தில் 1904-ல் தாதாபாய் பல இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இத் தவறான ஆட்சியை ஒழிப்பதற்கு ஒரே வழி சுயஆட்சியே என்று வலியுறுத்தினர்.

1904ஆம் ஆண்டில் ஆம்ஸ்டர்டாம் நகரில் அகில உலகச் சோசலிசக் காங்கிரஸ் நடந்தது. இதில் இந்தியாவின் பிரதிநிதியாகத் தாதாபாய் கலந்துகொண்டார். அங்கு இந்தியாவின் வறுமைநிலைபற்றியும், இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏராளமாகப் பணம் செல்வது குறித்தும் தாதாபாய் விளக்கிப் பேசினர். 1906-ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ்மாநாட்டிற்குத் தாதாபாய் தலைமை தாங்கினர். தம் தலைமை உரையில் 'சுயஆட்சியே காங்கிரசின் குறிக்கோள்' என்று வற்புறுத்தினர். 'தயவு கேட்கவில்லை; உரிமையையே கேட்கிறோம்' என்று முழங்கினர். நாடு முழுதும் புத்துயிர் பெற்றது.

1917-ல் பம்பாய்ப் பல்கலைக்கழகம் தாதாபாய்க்குச் 'சட்ட மேதை' (Doctor of Laws) என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. அதே ஆண்டு ஜூன் 30ஆம் நாள் தாதாபாய் காலமானர்.

தாதாபாய் சுமார் 61 ஆண்டுகள் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் இந்தியரின் நலனுக்காக அல்லும்பகலுமாக அரும்பாடு பட்டார். சிறிதும் தந்நலமின்றித் தாயகத்தின் விடுதலைக்காகப் போராடினர். ஈட்டிய பொருளையெல்லாம் பொதுநலப் பணிகளுக்கும், நிறுவனங்களுக்கும் வாரிவாரி வழங்கினர். ஓர் அரசியல் தலைவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

லோகமான்ய பால கங்காதர திலகர் (1856—1920)

'இந்திய தேசிய எழுச்சியின் தந்தை' எனப் போற்றப்படும் லோகமான்ய பால கங்காதர திலகர், நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய பெருந் தலைவர்களுள் ஒருவர். பம்பாய் மாநிலத்திலுள்ள இரத்தினகிரியில் 1856 ஜூலை 23ஆம் நாள் ஓர் அந்தணக் குடும்பத்தில் திலகர் பிறந்தார். கல்லூரியில் பயின்று பி.ஏ. பட்டமும் எல்எல்.பி. பட்டமும் பெற்றார். இளமையிலேயே ஆங்கிலேயரின் கொடுங்கோலாட்சியைக் கண்டு இவர் மனங் கொதித்தது. தேசபக்தி இவரை நாட்டுத் தொண்டில் ஈடுபடுத்தியது.

ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட இந்தியருக்கு ஆங்கிலக் கல்வி தேவை எனக் கருதினர். கணிதம், விஞ்ஞானம், பொருளாதாரம் போன்ற துறைகளில் இந்தியர்கள் நல்ல புலமை பெற வேண்டுமெனத் திலகர் விரும்பினர். அதனால் நண்பர்களுடன் சேர்ந்து 1880ஆம் ஆண்டில் பூனாவில் ஆங்கிலப்பள்ளி ஒன்றைத் தொடங்கினர். இப் பள்ளியைக் கல்லூரியாக்க விரும்பினர். இதற்கெனத் தக்கணக் கல்விச் சங்கத்தை நிறுவினர். இச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மாதம் ரூ. 70 மட்டுமே ஊதியம் பெற்று ஆயுள்வரை இக் கல்லூரியில் உழைக்க வேண்டும் என்பது விதியாகும். 1885ஆம் ஆண்டில் ஆங்கிலப் பள்ளியை 'ஃபெர்குசன் கல்லூரி'யாக மாற்றினர். இதில் திலகர் கணிதப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். 1890-ல் திலகருக்கும் நண்பர்களுக்குமிடையே கருத்துவேறுபாடு ஏற்படவே, இச் சங்கத்திலின்றும் விலகினர்.

திலகர் 'மராட்டா' என்ற ஆங்கில இதழையும், 'கேசரி' என்னும் மராத்தி இதழையும் தொடங்கி, அவற்றின் வாயிலாக மக்களுக்கு எழுச்சியூட்டி வந்தார். கோலாப்பூர்ச் சுதேச அரசின் பட்டத்திற்குரிய சிறுவனைக் கார்வாரி கொல்ல முயன்றதாக எழுந்த வதந்தியை உண்மையென நம்பி, கேசரி, மராட்டா இதழ்களில் அதனைக் கண்டித்து எழுதினர். இதற்காக நான்கு மாதம் சிறைத்தண்டனை பெற்றார். சட்டக் கல்லூரி ஒன்றையும் திலகர் தொடங்கினர்.

திலகர் வைதிகத்தில் தீவிரமான நம்பிக்கையுடையவர். பாரதத்தின் பண்டைய பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர். அதற்காக அவர் பேசியும், எழுதியும் பாடுபட்டு வந்தார். கணபதி விழா, சிவாஜி விழா போன்ற விழாக்களை நடத்தினர். சமூகச் சீர்திருத்தங்களைப்

பொறுத்தவரையில் இவர், கோபாலகிருஷ்ண கோகலே போன்ற சீர்திருத்தவாதிகளுக்கு மாறுபட்டவராக இருந்தார். அரசியலைப் பொறுத்தவரை இவர் தீவிரவாதியாக விளங்கினார்.

திலகர் 1889ஆம் ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். அப்போது ஆங்கிலம் கற்றவர்களே காங்கிரசில் உறுப்பினராகச் சேர முடியும் என்ற விதி இருந்துவந்தது. ஆங்கிலம் கல்லாதவர்களும் காங்கிரசில் உறுப்பினராவதற்குத் திலகர் பாடுபட்டார். இறுதியில் இவ் விதி மாற்றப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், பம்பாய்ச் சட்டசபையில் உறுப்பின ரானார். சட்டசபை உறுப்பினர்களுக்குச் செல்வாக்கு இல்லாத தையும், அரசாங்கத்தின் போக்கையும் கண்டு சட்டசபை உறுப் பினர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். பம்பாய்ப் பல்கலைக் கழகத்தில் பல்லாண்டுகள் உறுப்பினராகப் பணியாற்றினார். 1895-ல் பூனா நகராட்சி உறுப்பினராக இருந்தார். 1896-97ஆம் ஆண்டுகளில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது நிலவரிகொடா இயக்கத்தைத் திலகர் முன்னின்று நடத்தினார். அதேசமயம் பிளேகு என்னும் கொடிய நோய் பரவியபொழுது மக்களுக்குத் தொண்டாற்றினார். இந் நோயைத் தடுக்க ராண்டு (Rand) என்பவரின் தலைமையில் குழு ஒன்றை அரசு நியமித்தது. இக் குழுவுடன் பணியாற்ற வந்த போர்வீரர்கள் வீடுகளில் புகுந்து பண்பற்ற முறையில் நடந்துகொண்டார்கள். இதனால் மக்கள் சீற்றங் கொண்டனர். ஆத்திரமடைந்த இந்தியர் ஒருவர் 1897-ல் ராண்டுவைக் கொன்றுவிட்டார். இது திலகரின் தூண்டுதலால் நடந்ததாகக் குற்றஞ்சாட்டி அரசு இவரைச் சிறை செய்தது. நீதிமன்றம் இவருக்கு 18 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது. விடுதலையானதும் இவர் மீண்டும் நாட்டுப்பணியில் தீவிரமாக இறங்கினார்.

1905ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினை நடந்தது. இதை எதிர்த்துத் திலகர் போராட்டம் தொடங்கினார். 1906-ல் கல்கத்தா வில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், ஆங்கிலப் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை இவர் நிறை வேற்றினார். ஆங்கில அரசுடன் ஒத்துழைக்கக் கூடாதென்ற எண்ணத்தை மக்களிடையே உண்டாக்கினார். கள்ளுக்கடை களின் முன் மறியல் நடத்தினார். இத்தகைய புரட்சி நடவடிக்கை களினால் காங்கிரசில் இவர் தீவிரவாதியாக விளங்கினார். கோகலே போன்ற மிதவாதிகள் இவருடைய தீவிரப் போக்கை விரும்பவில்லை. எனினும், அவர்களுடைய எதிர்ப்பைப் பொருட் படுத்தாமல் தம் போராட்டங்களை நடத்திவந்தார். இவருடைய

தீவிரக் கருத்துகளைத் தென்னாட்டில் வ. உ. சிதம்பரம் பிள்ளை பரப்பி வந்தார். திலகரின் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டு ஆங்கில அரசினர் திகைத்தனர். சில இடங்களில் வன்முறையும் தலைகாட்டியது. இதற்கெல்லாம் காரணம் திலகரின் பேச்சும் எழுத்துமே என்று அரசு கருதியது. அதனால் 1908 ஜூன் 24-ல் திலகரைக் கைதுசெய்து ஆறு ஆண்டுகள் தீவாந்தரத் தண்டனை விதித்தது. முதலில் சிறிது காலம் அகமதாபாத் அருகிலுள்ள சபர்மதியிலும், பிறகு பர்மாவிலும் திலகர் சிறை வைக்கப்பட்டார். சிறையிலிருந்தபோது 'கீதா இரகசியம்' என்ற நூலை எழுதினார். 1914ஆம் ஆண்டில் திலகர் விடுதலையானார். விடுதலை பெற்ற பின்னர் தீவிரவாதிகளைத் தட்டி எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டார்.

1916ஆம் ஆண்டில் திலகருக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவில், இவருக்கு இலட்சம் ரூபாய் பண முடிப்பு வழங்கப்பட்டது. இப் பணத்தைத் திலகர் தம் சொந்தச் செலவுக்கு வைத்துக்கொள்ளாமல் பொதுப் பணிக்கு வழங்கிவிட்டார்.

இலட்சுமணபுரியில் 1916-ல் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், மிதவாதிகளும் தீவிரவாதிகளும் ஒன்றுசேர்ந்து, திலகர் விரும்பியபடி சுயஆட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். திலகர் இங்கிலாந்து சென்று சுயஆட்சிக் கொள்கையை விளக்கிக் கூறினார். 1919-ல் பஞ்சாப் படுகொலை நடந்தது. இதைக் கண்டித்து ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க வேண்டுமெனக் காந்தியடிகள் அறிவித்தார். திலகரும் இதை ஆதரித்தார். ஆனால், சட்டசபைகளைப் புறக்கணிக்க வேண்டுமென்ற காங்கிரசின் கொள்கையை இவர் ஏற்கவில்லை. 1920ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் நாள் நாடெங்கிலும் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியது. அதே நாளன்று திலகர் காலமானார்.

திலகர் பேச்சுவன்மையிலும் எழுத்துவன்மையிலும் சிறந்தவர். அவர் தீவிரமான கொள்கைகளைக் கொண்டிருந்தார். அதனால் காந்தியடிகள், கோகலே போன்ற தலைவர்களுக்கும் அவருக்குமிடையே சில வேளைகளில் கருத்துவேற்றுமை ஏற்பட்டதுண்டு. சிறிதும் தந்நலம் கருதாமல் நாட்டுக்காகத் தொண்டாற்றித் தம் வாழ்வைத் தியாகம் செய்த பெருந்தலைவர் திலகர்.

கோபாலகிருஷ்ண கோகலே (1866—1915)

'பாரதத்தின் மாணிக்கம், மராட்டியத்தின் அணிகலன், மக்கள் தொண்டர்களிலெல்லாம் தலைசிறந்த தொண்டர்' என்று திலகரால் போற்றிப் புகழப்பெற்ற பெருமையுடையவர் கோபால கிருஷ்ண கோகலே யாவார். இவர், இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்து தேசத்தந்தை எனப் புகழ்பெற்ற காந்தியடிகளுக்கே அரசியல் குருவாக விளங்கியவர்; இந்திய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.

கோகலே, பம்பாய் மாநிலத்திலுள்ள கோலாப்பூரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் தோன்றினார்; பன்னிரண்டாம் வயதிலேயே தந்தையை இழந்தார்; தமையனார் கோவிந்தராவின் ஆதரவில் வளர்ந்துவந்தார்; உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, ஆங்கிலப் பள்ளியொன்றில் பகுதிநேர ஆசிரியராக வேலை பார்த்து அதனால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு கல்லூரியில் படித்து 18ஆம் வயதில் பி.ஏ. பட்டம் பெற்றார். இச் சமயத்தில் இந்தியாவில் புதிய கல்வி இயக்கம் ஒன்று தோன்றியது. ஆங்கிலக் கல்வியை நாட்டில் பரப்பும் நோக்கத்துடன் திலகரும் அவருடைய நண்பர்களும் சேர்ந்து பூனாவில் 1880-ல் ஆங்கிலப் பள்ளி ஒன்றை நிறுவியிருந்தனர். 1884-ல் இது கல்லூரியாயிற்று. இக் கல்லூரியின் பெயர் ஃபெர்குசன் கல்லூரி என்பதாகும். கோகலே இக் கல்லூரியில் குறைந்த ஊதியத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், அக் கல்லூரியின் முதல்வராக (Principal) உயர்வுபெற்றார். இவர் இக் கல்லூரியில் மாணவர்களுக்கு ஏட்டுக்கல்வி மட்டும் கற்பிக்கவில்லை. மாணவர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றுக்கும் வித்திட்டார். ஆங்கிலம், கணிதம், பொருளாதாரம் போன்ற பல பாடங்களுக்கும் ஆசிரியராக இருந்து, பல்கலை வல்லுநர் எனப் புகழ் பெற்றார். மாணவர்களின் அறிவு வளர்ச்சியையே தம் நோக்கமாகக் கொண்டு உழைத்தார். கோகலே பேச்சுவன்மையும், எழுத்தாற்றலும், உலகியலறிவும், உயர்குணமும் உடைய நல்லாசிரியராக விளங்கினார்.

திலகர் நிறுவிய தக்கணக் கல்விச் சங்கத்தின் உறுப்பினர்களாலும், பொதுநலத் தொண்டர்களாலும் நிறுவப்பெற்ற 'சார்வ ஜனிக் சபா' என்ற உயிர் நாடிகளில் ஒருவராக கோகலேயும் திகழ்ந்தார். திலகர், மகாதேவ கோவிந்த ரானடே, அகார்க்கர், கேஸ்கார் இவர்களுடன் சேர்ந்து உழைத்தார். 1888-ல் அச் சபாவின் செயலாளரானார். அதன் காலாண்டு

இதழின் ஆசிரியராக இருந்து பல ஆங்கிலக் கட்டுரைகளை எழுதினார். திலகர் நடத்திய 'கேசரி', 'மராட்டா' இதழ்களின் மூலமாகக் கோகலே தமது சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பினார். பழைமைப் பற்றுமிக்க திலகருடன் கோகலேக்குக் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. சீர்திருத்த நோக்குடைய ரானடேயின் கருத்து இவரைக் கவர்ந்தது. ரானடேயைக் கோகலே தமது அரசியல் குருவாகக் கொண்டார். கோகலேயும், ரானடேயும் சார்வ ஜனிக் சபாவிலிருந்து விலகி, 'தக்கண சபா' (Deccan Sabha) என்ற மற்றொரு சங்கத்தை நிறுவினார்கள். அகார்க்கர் தொடங்கிய 'சுதாரக்' என்ற சீர்திருத்த இதழில் கோகலே ஆங்கிலக் கட்டுரைகளை எழுதி வந்தார்.

பம்பாய் மாநிலத்தில் 1897ஆம் ஆண்டில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. கோகலே பஞ்சத்தை நீக்கப் பலவிதங்களிலும் உதவிபுரிந்தார். உப்புவரி உயர்வை எதிர்த்த இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்தார். அதேபோன்று பருத்தித் துணி இறக்குமதி வரி நீக்கத்தை எதிர்த்தும் தீவிரமாகப் போராடினார்.

இந்திய அரசின் நிதிநிலையை ஆராய்வதற்காக 1897-ல் ஆங்கில அரசினர் ஒரு குழுவை நியமித்தனர். கோகலே இங்கிலாந்து சென்று, இக் குழுவிடம் இந்திய வரிப்பணம் முறைகேடாகச் செலவழிக்கப்படுகிறதென்றும், இந்தியருக்கு அரசாங்கத்தில் உயர்பதவி கொடுக்கப்படுவதில்லையென்றும் குறைகளைத் தெரிவித்தார். இதற்காக மக்கள் இவரைப் பெரிதும் பாராட்டினர்.

கோகலே 1900ஆம் ஆண்டில் பம்பாய் மாநிலச் சட்டசபை உறுப்பினரானார். இந்தியர் நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் நிலவருமானச் சட்டச் சீர்திருத்த மசோதாவைச் சட்டசபையில் எதிர்த்தார். 1902-ல் மத்தியச் சட்டசபை உறுப்பிரானார். அதில் 12 ஆண்டுகள் தொடர்ந்து உறுப்பினராக இருந்தார். அப்போது பல பயனுள்ள சொற்பொழிவுகள் ஆற்றினார். கட்டாய இலவசக் கல்விமுறையைக் கொண்டுவர வேண்டுமென வலியுறுத்தினார். இந்தியாவின் முன்னேற்றத்திற்கான அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டுவரும்படி வாதாடினார்.

கோகலே 1903ஆம் ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசின் செயலாளரானார். 1905-ல் காசியில் நடந்த காங்கிரசுக்குத் தலைவராகத் தேர்வு பெற்றார். வங்காளப் பிரிவினையை

எதிர்த்துப் போராடினார். கர்சன் பிரபுவின் பிற்போக்குக் கொள்கைகளைச் சட்டசபையில் வன்மையாகக் கண்டித்தார். சுதேசியம், கல்வி ஆகியவைபற்றி அரிய சொற்பொழிவுகள் ஆற்றினார். 1905ஆம் ஆண்டில் கோகலே மீண்டும் இங்கிலாந்து சென்று, இந்தியா அமைச்சர் முதலியோரைச் சந்தித்து, இந்திய அரசியல் சீர்திருத்தங்கள்பற்றிய இந்திய மக்களின் விருப்பத்தையும் கருத்துகளையும் எடுத்துரைத்தார். இதன் பயனாக 1909-ல் 'மின்டோ-மார்லி' சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அதே ஆண்டில், அரசியல், தொழில், பொருளாதாரம், சமூகம், கல்வி ஆகிய துறைகளில் ஈடுபட்டு உழைப்பதற்காக 'இந்திய ஊழியர் சங்கம்' (Servants of India Society) என்ற நிறுவனத்தை அமைத்தார். சிறந்த கல்வியறிவும், சுறுசுறுப்பும், ஒழுக்கமும், உழைப்பில் ஆர்வமும், செல்வம், புகழ், தந்நலம் இவற்றைக் கருதாத தியாக உள்ளமும் கொண்டவர்களே இந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பூனா நகராட்சி மன்றத்தில் பல ஆண்டுகளாக உறுப்பினராகக் கோகலே இருந்துவந்தார். 1905-ல் நகராட்சித் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப் பதவியிலிருந்து பல சீர்திருத்தங்களைச் செய்தார். காந்தியடிகளின் வேண்டுதலுக்கிணங்க 1911ஆம் ஆண்டில் கோகலே தென் ஆஃபிரிக்காவுக்குச் சென்றார். அங்குக் காந்தியடிகள் நடத்திய போராட்டத்திற்குத் துணையாக இருந்தார்.

இந்திய அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளில் இந்தியர்களை நியமிக்கலாமா என்பதை ஆராய்வதற்காக ஆங்கில அரசினர், அரசு அலுவலர் தேர்வுக் குழு (Public Service Commission) ஒன்றை நியமித்தனர். இக் குழுவில் கோகலே இடம்பெற்று, உயர்பதவிகளுக்கும், இராணுவத்திற்கும் இந்தியர்கள் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கினார். இந்திய அரசியலில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் பற்றிய தமது ஆலோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றை 1915-ல் கோகலே அரசிடம் அளித்தார். இத் திட்டத்தில் அடங்கிய பெரும்பாலான அம்சங்கள் 1919ஆம் ஆண்டில் அரசு வகுத்த அரசியல் சீர்திருத்தங்களில் இடம்பெற்றிருந்தன.

அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு ஆங்கில அரசுடன் ஒத்துழையாமலிருக்க வேண்டுமெனத் திலகர் போன்ற தீவிரவாதிகள் கொண்டிருந்த கருத்தைக் கோகலே ஏற்கவில்லை. ஆங்கில அரசினருடன் ஒத்துழைத்தே இந்தியா சுதந்திரம் அடைய வேண்டுமென இவர் விரும்பினார். கிளர்ச்சி, புரட்சி

போன்ற நடவடிக்கைகளை இவர் எதிர்த்தார். இதனால் இவரை 'மிதவாதி' என்று அழைத்தனர். எனினும், நாட்டின் முன்னேற்றம் கருதி அரசினரின் குற்றங்களை அவ்வப்போது வன்மையாகக் கண்டிக்க இவர் தவறியதில்லை. கோகலே மிக எளிய வாழ்வு நடத்தினார்; சிறந்த ஒழுக்கத்துடன் விளங்கினார்; சிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தார்; எதையும் எண்ணித் துணியும் பண்பு பெற்றிருந்தார்; பல துறைகளிலும் அறிஞராக விளங்கினார்; சீர்திருத்தக் கொள்கை யுடையவராக இருந்தார்; தீண்டாமை யொழிப்பை ஆதரித்தார்; பெண்களின் மறுமணத்தை வலியுறுத்தினார்; தேசபக்தியிலும் கடவுள் பக்தியிலும் சிறந்தவர்; சொன்னசொல் பிறழாதவர்; சிறந்த உழைப்பாளி இவருடைய அரிய சேவைகளைப் பாராட்டி இவருக்கு உயர்ந்த பட்டங்களை வழங்க ஆங்கில அரசினர் விரும்பினார்கள். ஆனால், இவர் அவற்றையெல்லாம் ஏற்க மறுத்துவிட்டார். இவர் 1915-ல் பூனாவில் உயிர் நீத்தார்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை (1872—1936)

'தென்னாட்டுத் திலகர்', 'கப்பலோட்டிய தமிழன்', 'செக்கிழுத்த செம்மல்' என்றெல்லாம் போற்றிப் புகழப்பெற்ற பெருமை கொண்டவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையாவார். வங்காளத்தில் விபின சந்திர பாலரும், பஞ்சாபில் லாலா லஜபதிராயும், மராட்டியத்தில் பால கங்காதர திலகரும் விடுதலைப் போராட்டத் தளபதிகளாக விளங்கிய போது, தென்னாட்டில் சிதம்பரம் பிள்ளை விடுதலைத் தளபதியாகத் திகழ்ந்தார்.

'வ. உ. சி.' என மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற சிதம்பரம்பிள்ளை, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஓட்டப்பிடாரம் என்னும் சிற்றூரில் 1872 செப்டம்பர் 5ஆம் நாள் பிறந்தார். சொந்த ஊரிலும், பின் திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் கல்வி கற்று 'மெட்ரிக்குலேசன்' தேறினார். பின்னர் சட்டக் கல்லூரியில் பயின்று, 23ஆம் வயதில் வழக்கறிஞர் தேர்வில் சிறப்பாகத் தேறினார். இவருடைய தந்தை, உலகநாதபிள்ளையும் ஒரு வழக்கறிஞர். அவருடன் வ.உ.சி. சொந்த ஊரில் வழக்கறிஞராகத் திறமையுடன் தொழில் நடத்தினார். இவர் ஏழைகளுக்காகப் பொருள் பெறாமல் வழக்காடினார். ஒரு வழக்கில் இவரும் இவருடைய தந்தையும் எதிரெதிராக வழக்காடினார்கள். இதில் இவர் வெற்றிகண்டார். தந்தை மகிழ்ந்து இவரைப் பாராட்டினார். 1900ஆம் ஆண்டிலிருந்து வ. உ. சி. தூத்துக்குடியில் குடியேறி அங்கு வழக்கறிஞர் தொழில் நடத்தினார்.

இளமை முதற்கொண்டே வ.உ.சி. தேசிய உணர்வு கொண்டவராகவும், விடுதலை வேட்கை மிகுந்தவராகவும் விளங்கினர். 1905-ல் வங்காளப் பிரிவினை நடந்தபோது, அதை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டம் நடந்தது. திலகரின் புரட்சிக் கருத்துகள் இவரைக் கவர்ந்தன. அவரை இவர் தமது வழிகாட்டியாகக் கொண்டார். தென்னுட்டில் திலகரின் கொள்கைகளைப் பரப்பினர். தமிழ்நாட்டில் ஊர் ஊராகச் சென்று மக்களிடம் விடுதலை உணர்வைத் தூண்டினர். வெளிநாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்கும் போராட்டம் தீவிரமாகிய போது, இவர் சுதேசிப் பொருள்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காகத் தூத்துக்குடியில் தரும சங்க நெசவுச்சாலையும், சுதேசிப் பண்டகசாலையும் நிறுவினர். இவருடைய முயற்சிகளுக்குக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரும், சுப்பிரமணிய சிவா என்னும் தலைவரும் உறுதுணையாக இருந்தனர்.

தூத்துக்குடியில் கடல் வாணிகத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இந்திய வணிகர்களை அவர்கள் இழிவாக நடத்தினர். இது கண்டு வ. உ. சி. மனங்கொதித்தார். கடல் வாணிகத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை ஒழிக்க உறுதி பூண்டார். சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றை நிறுவ முனைந்தார். பங்குக்கு ரூ10 விதம் ரூ 10 இலட்சம் மூலதனத்துடன் 1906-ல் சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றைப் பதிவுசெய்தார். இதற்குப் பங்குகள் சேர்க்க இவர் வடஇந்தியாவுக்குச் சென்று திலகருடன் தொடர்புகொண்டார். அப்போது, திலகருக்கு இவர் நெருங்கிய நண்பரானர். வடஇந்தியாவிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் பலர் இவருடைய கப்பல் கம்பெனியில் முதலீடு செய்தனர். இக் கம்பெனியின் சார்பாக இரண்டு கப்பல்கள் வாங்கப்பட்டன. மற்றும் பல கப்பல்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. சுதேசிக் கம்பெனியில் கடல் வாணிகம் தொடங்கியது. இந்திய வணிகர்கள் இந் நிறுவனத்தின் கப்பல்களிலேயே தம் பொருள்களை அனுப்பலாயினர். ‘கப்பலோட்டிய தமிழன்’ என்று வ.உ.சி. யை மக்கள் அழைக்கலாயினர். வெள்ளையரின் கப்பல்களுக்கு வருவாய் குறையலாயிற்று. வெள்ளையரின் கப்பல் கம்பெனி போட்டிக்காகக் கப்பல் கட்டணத்தைக் குறைத்தது. சுதேசிக் கப்பல் கம்பெனியிலிருந்து இவர் விலகிவிட்டால் இவருக்குப் பெருந் தொகை தருவதாக வெள்ளையர் ஆசை காட்டினர். ஆனல், அதற்கெல்லாம் வ. உ. சி. இணங்கவில்லை. ஆங்கில அரசினரும் சுதேசிக் கப்பல் கம்பெனியை நசுக்க முயன்றனர். இவ்விதம் பல

விதமாகக் கொடுக்கப்பட்ட தொல்லைகளின் காரணமாகச் சுதேசிக் கப்பல் கம்பெனியை மூடநேர்ந்தது.

தூத்துக்குடியில் வெள்ளையருக்குச் சொந்தமான பஞ்சாலை ஒன்று இருந்தது. அதன் நிருவாகத்தினர், தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைத்தனர். அவர்கள் வ. உ. சி. யின் உதவியை நாடினர். அதனால் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத்திற்கு வ.உ.சி. தலைமை யேற்றார். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய இவர் வழிகாட்டினார். தம் மனைவியின் நகைகளை விற்றும், ஊர்மக்களிடம் பொருளும் பணமும் திரட்டியும் தொழிலாளர் குடும்பங்களுக்கு இவர் உதவினார். இறுதியில் வேறு வழியின்றி, ஆலை முதலாளிகள் வழிக்குவந்தனர். தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றனர். உரிமைப் போராட்டம் வெற்றி கண்டது.

வ. உ. சி. யை அடக்கிவிட வெள்ளையர், ஆங்கில அரசின் உதவியை நாடினர். இவர்மீது அதிகாரிகள் அடுக்கடுக்காகப் பல வழக்குகளைத் தொடர்ந்தனர். அவை யாவும் தோல்வி கண்டன. 1908-ல் விபின சந்திர பாலரின் விடுதலை நாளன்று திருநெல்வேலியில் தாமிரவருணி ஆற்றங்கரையில் நடந்த மாபெருங் கூட்டத்தில் விடுதலை முழக்கம் செய்தமைக்காக இவர் மீது அரசநிந்தனை வழக்கை அரசாங்கம் தொடர்ந்தது. இது நாடு முழுதும் பெருங்கொதிப்பை ஏற்படுத்தியது. இவ் வழக்கில், இவருக்கு இரட்டை ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. இதை யறிந்த திருநெல்வேலி மாவட்ட மக்கள் கிளர்ந்தெழுந்து, அரசாங்கச் சொத்துகளைத் தாக்கிச் சேதப்படுத்தினர். உயர்நீதி மன்ற மேல்முறையீட்டில், இரட்டை ஆயுள் கடுஞ்சிறைவாசம் ஆறாண்டுக் கடுஞ்சிறையாகக் குறைக்கப்பட்டது. சிறையில் இவர் பல துன்பங்களுக்கு ஆளானார். கோயம்புத்தூர்ச் சிறையில் இவர் செக்கிழுத்து நலிந்தார். அங்கு ஓர் அதிகாரி இவரைக் கொடுமையாக நடத்தியது கண்டு மனங்கொதித்த சிறைக் கைதிகள் கலகம் செய்தனர். இதன் விளைவாகச் சிறைச் சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது. கைதிகளின் இன்னல்கள் ஓரளவு குறைந்தன. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இங்கிலாந்தில் அரியணை ஏறியதையொட்டிச் சிறைத்தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு, 1911 டிசம்பரில் வ. உ. சி. விடுதலையானார்.

சிறையில் வ.உ.சி. இன்னல்களையெல்லாம் இன்முகத்துடன் ஏற்றார். சிறையிலேயே அவர் பல அரிய நூல்களை எழுதினார். விடுதலைக்குப் பிறகு, வ.உ.சி. வறுமையில்

வாதினர். வழக்கறிஞர் தொழில் நடத்துவதற்கான விருதை (Sannad) ஏற்கெனவே அரசாங்கம் இவரிடமிருந்து பறித்துக் கொண்டது. அதனால் இவரால் வழக்கறிஞர் தொழில் நடத்த இயலவில்லை. சென்னையில் சிறிது காலம் நெய், அரிசி வாணிகம் செய்தார். பின், உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த வாலஸ் என்பவர் உதவியால் வழக்கறிஞர் தொழிலை நடத்துவதற்கான விருது இவருக்கு மீண்டும் கிடைத்தது. இக் காலத்தில் இவருக்குத் திலகர் மாதந்தோறும் பொருளுதவி செய்துவந்தார்.

வ. உ. சி. சிறந்த தமிழ்ப் புலவராகவும் கவிஞராகவும் விளங்கினர். தம் சுயசரிதையைக் கவிதையில் இயற்றினர்; பல உரை நடை நூல்களையும் எழுதினர்; திருக்குறளின் சில அதிகாரங் களுக்கு உரை எழுதினர். தொல்காப்பியம் இளம்பூரணர் உரையைப் பதிப்பித்தார்; சமூகச் சீர்திருத்தத்தில் ஆர்வம் காட்டினர்; தீண்டாமை ஒழிப்புக்குப் பாடுபட்டார்; அரிசனங் களுக்குத் தம் வீட்டிலேயே ஆதரவு அளித்தார்; விதவை மணம், கலப்பு மணம் சிலவற்றையும் இவர் நடத்திவைத்தார். தீவிர விடுதலைப் போராட்ட வீரராகவும், தமிழ்த் தொண்டராகவும், சீர்திருத்தவாதியாகவும் விளங்கிய வ. உ. சி. 1936ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் நாள் நோயுற்று மறைந்தார்.

சுப்பிரமணிய பாரதியார் (1882—1921)

பாட்டுத் திறத்தினல் நாட்டு மக்களிடம் விடுதலை உணர்ச்சி யைத் தூண்டியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார். பாரத அன்னை அடிமை விலங்கில் சிக்கித் தவிப்பதைக் கண்டு மனங்குமுறி, அவ் வன்னையின் விலங்கொடிக்கத் தமது கவிதா சக்தியைப் பயன்படுத்தி, மக்களைத் தட்டி எழுப்பினர் பாரதியார். நாடு விடுதலை பெறுவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே இந்தியா விடுதலை பெறப்போவதாகத் தீர்க்கதரிசனமாகக் கூறி 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று' மகிழ்ச்சிக் கூத்தாடியவர் அமரகவி பாரதியார். தமிழின் மறுமலர்ச்சி யுகம் ஒன்றைத் தோற்றுவித்த பெருமையும் அவருடைய புதுமைக் கவிதைக்கு உண்டு.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் 1882ஆம் ஆண்டில் சுப்பிரமணிய பாரதியார் பிறந்தார். ஏழாம் வயதிலே இவருக்குக் கவிதை இயற்றும் புலமை உண்டாயிற்று. இவர் தம் பதினோராம் வயதில், புலவர்கள் பலர் கூடியிருந்த சபையொன் றில், கொடுத்த ஈற்றடிகளை வைத்து, கவிதைகளை விரைவாக

இயற்றிச் சபையோரை வியப்பிலாழ்த்தினர். சபையினர் மகிழ்ந்து இவருக்குப் 'பாரதியார்' என்ற பட்டம் வழங்கியதாகக் கூறுவர்.

பாரதியார் சிறிது காலம் சொந்த ஊரில் கல்வி கற்றார். ஆனால், அவருக்குக் கல்வியில் அவ்வளவு நாட்டம் செல்லவில்லை. கவிதை இயற்றுவதிலேயே கவனம் செலுத்தினர். இதனல் இவரைக் காசியிலிருந்த தமது சகோதரியிடம் இவருடைய தந்தை அனுப்பினர். காசியில் தம் அத்தை வீட்டிலிருந்து பாரதியார் பள்ளிக் கல்வியைத் தொடர்ந்தார். அப்போது வடமொழியும் இந்தியும் கற்றுத் தேர்ந்தார். காசியிலிருக்கும்போதே இவருக்கு அரசியலில் ஈடுபாடு உண்டாயிற்று. 1902-ல் பாரதியார் எட்டயபுரம் திரும்பி, எட்டயபுரம் ஜமீந்தாரிடம் வேலைக்குச் சேர்ந்தார். அப்போது, அங்கே வந்த தமிழறிஞர்களுடன் தமிழாராய்ச்சி செய்தார். ஷெல்லி, பைரன் போன்ற ஆங்கிலக் கவிஞர்களின் இலக்கியங்களை ஆர்வத்துடன் கற்றார். அவர்களுடைய சுதந்திர வெறி இவரையும் ஆட்கொண்டது. 1904ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நவம்பர் வரை மதுரைச் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினர். பின்னர், சென்னை சென்று 'சுதேசமித்திரன்' நாளிதழில் துணையாசிரியராகச் சேர்ந்தார். அதில் தேசபக்தர்களைப் போற்றியும், போலிகளைப் பரிகசித்தும் பாடல்களும் கட்டுரைகளும் எழுதினர். 1906ஆம் ஆண்டில் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி தலைமையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்குப் பாரதியார் சென்றிருந்தார். தேசியத் தலைவர்களின் திலகமாக விளங்கிய பாலகங்காதர திலகரின் பேச்சும், கருத்துகளும் பாரதியாரை வெகுவாகக் கவர்ந்தன. அவரைப் போற்றி 'வாழ்க திலகன் நாமம் வாழ்க வாழ்கவே' என்னும் திலகர் துதியைப் பாடினர்.

பாரதியார் தம்மிடம் ஊற்றெனப் பெருக்கெடுத்த சுதந்திர வேட்கையை வெளிப்படுத்த ஒரு புதிய செய்தி இதழ் தேவை எனக் கருதினர். அதனல் ஒரு தேசபக்த நண்பரின் உதவியுடன் 1907-ல் 'இந்தியா' என்னும் இதழைத் தொடங்கினர். அப்போது 'கப்பலோட்டிய தமிழன்' என்று போற்றப்பட்ட வ. உ. சிதம்பரம்பிள்ளை, பாரதியாருக்கு நெருங்கிய நண்பரானர். 1907 டிசம்பரில் நடைபெற்ற சூரத் காங்கிரஸ் மாநாட்டில், திலகரின் தீவிரவாதக் கொள்கையை ஆதரித்த இளைஞர் கூட்டத்தில் பாரதியாரும், வ.உ.சி. யும் சேர்ந்தார்கள். சென்னை திரும்பியதும், பாரதியாரும் வ. உ. சி.யும் ஊர் ஊராகச் சென்று

திலகரின் கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்பி, மக்களிடம் விடுதலை உணர்ச்சியைத் தூண்டினர்கள். வ.உ.சி. மீது ஆங்கில அரசினர் அரசத் துரோகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்து, அவரைக் கைதுசெய்து பாளையங்கோட்டையில் சிறைவைத்தனர். பாரதியார் அச் சிறைக்குச் சென்று வ.உ.சி. யைச் சந்தித்து ஆறுதல் கூறினர். கலெக்டர் விஞ்சு துரைக்கும், வ. உ. சி.க்குப் இடையே நடந்த உரையாடலாக அமைத்து, 'நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை நாட்டினய்' என்று தொடங்கும் பாடல்களைப் பாரதியார் பாடினர்.

தீவிரவாதிகளை முற்றிலும் அடக்கி ஒடுக்கிவிட முனைந்த ஆங்கில அரசாங்கம், திலகரையும் அரசத்துரோகக் குற்றஞ் சாட்டிக் கைதுசெய்தது. வ. உ. சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனையும், திலகருக்கு ஆருண்டுக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன. நாடெங்கும் கொந்தளிப்பு மூண்டது. பாரதியார் கேலிச் சித்திரங்கள், வீரச்சுவை மிகுந்த பாடல்கள், கட்டுரைகள், தலையங்கங்கள் மூலமாக 'இந்தியா' இதழில் அரசியல் பிரசாரத்தை நடத்திவந்தார். இதுபோன்ற இதழ்களை நசுக்க வேண்டுமெனக் கருதிய ஆங்கில அரசினர், 1908 ஆம் ஆண்டில் புதிய அச்சுச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தனர். 'இந்தியா' பத்திரிகை வேருெருவர் பெயரில் இருந்தது. அதனல் அவரைப் பிடித்து அரசு தண்டித்தது. பின்னர்ப் பாரதியாரைப் பிடிக்கவும் அரசு 'பிடி ஆணை' (warrant) பிறப்பித்தது. அப்போது பாரதியார் உடல் நலிவுற்றிருந்தார். எனவே, உடல்நிலை கருதி அவர் சிறைப்படாமலிருப்பதே நல்லது என அவருடைய நண்பர்கள் கருதி, ஃபிரெஞ்சுப் பகுதியாகிய புதுச்சேரிக்குச் சென்று விடுமாறு பாரதியாரை வற்புறுத்தினர். ஆங்கில அரசினரின் கொடிய சட்டத்திற்குள் சிக்காமல் தொடர்ந்து நாட்டுப்பணி செய்யலாமென்வும், 'இந்தியா' இதழை அங்கிருந்தே நடத்தலாமெனவும் கருதிய பாரதியார் புதுச்சேரி செல்ல இசைந்து அங்குச் சென்ருர். அங்கு ஏற்கெனவே இருந்த அரவிந்த கோஷ், வ.வே.சு. ஐயர் போன்ற தேசபக்தர்களுடன் சேர்ந்து, அரசியல் துறையில் பாரதியார் புரட்சிகரமான பணிகளைச் செய்தார். புதுவையில் அரண் இல்லாச் சிறையில் விலங்கில்லாக் கைதியாக 1908 அக்டோபர் முதல் 1918 வரை பத்தாண்டுகள் வாழ்ந்து, தமிழின் மறுமலர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தார்.

அரசாங்க உளவுப் போலீசார் பாரதியார் இல்லாத சமயத்தில், அடுத்த வீட்டு வழியாக இவருடைய வீட்டினுள் புகுந்து, கடிதங்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் பறித்துச்

சென்றனர். பாரதியாரைத் தந்திரமாகப் புதுவை எல்லைக்கு அப்பால் கொண்டுவந்து கைது செய்யவும் போலீசார் முயன்றனர். இத்தகைய தொல்லைகளுக்கும் வறுமைத் தொல்லைக்கு மிடையே பாரதியாரின் கவிமேதை வளர்ந்த வண்ணமாக இருந்தது. 'காங்கிரஸ் சரித்திரம்' என்ற நூலை எழுதி இவர் 'சுதேசமித்திரன்' இதழுக்கு அனுப்பினர். இதில் சுமார் 50 அத்தியாயங்கள் அவ்விதழில் வெளியாயின. 1918 நவம்பர் 20-ல் பாரதியார் புதுவையைவிட்டு பிரிட்டிஷ் எல்லையில் அடிவைத்தார். அவரைப் போலீசார் உடனே கைதுசெய்து கடலூர்ச் சிறையிலடைத்தனர். அங்கு டிசம்பர் 14 ஆம் தேதிவரை சிறையிலிருந்தார். பின்னர்ச் சுதேசமித்திரன் ஆசிரியரான ஏ. ரங்கசாமி ஐயங்கார் போன்றோரின் முயற்சியால் சில நிபந்தனைகளின் பேரில் பாரதியார் விடுதலையானர். 1920-ல் சென்னைக்கு வந்து மீண்டும் சுதேசமித்திரனில் வேலையில் அமர்ந்தார். மாலைவேளையிலும் ஓய்வுநாள்களிலும் நண்பர்களுடனும் சீடர்களுடனும் உரையாடுவதும், கூட்டங்களில் பேசுவதும் பாடல்கள் இயற்றுவதுமாகக் காலங்கழித்தார். 'பாரத சமுதாயம் வாழ்கவே' எனத் தொடங்கும் சமதர்மப் பாடலை ஒரு நாள் இரவு பதினொரு மணிவரை நடந்த ஒரு கூட்டத்தில் பாடினர்.

பாரதியார் சென்னைத் திருவல்லிக்கேணியில் குடியிருந்தார். அப்போது பார்த்தசாரதிக் கோயில் யானையிடம் அவர் நட்புடன் பழகிவந்தார். வழக்கம்போல் ஒரு நாள் யானைக்குச் சிற்றுண்டி அளிக்க அருகில் சென்றபோது, அது இவரைத் தூக்கி எறிந்து விட்டது. அதனல் ஏற்பட்ட காயம் குணமாகாமல் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் பாரதியார் காலமானர்.

பாரதியார் ஏராளமான தேசியப் பாடல்களைப் பாடினர். அவற்றில் சமதர்ம சன்மார்க்க நிலையைச் சுட்டிக் காட்டினர். பழைய பெருமையைப் போற்றுவதுடன் தற்கால வீழ்ச்சி நிலையையும், விடுதலைப் போரில் ஈடுபட்ட பிறநாடுகளின் நிலைமையையும் பாரதியார் பாடினர். ரஷ்யா போன்ற நாடுகளில் நடந்த புரட்சியைப் பாராட்டி, அதன்மூலம் இந்திய மக்களுக்கு எழுச்சியூட்டினர். தேசபக்தியையும் தெய்வபக்தியின் நிலைக்கு உயர்த்த முயன்றார். பாரதத் தாயைப் பராசக்தியாக நினைத்தே அவர் பாடல்கள் பாடினர்.

சுபாஷ் சந்திர போஸ் (1897—1945 ?)

இந்தியாவின் விடுதலைக்காகப் படையொன்றைத் திரட்டி ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதந்தாங்கிப் போராடிய மாபெரும் வீரர் சுபாஷ் சந்திர போஸ் ஆவார்.

வங்காளத்தில் 1897ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாள் சுபாஷ் போஸ் பிறந்தார். சிறுவயதிலேயே கல்வியில் ஊக்கமும், நூல்களைப் படிப்பதில் ஆர்வமும் கொண்டவராக விளங்கினார். அரசியல், உளவியல், வேதாந்தம் முதலியவைபற்றிய நூல்களை விரும்பிக் கற்றார். முதலில் இவருடைய மனம் துறவறத்தை நாடியது. மாநிலக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போது, 1917-ல் இவர் துறவுபூண்டு வீட்டிலிருந்து மறைந்தார். பெரிய மடாதிபதிகளைச் சந்தித்து அவர்களுடைய வாழ்க்கையைக் கவனித்து வந்தார். பிறகு துறவறத்தில் ஏமாற்றம் கண்டு வீடு திரும்பினார். மீண்டும் கல்லூரியில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார். இப்பொழுது இவர் புரட்சிப் பாதையில் ஆர்வம் கொண்டார். இன்டர்மீடியட் வகுப்பில் இவர் படித்துக்கொண்டிருந்த போது, ஆங்கிலேய ஆசிரியர் ஒருவர் இந்தியப் பண்பாட்டை இழிவாகப் பேசி ஒரு மாணவரைக் கன்னத்தில் அறைந்துவிட்டார். இதனால் ஆத்திரங் கொண்ட போஸ், மற்ற மாணவர்களுடன் வகுப்பிலிருந்து வெளியேறி, பின்னர் அவ் வாசிரியர் வெளியே வந்ததும் அவரைப் புடைத்து அனுப்பினார். இதனால் பல்கலைக்கழகம் இவரை இரண்டாண்டுகள் தள்ளிவைத்தது. பின்னர் பி.ஏ. படித்து மாநிலத்திலேயே முதல்வராகத் தேறினார்.

இளமையிலே சுபாஷ்போஸ் நாட்டு விடுதலையில் ஆர்வம் காட்டினார். தாய்நாட்டிற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாரானார். 1919ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்று, ஐ.சி.எஸ். தேர்வில் தேறி, அங்கேயே உயர்ந்த பதவியும் பெற்றார். அப் பதவியிலிருந்தபோது, இங்கிலாந்து அரசருக்கு விசுவாசமாக இருப்பதாகக் கூறி உறுதிமொழி எடுக்க வேண்டுமென இவரை அரசு வற்புறுத்தியது. அவ்வாறு செய்ய மறுத்து, 1921-ல் அப் பதவியைத் துறந்துவிட்டு, காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர விரும்பி இந்தியா திரும்பினார்.

இந்தியா திரும்பிய சுபாஷ்போஸ் காந்தியடிகளைச் சந்தித்தார். காந்தியடிகள் இவருடைய தியாக உணர்வைப் பாராட்டி, வங்கபந்து சித்தரஞ்சன தாஸிடம் அனுப்பிவைத்தார். 1922-ல் சி.ஆர். தாஸும் மோதிலால் நேருவும் சுயராச்சியக் கட்சியை நிறுவியபோது, இவர்களுக்குத் துணையாக இருந்தார். அக் கட்சியினர் தொடங்கிய 'ஃபார்வர்டு' என்ற இதழுக்குச் சுபாஷ் போஸ் ஆசிரியரானார். சி.ஆர். தாஸின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானார். சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பல்லாயிரம்

மாணவர்கள் கலந்துகொண்டு கல்லூரியைவிட்டு வெளியேறினர். அவர்களின் கல்வி வீணாகாமல், தொடர்ந்து படிப்பதற்காக, பல தேசியக் கல்லூரிகள் நடத்தப்பட்டு வந்தன. அக் கல்லூரி ஒன்றைச் சி. ஆர். தாஸின் விருப்பப்படி, போஸ் திறமையாக நிருவகித்தார், இவருடைய நிருவாகத் திறமை சி. ஆர். தாஸின் பாராட்டைப் பெற்றது. பின்பு, தாஸ் 1924-ல் கல்கத்தா நகர மேயரான போது, சுபாஷ் போஸைத் தலைமை நிருவாக அதிகாரியாக (Chief Executive Officer) நியமித்தார். இப் பதவியை அவர் மிகுந்த திறமையுடன் நிருவகித்தார். அதே சமயத்தில் புரட்சி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார். அதனால் அரசினர் இவரைக் கைதுசெய்து பர்மாவில் சிறை வைத்தனர். சிறையிலிருக்கும் போதே இவர் வங்காளச் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1927-ல் சிறையில் போஸ் நோயுற்றுப் படுத்த படுக்கையானார். இவரைச் சிறைசெய்த தற்காக அரசாங்கத்தைக் காந்தியடிகள் கண்டித்தார். அதன் பலனாக, போஸ் விடுதலையானார்.

காங்கிரசில் இளமைத் துடிப்பும் தீவிரப் போக்கும் கொண்டவர்களின் பிரதிநிதியாகச் சுபாஷ்போஸ் விளங்கினார். 1928-ல் சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், சுபாஷ்போஸ் காங்கிரசின் செயலாளராகத் தேர்வு பெற்றார். மோதிலால் நேரு தலைமையில் நடந்த சர்வகட்சி மாநாடு, குடியேற்ற நாட்டுத் தகுதிக் கொள்கையை ஏற்றுக்கொண்டது. 1929-ல் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் காந்தியடிகள் '1929 டிசம்பர் 31-க்குள் குடியேற்ற நாட்டுத் தகுதி வழங்கவேண்டும்; இல்லையேல் பூரண சுதந்திரம்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். இதைச் சுபாஷ் போஸ் விரும்பவில்லை. அதனால் காங்கிரஸ் குடியரசு கட்சியை நிறுவினார். 1930-ல் கைதாகி ஓராண்டுச் சிறைத்தண்டனை பெற்றார். விடுதலையாகி மீண்டும் கைதானார். இவ்வாறு இவர் பலமுறை சிறைசென்றார். காங்கிரசில் இவருக்கும் காந்தியடிகளுக்கும் கருத்துவேறுபாடுகள் பெருகின. காங்கிரஸ் செயற்குழுவில் பணியாற்ற மறுத்துவிட்டார். எனினும் 1938, 1939 ஆகிய இரு ஆண்டுகளிலும் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், காந்தியடிகள் போன்றோருடன் கருத்து வேற்றுமை மிகுந்துவிடவே, போஸ் 1939-ல் காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து விலகினார். அதே ஆண்டில், அகில இந்தியக் காங்கிரஸ் குழுவின் தீர்மானத்திற்கு முரணாக, வங்கம் முழுவதிலும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்காகக் கண்டன தினத்தைப் போஸ் அனுசரித்தார். இதனால், இவரை மாநிலக் காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து காங்கிரஸ் மேலிடம் விலக்கியது.

இதன்பின், சுபாஷ்போஸ் 'முன்னணிக் கட்சி' (Forward Bloc) என்ற புதிய கட்சியை நிறுவினார். ஹார்வில் என்னும் வெள்ளையரின் சிலையை அகற்ற ஒரு போராட்டம் நடத்தினார். அதனால், சிறைவைக்கப்பட்டார். அப்போது இவர் சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கவே, அரசு இவரை விடுதலை செய்தது. சுபாஷ்போஸ் காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையை விரும்பவில்லை. வெளிநாட்டு உதவியில்லாமல் நாடு சுதந்திரம் பெற முடியாது என்று நம்பினார். உடனடியாகச் சுதந்திரம் பெறுவதற்கு அரசை எதிர்த்து ஆயுதந்தாங்கிப் போரிடுவதே வழி என்று அவர் கருதினார்.

இச் சமயத்தில் இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தது. இப்போரில் ஆங்கிலேயருக்குத் தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டு வந்தது. அச் சமயத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போரிட்டால் சுதந்திரம் எளிதில் கிடைத்துவிடும் எனச் சுபாஷ்போஸ் எண்ணினார். இவரை அரசினர் வீட்டுக் காவலில் வைத்து, அவர் வீட்டைச் சுற்றிக் கடுமையான போலிஸ் காவல் ஏற்படுத்தியிருந்தனர். 1941 ஜனவரி 26ஆம் நாளன்று சுபாஷ்போஸ் ஒரு மௌல்வியைப் போல் மாறுவேடம் பூண்டு ஆஃப்கானிஸ்தான் தலைநகரான காபூலுக்குச் சென்றார். காபூலில் இவர் ஒரு பட்டாணியரைப் போல் வேடமிட்டுத் தங்கியிருந்தார். ஊமைபோலவும், செவிடர் போலவும் நடித்து ஆஃப்கானிஸ்தான் இரகசியப் போலீசாரிடமிருந்து தப்பினார். பின் அங்கிருந்து ஜெர்மன் தலைநகரான பெர்லினுக்குச் சென்றார். பிறகு டோக்கியோ சென்று அதன் பின் சிங்கப்பூரை அடைந்தார். தென்கிழக்கு ஆசியாவிலிருந்த 30 இலட்சம் இந்தியரும் சுபாஷ்போஸைத் தங்கள் தனிப் பெருந்தலைவராகவும், வீரத் தளபதியாகவும் ஏற்றுக்கொண்டு, தாய் நாட்டை விடுவிப்பதற்கு வீறுகொண்டெழுந்து, ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடத் தயாரானார்கள். சுதந்திரப் போரை நடத்துவதற்குப் பொன்னும் பொருளும் பணமும் வாரி வழங்கினார்கள். ஆங்கிலேயர் போரில் தோல்வியடைந்தபோது விட்டுச் சென்ற இந்திய வீரர்களை ஒன்றுதிரட்டி இந்திய தேசிய இராணுவம் (Indian National Army) என்ற சுதந்திரப் படையை அமைத்தார்; சுதந்திர அரசாங்கம் ஒன்றையும் நிறுவினார். சுதந்திரப் படையில் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் சேர்ந்தனர். எல்லோரும் சுபாஷ்போஸை 'நேத்தாஜி' (தலைவர்) என்று அழைத்தனர்.

போஸ், ஜெர்மானியருக்கோ ஜப்பானியருக்கோ எந்தவிதத்திலும் அடிமைப்பட்டிருக்கவில்லை. அவர் சுதந்திரமாகச் செயற்

பட்டார். அவருடைய சுதந்திரப் படையினர் போர்முனையில் புரிந்த வீரச் செயல்கள் வரலாற்றுப் புகழ் மிக்கவை. அப் படையினர் இந்தியாவிற்குள் நுழைந்து மணிப்புரி சமஸ்தானத்தில் பல இடங்களைக் கைப்பற்றினர். இச் சமயத்தில் உலகப் போரின் போக்கு மாறியது. ஜெர்மனியும் ஜப்பானும் தோல்வியடைந்தன. இந்திய தேசிய இராணுவத்தினர் வீரத்துடன் போர் புரிந்தும் பயனில்லாமல் போய்விட்டது. 1945 ஆகஸ்டு 18ஆம் நாள் சுபாஷ்போஸ் மறைந்துவிட்டார். அவர் ஒரு விமான விபத்தில் இறந்துவிட்டதாகச் செய்தி வந்தது. அவருடைய மரணம் குறித்து ஐயம் எழுந்துவந்தது. இந்திய அரசினர் நியமித்த ஒரு விசாரணைக் குழு டோக்கியோ சென்று, விரிவாக விசாரணை நடத்தி, போஸ் இறந்ததை உறுதி செய்தது. ஆனால், அவர் இறக்கவில்லை என்றும், இன்றும் அவர் யோகியாக வாழ்ந்து வருகிறார் என்றும் கூறுவோர் உண்டு.

காந்தியடிகள் (1869—1948)

ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் சிக்கிக் கிடந்த பாரதத்தைத் தட்டி எழுப்பி அதன் மக்களுக்கு ஒரு புதிய அறவழியைக் காட்டி அவர்களை ஒற்றுமைப்படுத்தி, தியாகத்தீயில் பக்குவப்படுத்தி, விடுதலை எய்துவித்து அழியாப் புகழ் கொண்டவர் மகாத்மா காந்தியடிகள் ஆவார். அடிமைப்பட்டு, வலிமை இழந்து, வறுமையில் வாடி நின்ற இந்திய மக்களுக்கு ஒரு பெரிய வல்லரசை எதிர்த்து நிற்பதற்கான துணிவையும் ஆற்றலையும் இவர் தந்தார். ஆனால் இவர் ஆயுதம் எடுத்துப் போரிடும்படி சொல்லவில்லை. அன்பு, அகிம்சை, சத்தியம் இவற்றைக்கொண்டே பகைவரையும் நேசிக்கும்படியான மனப்பாங்கோடு மக்களை விடுதலைக்காகப் போராடும்படி செய்தார். கத்தியின்றி இரத்தமின்றி இவர் நடத்திய புதிய போர்முறை ஆங்கில வல்லரசையும் பணியச் செய்தது. இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுத்தந்த காந்தி மகான் 'தேசத் தந்தை' என்று பாரத மக்களால் பக்தியுடன் போற்றப்படுகிறார்.

காந்தியடிகளின் முழுப்பெயர் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி. குஜராத்து மாநிலத்திலுள்ள கத்தியவார் என்னும் சமஸ்தானத்தைச் சேர்ந்த போர்பந்தர் என்ற ஊரில் 1869 அக்டோபர் 2ஆம் நாள் காந்தியடிகள் பிறந்தார். காந்தியடிகளின் தந்தையார் காபாகாந்தி எனப்பட்ட கரம்சந்திர காந்தியாவார். காபாகாந்தி போர்பந்தர், இராசகோட்டை முதலிய சமஸ்தானங்களில் திவானாக வேலைபார்த்தவர். மோகனதாஸ்

காந்தி சிறுவயதிலேயே சிறந்த ஒழுக்கநெறிகளைப் பயின்றார். புராணத்தில் வரும் சிரவணன் என்ற இளைஞனின் கதையைப் படித்து அவனைப்போல் தாய்தந்தையரிடம் பக்திகொண்டார். அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்து உண்மையே பேசுவதெனெ உறுதிபூண்டார். இவரது பதின்மூன்றாவது வயதிலேயே அதே வயதுடைய கஸ்தூரிபாவை இவருக்கு இவருடைய பெற்றோர் திருமணம் செய்துவைத்தார்கள்.

திருமணமான பின்பும் காந்தி உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார். இவருடைய 16 ஆம் வயதில் தந்தை காலமானார். 1887-ல் மெட்ரிக்குலேசன் தேர்வில் தேறினார். மேற் படிப்பிற்காகப் பவநகரிலிருந்த கல்லூரியில் சேர்ந்தார். ஆனால், அந்தப் படிப்பு அவருக்குப் பிடிக்கவில்லை. இங்கிலாந்து சென்று 'பாரிஸ்டர்' தேர்வுக்குப் படிக்க விரும்பினார். தந்தை இறந்தபின் காந்தியை அன்புடன் கவனித்து வந்த தமையனார், பணத்திற்கு என்ன செய்வது எனத் தயங்கினார். அன்னையாரும் கடைசி மகன் காந்தியைப் பிரிந்திருக்கவேண்டுமென வருந்தினார். மேலும், இங்கிலாந்துக்குப் படிக்கச் செல்லும் இளைஞர்கள் ஊனும் மதுவும் உண்டு பிற பெண்களை நாடிக் கெட்டுவிடுவதைக் கருதியும் அவர் இங்கிலாந்து செல்வதற்கு அன்னையார் மறுப்புத் தெரிவித்தார். எனினும், காந்தி தமது முடிவில் பிடிவாதமாக இருந்தார். இறுதியில் மது அருந்துவதில்லை என்றும், மாமிசம் சாப்பிடுவதில்லை என்றும், பிற பெண்களைத் தொடுவ தில்லை என்றும் தாயாருக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டு, அன்னை யின் அனுமதியுடன் காந்தி இங்கிலாந்து சென்றார். தாயாருக்குக் கொடுத்த வாக்குறுதி தவறாமல், இங்கிலாந்தில் மூன்றாண்டுகள் படித்து 'பாரிஸ்டர்' பட்டம் பெற்று 1891-ல் தாயகம் திரும் பினார். பம்பாய் உயர்நீதிமன்றத்தில் சிறிதுகாலம் வழக்கறிஞர் தொழில் நடத்தினார்.

இச் சமயத்தில் போர்பந்தரில் வாணிகம் நடத்திவந்த தாதா அப்துல்லாக் கம்பெனியார் தென்னாஃபிரிக்காவிலும் வாணிகம் செய்துவந்தனர். அங்கே டர்பன் நீதிமன்றத்தில் அவர்களுக்கு வரவேண்டிய 40,000 பவுனுக்காக ஒரு வழக்கு நடந்துகொண்டிருந்தது. அதை நடத்தக் காந்தியடிகளை அவர்கள் அழைத்தனர், அவ் வழைப்பை ஏற்று 1893-ல் தென் னாஃபிரிக்கா சென்றார். தென்னாஃபிரிக்காரில் இவருக்கு வழக் கறிஞர்தொழில் சிறப்பாக நடந்தது; நல்ல வருமானமும் வந்தது.

தென்னாஃபிரிக்காவில் ஏராளமான இந்தியர்கள் இருந் தார்கள். அவர்களில் பெரும்பாலோர் வெள்ளையர்களிடம்

ஒப்பந்தக் கூலிகளாக வேலைபார்த்து வந்தனர். அவர்களையும், மற்ற இந்தியர்களையும் அங்கிருந்த வெள்ளையரும் வெள்ளையர் அரசாங்கமும் மிகவும் கொடுமையாகவும் இழிவாகவும் நடத்தி வந்தனர். இந்த அநீதியைப் போக்கக் காந்தியடிகள் உறுதி கொண்டார். தென்னாஃபிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கெல்லாம் பொதுவாக 'நேட்டால் இந்தியர் காங்கிரஸ்' என்ற சங்கத்தை நிறுவினார். இதன் சார்பாக, இந்தியர்களுக்கு எதிரான சட்டங்களை எல்லாம் எதிர்த்துச் சுமார் 21 ஆண்டுகள் இடைவிடாமல் போராட்டம் நடத்தினார். அரசாங்கத்தை எதிர்த்துச் 'சத்தியாக்கிரகம்' என்னும் புதியமுறை இயக்கத்தைக் காந்தியடிகள் அங்குத்தான் முதன்முதலாகக் கையாண்டார். அன்பை அடிப்படையாகக்கொண்டு, பகைவரையும் நேசித்து, வன்முறைகளில் ஈடுபடாமல் கொடுமைகளை அகற்ற உழைப்பதே சத்தியாக்கிரகத்தின் அடிப்படையாகும். இவரைத் தென்னாஃபிரிக்க அரசாங்கம் பலமுறை கைதுசெய்தது. எனினும் இவர் சிறிதும் மனந்தளராமல் தொடர்ந்து போராட்டத்தை நடத்தினார். இறுதியில் அரசாங்கம் பணிந்து, இந்தியர்களுக்கு எதிரான சட்டங்களை நீக்கியது.

தென்னாஃபிரிக்காவில் தாம் கையாண்டு வெற்றிகண்ட சத்தியாக்கிரகப் போராட்டமுறையைத் தாயகத்திலும் கையாண்டு இந்தியாவின் விடுதலைக்குப் போராடக் காந்தியடிகள் தீர்மானித்தார். அதனால் அவர் 1915 ஜனவரி மாதம் தென்னாஃபிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பினார். அப்பொழுது, இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சிப் போராட்டம் நடத்திவந்தது. கோபாலகிருஷ்ண கோகலே போன்ற தலைவர்களின் வேண்டுகோளின்படி, காந்தியடிகள் காங்கிரசில் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தில் இறங்கினார். நாட்டின் நிலைமையை அறிந்துகொள்ள நாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்து பொதுமக்களுடன் பழகினார். இந்தியாவின் அடிமைத் தளையை நீக்குவதற்கு மிகவும் கடினமான பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்குமெனக் கண்டார். அதற்குச் சிறிதும் தந்நலம் கருதாமல் பொதுநலத்திற்காகத் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்யக்கூடிய தொண்டர்களைத் தயார் செய்யவேண்டுமெனத் தீர்மானித்தார். அதற்கென 1915 மே 25ஆம் நாள் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார்; ஏழைமக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தக் கதர் இயக்கம் முதலிய ஆக்கப்பணிகளைத் தொடங்கினார். தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார்; கிராமக் கைத்தொழில்களுக்குப் புத்துயிர் அளித்து அவற்றை முன்னேறச் செய்தார்;

தியாக உணர்ச்சி முதலிய அரிய பண்புகள் மேலோங்கச் செய்தார். இவருடைய அரிய சேவைகளைக் கண்ட மக்கள் இவரை 'மகாத்மா' என்று போற்றலாயினர்.

ஆங்கிலேயர் 1919ஆம் ஆண்டில் இந்தியர்களை மேலும் அடக்கி ஆளப் பல சட்டங்களைக் கொண்டுவந்தனர். இதை எதிர்த்து நாடு முழுதும் பெருங் கிளர்ச்சியைக் காந்தியடிகள் தொடங்கினர். ஆங்கில அரசினர் கடும் அடக்குமுறையைக் கையாண்டார்கள். ஜாலியன்வாலா பாக்கில் போலீசையும் படையையும் ஏவிப் பல மக்களைக் கொன்று குவித்தனர். இதனால் ஆங்கிலேயரின் நேர்மைக் குணத்தில் காந்தியடிகள் நம்பிக்கை இழந்தார். ஆங்கில அரசுடன் ஒத்துழைக்காமலிருக்க 1920 செப்டம்பர் மாதம் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினர். ஆனால், எழுச்சிகொண்ட மக்கள் சில இடங்களில் வன்முறைச் செயல்களில் இறங்கினமையால், இவர் இவ் வியக்கத்தை நிறுத்த நேர்ந்தது. வன்செயல்களுக்காக வருந்தி இவர் ஐந்து நாள்கள் உண்ணுவிரதம் இருந்தார். 1922 பிப்ரவரியில் அரசாங்கம் இவரைக் கைதுசெய்து ஆறுண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. எரவாடாச் சிறையில் இருந்தபோது காந்தியடிகளுக்குக் கடுமையான வயிற்றுநோய் கண்டது. அதனால் இவர் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்.

முழுதும் சுகமடைவதற்குள் 1924 செப்டம்பரில் நாட்டின் பல இடங்களில் இந்து-முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள் மூண்டன. அவற்றை நிறுத்துவதற்காகக் காந்தியடிகள் அவ் வாண்டு செப்டம்பர் 24-ல் தில்லியில் 21 நாள் உண்ணுநோன்பு இருந்தார். 1932ஆம் ஆண்டில் அரிசனமக்களை இந்து சமூகத்தினின்றும் பிரித்து, தேர்தலில் தனித் தொகுதியாக்க அரசு முயன்றது. இதை எதிர்த்து இவர் மீண்டும் உண்ணுவிரதம் தொடங்கினர். அரசு தன் திட்டத்தைக் கைவிடவே உண்ணுவிரதத்தை நிறுத்தினர். இதற்கிடையில் சைமன்குழுப் புறக்கணிப்பு (1927), உப்புச் சத்தியாக்கிரகம் (1930) போன்ற இயக்கங்களை நடத்தினர். இலண்டனில் நடந்த வட்டமேசை மாநாட்டிலும் (1931) கலந்து கொண்டார்.

இரண்டாம் உலகப்போர் நடந்தபோது (1939—45) இந்தியச் சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது. 1942 ஆகஸ்டு 8-ல் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கினர். இதனால் காந்தியடிகளையும், மற்றத் தலைவர்களையும் அரசாங்கம் சிறையிலடைத்தது. இவருடைய

மனைவி கஸ்தூரிபா 1944 பிப்ரவரி 22–ல் சிறையிலேயே காலமானார். 1945-ல் காந்தியடிகளும் மற்றத் தலைவர்களும் விடுதலையானார்கள். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, பிரிட்டனில் நடந்த தேர்தலில் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதை ஆதரிக்கும் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. இதன் பயனாக 1947 ஆகஸ்டு 15-ல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அப்பொழுது பாகிஸ்தான் பிரிவினை காரணமாக இந்து-முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன. முஸ்லிம்களிடம் அன்புடன் இருக்க வேண்டுமென்று காந்தியடிகள் போதித்தது இந்துக்களில் சிலருக்குக் கோபமூட்டியது. புதுதில்லியில் 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் நாளன்று மாலையில் காந்தி யடிகள் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்துகொண்டிருந்த போது, 'கோட்ஸே' என்பவன் துப்பாக்கியால் காந்தியடிகளின் மார்பில் சுட்டான். கூப்பிய கைகளுடன் 'ராம் ராம்' என்று ஆண்டவன் பெயரை உச்சரித்தவாறே மகாத்மா மண்ணில் சாய்ந்து உயிர் நீத்தார். சீவகாருண்யமே வடிவாக, சத்தியமே குறியாக, சாந்தமே நெறியாக, ஏழைகளின் துயர் துடைப்பதே தொண்டாக வாழ்ந்த காந்திமகான் மறைந்தார். இவருடைய மரணத்தைக் கேட்டு உலகமே கண்ணீர் வடித்தது.

வரலாற்றுக்கு எட்டாத காலம் முதல் பாரதத்தில் நிலவி வரும் ஆன்மீக முயற்சிகளின் ஒரு தோற்றமே காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு. இவருடைய செயல்கள் எல்லாம் இவருக்குக் கடவுளைக் காணும் முயற்சிகளாகவும், பிறருக்குக் கடவுளை நினைப் பூட்டும் நல்லொழுக்கங்களாகவும் அமைந்தனவாகும். அகிம்சை, சத்தியம் இவ் விரண்டும் இவருடைய வாழ்க்கையின் வாயிலாக உலக மக்களுக்கு விளக்கம் பெற்றுள்ளன. காந்தியடிகள் சமுதா யத்தில் ஒருவராகவே இருந்துகொண்டு, சாந்தம் கலையாமல் சத்தியத்தைக் கடைப்பிடித்துக் கடவுளைக் காண முயன்றார். அரசியல் போராட்டத்திலும் சாந்தமும், சத்தியமும் தவறாமல் மிக உயர்ந்த ஆன்மீகத் துணிவைப் புகுத்தி வெற்றி கண்டவர் உலக வரலாற்றில் காந்தியடிகள் ஒருவர்தாம். இந்தியாவின் வரலாற் றில் 1921 முதல் 1948 வரையுள்ள காலத்தைக் 'காந்தி சகாப்தம்' என்பது முற்றிலும் பொருந்தும்.

ஜவகர்லால் நேரு (1889—1964)

இருபதாம் நூற்றாண்டின் உலகப் பெருந் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்படுபவர் ஜவகர்லால் நேரு. இவர் இந்தியா வின் விடுதலைப் போராட்டத்தின்போது காந்தியடிகளின்

உத்தமத் தளபதியாக இருந்ததோடு, நாட்டின் விடுதலையைப் பெற்று, நாட்டை ஒரு சீரிய மக்களாட்சி நாடாக்கி, பதினெட்டு ஆண்டுக் காலம் அதன் முதல் பிரதமராக விளங்கினார்.

நேரு 1889 நவம்பர் 14-ல் ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் மோதிலால் நேரு புகழ்பெற்ற வழக்கறிஞராகவும், சிறந்த தேசபக்தராகவும் விளங்கியவர். இவர் அரசியலில் ஈடுபடுவதற்கு இவருடைய தந்தையே வழிகாட்டி. பதினைந்து வயது வரையில் ஜவகர் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே தனி ஆசிரியர்களிடம் கல்வி கற்றுவந்தார். ஆங்கில இலக்கியங்களை ஆர்வமுடன் கற்றார்; இந்தி, சமஸ்கிருதம், இலத்தீன் ஆகிய மொழிகளையும் ஓரளவு கற்றுக்கொண்டார்.

மோதிலால் நேரு தம் குடும்பத்துடன் 1905ஆம் ஆண்டில் ஐரோப்பாவுக்குச் சென்றார். இங்கிலாந்தில் பிரபுக்கள் படிக்கும் ஹரோ பள்ளியில் ஜவகரைச் சேர்த்துவிட்டுத் திரும்பினார். அங்கு ஜவகர் ஈராண்டுகள் படித்தார். பின்னர், புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டிரினிட்டிக் கல்லூரியில் சேர்ந்து மூன்றாண்டுகள் படித்துப் பட்டம் பெற்றார். மேலும், இரண்டாண்டுகள் சட்டம் படித்தார். 1912ஆம் ஆண்டில் இந்தியா திரும்பினார். கேம்பிரிட்ஜில் படிக்கும்போதே, இந்தியாவின் அரசியல் விடுதலையைப்பற்றிச் சிந்திக்கலானார். விபின சந்திர பால், லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்ண கோகலே போன்ற இந்தியத் தலைவர்கள் இங்கிலாந்திற்கு வந்தபோது அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டார். அதனால் இவர் உள்ளத்தில் விடுதலைவேட்கை ஊற்றெடுத்தது. அப்போது, இலண்டனில் பயின்றுவந்த மாணவர்களுக்குள் இந்திய விடுதலைக்கு எல்லா முறைகளையும் கையாள வேண்டுமென்ற தீவிரக் குழு ஒன்று செயற்பட்டு வந்தது. அக் குழுவினரோடு நேருவுக்குத் தொடர்பு ஏற்பட்டது.

தாயகம் திரும்பிய ஜவகர் தந்தையுடன் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். இத் தொழிலில் விரைவில் முன்னுக்கு வரக்கூடிய ஆர்வமும் அறிவாற்றலும் அவரிடம் இருந்தது. ஆனால், தொழிலில் வெற்றி பெறுவதிலும், பொருள் ஈட்டுவதிலும் அவர் மனம் செல்லவில்லை. நாட்டின் அரசியல் சிக்கல்களில் அதிகக் கவனம் செலுத்தலானார். முதல் உலகப்போர், இவருக்கு உலக விவகாரங்களில் ஆர்வத்தைத் தூண்டியது. பெசன்ட் அம்மையார், லோகமான்ய பால கங்காதர திலகர் இருவரும் தொடங்கிய உள்நாட்டுச் சுயஆட்சிச் சங்கங்களில் (Home

Rule Leagues) சேர்ந்து பாடுபட்டார். அக் காலத்தில் இவருடைய தந்தையாரும் அரசியல் இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். தொடக்கத்தில் தந்தையாரைப் போலவே, இவரும் மிதவாதியாகவே இருந்தார். 1919ஆம் ஆண்டில் காந்தியடிகள் ரௌலட் சட்டத்திற்கெதிராகச் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்கினர். இவ் வியக்கத்தில் சேர்ந்து தாமும் சிறைசெல்ல ஜவகர் விரும்பினர். ஆனல், தந்தை மோதிலால் இதை எதிர்த்தார். காந்தியடிகளுக்கு இதுபற்றி எழுதினர். காந்தியடிகள் நேரில் வந்து இருவருடனும் கலந்து பேசி, ஜவகரைச் சிறிது காலம் பொறுமையுடன் இருக்குமாறு சொல்லிச் சென்றார். ரௌலட் சத்தியாக்கிரகம் நின்றதும் தந்தைக்கும் மகனுக்குமிடையே கருத்துவேற்றுமை மறைந்தது.

பஞ்சாபில் ஜாலியன்வாலா பாக்கில் பயங்கரப் படுகொலைகளும், பிற இடங்களில் கொடுமைகளும் நடந்தன. இவற்றைக் கண்டு மோதிலால் நேரு மனங்கொதித்தார். அவரும், வங்கத் தலைவர் சித்தரஞ்சன தாசும், ஜவகரும் காந்தியடிகளுக்கு உறு துணையாக நின்றனர். அரசினரால் நியமிக்கப்பட்ட ஹன்டர் குழுவிற்குப் போட்டியாக விசாரணைக் குழு ஒன்றைக் காங்கிரஸ் நிறுவியது இக் குழுவில் இம் மூவரும் சேர்ந்து அறிக்கை ஒன்றை அளித்தார்கள்.

1920ஆம் ஆண்டில் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினர். இதிலிருந்து இந்தியாவில் 'காந்தியுகம்' பிறந்தது. அவரோடு ஜவகர், சர்தார் படேல், இராசேந்திர பிரசாத், ராஜாஜி ஆகிய நால்வரும் சேர்ந்து பாரத விடுதலைப் போரின் வீரர்களாகத் திகழ்ந்தனர். இத் தலைவர்கள் அனைவரிலும் ஜவகரையே ஆங்கில அரசினர் தமது தீவிர எதிரியாகக் கருதினர். அதனல் அதிகக் காலம் அவரைச் சிறையிலிட்டு வைத்தனர்.

இப் போராட்டக் காலத்தில் ஜவகர் துடிதுடிப்பும் சுறு சுறுப்பும் மிக்க இளைஞராக இருந்தார். தீவிர சிந்தனைகளும், உணர்ச்சிகளும் இவருக்கு அளவுகடந்து இருந்தன. காந்தியடிகளின் பொறுமையும், நிதானமும் இவருக்கு இல்லை. பேசும் பொழுதும் சொற்கள் ஒன்றன்பின் ஒன்ருகக் கொதிப்புடன் பீரிட்டெழும். மூடத்தனத்தையும், ஆற்றலின்மையையும் கண்டு மனங் குமுறுவார். இளமையும் தேசபக்தியும் கலந்து ஓர் உருவெடுத்ததுபோல் ஒளிர்வார். நாட்டின் வருங்காலக் குறிக்கோள்கள்பற்றி இவருக்கு அடிக்கடி ஐயங்கள் தோன்றின. அப்

பொழுதெல்லாம் காந்தியடிகள் இவருக்குத் தக்க சமாதானம் கூறி, இவரைச் சாந்தப்படுத்தி வந்தார்.

காந்தியடிகள் தொடங்கிய எல்லாப் போராட்டங்களிலும் ஜவகர் முன்னணியில் கலந்துகொண்டார். இவர் மொத்தம் ஒன்பது முறை சிறைசென்றார். சிறை வாழ்வின்போது, ஓயாது படித்தும், சிந்தித்தும் வந்தார். 1930 முதல் 1933 வரை தம் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களின் வாயிலாக 'உலக வரலாற்றின் கண்ணோட்டங்கள்' (Glimpses of the World History) என்ற நூலை எழுதினார். ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் வரலாறுகளும், நாகரிகம், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலியவற்றின் வளர்ச்சிகளும் இந் நூலில் எளிய இனிய முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. இளைஞரின் பொதுஅறிவு வளர்ச்சிக்கு இன்றும் உதவும் சிறந்த நூல் இது. ஜவகர் தமது சுயசரிதையையும் எழுதினார். இதில் இந்தியாவின் அரசியல் வரலாறு இடம் பெற்றுள்ளது. 1942 முதல் 1945 வரையில் அகமத் நகர்க் கோட்டையில் சிறையிருந்தபோது, இரண்டாண்டுகள் படித்து இந்திய வரலாற்றை (Discovrery of India) நூல் உருவில் எழுதினார். இம் மூன்று நூல்களும் சிறந்த ஆங்கில இலக்கியங்களாக மதிக்கப்படுகின்றன. இவை எல்லா இந்திய மொழிகளிலும், பல அயல்நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஜவகர் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டபோது, அவருடைய குடும்பத்தினர் எல்லோரும் அதில் சேர்ந்தனர்; பல தியாகங்களைச் செய்தனர். தந்தை மோதிலால் நேரு தம் ஆடம்பர வாழ்வைத் துறந்து, கதர் அணிந்து சிறைசென்றார். 1929-ல் சுயராஜ்யக் கட்சியினருடன் காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகத்தில் மோதிலால் நேரு கலந்துகொண்டார். அவர் உடல்நலம் குன்றி 1932-ல் உயிர் துறந்தார். ஜவகரின் மனைவி கமலா நேரு உடல் நலம் குன்றியிருந்தும் மனந்தளராமல், சத்தியாக்கிரகத்தில் இறங்கிச் சிறைபுகுந்தார். இறுதியில் உடல் மிகவும் நலிந்து, சிகிச்சைக்காக சுவிட்சர்லாந்து சென்று அங்கு 1937-ல் காலமானார். ஜவகரின் இரு தங்கைமாரும், மகள் இந்திராவும் இவரைப் பின்பற்றித் தேசத்தொண்டு செய்து சிறைசென்றனர்.

'நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதிலேயே முதலில் கவனம் செலுத்த வேண்டும். சுதந்திரம் பெற்ற பிறகே அயல்நாட்டுக் கொள்கைகள், பொருளாதாரச் சீரமைப்பு முதலியவைபற்றிச் சிந்திக்க வேண்டும்' என்று காந்தியடிகள் கருதினார். இக்

கருத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டனர். ஆனால், ஜவகர் இதை ஏற்கவில்லை. 'இந்தியாவின் எதிர்காலம் பிறநாடுகளின் வருங்காலத்துடன் இணைந்தது. இந்தியாவைப் போன்று, அந்நிய ஆதிக்கத்தில் சிக்கி விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுடன் இந்தியா நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டும்' என ஜவகர் கருதினார். இவைபற்றிய தீர்மானங்களை அகில இந்தியக் காங்கிரஸ் குழுக் கூட்டங்களில் கொணர்ந்து நிறைவேற்றினார்.

ஜவகர் 1920 முதல் 1946 வரையிலும் சிறைக்கு வெளியிலிருந்த போதெல்லாம், காங்கிரஸ் செயலாளராகவும், இருமுறை அதன் தலைவராகவும், செயற்குழு உறுப்பினராகவும் இடைவிடாமல் பணியாற்றி வந்தார். அலகாபாத் நகராட்சியின் தலைவராகவும் இரண்டாண்டுகள் இருந்தார். குடியானவர்கள் இயக்கம், தொழிலாளர் இயக்கம், தேசியத் தொண்டர்படை, சுதேச அரசு மக்களின் விடுதலை இயக்கம் போன்ற எல்லா முற்போக்குக் கிளர்ச்சிகளிலும் ஜவகர் ஈடுபட்டு அவற்றுக்கு ஊக்கமளித்தார்.

1945ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் நின்றது. உடனே பிரிட்டனில் பொதுத்தேர்தல் நடந்தது. அதில் தொழிற்கட்சி வெற்றிபெற்று, அதன் தலைவர் அட்லி பிரபு அமைச்சரவை அமைத்தார். இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்க, அட்லி ஒரு தூதுக்குழுவை அனுப்பினார். இக் குழு இந்தியா வந்து, இந்தியத் தலைவர்களுடன் நீண்ட ஆலோசனை செய்து, முடிவில் ஓர் அரசியல் நிருணயசபை (Constituent Assembly) ஏற்படுத்திப் புதிய அரசியலமைப்பை உருவாக்கவும், நாட்டை ஆளுவதற்கு ஒரு தேசிய அரசு ஏற்படுத்தவும் முடிவு செய்தது. அதன்படி, 1946 செப்டம்பர் 1-ல் அரசப் பிரதிநிதியைத் தலைவராகவும் நேருவைத் துணைத்தலைவராகவும் கொண்ட நிருவாகசபை ஒன்று பதவி ஏற்றது. செப்டம்பர் 7-ல் நேரு தமது வானொலிச் சொற்பொழிவில், 'பாரதத்தின் பிரயாணம் தொடங்கிவிட்டது. நெடுங்காலம் உலக வரலாற்றைப் பார்வையிட்டுக்கொண்டும், மற்றவர்களின் உல்லாசத்திற்குக் கருவிகளாக இருந்தும் காலம் கழித்துவிட்டோம். இப்பொழுது சுயமாக இயங்கும் காலம் நம் மக்களுக்குக் கிட்டிவிட்டது. நமது ஆசைக்கேற்ப நம் நாட்டின் வரலாற்றை உருவாக்குவோம்' என்று முழங்கினார்.

தொடக்கத்தில் முஸ்லிம் லீக் அரசியல் நிருணயசபையில் சேரவில்லை; சற்றுத் தாமதித்து நிருவாகசபையில் சேர்ந்தது.

இறுதியில் பாகிஸ்தான் தனியாகப் பிரிக்கப்பட்டு, 1947 ஆகஸ்டு 15ஆம் நாள் சுதந்திர இந்தியா உருவாகியது. அன்று வானொலியில் பேசிய நேரு, 'இரவு 12 மணி அடிக்கும்பொழுது இந்தியா புத்துயிர் பெற்று சுதந்திர நாடாக விழித்தெழும். வரலாற்றில் அபூர்வமாகப் பழைய உருவத்தைத் தவிர்த்துப் புதியதொரு வாழ்வு பெற்று, ஒரு பழைய சகாப்தம் கழியவும், புதியது தொடங்கவும், பல காலம் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த பெரும் மக்கள் சமுதாயம் ஒன்று விடுதலை பெற்றுச் சுதந்திர கீதம் பாடும் பேறும் பெறுகின்றது. இப் புனித நேரத்தில், தாய்நாட்டிற்குத் தொண்டு செய்யவும், உலகத்திற்குப் பணிபுரியவும் நாம் வாக்குறுதி எடுத்துக்கொள்வோம்' என்று கூறினர்.

நாட்டுப் பிரிவினையோடு இந்தியாவின் சோதனை முடியவில்லை. 1948 ஜனவரி 30-ல் மதவெறிகொண்ட இந்து இளைஞன் ஒருவன் தேசத்தந்தை காந்தியடிகளைச் சுட்டுக் கொன்ருன். தாம் பிரதமராக இருந்தும் பாரதத்தின் ஒப்பற்ற தலைவரைக் காக்க முடியாமல் போனது கண்டு நேரு துடித்தார். அதனுல் தாமும், தம் அரசும் வெட்கக்கடலில் மூழ்கியிருப்பதாக அரசியல் நிருணய சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசினர். 'ஓர் ஒளி மறைந்துவிட்டது. நமக்கு வெப்பமளித்து நம் வாழ்க்கைக்கு ஆற்றலும் ஒளியும் வழங்கிய சூரியன் மறைந்து விட்டான். நாம் ஆழ்ந்த இருளில் நடுங்குங் குளிரில் தடுமாறுகிறோம்' என்றுகூறி நேரு தம் துயரத்தைத் தெரிவித்தார்.

காந்தியடிகள் உயிரோடு இருந்தவரை அவருடைய முதல் சீடராக நேரு விளங்கினர். 'எனது அரசியல் வாரிசு' எனக் காந்தியடிகளால் அழைக்கப்பட்ட பெருமையும் நேருவுக்கு உண்டு. இருவரும் வெவ்வேறு குறிக்கோள்கள், எண்ணங்கள், பழக்கங்கள் உடையவர்கள். காந்தியடிகள் காவியணியாத துறவி; மனிதர் அனைவரும் தம் ஆன்ம ஆற்றலை உணர்ந்து, பிறப்பு இறப்பென்னும் கடலைக் கடந்து, வீடுபெற வேண்டுமென்ற பேராவல் கொண்டவர். அதற்குக் கோழைத்தனமும், அடிமைத்தனமும் பெருந்தடைகளாக இருந்தமையால், இந்திய மக்கள் அரசியல் விடுதலை பெற்ற பின்னரே ஆன்மீக வளர்ச்சியைப் பெற முடியும் என்று கருதி, அரசியல் விடுதலைக்காகக் காந்தியடிகள் அரசியலில் ஈடுபட்டார். நேருவோ மனிதனுக்குத் தனது அறிவே வழிகாட்டும் விளக்கு என்ற கொள்கையைக் கொண்டவர். அவருக்கு மதங்களில் நம்பிக்கை இல்லை. எல்லா மக்களும் சுதந்திரமாகவும், சமமாகவும், வறுமை, பிணி

முதலிய தீமைகளை ஒழித்து, செல்வமும் சுகமும் நிறைந்த நல் வாழ்வு வாழ வேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டிருந்தார்.

எனவே, காந்தியடிகளுக்கும், நேருவுக்கும் பல சிக்கல்களில் கருத்துவேற்றுமைகள் அவ்வப்போது எழுந்தன. எனினும், இருவரும் ஒருவரிடம் ஒருவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பும், மரியாதையும், நம்பிக்கையும் இடைவிடாமல் புதிய வலுவோடு வளர்ந்துவந்தன. தமக்குப்பின் பாரதத்தின் தலைமை நேருவுக்குத்தான் என்று காந்தியடிகள் வெளிப்படையாகக் கூறி வந்தார். 1946-ல் நேருவைப் பிரதமராக்கி அதைச் செயலிலும் உறுதிப்படுத்தினர். இந்த அதிசயமான உறவுக்கு ஆதாரம் இருவரின் பெருந்தன்மையும், சத்தியத்திலிருந்து இம்மியும் பிறழக்கூடாதென்ற கொள்கையும், சிறிதும் தந்நலங் கருதாது பொதுமக்களின் நலத்தை நாடுவதே வாழ்க்கையின் பலன் என்ற உறுதியுமாகும். ஆகவே, காந்தியடிகளின் மறைவினல், நேரு தாங்கவொண்ணுத் துயரக்கடலில் மூழ்கியதில் வியப்பொன்று மில்லை. எனினும், எல்லாத் துன்பங்களையும் சகித்துக்கொண்டு, சிக்கல்களைப் போக்கி, ஒரு குடியரசு அரசியலமைப்பை (Constitution) உருவாக்கி, அதை அரசியல் நிருணயசபையில் 1950 ஜனவரி 26-ல் நிறைவேற்றினர்.

நேருவின் தலைமையில் இந்தியா பல துறைகளிலும் முன்னேறியது. கனரகத் தொழில்களும், நீர்ப்பாசன அணைகளும், மின்சார உற்பத்தி நிலையங்களும், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நிறுவப்பட்டன. விஞ்ஞான ஆராய்ச்சியும், கல்வியும், சுகாதாரமும் பெரிதும் வளர்ச்சியடைந்தன. எந்த அரசுக்கும் தலைவணங்காமல், நடுநிலைமைக் கொள்கையை நேரு வகுத்தார். அடிமை நாடுகளின் சுதந்திரத்தை ஆதரித்தார். ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு முழு ஆதரவு நல்கினர். அயல்நாடுகளின் மதிப்பைப் பெற்று உலகத் தலைவர்களின் முன்னணியில் விளங்கினர். 1964 மே 27-ல் தில்லியில் நேரு திடீரென உயிர் நீத்தார். அதுவரை இந்தியாவின் முடிசூடா மன்னராகவும், மக்களுள் மாணிக்கமாகவும் அவர் திகழ்ந்து வந்தார்.

டாக்டர் இராசேந்திர பிரசாத் (1884—1963)

இந்தியா குடியரசாகியதும் அதன் முதல் குடியரசு தலைவராகி 12 ஆண்டுகள் அப் பதவியை வகித்தவர் டாக்டர் இராசேந்திர பிரசாத். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டு காந்தியடிகளின் முதல் சீடராக விளங்கியவர்.

பீகார் மாநிலத்தில் சாரன் மாவட்டத்திலுள்ள ஜீராதேயீ என்னும் ஊரில் 1884ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் நாள் இராசேந்திரர் பிறந்தார். சொந்த ஊரில் உயர்நிலைக் கல்வி பயின்றார். பின் கல்கத்தா சென்று கல்லூரியில் எம். ஏ. பட்டம் பெற்றார். பள்ளியிலும், கல்லூரியிலும் எல்லாத் தேர்வுகளிலுமே இவர் மாநிலத்தில் முதல்வராய்த் தேறினர். ஆங்கிலம், இந்தி இரு மொழிகளிலும் சிறந்த பேச்சுவன்மை பெற்றிருந்த இராசேந்திரர் பாரசீக மொழியையும் சமஸ்கிருதத்தையும் கற்றுப் புலமை பெற்றார். கல்வியில் இவருடைய திறமையைக் கண்ட அரசினர், இவர் இங்கிலாந்து சென்று மேற்படிப்புப் படிக்க உதவிச் சம்பளம் வழங்க முன்வந்தனர். ஆனால், அதை ஏற்க இவர் மறுத்துவிட்டார். ஓராண்டுக் காலம் பணியாற்றிய பின், சட்டம் பயின்று 1911-ல் வழக்கறிஞராகத் தொழில் தொடங்கினர். கல்கத்தா உயர்நீதி மன்றத்திலும், பின்னர்ப் பீகார் தனி மாநிலமானதும் பாட்னாவிலும் இராசேந்திரர் வழக்கறிஞர் தொழிலில் பெரும்புகழ் ஈட்டினர். எனினும், காந்தியடிகளின் அழைப்பிற்கிணங்க மிகுந்த வருமானமும், புகழும் அளித்து வந்த வழக்கறிஞர் தொழிலைத் துறந்து தேசசேவையில் இறங்கினர்.

பீகார் மாநிலத்திற்கு இராசேந்திரர் மகத்தான தொண்டு செய்துள்ளார். பீகார்ப் பல்கலைக்கழகம், பீகார் வித்தியாபீடம், சதாகத் ஆசிரமம் என்னும் தொண்டர்படை இவற்றின் அமைப்பில் இவர் பெரும் பங்கு கொண்டார். பாட்னா நகராட்சித் தலைவராகவும் இராசேந்திரர் சிறிது காலம் பணியாற்றினர். இவர் இந்து மதத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார். கடவுட் பக்தியிலும் சிறந்து விளங்கினர். எனினும் பிற சமயத்தினரைத் தாழ்வாகக் கருதவில்லை. இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக அயராது பாடுபட்டுவந்தார்.

1905ஆம் ஆண்டு வங்காளப் பிரிவினையை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சி நடந்த காலத்திலிருந்து இராசேந்திரர் சுதேசிப் பொருள்களையே பயன்படுத்தி வந்தார். 1906-ல் முதன் முதலாக இவருக்கு இந்திய தேசியக் காங்கிரசுடன் தொடர்பு ஏற்பட்டது. அவ் வாண்டில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டின் தொண்டர்படையில் இவர் பணியாற்றினர். 1911ஆம் ஆண்டில் இவர் காங்கிரசில் உறுப்பினராகப் பதிவு செய்துகொண்டார். அது முதல் இவர் அகில இந்தியக் காங்கிரஸ் குழுவின் உறுப்பினராக இடைவிடாமல் பணியாற்றி வந்தார். காங்கிரசில் இவர் உறுப்பினராவதற்கு முன்னரே,

1910-ல் கோபாலகிருஷ்ண கோகலேயைச் சந்தித்து அவருடன் நெருங்கிய நட்புக்கொள்ளும் வாய்ப்பு இராசேந்திரருக்குக் கிடைத்தது. பின்னர் 1916-ல் இலட்சுமணபுரியில் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது, அங்குக் காந்தியடிகளை இராசேந்திரர் முதன்முதலாகச் சந்தித்தார். பிறகு பீகாரில் சம்பரான் குடிகளின் துயரத்தை நேரில் கண்டறியக் காந்தியடிகள் சென்றிருந்தபோது இராசேந்திரரைச் சந்தித்தார். அன்று முதல் இராசேந்திரர், காந்தியடிகளின் உண்மையான சீடரானார். தமக்கெனச் சொந்தக் கருத்து ஒன்றுமில்லாமல், காந்தியடிகளின் சொல்லையே தம் செயலாகக் கொண்டு, அவருடைய ஆணையை நிறைவேற்றுவதையே தம் கடமையாகக் கொண்டார். காந்தியடிகளுக்குத் தம்மையே அர்ப்பணம் செய்துவிட்டு, புகழும் பொருளும் கருதாமல், ஆக்கப்பணிகளும், தேசத் தொண்டும் செய்வதையே தம் வாழ்வாகக் கொண்டார். சொத்து, சுகம் அனைத்தையும் மக்கள் நலனுக்காகத் தியாகம்செய்தார். காந்தியடிகளுக்கு இவரைப் போன்ற நெருக்கமான தொண்டர் வேறு யாரும் இருந்ததில்லை என்றே சொல்லலாம்.

பம்பாயில் 1934-ல் நடைபெற்ற காங்கிரஸ் பொன்விழாவிற்கு இராசேந்திரர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிகக் குறுகிய காலத்தில், பல இன்னல்களைச் சமாளித்து, பீகாரில் நடந்த காங்கிரஸ் மாநாடுகளுக்கெல்லாம் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றார்.

இராசேந்திரர் மக்களின் துன்பத்தைத் தம் சொந்தத் துன்பமாகக் கருதி அதைத் துடைக்கும் பணியில் விரைந்து ஈடுபட்டார். பீகாரில் பயங்கர நிலநடுக்கத்தினாலும், வெள்ளத்தினாலும் மக்கள் துயரடைந்தபோது அவர்களுக்காக இராசேந்திரர் ஆற்றிய அருந்தொண்டு வரலாற்றுப் புகழ்பெற்றது. 'ராஜன் பாபு ஈடு இணையற்ற மக்கள் தொண்டர். எங்கெங்குச் சமூகத் தொண்டு உண்டோ, எங்கெல்லாம் மக்கள் துயரத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார்களோ அங்கங்கெல்லாம் அவரைக் காணலாம்' என்று இராசேந்திரரைக் காந்தியடிகள் பாராட்டியிருக்கிறார். உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்ட இராசேந்திரர் முதன் முதலாகக் கைதானார். அதன்பின் இருமுறை சிறை சென்றார். தொழிலாளர்களுக்காக இவர் அரும்பாடுபட்டார். பீகாரில் தொழிற்சங்கத்தை நிறுவிய பெருமை இவரையே சாரும்.

1946ஆம் ஆண்டில் தில்லியில் ஜவகர்லால் நேருவின் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைந்தது. அதில்

இராசேந்திரர் உணவு-வேளாண்மைத்துறை அமைச்சராக இருந்தார். 1947 ஆகஸ்டு 15-ல் இந்தியா விடுதலையடைந்த பின்னர், இந்திய அரசியல் நிருணயசபையின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1950-ல் இந்தியா குடியரசானபோது இவரே நாட்டின் முதல் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1952, 1957 பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு இரண்டு முறைகளிலும் இவரே குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, 12 ஆண்டுகள் பதவி வகித்தார். 1962ஆம் ஆண்டில் தம் பதவிக்காலம் முடிந்ததும் தம் சொந்த ஊருக்குத் திரும்பிச்சென்று தாம் நிறுவிய சதாகத் ஆசிரமத்தில் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். வாழ்நாள் முழுதும் நாட்டுக்கும் மக்களுக்கும் நற்றொண் டாற்றி வந்த டாக்டர் இராசேந்திர பிரசாத் 1963ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் நாள் காலமானார்.

25. தற்கால இந்தியாவின் சமூக, பொருளாதார நிலைமைகள்

18, 19ஆம் நூற்றுண்டில் கிராம வாழ்க்கை

ஆங்கிலேயர் இந் நாட்டில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டு வதற்காக அடிக்கடி நடத்திய போர்களினுல் அரசியல் சீர்குலைவு ஏற்பட்டது. எனினும் நாட்டின் சமூக வாழ்க்கை அதனுல் பாதிக்கப்படவில்லை. இந் நாட்டில் பாரம்பரியமாக இருந்து வரும் மரபுகளும், வலுவான ஊராட்சி (Panchayat) அமைப்பு களும் சமுதாயக் கட்டுக்கோப்பைச் சீரழிவிலிருந்து கட்டிக் காத்தன. ஊராட்சி நிலையங்கள் மேலும் ஊக்குவிக்கப்பட்டன. மராத்திய மன்னர்கள் ஊராட்சி நிறுவனங்களின் பயனை நன் குணர்ந்து அவற்றை முழு அளவில் பயன்படுத்திக்கொண் டார்கள். மராத்திய அரசர்களில் மிகக் கொடியவர்கள்கூட ஊராட்சிகளின் அதிகாரத்தில் கைவைக்கத் துணியவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியில் புதிதாக ஏற்பட்ட நீதிமன்றங்களைவிட விரைவாகவும், குறைந்த செலவிலும் ஊராட்சி அவைகள் நீதி வழங்கின.

கிராம வாழ்க்கையில் அதன் பாரம்பரிய எளிமை தொடர்ந்து நீடித்தது. பாம்பாட்டிகளும், ஜாலவித்தைக்காரர்களும், கழைக் கூத்தாடிகளும் மறையாமலிருந்தார்கள். கோயில் திருவிழாக் களின்போது இவர்கள் தங்கள் சாதனைகளினுல் மக்களை மகிழ் வித்தார்கள். விருந்தோம்பும் பண்பைக் கிராம மக்கள் தொடர்ந்து காத்துப் போற்றி வந்தார்கள். கோயில்களிலும் மடங்களிலும் பிராமணர்கள் சமஸ்கிருதக் கல்வியைப் பயின் ருர்கள். கிராமப் பள்ளிகள் குழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வி யளித்துவந்தன. கைவினைஞர்கள் தங்கள் தங்கள் வீடு

களிலேயே தத்தம் தொழில்களில் பயிற்சிபெற்று வந்தார்கள். இந்துச் சமூக வாழ்வைக் கூட்டுக்குடும்ப முறையும், சாதி முறையும் தொடர்ந்து ஒழுங்குபடுத்தி வந்தன. அவ்வப்போது ஏற்பட்ட அரசியல் புயல்களினால் கிராம மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற நேர்ந்தபோதிலும், பொதுவாக வேளாண்மைத் தொழில் சீராகவே நடைபெற்று வந்தது.

வடக்கும் தெற்கும்: வடநாட்டுச் செல்வாக்கின் காரணமாகத் தென்னாட்டு மக்கள் தங்கள் சமூக வாழ்வில் சில வடநாட்டுக் களியாட்டங்களைக் கையாளலானார்கள். வடஇந்தியாவில் பிரபலமாக இருந்த வசந்தவிழா தென்னிந்தியாவிலும் கொண்டாடப்பட்டது. அவ் விழாவின்போது, விளையாட்டு விழாக்களும், கேளிக்கைகளும், வாணவேடிக்கைகளும் சிறப்பாக நடந்தன. வீடுகளும், வீதிகளும் அலங்காரத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன. இசையும், நடனமும் தொடர யானை ஊர்வலங்கள் நடந்தன. மக்கள் ஒருவர்மீது ஒருவர் சாயநீரைத் தெளித்தும், வண்ணப் பொடிகளைத் தூவியும் மகிழ்ந்தனர்.

முகலாய மன்னர்களின் அரசவைப் பழக்கவழக்கங்கள் மதுரை போன்ற தென்னிந்திய அரசவைகளிலும் பின்பற்றப்பட்டன. அரசியல் உறவுமொழியாகப் பாரசீகம் பயன்படுத்தப்பட்டது. உயர்குடியினரும் இம் மொழியையே நாகரிக வாழ்வுக்குரிய மொழியாகக் கொண்டனர். தில்லியில் வழங்கிய ஆடை அணிகள் நாடெங்கும் பரவின. முகலாயர்களைக் கடுமையாக வெறுத்த மராத்தியர்கள்கூட முகலாயரின் ஆடைகளைக் கைக்கொண்டனர்.

ஐரோப்பியச் செல்வாக்கு: ஆங்கிலேயர் தொடர்பினாலும் இந்தியரின் சமூக வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஐரோப்பியக் கேளிக்கைகள், விளையாட்டுகள், குதிரையேற்றம், விருந்துகள், வாணவேடிக்கைகள் போன்றவற்றை பேஷ்வாக்கள் பெருவிருப்புடன் ஏற்றுக்கொண்டார்கள். பூனாவில் வாழ்ந்த ஐரோப்பியர்களிடையே மருத்துவர்களும், நில அளவையாளர்களும் (Surveyors), ஓவியர்களும் செல்வாக்குடன் இருந்தனர். ஆங்கில மருத்துவர்கள் இந்தியர்களுக்கும் மருத்துவச் சிகிச்சைகள் அளித்தார்கள். அம்மைகுத்தும் முறையை அவர்கள்தாம் முதன்முதலாக இந்தியாவில் புகுத்தினார்கள். வேல்ஸ், டேனியல் போன்ற ஓவியர்கள் பூனாவிலிருந்த முக்கியமான இந்தியப் பிரமுகர்களின் உருவப் படங்களை வரைந்தார்கள். அவர்களின் மேற்பார்வையில் பேஷ்வாவின் அரண்

மனையில் ஓவியப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. பூமியின் கோளங்கள், சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், தொலை நோக்கிகள், வெட்டுக்கருவிகள் முதலிய ஐரோப்பியரின் புதிய சாதனங்களை மாலட்டும் (Malet) அவருடைய நண்பர்களும் பேஷ்வாவுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். வானவியல், நிலவியல் போன்ற பாடங்களைப் பேஷ்வாவிற்கு ஃபிண்ட்லே (Findley) கற்பித்து அவரிடமிருந்து மிகுந்த பொருள்களைப் பரிசாகப் பெற்றார், அரண்மனையில் நடந்த தசரா, விநாயகர் விழா, ஹோலி போன்ற விழாக்களில் மாலட் தாராளமாகக் கலந்துகொண்டார். பூனாவிலிருந்த மற்றப் பிரமுகர்கள் வீட்டில் நடந்த விழாக்களிலும் அவர்களின் அழைப்பிற்கிணங்க மாலட் கலந்துகொண்டார். அவர் காம்பேயில் இருந்தபோது அரிய பாரசீக ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்தார். இவற்றைப் பின்னர் அவர் இலண்டனிலிருக்கும் ராயல் ஆசியச் சங்கத்திற்கு (Royal Asiatic Society of London) வழங்கினார். சவாய் மன்னர் ஜெயசிங் வானவியலில் ஆர்வமுடையவர். அவர் வானவியலில் தமக்கு ஆலோசனை கூறுவதற்காகப் போர்த்துகலிலிருந்து ஒரு வானவியலறிஞரை வரவழைத்துக் கொண்டார். ஜான்சி அரசராகிய இரகுநாத ஹரி நவால்கரும் நவீன ஐரோப்பியக் கல்வியில் ஆர்வங்கொண்டு, ஆங்கில நூல்களடங்கிய நூலகம் ஒன்றை நிறுவினார். தமது தலைநகரில் விஞ்ஞானப் பரிசோதனைக் கூடம் ஒன்றையும் ஏற்படுத்தினார். தஞ்சை மன்னர் சரபோஜி, சுவார்ட்ஸ் (Schwartz) என்ற டேனியப் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்று, பல அரிய நூல்களையும், ஓவியங்களையும், ஏட்டுச் சுவடிகளையும் சேகரித்துச் சரசுவதி மகால் நூலகம் என்னும் உலகப் புகழ்பெற்ற நூலகத்தை நிறுவினார்.

ஆங்கிலத் தொழிற்சாலை வாழ்க்கை : இந்தியாவில் பல இடங்களில் ஆங்கிலேயர் தொழிற்சாலைகளை (Factory) ஏற்படுத்தியிருந்தனர். 1676 முதற்கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியர்கள், முதலில் பயிற்சியாளர்களாக இருந்து, பின்னர்ப் படிப்படியாகக் குமாஸ்தாக்களாகவும், அதிகாரிகளாகவும், வணிகர்களாகவும் உயர்ந்தார்கள். முதலில் அவர்கள் திருமணம் செய்துகொள்ளவில்லை. பெரும்பாலோர் கல்லூரி விடுதிகளில் வாழும் மாணவர்களைப்போல் கடும் கட்டுதிட்டங்களுக்குட்பட்டு வாழ்ந்து வந்தார்கள். ஆளுநர்கள் அதிகாரதோரணையுடன் நடந்துகொண்டார்கள். அவர்கள் கொடிகள், கொம்பு முழக்கம், மரியாதை வேட்டு முழக்கம் இவற்றுடன்தாம் வெளியில் சென்றார்கள். நாளடைவில், ஐரோப்பியர் உட்பட எல்லா மக்கள்மீதும் மாநிலத் தலைநகர்கள் அதிகாரம் செலுத்த

லாயின. ஐரோப்பியர்கள், கம்பெனியின் உரிமம் (Licence) பெற்று வாணிகம் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். இதனால் சில சமயம் குழப்பங்களும், ஒழுக்கச் சீர்கேடுகளும் தோன்றின. சென்னை ஜார்ஜ் கோட்டையின் ஆளுநராக இருந்த சர் எட்வர்டு விண்டர் (Sir Edward Winter) என்பவருக்குப் பதிலாக, ஃபாக்ஸ் கிராஃப்ட் (Foxcroft) என்பவரை ஆளுநராகக் கம்பெனி நியமித்தது. ஆனால், அவரிடம் பொறுப்பை ஒப்படைக்க விண்டர் மறுத்ததுடன், பொறுப்பேற்க வந்த ஃபாக்ஸ்கிராஃப்டைக் கைது செய்து சிறையிலடைத்தார். அவரை ஒடுக்க ஐந்து கப்பல்களில் படைகளைக் கம்பெனி அனுப்பியபோதுதான், விண்டர் பணிந்து, ஃபாக்ஸ்கிராஃப்டை விடுவித்து அவரிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.

தொழிற்சாலை நகரங்கள் வெறும் தொழிற்சாலை நகரங்களாக மட்டும் நீடிக்கவில்லை. பம்பாயில் ஜெரால்டு ஆங்கியர் (Gerald Aungier) என்பவர் தம் பொறுப்பிலிருந்த தொழிற்சாலையை விரிவுபடுத்தி, அங்கு ஒரு மருத்துவமனை, மாதாகோயில், சிறைச்சாலை, நீதிமன்றம் ஆகியவற்றையும் நிறுவினர். 1688-ல் அஞ்சலகம் ஒன்றையும் ஏற்படுத்தினர். அதே சமயத்தில், சென்னையில் மாநகராட்சிமன்றமும், உயர்நீதிமன்றமும் ஏற்படுத்தப்பட்டன. 1726 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் மேயர் நீதிமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டது.

தொழிற்சாலை ஊழியர்களிடையே சூதாட்டமும், குடிப்பழக்கமும், சச்சரவைத் தீர்க்கப் போட்டிச் சண்டைகளும் (Duelling) மிகுதியாக நிலவின. மதுப்புட்டியும், துப்பாக்கியும் ஆங்கிலேயர் முகாம் வாழ்க்கையின் சின்னங்களாக விளங்கின. கம்பெனியின் நிருவாக இயக்குநர்கள், ஊழியர்களின் இப் பழக்கங்களை வன்மையாகக் கண்டித்துக் கடிதங்கள் எழுதினர்கள். மரியாதைக்காக வேட்டுகள் போடுவதால் வெடிமருந்து பெருமளவில் வீணாக்கப்படுவதையும் அவர்கள் கண்டித்தார்கள். கம்பெனி ஊழியர்களின் ஊதியங்கள் மிகக் குறைவாகவே இருந்தன. எனவே, அவர்கள் தனியாக வாணிகம் நடத்துவதை யாரும் தடுக்கவில்லை. பெரும்பாலான ஊழியர்கள், கம்பெனியின் அலுவலர் என்ற முறையிலும், தனி வணிகர் என்ற முறையிலும் இருவிதங்களில் செயற்பட்டு வந்தனர். ஊழியர் என்ற முறையில் இவர்கள் கம்பெனியிலிருந்து மிளகுபோன்ற பொருள்களைக் குறைந்த விலையில் வாங்குவார்கள். அதே பொருள்களை வணிகர் என்ற முறையில் கம்பெனிக்கு இலாபத்துடன் விற்பார்கள். உயர் அதிகாரிகள் பலர், சட்டத்திற்குட்பட்டே கம்பெனியை மோசடி

செய்வதற்கு உடந்தையாக இருந்தார்கள். இதன்மூலம் அவர்கள் தங்கள் ஊதியத்தைவிடப் பல மடங்கு வருவாய் பெற்ருர்கள். இத்தகைய ஒழுங்கற்ற செயல்களை நிறுத்துவதற்கு முதன் முதலாக நடவடிக்கை மேற்கொண்டவர் காரன்வாலிஸ் பிரபு ஆவார். கம்பெனியில் பணியாற்றிவிட்டு இங்கிலாந்து திரும்பும் ஆங்கிலோ-இந்தியர்களின் சொந்தச் சொத்துகள் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென பிட் இந்தியச் சட்டத்தில் ஒரு விதி இருந்தது. ஆனால், கம்பெனியிலிருந்த செல்வாக்கு மிக்கவர்களின் முயற்சியினால், இந்த விதி அச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டது.

அடிமைத் தொழிலாளர்கள் பெருமளவில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். 1764ஆம் ஆண்டுவரையிலும் கம்பெனி அடிமை வாணிகம் நடத்திவந்தது. 1789 வரை அடிமைகள் ஏற்றுமதி தடைசெய்யப்படவில்லை. கிழக்கு ஆஃப்பிரிக்கா, மடகாஸ்கர் போன்ற இடங்களிலிருந்து அடிமைகளைப் போர்த்து கீசியரும், அராபிய வணிகர்களும் கொண்டுவந்து, துறைமுக நகரங்களில் அவர்களை ஏலத்தில் விற்ருர்கள். சிறுசிறு நூலகங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டன. நல்ல அரசாங் கத்தின் தத்துவங்களைத் தமது ஊழியர்களுக்குக் கம்பெனி இயக்குநர்கள் போதித்து வந்தார்கள். ஆளுநருக்கும் அவ ருடைய நிருவாக சபைக்குமிடையே உறவுநிலை வரையறுக்கப் பட்டது. சிக்கல்களுக்குப் பெரும்பான்மை அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. மாற்றுக் கருத்துத் தெரிவிப்ப தற்கும் உறுப்பினர்களுக்கு உரிமை வழங்கப்பட்டது. கம்பெனி யினர் இந்தியாவைப்பற்றிய செய்திகளை அறிவதற்கு ஆங்காங்கே இருந்த தமது அதிகாரிகளையே நம்பி இருந்தார்கள். இவ் வதி காரிகள் தங்கள் தந்நலங்கருதி, பெரும்பாலும் உண்மைக்கு மாருன செய்திகளையே கம்பெனி நிருவாகிகளுக்குத் தெரிவித்து வந்தார்கள். சென்னையில் விண்டரும், பம்பாயில் கீக்வின்னும் (Kiegwin) கலகம் செய்ததுபோல், எந்த நேரம் எங்குக் கலவரம் மூளுமோ என்று பீதியடைந்த நிலையிலேயே கம்பெனி நிருவாகி கள் இருந்துவந்தார்கள். எனவே, யாராவது கீழ்ப்படிய மறுப்பதாகவும், விசுவாசமின்றி நடப்பதாகவும் ஐயுற்ருல், அவர் களை ஈவிரக்கமின்றிக் கடுமையாய்த் தண்டித்தார்கள். உத்தர விற்குக் கீழ்ப்படிய மறுத்த சென்னை ஜார்ஜ் கோட்டை ஆளு நரையும், அவரது நிருவாக சபையின் உறுப்பினர்கள் சிலரை யும் 1721ஆம் ஆண்டில் பதவியிலிருந்து விலக்கிய நிகழ்ச்சி இதற்குத் தக்க சான்ருகும்,

இந்தியாவில் ஐரோப்பியர்கள் : இந்தியாவில் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள்; பல்வேறு சமுதாய நிலையைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பெரும்பாலோர் தங்கள் தாய்நாட்டில், சமுதாயத்தில் மேம்பட்ட நிலையை அடைய முடியாமல், வெளிநாடு சென்றுவது செல்வந்திரட்டி சமுதாய உயர் நிலையைப் பெறலாம் என்ற நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்தவர்கள். எனவே, அவர்கள் செல்வத்தைப் பெருக்குவதிலேயே குறியாக இருந்தார்கள். இந்தியர்களுடன் சமமாகச் சமூக உறவுகளை அவர்கள் கொள்ளவில்லை. தொழிற்சாலை ஊழியர்கள் இந் நாட்டு மொழிகளை அறிந்து கொள்ளவில்லை. மொழிபெயர்ப்பாளர்கள், வணிகர்கள், அடிமைகள், ஏவலாள்கள், முகலாய ஆளுநர்கள், நவாப்கள் போன்றவர்களுடன் மட்டுமே அவர்கள் தொடர்புகொண்டிருந்தார்கள். இந்தியருடன் ஐரோப்பியர் கொண்டிருந்த தொடர்புகள் எந்த அளவுக்கு வரையறைக்குட்பட்டிருந்தது என்பதற்கு ஃபிரெஞ்சு அதிகாரிகளுடன் ஆனந்தரங்கம் பிள்ளை கொண்டிருந்த உறவு தக்க சான்றாகும். ஃபிரெஞ்சு ஆளுநர் டூப்ளேயிடம் ஆனந்தரங்கம் பிள்ளை மொழிபெயர்ப்பாளராகவும், அவருடைய தலைமைப் பிரதிநிதியாகவும் (Chief Agent) பணியாற்றிவந்தார், இந்த உயர்பதவியின் காரணமாகவே ஆனந்தரங்கம் பிள்ளையை ஃபிரெஞ்சு அதிகாரிகள் ஓரளவுக்கு மதித்துநடந்தார்கள். 'டூப்ளேயுடனும், அவருடைய ஆலோசகர்களுடனும் நான் சுமுகமாகப் பேசுவேன். என்னுடைய ஆலோசனைகளை அவர்கள் செவிமடுப்பதுண்டு. வேறு எந்த இந்தியர்களுக்கும் கிடைக்காத தனிச்சலுகை இது' என்று ஆனந்தரங்கம் பிள்ளை தமது நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், பம்பாயில் நிலைமை வேறாக இருந்தது. பம்பாயில் முதலில் ஐரோப்பியர்கள் வந்தபோது, அவர்கள் ஏழ்மை நிலையிலிருந்தார்கள். அங்கு வேறோர் அரசின்கீழ்ப் பணக்கார வணிகர்கள் செல்வாக்குடன் வாணிகம் நடத்தி வந்தார்கள். அவர்களுடைய போட்டியைச் சமாளித்து ஐரோப்பியர்கள் வாணிகத்தை நடத்த வேண்டியிருந்தது. அதனால் இந்தியர்களின் நல்லெண்ணத்தை அவர்கள் பெருமளவில் எதிர்பார்த்தார்கள். இந்துக்களையும் முஸ்லிம்களையும்விடப் பார்சிகளே முதலில் ஐரோப்பியருடன் நட்புணர்வோடும் பரிவோடும் பழகினார்கள். சூரத்தில் சமூக உறவுகள் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கிருந்து முக்கியமான வாணிகச் சமூகத்தினரான பனியாக்கள் கூடச் சில சமயங்களில் ஐரோப்பியருடன் சமமாக உணவருந்தினார்கள்.

ஆங்கிலேயரும் இந்தியரும் : இந்தியருக்கும், ஆங்கிலேயருக்கு மிடையே எண்ணங்களிலும், பழக்கவழக்கங்களிலும் பெருத்த இடைவெளி இருந்தது. ஆரம்பத்தில் ஆங்கிலேயர் தங்களை ஓரளவு இந்தியமயமாக்கிக் கொண்டார்கள். நிறவேற்றுமை அதிகமாகப் பாராட்டப்படவில்லை. ஆங்கிலப் பெண்கள் குறை வாக இருந்தமையால், ஆங்கிலேயர் இந்தியப் பெண்களை மணந்துகொண்டார்கள். நடனங்கள், யானைச் சண்டை போன்ற இந்தியக் கேளிக்கைகளில் ஆங்கிலேயர் ஆர்வங் காட்டினர். எனினும், விரைவிலேயே ஆங்கிலேயரிடம் ஒருவித உயர்வு மனப்பான்மையும், இனப் பாகுபாட்டுணர்ச்சியும் குடி கொண்டன. முஸ்லிம்களை ஒழுக்கங் கெட்டவர்கள் என்றும், இந்துக்களை மூடப்பழக்கமுள்ளவர்கள் என்றும் ஆங்கிலேயர் கருதலானார்கள். அவர்களுடன் தொடர்புகொள்வதை வெறுக்க லானார்கள். ஆங்கிலேயரைக் குடிகாரரர்கள் என்றும், நாகரிக மற்றவர்கள் என்றும், பண்பு குறைந்தவர்கள் என்றும், அவர் களுடைய மதம் 'பேய் மதம்' என்றும் இந்தியர்கள் கருதினார்கள். 'குணக்கேடர்களும் பாவிகளும் சொர்க்கத்தை அடைய முடி யாது' என்று ஓர் இளம் இந்து நாட்டியக்காரியிடம் சுவார்ட்ஸ் கூறியபோது, அவள் பதிலுக்கு, 'அப்படியானால் ஐரோப்பியர் ஒருவர்கூடச் சொர்க்கத்திற்குச் செல்ல முடியாது' என்று விடை யளித்தாளாம். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் ஆண்களும் பெண்களுமாக 5000 ஐரோப்பியர்களும், அவர்களின் பாதுகாப்புக்காக 20,000 ஐரோப்பியப் படைவீரர்களும் இருந் தார்கள். இவர்களைத் தவிர இந்தியச் சுதேச அரசர்களிடம் சுமார் 2000 ஐரோப்பியர்கள் பணியாற்றிவந்தார்கள்.

காரன்வாலிஸ் மேற்கொண்ட சீர்திருத்தங்களின் விளைவாக, ஐரோப்பியர் இந்தியர்களிடமிருந்து விலகித் தனிமை யடைந்தார்கள். அரசாங்க உயர்பதவிகளில் இந்தியர்களை நியமிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டது. இந்தியாவில் ஐரோப் பியப் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகியது. இதனால், ஐரோப்பியரின் ஒழுக்கம் ஓரளவு சீரடைந்தபோதிலும், இன வேற்றுமை மேலும் அதிகரித்தது. ஒவ்வோர் ஐரோப்பியரும் நவாப் தர்பார் நடத்த விரும்பினார்கள். அதனால் ஒவ்வோர் ஐரோப்பியக் குடியிருப்பும் ஆங்கில தர்பாராக மாற்றப்பட்டது.

வாணிகம், தொழில் : போரினால் குழப்பமும், ஊழல் மிகுந்த நிருவாகமும் நிலவியபோதிலும், ஐரோப்பிய வணிகர்களைக் கவர்கின்ற அளவுக்கு வாணிகமும் தொழிலும் நடைபெற்று வந்தன. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கடலோரப்

பகுதிகளில் வாணிகம் சிறப்பாக நடந்துவந்தது. மேலும் சீனுவுடனும், மலேயாவுடனும் நடந்து வந்த வாணிகத்தைவிட அதிக அளவில் அரபுநாடுகளுடனும் பாரசீக வளைகுடா நாடுகளோடும் நடைபெற்றது. மேற்கிந்தியாவில் சூரத்தும் பம்பாயும் சிறந்த வாணிக மையங்களாக விளங்கின. கச்சாப் பட்டு, பருத்தித் துணிகள், சர்க்கரை போன்ற பொருள்கள் வங்காள விரிகுடாத் துறைமுகங்களிலிருந்து மேனுடுகளுக்கு நேரடியாக அனுப்பப்பட்டன. சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளுக்கும் மலேயாவுக்குமிடையே நடந்துவந்த வாணிகம் பெரும்பாலும் டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்தது. 18ஆம் நூற்றுண்டின் மத்தியில் நிலப்பகுதிகளை வென்றதாலும், ஐரோப்பியக் கம்பெனிகளிடையே ஏற்பட்ட போட்டியினுலும், சீனுவுடன் நடந்த வாணிகம் மிக விரைவாகப் பெருமளவில் பெருகியது. சீனப் பட்டும், சீனுக் கற்கண்டும், ஜாவாவிலிருந்து டச்சுச் சர்க்கரையும் பம்பாய்க்கும், சூரத்துக்கும் வந்தன. வங்காளச் சர்க்கரை, கச்சாப்பட்டு, துணிகள் ஆகியவை மேனுடுகளுக்குக் கப்பலில் சென்றன. இதனுல் வங்காளத்திற்கும் மேற்கு இந்தியாவிற்குமிடையே நடந்துவந்த வாணிகம் குறைந்தது. வங்காளத்திற்கும் சீனுவுக்குமிடையே நேரடி வாணிகம் வளர்ந்தது. முதலில் தங்கம் வெள்ளியும், பின்னர் கஞ்சாவும் வங்காளத்திலிருந்து சீனுவுக்குச் சென்றன. பம்பாயிலிருந்து கச்சாப் பருத்தியும் சீனுவுக்கு அனுப்பப்பட்டன. இவ்விரண்டு வாணிக வழிகளினுலும் டச்சுக்காரர்கள், டேனியர்கள் ஆகியோரின் கடல் வாணிக ஆதிக்கத்தை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வெகுவாகக் குறைத்தது. வங்காளக் கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான கச்சாப்பருத்தி, தக்கணப் பகுதிகளிலிருந்து நிலவழி மூலமாகக் கிடைத்தது. பாரசீக வளைகுடா நாடுகளுடன் நடந்த வாணிகம் மிகவும் இலாபகரமாக இருந்தமையால், பார்சிகள் பெரும் மூலதனத்துடன் அவ் வாணிகத்தில் இறங்கினர். பாஸ்ராவில் 1773—74ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் பிளேகுக்குப் பிறகு, ஆங்கிலேயரின் கம்பளி ஆடைகள், உலோகப் பொருள்கள் ஆகியவற்றுக்கான கிராக்கி குறைந்தது. எனினும், அவற்றை அரபுநாடுகளுக்கும், கிழக்கு ஆஃபிரிக்க நாடுகளுக்கும் அனுப்பி ஐரோப்பியர் ஈடுசெய்து கொண்டனர்.

அவுரித் தொழில் : புகழ்பெற்ற இந்திய நீலச்சாயம் விலை கூடுதலாக இருந்தமையாலும், இதற்குப் பதிலாக வேறொரு சாயத்தைக் குறைந்த விலையில் அமெரிக்கர்கள் கண்டுபிடித்தமை

யாலும், நீலச்சாயம் தயாரிப்பதற்குப் பயன்பட்ட அவுரித்தொழில் குஜராத்தில் வீழ்ச்சியடைந்தது. மேற்கு இந்தியத் தீவுகளில் கரும்பையும், காபியையும் இலாபகரமாகப் பயிரிடலாம் எனக் கண்ட கம்பெனி, 1780ஆம் ஆண்டிலிருந்து, மேற்கு இந்தியத் தீவுத் தோட்டத்தொழில் நிபுணர்களின் உதவியோடு, வங்காளத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் அவுரி பயிரிடத் தொடங்கியது. இப் புதிய தொழில் நன்கு வளர்ந்து வடக்கில் தில்லி வரையில் பரவி 1790ஆம் ஆண்டு வாக்கில் நிலையான தொழிலாக நிலைபெற்றது. தனிப்பட்ட தோட்ட முதலாளிகள், கம்பெனியின் உரிமம் பெற்று வங்காளத்தில் அவுரித் தொழிலை நிறுவினார்கள்.

கப்பல் கட்டுதல் : 1860 முதல் 1880 வரையில் கடலோர வாணிகத்தில் டச்சுக் கப்பல்களே பெருமளவில் ஈடுபட்டு வந்தன. ஆங்கிலேயரின் கடலாதிக்கம் பெருகவே, டச்சுக் கப்பல்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது. 1735ஆம் ஆண்டிலிருந்தே, பம்பாயில் பார்சிகள் கப்பல்களைக் கட்டிவந்தார்கள். மேலும் சூரத்திலும், பம்பாயிலும், டாமனிலும் நாட்டுப் படகுகளும் கட்டப்பட்டு வந்தன. 1760ஆம் ஆண்டு வாக்கில் வங்காளத்திலும் கப்பல்கட்டுதல் தொடங்கியது. பம்பாயில் கப்பல் கட்டுவதற்கு மலபார்த் தேக்கைப் பயன்படுத்தினார்கள். வங்காளத்தில் பெகு தேக்குப் பயன்பட்டது. இத் தேக்கு மலபார்த் தேக்கைவிட இலேசானதாகவும், நீரில் நன்றாக மிதக்கக் கூடியதாகவும் இருந்தது. அடுத்த 10 ஆண்டுகள்வரை வங்காளக் கப்பல் கட்டும் தொழில் சிறு அளவிலேயே நடந்துவந்தது. ஆனால், அமெரிக்கப் போர் தொடங்கியதும் இத் தொழில் ஊக்கம் பெற்று வளர்ந்தது. ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியான பொருள்களைப் பொருத்தியே இந்தியக் கப்பல்களைக் கட்ட வேண்டியிருந்தது. இதனால் இக்கப்பல்களால் அமெரிக்கக் கப்பல்களின் போட்டியைச் சமாளிக்க இயலவில்லை. அமெரிக்கக் கப்பல் தளங்களில் கப்பல்களைக் கட்டி, கல்கத்தாவிற்குக் கொணர்ந்து, அவற்றை அதிக இலாபத்தில் அதே சமயத்தில் இந்தியாவில் கட்டப்படும் கப்பல்களைவிடக் குறைந்த விலையில் விற்கலாம் என 1793-ல் கல்கத்தாக் கடல் வாணிக ஆலோசனைக் குழுவினர் கருத்துத் தெரிவித்தனர். எனினும், 1881 வரையில் பம்பாய், கப்பல்கட்டும் தளத்தில் ஆங்கிலக் கடற்படைக்கான கப்பல்கள் கட்டப்பட்டு வந்தன. அந்த ஆண்டில் கப்பல்களில் மரச் சுவர்களை அமைப்பதற்குப் பதிலாக இரும்பு, எஃகு சுவர்களைப் பொருத்தலாயினர்.

இந்தக் காலத்தில் கம்பளி, ஈயம், செம்பு, இரும்பு, எஃகு ஆகிய பொருள்களை ஏற்றிய சரக்குக் கப்பல்களை ஆண்டுக்கு மூன்று அல்லது நான்குமுறை பம்பாயிலிருந்து கம்பெனி அனுப்பியது. மலபார் மிளகு, காபி, சூரத் துணிகள், ஏலம், சோழி போன்ற பொருள்களுக்கு ஆஃபிரிக்காவில் பெருமளவில் கிராக்கி இருந்தமையால் அவற்றை ஆஃபிரிக்காவுக்குக் கம்பெனி அனுப்பி வந்தது. மிளகு கொள்முதலுக்காகத் தலைச்சேரியிலும் ஆஞ்செங்கோவிலும் நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன. 1793ஆம் ஆண்டில் வங்காளத்திலிருந்து கிழக்கு நாடுகளுக்குச் சுமார் ரூ. 50 இலட்சம் பெறுமானமுள்ள கஞ்சா, தானியம், வெடியுப்பு, துப்பாக்கிகள், பட்டு, பருத்தித் துணிகள் ஆகியவை ஏற்றுமதியாயின. இவற்றுக்குப் பதிலாக அந் நாடுகளிலிருந்து வெள்ளீயம் (Tin), மெழுகு, கந்தகம், வாசனைத் திரவியங்கள், தங்கத் தூள், துத்தநாகம், தேயிலை, கற்கண்டு, படிக்காரம், கர்ப்பூரம், அரக்குச்சாயம், பீங்கான் ஆகிய ரூ. 20 இலட்சம் மதிப்புடைய பொருள்கள் இறக்குமதியாகின.

சமூக மாறுதல்கள் : மேனாட்டுச் செல்வாக்கினால் மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் குடும்பம், சாதி, கிராமம் ஆகியவற்றின் அடிப்படையில் பெரும் மாறுதல்கள் ஏதும் ஏற்படவில்லை. எனினும் சுதேச அரசுகளில் தவிர, மற்றப் பகுதிகளில் கிராமம் தனது தன்னாட்சித் தன்மையை இழந்துவிட்டது. கிராமங்கள் மத்திய நிருவாகத்தில் ஓர் அங்கமாக மாறின. புதிதாகத் தோன்றிய பொருளாதாரச் சக்திகளினால், கூட்டுக்குடும்பத்தின் கட்டுக்கோப்புத் தளர்ந்தது. குடும்ப உறுப்பினர்களிடையே கருத்தொருமைப்பாடு நீடிக்கவில்லை. பொருளீட்டும் திறமையில் உண்டாகிய ஏற்றத்தாழ்வுகளும், உயில்கள் எழுதுதல், பெண்வழி வாரிசுரிமை போன்ற ஆங்கில வழக்குகளும் குடும்ப உறுப்பினர்களின் சுதந்திர உணர்வைத் தூண்டின. அவர்கள் தனித்து வாழ்க்கை நடத்தலானார்கள். பல சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுதோறும் காங்கிரஸ் மாநாட்டையொட்டித் தேசியச் சமூகச் சீர்திருத்த மாநாடும் நடத்தப்பட்டது. 1905-ல் கோபாலகிருஷ்ண கோகலே இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவினார். இச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு, அரசியல் பணிகளில் மட்டுமன்றிச் சமூகப் பணிகளில் பயிற்சியளிப்பதும் இச் சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். சாதி சமயப் பாகுபாடு கருதாமல் இந்தியர்கள் அனைவரையும் சகோதரர்களாகக் கருதி அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதென இச் சங்க உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். திருமண வயதை ஆண்களுக்கு 18 என்றும்,

பெண்களுக்கு 14 என்றும் நிருணயித்துச் சட்டம் ஒன்று 1929-ல் இயற்றப்பட்டது. இதன் மூலம் குழந்தைகள் மணம் வெகுவாகக் குறைந்தது. சாதிச் சடங்குகளும், சம்பிரதாயங்களும், கட்டுப் பாடுகளும் தளர்ந்து நலிந்துகொண்டு வந்தன. கடல் கடந்து பயணம் செல்லக் கூடாதென்ற கட்டுப்பாடு காலாவதியாகியது. உணவு சம்பந்தமான பல கட்டுப்பாடுகளும் நீங்கின. எந்தச் சாதியினரும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நடைமுறை செயலுக்கு வந்தது. இரயில், பஸ், வானொலி, திரைப்படம் இவற்றின் பலனாகக் கிராம வாழ்க்கையிலும் பல மாறுதல்கள் ஏற் பட்டன. சமய குருமார்கள் வைத்ததுதான் சட்டம் என்ற நிலை மறைந்தது. சமயச் சடங்குகளின் கட்டுதிட்டங்கள் தளர்ந்தன. தீண்டாமைக் கொடுமை வேகமாக மறைந்துவருகிறது. தீண்டாமை சட்ட விரோதமாக்கப்பட்டுள்ளது. இந்துக் கோயில் களில் தீண்டாதவர்களும் வழிபாடு செய்யலாம் எனச் சட்டம் அனுமதித்துள்ளது. அரசினரின் பல்வேறு சலுகைகளினால் தாழ்த்தப்பட்டவர்களின் சமூகநிலை விரைவாக உயர்ந்து வருகிறது.

சமூக மாறுதல்கள் : மேனாட்டுச் செல்வாக்கின் காரணமாக இந்துக் குடும்பம், சாதிமுறை, கிராம அமைப்பு இவற்றின் அடிப்படையில் பெரும் மாறுதல்கள் ஏதும் ஏற்படவில்லை. எனினும் சிற்சில மாறுதல்கள் உண்டாயின. சமுதாயத்தில் புதி தாக உருவாகி வந்த பொருளாதாரச் சக்திகளினாலும், தனிமனித சுதந்திர உணர்வினாலும் இந்துக்களின் கூட்டுக் குடும்பமுறை மெல்ல மெல்ல மறைந்தது. 1929ஆம் ஆண்டு வரையில் இந்துக் களிடம் குழந்தை மணம் பெருமளவில் காணப்பட்டது. அந்த ஆண்டில் சாரதாச் சட்டம் என்று வழங்கப்பெற்ற குழந்தை மணத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது என்றும், அதன்படி குறைந்த அளவுத் திருமண வயது பெண்களுக்கு 14 ஆகவும், ஆண்களுக்கு 18 ஆகவும் நிருணயிக்கப்பட்டது என்றும், இச் சட்டத்தை வைதிக இந்துக்கள் கண்டித்தார்கள் என்பதையும் ஏற்கெனவே கண்டோம். கோபாலகிருஷ்ண கோகலே 1905ஆம் ஆண்டில் பூனாவில் இந்திய ஊழியர் சங்கத்தை (Servants of India Society) நிறுவினார். இந்தியாவில் சாதி சமயப் பாகுபாடுகளைப் படிப்படியாக ஒழிக்கவேண்டும் என்பது இச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. எல்லா இந்தியர்களையும் சகோதரர் களாகக் கருதி அவர்களின் மேம்பாட்டுக்காகப் பாடுபட வேண்டு மென இச் சங்கத்தின் உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். புதிய முற்போக்குக் கொள்கைகளின் பலனாகச் சாதிச் சடங்குகள் அனுசரிக்கப்படவில்லை. உயர்ந்த சாதியினரும்,

தாழ்ந்த சாதியினரும் கலந்து உண்ணும் பழக்கம் பெருகியது. கலப்புமணங்களும் பெருகின. புதிய அரசியலமைப்பின்கீழ், தீண்டாமை சட்டவிரோதமாக்கப்பட்டது. சாதிக்கும் தொழிலுக்குமிடையே இருந்துவந்த பிணைப்பு மறைந்துவிட்டது. பிராமணர்கள் கடற்பயணம் செல்லக்கூடாதென்ற கட்டுப்பாடு இன்று இல்லை. புகைவண்டியும், பேருந்துகளும் கிராமவாசிகளைத் தனிமையிலிருந்து விடுவித்து உலகுடன் தொடர்பு கொள்ள வழிவகுத்துள்ளன. திரைப்படம், வானொலி போன்ற நவீன சாதனங்கள் அவர்களின் வாழ்க்கையில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தி யுள்ளன. சமூக ஏற்றத்தாழ்வுகளும், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடுகளும் விரைவாக மறைந்து வருகின்றன.

மாதர் நலம்: 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற பழைய இந்துக் கொள்கை இன்று கைவிடப்பட்டுவிட்டது. படித்த பெண்கள் திருமணம் செய்தால், உடனே விதவைகளாகி விடுவார்கள் என்ற மூடநம்பிக்கை வங்காளிகளிடம் நிலவி வந்தது. இன்று இக் கொள்கை யெல்லாம் கவைக்குதவாதனவாகிவிட்டன. பிரம்மசமாஜத்தின் உறுப்பினராக இருந்த ஈசுவர சந்திர வித்தியாசாகர் பெண்கள் கல்விக்காகத் தீவிரமாகப் பாடுபட்டார். 1855 முதல் மூன்றாண்டுகளுக்குள் சுமார் 40 பெண் பள்ளிகளை நிறுவினர். 1877-ல் சசிபாத பானர்ஜி என்பவர் விதவைகள் விடுதி ஒன்றை நிறுவினர். இங்கு இளம் விதவைகளுக்கு, வீட்டுப் பணிகளிலும், குடிசைத் தொழில்களிலும் பயிற்சி யளிக்கப்பட்டன. இதைவிடப் புகழ்வாய்ந்த மற்ருெரு விதவைகள் விடுதியை பூனுவில் பண்டித ரமாபாய் என்பவர் நிறுவினர். இதில் 2000 பெண்கள் இருந்தார்கள். ரமாபாய் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். அவர், பின்னர்க் கிறித்துவ மதத்தில் சேர்ந்தார். சமஸ்கிருதத்தில் அவர் நல்ல புலமை பெற்றிருந்தார். ஆகவே, அவர் தமது விடுதியைச் சிறந்த சமஸ்கிருதக் கல்வி நிறுவனமாக உருவாக்கினர். 1889ஆம் ஆண்டில் பூனுவில் பேராசிரியர் கார்வே, விதவைகள் இல்லம் ஒன்றைத் தொடங்கினர். இவ் வில்லம் அவருடைய அரும் முயற்சியால் இந்திய மகளிர் பல்கலைக்கழகமாக மாறியது. இங்குத் தாய்மொழியிலேயே பாடங்கள் போதிக்கப்பட்டன. பெண்களுக்குத் தேவையான பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆசிரியத் தொழிலில் பெண்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் அகில இந்திய மாதர் மாநாட்டின் சார்பில் 1926-ல் தில்லியில் இர்வின் சீமாட்டிக் கல்லூரி நிறுவப்பட்டது.

கலைகள் : ஐரோப்பிய அறிஞர்கள் முதன்முதலாக இந்தியாவின் தொன்மைகுறித்து விஞ்ஞான முறைப்படி ஆராயலானார்கள். ஜேம்ஸ் பிரின்செப் (James Princep) என்பவர் 1837ஆம் ஆண்டில் இந்தோ - கிரேக்க நாணயங்கள் சிலவற்றின் துணைகொண்டு பண்டைய பிராமி எழுத்துகளை எவ்வாறு படித்தறிவது என்பதைக் கண்டார். இதன்மூலம் அசோக மன்னரின் கல்வெட்டுச் செய்திகளை அறிந்துகொள்ள முடிந்தது. அவர் எழுதிய 'இந்தியாவின் கற்கோயில்கள்' (Rockcut Temples of India), 'இந்தியா - கீழ்த்திசைக் கட்டடக்கலை வரலாறு' (History of Indian and Eastern Architecture) என்ற இரு நூல்களும் இந்தியாவின் பண்டைய கட்டடக் கலையின் பெருமையை விளக்குவன. இந்தியத் தொல்பொருளியலை விஞ்ஞான முறைப்படி ஆராய்வதற்குச் சர் அலெக்சாண்டர் கன்னிங்காம் (Sir Alexander Cunningham), டாக்டர் ஜேம்ஸ் பர்கஸ் (Dr. James Burgess) ஆகிய இருவரும் முதல் முயற்சிகளை மேற்கொண்டார்கள். 1870ஆம் ஆண்டில் இந்தியத் தொல்பொருளியல் ஆய்வு நிறுவனத்தைக் (Archaeological Survey of India) கன்னிங்காம் நிறுவினார். மாக்ஸ் முல்லர் (Max Muller), ஆல்டன்பர்க் (Oldenberg), கீல்ஹார்ன் (Kielhorn), பஹலர் (Buhler) போன்றவர்கள் இந்தியாவின் தொன்மையான இலக்கியங்களைக் கற்றார்கள். 1904ஆம் ஆண்டில் வின்சன்ட் ஸ்மித் (Vincent Smith) என்பவர் 'இந்தியாவின் ஆதி வரலாறு' (Early History of India) என்ற நூலை எழுதினார். இதில் முதன்முறையாக இந்திய வரலாற்றின் காலவரிசையை (Chronology) நம்பத் தகுந்தவாறு தொகுக்க முயன்றுள்ளார். உள்நாட்டு வரலாற்று ஆதாரங்கள், புராணக் கதைகள், காலக் கணிப்பு, உள்ளூர்ச் செய்திகள் முதலியவற்றின் அடிப்படையில் டாட் (Tod), எலியட் (Elliot), டாசன் (Dowson), மெக்கன்சி (Meckenzie) போன்றவர்கள் இந்திய வரலாறு குறித்துப் பல நூல்களை எழுதினார்கள். வில்க்ஸ் (Wilks) எழுதிய 'மைசூர் வரலாறு' (Sketches of Mysore), கிராண்ட் டஃப் (Grant Duff) எழுதிய 'மராத்தியர் வரலாறு' (History of the Marattas), எல்ஃபின்ஸ்டனின் 'இந்திய வரலாறு' (History of India), ஆர்ம் எழுதிய 'இந்துஸ்தானத்தில் பிரிட்டிஷ் அரசின் நடவடிக்கைகள்' (Transactions of the British Nation in Indostan) முதலிய நூல்கள், பின்னாளைய வரலாற்றாசிரியர்களுக்குச் சிறந்த முன்னோடி நூல்களாக விளங்குகின்றன. 1902ஆம் ஆண்டில் தொல்பொருளியல் தலைமை இயக்குநராக (Director-General of Archaelogy) ஜான் மார்ஷல் (John Marshall) என்பவர்

நியமனம் பெற்றார். அவர் மொகஞ்சதாரோ, ஹரப்பா, தட்ச சீலம், பாடலிபுத்திரம், நாலந்தா, நாகார்சுனகொண்டா முதலிய வரலாற்றுக்கு முந்திய காலப் பகுதிகளில் அகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் செய்தார். இந்த அகழ்வாராய்ச்சிகளின் மூலமாக, சிந்துவெளிப்பகுதியில் கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முன்பு மிகச் சிறந்த இந்திய நாகரிகம் ஒன்று செழித்தோங்கியிருந்ததற்கான ஆதாரங்கள் 1922-ல் கண்டுபிடிக்கப்பட்டன. இக் கண்டுபிடிப்பு உலக வரலாற்றறிஞர்களிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

கட்டடக் கலை: ஆங்கில ஆட்சியாளர்கள் இந்தியாவில் சாலைகள் அமைத்தார்கள்; கால்வாய்கள் வெட்டினார்கள்; இருப்புப் பாதைகள் போட்டார்கள்; பாலங்கள் கட்டினார்கள். ஆனால், கலைச்சிறப்பு வாய்ந்த கட்டடங்கள் எதையும் கட்டவில்லை. ஆகவே, கட்டடக் கலையைப் பொறுத்தவரையில், இந்திய வரலாற்றில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் இருண்ட காலமாகவே உள்ளது. மெக்காலே போன்றவர்களின் செல்வாக்குக் காரணமாக, இந்தியப் பண்புடையதாகத் தோன்றிய எல்லாவற்றையும் கண்மூடித்தனமாக ஆங்கிலேயர் வெறுத்தார்கள். அழகின் சின்னமான தாஜ்மகாலை இடித்துவிட்டு, அதிலுள்ள சலவைக் கற்களை விற்றுவிடுவதற்குப் பென்டிங் பிரபு திட்டமிட்டார். இதற்கெனத் தாஜ்மகாலின் ஒரு மூலையில் சோதனையாகச் சிறிதளவு இடித்து அச் சலவைக் கற்களை ஏலமிட்டபோது, அக் கற்கள் அரசினர் எதிர்பார்த்த விலைக்குப் போகவில்லை. இதனால் எஞ்சிய தாஜ்மகால் இடியுறாமல் தப்பிப் பிழைத்தது. ஆயினும், இந்தியச் சுதேச அரசர்களின்கீழ்க் கட்டடக் கலை ஓரளவு செழித்து வளர்ந்தது. இந்தியக் கல் தச்சர்களும், கட்டடக் கலைஞர்களும் சுதேச அரசர்களுக்காக கலை நுட்பம்மிளிரும் பல அரண்மனைகளையும் கட்டடங்களையும் கட்டினார்கள். மைசூர், உதயபுரி, ஜெயபுரி முதலிய இடங்களிலுள்ள அரண்மனைகள் இதற்குச் சான்று பகர்கின்றன. பிருந்தாவனம், பூரி போன்ற இடங்களிலுள்ள அழகிய கோயில்களும் இந்தியக் கட்டடக் கலைஞர்களின் கைவண்ணமே யாகும். கர்சன் பிரபு, இந்தியாவின் தொன்மையான சின்னங்களைப் பாதுகாப்பதில் ஓரளவு அக்கறை காட்டினார். அவர் காலத்தில், 1904-ல் பண்டைச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம் (Ancient Monuments Preservation Act) இயற்றப் பட்டது.

ஓவியக் கலையைப் பொறுத்தவரையில்; தொடக்கத்தில் ஐரோப்பியரின் புதிய ஓவிய முறையைச் சில இந்திய ஓவியர்கள்

கையாண்டார்கள். ஆனால், இறுதியில் இந்திய ஓவிய முறையே சிறப்பிற்குரிய இடம் பெற்றது. அபினேந்திரநாத் தாகூர், அவருடைய சகோதரர் ககனேந்திரநாத் தாகூர் ஆகியோரும், இவர்களின் சீடர்களாகிய அசித்குமார், நந்தாலால் போஸ் போன்ற ஓவிய நிபுணர்களும் அஜந்தாப் பாணியைப் பின்பற்றிப் பல புகழ்பெற்ற ஓவியங்களைத் தீட்டினர்கள்.

இலக்கியம் : மேனாட்டுச் செல்வாக்கினால் இந்திய மொழிகள் புதிய உயிர்த்துடிப்பும் வளமும் பெற்றன என்று உறுதியாகச் சொல்லலாம். முக்கியமாக, உரைநடை இலக்கியத் துறையில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டது. அதுவரையில், மரபான சில பொருள்களைப்பற்றிச் சமஸ்கிருதம் கலந்த கவிதையில் எழுதப் பட்ட நூல்களே இலக்கியமாகக் கருதப்பட்டு வந்தன. இந் நிலை மாறி, எந்தக் கருத்தையும் சரளமாக எழுதித் தெரிவிக்க உதவும் எளிய உரைநடை வழக்கிற்கு வந்தது. ஏராளமான உரைநடை இலக்கியங்கள் எல்லா இந்திய மொழிகளிலும் தோன்றின. உரை நடை வளர்ச்சியின் காரணமாக, கவிதை இலக்கியங்களின் நடையும் எளிமை பெற்றது. நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை போன்ற உரைநடை இலக்கியங்கள் இந்திய மொழிகள் அனைத்திலும் பெருமளவில் தோன்றலாயின. செய்தித்தாள்களின் தோற்றமும் உரைநடை இலக்கியங்களின் வளர்ச்சிக்குப் பெருந் துணையாக அமைந்தது.

இந்திய மொழிகளின் மறுமலர்ச்சியில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கியது வங்காளமேயாகும். இராஜா இராம் மோகன்ராய் எளிய உரைநடையில் தமது தத்துவ நூல்களை எழுதி, வங்காள மொழியில் உரைநடை வளர்ச்சியைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து ஈசுவர சந்திர வித்தியாசாகர், பக்கிம் சந்திர சாட்டர்ஜி, தேவேந்திரநாத் தாகூர், அட்சய குமார் தத்தா, இரமேஷ் சந்திர தத் ஆகியோர் 19ஆம் நூற்றாண்டில் வங்காள உரைநடை இலக்கியங்களை வளர்த்தார்கள். இருபதாம் நூற்றாண்டில் உரைநடை, கவிதை இரண்டிலும் உன்னதமான இடத்தைப் பெற்றவர் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் ஆவார். அவருடைய கீதாஞ்சலிக்கு 1913-ல் நோபல் பரிசு கிடைத்தது. இதனால் இலக்கிய உலகில் இந்தியாவின் பெருமை உயர்ந்தது. இந்தி மொழியில் தயானந்த சரசுவதி, பாரதேந்து ஹரிச்சந்திரர், மகாவீர் பிரசாத், திவிவேதி, மைதிலி சரண்குப்தா, பிரேம் சந்த், பிருந்தாவன் லால் வர்மா, சுமித்திர நந்தன் பந்த், ஷியாம் பிகாரி மிஸ்ரா, சுகதேவ பிகாரி மிஸ்ரா முதலியோரும், உருது மொழியில் சர் அகமது கான்,

நசீர் அகமது, மௌல்வி அப்துல் ஹக்கீம் முதலியவர்களும் உரைநடை இலக்கியங்கள் பெருக வழிவகுத்தார்கள். அவ்வாறே பஞ்சாபி, மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளிலும் உரைநடை நூல்கள் பெருகின.

தமிழ்: இக் காலத்தில் தமிழ்மொழியில் பல புராணங்களும், பிரபந்தங்களும் தோன்றின. 18ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தோன்றிய தொண்டைமண்டல சதகம் படிக்காசுப் புலவரால் இயற்றப்பட்டது. இதில் பல்லவ நாட்டின் வரலாறும் வேறு பல வரலாற்றுச் செய்திகளும் அடங்கியுள்ளன. இப் புலவரை இராமநாதபுரம் மன்னர் இரகுநாத சேதுபதியும் (1673—1710), கீழக்கரை வணிகராகிய சீதக்காதி எனப் புகழ் பெற்ற சேக் காதிர் பெரியதம்பி மரைக்காயரும் ஆதரித்தார்கள். முஸ்லிம் தமிழ்ப் புலவர்களுள் ஒருவரான உமறுப்புலவர் சீருப் புராணம் என்னும் நூலை இயற்றினர். இது நபிநாயகத்தின் வரலாற்றை மூன்று காண்டங்களில் 5000 பாடல்களால் விளக்குகிறது. உமறுப்புலவரும் வள்ளல் சீதக்காதியினுல் ஆதரிக்கப் பெற்றவர். தொண்டைமண்டல சதகத்தை முன்மாதிரியாகக் கொண்டு சோழ மண்டல சதகம் என்னும் நூலை ஆத்மநாத தேசிகர் என்பவர் 1720-ல் இயற்றினர். குற்றுலக் குறவஞ்சி என்னும் வீதி நாடகத்தை 1718-ல் திரிகூடராசப்பக் கவிராயர் ஆக்கினர்: இதில், ஓர் ஆன்மா ஆண்டவனை அடைய விரும்புவதைக் காதல் கதைபோல் நாடகப் பாணியில் புலவர் சித்திரித்திருக்கிருர். இந் நாடகத்தைத் தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் ஆண்டுதோறும் நவராத்திரி விழாவின்போது நடத்துவதற்குத் தஞ்சை மராத்திய மன்னர் மானியம் வழங்கி ஏற்பாடு செய்திருந்தார். சைவ சித்தாந்த நூலாகிய சிவஞான போதத்திற்குச் சிறந்ததொரு விளக்க உரையாக 1750ஆம் ஆண்டில் சிவஞானமுனிவர் 'திராவிட மாபாடியம்' என்னும் நூலை இயற்றினர். அவரே வேறு பல சமய இலக்கியங்களையும், இலக்கணங்களையும் எழுதினர். கிறிஸ்துவ சமயப் பிரசாரத்திற்காக 1700-ல் இந்தியாவுக்கு வந்த பெஸ்கி (Beschi) என்ற பாதிரியார் தமிழைக் கற்றுத் தம் பெயரை வீரமாமுனிவர் என மாற்றிக்கொண்டு தமிழில் பல அரிய தமிழ் நூல்களை இயற்றித் தமிழுக்கு அருந்தொண்டாற்றினர். அவர் இயற்றிய 'சதுரகராதி' தமிழில் எழுந்த முதலாவது அகராதி நூலாகும். ஃபிரெஞ்சு ஆளுநர் டூப்ளேயிடம் தலைமை அதிகாரியாகப் பணியாற்றிய ஆனந்தரங்கம் பிள்ளையின் 'தமிழ் நாட்குறிப்பு' சிறந்த வரலாற்று ஆதாரமாகக் கருதப்படுகிறது. அவர் தம் கால அரசியல் சமூக நிகழ்ச்சிகளை இந் நாட்குறிப்பில் சுவைபட எழுதிவைத்துள்ளார். சீகாழி அருணசலக் கவிராயர்

என்னும் புலவர் 1772-ல் 'இராம நாடகம்'என்னும் இசை நாடகத்தைத் தமிழில் இயற்றினர். 18ஆம் நூற்ருண்டின் இறுதியில், முஸ்லிம் அனுபூதிமானகிய மஸ்தான் சாகிபு இயற்றிய பாடல்கள் சர்வசமய ஒருமைப்பாட்டை வலியுறுத்துவன.

ஐரோப்பியர் காலம் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு சிறந்த காலமாகக் கருதப்படுகிறது. ஏனெனில், அக் காலத்தில் தான் தமிழ்மொழிக்கு உரிய இயற்கையான மொழிநடை தோன்றி வளர்ச்சியடைந்தது. அவ்வழியைக் காட்டி வைத்தவர்கள் தத்துவ போதக சுவாமிகள் எனப்பட்ட ராபர்ட்-டி-நோபிலி பாதிரியார் (Fr.Robert de Nobille), வீரமா முனிவர், சீகன் பால்கு ஐயர், ஜி. யூ. போப் முதலிய ஐரோப்பியரேயாவர். இவர்கள் ஆங்கில எழுத்தாளர்களின் நூல்களை எளிய தமிழ் உரைநடையில் மொழிபெயர்த்தார்கள். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை முன்மாதிரியாகக் கொண்டு தமிழ் நாடகாசிரியர்கள் சிலர் தமிழில் நாடகங்களை எழுதினர்கள். லிட்டன் (Lytton) எழுதிய 'இரகசிய வழி' (Secret Way) என்னும் நாடகத்தைத் தழுவி பேராசிரியர் சுந்தரம் பிள்ளை 'மனேன்மணீயம்' என்னும் நாடகத்தைத் தமிழில் எழுதினர். இவற்ருேடு, பண்டைய மரபைப் பின்பற்றிய இலக்கியங்கள் பலவும் தோன்றின. பேராசிரியர் மீனட்சிசுந்தரம் பிள்ளை பல தலபுராணங்களை இயற்றினர். 'தமிழ்த் தாத்தா' என அன்புடன் அழைக்கப்பட்ட தமிழறிஞராகிய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் தமிழில் முதலாவது சுயசரிதையை எழுதினர். இதில் 19ஆம் நூற்ருண்டில் தமிழ் ஆராய்ச்சிகளின் நிலையை விரிவாக விளக்கியுள்ளார். தமிழில் முதலாவது நாட்டிய நாடகமாகிய 'நந்தன் சரித்திர'மும் இக் காலத்தில் தோன்றியதேயாகும். இதே காலத்தில் பல மேடை நாடகங்களும் தமிழில் இயற்றப்பட்டன. இவற்றுள் இராமச் சந்திரக் கவிராயரின் சாகுந்தல நாடகமும், பரதவிலாசமும், தஞ்சாவூர்க் கோவிந்தசாமி ராவ் எழுதிய சாவித்திரி நாடகமும், ரங்கப் பிள்ளை இயற்றிய அரிச்சந்திர நாடகமும், விசுவநாத முதலியாரின் டம்பாச்சாரி விலாசமும் குறிப்பிடத்தக்கவை. இவை மேனட்டு நாடகங்களின் நகல்களாகவே அமைந்திருந்தன. பரிதிமாற் கலைஞர் என அழைக்கப்பெற்ற சூரிய நாராயண சாஸ்திரியார் ரூபாவதி, கலாவதி என்ற நாடகங்களை இயற்றினர். இவற்றில் மேனட்டு நாடக நுட்பங்களையும், பழைய சமஸ்கிருத நாடக நுட்பங்களையும் இணைக்க முயன்றுள்ளார். இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பம்மல் சம்பந்த முதலியார் நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களைத் தமிழில் எழுதியும்,

அவற்றை மேடையில் நடித்தும் 'நாடகத் தந்தை' என்ற பாராட்டுதலைப் பெற்றார். மறைமலையடிகள் இயற்றிய 'சாகுந்தலம்' காளிதாசர் நாடகத்தின் தழுவலாகும்.

மராத்தி மொழியிலிருந்த பஞ்சதந்திரக் கதைகளைத் தாண்டவராய முதலியார் என்பவர் 1826-ல் தமிழில் மொழி பெயர்த்தார். இது தமிழில் முதலில் தோன்றிய உரைநடை நூல்களில் ஒன்று. வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்', இராஜம் ஐயர் இயற்றிய 'கமலாம்பாள் சரித்திரம்' ஆகியவை தமிழில் தோன்றிய முதல் நாவல்கள். செல்வகேசவராய முதலியார், மறைமலையடிகள், வ. உ. சிதம்பரம் பிள்ளை, தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் போன்றோர் கட்டுரை இலக்கியங்கள் வளர வழிவகுத்தார்கள். கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் தமது தேசியப் பாடல்களின் மூலம் தமிழில் மறுமலர்ச்சியைத் தொடங்கிவைத்தார். தென்னாட்டுத் தேசியத் தலைவர்களில் ஒருவராகப் பாரதியார் திகழ்ந்தார். அவருடைய 'பாஞ்சாலி சபதம்' பாரதத்தின் விடுதலை வேட்கையை எதிரொலித்தது. பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் விடுதலை மணம் கமழும் காந்தியப் பாடல்கள் பல இயற்றினார்கள். தமிழ் நாட்டின் சமூக, அரசியல் சிக்கல்கள் குறித்துக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுச்சியூட்டும் கவிதைகள் இயற்றினார். கவிஞர் பாரதிதாசன் தமது எழுச்சி மிக்க கவிதைகளினால் புரட்சிக் கருத்துகளைப் பரப்பினார். இவ்வாறே தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மற்றத் தென்னிந்திய மொழிகளிலும் பலருடைய முயற்சியால் இலக்கியங்கள் பெருகின.

26. இந்தியாவில் ஆங்கிலேயரின் செல்வாக்கு

நிருவாகம் : இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர், இந் நாட்டிலிருந்த பகுதிகளில் நிலவிய அரசுகள் எதேச்சாதிகாரம் செலுத்துவனவாகவும், பெரும்பாலும் கொடுங்கோன்மையானவையாகவும், நிலையற்றனவாகவுமே இருந்து வந்தன. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் ஏற்பட்டபிறகு, இங்கிலாந்தில் இருந்தது போன்ற நிரந்தரமான நிருவாக நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. கம்பெனியின் ஆட்சி நீங்கி, இங்கிலாந்து அரசரின் நேரடி ஆட்சி ஏற்பட்ட பின்னர், இந்தியாவில் இந் நிறுவனங்கள் மேலும் வளர்க்கப்பட்டன. இதன் பலனாக, அரசாங்கச் சட்டங்களையும் விதிமுறைகளையும் பொது மக்கள் நன்கு அறிந்துகொள்ளலாயினர். இந் நாட்டின் நிலைமைகளை நன்கு புரிந்துகொண்டு பொறுப்புணர்ச்சியுடனும், தாய்மையுணர்வோடும் பொதுநலனுக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. இந்திய வரலாற்றிலேயே முதன் முதலாக, நிருவாகச் சட்டத் தொகுப்பு (Code of Administrative Laws) ஒன்று உருவாக்கப்பட்டது. இதில், 1773ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act) முதலாகப் பாராளுமன்றம் இயற்றிய எல்லாச் சட்டங்களும், மத்திய மாநிலச் சட்ட சபைகள் இயற்றிய பல்வேறு சட்டங்களும் ஒருங்கிணைத்துத் தொகுக்கப்பட்டிருந்தன. அநீதிகளை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையிடுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருந்தன. மொத்தத்தில் இந்தியாவில் ஆங்கிலேயர் ஏற்படுத்திய அரசாட்சியின் தரம் உயர்ந்ததாகவே இருந்தது.

பஞ்சநிவாரணம் : இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பருவமழை பொய்த்து அடிக்கடி பஞ்சங்கள் உண்டாயின. 18, 19ஆம் நூற்றாண்டுகளில், மக்கள்தொகை பெருகியதன் காரணமாகவும், குடிசைத் தொழில்கள் வீழ்ச்சியடைந்ததன் விளை

வாகவும் போக்குவரத்து வசதிக் குறைவினாலும் பஞ்சத்தின் தொல்லைகள் மேலும் அதிகமாயின. 1770ஆம் ஆண்டில் வங்காளத்தில் பயங்கரப் பஞ்சம் தோன்றியது. 1866—67-ல் கிழக்குக் கடற்கரையில் ஒரிசா முதல் சென்னை வரையுள்ள கடலோரப் பகுதிகளில் கொடிய பஞ்சம் பீடித்து 20 இலட்சம் மக்களைப் பலி கொண்டது. இராசபுதனத்தில் 1868ஆம் ஆண்டிலும், பீகாரில் 1873ஆம் ஆண்டிலும் கடுமையான பஞ்சங்கள் ஏற்பட்டன. 1876-78ஆம் ஆண்டுகளில் ஐக்கிய மாநிலம், பம்பாய், ஐதராபாத், சென்னை, மைசூர் ஆகிய மாநிலங்களை ஒரு கொடிய பஞ்சம் ஆட்கொண்டது. இப் பஞ்சங்களைத் தடுக்க, முன்பு முகலாயர்கள் செய்ததுபோல, சில தாற்காலிக நடவடிக்கைகளை ஆங்கில அரசினர் எடுத்தனர். ஆனால், இந் நடவடிக்கைகளினால் செலவு மிகுதியாகியதே தவிர, போதிய பலன்கள் ஏற்படவில்லை. பஞ்சத்தை ஒழிக்க நன்கு சிந்தித்துத் திட்டமான கொள்கைகளின் அடிப்படையில் உருப்படியான திட்டங்களை வகுக்க வேண்டிய அவசியத்தை அரசினர் உணர்ந்தனர். லிட்டன் பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது, பஞ்ச விசாரணைக் குழு (Famine Commission) ஒன்றை நிறுவினார். இக் குழு 1880-ல் தனது அறிக்கையை அளித்தது. இதன் பரிந்துரைகளின் அடிப்படையில் 1883ஆம் ஆண்டில் பஞ்ச நிவாரண விதிமுறைகள் (Famine Code) வகுக்கப்பட்டன. இதில் பின்வரும் திட்டங்கள் அடங்கியிருந்தன: உடல் திடமுள்ளவர்களுக்கு வேலையளித்தல்; வயது முதிர்ந்தவர்களுக்கும். குழந்தைகளுக்கும் பணமும், உணவும் வழங்குதல்; நிலவரி வசூலைத் தள்ளிவைத்தல் அல்லது நிலவரியைத் தள்ளுபடி செய்தல்.

பஞ்ச நிவாரண, காப்பீட்டு நிதி (Famine Relief and Insurance Fund) ஒன்றையும் அரசு நிறுவியது. அதற்கு ஒன்றரைக் கோடி ரூபாயை அரசு வழங்கியது. 1896—97ஆம் ஆண்டிலும், 1899—1900ஆம் ஆண்டிலும் பல மாநிலங்களைப் பஞ்சம் பீடித்த போது, அங்கெல்லாம் பஞ்ச நிவாரண விதிமுறைகள் ஓரளவு வெற்றிகரமாகச் செயலாக்கப்பட்டன. 1900-ல் மற்றொரு பஞ்ச விசாரணைக் குழு நிறுவப்பட்டது. பஞ்சம் தோன்றியவுடனேயே நிலவரி வசூலைத் தாமதமின்றித் தள்ளிவைக்க வேண்டுமென்றும், கடன்களை விரைவாக வழங்க வேண்டுமென்றும் இக் குழு வலியுறுத்தியது. பஞ்ச நிவாரணப் பணிகளைப் பெருமளவில் மேற்கொள்வதற்காகப் பஞ்ச நிவாரண ஆணையாளர்களை (Famine Commissioners) நியமிக்க வேண்டுமெனவும் இக் குழு பரிந்துரை செய்தது. வேளாண்மை வங்கிகளை நிறுவ வேண்டுமெனவும்,

நீர்ப்பாசனத் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டுமெனவும் இக் குழுவினர் ஆலோசனை கூறினர்.

பஞ்சங்களைத் தொடர்ந்து பிளேகு, காலரா போன்ற கொடிய நோய்களும், சில சமயங்களில் வெள்ளங்களும் மக்களை வாட்டின. இவற்றுள், பிளேகு நோயானது பஞ்சமில்லாத காலத்திலும் அடிக்கடி ஆங்காங்கே பரவி உயிர்களைப் பலி கொண்டது. 1896—97ஆம் ஆண்டில் பம்பாய்-பூனாப் பகுதி களில் பிளேகு நோய் தாண்டவமாடியபோது, அத் தொற்று நோயின் உண்மையான தன்மையை உணராமலே, மக்களைத் தனிமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. ஆனால் நோயின் கொடுமை தணியவில்லை. நோயை ஒழிக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று நாடெங்கும் குரல் எழும்பியது. சில இடங்களில் கல வரங்கள் மூண்டன. கான்பூரில் 1900-ல் கலகக்காரர்களில் எழுவர் தூக்கிலிடப்பட்டனர். இது கண்டு ஆத்திரங்கொண்ட சகோதரர்கள் இருவர், பஞ்ச உதவிப்பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு ஆங்கில அதிகாரிகளைக் கொன்றனர். அவ் விருவரும் தூக்கிலிடப்பட்டனர். இதைக் கண்டித்துப் பாலகங்காதர திலகர் தமது ‘கேசரி’ இதழில் எழுதினர். அதற்காக அவருக்கு 18 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பஞ்சாபில் 1910-ல் பிளேகு நோய் பரவி 20 இலட்சம் மக்களைப் பலி கொண்டது. இந் நோயைத் தடுக்கவும், குணப்படுத்தவும் மருத்துவ முறைகள் கண்டுபிடிக்கப்பட்டதும் அரசாங்கம் அவற்றைத் தக்க விதத்தில் கையாண்டு பிளேகு நோயைக் கட்டுப்படுத்தியது.

நீர்ப்பாசனம்: வேளாண்மைத் தொழில் முக்கியமாக நடை பெறும் இந்தியா போன்ற நாடுகளில் நீர்ப்பாசனத்தின் முக்கியத் துவத்தை உணர்ந்திருந்த இந்து அரசர்களும், முகலாய மன்னர் களும் அரசாங்க வருமானத்திலிருந்து பல முக்கியமான நீர்ப் பாசனத் திட்டங்களை மேற்கொண்டனர். இதற்குப் பெரு மளவில் நிதி செலவாகியதைக் கண்ட லாரன்ஸ் பிரபு, நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென 1866ஆம் ஆண்டில் பொதுமக்களிடமிருந்து கடன் திரட்டினர். இப் புதிய கொள்கையின் வாயிலாக 1874-ல் ஆக்ராக் கால்வாயும், 1878-ல் கீழ்க் கங்கைக் கால்வாய்களும் 1882-ல் சிர்கந்துக் கால் வாயும் வெட்டி முடிக்கப்பட்டன. சிர்கந்துக் கால்வாய் 3700 மைல் நீளமுடையது. சிந்து நதிகளுக்கிடையிலிருந்த பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதியளித்த பஞ்சாப் கால்வாய்கள் 1890-க்கும்

1900-க்குமிடையே பத்தாண்டுகளில் அமைக்கப்பட்டன. இவற்றுள் மிக முக்கியமானது கீழ் சீனுப் கால்வாயாகும். இதன் மொத்த நீளம் 2700 மைல். சீனுப் ஆற்றுக்கும் ராவி ஆற்றுக்கு மிடைப்பட்ட பகுதிகளுக்கு இதனுல் பாசனவசதி கிடைத்தது. இக் கால்வாயைக் கட்டுவதற்கு முன்பு பாலைவனமாகக் கிடந்த நிலப்பகுதி, இக் கால்வாயின் பலனுக வளங்கொழிக்கும் கழனிகளாக மாறின. மத்திய அரசை முன்மாதிரியாகக் கொண்டு, மாநில அரசுகளும் பல நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றின.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பிருந்த அரசுகள் வனவளத்தைப் பெருக்குவதற்கான திட்டவட்டமான கொள்கை எதையும் பின்பற்றவில்லை. ஜெர்மனியிலும், ஃபிரான்சிலும் விஞ்ஞான முறையில் வனவளத்நைப் பெருக்கியதால் ஏற்பட்டுள்ள பலன்களை உணர்ந்த ஆங்கில அரசினர் இந்தியாவில் வனவளப் பெருக்கத்திற்காக விஞ்ஞான முறையிலான கொள்கை ஒன்றை வகுத்தனர். வனவள வியலில் நிபுணரான ஜெர்மானியர் ஒருவரை 1864-ல் காடுகளின் தலைமை ஆய்வுநராக (Inspector-General of Forests) அரசு நியமித்தது. அடுத்த ஆண்டில், இந்தியக் காடுகளைப் பாதுகாக்கவும், திறமையாக நிருவகிக்கவும் வழிசெய்யும் சட்டம் ஒன்றையும் இயற்றினர். 1878-ல் டேராடூனில் வனவியல் பள்ளியொன்றும் நிறுவப்பட்டது.

இருப்புப் பாதைகள்: டல்ஹௌசி காலத்தில், 1853—56ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் முதன்முதலாக இருப்புப் பாதைகள் போடப்பட்டன. முதலில் இவ் விருப்புப் பாதைகளை 'உத்தரவாத முறை' (Guarantee System) ஒன்றின்கீழ்த் தனியார் நிறுவனங்களிடம் (Private Companies) அரசு ஒப்படைத்தது. இந்த முறையின்படி, அந் நிறுவனங்களின் நிகர இலாபம் ஐந்து சதவிகிதத்திற்குக் குறையுமானுல், அக் குறைவை அரசாங்கம் ஈடு செய்யும். இலாபம் ஐந்து சதவிகிதத்திற்கு அதிகப்படுமானுல், அதில் பாதியை அரசுக்குக் கொடுத்துவிட வேண்டும். மேலும், அந் நிறுவனங்களைக் கண்காணிப்புச் செய்யவும், 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந் நிறுவனங்களை வாங்கிக்கொள்ளவும் அரசுக்கு அதிகாரம் இருந்துவந்தது. 1900 வரை அரசுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. அதன்பின் அரசின் வருமானம் பெருகலாயிற்று. அதனுல், அரசினரே புது இருப்புப் பாதைகளை அமைத்து அவற்றை நிருவகிக்கலாயினர். 1905-ல் இரயில்வே வாரியம் (Railway Board) அமைக்கப்பட்டது. இருப்புப் பாதைகள் அமைப்பினுல் போக்குவரத்து வசதிகள் பெருகின.

அதனால் வாணிகமும் தொழிலும் வளர்ந்தன. தூரம் குறையவே; நாட்டின் ஒற்றுமையும் தேசிய உணர்வும் உருவாகின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் பல ஆலைகளும், தொழிற்சாலைகளும் ஏற்பட்டன. அவற்றில் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதற்காகத் தொழிற்சாலைச் சட்டங்களை அரசினர் இயற்றினர். இச் சட்டங்களின் மூலம், பெண்கள், குழந்தைகளின் வேலை நேரம் நிருணயிக்கப்பட்டது. தொழிற்சாலைகளில் நல்ல குடிநீர் வசதியும், காற்றுவசதியும், சுகாதார வசதியும் இருக்கும்படி பார்த்துக் கொள்வதற்கு மாநில அரசுகளுக்கு இச் சட்டங்கள் அதிகாரம் அளித்தன.

ஐரோப்பியச் செல்வாக்கு: ஐரோப்பியரின் செல்வாக்கினால் இந்தியாவில் சமயம், சமூகம், பண்பாடு ஆகியவற்றிலும் பலவித மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியச் சுதேச அரசர்களும், பிரபுக்களும் தம் அரசுகளில் ஐரோப்பிய மருத்துவர்கள், கலைஞர்கள் ஆகியோரை வேலைக்கு அமர்த்திக்கொண்டார்கள். பல்வேறு சுதேச அரசுகளைச் சேர்ந்த மருத்துவர்கள், தேவையானவர்களுக்கு மருத்துவ, அறுவைச் சிகிச்சைகள் அளித்துவந்தார்கள். நானாபர்னவிஸ் ஆட்சிக் காலத்தில், பூனாவில் வேல்ஸ் (Wales), டேனியல் (Daniel) என்ற இரு ஆங்கில ஓவியர்களின் மேற்பார்வையில் ஓவியப் பள்ளி ஒன்று நிறுவப்பட்டது. பூனாவில் ஆங்கில அரசினரின் பிரதிநிதியாக (Resident) இருந்த மாலட் (Malet) என்பவர், கண்ணாடிப் பொருள்கள், சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், தொலைநோக்கிகள் (Telescopes) போன்ற ஐரோப்பிய நாகரிகப் பொருள்களை பேஷ்வாவிற்குப் பரிசாக வழங்கினார். இரண்டாம் மாதவராவ் என்ற பேஷ்வா, ஃபிண்ட்லே (Findley) என்பவரிடம் வானவியலையும் (Astronomy), நிலவியலையும் (Geography) கற்றார். ஜான்சி மன்னராகிய இரகுநாத ஹரி நவால்கர் என்பவர் மேனாட்டுக் கல்வியில் ஆர்வங்கொண்டு தமது தலைநகரில் ஆங்கில நூல்களடங்கிய நூலகம் ஒன்றையும், விஞ்ஞானப் பரிசோதனைகள் நடத்துவதற்காகச் சோதனைக் கூடம் ஒன்றையும் நிறுவினார். தஞ்சாவூர் மன்னரான சரபோஜி, டேனியல் பாதிரியாரான சுவார்ட்ஸ் (Schwartz) என்பவரிடம் ஆங்கிலம் கற்று அம் மொழியில் சரளமாக எழுதவும் பேசவும் கற்றுக்கொண்டார். அவர் நூல்கள், ஓவியங்கள், அரிய ஏட்டுச் சுவடிகள் ஆகியவற்றைச் சேகரித்து உலகப் புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகத்தை நிறுவினார்.

இந்திய அரசர்களும் உயர்குடியினரும் (Aristocracy) இவ்வாறு ஆங்கிலேயருடன் தொடர்புகொண்டு அவர்களுடன் சமூக உறவுகள் ஏற்படுத்திக்கொள்ள ஆர்வம் காட்டி வந்த அதே சமயத்தில் சாதாரண மக்கள் ஆங்கிலேயரை வெறுப்புணர்வோடும் பகைமையோடும் நோக்கினர்கள். ஆங்கிலேயர்கள் அயல்நாட்டிலிருந்து வந்து இந் நாட்டை வெற்றிகொண்டு ஆதிக்கம் செலுத்துபவர்கள் என்ற எண்ணம் மட்டுமன்றி, அறியாமையும் இனப்பாகுபாடும் அவர்களின் வெறுப்புணர்ச்சியை மேலும் அதிகமாக்கின. ஐரோப்பியர் அனைவருமே குடிகாரர்கள் என்று மக்கள் கருதினர்கள். கிறித்துவ மதத்தை 'பேய்களின் மதம்' என்றும் அவர்கள் எண்ணினர்கள்.

ஆங்கிலேயர் போக்கு: ஆங்கிலேயர்கள் தொடக்கத்தில், இந்தியர்களுடன் சரிசமமாகப் பழகிவந்தார்கள். அவர்கள் நிற, இனப் பாகுபாடு கருதவில்லை. ஐரோப்பியப் பெண்கள் இந்தியாவில் குறைவாக இருந்தமையால், இந்தியப் பெண்களை ஐரோப்பியர் திருமணம் செய்வது சாதாரணமாக நடந்து வந்தது. இந்தியரின் நடனம், யானைச் சண்டை போன்ற பொழுதுபோக்குகளிலும் அவர்கள் ஆர்வம் காட்டினர்கள். ஆனல், ஆங்கிலக் கம்பெனியின் அதிகாரம் பெருகியதும் ஆங்கிலேயரிடம் ஒருவகை உயர்வு மனப்பான்மை தோன்றியது. முஸ்லிம்களை ஒழுக்கங் கெட்டவர்கள் என்றும், இந்துக்களை மூடப் பழக்கமுள்ளவர்கள் என்றும் ஆங்கிலேயர் கருதினர்கள். ஐரோப்பாவிலிருந்து அதிகமான பெண்கள் இந்தியாவுக்கு வரவே, இந்தியப் பெண்களைத் திருமணம் செய்துகொள்ள வேண்டிய அவசியம் ஐரோப்பியருக்கு இல்லாமல் போயிற்று. அரசாங்க உயர்பதவிகளை இந்தியர்களுக்கு வழங்கக் காரன்வாலிஸ் பிரபு மறுத்தார். இதனல் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமிடையே இடைவெளி விரிவடைந்தது. இருதரப்பாருக்குமிடையே சமூகத் தொடர்புகள் அற்றுப்போயின. ஐரோப்பியர் தமக்கெனத் தனிச் சங்கங்களை அமைத்துக்கொண்டார்கள்; தனிக் குடியிருப்புகளில் குடியிருந்தார்கள். இந்திய மொழிகளை அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. இந்தியர் வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்ளவும் அவர்கள் அக்கறை காட்டவில்லை. மொழிபெயர்ப்பாளர்கள், அடிமைகள், ஏவலாள்கள், முதலாய உயர்அதிகாரிகள் ஆகியோருடன் மட்டுமே அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள். இவற்றைப்பற்றி யெல்லாம், டூப்ளேயிடம் மொழிபெயர்ப்பாளராக இருந்த ஆனந்தரங்கம் பிள்ளை தமது நாட்குறிப்பில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலக் கல்வி: இந்தியாவில் 1835ஆம் ஆண்டில் ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டது. இது நவீன இந்தியாவின் வரலாற்றில் மிகமுக்கிய நிகழ்ச்சியாகஅமைந்தது. ஆங்கிலேயரின் கம்பெனியில் உயர்ந்த பதவிகளைப் பெறலாம் என்ற நோக்கத்துடன் நடுத்தரவர்க்கத்தினர் முதலில் ஆங்கிலக் கல்வியைக் கற்கலாயினர். ஆனால், படிப்படியாக, மேனாட்டுக் கல்வியின் சிறப்பினை உணர்ந்து அக் கல்வியை விரும்பிப் படித்தோர் கூட்டம் ஒன்று இந்தியாவில் உருவாகியது. அவர்கள் இந்தியாவில் பாரம்பரியமாக இருந்துவந்த பண்பாட்டுக் கூறுகளில் பல மாறுதல் ஏற்படுவதற்கு உதவினார்கள். மேனாட்டுக் கல்வியானது, இந்திய சமுதாயத்திற்கு ஓர் அதிர்ச்சி வைத்தியமாக அமைந்தது. மூடப் பழக்கவழக்கங்களைக் கைவிடவும், விஞ்ஞான முறையிலான சிந்தனைகள் தோன்றவும், சீர்திருத்தங்களில் ஆர்வம்கொள்ளவும் இக் கல்வி வழி வகுத்தது. ஆங்கிலேயரின் முற்போக்குக் கொள்கைகள் இந்தியாவில் பரவி, படித்த இந்தியர்களிடையே தேசிய உணர்வைத் தூண்ட உறுதுணை செய்தன.

இந்தியாவில் ஆங்கிலக் கல்வியைக் கம்பெனியார் புகுத்திய போது, இந் நாட்டின் பாரம்பரியக் கல்விமுறையைச் சீர்குலைக்கும் எண்ணம் அவர்களுக்கு இல்லை. மாறாக, சமஸ்கிருதம், இந்துசமயத் தத்துவம், முஸ்லிம் மதத் தத்துவம் போன்றவற்றைக் கற்பதற்கான பள்ளிகளையும் அவர்கள் நிறுவினார்கள். ஆங்கிலேயர் பலர் இந்துமதத் தத்துவத்தை விரும்பிக் கற்று, சமஸ்கிருதம் படித்து, இந்துக்களைப் போலவே வாழ்ந்தார்கள். அவர்களில் தளபதி ஸ்டுவர்ட் (Stuart) என்பவர் குறிப்பிடத்தக்கவர். அவர் 'இந்து ஸ்டுவர்ட்' என்றே அழைக்கப்பட்டார். அவர் தம் இல்லத்தை இந்துச் சிற்பங்களால் நிறைத்திருந்தார். தமது கல்லறைக்கு இந்தியமுறைச் சிற்பப் பாணி அமைப்பைத் தாம் உயிரோடிருக்கும்போதே அவர் வகுத்திருந்தார். காளிதாசரின் சாகுந்தலத்தை வில்கின்ஸ் (Wilkins) என்பவரும், பகவத் கீதையை ஜோன்ஸ் (Jones) என்பவரும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்கள். எனினும், புதிய கல்விமுறை பற்றி இந்திய இளைஞர்களிடையே நிலவிய கருத்து மாறுபட்டதாகவும் குழப்பமானதாகவும் இருந்தது. சில சமயம், நாத்திகக் கொள்கையும், உருவ வழிபாட்டு எதிர்ப்புணர்ச்சியும் கொண்ட படித்த கூட்டம் ஒன்று தோன்றியது. கல்கத்தா இந்துக் கல்லூரி மாணவர்கள், சில ஆசிரியர்கள், தலைவர்களின் தூண்டுதலின் பேரில், இந்து மதத்திற்கு எதிராகத் தீவிரமாகக் கிளர்ச்சி செய்யலானார்கள். இந்தியாவின் தாழ்வுக்கு இந்துமதமே காரணம் என்று அவர்கள் பேசலானார்கள். தங்களுடைய இந்த

வெறுப்புணர்வைக் காட்டுவதற்காக அவர்கள் கல்கத்தா வீதிகளில் குடித்துவிட்டு ஆடினார்கள். மாட்டுக்கறியைத் தின்றுவிட்டு, எலும்புகளை ஆத்திகவாதிகளின் வீடுகளுக்குள் எறிந்தார்கள். சிலர் கிறித்துவமதத்திற்கு மாறினார்கள். ஆனால், இத்தகைய தீவிரவாதிகள் எண்ணிக்கை மிகச் சிறிதாகவே இருந்தது.

பெரும்பாலான மக்கள் பழைமை விரும்பிகளாகவே இருந்தனர். புதிய கல்வியையும், மேனாட்டு நாகரிகத்தையும் அவர்கள் ஐயக் கண்கொண்டே நோக்கினார்கள். வைதிகப் பற்று மிகுந்தவர்கள், தரும சபை போன்ற நிறுவனங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் சீர்திருத்தச் சட்டங்களை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்காடினார்கள். உடன்கட்டை ஒழிப்புச் சட்டம், விதவை மறுமணச் சட்டம், குழந்தைமணத் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்களால் இந்து சமூகம் சீர்குலையும் என்றும், இந்து சமயம் அழிந்துவிடும் என்றும் அவர்கள் வாதிட்டார்கள். இவ் விருதுருவங்களுக்கிடையே மற்றொரு படித்த இந்தியர் கூட்டம் உருவாகியது. இவர்கள், பழைமையின் சிறந்த பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, அவசியமான புதிய சீர்திருத்தங்களையும் ஏற்றுப் புதியதோர் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென வலியுறுத்தினார்கள். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் இராஜா இராம் மோகன்ராய் ஆவார்.

பிரம்ம சமாஜம்: சீர்திருத்தக் கருத்துகளையுடைய இந்துக்களைக் கொண்ட 'பிரம்ம சபை' என்னும் சங்கத்தை 1828ஆம் ஆண்டில் இராஜாஇராம் மோகன்ராய் நிறுவியிருந்தார். பொது வழிபாட்டின் அடிப்படையில் சாதி சமய பேதமற்ற சமுதாயத்தை நிறுவுவதே இச் சங்கத்தின் தலையாய நோக்கம். இதற்கெனப் பிரம்மா கோயில் ஒன்றை அவர் நிறுவினார். இக் கோயிலில் விக்கிரகம் ஏதுமில்லை; அதில் வழிபாடும் நடக்கவில்லை. பல்வேறு சாதிகளையும் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடும் ஓர் இடமாகவே இக் கோயில் பயன்பட்டது. இராம்மோகன் இங்கிலாந்து சென்று அங்கு மரணமடைந்த பிறகு, இந்தப் பிரம்ம சபை செயலற்று இறுதியில் மறைந்துபோயிற்று. இரவீந்திரநாத் தாகூரின் தந்தையான தேவேந்திரநாத் தாகூர் 1845ஆம் ஆண்டில் பிரம்ம சபையை 'பிரம்ம சமாஜம்' என்னும் பெயரில் புதுப்பித்தார். இதில் சேரும் ஒவ்வோர் உறுப்பினரும் உறுதிமொழிப் பத்திரம் (Covenant) ஒன்றை எழுதிக்கொடுக்க வேண்டும். அதனுடன் அவர்கள் தீட்சையளிப்பு விழாவில் தீட்சை பெறவும் வேண்டும். இவ் விதிகளைப் புகுத்தியதன் மூல

மாக, தளர்வுற்றிருந்த இந்த நிறுவனத்தை வலுவான ஒரு தேவாலயமாக மாற்றினார். பிரம்ம சமாஜத்தின் தத்துவங்களைப் பரப்புவதற்கெனத் 'தத்துவ போதினிப் பத்திரிகா' என்னும் செய்தி இதழையும் தேவேந்திரநாத் தொடங்கினார். மேலும், பல குருமார்களையும் நியமித்தார்.

1857ஆம் ஆண்டில் கேசவ சந்திர சென் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார். இவர் திறமையான பேச்சாளர்; மனத்தைக் கவர்ந்திழுக்கும் போதகர். எனவே, இவரைச் சமாஜத்தின் செயலாளராகத் தேவேந்திரநாதர் நியமித்து ஊக்குவித்தார். சென் போதித்த பாவமன்னிப்புக் கொள்கையும், வழிபாட்டு முறையும் சமாஜத்திலிருந்த இளைஞர்களிடையே ஆழ்ந்த பக்தி உணர்ச்சியைத் தூண்டின. அவருடைய முயற்சியினால் பிரம்ம சமாஜத்தின் கிளைகள் 54 ஆக உயர்ந்தன. ஆனால், விரைவிலேயே சென்னும் அவருடைய ஆதரவாளர்களும், கலப்பு மணங்களையும், விதவை மணங்களையும் நடத்தலானார்கள். சமாஜத்தின் பிராமணக் குருமார்கள் பூணூல் அணியக் கூடாதெனவும் அவர்கள் வற்புறுத்தலானார்கள். பாரம்பரியச் சமூகப் பழக்கவழக்கங்களிலிருந்து தீவிரமாக விலகிச் செல்வதை விரும்பாத தேவேந்திரநாதர் கேசவ சந்திரரையும் அவருடைய ஆதரவாளர்களையும் சமாஜத்திலிருந்து விலக்கினார். அவ்வாறு விலக்கப்பட்ட சென்னும் அவரது ஆதரவாளர்களும் 1865-ல் தனியாக ஒரு சமாஜத்தைப் பல கிளைகளுடன் நிறுவிக்கொண்டனர். நாளடைவில் ஆதி சமாஜம் மறைந்துபோயிற்று.

கேசவ சந்திர சென் நிறுவிய 'இந்திய பிரம்ம சமாஜம்' செல்வாக்குப் பெற்று ஒரு சீர்திருத்த இயக்கமாக வளர்ந்தது. வங்காளம் முழுதும் அதற்குக் கிளைகள் எழுந்தன. பெண்களும் சமாஜத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். கேசவ சந்திரரைக் கடவுளின் அவதாரமாகவே அவருடைய ஆதரவாளர்கள் போற்றினார்கள். அவர் முதுமை எய்தவே அவரிடம் மிதவாதக் கருத்துகள் வளரலாயின. ஆண்களும் பெண்களும் தாராளமாகக் கலந்து பழகுவதை அவர் எதிர்த்தார். பெண்கள் உயர்கல்வி பெறுவதையும் அவர் விரும்பவில்லை. பர்தா முறையை அடியோடு ஒழிப்பதையும் அவர் கண்டித்தார். தங்களின் தலைவர் இத்தகைய பிற்போக்குக் கருத்துகளை வெளியிடுவதைக் கண்டு, சமாஜத்திலிருந்த முற்போக்குவாதிகள் கவலை கொண்டார்கள். 1875ஆம் ஆண்டில் கேசவ சந்திரர் தம் 14 வயது மகளை, கூச் பீகார் மன்னருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். இதை ஒரு குழந்தை மணமாக

முற்போக்குவாதிகள் கருதினார்கள். அதனால் அவர்கள், கேசவ சந்திரரின் சமாஜத்திலிருந்து தனியாகப் பிரிந்து புதிய சமாஜம் ஒன்றைத் தொடங்கினார்கள். நாளடைவில் பழைய சமாஜம் மறைந்து புதிய சமாஜம் செல்வாக்குப் பெற்றது.

பிரார்த்தனை சமாஜம்: வங்காளத்தில் தோன்றிய பிரம்ம சமாஜத்தைப் போன்று மராட்டியத்தில் பிரார்த்தனை சமாஜம் ஒன்று 1867-ல் தோன்றியது. கேசவ சந்திரரின் தூண்டுதலின் பேரிலேயே இது நிறுவப்பட்டது. ஆனால், பிரம்ம சமாஜத்தைப் போன்று அல்லாமல் இந்த சமாஜம் இந்துக் கடவுளர்களையும் உருவ வழிபாட்டையும் ஏற்றுக்கொண்டு சமூகச் சீர்திருத்தத்திலேயே கவனம் செலுத்திவந்தது. நாமதேவர், துக்காராம், இராமதாசர் போன்ற மராட்டிய அருட்செல்வர்களிடம் இச் சமாஜத்தினர் பக்தி கொண்டவர்களாக விளங்கினர். பஜனைமூலம் பக்தியைப் பரப்புவதில் அவர்கள் ஈடுபட்டார்கள். அதே சமயத்தில் கலப்பு மணம், விதவை மறுமணம், மாதர் முன்னேற்றம், தாழ்த்தப்பட்டவர்கள் மேம்பாடு போன்ற சீர்திருத்தப் பணிகளிலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டார்கள். நீதிபதி ரானடே, கோபாலகிருஷ்ண கோகலே போன்றவர்கள் இச் சமாஜத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள். இவர்களின் ஆதரவில் அனாதை விடுதி, விதவைகள் விடுதி, தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்வுப் பணிமன்றம் ஆகியவையும் மற்றும் இவைபோன்ற நிறுவனங்களும் அமைக்கப்பட்டன. நீதிபதி ரானடே தம் வாழ்நாள் முழுவதும் சமாஜத்தின் பணிகளுக்கே பாடுபட்டார். சமூகச் சீர்திருத்தம்மட்டும் போதாது என்றும், சமூக, சமய, பொருளாதார, அரசியல் துறைகள் அனைத்திலும் இந்து சமுதாயம் முன்னேற வேண்டும் என்றும் ரானடே வற்புறுத்தினார். அவருடைய முயற்சியால் 1884-ல் தக்கணக் கல்விச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. இதன் உறுப்பினர்கள் குறைந்த ஊதியத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்ற உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். இதனால், அதிகப் பணவசதியில்லாமலே பூனாவில் பெர்குசன் கல்லூரியும், சாங்கிலியில் வெல்லிங்டன் கல்லூரியும் இச் சங்கத்தினரால் நிறுவப்பட்டன.

ஆரிய சமாஜம்: பிரம்ம சமாஜத்திற்கு நேர் எதிரான கொள்கை கொண்ட 'ஆரிய சமாஜம்' என்ற நிறுவனத்தை 1875ஆம் ஆண்டில் சுவாமி தயானந்த சரசுவதி என்ற துறவி நிறுவினார். மேனாட்டுக் கல்வியும், சீர்திருத்தக் கொள்கையும் பிரம்ம சமாஜம் உருவாகக் காரணமாக இருந்தன. ஆரிய சமாஜமோ மேனாட்டுச் செல்வாக்கை அடியோடு எதிர்ப்பதற்

காகத் தோன்றியது. எடுத்ததற்கெல்லாம் மேலைநாட்டவரை நம்புவதை இந்தச் சமாஜம் கண்டித்தது. வேதங்களில் இல்லாதது எதுவுமே இல்லை என்று ஆரிய சமாஜத்தினர் கருதினர். 'வேதத்திற்குத் திரும்புக' என்பது அவர்களின் முழக்கமாக இருந்தது. சுவாமி தயானந்த சரசுவதி ஆங்கிலக் கல்வி கற்றவரல்லர். நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், தத்துவங்களும் வேதங்களிலேயே அடங்கியுள்ளன என்று அவர் கருதினார். பிற்காலப் புராணங்களைப் பயனற்றவை என இவர் ஒதுக்கினார். இராஜா இராம் மோகன்ராய் போலவே, வேதங்களையே தமது தத்துவங்களின் ஊற்றாகக் கருதினார். உருவ வழிபாட்டை ஒழிப்பதை ஆதரித்தார். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற கொள்கையைப் பரப்பினார். குழந்தைகள் மணத்தை எதிர்த்தார். பெண்கள் கல்வியை ஊக்குவித்தார். ஆண்-பெண் சம உரிமையை வலியுறுத்தினார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார். பிரம்ம சமாஜத்தினர் தங்கள் கருத்துகளைப் படித்தவர்களிடம் பரப்புவதிலேயே கவனம் செலுத்தினர். சுவாமி தயானந்த சரசுவதியோ பாமரமக்களுக்கும் தம் கொள்கைகள் எட்டும்வகையில் பிரசாரம் செய்தார். அதனால் ஆரிய சமாஜத்தினரின் எண்ணிக்கை பெருகியது. பஞ்சாப், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பிரம்ம சமாஜத்தை மங்கச் செய்துவிட்டு, ஆரிய சமாஜம் வலிவோடு வளர்ந்தது. சுவாமி தயானந்தர் மறைந்த பிறகு, லாலா ஹன்ஸ் ராஜ், லாலா லஜபதி ராய், பண்டிட் குருதத், சுவாமி சிரத்தானந்தார் போன்றவர்கள் ஆரிய சமாஜத்தைப் போற்றிப் பாதுகாத்தார்கள்.

இராமகிருஷ்ண மடம் : இந்துசமய மறுமலர்ச்சியில் தலையாய பங்குகொண்ட நிறுவனங்களில் முதலிடம் பெறுவது இராமகிருஷ்ண மடம் என்றால் மிகையன்று. கல்கத்தா அருகிலுள்ள தட்சிணேசுவரத்தில் காளிகோயில் பூசாரியாக இருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் (1833–66) என்னும் அருந்தவ ஞானியின் பெயரால் இந்த மன்றம் நிறுவப்பெற்றது. இராமகிருஷ்ணர் கல்வி யறிவில்லாதவர். எனினும் அவர் மிக உயர்ந்த ஆன்மீக ஞானியாக வாழ்ந்தார். தம் தவ வலிமையினால் தேவியின் காட்சியைப் பெற்றுக் கடவுளை உணர்ந்தார். இவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார். உன்னதமான ஆன்மீக நிலையை அடைவதற்கு உருவ வழிபாடு மிகச் சிறந்த சாதனம் என்று அவர் போதித்தார். ஆனால், வெறும் சடங்கு வழிபாட்டினால்மட்டும் ஆன்மீகத்தை எய்திவிட இயலாது என்றார். இவர் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையுடையவர். 'பற்பல இடங்களில் தோன்றும் ஆறுகள் எல்லாம் ஓடி இறுதியில் கடலில் கலக்

கின்றன. அதைப்போல் மதங்கள் பலவேறாக இருந்தாலும், அவை எல்லாம் முடிவில் சென்று கடவுளையே அடைகின்றன. ஆண்டவன் ஒருவனே. அவனுடைய பெயர்களே கிருஷ்ணன், கிறிஸ்து, அல்லா என்பதெல்லாம்' என்று இராமகிருஷ்ணர் வலியுறுத்தினர்.

தவத்தின் பயனாகத் தாம் கண்ட உண்மைகளை எல்லாம் சிறு சிறு கதைகள்மூலம் படிப்பறிவில்லாத மக்களுக்கும் இராம கிருஷ்ணர் எளிதில் விளக்கினர். இவருடைய உபதேசங்களால் கவரப்பட்டுப் பலர் இவருக்குச் சீடரானர்கள். அவர்களுள் ஒருவரே நரேந்திரநாத் தத் என்ற இயற்பெயருடையவரும் பின்னாளில் உலகப்புகழ் பெற்றவருமாகிய சுவாமி விவேகானந்தர். இராமகிருஷ்ணரின் உபதேசங்களை உலகெங்கும் பரப்பியவர் விவேகானந்தரே யாவார்.

விவேகானந்தர், இராமகிருஷ்ணரின் போதனைகளையெல் லாம் தொகுத்து நூலாக வெளியிட்டார். தம் குருநாதரின் பெயரில் இராமகிருஷ்ண மடத்தை நிறுவினர். விவேகானந்தர் கல்வியில் சிறந்தவர்; கேட்டாரைப் பிணிக்கும் சொல்வன்மை வாய்ந்தவர்; ஆன்மீக எழுச்சி மிக்கவர்; அழகிய தோற்றம் அமைந்தவர். அவரிடம் பக்திகொண்டு அரசர்களும், பாமரரும் நூற்றுக்கணக்கில் அவருக்குச் சீடரானர்கள். பல தடங்கல்களைச் சமாளித்து, அமெரிக்காவில் சிக்காகோ நகரில் 1893-ல் நடந்த 'உலகச் சமயங்களின் மாநாட்டில்' (Parliament of Religions) விவேகானந்தர் பங்குகொண்டார். அம் மாநாட்டில் இந்து சமயத்தின் பெருமையை விளக்கி அரியதொரு சொற்பொழிவாற்றி அனைவரையும் மெய்மறக்கச் செய்தார். வெளிநாட்டினர் பலரும் அவருக்குச் சீடராயினர். அதுமுதல் உலக நாடுகளில் எல்லாம் இராமகிருஷ்ணரின் போதனைகள் வேகமாகப் பரவலாயின. இந்தியாவிலும், அமெரிக்காவிலும் இராமகிருஷ்ண மடத்தின் பல கிளைகள் தோன்றின. பின்னர் உலகின் பல நாடுகளிலும் இம் மடத்தின் கிளைகள் நிறுவப்பட்டன. சமூகத் தொண்டின் மூலமாக இம் மடம் மக்களிடையே சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பி வருகிறது. வெள்ளம், பஞ்சம், நிலநடுக்கம், கொள்ளைநோய் முதலியவற்றால் துன்புறும் மக்களுக்கு உதவி செய்வதும், மருத் துவமனைகள், அனாதை இல்லங்கள், தொழிற்சாலைகள், குருகுலங் கள், கல்வி நிறுவனங்கள் அமைப்பதும் இம் மடத்தின் சிறப்பான நோக்கங்களாகும். இம் மடத்தின் அரிய தொண்டுகளினால் உலகில் பாரதத்தின் பெருமை உயர்ந்தது. இராமகிருஷ்ணரின்

நினைவுச் சின்னமாகத் தட்சிணேசுவரத்தில் ஒரு கோயிலும் ஒரு மடமும் நிறுவப்பெற்றுள்ளன.

பிரம்மஞான சபை: இந்துமத மறுமலர்ச்சியில் பங்கு கொண்ட மற்றொரு முக்கிய நிறுவனம் பிரம்மஞான சபை (Theosophical Society) என்பதாகும். இது முதலில் அமெரிக்காவில் 1875ஆம் ஆண்டில் பிளாவாட்ஸ்கி அம்மையார், ஆல்காட் ஆகியோரால் நிறுவப்பட்டது. அவர்கள் இந்தியாவுக்கு வந்து சென்னை நகரில் அடையாற்றில் 1886-ல் இச் சபையின் தலைமை அலுவலகத்தை ஏற்படுத்தினர்கள். அன்னிபெசன்ட் அம்மையாரின் முயற்சியால் இச் சபை வளர்ச்சியுற்றது. இந்தியாவின் பண்டைய பண்பாட்டினையும், தொன்மரபுகளையும் புதுப்பிப்பதன்மூலம் இந்தியாவின் சிக்கல்களுக்குத் தீர்வுகாணலாம் என அன்னிபெசன்ட் நம்பினர். அவர் காசியில் மத்திய இந்துக் கல்லூரியை நிறுவினர். இக் கல்லூரி 1915-ல் காசி இந்துப் பல்கலைக்கழகமாக வளர்ந்தது. பிரம்மஞான சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை எப்பொழுதும் குறைந்த அளவினதாகவே இருந்துவந்தது. இதன் நோக்கங்கள் பாமர மக்களைக் கவரவில்லை; படித்தவர்கள் மட்டுமே இச் சபையில் சேர்ந்தனர். படித்தவர்கள்கூட நாளடைவில் ஆர்வம் குன்றி இச் சபையிலிருந்து விலகிச் சென்றனர்.

மறுமலர்ச்சித் தலைவர்கள்: இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் ரானடேயைத் தவிர, கோபாலகிருஷ்ண கோகலேயும், பாலகங்காதர திலகரும் பெருஞ் செல்வாக்குடன் விளங்கினர்கள். பிரார்த்தனை சமாஜத்தின் பணிகளைக் கோகலே ஆதரித்தார். திலகர் பகவத் கீதையில் புதைந்து கிடக்கும் சீர்திருத்தக் கொள்கைகளை எடுத்துக் கூறி, முற்போக்கு எண்ணங்களுடன் இந்து சமயம் புதிய உருப்பெறுவதற்கு வழிவகுத்தார். வங்காளப் பெருங்கவிஞர் இரவீந்திரநாத தாகூர், தமது எழுத்துகளில் சீர்திருத்தக் கொள்கைகளையும், மனிதாபிமான உணர்ச்சியையும், உலகக் கண்ணோட்டத்தையும் வலியுறுத்தினர். கீழ்நாட்டுப் பண்பாடுகளிலும், மேனாட்டுப் பண்பாடுகளிலும் காணும் மிகச் சிறந்த பண்புகளை இந்திய இளைஞர்கள் பயிலவேண்டுமெனத் தாகூர் வற்புறுத்தினர். அவருடைய 'கீதாஞ்சலி' நோபல் பரிசைப் பெற்றது. அவர் சாந்திநிகேதனத்தில் நிறுவிய உலகப் பல்கலைக்கழகம் (விசுவபாரதி) உலகப் புகழ்பெற்றது.

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய காந்தியடிகள், இந்துமதத்தில் காணும் நற்பண்பு

களின் சின்னமாக விளங்கினர். பழைய தத்துவங்களிலிருந்து புதிய கொள்கைகளை வகுத்தார். மேனாட்டு நாகரிகத்திலிருந்து அவர் கற்றுக்கொண்டது ஆங்கிலமொழி ஒன்றுதான். அவர் வற்புறுத்தி வந்த மனித ஒற்றுமை, சகோதரத்துவம், ஏழை எளியோரிடமும் தாழ்த்தப்பட்டோரிடமும் அவர் காட்டிய பரிவு, அவர் கடைப்பிடித்த அன்புநெறி, எளிய வாழ்க்கை, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என அவர் கொண்ட கொள்கை, அவருடைய தியாக உணர்வு, அவர் போதித்த சத்தியம், அன்பு, அகிம்சை ஆகிய அனைத்தும் இந்துமதத்தின் பாரம்பரியப் பண்புகளேயாகும். இவற்றை அரசியலுடன் இணைத்தது அவருடைய தனிப்பெருஞ் சாதனை. இக் காலச் சமூக, அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப இந்து சமயத்தையும், தத்துவத்தையும் விளக்கிக் கூறியவர்களில் தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் வாழ்ந்த இரமண முனிவரும், புதுவையில் வாழ்ந்த அரவிந்தரும் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

பெண்களின் முன்னேற்றம்: பெண்களின் நிலை சிறிதுசிறிதாக உயர்ந்தது. 'பர்தா' (Purdah) என்ற முகமூடி அணிந்து கொள்ளும் பழக்கம் இந்துப் பெண்களிடமிருந்து விரைவில் ஒழிந்தது. பொதுச்சமூக நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்துகொள்ளவும் ஆரம்பித்தனர். உயர்கல்வி பெறவேண்டும், வேலைசெய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவர்களிடம் பரவின. 1930ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சாரதாச் சட்டப்படி (Sarada Act) குழந்தைப் பருவ மணமுறை (Child Marriage) அடியோடு ஒழிக்கப்பட்டது. மகளிர் உயர்வில் ஊக்கம் செலுத்தியதன் விளைவால், ஆண்களுடன் சரிசமமாய் வேலை செய்வதற்கு மகளிருக்கும் மிகுதியான வாய்ப்புகள் உண்டாயின. சுதந்திரத்திற்கு முன்பே பெண்கள் வாழ்க்கையின் பல துறைகளிலும் சிறந்தவர்களாய் விளங்கினர்கள். திருமதி இராதாபாய் சுப்பராயன், 1938ஆம் ஆண்டில் மத்திய மேல்சபையில் (Council of State) முதல் அங்கத்தினராயும், 1943ஆம் ஆண்டில் திருமதி ரேணுகா ரே (Mrs. Renuka Ray) என்பவர் மத்திய சட்டசபையில் (Central Legislative Assembly) முதற் பெண் அங்கத்தினராயும் அமர்ந்தனர். சுதந்திர இந்தியா பெண்களுக்கு அரசியல் சமத்துவம் வழங்கிப் பெண்குலத்தைப் பெருமைப்படுத்தியது. ஐக்கிய நாடுகள் போன்ற சர்வதேச மன்றங்களில் திருமதி விஜய லட்சுமி பண்டிதர், திருமதி இராஜகுமாரி அமிர்த கௌரி போன்றோர் பங்குகொண்டு சிறந்த பணியாற்றினர். இது இந்தியாவுக்குப் பெருமைதரும் நிகழ்ச்சியாகும். சரோஜினி நாயுடு,

விஜயலட்சுமி பண்டிதர் போன்றோர் மாநிலக் கவர்னராகவும், அயல்நாட்டுத் தூதராகவும் இருந்தமை வாயிலாகப் பணிசெய்யும் ஆற்றல் மகளிர்க்கும் உண்டு என்பதைக் காட்டினர்.

1955ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டப்படி விவாகரத்து செய்துகொள்ளும் உரிமையும், 1956ஆம் ஆண்டு இந்து வாரிசு சட்டப்படி சொத்தில் சமபங்கு பெறும் உரிமையும் மகளுக்கும் வழங்கப்பட்டன. இதனுடன் தீண்டாமையும் சட்ட விரோத மாக்கப்பட்டது. தீண்டாமை இந்தியாவைவிட்டே விரட்டப் பட்டுவிட்டது எனலாம். சாதிமுறை மறையாவிட்டாலும், அதன் கொடுமையான கட்டுப்பாடுகள் வெகுவாகத் தளர்த்தப் பட்டுவிட்டன வென்றே கூறலாம்.

சையது அகமது கான் : இந்துக்களிடையே மட்டுமன்றி முகலா யர்களிடையேயும் சீர்திருத்தங்கள் பல புகுத்தப்பட்டன. நீண்ட காலமாக முஸ்லிம்கள் சீர்திருத்தங்களை விரும்பாது வாழ்ந்து வந்தனர். முஸ்லிம்களின் போக்கில் மாறுதலை ஏற்படுத்தியவர் களில் சர் சையது அகமது கான் குறிப்பிடத் தகுந்தவர் ஆவார். முஸ்லிம்களைக் கிழக்கு மேற்குப் பண்பாடுகளுக்கொப்பத் தங்களை யும் மாற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினர். இங்கிலாந்திற்குச் சென்று திரும்பிவந்து அலிகாரில் கல்லூரி ஒன்றினை நிறுவினர். இதுவே பின்னர் அலிகார்ப் பல்கலைக்கழகமாக வளர்ந்தது. ஆங்கில இலக்கிய நூல்களை உருதுமொழியில் மாற்றம் செய் வித்தார். படித்த பெண்களிடையே 'பர்தா' அணியும் பழக் கத்தைக் கைவிடுமாறு பிரசாரம் செய்தார். அஞ்சுமன்கள் எனப் படும் கழகங்கள் பல நிறுவப்பட்டன. முஸ்லிம் பத்திரிகைகள் தோன்றின.

சீக்கியர்கள் : மாறிவரும் மாறுதல்களைச் சீக்கியர்களும் உணர ஆரம்பித்தனர். அமிர்தசரசில் கல்சாக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது. அதுமட்டுமன்றிப் பல கல்லூரிகளும் உயர் நிலைப் பள்ளிகளும் நிறுவப்பட்டன.

பார்சிக்கள் ; 1851ஆம் ஆண்டு ரக்னுமாய் மஜ்தயாஸ்னன் சபை அல்லது சமயச் சீர்திருத்தச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப் பட்டது. பார்சிக்கள் சபை, சமூக நிலைகளை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. காமா என்பவர் பார்சிக்களிடையே கல்விபரவிடப் பெரிதும் பாடுபட்டார். மலபாரி என்பாரும் பார் சிக்கள் உயர்விற்கு உழைத்தார்.

கிறித்துவர்கள் : கல்விப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுச் சமய சமூகச் சீர்திருத்தங்களில் கிறித்துவர்களும் ஈடுபட்டனர். கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் பல நிறுவக் காரணமாயிருந்தனர்.

இவ்விதச் சமய, சமூகக் கோட்பாடுகள் மாறுவதற்கு ஆங்கில ஆட்சியும் அடிப்படைக் காரணமாயிருந்தது என்பது உண்மைக்குப் புறம்பானதன்று.

சுதந்திர இந்தியாவின் பல முக்கியத் துறைகளில் சிந்தனைச் சிற்பிகளாகவும் பல மகளிர் பணிபுரிகின்றனர். ஆற்றலிலும், ஆக்கப் பணிகளிலும் ஆடவரைப்போன்றே, எவ்விதத்திலும் குறைந்தவர்களல்லர் என்று தெள்ளத் தெளிவாக நிருபித்ததன் விளைவால், இந்தியாவின் வருங்காலத்தையே திருமதி இந்திரா காந்தியிடம் மக்கள் ஒப்படைத்துள்ளனர். உலகிலேயே மிகப் பெரிய குடியரசு நாட்டின் பிரதமராய் ஒரு பெண்மாதைத் தேர்ந்தெடுத்த பெருமை, இந்தியாவையே சாரும்.

27. இந்தியாவில் கல்விவளர்ச்சி வரலாறு

இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியார் பல பகுதிகளைப் பிடித்துப் படிப்படியாகத் தமது ஆதிக்க எல்லையை விரிவுபடுத்திக் கொண்டுவந்த காலத்தில் சமயச் சார்புடைய கல்விநிலையங்களே இருந்துவந்தன. இந்துக்களும், முஸ்லிம்களும் தத்தம் மதக் கல்விகளைப் போதிப்பதற்காகச் சமயப் பள்ளிகளை நடத்தி வந்தனர். சமஸ்கிருதப் பண்டிதர்கள் தங்கள் பாடசாலைகளில் இந்துக்களுக்குச் சமஸ்கிருத மொழியைக் கற்பித்து வந்தார்கள். மசூதிகளில் முஸ்லிம்களுக்கு மௌல்விகள் கல்வி போதித்தார்கள். இந்தியாவின் இக் கல்விமுறையில் ஆங்கிலக் கம்பெனியார் முதலில் தலையிடாமல் இருந்துவந்தனர். கல்வி போதனைக்காக, இந்திய அரசர்கள் விட்டுச்சென்ற அறக்கட்டளைகளை ஆங்கியர்கள் போற்றிவந்தார்கள். கல்வி வளர்ச்சியில் ஆர்வங் கொண்ட வாரன் ஹேஸ்டிங்ஸ், அரசாங்கத்தின் உயர்பதவிகளில் முகமதியர்களும் இடம்பெற வேண்டுமெனக் கருதி, 1781-ல் கல்கத்தாவில் முகமதியக் கல்லூரி ஒன்றை நிறுவினார். இக் கல்லூரியில், சமயவியல், தருக்கம், இலக்கணம், சட்டம், தத்துவம், வானவியல், கணிதம் போன்ற பாடங்கள் கற்பிக்கப் பட்டன.

ஆங்கிலப் பள்ளிகள் : சில ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்காக மாநிலங்களில் பள்ளிகளைத் தொடங்கும்படி வங்காள மாநிலத்தின் மதகுருவாக (Chaplain) இருந்த ஜான் ஓவன் (John Owan) என்பவர் அரசினரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், அவர் ஆலோசனையை அரசு காதில் போட்டுக்கொள்ளவில்லை, எனினும், மேலும் சில ஆண்டுகள் கழிந்ததும், முகமதியக் கல்லூரியைப் போன்று, காசியில் இந்துக் கல்லூரி ஒன்று 1792-ல் நிறுவப்பட்டது. இங்கு இந்து இளைஞர்களுக்குச் சட்டம், இலக்கியம், சமயவியல்

போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன. இந்தியாவில் பணியாற்றிய ஐரோப்பிய நீதிபதிகளுக்கு இந்திய உதவியாளர்களை அளிப்பதே இக் கல்லூரியின் முக்கிய நோக்கமாக இருந்தது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் பட்டயச் சட்டத்தைப் (Charter) புதுப்பிப்பதுபற்றி 1793-ல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் விவாதம் நடந்தது. அப்போது, இந்திய மக்களிடம் கல்வி அறிவை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை அடிமை வாணிக எதிர்ப்பு இயக்கத்தின் தலைவரான வில்லியம் வில்பர் ஃபோர்ஸ் (William Wilber Force) என்பவர் மக்கள்சபையில் (House of Commons) கொண்டுவந்தார். இங்கிலாந்திலிருந்து ஆசிரியர்களையும். மதபோதகர்களையும் இந்தியாவுக்கு அனுப்ப வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். அவருடைய கருத்தை அரசினர் ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லா மக்களையும் போலவே, இந்துக்களுக்கும் சிறந்ததொரு சமயமும், அறநெறியும் உண்டு என்றும், எனவே அவர்களின் சமயத்திற்குப் புறம்பான கல்வியை அவர்களுக்குப் புகட்ட முயல்வது அறிவீனம் என்றும் அரசுதரப்பில் வாதிக்கப்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்களில் (Directors) ஒருவரான சார்லஸ் கிரான்ட் (Charles Grant) என்பவர் 1794-ல் அரசுக்கு அளித்த மனு ஒன்றில், இந்தியர்களுக்குக் கீழ்நாட்டுக் கல்வியையும், கலைகளையும் கற்பிப்பதைக் கண்டித்திருந்தார். மேனாட்டுக் கலைகளை ஆங்கில மொழியில் இந்தியருக்குப் போதிப்பதுதான் அவர்களுக்கு நன்மையைத் தரும் என்றும் அவர் வற்புறுத்தியிருந்தார். 'இந்தியாவில் முஸ்லிம் அரசர்கள் ஆண்டபோது, இந்தியர்களுக்குப் பாரசீகமொழியைக் கற்பித்தது போல், இந்தியர்களுக்கு ஆங்கில மொழியைப் போதிக்க வேண்டும்' என்பது கிரான்டின் கருத்து. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நீடிப்பதற்கு இந்திய இளைஞர்களை ஆங்கிலக் கல்வி கற்றவர்களாக மாற்றுவதே சிறந்தது என்று அவர் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.

கீழ்த்திசைக்கலைப் பள்ளி: வெல்லெஸ்லி பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராக 1798 முதல் 1805 வரை பதவி வகித்தார். இங்கிலாந்தில் கல்வி பயின்று, கிழக்கிந்தியக் கம்பெனியின் அலுவலர்களாக இந்தியாவுக்கு வரும் ஆங்கிலேயர்கள், இந்தியாவின் மொழிகள், சட்டங்கள், வரலாறு, பண்பாடு ஆகியவற்றையும் கற்க வேண்டியது இன்றியமையாதது என்று வெல்லெஸ்லி

கருதினர். அதனால், அந் நோக்கத்துடன் 1800-ல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டைக் கல்லூரியை நிறுவினர்; இங்கிலாந்தி லிருந்து வரும் ஆங்கிலேயர்கள் அனைவரும் கம்பெனியின்கீழ்ப் பணியேற்குமுன், இக் கல்லூரியில் மூன்றாண்டுகள் கல்வி பயில வேண்டுமென விதி செய்தார். இக் கல்லூரியில் ஐரோப்பியப் பேராசிரியர்களோடு 80 இந்தியப் பண்டிதர்களும் பணியாற்றி னார்கள்.

வெல்லெஸ்லியின் இத் திட்டத்தைக் கம்பெனியின் இயக்குநர் கள் விரும்பவில்லை. ஆனால், ஆங்கிலச் சட்டவல்லுநர்கள் இவருடைய திட்டத்தை ஆதரித்தார்கள். இறுதியில், இக் கல்லூரியை கீழ்த்திசைக்கலைப் பள்ளியாக இயக்குநர்கள் மாற்றி விட்டனர்; எனினும், வெல்லெஸ்லியின் திட்டப்படி, 1806-ல் இங்கிலாந்திலேயே கிழக்கிந்தியக் கல்லூரி நிறுவப்பட்டது. கம்பெனி அலுவலர்கள் இக் கல்லூரியில் பயின்ற பின்னர் இந்தி யாவுக்கு வந்தனர்.

மின்டோ பிரபு 1807 முதல் 1813 வரையில் தலைமை ஆளுந ராகப் பணிபுரிந்தார். இந்தியாவில் விஞ்ஞானமும், இலக்கிய மும் புறக்கணிக்கப்படுவதைக் கண்டு இவர் வருந்தினர். அப் போதிருந்த கல்லூரிகளைச் சீர்திருத்த வேண்டுமெனவும், புதிய கல்லூரிகளை நிறுவ வேண்டுமெனவும் வற்புறுத்தினர். இவர் ஆட்சிக் காலத்தில் 1813ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டம் இயற் றப்பட்டது. இவருடைய வற்புறுத்தலின் காரணமாக இச் சட்டத் தில், 'இந்தியக் கல்வி வளர்ச்சிக்காகவும், இலக்கிய முன்னேற்றத் திற்காகவும், விஞ்ஞான அறிவுப் பெருக்கத்திற்காகவும் ஆண்டு தோறும் இலட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும்' என்னும் ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது.

கம்பெனியின் அச்சம் : இந்தியாவுக்கு வந்த தலைமை ஆளு நர்களில் ஒருசிலர் கல்வி வளர்ச்சியில் அவ்வப்போது அக்கறை காட்டினாலும், பொதுவாகக் கல்வித்துறையில் கம்பெனியார் கவனம் செலுத்தவில்லை என்றே சொல்ல வேண்டும். இந்தி யாவில் கல்வியறிவு வளர்ந்தால், ஆங்கில ஆட்சிக்குக் குந்தகம் ஏற்படும் என்று கம்பெனியார் கருதினர். மின்டோ பிரபுவுக்குப் பின் இந்தியாவின் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்ற ஹேஸ் டிங்ஸ் பிரபு, கம்பெனியின் இக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தார். 'நாட்டு விவகாரங்களை இந்தியர்கள் விரிவாக அறிந்துகொள்ள வழிசெய்தால், அவர்கள் ஆங்கில ஆட்சிக்குக் கீழ்ப்படிய மறுப்பார்கள் என்பது தவறான கருத்து. இக்

கொள்கையை எனது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று ஹேஸ்டிங்ஸ் 1816-ல் பகிரங்கமாக அறிவித்தார். சிற்சில நல் வாய்ப்புகளைப் பெறுவதற்காக, நேர்மையற்ற முறையில் மக்களின் கல்வி அறிவு வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது பிரிட்டி சாரின் பண்பாட்டுக்குச் சிறிதும் பொருந்தாது என்று ஹேஸ் டிங்ஸ் கூறினர். மதபோதகர்களும், மற்றவர்களும் நாட்டு மொழிக் கல்விக்கான பள்ளிகள் நிறுவுவதற்கு ஹேஸ்டிங்ஸ் ஊக்கமளித்தார்; இந்தியர்களின் முயற்சியால் 1817-ல் கல்கத் தாவில் இந்துக் கல்லூரி ஒன்று தோன்றியது. அதில், ஆங் கிலமும், மேனுட்டு விஞ்ஞானமும் கற்பிக்கப்பட்டன. ஹேஸ் டிங்ஸ் இக் கல்லூரியின் புரவலராக இருந்தார்.

சிறந்த முதலீடு: ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்கு பிறகு தலைமை ஆளுநராக வந்த மன்ரூ பிரபுவும், முன்னவரைப் போலவே கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில் பரந்த மனப்போக்கு உடையவராக இருந்தார். கல்வி வளர்ச்சிக்கு எவ்வளவு செலவு செய்தாலும் அது சிறந்த முதலீடு என்பது அவருடைய கருத்து. மக்களின் கல்வியறிவுப் பெருக்கத்திற்காக அரசினர் எத்துணைப் பணம் செலவிட்டாலும், அதனுல் நாட்டுக்கும் அரசுக்கும் நன் மையே தவிரத் தீமை இல்லை என்று அவர் வற்புறுத்தினர். சுயஆட்சி பெறுவதற்கு இந்தியர்களுக்குப் பயிற்சியளிப்பதே ஆங்கில ஆட்சியின் நோக்கமாக இருக்கவேண்டுமெனக் கருதி வந்த மன்ரூ, இதற்கு இந்தியர்களுக்குக் கல்வியறிவு இன்றி யமையாதது என்று வலியுறுத்தினர். தமது இக் கொள்கைக்கு இணங்க அவர் 1822-ல் பல கல்வித் திட்டங்களைச் செயற் படுத்தினர்.

இராம்மோகன் முயற்சி: இந்தியச் சீர்திருத்தவாதிகளின் முன் னேடியாகத் திகழ்ந்த 'ராஜா' இராம்மோகன்ராய், மேனுட்டுக் கல்வியை இந்தியர் கற்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்தார். ஐரோப்பிய மொழிகளையும், விஞ்ஞானத்தையும் இந்துக்கள் கற்பதற்காகக் கல்கத்தாவில் ஓர் இந்துக் கல்லூரியை நிறுவுவதற்கு இராம்மோகன் முயற்சி மேற்கொண்டார். இதற் கெனச் சங்கம் ஒன்றையும் தொடங்கினர். இவருடைய முயற்சி யினுல்தான் 1817-ல் கல்கத்தாவில் இந்துக் கல்லூரி தோன்றியது.

பம்பாய் ஆளுநராக இருந்த எல்ஃபின்ஸ்டன் என்பவர் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டிவந்தார். உயர்தரக் கல்வி வளர்ச்சிக்காக அவர் ஒரு திட்டம் வகுத்தார். இதன்படி, ஆங்கிலம், ஐரோப்பிய விஞ்ஞானம், பூகோளம், வரலாறு

இவற்றைப் போதிக்கும் பள்ளிகள் நிறுவ வேண்டுமென வற்புறுத்தி வந்தார். தமது திட்டப்படி அவரே பம்பாயிலும் பூனாவிலும் பள்ளிகளை நிறுவினர். 1834-ல் பம்பாயில் எல்ஃபின்ஸ்டன் கல்லூரி நிறுவப்பட்டது. இந்திய நிருவாகத்தின் உயர்பதவிகளை ஏற்பதற்குத் தகுதி வாய்ந்த இந்தியர்களை இக் கல்லூரி உருவாக்கி வந்தது.

இதற்கிடையில் இந்தியர்களிடையே ஆங்கிலம் பயிலவேண்டுமென்ற ஆர்வம் பெருகியது. ஆங்கில நூல்கள் ஆயிரக்கணக்கில் விற்பனையாயின. சமஸ்கிருத, அரபு நூல்களின் விற்பனை குறைந்தது. கல்கத்தாவிலிருந்த முகமதியக் கல்லூரியிலும் சமஸ்கிருதக் கல்லூரியிலும் புதிதாக ஆங்கில வகுப்புகள் தொடங்கப்பட்டன.

ஆங்கிலம் பாடமொழி: இந்தச் சமயத்தில் புகழ்பெற்ற ஆங்கிலக் கல்வி யறிஞரான மெக்காலே இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இவர் வந்தபொழுது, இந் நாட்டின் கல்விமுறை பற்றி அறிஞர்களிடையே கருத்துவேற்றுமை நிலவி வந்தது. கல்விக்குரிய மானியங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும், உயர்கல்வியை ஆங்கிலத்தில் கற்பிப்பதா, அரபு அல்லது பாரசீக மொழியில் கற்பிப்பதா என்பதுபற்றியும் சர்ச்சை நிலவியது. இதுபற்றி முடிவெடுப்பதற்காக மெக்காலேயின் தலைமையில் குழு ஒன்றை அப்போது தலைமை ஆளுநராக இருந்த பென்டிங்கு பிரபு நியமித்தார். இக் குழுவில் உறுப்பினர்களாக இருந்த வில்சன் போன்ற அறிஞர்கள், 'சமஸ்கிருதமும் அரபுமொழியும் பயிலும் மாணவர்களுக்கு அம் மொழிகளிலேயே நூல்களை வெளியிட வேண்டும்' என்று வாதிட்டனர். ஆனால், சார்லஸ் டிரவிலியன் போன்றவர்கள் மேனாட்டுக் கல்வியை ஆதரித்தார்கள். ஆங்கிலத்தின் வாயிலாகவே பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்றும் அவர்கள் கருதினர்கள். சமஸ்கிருதத்திலும் அரபுமொழியிலும் பாடநூல்கள் வெளியிடுவதை அவர்கள் எதிர்த்தனர். குழுவின் தலைவர் என்ற முறையில் அறிக்கை எழுதிய மெக்காலே, கீழ்நாட்டுக் கல்வியைக் கண்டித்தும், ஆங்கிலக் கல்வியைச் சிறப்பித்தும் தம் கருத்தைத் தெரிவித்தார். 'இந்திய மொழிகளில்மட்டுமே கல்வி கற்பித்தால், முப்பதடி உயரங்கொண்ட மன்னர்கள் முப்பதினாயிரம் ஆண்டுகள் ஆண்டார்கள் என்று கூறுகிற வரலாற்றையும், வெண்ணெயும், வெல்லப் பாகும் நிறைந்தனவே கடல்கள் என்று கூறுகிற புவியியலையும், ஆங்கில ஆரம்பப் பள்ளியில் படிக்கும் சிறுமிகளும் சிரிக்கத்தக்க வான நூலையும், குதிரைக்கு லாடமடிக்கும் ஓர்

ஆங்கிலத் தொழிலாளியைக்கூட வெட்கித் தலைகுனியச் செய்யக் கூடிய மருத்துவ நூலையுமே மக்கள் படித்துக்கொண்டிருப்பார்கள். அரசாங்கச் செலவின் இத்தகைய அறியாமையைப் பரப்புதல் அடாது' என்று அவர் தமது குறிப்பில் அறுதியிட்டுக் கூறியது ஏனைய உறுப்பினர்களின் மனத்தில் ஆழப்பதிந்து அவர்களது கருத்தை மாற்றிவிட்டது. அவருடைய கருத்தை பென்டிங் பிரபு ஏற்றுக்கொண்டு 1835-ல் அரசு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார். இதன்படி ஆங்கிலம் ஆட்சிமொழியாகியது. இந்தியக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆங்கிலமே பாடமொழி யாக்கப்பட்டது.

இந்தியாவுக்கு வந்த கிறித்துவப் பாதிரிமார்கள் பலரும் இங்குக் கல்விவளர்ச்சிக்கு உதவினார்கள். 1829-ல் இந்தியாவுக்கு வந்த அறிஞர் அலெக்சாந்தர் டஃப் (Alexander Duff) இந்தியரின் கல்விவளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். 1835-ல் கல்கத்தாவில் மருத்துவக் கல்லூரி ஒன்றை பென்டிங்கு நிறுவினார். அங்கிருந்து இரண்டு மாணவர்கள் மேற்படிப்புக்காக 1844-ல் இலண்டன் சென்றனர். அவர்களுக்குத் துவாரகநாத் தாகூர் பொருளுதவி செய்தார். கல்விவளர்ச்சியில் சிறந்த ஆர்வம்கொண்டிருந்த டேவிட் ஹேர் (David Hare) என்பவர், கைக்கடிகாரத் தொழில்மூலம் தாம் ஈட்டிய பொருளையெல்லாம் கல்விவளர்ச்சிக்காகச் செலவிட்டார். 1845-ல் பம்பாயில் ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டது. 1847-ல் ரூர்க்கி என்ற இடத்தில் பொறியியல் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டது. பெண்கல்வியில் வங்காள மக்கள் ஆர்வம் காட்டவில்லை எனினும், தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்த டிரிங்க்வாட்டர் பெத்யூம் (Drinkwater Bethume) என்பவர், பெண்களுக்கான பள்ளி ஒன்றை 1849-ல் நிறுவி, அதற்கு நிதி உதவி அளித்துவந்தார்.

கல்விப் பட்டயம் : இந்தியாவின் கல்விவளர்ச்சியில் 1854ஆம் ஆண்டை ஒரு முக்கிய மைல்கல் என்று சொல்லவேண்டும். அப்போது டல்ஹௌசி தலைமை ஆளுநராக இருந்தார். அவர் கல்வித்துறையில் மிகுந்த ஆர்வமுடையவர். 1843 முதல் 1853 வரை வடமேற்கு மாநிலங்களின் துணை ஆளுநராக இருந்து தயாரித்த உள்நாட்டுக் கல்விமுறைத் திட்டத்தை அவர் ஏற்றுக்கொண்டார். பெண்கல்வியிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. டிரிங்க்வாட்டர் பெத்யூம் நிறுவிய பெண்கள் பள்ளிக்கு, அவர் இறந்த பிறகு டல்ஹௌசி உதவியளித்து வந்தார்.

1854ஆம் ஆண்டில் சர் சார்லஸ் உட் (Sir Charles Wood) என்பவர் இந்தியக் கல்வித்திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பினார். இத் திட்டம் 'இந்தியாவின் கல்வித்துறைப் பட்டயம்' (Magna Carta of English Education in India) எனப் புகழப்படுகிறது. இத் திட்டத்திற்கு டல்ஹௌசி முழு ஆதரவு தெரிவித்தார். இதில் இந்தியாவில் தொடக்கக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் அடங்கியிருந்தன. இந்திய மொழிகளைப் படிப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்றும், இந்திய மொழிகள், ஆங்கில மொழி இரண்டிலும் பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டுமெனவும் இத் திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று தலைமை மாநிலங்களிலும் தனித்தனியே மூன்று பல்கலைக்கழகங்கள் அமைக்க வேண்டுமென இத் திட்டம் குறிப்பிட்டிருந்தது. சாதிசமயப் பாகுபாடு கருதாமல், கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடும் தனியார்களுக்கு அரசு தாராளமாகப் பொருளுதவி வழங்கி ஊக்கமளிக்க வேண்டுமென்றும் இத் திட்டம் வலியுறுத்தியது. இந்த ஆலோசனைகளை எல்லாம் தலைமை ஆளுநர் பெருமகிழ்வுடன் ஏற்று, அவற்றைச் செயற்படுத்தலானார். 1857-ல் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களிலும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் தொடங்கப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலும் பொதுக் கல்வி இயக்குநர் (Director of Puplic Instruction) ஒருவர் நியமிக்கப்பட்டார்.

உயர்கல்வி வளர்ச்சி: உட் என்பாரின் திட்டம் எந்த அளவுக்குச் செயற்படுகிறது என்பதை ஆராய்ந்து, அத் திட்டத்தை மேலும் தீவிரமாகச் செயற்படுத்துவதற்குரிய ஆலோசனைகளைக் கூறுவதற்காக 1882–ல் அப்போது அரசப் பிரதிநிதியாக இருந்த ரிப்பன் பிரபு ஒரு குழுவை நியமித்தார். இதற்கு ஹன்டர் குழு (Hunter Commission) என்று பெயர். இக் குழு விரிவாக ஆராய்ந்து, பல பரிந்துரைகளைச் செய்தது. அவற்றுள் முக்கியமானவை வருமாறு: (1) உயர்கல்வி நிறுவனங்களின் நிருவாகத்தில் அரசு நேரடியாகப் பங்குபெறுதல் கூடாது. கல்வி முறை பாதிக்காதபடி, ஒரு கல்லூரி அல்லது உயர்தரப்பள்ளியின் நிருவாகத்தை இந்தியரின் நிருவாகத்திற்கு மாற்றிவிடவேண்டும்; (2) கல்லூரிகளுக்கு மானியங்கள் வழங்க அரசு வழிசெய்ய வேண்டும்; (3) அரசு கல்லூரிகளுக்கும், தனியார் கல்லூரிகளுக்கும், பொதுவான மாதிரிப் பாடநூல் ஒன்றைத் தயாரிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்; (4) தொடக்கக் கல்வி வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இதற்கென மாநில

அரசின் வருவாயில் ஒரு பகுதியைத் தனியாக ஒதுக்க வேண்டும். மாநில அரசு, மாவட்டக் கழகங்கங்கள், நகராட்சிகள் அனைத்தும் தொடக்கக் கல்வியை வழங்க வேண்டும்.

ஹன்டர் குழுவின் பரிந்துரைகளை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. நாட்டில் ஒவ்வோராண்டிலும் கல்வித்துறையில் ஏற்பட்டுவரும் வளர்ச்சிபற்றி ஆண்டறிக்கை தயாரிப்பதற்கும் அரசு ஆணையிட்டது. இதன்பின் உயர்கல்வி முன்னேற்றம் மிக வேகமாக நடைபெற்றது.

கர்சான் விதித்த கட்டுப்பசடு : கர்சான் பிரபு அரசப் பிரதிநிதியாக இருந்தபோது 1901-ல் கல்வி வல்லுநர்கள் மாநாடு ஒன்று சிம்லாவில் நடந்தது. இதற்கு இந்தியர் எவரும் அழைக்கப்படவில்லை. சென்னைக் கிறித்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் மில்லர் ஒருவர்தாம் அம்மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் அரசு சார்பற்றவர். 1902-ல் இந்தியப் பல்கலைக்கழகங்களின் நிலைபற்றி ஆராய்வதற்காகச் சர் தாமஸ் ராலே என்பவர் தலைமையில் குழு ஒன்றைக் கர்சான் நியமித்தார். இதில் இந்து உறுப்பினர் ஒருவரும், முஸ்லிம் உறுப்பினர் ஒருவரும் இருந்தனர். இந்துக்களின் பிரதிநிதியாக இருந்தவர் குருதாஸ் பானர்ஜி என்ற நீதிபதியாவார். பல்கலைக்கழகக் கல்விபற்றி இவர் கூறிய கருத்துகளைக் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இக் குழுவில் செய்த பரிந்துரைக்கிணங்க 1904-ல் பல்கலைக்கழகச் சட்டம் நிறைவேறியது. இதன்படி, பழைய பல்கலைக்கழகங்களின் சட்ட அதிகாரங்கள் விரிவு படுத்தப்பட்டன. எல்லாப் பல்கலைக்கழகங்களும் கல்வி போதனை நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டன. பல்கலைக் கழங்களின் ஆட்சிப் பேரவையும் (Senate), ஆட்சிக் குழுவும் (Syndicate) சீர்திருத்தி அமைக்கப்பட்டன. பல்கலைக்கழகங்களிலிருந்து வந்த சில குறைபாடுகள் இச் சட்டத்தினால் நீங்கின. எனினும், பல்கலைக்கழகங்களின்மீது இருந்துவந்த அரசு கட்டுப்பாடு மேலும் பலவகைகளில் கடுமையாகியது. எனவே, இச்சட்டத்தின் குறைபாடுகளை மத்திய சட்டசபையில் கோபால கிருஷ்ணா கோகலே எடுத்துக் கூறினர். சர் பிரோஸ் ஷா மேத்தாவும் இச்சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். எனினும் சட்டத்தைக் கர்சான் பிடிவாதமாகத் தொடர்ந்து செயலாக்கினர். கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள்மீது பல்கலைக்கழகங்களின் கட்டுப்பாடு மிகுதியாகியது. கர்சான் பிரபு தமது இந்தக் கல்விச் சட்டத்தினால், பொதுவாக இந்தியரின் வெறுப்புக்கும், குறிப்பாகத் தேசியவாதிகளின் வெறுப்புக்கும் ஆளானர்.

பல்கலைக்கழகக் கல்வி: இரண்டாம் ஹார்டிஞ்சுப் பிரபு அரசப் பிரதிநிதியாக இருந்த காலத்தில், 1913-ல் உயர்கல்வி பற்றிய அரசின் கொள்கையை விளக்கி மத்திய அரசினர் ஒரு தீர்மானம் வெளியிட்டனர். இதில் பல்கலைக்கழகங்களின் ஆட்சி எல்லையை வரையறுக்க வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் கற்பிக்கும் பல்கலைக்கழகங்களும், உண்டுறைப் (Resdential) பல்கலைக்கழகங்களும் நிறுவ வேண்டுமெனவும் இதில் குறிப்பிட்டிருந்தது. முதல் உலகப் போர் மூண்டதால், அரசின் இக்கொள்கையைச் செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. எனினும், காசியில் 1916-லும், பாட்னாவில் 1917-லும் பல்கலைக்கழங்கள் நிறுவப்பட்டன.

செம்ஸ்ஃபோர்டு பிரபு அரசப் பிரதிநிதியாக பணியாற்றிய போது, 1917-ல் சர் மைக்கேல் சாட்லர் (Sir Michal Sadler) தலைமையில், கல்கத்தாப் பல்கலைக்கழத்தின் சீரமைப்புப்பற்றி ஆராய்வதற்காக ஒரு குழுவை அரசு நியமித்தது. இக் குழு, உயர்நிலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி குறித்த எல்லா அம்சங்கள்பற்றியும் விரிவாக ஆராய்ந்து 1919-ல் ஓர் அறிக்கையை அளித்தது. இது கற்பிக்கும் பல்கலைக்கழகங்கள் அமைப்பதை ஆதரித்தது. டாக்காவில் 1921-ல் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் இக் குழுவின் பரிந்துரைகளின்படி அமைக்கப்பட்டது. பழைய பல்கலைக்கழகங்கள் சீர்பெறுவதற்கும், புதிய பல்கலைக்கழகங்கள் தோன்றுவதற்கும் இக் குழுவின் அறிக்கை தூண்டுகோலாக விளங்கியது.

1857-ல் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று இடங்களிலும் பல்கலைக்கழகங்கள் ஏற்பட்ட பின்னர், 1882-ல் பஞ்சாபிலும், 1887-ல் அலகாபாத்திலும் பல்கலைக்கழகங்கள் தோன்றின. 1916-க்கும் 1929-க்கு மிடையே 13 பல்கலைக்கழகங்கள் தோன்றின. அவை: காசி இந்துப் பல்கலைக்கழகம், மைசூர்ப் பல்கலைக்கழகம் (1916); பாட்னாப் பல்கலைக் கழகம் (1917); ஐதராபாத் உஸ்மானியாப் பல்கலைக்கழகம் (1918); அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம், இரங்கூன் பல்கலைக்கழகம், இலட்சுமணபுரி பல்கலைக்கழகம் (1920); டாக்கா பல்கலைக்கழகம் (1921), தில்லி (1922); நாகபுரிப் (1923) பல்கலைக்கழகங்கள். ஆந்திரப் பல்கலைக்கழகம் (1926); ஆக்ராப் பல்கலைக்கழகம் (1927); அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1929). 1925ஆம் ஆண்டில் பல்கலைக்கழங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக அகில இந்தியப் பல்கலைக்கழக வாரியம் (Inter-University Board) நிறுவப்பட்டது.

1919-ல் நிறைவேறிய இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி, மாநிலச் சட்டசபைகளுக்குப் பொறுப்பான இந்திய அமைச்சர்

களிடம் கல்வித்துறையின் நிருவாகம் மாற்றப்பட்டது. எனினும், உயர்நிலைக் கல்விபற்றிய கொள்கையை வகுப்பதும் அதைக் கண்காணிப்பதும் மத்திய அரசிடமே இருந்துவந்தது. 1935ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பல்கலைக்கழகக் கல்வி நிருவாகம் முழுவதும் மாநில அரசுகளின் கைக்கு மாறியது.

இச் சமயம் பஞ்சாப் பல்கலைக்கழக ஆய்வுக் குழு, பல்கலைக் கழகம் தனது அதிகார வரம்பினை உணர்ந்து நடக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. பல்கலைக் கல்விக்குத் தகுதியற்றவர்களைப் பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதால் உண்டாகும் அவலநிலையையும் இக் குழு சுட்டிக் காட்டியது. உயர்நிலைப் பள்ளிக் கல்வி எல்லா வகைகளிலும் சீர்பட வேண்டுவதோடு மாணவர்களின் கவனத்தைத் தொழிற்கல்வியில் திருப்பவேண்டுமெனவும் இக் குழு வற்புறுத்தியது.

ஆதாரக் கல்வி: லின்லித்கோப் பிரபுவின் காலத்தில் திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம் தோன்றியது. காந்தியடிகள் 1938-ல் 'வார்தா ஆதாரக்கல்வித் திட்டம்' என வழங்கப்படும் தமது புதிய கல்வித் திட்டத்தை வகுத்தார். கல்வி நிறுவனங்களில் உள்ள தொழில்களைக் கல்வியின் கருவியாகக் கொண்டு மாணவர்களுக்கு எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதே இத் திட்டத்தின் அடிப்படையாகும். இக் கல்விமுறையைப் பலரும் போற்றினர். இந்த ஆதாரக் கல்வி, இந்தியாவின் கல்விமுறையில் நிலையான ஓரிடத்தைப் பெற்றுள்ளது. பம்பாய் இந்திய மகளிர் பல்கலைக்கழகமும், ஹரித்துவார் அருகேயுள்ள குருகுலம் பல்கலைக்கழகமும், கவியரசர் தாகூர் சாந்திநிகேதனத்தில் நிறுவிய விசுவபாரதிப் பல்கலைக்கழகமும் இந்தியக் கல்விவளர்ச்சி வரலாற்றில் சிறப்பிடம் பெறத் தக்கவை. 'தாகூர் 1921-ல் நிறுவிய விசுவபாரதி என்னும் உலகப் பல்கலைக்கழகமானது, உயர்ந்த எதிர்காலத்தைக் காண்பதற்குரிய முயற்சியாகும். அது, அவர் இந்தியாவில் தன்மானமும் ஆன்மீக விடுதலையும் வளர்வதற்கென மேற்கொண்ட முயற்சியின் வெற்றிச் சின்னமாகும்' என்று எட்வர்ட் தாம்ப்சன் (Edward Thompson) பாராட்டியுள்ளார்.

இந்திய அரசின் கல்வி ஆலோசகராக இருந்த சர் ஜான் சார்ஜன்ட் (Sir John Sergeant) என்பவர் கல்வித்திட்டம் ஒன்றைத் தயாரித்தார். 'ஆறு முதல் 14 வயது வரையுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியருக்கும் இலவசமாகக் கட்டாயக் கல்வி அளிக்க

வேண்டும்' என்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தைச் செயலாக்க ரூ 200 கோடி வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டது. இள நிலை (Junior Stage) ஐந்தாண்டுகளும், மூத்த நிலை (Senior Stage) மூன்றாண்டுகளுமாக இரண்டு கட்டங்களாக அடிப்படைக் கல்வி அமையவேண்டும். அடிப்படை நிலைக் கல்வி முடிந்த பிறகு, எல்லா மாணவர்களையும் உயர் நிலைக் கல்விக்கு அனுப்பிவிடக் கூடாது. உயர்நிலைக் கல்வியினால் உண்மையில் பயனடைவார்கள் எனக் கருதப்படும் மாணவர்களைத்தாம் உயர்நிலைக் கல்விக்கு அனுப்ப வேண்டும். பள்ளிகளை இயன்றவரையில் அரசு நிதியிலிருந்தே பராமரிக்க வேண்டும். கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டும். நாடு முழுதும் தேசிய இளைஞர் இயக்கம் ஒன்றைத் தொடங்க வேண்டும். இவ் வியக்கம், நாட்டின் சேவைக்கு ஏற்றவாறு இளைஞர்களின் உடற்கட்டை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும். இவ்வாறு சார்ஜன்ட் தமது திட்டத்தில் ஆலோசனைகள் கூறி இருந்தார்.

இராதாகிருஷ்ணன் குழுப் பரிந்துரை: இந்தியா சுதந்திரமடைந்த பிறகு டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் (பின்னாளைய குடியரசு தலைவர்) தலைமையில் பல்கலைக்கழக ஆய்வுக் குழு ஒன்றை 1948-ல் இந்திய அரசினர் நியமித்தனர். இக் குழுவினர் நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து, பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கங்கள், பாடத்திட்டங்கள், நிதி நிலைமை, ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள், வேலை நிலைமைகள், மாணவர்களின் ஒழுக்கம் போன்ற பல்வேறு சிக்கல்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து 1949-ல் தமது அறிக்கையை அரசிடம் அளித்தனர். சாந்தி நிகேதன், ஜமியா மிலியா (Jamia Millia) ஆகியவற்றை முன்மாதிரியாகக்கொண்டு கிராமியப் பல்கலைக்கழகங்களை நிறுவவேண்டுமென இவ் வறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. கல்விக்கு மிகக் குறைந்த அளவு நிதி ஒதுக்குவதை இந்த அறிக்கை கண்டித்தது. ஏழை மாணவர்கள் பயன்பெறும் வகையில், உதவிச்சம்பளம் (Scholarships), பயிற்சிக்கால உதவிப்பணம் (Stipend) ஆகியவற்றுக்கான மானியங்களைக் கணிசமான அளவு உயர்த்த வேண்டுமெனவும் இக் குழு வற்புறுத்தி யிருந்தது. ஒவ்வொரு கல்லூரியிலும் ஆயிரம் மாணவர்களுக்குமேல் அனுமதிக்கக் கூடாது. மத்திய ஆட்சிமொழி, தாய்மொழியாக இல்லாமலிருக்குமெனில், பாடமொழியாக மத்திய ஆட்சிமொழியே இருக்க வேண்டும். மத்திய ஆட்சிமொழியும், தாய்மொழியும் ஒன்றாக இருக்குமெனில், வேறொரு இந்திய மொழியை மாணவர்கள் எடுத்துப் படிக்க வேண்டும். கல்வி நிறுவனங்

களில் பாடமொழியாக இருக்கும் ஆங்கிலத்தை அகற்றுவதில் அவசரம் காட்டக் கூடாது. கல்வித்துறையில் சமயப் பாகுபாடு காட்டலாகாது. உயர்நிலைக் கல்வியின்போது கல்லூரி நிலையிலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதிக்கலாம். ஆசிரியர்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்துவதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறெல்லாம் இராதாகிருஷ்ணன் குழு ஆலோசனைகள் கூறியிருந்தது.

பல்கலைக்கழக மானியக் குழு
(University Grants Commission)

1956ஆம் ஆண்டில் இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழு (University Grants Commission) ஒன்றை இந்தியப் பாராளுமன்றம் நிறுவியது. அதற்குரிய சட்டமொன்றையும் அது தோற்றுவித்தது. அதன்படி ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட குழுவை மைய அரசாங்கம் ஆறு ஆண்டுகளுக்கொரு முறை நியமிக்கிறது. அதன் தலைவரையும் மைய அரசாங்கமே நியமிக்கிறது. குழு நாட்டிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களையும் கலந்தாலோசித்து, பல்கலைக்கழகப் படிப்பின் தரம், தேர்வு முறை, ஆராய்ச்சிபற்றிய பரிந்துரைகளை வழங்குகிறது. அவற்றைச் செயலாக்குவதற்குத் தேவையான நிதிவசதிகளை வழங்கும்படி அது மைய அல்லது மாநில அரசாங்கங்களுக்கு அறிவுரை வழங்குகிறது. ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு, அவர்களது பயணத்துக்கும், நூல்கள் வாங்குவதற்குமான பொருளுதவியைச் செய்கிறது. அறிவின் முதிர்ந்த் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சட்டப்படி ஓய்வுபெற்ற பின்னும் அவர்கள் தொடர்ந்து அறிவுத் தொண்டு செய்வதற்காக அன்னார்க்கு ஊதியம் வழங்குகிறது. சிறந்த பேராசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களது விரிவுரைகள் நாடெங்குமுள்ள பல்கலைக்கழகங்களில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறது. குறிப்பிட்ட பல்கலைக்கழகம் வேண்டினால் அதன் பல்வேறு துறைகளையோ ஒரு குறிப்பிட்ட துறையையோ ஆய்ந்து அதன்பின் தேவையான பரிந்துரைகளை வழங்கச் சோதனைக் குழுக்களை இது அமைத்துத் தருகிறது. பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மேம்படப் பல வகையிலும் பாடுபட்டு அதற்கான மானியமும் வழங்குகிறது. தனது பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளாத பல்கலைக்கழகத்துக்கு மானியத்தை நிறுத்திவிடும் அதிகாரமும் இக் குழுவிற்கு உண்டு.

28. இந்தியாவில் செய்தித்தாள்களின் வளர்ச்சி வரலாறு

இன்றைய உலகமக்களின் வாழ்க்கையில் செய்தித்தாள்கள் இன்றியமையாத ஓர் இடத்தைப் பெற்றுள்ளன. அரசியல், சமூகம், கல்வி, விஞ்ஞானம், வாணிகம், சமயம் முதலிய எல்லாத் துறைகளிலும் அன்றாடம் கண்டுபிடிக்கப்படும் புதிய தகவல்கள், நிகழும் புதிய நிகழ்ச்சிகள் அனைத்தையும் மக்கள் அவ்வப்போது அறிந்துகொள்ள உதவுபவை செய்தித்தாள்களாகும்.

மனித இனம் தோன்றிய காலத்திலேயே செய்திகளை அறிய வேண்டுமென்ற ஆர்வமும் மனிதனுடன் தோன்றிவிட்டது என லாம். அது முதல் புதிய செய்திகளை அறியவும், அச் செய்தி களைப் பரப்புவதற்கும் அவன் பற்பல புதிய முறைகளைக் கண்டு பிடித்தும் கையாண்டும் வந்திருக்கிறான். மனிதன் எழுதுவதற்கு அறிந்துகொண்டவுடனேயே செய்தி பரப்புதலும் தொடங்கி விட்டது. இம் முயற்சியின் இறுதிப் பரிணாமமே இன்றைய செய்தித்தாள் எனலாம்.

தோற்றம்: செய்திகளைப் பரப்புவது இந்தியாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் புதியதோ புதுமையோ அன்று. பழங்காலக் கோவில் களும், ஆறு குளங்களின் படித்துறைகளும், கிணற்றடியும், ஊர்ச்சாவடியும் மக்கள் ஒருவருக்கொருவர் செய்திகளைப் பரி மாறிக் கொள்ளவும், கருத்துகளைத் தெரிவித்துக் கலந்துரை யாடவும் அரங்குகளாகப் பயன்பட்டன. அன்றியும், இன்றைய இலக்கணப்படி செய்தித்தாள்கள் தோன்றுவதற்குப் பல நூற் றாண்டுகளுக்கு முன்பிருந்தே செய்திகளைத் தெரிவிக்கும் ஒரு தனி முறை இந் நாட்டில் வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. அர சர்களின் கல்வெட்டுகளும், அசோகரின் தூபிகளும், சோழரின் சாசனங்களும், பாண்டியரின் மெய்க்கீர்த்திகளும், சேரரின் செப் பேடுகளும் அக்கால மன்னர்கள் தம் கருத்துகளையும், ஆட்சியின்

சாதனைகளையும் சமகாலக் குடிமக்களுக்கும் பிற்காலச் சந்ததியின ருக்கும் தெரிவிக்க எழுப்பிய செய்திபரப்பு சாதனங்களேயன்றி வேறென்ன? முகலாயப் பேரரசர்கள் தம் ஆட்சிப் பகுதிகளில் ஆங்காங்கே நிகழும் நிகழ்ச்சிகளை அதிகாரிகள் அனுப்பும் நாட் குறிப்புகள், அறிக்கைகள் மூலம் அவ்வப்போது அறிந்துகொண் டனராம். இவையெல்லாம் இன்றைய செய்தித்தாள்களுக்கு முன்னோடிகளல்லவா? ஆகவே, இன்று காணும் அச்சுப் பொறி யும், காகிதமும் இந் நாட்டிற்கு வந்த பிறகே இங்குச் செய்திக் கலை (Journalisn) தோன்றியது என்பது பொருந்தாது.

ஆனால், இந்தியாவிற்கு அச்சு எந்திரம் வந்த பின்னரே இங்கு நூல்களை அச்சிடவும், செய்தி இதழ்களைத் தொடங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் விரு முயற்சிகளுக்குமே முன்னோடியாக இருந்தவர்கள் மேலைநாடுகளிலிருந்து கிறித்துவ மதத்தைப் பரப்ப வந்த பாதிரிமார்களும், மற்ற ஐரோப்பியர் களுமே யாவர். ஐரோப்பாவுக்கு வெளியே கூட்டன்பர்கு அச்சு எந்திரத்தை முதன்முதலாகப் பெற்ற நாடு மெக்சிக்கோ. அடுத்த நாடு இந்தியாவே யாகும். இந்திய மண்ணில் 1556 செப்டம்பர் 6-ல் போர்ச்சுக்கீசியப் பாதிரியார்கள் அச்சு எந் திரத்தை நிறுவினார்கள். ஆங்கிலேயர்களின் பொறுப்பில் இந்தியாவில் அச்சு எந்திரம் முதலில் நிறுவப்பட்ட நகரம் சென்னையாகும். இங்கு 1711-ல் அச்சு எந்திரம் நிறுவப்பட்டது.

முன்னோடி: இங்கிலாந்தில் முதலாவது செய்தித்தாள் தோன்றிய 80 ஆண்டுகளுக்குப் பிறகு 1780-ல் இந்தியாவில் முதல் செய்தித்தாள் கல்கத்தாவில் தோன்றியது. இதன் பெயர் ‘பெங்கால் கெசட்’ (Bengal Gazette) என்பதாகும். இது ஒரு வார இதழ். இதைத் தொடங்கியவர் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (James Augustus Hicky) என்ற ஆங்கிலேயர் ஆவார். அப் போது இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. முதலாவது செய்தித்தாளை இந்தியாவில் தொடங்கியதுடன், பத்திரிகைச் சுதந்திரத்திற்கான (Freedom of the Press) போராட்டத்தையும் ஹிக்கி (Hicky) தொடங்கி வைத்தார் என்று சொல்லலாம். தமது இதழ், ‘எல்லாத் தரப்பி னருக்கும் உரிய, யாருடைய ஆதிக்கத்திற்கும் உட்படாத சுதந் திரமான அரசியல், வாணிக வார இதழ்’ என்று ஹிக்கி தம் இதழின் தன்மையை விளக்கியிருந்தார். இவ் விதழில் அவர் கிழக் கிந்திய வணிகக் குழுவின் நிருவாகத்தையும், அதன் உயர்அதி காரிகளையும் கடுமையாகக் கண்டித்து எழுதினார். வணிகக் குழு வின் ஊழல்களை அம்பலப்படுத்தினார். வணிகக் குழுவின் முன் னாள் அலுவலரான அவர் நிருவாகத்தினர் தமக்கு நீதி வழங்க

வில்லை எனக் கூறி அதிலிருந்து விலகிச் செய்திதாளைத் தொடங்கினார். அதனால் வணிகக் குழுவின்மீது தமக்கிருந்த வெறுப்பைச் செய்தித்தாளில் எழுதித் தீர்த்துக்கொண்டார். தாம் விரும்பியதைத் தம் இதழில் எழுதுவதற்குத் தமக்கு உரிமை உண்டு என்று வாதிட்டார். தொடர்ந்து கண்டனக் கணைகளைப் பொழிந்தார். அப்போது வங்காளத் தலைமை ஆளுநராக இருந்த வாரன் ஹேஸ்டிங்சின் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தார். ஹேஸ்டிங்சின் மனைவியையும் தாக்கி எழுதினார். இக் கண்டனங்களை வணிகக் குழுவினர் நெடுநாள்கள் சகித்துக் கொண்டிருக்கவில்லை. ஹிக்கியின் செய்தித்தாளை அஞ்சலில் அனுப்பத் தடைவிதித்தனர். பின்னர், ஹிக்கியையே கைது செய்து நாடு கடத்திவிட்டனர், அவருடைய செய்தித்தாளும் 1782-ல் மூடப்பட்டது. ஹிக்கியின் கொள்கை சரியோ, தவறோ பத்திரிகைச் சுதந்திரத்திற்காக முதலில் குரல் எழுப்பி அதற்கான போராட்டத்தைத் தொடங்கி வைத்தவர் அவர்தாம். 'அவர் பெருந் துணிவைக் காட்டினார்; அதனால் பேரிழப்புக்குள்ளானார். எனினும் அவர் பெயர் நீடூழி வாழ்கிறது'.

ஹிக்கியின் செய்திஇதழ் நடந்துகொண்டிருந்தபோதே, 1780ஆம் ஆண்டின் இறுதியில், 'கல்கத்தா அட்வர்டைசர்' (Calcutta Advertiser) என்னும் பெயரில் இரண்டாவது செய்தி இதழைப் பீட்டர் ரீட் (Peter Reed) என்பவர் தொடங்கினார். இதில் கிழக்கிந்திய வணிகக் குழுவின் நடவடிக்கைகளும், ஆங்கிலோ-இந்தியர், மற்ற ஐரோப்பியர் ஆகியோர்பற்றிய செய்திகளும் பெருமளவில் வெளியிடப்பட்டன. இது 50 ஆண்டுகள் வரை வாழ்ந்தது. அடுத்துச் செய்தித்தாள் தோன்றிய இரண்டாவது இந்திய நகரம் சென்னையாகும். இங்கு 1785-ல் 'மெட்ராஸ் கூரியர்' (Madras Courier) என்ற வார இதழை ரிச்சர்டு ஜான்ஸ்டன் (Richard Johnston) என்பவர் தொடங்கினார். முதலில் இது ஆங்கிலத்திலேயே வெளிவந்தது பிறகு, தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்றவுடன் பெரும்பாலும் ஆங்கிலமும், ஓரளவு தமிழும் கொண்டு வெளிவந்தது. சுமார் 30 ஆண்டுகள் வாழ்ந்திருந்தது. பம்பாயில் முதன் முதல் தோன்றிய செய்தி இதழ் 'பம்பாய் ஹெரால்டு' (Bombay Herald) என்பதாகும். இது 1789-ல் வெளியாகியது.

தொடக்கத்தில் இந்தியாவில் தோன்றிய செய்தித்தாள்கள் யாவும் ஆங்கிலேயராலேயே தொடங்கப்பட்டன. இந்தியாவிலுள்ள ஆங்கிலோ-இந்தியர்கள், ஐரோப்பியர்கள் ஆகியோருக்காகவே அவை நடத்தப்பட்டன. எனவே, இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் வெளிவந்த செய்தித்தாள்களில் பிரசுரமான செய்திகளின் சாரங்களே இந்தியச் செய்தி இதழ்களிலும் இடம்

பெற்றன. இந்திய மொழி ஒன்றில் செய்தித்தாள் ஒன்று வெளி வந்தது 1818-ல் ஆகும். இதன் பெயர் 'திக்தர்ஷன்' என்பது. இவ் வார இதழை வங்காளி மொழியில் ஜே. சி. மார்ஷன் (J. C. Morchan) என்ற பாதிரியார் நிறுவினர். இதன் பெயர் பின்னர் 'சமாச்சார் தர்பன்' என மாற்றப்பட்டது. 1820-க்குப் பிறகு குஜராத்தியிலும் வங்காளியிலும் பல செய்தி இதழ்கள் தோன்றின. அக் காலத்தில் செய்தித்தாள் உலகில் தீவிரமாக இறங்கியவர் சமயச் சீர்திருத்தவாதியான 'இராஜா இராம் மோகன்ராய்' ஆவார். அவர் 'மீரத்-உல்-அக்பார்' என்ற முதலாவது பாரசீக மொழி இதழைக் கல்கத்தாவில் தொடங்கினர். ஆனால், இச் செய்தி இதழ்கள் யாவும் ஜான் ஆடம்ஸின் செய்தித்தாள் ஒழுங்கு முறைச் சட்டத்தினல் (Press Regulation Act) நின்றுபோயின. பின்னர், இராம் மோகன் 'பங்காடட்' என்ற இதழைத் தொடங்கி வங்காளி, பாரசீகம், இந்தி, ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் செய்திகளை வெளியிட்டார். இந்தியாவில் இன்றுள்ள நாளிதழ்களில் மிகப் பழைமையானதாகக் கருதப்படும் 'ஆனந்த பஜார் பத்திரிகா' என்ற வங்காளி இதழ் 1878-ல் கல்கத்தாவில் நிறுவப்பட்டது. அதே ஆண்டில் சென்னையில் 'இந்து' என்ற வார இதழ் முகிழ்த்தது. இவ் விதழ் 1889-ல் நாளிதழாக மலர்ந்தது. 1882-ல் 'சுதேசமித்திரன்' என்னும் தமிழ் இதழ் தொடங்கப்பட்டது. 1885-ல் இந்திய தேசியக் காங்கிரஸ் தோன்றியதும் நாட்டின் அரசியல் துறையில் புதிய வேகம் பிறந்தது. நாட்டில் தேசிய உணர்ச்சி பெருக்கெடுத்தது. இந்தியச் செய்தித்தாள்களின் வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கியது. சாதாரண மக்களுக்கும் நாட்டு நடப்பை உணர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போதுதான் தாய்மொழிச் செய்தித்தாள்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது. அடுக்கடுக்காகப் பல செய்தித்தாள்கள் இந்தியா வெங்கும் எல்லா இந்திய மொழிகளிலும் தோன்றலாயின.

விடுதலைப் போரில் பங்கு: ஆங்கிலேயர் ஆட்சியில் உழன்று, விடுதலைக்குத் துடித்துக்கொண்டிருந்த ஒரு சமுதாயத்தின் உள்ளக்கிடக்கையை — மனக்கொந்தளிப்பைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இந்தியச் செய்திஇதழ்கள் விளங்கின. அவை எப்படித் தோன்றினும், யாரால் தொடங்கப்பெறினும், அவை அக்கால மக்களின் உள்ளத்தைத் தொடுவனவாய், உறங்கிக் கிடந்த நாட்டுணர்வைத் தட்டி எழுப்புவனவாய், அவ் வுணர்ச்சிகளின் வடிகாலாய் விளங்கின. செய்தித்தாள்கள் தெரிவித்த கருத்துகளும், மக்களின் கருத்தைத் திரட்டுவதில் அவை கொண்ட பங்கும், அரசினர்க்கும் செய்தித்தாள் உலகிற்கு

யிடையே உருவான பெரும் போராட்டத்திற்கு அடிகோலின. அரசினர் செய்தித்தாள்களின்மீது பல்வேறு கட்டுப்பாடுகளை உண்டாக்கியும், தளர்த்தியும், வளர்த்தும் வந்ததால், அவற்றால் செய்தித்தாள்களுக்கு நலிவும் தாழ்வும் உண்டாயின. கடுமை யான கட்டுப்பாடுகளினால் பல இதழ்கள் மறைந்துபோயின.

அரசு அடக்குமுறை: இந்தியாவில் செய்தித்தாள்கள் தலை காட்டத் தொடங்கிய காலத்திலேயே அவற்றை அடக்கி ஒடுக்க அரசினர் முயன்றனர். வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஹிக்கிக்கு நேர்ந்த கதி இதற்குச் சான்றாகும். அதன்பின் வந்த ஆங்கில ஆட்சியாளர்களும் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ற வாறு செய்தித்தாள்களை அடக்குவதும், ஊக்குவிப்பதுமாக இருந்துவந்தார்கள்.

வாரன்ஹேஸ்டிங்சுக்குப் பிறகு தலைமை ஆளுநராக வந்த கார்ன்வாலிஸ் பிரபுவும் செய்தித்தாள் உலகுடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. 'இந்திய உலகம்' (Indian World) என்ற இதழின் ஆசிரியரான டியூவான் (Duane) என் பவர் எழுதிவந்த கருத்துகள் கார்ன்வாலிசுக்குச் சீற்றத்தை உண்டாக்கின. இதனால், டியூவான் கைதுசெய்யப்பட்டுப் பலவித அவமானங்களுக் குட்படுத்தப்பட்டார். தலைமை ஆளுநருக்கும் டியூவானுக்குமிடையே ஏற்பட்ட பூசல் பல ஆண்டுகள் நீடித்தது. இறுதியில் டியூவான் ஐரோப்பாவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

1796-ல் 'டெலிகிராப்' (Telegraph) என்ற இதழின் ஆசிரிய ராகிய மெக்கன்லி (Mekenly) என்பவர், அரசு அதிகாரிகள் சிலர் மீது சில குற்றங்களைச் சாட்டிக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். இது அரசினருக்கு ஆத்திரமூட்டியது. அதே ஆண்டில், அரசின் இரகசியங்கள் சிலவற்றை வெளியிட்டமைக்காக 'பெங்கால் கெசட்' என்ற இதழை அரசு கண்டித்தது.

வெல்லெஸ்லி பிரபு: வெல்லெஸ்லி பிரபு 1798 முதல் 1805 வரை தலைமை ஆளுநராக இருந்தார். இவர் காலத்தில் செய்தித் தாள்களுக்கு எதிராக அரசின் கெடுபிடி அதிகமாகியது. ஃபிரெஞ்சுக்காரர் படையெடுப்புப்பற்றிய அச்சம் எங்கும் நிலவியது. இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்ட வேண்டு மென்ற நோக்கத்துடன் ஃபிரெஞ்சுக்காரர்களோடு திப்பு சுல்தான் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தார். நிஜாமை வெற்றிகொண்ட மராத்தியர்கள், தங்கள் ஆதிக்கத்தை விரி வாக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள். இந் நிலையில், இந்தியாவில் ஆங்கிலேயரின் நலனைக் காப்பதற்குச் செய்தித் தாள்கள் மீது கடுமையான கண்காணிப்புத் தேவையென

வெல்லெஸ்லி பிரபு கருதினர். அதனல் நாட்டில் வெளியாகும் எல்லாச் செய்தித்தாள்களையும் தணிக்கை செய்யும் முறையை 1799-ல் புகுத்தினர். செய்திததாள்களில், ஆசிரியர், வெளியிடுவோர் பெயர்களையும் பிரசுரிக்க வேண்டுமென விதி வகுக்கப் பட்டது. ‘பெங்கால் கிர்க்காரு’ (Bengal Kirkaru) என்ற இதழின் ஆசிரியரான சார்லஸ் மெக்ளீன் (Charles Maclean) மீது அரசு நடவடிக்கை எடுத்து, அவரை இங்கிலாந்துக்கு நாடு கடத்தியது. மெக்ளீனும் சும்மா இருக்கவில்லை. இங்கிலாந்து சென்றதும், வெல்லெஸ்லிக்கு எதிரான கிளர்ச்சியில் தீவிரமாகப் பங்குகொண்டார். இக் கிளர்ச்சியின் விளைவாக வெல்லெஸ்லி, பதவியிலிருந்து விலக நேர்ந்தது. அவருக்குப் பிறகு 1808 முதல் 1813 வரை மின்டோ பிரபு தலைமை ஆளுநராக இருந்தார். இவர் காலத்தில் செய்தித்தாள்கள் மீதான கட்டுப்பாடுகளில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.

ஹேஸ்டிங்ஸ் பிரபு: மின்டோ பிரபுவுக்குப் பிறகு ஹேஸ்டிங்ஸ் பிரபு தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்ருர். அவர் 1813 முதல் 1823 வரை பதவி வகித்தார். ஹேஸ்டிங்ஸ் தாராள மனப்போக்கு உடையவர். செய்தித்தாள்கள் சுதந்திரமாக இயங்க வேண்டுமென்ற கொள்கையுடையவர். எனவே, செய்தித் தாள்கள் சட்டபூர்வமான பணிகளைச் செய்வதற்கு அனுமதித் தார். குறைபாடுகளைச் செய்தித்தாள்களில் வெளிப்படையாக எடுத்துக் கூறுவதை அவர் வரவேற்ருர். வெல்லெஸ்லி காலத்தில் புகுத்தப்பட்ட செய்தித்தாள் தணிக்கையை 1817-ல் ஹேஸ்டிங்ஸ் நீக்கினர். எனினும், செய்திததாள்கள் முழுச் சுதந்திரம் பெற்று விடவில்லை. சட்டப்படி சில செய்திகளைப்பற்றிச் செய்தித்தாள் ஆசிரியர்கள் விவாதிக்கக்கூடாதென்ற தடைகள் தொடர்ந்து நீடித்தன. புதிதாகச் சில ஒழுங்குமுறைகளையும் அவர் வகுத் தார். எனினும், இவருக்கு முன்னிருந்த தலைமை ஆளுநர்களின் போக்கிலிருந்து இவருடைய போக்குப் பெரிதும் வேறுபட்டிருந்தது. இவருக்கு முந்தியவர்கள், செய்தித்தாள்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்கள். அதனல், செய்தி இதழ் ஆசிரியர்களை நாடுகடத்தவும் அவர்கள் தயங்கியதில்லை. இந் நிலையில், ஹேஸ்டிங்ஸ் கையாண்ட தாராளக் கொள்கை போற்றத்தக்கதாக இருந்தது. இவர் காலத்தில் செய்தித்தாள் தொழிலில் ஒரு புதிய வளர்ச்சி ஏற் பட்டது. தணிக்கை நீங்கியதன் காரணமாக, புதிய செய்தி இதழ்கள் தோன்றின. 1818-ல் ‘கல்கத்தா ஜெர்னல்’ (Calcutta Journal) என்னும் இதழை ஜே. எஸ். பக்கிங்காம் (J. S. Buckingam) என்பவர் தொடங்கினர். பக்கிங்காம்

துணிவும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவர். அரசின் ஊழல்களை வன்மையாகக் கண்டித்து எழுதினர். தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, சென்னை ஆளுநர் முதலியவர்கூட அவருடைய கண்டனத்திலிருந்து தப்பவில்லை.

ஜான் ஆடம் : ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்குப் பிறகு 1823 ஜனவரி முதல் ஆகஸ்டு மாதம் வரையில் ஜான் ஆடம் என்பவர் தாற்காலிகத் தலைமை ஆளுநராக இருந்துவந்தார். இவர் ஹேஸ்டிங்ஸின் ஆலோசனைக் குழுவின் தலைவராக இருந்தவர்; மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்; திறமை மிகுந்தவர். ஆனல், தாராள மனப்போக்குக் கொண்டவரல்லர். கருத்து வெளியீட்டு உரிமையைக் கடுமையாக எதிர்த்தவர். எனவே, ஹேஸ்டிங்சுக்கு நேர்மாருக, இவர் செய்தித்தாள் ஆசிரியர்களின் உரிமைகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்திஞர். பக்கிங்காம் தொடங்கிய கல்கத்தா ஜர்னலை மக்கள் ஆர்வத்துடன் படித்து ஆதரித்து வந்தார்கள். அவ் விதழை ஒடுக்கிவிடும் நோக்கத்தோடு, முன் கூட்டியே அரசிடம் உரிமம் (licence) பெருமல் செய்தித்தாளை அச்சிடக் கூடாதென்று ஆடம் ஒரு சட்டம் கொண்டுவந்தார். இச் சட்டத்தைப் பொருட்படுத்தாமல், உரிமம் பெருமலே பக்கிங்காம் தம் இதழைத் தொடர்ந்து நடத்திவந்தார். இதனல் அரசினர் இவரை இங்கிலாந்துக்கு நாடுகடத்தினர். இங்கிலாந்தில் இவர் தமது செய்தித்தாள் தொழிலைத் தொடர்ந்து நடத்தி வந்தார். இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும் உறுப்பினராஞர். தமக்கு இந்தியாவில் ஏற்பட்ட அநீதிகளைப் பாராளுமன்றத்தில் இவர் அம்பலமாக்கிஞர். அதைப்பற்றி விசாரணை நடத்தப்பட்டது. இறுதியில் கம்பெனியார் பக்கிங்காமுக்கு ஆண்டுக்கு 200 பவுன் ஓய்வு ஊதியம் அளிக்க இணங்கினர்.

வில்லியம் பிட் என்னும் பெயருடைய ஆமெர்ஸ்ட் பிரபு 1823 முதல் 1828 வரை தலைமை ஆளுநராக இருந்தார். இவர் தொடக்கத்தில் கருத்து வெளியீட்டு உரிமையை ஆதரிக்கவில்லை. எனினும் பிற்காலத்தில், செய்தித்தாள் ஆசிரியர்களின் உரிமையை இவர் போற்றிஞர். அதனல் இவ் வாசிரியர்கள் இவரைப் பாராட்டிஞர்கள்.

மன்ரோவின் பரிந்துரைகள் : இந்தியாவில் செய்தித்தாள்களின் நிலைமைபற்றி ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்கெனச் சர் தாமஸ் மன்ரோவை இந்திய அரசு நியமித்தது. அவர் இச் சிக்கல்பற்றி விரிவாக ஆராய்ந்து, தமது அறிக்கையை அரசுக்கு அளித்தார். இந்தியாவில் ஐரோப்பியர்கள் நடத்தும் செய்தித்தாள்களைப் பொறுத்தவரையில், அவற்றின் கருத்துகளைப் பொருட்படுத்தத் தேவையில்லையென்றும், ஆனல் அச் செய்தித்தாள்களைத் தணிக்கை செய்யவும், ஆசிரியர்களை நாடு

நடத்தவும் அரசுக்குத் தொடர்ந்து அதிகாரம் இருக்கவேண்டு மென்றும் மன்ரோ கூறினார். இந்தியர்கள் நடத்தும் செய்தித் தாள்களைப்பற்றி அவர் மிகுந்த அச்சமும் கவலையும் தெரிவித் திருந்தார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இச் செய்தி இதழ்கள் துணைசெய்யக்கூடும் என்று அவர் கருதினார். இந்தியர்களிடம் விடுதலை உணர்ச்சியைத் தூண்டி, அயல்நாட்டார் ஆட்சியை நீக்கிவிட்டு, தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்தும் வேட்கையை இந்தியச் செய்திஇதழ்கள் உண்டாக்கி விடும் என்றும் மன்ரோ கூறியிருந்தார். 'அந்நிய ஆதிக்கமும் சுதந்திரமான செய்தித்தாள்களும் இணைந்திருக்க முடியாது' என்றும் மன்ரோ எச்சரிக்கை விடுத்தார்.

பென்டிங்கு பிரபு: இவர் 1828 முதல் 1835வரை இந்தியா வில் பல சீர்திருத்தங்களைச் செய்தவர், கருத்து வெளியீட்டு உரிமையை இவர் ஆதரித்தார். செய்தித்தாள் ஆசிரியர்கள் எந்தச் செய்திபற்றியும் நேர்மையான முறையில் விவாதிக்கலாம் என்பது இவர் கருத்து. எனவே, செய்தித்தாள் ஆசிரியர் களுக்குப் பல உரிமைகளை வழங்கினார்.

பென்டிங்குப் பிரபுவுக்குப் பிறகு 1835—3 ஆம் ஆண்டில் ஓராண்டுக் காலம் மெட்காஃப் (Metcalfe) தாற்காலிகத் தலைமை ஆளுநராகப் பணியாற்றினார். இந்தியாவில் பல சீர்திருத்தங் களைச் செய்வதற்கு பென்டிங்குப் பிரபுவுக்கு உறுதுணையாக விளங்கியவர் மெட்காஃப். ஜான் ஆடம் 1823-ல் செய்தித்தாள் ஆசிரியர்களின் உரிமையைக் கட்டுப்படுத்திப் பிறப்பித்திருந்த சட்டத்தை மெட்காஃப் தம் காலத்தில் நீக்கினார். இதனால் இந்தியச் செய்தித்தாள்களுக்கு, இங்கிலாந்துச் செய்தி இதழ்களுக்கு இருந்த அளவுக்கு உரிமை கிடைத்தது. இந்த உரிமையை 1878 வரையிலும் இந்தியச் செய்திஇதழ்கள் அனுபவித்து வந்தன. செய்தித்தாள்களின் உரிமையை மெட்காஃப் போற்றியதைப் பாராட்டிக் கல்கத்தா மக்கள் தங்கள் மகிழ்ச்சியின் சின்னமாக 'மெட்காஃப் மண்டபம்' ஒன்றை நிறுவினார்கள்.

செய்தித்தாள்களுக்கு மெட்காஃப் இவ்வாறு உரிமைகள் வழங் கியதைக் கம்பெனி இயக்குநர்கள் விரும்பவில்லை. அதனால், அவரை வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களின் துணை ஆளு நராக அனுப்பிவிட்டு, ஆக்லண்டு பிரபுவைத் தலைமை ஆளுந ராகக் கொணர்ந்தனர். துணை ஆளுநர் பதவியை ஏற்க மெட் காஃப் மறுத்துவிட்டுத் தாய்நாடு சென்றார்.

உரிமச் சட்டம் (Licensing Act—1857): 1835 முதல் 1857 வரை இந்தியச் செய்தித்தாள்கள் அரசின் தலையீடின்றிச் சுதந்திர

மாக இயங்கிவந்தன. 1857-ல் முதலாவது இந்திய சுதந்திரக் கிளர்ச்சி (சிப்பாய்க் கலகம்) ஏற்பட்டது. இதனால் நாட்டின் செய்தித்தாள்கள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்காக 1857 ஆம் ஆண்டு உரிமச் சட்டத்தை அரசினர் கொண்டுவந்தனர். இதன்படி, அச்சகங்கள் நிறுவுவதற்குக் கட்டுப்பாடுகள் வந்தன. அச்சிட்ட நூல்களையும், செய்தித்தாள்களையும் விற்பனை செய்வதும் கட்டுப்படுத்தப்பட்டன. கிளர்ச்சி நின்றதும் இக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. 1866 ஆம் ஆண்டளவில் வங்காளி, அமிர்த பஜார் பத்ரிகா என்ற வார இதழ்கள் வங்காளத்திலும், அக்பரி ஆம் என்ற வார இதழ் லாகூரிலும் தோன்றின.

1835-ல் மெட்காஃப் கொண்டுவந்த சட்டம், 1867 ஆம் ஆண்டுச் சட்டத்தினால் நீக்கப்பட்டது. அச்சகங்களையும், செய்தித்தாள்களையும் ஒழுங்குபடுத்துவதும், இந்தியாவில் அச்சாகும் நூல்களின் பிரதிகளைப் பாதுகாத்து வைப்பதும் இச் சட்டத்தின் நோக்கங்களாகும். இந்தச் சட்டம் இரண்டு முறை திருத்தப்பட்டு இன்னும் அமலில் இருந்து வருகிறது.

இருண்ட காலம்: லிட்டன் பிரபு 1876 முதல் 1880 வரை தலைமை ஆளுநராக இருந்தார். இவர் கடைந்தெடுத்த ஏகாதிபத்தியவாதி. இவருடைய ஆதிக்கப்பற்றுக் கொள்கையினால் இரண்டாம் ஆஃப்கானியப் போர் மூண்டது. இவரை இந்தியர்கள் அடியோடு வெறுத்தார்கள். இந்திய மொழிச் செய்தித்தாள்கள், ஆங்கில அரசின்மீது மக்களின் வெறுப்புணர்ச்சியைத் தூண்டிவிடுவதாக லிட்டன் கருதினர். இதைத் தடுப்பதற்கெனக் கூறித் தாய்மொழிச் சட்டத்தை (The Vernacular Press Act) 1878-ல் அவர் கொண்டுவந்தார். இச் சட்டம் 'கழுத்து நெரிப்புச் சட்டம்' (The Gagging Act) என்று வழங்கப்பட்டது. இச் சட்டத்தின்படி, இந்திய மொழிச் செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் அல்லது வெளியீட்டாளர், அரசு குறிப்பிடும் ஒரு தொகையைப் பொறுப்புத் தொகையாகச் (Security) செலுத்த வேண்டும்; இல்லையென்றால், அரசுக்கு எதிராக மக்களின் பகைமையைத் தூண்டும் செய்திகளை வெளியிடுவதில்லை என உறுதி கூறிப் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். இந் நிபந்தனைகளை மீறினால், செய்தித்தாளின் பொறுப்புத் தொகையும் அச்சு எந்திரமும் பறிமுதல் செய்யப்படும்; எந்தச் செய்தியையும் அச்சிடுவதற்குமுன், அதன் நகலை அரசு தணிக்கை அதிகாரியிடம் காட்டி, அவர் அனுமதித்த செய்திகளை மட்டுமே செய்தித்தாளில் அச்சிட்டு வெளியிடவேண்டும்.

இந்தச் சட்டத்தை ஆங்கிலேயர்கள் வரவேற்றார்கள். இந்தியர்கள் அனைவரும் வன்மையாகக் கண்டித்தார்கள். அரசப் பிரதி

நிதியின் நிருவாகக் குழுவிலிருந்த மூன்று உறுப்பினர்களும் இச் சட்டத்தை எதிர்த்தனர். எனினும், நான்காண்டு வரையில் இச் சட்டம் அமலில் இருந்தது. இக் காலத்தில், பொறுப்புத் தொகை கட்ட இயலாத இந்திய மொழிச் செய்தி இதழ்கள் பல மூடப்பட்டன. சில இதழ்களின் அச்சு எந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. வேறு சில இதழ்கள், ஆங்கில இதழ்களாக மாறின. இக் காலத்தை இந்திய மொழிச் செய்தித் தாள்களின் 'இருண்ட காலம்' என்றே சொல்லவேண்டும்.

லிட்டனுக்குப் பிறகு அரசப் பிரதிநிதியாக வந்தவர் ரிப்பன் பிரபு. இவர் 1880 முதல் 1884 வரை பதவி வகித்தார். இவர் லிட்டன் பிரபு இயற்றிய இந்திய மொழிச் சட்டத்தை நீக்கினர். இதனல் இவருக்கு இந்தியரிடையே செல்வாக்கு ஏற்பட்டது. இவர் மக்கள் நலத்திற்கான பல சீர்திருத்தங்களைச் செய்து இந்திய மக்களின் பேரன்புக்குப் பாத்திரமானர். 1884-ல் இவர் பதவி துறந்தார். அது இந்தியருக்கு மிகுந்த வருத்தத்தை விளை வித்தது.

பயங்கர ஆட்சி: இரண்டாம் மின்டோ பிரபு 1905 முதல் 1910 வரை அரசப் பிரதிநிதியாகப் பதவி வகித்தார். இவருக்கு முன் அரசப் பிரதிநிதியாக இருந்த கர்சான் பிரபு, வங்காளத்தைப் பிரிவினை செய்ததனல் ஏற்பட்ட விளைவுகளை இவர் சமாளிக்க வேண்டியிருந்தது. வங்காளப் பிரிவினைக்கு இந்தியா வெங்கும் பெருங் கிளர்ச்சி தோன்றியது. வங்காளிகள் தேசிய உணர்வு பெற்று, சுதேசிய இயக்கத்தைத் தொடங்கினர். பயங்கரவாதிகள் இயக்கம் தோன்றிப் பல கொலைகள் நடந்தன. இதில் மாணவர்களும் பங்குகொண்டு வெடிமருந்து போன்ற பயங்கர ஆயுதங்களைப் பயன்படுத்தினர். இவர்களின் செயல்களைச் செய்தித்தாள்கள் பாராட்டி எழுதின. இக் கிளர்ச்சியை அடக்க அரசினர் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டனர். அரசுக்கு எதிராக நடைபெறும் கூட்டங்களைத் தடுக்கவும் அனுமதியின்றி வெடிமருந்துகளையும், ஆயுதங்களையும் உற்பத்தி செய்தல், வைத்திருத்தல் முதலியவற்றில் ஈடுபடுவோரைத் தண்டிக்கவும் சட்டங்கள் இயற்றப்பட்டன. அதேபோன்று கொலைகள் செய்யுமாறு தூண்டும் செய்தித்தாள்களின் பொறுப்பாளர்களைத் தண்டிக்கவும், கடுமையான குற்றங்கள் புரிந்தவர்களை விரைவாக விசாரித்துத் தண்டிக்கவும் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

1910ஆம் ஆண்டில் இந்தியச் செய்தித்தாள் சட்டம் (The Indian Press Act) இயற்றப்பட்டது. இச் சட்டம், அரசுக்கெதி

ராகச் செய்தித்தாள்கள் புரியக்கூடிய குற்றங்களை 16 வகைகளாகப் பிரித்தது. இச் சட்டத்தின்படி எல்லாச் செய்தித்தாள்களும் ரூ. 500 முதல் ரூ. 5000 வரை அரசுக்குப் பிணையத் தொகை கட்ட வேண்டியதாயிற்று. சட்டத்தை மீறி எந்தச் செய்தித்தாளாவது குற்றம் புரிந்தால், பிணையத் தொகையை அது இழக்க வேண்டும். ஒரு முறை அவ்வாறு இழந்துவிட்டால், அடுத்தாற் போல் அது கட்ட வேண்டிய தொகையை ரூ. 1000-லிருந்து ரூ. 10,000 வரை நிருணயிக்க அரசுக்கு அதிகாரம் உண்டு. இரண்டாம் முறையும் குற்றமிழைத்தால், பிணையத் தொகையுடன், செய்தித்தாளின் அச்சகத்தையும் அரசு பறிமுதல் செய்யலாம். இச் சட்டம் 1922 வரையில் அமலில் இருந்தது. இதன்படி, முதல் உலகப்போர்க் காலத்தில் (1914-18) தேசிய இயக்கத்தை ஆதரித்த பல செய்தித்தாள்கள் பிணையத் தொகையை இழந்தன. இவற்றுள் சென்னையிலிருந்து வெளியாகிய 'இந்து'வும், 'நியூ இந்தியா'வும் குறிப்பிடத்தக்கவை. 1910ஆம் ஆண்டுச் சட்டத்தின் செயல்முறையை ஆராய 1922-ல் சர் தேஜ்பகதூர் சாப்ரு என்ற சட்டவல்லுநரை அரசு நியமித்தது. இவரது பரிந்துரைப்படி இச் சட்டம் நீக்கப்பட்டது. இதன்பின், 1930 வரையில் செய்தித்தாள் துறையில் எவ்விதக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை.

1930ஆம் ஆண்டில் சட்டமறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ் நாடெங்கிலும் தொடங்கியது. இப்போராட்டத்தை ஊக்குவிப்பதில் செய்தித்தாள்கள் பெரும்பங்கு கொண்டன. ஆங்கில அரசினரின் ஊழல்களை இச் செய்தி இதழ்கள் அம்பலப்படுத்தின. தலைவர்கள் கைது, மக்கள்மீது தடியடி போன்ற செய்திகளைப் பெரிதாக வெளியிட்டு மக்களின் உணர்ச்சியைத் தூண்டின. செய்திகளை இவ்வாறு வெளியிடுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்தியச் செய்தி இதழ் அவசர அதிகாரச் சட்டம் (The Indian Press Emergency Powers Act) என்ற ஓர் அவசரச் சட்டத்தை அரசு பிறப்பித்தது. வன்முறை அல்லது கொலையைத் தூண்டுவதைத் தடுப்பதற்கு இச் சட்டம் கொணரப்படுவதாக அரசு காரணம் கூறியது. இச் சட்டம் ஏறந்தாழ 1910ஆம் ஆண்டுச் சட்டத்தின் மறுபதிப்பாகவே அமைந்திருந்தது. இதன்படி இந்தியத் தலைவர்களின் படங்களை வெளியிட்ட செய்தி இதழ்கள்மீதுகூட அரசினர் நடவடிக்கை எடுத்தனர். மற்றும் பல செய்தித்தாள்களின் பிணையத் தொகைகளும் அச்சகங்களும் பறிமுதலாயின. உண்மையில் செய்தித்தாள் துறையில் ஒரு 'பயங்கர ஆட்சி' நிலவியது எனலாம்.

இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக 1932-ல் அயல் நாட்டு உறவுச் சட்டம் (Foreign Relations Act) ஒன்றை அரசு

இயற்றியது. இந்தியாவின் அண்டை நாடுகள் சிலவற்றின் நிருவாகத்தைச் சில செய்தித்தாள்கள் கண்டித்தன. இதனால் ஆத்திரமடைந்த அரசினர், ஆங்கில அரசுக்கும் நட்பு நாடுகளுக் குமிடையே நல்லுறவைப் பாதுகாப்பதற்கெனக் கூறிக்கொண்டு இப் புதிய சட்டத்தைக் கொண்டுவந்தனர். இதன் அண்டை நாடுகளின் அரசு, அரசர், இளவரசர், அமைச்சர் இவர்கள் மீது அவதூறாக எழுதும் செய்தித்தாள்களும், நூல்களும் பறிமுதல் செய்யப்படும். இதன்பின் 1934ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்த சுதேச அரசுகளின் நிருவாகத்தைக் கண்டித்துச் செய்தித்தாள்கள் எழுதுவதைத் தடுப்பதற்காகச் சுதேச அரசுகள் பாதுகாப்புச் சட்டம் (Indian States Protection Act) ஒன்றை அரசினர் நிறைவேற்றினர். இச் சட்டம் 1939 வரை நீடித்தது.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம்: 1939ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் மூண்டது. அப்போது. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தை (Defence of India Act) அரசு இயற்றி, அதன் கீழ் இந்தியப் பாதுகாப்பு விதிகளை (Defence of India Rules) வகுத்தது. இவ் விதிகளின்படி, இந்தியச் செய்தித்தாள்களை ஆறு ஆண்டுக் காலம் ஆங்கில அரசினர் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் இச் சட்டமும் அதன் விதிகளும் காலாவதியாயின.

இரண்டாம் உலகப்போரின்மீது செய்தித்தாள்களைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் அரசுக்கு இருந்தபோதிலும் அதை அவர்கள் அவ்வளவு கடுமையாகச் செயற்படுத்தவில்லை. இந்திய மக்களின் ஒத்துழைப்பு ஆங்கிலேயருக்குத் தேவையாக இருந்தமையால், செய்தித்தாள் துறையினருடன் அரசினர் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். இதன் பலனாகச் செய்தித் தாள் ஆலோசனைக் குழுக்கள் (Press Advisory Committees) மத்திய அரசிலும், பெரும்பாலான மாநிலங்களிலும் அமைக்கப் பட்டன. இதன்மூலம் செய்தித்தாள் துறையினருக்கு ஓர் ஆலோசனை அந்தஸ்து கிடைத்தது.

சுதந்திரத்திற்குப் பின்: இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, அரசுக்கும் மக்களுக்குமிடையே ஒரு போராட்டமும் எழவில்லை. இந்தியச் செய்தித்தாள்களுக்கு முற்றிலும் புதிய பொறுப்பும் பணியும் ஏற்பட்டன. இப் பணியையும் பொறுப்பினையும் நிறைவேற்றுதற்குரிய சுதந்திரமும் அவற்றுக்குக் கிடைத்தன. 1948ஆம் ஆண்டில் செய்தித்தாள் சட்ட விசாரணைக் குழு (Press Laws Enquiry Committee) ஒன்றை இந்திய அரசு நியமித்தது. இக் குழுவின் ஆலோசனைப்படி, அதுவரை அமலி

லிருந்த செய்தித்தாள் சட்டங்களிலிருந்த தீய அம்சங்கள் யாவும் நீக்கப்பட்டன. அரசுக்கும் செய்தித்தாள்களுக்கு மிடையே ஆலோசனை—ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்குரிய கொள்கை யொன்றும் வகுக்கப்பட்டது.

நாட்டு விடுதலைக்குப் பிறகு செய்தித்தாள் துறை வளர்ச்சியில் ஏற்பட்ட மற்றொரு முக்கியமான நிகழ்ச்சி 1948-ல் பி. டி. ஐ. எனப் படும் 'பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா' (The Press Trust of India) என்னும் செய்தி நிறுவனம் நிறுவப்பட்டதாகும். வெளிநாட்டு, உள்நாட்டுச் செய்திகளை அயல்நாட்டு, உள்நாட்டுச் செய்தித் தாள்களுக்கு வழங்குவதற்காக இந் நிறுவனம் நிறுவப்பட்டது. இந் நிறுவனம் இலாப நோக்கமின்றி இயங்கி வருகிறது. இதில் உறுப்பினராகச் சேரும் எல்லாச் செய்தித்தாள்களுக்கும் இது செய்திகளை வழங்கி வருகிறது.

கருத்து வெளியீட்டுச் சுதந்திரம்: 1950 ஜனவரி 26-ல் இந்தி யாவின் அரசியலமைப்பு (Constitution) அமலுக்கு வந்தது. இதில் செய்தித்தாள் சுதந்திரம் (Freedom of the Press) என்று எதுவும் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. எனினும், அரசிய லமைப்பின் 19ஆம் பிரிவில் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் (Freedom of Expression) வழங்கப்பட்டது. இதிலேயே செய்தித் தாள் சுதந்திரமும் அடங்கியிருக்கிறது. எனினும், கருத்து வெளி யீட்டுச் சுதந்திரம் என்பது மிகவும் விரிவான போக்குடையதாக இருப்பதால், கொலை, வன்முறை போன்ற குற்றங்களைத் தூண்டும் தனிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை இது தடுப்ப தாகச் சில நீதிமன்றங்கள் அனுபவத்தில் கண்டு கூறின. இதன் பலனாக, 1951-ல் அரசியலமைப்பின் முதலாவது திருத்தச் சட்டம் (Constitution First Amendment Act) இயற்றப்பட்டது. இதில் செய்தித்தாள்களை ஓரளவு கட்டுப்படுத்தும் சில அம்சங்கள் சேர்க்கப்பட்டன. நாட்டின் பாதுகாப்பு, வெளிநாடுகளுடன் நட் புறவு, பொது அமைதி, கண்ணியம் அல்லது தருமம் இவற்றின் நலன் கருதியும், நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு, குற்றத்தைத் தூண்டுதல் ஆகியவற்றைத் தடுக்கும் நோக்கத்துடனும் செய்தித் தாள்கள் மீது 'நியாயமான சில கட்டுப்பாடுகளை' (Reasonable restrictions) விதிக்கப் பாராளுமன்றத்திற்கு இந்தத் திருத்தச் சட்டம் அதிகாரம் வழங்கியது.

1952-ல் செய்தித்தாள் குழு (Press Commission) ஒன்றை இந்திய அரசு நியமித்தது. இக் குழு 1954-ல் தனது அறிக் கையை அளித்தது. செய்தித்தாள்களின் சுதந்திரத்தைப் பாது

காக்கவும், செய்தித்தாள்களின் நெறிமுறைகளுக்கு விரோதமான முறையில் நடந்துகொள்ளும் செய்தித்தாள்களைக் கண்காணித்துக் கண்டிக்கவும் அகில இந்தியச் செய்தித்தாள் சபை (All India Press Council) ஒன்றை நிறுவவேண்டுமென இக் குழு பரிந்துரை செய்திருந்தது.

இந்தியச் செய்தித்தாள் பதிவாளர் (Registrar of Newspapers for India) ஒருவர் 1956 ஜூலை 1-ல் நியமிக்கப்பட்டார். இந்தியாவில் வெளியாகும் செய்தித்தாள்கள்பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு இப் பதிவாளர் சட்டபூர்வமான அதிகாரியாவார். இந் நாட்டில் வெளியாகும் ஒவ்வொரு செய்தித்தாளைப்பற்றியும் எல்லா விவரங்களையும் பதிவுசெய்து வைத்திருப்பதற்காகச் செய்தித்தாள் பதிவாளரின்கீழ் மத்திய அலுவலகம் ஒன்றும் இயங்கி வருகிறது. உலகம் முழுவதையும் எடுத்துக்கொண்டால், இந்தியச் செய்தித்தாள் பதிவாளர் வெளியிடும் ஆண்டறிக்கைதான் அதிகாரபூர்வமாக இந்த வகையில் வெளியிடப்படும் ஒரே அறிக்கையாகும்.

செய்தித்தாள் ஆலோசனை சபை : செய்தித்தாள் குழு செய்த பரிந்துரையைச் செயற்படுத்தும் வகையில் செய்தித்தாள் ஆலோசனை சபை (Press Council) ஒன்றை ஏற்படுத்துவதற்கெனச் செய்தித்தாள் ஆலோசனைசபைச் சட்டம் (Press Council Act) ஒன்று 1965ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி செய்தித்தாள் ஆலோசனைசபை அமைக்கப்பட்டது. இச் சபையில் ஒரு தலைவரும், மற்றும் 25 உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். 25 உறுப்பினர்களில் 13 பேர் உழைக்கும் பத்திரிகையாளர்களின் பிரதிநிதிகள்; செய்தித்தாள் நிருவாகங்களின் பிரதிநிதிகள் அறுவர்; நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர்; தொழில்நுட்ப வல்லுநர்கள் மூவர். இந்தியாவில் செய்தித்தாள்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும், செய்தித்தாள்களின் தரத்தை உயர்த்துவதும் இச் சபையின் முக்கிய நோக்கங்களாகும். மேலும், செய்தித்தாள்கள் சுதந்திரமாக இயங்குவதற்கு இச் சபை உதவிபுரிந்து வருகிறது. செய்தித்தாள்கள் கடைப்பிடிப்பதற்குரிய ஒழுங்குவிதிகளைச் (Code of conduct) இச் சபை வகுத்துள்ளது. இவ் விதிகளை செய்தித்தாள்களும், பத்திரிகையாளர்களும் அனுசரித்து நடக்கும்படி இச் சபை பார்த்துக்கொள்கிறது. பொதுநலனுக்கு உகந்த எந்தச் செய்திகளையும் செய்தித்தாள்கள் வெளியிடுவதற்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமானல், அதுபற்றி ஆராய்ந்து, அவ் விடையூறுகளை நீக்குவதும் இச் சபையின் பணியாக இருந்துவருகின்றது.

29. சுதந்திர இந்தியாவும் சுதேச அரசுகளும்

இந்தியா விடுதலை பெற்றதும் மத்திய அரசை எதிர்நோக்கிய முதல் பெருஞ்சிக்கல் சுதேச அரசுகளை இந்தியாவுடன் இணைப்பதாகும். பெரியனவும், சிறியனவுமாக அறுநூற்றுக்கு மேற்பட்ட சுதேச அரசுகள் நாட்டில் இருந்தன. இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேராது, சில அரசுகள் சுதந்திரமாக இருக்கவும் முயன்றன. ஆனால், அதற்கு இடங்கொடாமல் சாதுரியத்தையும், அரசியல் மதிநுட்பத்தையும், சாம பேத தான தண்டங்களையும் கையாண்டு அவற்றையெல்லாம் இந்திய அரசுடன் இணைத்த பெருமை சர்தார் வல்லபாய் படேலையே சாரும். இந்தியாவுடன் இணையத் தயக்கம் காட்டிய சுதேச அரசர்களில் சிலரைத் தட்டிக் கொடுத்தும், சிலருக்கு வாக்குறுதிகள் வழங்கியும், பிடிவாதம் பிடித்த சிலரிடம் கண்டிப்புக் காட்டியும், ஓரிரு இடங்களில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டும் சுதேச அரசுகள் அனைத்தையும் வெற்றிகரமாக இந்திய அரசுடன் இணைத்து, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு வலுவான அடித்தளம் அமைத்தார் சர்தார் படேல். அவரை 'இரும்பு மனிதர்' என்றும், 'இந்தியாவின் 'பிஸ்மார்க்' என்றும் அழைப்பது சாலவும் பொருந்தும்.

1935ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தில் (Government of India Act, 1935), மத்திய அரசில் சுதேச அரசுகளும், பிரிட்டிஷ் இந்தியாவில் அடங்கிய மாநிலங்களும் சேர்ந்த கூட்டாட்சி (Federation) ஒன்றை அமைப்பதற்கு வழிசெய்யப்பட்டிருந்தது. இச் சட்டத்தின்படி, மத்திய சட்டசபையில், சுதேச அரசுகளுக்கு அவற்றின் மக்கள்தொகை, பரப்பளவைக் காட்டிலும் கூடுதலான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தது. மத்திய சட்டசபைக்கான மொத்தம் 250 இடங்களில் சரிபாதியைச் (125) சுதேச அரசுகள் பெற்றிருந்தன. மத்தியமாநிலங்கள் அவையிலும் (Council of States) மொத்தம் 260 உறுப்

பினர்களில் 104 உறுப்பினர்களை அனுப்பச் சுதேச அரசுகளுக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. மாநிலங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால், சுதேச அரசுகளின் பிரதிநிதிகளை அவற்றின் அரசர்களே நியமித்துக்கொள்ளலாம். மேலும், மாநிலங்கள் யாவும் கூட்டாட்சியில் கட்டாயமாகச் சேர்ந்தாக வேண்டும். ஆனால், சுதேச அரசுகள் விரும்பினால் கூட்டாட்சியில் சேரலாம்; இல்லையெனில் சேராமலே இருக்கலாம். மாநிலங்களின்மீது கூட்டாட்சி அரசின் கட்டுப்பாடு, எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும். ஆனால், சுதேச அரசுகள்மீதான கட்டுப்பாடு, இணைப்பு உடன்படிக்கையின் (Instrument of Accession) நிபந்தனைகளுக்கு ஏற்ப, அரசுக்கு அரசு வேறுபடும். சுதேச அரசுகளுக்கு மிகுந்த சலுகை காட்டும் இந்தக் கூட்டாட்சித் திட்டத்தை இந்திய தேசியக் காங்கிரசும், முஸ்லிம் லீகும் ஏற்க மறுத்துவிட்டன. இத் திட்டத்தைச் செயலாக்குவதில் ஆங்கிலேய அரசும் அக்கறை காட்டவில்லை. இதற்கிடையில் 1939ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் மூண்டுவிடவே, இத் திட்டம் கிடப்பில் போடப் பட்டது. எனினும், சுதேச அரசுகளின் சம்மதம் பெறாமல், அவற்றின் எதிர்காலம்பற்றி எவ்வித முடிவும் எடுக்கப்பட மாட்டாது என்று சுதேச அரசுகளுக்கு ஆங்கிலேய அரசினர் அவ்வப்போது உறுதிகூறி வந்தனர்.

அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம் : 1946ஆம் ஆண்டில் இங்கிலாந்து அமைச்சரவைத் தூதுக்குழுவினர் (Cabinet Mission) இந்தியாவிற்கு வந்தபோது, சுதேச அரசுகள் பற்றிய சிக்கல் குறித்து மீண்டும் விவாதித்து ஒரு திட்டத்தை வெளியிட்டனர். இத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன : (1) ஆங்கிலேய இந்தியாவும், சுதேச அரசுகளும் அடங்கிய மத்திய அரசாங்கம் ஒன்று அமைக்கவேண்டும். இந்த அரசாங்கம், வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, செய்தித்தொடர்பு ஆகியவைகளைமட்டும் கவனித்துவரும். (2) மத்திய அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தவிர, மற்ற எல்லா அதிகாரங்களையும் சுதேச அரசுகளே வைத்துக் கொள்ளும். (3) இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி மறைந்த பிறகு, இந்தியாவில் ஏற்படும் அரசாங்கம் அல்லது அரசாங்கங்களுடன் ஒரு கூட்டாட்சி உடன்படிக்கையைச் சுதேச அரசுகள் செய்துகொள்ளலாம். அப்படிச் செய்துகொள்ள விரும்பவில்லை யென்றால், அந்த அரசாங்கம் அல்லது அரசாங்கங்களுடன் குறிப்பிட்ட சில நிபந்தனைகளோடு அரசியல்

ஏற்பாடுகளைச் சுதேச அரசுகள் செய்துகொள்ளலாம். இந்த அம்சம், சுதேச அரசுகள் தம் விருப்பப்படி இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேர்ந்துகொள்வதற்கு உரிமை அளித்தது.

இத்திட்டத்தைச் சுதேச அரசர்கள் சங்கத்தின் நிரந்தரக் குழு (Standing Committee) ஆராய்ந்து தனது கருத்துகளைத் தெரிவித்தது. 'பேச்சுவார்த்தைகள் மூலமாகவே சுதேச அரசுகள் கூட்டாட்சியில் சேர முடியும்; இதுபற்றி இறுதி முடிவெடுக்கும் உரிமை சுதேச அரசுகளுக்கே உண்டு. கூட்டாட்சி அரசிடம் சுதேச அரசுகள் ஒப்படைத்த அதிகாரங்களை மட்டுமே சுதேச அரசுகளின்மீது கூட்டாட்சி அரசு செலுத்த வேண்டும். இவ்வாறு கூட்டாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டவைகளைத் தவிர்த்த மற்ற எல்லா அதிகாரங்களையும் ஒவ்வொரு சுதேச அரசும் வைத்துக்கொள்ளும். இங்ஙனம் குறிப்பிடப்படாத ஏதேனும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகவோ, இயற்கையாகவே கூட்டாட்சிக்கு ஏதேனும் அதிகாரங்கள் உள்ளனவென்று குறிப்பாகக் (implied) கூறப்பட்டிருப்பதாகவோ கூட்டாட்சி அரசு கூறுவதற்கு இடமில்லை. மேலும், சுதேச அரசின் அரசியலமைப்பு, அதன் ஆட்சி உரிமை (Territorial Integrity), அரச பரம்பரையின் வாரிசு ஆகிய எவற்றிலும் கூட்டாட்சி அரசு தலையிடலாகாது' இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளச் சுதேச அரசர்கள் இசைந்தார்கள்.

காங்கிரசின் கருத்து: இதற்கிடையில் சுதேச அரசுகள் பற்றிய தனது கொள்கையை அகில இந்தியக் காங்கிரசுக் குழு 1947 ஜூன் 15-ல் வெளியிட்டது. சுதேச அரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்வதற்கு உரிமை உண்டென்ற கருத்தைக் காங்கிரசு நிராகரித்தது. 'ஆங்கிலேய மேலாண்மை (Paramountcy) காலாவதியாவதால், சுதேச அரசுகள் சுதந்திர அரசுகளாக ஆகிவிட முடியாது. தங்கள் எதிர்காலம்பற்றி முடிவு செய்ய அவ்வரசுகளின் மக்களே உரிமை உடையவர்கள்' என்று காங்கிரசு கருதியது. இக்கூட்டத்தில் பேசிய ஜவஹர்லால் நேரு 'சுதேச அரசுகள் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு இரண்டே வழிகள் தாம் உள்ளன. முதலாவது வழி, இந்தியக் கூட்டாட்சியில் சேர்ந்து தன்னாட்சிக் கூட்டாளிகளாக வாழ்தல். இரண்டாவது வழி, கூட்டாட்சி அரசின் மேலாண்மையை ஏற்றுக்கொள்தல். இவ்விரண்டையும் தவிர்த்த மூன்றாவது வழி—சுதந்திர நாடாக இயங்கும் வழி என்பது—கிடையாது' என்று கூறினார்.

இச் சமயத்தில், இந்தியாவை இரு நாடுகளாகப் பிரிக்கும் திட்டம் வெளியாகியது. ஐதராபாத், திருவாங்கூர் போன்ற பெரிய சுதேச அரசுகள் இந்தியாவுடன் இணைய மறுத்தன. அதனுடன், தாங்கள் சுதந்திர நாடுகள் (Independent Nations) என்றும் அதனால் தங்களுக்குள் அல்லது அயல்நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளப் போவதாகவும் அவை அறிவித்தன. இக் கொள்கையை முஸ்லிம் லீக் ஆதரித்தது. ஆனால், காங்கிரசு இதை எதிர்த்தது. 'இந்த அறிவிப்பு, கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கெதிரான போர்ப் பிரகடனத்திற்குச் சமம்'. என்று காந்தியடிகள் கண்டித்தார். 'எந்தச் சுதேச அரசாவது சுதந்திரப் பிரகடனம் செய்து, அதை எந்த அயல்நாடாவது அங்கீகரிக்குமானால், அதைப் பகை நடவடிக்கையாக இந்தியா கருதும்' என்று பண்டித நேரு எச்சரிக்கை விடுத்தார்.

இணைப்பு: இந்நிலையில், மத்திய அமைச்சரவையில் சர்தார் வல்லபாய் படேலின் ஆலோசனைப்படி சுதேச அரசுகளின் துறை (Indian States Department) ஒன்று அமைக்கப்பட்டது. இந்தத் துறைக்குச் சர்தார் படேலே அமைச்சரானார். சுதேச அரசர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய இணைப்புப் பத்திரம் (Instrument of Accession) ஒன்று தயாரிக்கப்பட்டது. இதன்படி, பாதுகாப்பு, அயல்நாட்டு உறவுகள், செய்தித்தொடர்பு ஆகியவற்றை மட்டுமே சுதேச அரசுகள், மாநில அரசிடம் ஒப்படைக்க வேண்டும். மற்ற விவகாரங்களில் அவ் வரசுகள் சுய ஆட்சியுடன் நடந்துகொள்ளலாம். 'சுதேச அரசுகளின் உள்விவகாரங்களில் மத்திய அரசு தலையிடாது' என்று சர்தார் படேல் உறுதி கூறினார். சுதேச அரசர்களின் நாட்டுப்பற்றைத் தூண்டி, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு எல்லோரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டியதன் அவசியத்தையும் படேல் வலியுறுத்தினார். தலைமை ஆளுநர் மவுன்ட்பேட்டன் பிரபுவும், இந்தியா அல்லது பாகிஸ்தான் நாடுகளில் இணைந்துவிடும்படி சுதேச அரசுகளுக்கு அறிவுரை கூறினார். இதைத் தொடர்ந்து, சர்தார் படேல் மேற்கொண்ட அரும்பெரும் முயற்சிகளின் பலனாக, இணைப்புப் பத்திரம் தயாராகிய மூன்று வாரத்திற்குள்ளேயே, 136 சுதேச அரசுகள் இந்தியக் கூட்டாட்சியில் இணைந்தன. அவ் வரசுகளை ஆட்சி செய்யும் அதிகாரமும் மக்களுக்கு மாற்றப்பட்டது. சிறிய சுதேச அரசுகளில் சில, பெரிய அரசுகளுடன் இணைந்தன. வேறு சில அரசுகள் அருகிலிருந்த மாநிலங்களுடன் இணைந்தன. போபால், கூச் பீகார், திரிபுரா, மணிப்பூர் ஆகிய அரசுகள் மத்திய அரசின் நேரடி ஆட்சியின்கீழ்

வந்தன. ஜுனகாத், ஐதராபாத், காஷ்மீர் ஆகிய அரசுகளைத் தவிர, மற்ற எல்லாச் சுதேச அரசுகளும் 1949 நவம்பர் மாதத்திற்குள் இந்தியாவுடன் இணைந்துவிட்டன.

ஜுனகாத் : ஜுனகாத் என்பது கத்தியவாரில் இருந்த ஒரு சிறு அரசு. அதன் குடிமக்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள். ஆனால், அதன் அரசர் ஒரு முஸ்லிம். அவர் சுதந்திரத்திற்குச் சற்றுமுன், பாகிஸ்தானுடன் தம் அரசை இணைத்தார். இதை எதிர்த்து அந்த அரசின் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். எங்கும் பெருங்கலவரங்கள் மூண்டன. அரசரின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது. அவர் பாகிஸ்தானுக்கு ஓடி உயிர்தப்பினார். சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இந்திய அரசின் உதவியை முஸ்லிம் திவான் நாடினார். இந்திய அரசு தலையிட்டு அங்கு அமைதியை ஏற்படுத்தியது. எந்த நாட்டுடன் இணைவது என்பது குறித்து மக்கள் கருத்தை அறிய அங்கு 1948 பிப்ரவரியில் வாக்கெடுப்பு நடந்தது. இதில் இந்தியாவுடன் இணைவதற்கு மக்கள் பேராதரவு தெரிவித்தனர். அதன்படி, 1949-ல் ஜுனகாத்தும், வேறு சில சிறிய சுதேச அரசுகளும் சௌராஷ்டிர மாநிலத்துடன் இணைக்கப்பட்டன.

ஐதராபாத் : இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இருந்த சுதேச அரசுகளிலேயே ஐதராபாத் அரசுதான் மிகப் பெரியதாகும். அது இந்தியாவின் மையத்தில், நாற்புறமும் இந்திய மாநிலங்கள் சூழ அமைந்திருந்தது. அதன் மக்களில் பெரும்பான்மையோர் இந்துக்களாவர். ஆனால், அதனை ஆண்டு வந்த நிஜாம் ஒரு முகமதியர். ஐதராபாத்தை இந்தியாவுடன் இணையும்படி மத்திய அரசு அழைத்தது. ஆனால், அங்கு ஆதிக்கம் செலுத்திவந்த ரசாக்கர்கள் (Razakars) என்ற முஸ்லிம் இயக்கத்தினர் ஐதராபாத்தை ஒரு சுதந்திர நாடாக ஆக்கக் கருதித் தீவிர முயற்சி செய்தனர். அங்கிருந்த பெரும்பான்மையான மக்கள் இந்தியாவுடன் இணையத் துடித்தனர். இணைப்புப் பற்றி முடிவுசெய்வதற்கு ஓராண்டுக் காலம் அவகாசம் கேட்டு இந்திய அரசுடன் நிஜாம் ஓர் ஒப்பந்தம் (Standstill Agreement) செய்துகொண்டார். ஆனால், 'சுதந்திர ஐதராபாத்' அமைப்பதை இந்த ஒப்பந்தம் பாதிக்காது என்று ரசாக்கர் இயக்கத் தலைவரான கசிம் ரஜ்வி கருதினார். மேலும், அவருடைய இயக்கத்தினரான ரசாக்கர்கள் அண்டை மாநிலங்களில் புகுந்து கொலை, கொள்ளை போன்ற அட்டூழியச் செயல்களில் ஈடுபட்டனர். இந்தியாவுடன் இணையும்படி நிஜாமிடம் தலைமை ஆளுநர் மவுண்ட்பேட்டன் பிரபு எவ்வளவோ வற்

புறுத்தியும் அவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை. மேலும், பாகிஸ்தான் உதவியுடன் இராணுவம் ஒன்றைத் திரட்டிக் கொண்டு, இந்தியாவுடன் போரிட நிஜாம் முயன்றார். அவருக்கு ரசாக்கர்கள் உதவினார்கள்.

நிஜாமைப் பணியவைக்க இந்திய அரசு முதலில் ஐதரா பாத்தின்மீது பொருளாதார நிர்ப்பந்தங்களைப் புகுத்தியது. இதனால் எவ்விதப் பயனும் விளையவில்லை. ஆகவே, 1949ஆம் ஆண்டு செப்டம்பர் 13ஆம் நாளன்று ஐதராபாத்தின்மீது இந்திய அரசாங்கம் இராணுவ நடவடிக்கை (Police action) எடுத்து, அதை இந்தியாவுடன் இணைக்க நிஜாமைச் சம்ம திக்கச் செய்தது. 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்தியா குடியரசானபோது, இந்தியாவுடன் ஐதராபாத் இணைக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டில் மாநிலச் சீரமைப்புக்குழு (States Reorganisation Committee) செய்த பரிந்துரைக்கிணங்க ஐதராபாத்தின் தெலுங்கு பேசும் மாவட்டங்கள் ஆந்திரப் பிரதேச மாநிலத்துடன் இணைக்கப்பட்டன. இப்போது ஐதரா பாத் நகரமே ஆந்திர மாநிலத்தின் தலைநகராக விளங்குகிறது.

காஷ்மீர் : ஜம்மு-காஷ்மீர் அரசை ஆண்டுவந்தவர் ஓர் இந்து அரசராவார். ஆனால், அங்கே வாழ்ந்தோரில் பெரும் பான்மை மக்கள் முகமதியர்களாவர். பாகிஸ்தான், திபெத், சீனா, ரஷ்யா ஆகியவற்றின் எல்லைகளைத் தொட்டுக்கொண்டி ருக்கும் காஷ்மீரை, அங்கு முகமதியர்கள் பெரும்பான்மையாக வாழ்வதைக் காரணங் காட்டித் தன் ஆட்சிக்குள் கொண்டுவரப் பாகிஸ்தான் ஆசைப்பட்டது. காஷ்மீர் அரசர், இணைப்புப் பற்றி மக்கள் கருத்தறிந்து முடிவெடுக்கக் கால அவகாசம் கேட்டுப் பாகிஸ்தானுடனும் இந்தியாவுடனும் ஒப்பந்தங்கள் (Standstill Agreements) செய்துகொள்ள விரும்பினார். பாகிஸ் தானுடன் இத்தகைய ஒப்பந்தம் ஒன்றும் செய்துகொண்டார். எனினும், ஜம்மு - காஷ்மீருக்குள் அத்தியாவசியப் பொருள்கள் செல்வதைப் பாகிஸ்தான் தடைசெய்தது. அதன் எல்லைகளில் பலமுறை தாக்குதல்கள் நடத்தியது. மலைவாசிகளைக் காஷ் மீருக்குள் அனுப்பிக் கலகமும் கொள்ளையும் நடத்தும்படி தூண் டியது. இதனால் கலவரமடைந்த காஷ்மீர் அரசர், 1947ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் நாள் ஜம்மு-காஷ்மீரை இந் தியாவுடன் இணைக்கக் கையொப்பமிட்டார். காஷ்மீர் மக்களில் பெரும்பான்மையோரும், அவர்களின் தலைவராயிருந்த ஷேக் அப்துல்லாவும் அரசரின் இம் முடிவை ஆதரித்தனர். பாகிஸ் தானின் தொல்லையிலிருந்து காஷ்மீர் மக்களைக் காப்பாற்றுவதற்

காக இந்தியா தன் படையைக் காஷ்மீருக்கு அனுப்பியது. ஷேக் அப்துல்லாவை முதலமைச்சராகக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டது. பாகிஸ்தானல் அனுப்பப்பட்ட பதானியர்கள் காஷ்மீரின் ஒரு பகுதியைக் கைப்பற்றினர். அப் பகுதி 'ஆஜாத் காஷ்மீர்' என வழங்கப்பட்டது. அப் பகுதியில் அமைந்த அரசைப் பாகிஸ்தான் ஊக்குவித்து, அப் பகுதியைத் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தது.

இந்தியா இச் சிக்கலை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழுவிற்கு (U.N. Security Council) கொண்டுசென்றது. 1948ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் போர்நிறுத்தம் செய்யும்படி இரு நாடுகளையும் கேட்டுக்கொண்டு இக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தை இந்தியா ஏற்றுக்கொண்டது. ஆனல், பாகிஸ்தான் 1949ஆம் ஆண்டு ஜனவரி மாதம்தான் அதை ஏற்றுக்கொண்டது. காஷ்மீர்ச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்காக சர் ஓவன் டிக்சன் (Sir Owen Dixon) என்பவரை ஐ. நா. அனுப்பிவைத்தது. ஆனல் அவரால் இச் சிக்கலுக்கு ஒரு தீர்வும் காண இயலவில்லை.

1956-ல் காஷ்மீர்ச் சட்டசபை தனது அரசியலமைப்பில் காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும்படி சட்டம் ஒன்று வகுத்து நிறைவேற்றியது. இதை எதிர்த்து ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் பாகிஸ்தான் முறையிட்டது. பாகிஸ்தான் முதலில் ஆக்கிரமிப்புச் செய்ததை இந்தியா நினைவூட்டியது. இந்தியாவுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தை இந்தியா நிராகரித்தது. காஷ்மீர்ச் சிக்கலுக்குத் தீர்வுகாண 1957 பிப்ரவரியில் ஐ. நா. பாதுகாப்புக் குழு, சுவீடன் பிரதிநிதியான குன்னர் ஜாரிங் (Gunnar Jarring) என்பவரை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அனுப்பிவைத்தது. அவர் தம் முயற்சியில் வெற்றிகாண இயலவில்லை. அதே ஆண்டு டிசம்பரில் இப் பணியை டாக்டர் ஃபிராங் கிரகாமிடம் (Frank Graham) ஐ நா. பாதுகாப்புக் குழு ஒப்படைத்தது.

பாகிஸ்தான் தான் ஆக்கிரமிப்புச் செய்து கைப்பற்றிய காஷ்மீர்ப் பகுதியில் மங்களா அணை என்ற அணையைக் கட்ட 1958-ல் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்தது. இதைக் கண்டித்து இந்தியா, ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் முறையிட்டது. ஐ. நா. பிரதிநிதி கிரகாம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் வந்தார். அவர் தம் ஆய்வின் முடிவுகளை வெளியிட்டுப் பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர்ப் பகுதியிலிருந்து பாகிஸ்தான்

படைகள் விலகிய பின்பு, காஷ்மீர் எல்லையில் ஐ.நா. படைகளை நிறுத்த வேண்டுமெனக் கூறினர். ஆக்கிரமிப்புச் செய்த பாகிஸ்தானையும், தாக்குண்ட இந்தியாவையும் இத் திட்டம் சமநிலையில் வைப்பதாகக் கூறி, கிரகாமின் ஆலோசனைகளை ஏற்க இந்தியா மறுத்தது. மற்றும் பாகிஸ்தான் கைப்பற்றியிருக்கும் காஷ்மீர்ப் பகுதி இந்தியப் பகுதியன்று என்ற கருத்தையும் இந்தியா நிராகரித்தது.

காஷ்மீர்பற்றி இந்திய-பாகிஸ்தான் அமைச்சர்கள் 1962 டிசம்பரில் கூடிப் பேசினர். காஷ்மீரைப் பிரிவினை செய்யவும், காஷ்மீர்ப் பள்ளத்தாக்கில் சர்வதேசக் கண்காணிப்பில் (Internationalization of Kashmir Valley) வாக்கெடுப்பு நடத்தவும் இப் பேச்சுகளின்போது பாகிஸ்தான் விரும்பியது. இந்தியா இதற்கு உடன்படவில்லை. காஷ்மீரில் போர்நிறுத்தக் கோட்டைக் தாண்டி பாகிஸ்தான் பலமுறை ஊடுருவல்கள் நடத்தியது. காஷ்மீரில், தான் ஆக்கிரமித்திருந்த பகுதியிலிருந்து பல ஆயிரம் சதுர மைல் பகுதியைச் சீனவுக்குப் பாகிஸ்தான் விட்டுக் கொடுத்தது. இதை இந்தியா கடுமையாகக் கண்டித்தது. 1965 தொடக்கத்தில் இரு நாடுகளின் உறவு மிகவும் மோசமடைந்தது. 1965 ஆகஸ்டு மாதத்தில் ஏராளமான ஊடுருவல்காரர்கள் பாகிஸ்தானிலிருந்து காஷ்மீருக்குள் நுழைந்து காஷ்மீரைக் கவர முயன்றனர். அதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு மிடையே போர் மூண்டது. பாகிஸ்தானின் முயற்சியை இந்தியா முறியடித்தது. செப்டம்பர் 20-ல் ஐ. நா. பாதுகாப்புக் குழு, இந்திய-பாகிஸ்தான் சண்டையை நிறுத்தும்படி கூறியது. செப்டம்பர் 21-ல் இந்தியா போரை நிறுத்த உடன்பட்டது. மறுநாள் பாகிஸ்தானும் ஒப்புக்கொண்டது. செப்டம்பர் 3-ல் போர் நிறுத்தப்பட்டது. இந்திய-பாகிஸ்தான் எல்லையைக் கண்காணிக்க ஐ.நா. பார்வையாளர்கள் வந்தனர். இரு நாடுகளின் இராணுவத் தளபதிகளும் சந்தித்துப் பேசித் தம் படைகளை விலக்கிக்கொள்ள ஒப்புக்கொண்டனர். கைதிகள் மாற்றிக்கொள்ளப்பட்டனர். சோவியத் ரஷ்யாவின் அழைப்பின் பேரில் இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும், பாகிஸ்தான் ஜனாதிபதி மகமது அயூப்கானும் தாஷ்கண்டில் சந்தித்துப் பேசி, சிதைவுற்ற நேச உறவை மீண்டும் நேர்ப்படுத்திக்கொள்ள உடன்பட்டனர்.

இதற்கிடையில், இந்தியாவுடன் இணைந்துவிட்ட காஷ்மீர்ப் பகுதியில் ஐந்து பொதுத் தேர்தல்கள் நடந்துள்ளன. இத் தேர்தல்களின்மூலம், இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்ததைக் காஷ்மீர் மக்கள் பேராதரவுடன் உறுதிப்படுத்தி யுள்ளனர்.

ஆனால், பாகிஸ்தான் இந்தியாவின் நியாயமான நடவடிக்கைகளை விரோத மனப்பான்மையுடன் நோக்குவதுடன், இந்தியாவை நியாயமற்ற இன்னலுக்கும் இடையூறுகளுக்கும் இலக்காக்குவதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கிவருகின்றது. அறமே இறுதியில் வெல்லும்; காஷ்மீர்ப் பிரச்சினையும் விரைவில் தீரும் என்றே கருதலாம்.

புதுச்சேரி : புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் ஆகிய ஃபிரெஞ்சு இந்தியப் பகுதிகளை இந்தியாவுக்கு மாற்றிவிட வகை செய்யும் ஒப்பந்தம் ஒன்று புதுதில்லியில் 1954 அக்டோபர் 21-ல் இந்தியாவுக்கும் ஃபிரான்சுக்குமிடையே கையெழுத்தாகியது. அதன்படி அவை நான்கும் 1954 நவம்பர் முதல்தேதி இந்தியாவுடன் நடைமுறையில் இணைந்தன. 1962 ஆகஸ்டு 16-ல் இப்பகுதிகளின் இணைப்புச் சட்டபூர்வமாக்கப்பட்டது.

கோவா : இந்தியா சுதந்திரமடைந்த பின்னும் கோவா, டாமன், டையூ, தாத்ரா, நகர் ஹவேலி ஆகிய இந்தியப் பகுதிகள் போர்த்துகீசியரின் ஆதிக்கத்திலேயே இருந்துவந்தன. ஃபிரெஞ்சு அரசினரின் பண்புள்ள போக்கைக் கடைப்பிடிக்காமல், அதன் ஆதிக்கத்திலிருந்த இப் பகுதிகளை இந்தியாவுடன் இணைக்கப் போர்த்துகீசிய அரசு மறுத்தது. அப் பகுதி மக்களின் விருப்பத்தையும் நசுக்க அடக்குமுறை நடவடிக்கைகளைக் கையாண்டது. 1954ஆம் ஆண்டில் தாத்ராவும், நகர் ஹவேலியும் போர்த்துகீசிய ஆட்சியினின்றும் விடுவித்துக் கொண்டன. கோவா, டையூ, டாமன் ஆகியவற்றை இந்தியாவிடம் ஒப்படைக்கப் போர்த்துகல் பிடிவாதமாக மறுத்தது. குடியேற்ற ஆதிக்கங்களை (Colony) ஒழிக்க வேண்டுமென ஐ. நா. நிறுவனம் விடுத்த பல வேண்டுகோள்களுக்கும் போர்த்துகல் செவிசாய்க்கவில்லை. இதனால் வேறு வழியின்றி இந்தியா இராணுவ நடவடிக்கைமூலம் அப் பகுதிகளை 1961ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் நாள் போர்த்துகீசியரிடமிருந்து விடுவித்து இந்தியாவுடன் இணைத்தது. இவ்வாறு சர்தார் வல்லபாய் படேல் காலத்தில் தொடங்கிய இந்திய ஒருங்கிணைப்பு 1961-ல் முடிவடைந்தது.

30. விடுதலைக்குப்பின் பாரதம்

சுதந்திர இந்தியத் தலைமை அமைச்சர்கள்

1. ஜவஹர்லால் நேரு (1947—1964)

சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை அமைச்சராக ஜவஹர் லால் நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் வாழ்க்கையும், சுதந்திரப் போராட்டமும் ஒன்றுடன் ஒன்று பிணைந்ததென்றே சொல்ல வேண்டும். பொன், பொருள், இன்பம் யாவற்றையும் இந்திய சுதந்திரத்திற்காகவே அர்ப்பணித்த செம்மலாவார்; உலகப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரும், பேச்சாளரு மாவார். தம் கடமை உணர்ச்சியாலும், தியாகத்தாலும் மாந் தருள் மாணிக்கமெனப் போற்றப்பட்டவர். காந்திஜிக்கு அடுத்த இடத்தை, ஒவ்வோர் இந்தியனும் இவருக்குத் தன் இதயத்தில் கொடுக்கக் கூடிய அளவிற்குத் தம் தொண்டால் உயர்ந்த உத்த மராவார். இவரைச் 'சுதந்திர இந்தியாவின் சிற்பி' என்று கூறினால் மிகையாகாது. இவரின் வாழ்க்கை வரலாறு தனியே விரிவாகத் தரப்பட்டுள்ளது.

பண்டித நேருவின் காலத்தில் இளைய பாரதம் பலவகையில் எழுச்சி பெற்றது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக அனைத்து வழிகளிலும் இந்தியா முன்னேறியது. 1953ஆம் ஆண்டு எலிச பெத் அரசியின் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ளும் பெருமை பெற்றார்.

நேருவின் அயல்நாட்டுக் கொள்கையின் விளைவாக, உலகி லுள்ள நாடுகளின் பார்வை இந்தியாவின் பக்கம் திரும்பியது. நேருவின் சமாதானப் புறா உலகமெங்கும் பறந்தது. உலக மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்பதை உணரச்

செய்தது. கொரியாபற்றிய இந்தியத் தீர்மானம் ஐக்கிய நாடுகள் அவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆங்கிலேய-சூடானிய ஒப்பந்தத்தில் இந்தியா பெரும் பங்கு வகித்தது. ஃபிரெஞ்சு-இந்தோ சைனா எதிர்ப்பு உணர்வுகள் அடங்குவதில் இந்தியா ஆர்வம் காட்டியது. பாண்டுங் மாநாட்டில் கலந்துகொண்டு இந்தியாவிற்குப் புகழைத் தேடித் தந்தார். கூட்டுச்சேராக் கொள்கையினை மேற்கொண்டு சோவியத் நாடு, அமெரிக்கா ஆகிய இரு வல்லரசுகளுடனுமே நட்புப் பூண்டார். இரு நாட்டின் தலைவர்களும் இந்தியாவிற்கு வருகை தந்தனர்.

நேருவின் காலத்தில் கல்வித்துறையில் இந்தியா முன்னேறியது. இதுவரையில் விவசாய நாடாக விளங்கி வந்த இந்தியா தொழில்துறையிலும் முன்னேறும் வகைகள் செய்யப்பட்டன. உணவுத் துறையில் தன்னிறைவை நோக்கி நடைபோட்டது. புதியபுதிய இரும்புத் தொழிற்சாலைகள் அந்நிய உதவியுடன் நிறுவப்பட்டன. பக்ராநங்கல் போன்ற அணைக்கட்டுந் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இந்திய வரலாற்றில் சிறப்புமிக்க காலங்களில் ஒன்றாகவே பண்டித நேருவின் காலம் திகழ்ந்தது என்றே கூறவேண்டும். இவர் 1964ஆம் ஆண்டு மேத் திங்கள் 27ஆம் நாள் காலமாகும் வரை தலைமை அமைச்சராக, 17 ஆண்டுகள் பதவி வகித்தார்.

2. லால் பஹதூர் சாஸ்திரி (1964—1966)

ஜவஹர்லால் நேருவுக்குப் பின், லால் பஹதூர் சாஸ்திரி அவர்கள் தலைமை அமைச்சராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். எளிமையும், தியாக உணர்வும் கொண்டு, தம் உழைப்பால் உயர்ந்த இவ் வுத்தமர், ருஷ்யாவின் முன்னிலையில், தாஷ்கண்டில் பாகிஸ்தான் தலைவர் அயூப்கானுடன் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டார். அதனோடு, தம் பணி முடிந்ததென எண்ணியதே போன்று அன்றே அதாவது 1966ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 10ஆம் நாள் இரவிலேயே அவர் மாரடைப்பால் உயிர்துறந்தார்.

3. திருமதி இந்திரா காந்தி (1966)

லால் பஹதூர் சாஸ்திரிக்குப் பிறகு, நேருவின் மகளான திருமதி இந்திரா காந்தி அவர்கள் தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சுயேச்சையான இயல்பும், தீவிர அரசியல் போக்கும் கொண்டவர். இவர் சார்ந்திருந்த காங்

கிரசு இயக்கத்தினுள் பிளவு ஏற்படவே பாராளுமன்றத்தைத் கலைத்து, பொதுத்தேர்தலை நடத்தச் செய்தார். 1971ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் நடந்த அப் பொதுத் தேர்தலில் அவர் கட்சி வெற்றிவாகை சூடியது. பின்னர் இவர் தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது மேலான தலைமையின்கீழ் சமதர்மப் பாதையில் நாடு வேகமாக முன்னேறி வருகிறது. பாங்குகள் தேசியமயமாக்கப்பட்டுவிட்டன. விவசாயி களும் சிறு தொழிலாளிகளும்கூட பாங்குகளிலிருந்து கடன் பெற்றுத் தவணை முறையில் அவற்றை அடைக்கும் சலுகையை எய்தியுள்ளனர். சுதேச மன்னர்கள் பெற்று வந்த மானியங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன. மக்களிடையே இருக்கும் ஏற்றத் தாழ்வுகள் மாய இங்ஙனம் திருமதி இந்திரா அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார்கள். அரசாங்கம் மேற்கொள்ள விருக்கும் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு அரசியலமைப்பும், தலைமை நீதிமன்றமும் தடையாக இருந்த நிலையை மாற்றி அரசியலமைப்பின் 25ஆவது திருத்தத்தை அவர் சட்டமாக்கி யுள்ளது உள்ளபடியே பெரியதொரு சாதனையாகும். அண்மை யில் வங்கப் புரட்சிக்கு உதவிசெய்து பாகிஸ்தான் படைகளை முறியடித்து, வங்க அகதிகளின் வயிற்றில் பால் வார்த்ததோடு அவர்களுக்கு விடுதலையையும் பெற்றுத் தந்த கைம்மாறு கருதாத பெரும்பணியைக் கண்டு உலகமே வியப்பிலாழ்ந்துள்ளது. அண்மையில் ருஷ்யாவோடு நட்புடன்பாட்டைச் செய்து கொண்டுள்ளது அவரது ராஜதந்திரத்திற்கு ஒரு பெரு வெற்றி யாகும். இத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்து வருவதன் மூலம், உலகப் பெருந் தலைவர்களுள் ஒருவராக திருமதி இந்திரா காந்தி மதிக்கப்பெறும் நிலையை எய்தியுள்ளார்கள். இந்தியா வின் பெருமையும் உலக அரங்கில் பெரிதும் உயர்ந்துள்ளது.

உலக அரங்கில் குடியரசு இந்தியா

நேரு தலைமையில் நம் நாடு பல துறைகளில் முன்னேறி யுள்ளது. நம் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய நாடியான பஞ்சசீலத்தை வகுத்தவரும் அவரே. காந்தியடிகளின் அகிம்சை, அன்பு, சத்தியம் ஆகிய மூன்றின் அடிப்படையில் அமைந்தது தான் நம் வெளிநாட்டுக் கொள்கையாகும். நம் வெளிநாட்டுக் கொள்கையின் உயிர்நாடி உலக சமாதானத்திற்குப் பாடுபடுவதே யாகும். இந்தியா, நடுநிலைமைப் பாதையைப் பின்பற்றிப் பன்னாடு களுடன் நல்லுறவு கொள்ளவும், உலக அமைதியைப் பாதுகாக்க வும் உழைக்கிறது. உலக அரசியல் மேடையில் எழும் ஒவ்வொரு பிரச்சினையிலும் பாரபட்சமின்றித் தனது சிறப்பான தீர்ப்பை

எப்பொழுதும் அளித்து வருகின்றது. உலக அமைதியைப் பாதுகாப்பது மட்டுமன்றி உலகப் பண்பாட்டைக் காப்பதற்கும் உலக முன்னேற்றத்திற்கும் இந்தியா அரும்பாடுபடுகின்றது.

பஞ்சசிலம்

உலக அமைதிக்காகப் பாடுபடுவதுடன், ஒடுக்கப்பட்ட ஆசிய நாட்டு மக்களுக்காகவும், தாழ்நிலையில் உள்ள ஏனைய உலகநாட்டு மக்களின் நலனுக்காகவும் இந்தியா அரும்பாடுபட்டு வருகின்றது. ஐக்கிய நாட்டுச் சபையின் பொருளாதார, சுகாதார, கல்வி, கலாசாரத் தொழிற்குழுக்களில் கலந்து உலக முன்னேற்றத்திற்கு இந்தியா உழைத்து வருகின்றது. 1955-ல் இந்தோனேசியாவிலுள்ள பாண்டுங் என்னும் நகரில் ஆசிய-ஆஃபிரிக்க மாநாடு ஒன்று கூட முக்கியக் காரணமாக விளங்கியது மட்டுமன்றி, இந்தியா அம்மாநாட்டில் கலந்துகொண்டு உலகில் சுரண்டல் கொள்கையை ஒழிக்கவும், ஆசிய, ஆஃபிரிக்க நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை வளர்க்கவும், அணுகுண்டுப் பேயின் பயத்தை ஒழித்து உலக அமைதியை நிலைநாட்டவும் பஞ்சசீலம் என்ற புகழ்பெற்ற ஐந்து கொள்கைகளை நிறைவேற்றியது. பஞ்சசீலத்தின் ஐந்து சீரிய கொள்கைகளாவன :

1. நாட்டின் எல்லைக்குட்பட்ட உரிமையையும் ஆதிபத்தியத்தையும் நாடுகள் ஒன்றுக்கொன்று மதிந்தல் வேண்டும்.

2. அச்சுறுத்தல், பலாத்கார முறைகளைக் கையாளுதல் கூடாது.

3. உள்நாட்டு நடப்புகளில் நாடுகள் ஒன்றுக்கொன்று தலையிடுதல் கூடாது.

4. நாடுகள் ஒன்றுக்கொன்று தரத்தில் சமநிலையையும், நலனையும், மதிப்பையும் வளர்க்க வேண்டும்.

5. உலக நாடுகள் அரசியல் கொள்கைகளில் குறுகிய மனப்பான்மையை விட்டு, உலக தேச மக்கள் சகோதரர்களைப் போல் அமைதியாக வாழ்வதற்கான கூட்டுறவு நோக்கத்தை (Peaceful-Co-existance) வளர்த்தல் வேண்டும்.

இக்கொள்கைகளை 29 ஆசிய, ஆஃப்ரிக்க நாடுகள் ஒப்புக் கொண்டன. சீனு போன்ற நாடுகள் இதை ஒப்புக்கொண்டா லும், செயல் முறையில் பின்பற்றவில்லை. ஆகவே, இக் கொள்கை முற்றிலும் வெற்றிபெற வில்லை என்பது உண்மைதான். ஆனால், இதன் பயனையும் வெற்றிகளையும் கணக்கிடும்போது இதன் குறைகள் அவ்வளவாகத் தெரியவில்லை. மனிதரால் செய்யப்படும் எவ்விதக் கொள்கையும் கோட்பாடும் முழு வெற்றி அளிக்காமல் போகலாம். அதனால் அக் கொள்கையையும், கோட்பாட்டையும் அழித்தலும், அவமதித்தலும் அறியாமையேயாகும். 'மனிதனைச் சீராக்கு, உலகம் சீர்படும்' என்ற சொல்லிற்கிணங்க, உள்ளத்தில் மாற்றம் ஏற்பட்டால் தவிர, வெளி மாற்றங்களால் உண்மை வெற்றி பெற இயலாது. இருந்தாலும், இந்தியா தன் நடுநிலை மைக்கொள்கையைக் கைவிடாமல், உலக அமைதிக்குப் பாடுபட்டு வருகின்றது. நம் வெளிநாட்டுக் கொள்கையைக் கைவிடாமல், உலக அமைதிக்குப் பாடுபட்டு வருகின்றது. நம் வெளிநாட்டுக் கொள்கை உலக வல்லரசுகளால் பாராட்டப்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவின் வளர்ச்சியையும், புகழையும் விரும்பாத பாகிஸ் தான், சீனு போன்ற நாடுகள் தொடர்ந்து அடிக்கடி தொல்லைகள் கொடுத்துக்கொண்டே வருகின்றன. அவைகளுக்கு உதவியாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் இருந்துவருவது வருந்தற்பால தொன்றாகும். எதிரியையும் அன்பால் வெல்ல வேண்டும் என்ற குறிக்கோளால் அத் தொல்லைகளைத் தாங்குவதுடன் அவற்றைக் களையவும் நம் பாரதம் முயன்று வருகின்றது. உண்மையும் அன்பும் என்றும் அழியாது. சோதனையும் இடரும் ஏற்படலாம். ஆனால், அவையெல்லாம் ஆதவனைக் கண்ட பனிபோல் மறையும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்ற எண்ணத்துடன், நாம் நம் பணியைச் செய்வோமாக!

மேற்கோள் நூற்கள்
(BIBLIOGRAPHY)

R. C. Majumdar and Others	—	An Advanced History of India
Sathianathaier, R.	—	Indian History, vol. 3.
Nilakanta Sastri, K. A.	—	History of India, Part III
Venkataraman, T. K.	—	History of India, vol. II
Roberts, P. E.	—	British India
V. N. Hari Rao	—	A History of Modern India
Garratt and Thompson	—	Rise and Fulfilment of British Rule in India
Smith, V. A.	—	Oxford History of India
Rawlinson, H. G.	—	India, A Cultural History

கலைச்சொற்கள்

A

Advisory Committee — ஆலோசனைக் குழு
Adult franchise — வயதுவந்தோர் வாக்குரிமை
Age of Consent Act — உடன்படு வயது சட்டம்
Agricultural Debt Relief Act — உழவர் கடன் நிவாரணச் சட்டம்
Archaeological Survey of India — இந்தியப் பழம்பொருள் ஆய்வியல் துறை
Arms Act — போர்க்கருவிச் சட்டம்
Autonomy — சுய ஆட்சி
Auxiliary forces — துணைப் படைகள்
Auxiliary studies — துணை அறிவியற் கலைகள்

B

Balance of Trade — வாணிகச் சமநிலை
Ballot — தேர்வு
Balance of Power — சமநிலைக் கொள்கை
Bengal Tenancy Act — வங்காளக் குடிவாரச் சட்டம்
Bi-cameral Legislature — ஈரங்கச் சட்டசபை
Bill — வரைவு
Blue Water Policy — கடல் ஆதிக்கக் கொள்கை; நீலநீர்க் கொள்கை
Board of Control — கட்டுப்பாட்டுவாரியம்; ஆணைக் குழு; கண்காணிப்புக் குழு
Board of Revenue — நில வருவாய்த்துறை வாரியம்; வரியாட்சிக் குழு
Board of Directors — இயக்குநர் வாரியம்
Brahmo Samaj — பிரம்ம சமாஜம்
Budget — நிதிநிலை அறிக்கை

C

Cabinet — அமைச்சர் அவை; அமைச்சர் சபை
Cabinet Mission — அமைச்சர் தூதுக்குழு
Casting vote — முடிவுசெய் வாக்கு
Ceded districts — கொடுக்கப்பட்ட மாவட்டங்கள்; கொடை மாவட்டங்கள்
Census — குடிக் கணக்கு
Charter Act — பட்டயச் சட்டம்; சாசனச் சட்டம்
Chief Commissioner — தலைமை ஆணையாளர்
Chief Justice — தலைமை நீதிபதி
Circuit Courts — நடமாடும் நீதிமன்றம்; சுற்றுலா நீதிமன்றம்
Civil — பொதுத் துறை; ஊரியல் துறை
Civil disobedience — சாத்துவிகச் சட்ட மறுப்பு
Code — சட்டத் தொகுப்பு
Co-existence — ஒருங்கிருத்தல்
Collector — மாவட்ட ஆட்சியாளர் தண்டல் நாயகர்; கலெக்டர்
Collective responsibility — கூட்டுப்பொறுப்பு
Commission — தரகு; குழு
Communal electorates — வகுப்புவாரித் தேர்தல் தொகுதி
Concurrent list — இருதிறப் பொதுப்பட்டியல்
Constitution — அரசியலமைப்பு
Constituency — வாக்காளர் தொகுதி
Conservative — பழைமைப் பற்றுளர்
Constituent Assembly — அரசியல் நிர்ணயசபை
Corporation — மாநகராட்சி
Council of States — நாட்டு மேல்அவை
Covenanted Servants — ஒப்பந்தச் சீரியல் அலுவலாளர்
Criminal — குற்றவியல்

D

De-centralisation — பன்முகப்படுத்தல்
Deficit — பற்றுக்குறை
Director — இயக்குநர்
District — மாவட்டம்

Divided — பிரிவினைபட்ட
Doctrine of Lapse — அவகாசியிலிக் கொள்கை; நாடிழக்கும் கொள்கை
Double Government — இரட்டை ஆட்சி
Double batta — இரட்டை உபரி ஊதியம்
Duty — தீர்வை
Dyarchy — இரட்டை ஆட்சி

E

East India Company — கிழக்கிந்திய வணிகக் குழு
Electorate — தேர்தல் தொகுதி
Empire — பேரரசு
Era — சகாப்தம்
Excise duty — ஆயத் தீர்வை
Executive — ஆட்சிக்குழு; நிர்வாக ஆட்சித் துறை
Executive Committee — செயற்குழு; ஆட்சிக் குழு
Extremists — தீவிரவாதிகள்

F

Famine Commission — பஞ்ச நிவாரணப் பரிசீலனைக் குழு
Federation — கூட்டரசு; கூட்டாட்சி
Federal Constitution — கூட்டாட்சி அமைப்பு; கூட்டரசு அமைப்பு
Finance — நிதி; பணம்
Finance Bill — நிதி வரைவு; பண வரைவு
Financial Statement — நிதி அறிக்கை
Fore-runner — முன்னோடி
Freedom of Expression — பேச்சுரிமை
Freedom of Press — எழுத்துரிமை; அச்சக உரிமை
Free trade — வாணிக உரிமை
Franchise — வாக்குரிமை
Fundamental Rights — அடிப்படை உரிமைகள்
Fundamental Principles — அடிப்படைக் கொள்கைகள்
Functional — செயல்சார்
Functionary — செயலர்

G

Governor — ஆளுநர்; கவர்னர்;
Governor-General — தலைமை ஆளுநர்; தலைமைக் கவர்னர் ஜெனரல்;
Grants-in-aid — உதவிக் கொடைகள்
Great-Powers — வல்லரசுகள்

H

Heirarchy — அதிகார வரிசை
Heir-apparent — இளவரசு
High Court — உயர் நீதிமன்றம்
Historicity — வரலாற்று உண்மை
Home-Government — தாயக அரசு; சுய அரசு
Home-Minister — உள்ளாட்சி அமைச்சர்
Home-Policy — உள்நாட்டுக் கொள்கை
Home-rule — சுயஆட்சி
House of the People — மக்கள் சபை
Humanitarian — மக்கள் அபிமானம்; மனித இனநலப் பற்று

I

Imperial power — பேரரசு அதிகாரம்
Implementation — செயற்படுத்தல்
Implied power — பொதிந்துள்ள அதிகாரம்
Indian Council Act — இந்திய சட்டசபை
Indian Nationalism — இந்திய தேசிய இயக்கம்
Indian National Congress — இந்திய தேசியக் காங்கிரசு
Indirect system — மறைமுக முறை
Indirect taxation — மறைமுக வரி
Indirect election — மறைமுகத் தேர்தல்
Individual Satyagrah — தனிநபர் சாத்விக மறுப்பு
Inheritance — வழியுரிமை பெறுதல்
Injunction — தடைக்கட்டளை
Interim Government — இடைக்கால அரசு
Interim stay — இடைக்காலத் தடையாணை
Interregnum — ஆட்சி இடையீடு
Instrument of accession — கூட்டரசில் சேரும் ஒப்பந்தம்
Irrigation — நீர்ப்பாசனம்
Inquiry — ஆய்வு

J

Joint Session — கூட்டு அமர்வு
Judge — நீதிபதி
Judicial Committee — நீதிக் குழு
Judiciary — நீதித் துறை
Jurisdiction — அதிகார எல்லை
Jury — தீர்ப்புச் சான்றாளர் குழு; (நீதி) சான்றோர்

K

Kingdom — அரசு

L

Land-lord — நிலக்கிழார்
Lawful — சட்டத்திற்குட்பட்ட
Law of Inheritance — மரபுமுறைப்படி பெறும் சட்டம்
Legislative Assembly — (கீழ்) சட்டசபை (மன்றம்)
Legislative Council — மேல் சட்டசபை
Leader of the House — சட்டமன்றத் (ஆளும் கட்சி) தலைவர்
Legate — மதகுருவின் தூதர்
Lexicography — அகராதிக் கலை
Linguistic — மொழிசார்ந்த
Local Institutions — உள்நாட்டு ஆட்சி நிறுவனங்கள்
Local-self-government — உள்ளூர் ஆட்சி

M

Magistrate — (மாவட்ட) குற்ற விசாரணை நீதிபதி
Majority — பெரும்பான்மை
Mariner's Compass — மாலுமியின் திசைகாட்டும் கருவி
Medium of Instruction — பயிற்றுமொழி; போதனு மொழி
Mercenary — கூலிப் படை
Minority — சிறுபான்மை
Missionaries — சமயப் பரப்புகுழு

Modern period — தற்காலம்
Money Bill — பண வரைவு
Monopoly — தனி உரிமை (போட்டியற்ற); ஏகபோக உரிமை
Moral teachings — ஆன்ம போதிப்பு
Movement — இயக்கம்
Mutiny — படையினர் புரட்சி

N

National Character — தேசியப் பண்பு
Native States — சுதேச அரசுகள்
Navy — கப்பற்படை
Non-alignment — சாராமை
Non-combatant — போரிலீடுபடாத
Non-cooperation — ஒத்துழையாமை
Non-intervention — தலையிடாமை
Non-official — அரசியல் அலுவலில் இல்லாத; அரசியல் துறையில் பணி புரியாத
No-taxation campaign — வரிகொடா இயக்கம்
Non-violent resistance — சாத்விக மறுப்பு

O

Oath — உறுதிமொழி
Obsolete — வழக்கொழிந்த
Official — அலுவல்பற்றிய
Original jurisdiction — நேரடி ஆய்வு அதிகாரம்
Over-riding power — மீறும் அதிகாரம்

P

Pact — ஒப்பந்தம்
Paramountcy — தலைமை அதிகாரம்
Passive resistance — சாத்துவிக மறுப்பு
Penal law — தண்டனைச் சட்டம்
Pension — ஓய்வுகால ஊதியம்
Permanent land revenue settlement — நிலையான நிலவரித் திட்டம்
Prerogative — தனிச் சிறப்புரிமை
Precedent — முன்நிகழ்வு

Prime-Minister — தலைமை அமைச்சர்
Private Bill — தனிநபர் வரைவு
Proclamation — பிரகடனம்
Proportion — விதாசாரம்
Protective duty — காப்பு வரி
Provincial autonomy — மாநில சுய ஆட்சி
Public Bill — பொது வரைவு
Public debt — பொதுக் (அரசாங்க) கடன்
Public expenditure — பொதுச் (அரசாங்க) செலவு
Public opinion — பொதுக் கருத்து
Puisne (Judge) — சாதாரண நீதிபதி

Q

Quasi-Governmental — ஆட்சிமுறை போன்ற
Quasi-Parliamentary — பாராளுமன்றத்தினைப் போன்ற

R

Refugees — அகதிகள்
Regulating Act — ஒழுங்குமுறைச் சட்டம்
Resident — நிலையர்
Residuary — எஞ்சிய
Resolution — தீர்மானம்
Round-table Conference — வட்டமேசை மாநாடு
Ryotwari — நேர் குடிவார முறை

S

Self-government — சுய ஆட்சி
Separation of Executive from the Judiciary — நீதி நிர்வாகப் பிரிவினை
Servants of India Society — இந்தியத் தொண்டர் சங்கம்
Session — அமர்வு
Speaker — அவைத் தலைவர்
Subsidiary System — துணைப்படைத் திட்டம்
Suffrage — வாக்குரிமை
Subsidy — காப்புப் பணம்; ஈர்ப்புப் பணம்
Supreme Court — தலைமை நீதிமன்றம்

T

Tenancy — குடிவாரம்
Tenure — பதவிக் காலம்
Theosophical Society — பிரம்மஞான சபை
Transferred subjects — மாற்றப்பட்ட துறைகள்
Transition period — நிலைமாறும் காலம்
Treasury — கருவூலம்
Trance — தாற்காலிக உடன்பாடு

U

Ultimatum — இறுதி எச்சரிக்கை
Ultravires — வரம்பு கடந்த
Union Government — மைய அரசு
Union list — மைய அரசின் பட்டியல்
Uni-cameralism — ஓரங்கச் சட்டசபை ஆட்சி முறை
Un-precedented — முன் நிகழ்ந்திராத
Usurping — உரிமையின்றிக் கைப்பற்றல்

V

Vernacular Press Act — நாட்டுமொழிப் பத்திரிகைச் சட்டம்
Veto — மறுப்பாணை, வெட்டதிகாரம்
Vice-President — துணைத் தலைவர்
Viceroy — அரசப் பிரதிநிதி; வைசிராய்
Vocational Education — தொழில்முறைக் கல்வி
Vote of confidence — நம்பிக்கை வாக்கு
Voters' list — வாக்காளர் பட்டியல்

W

War of Independence — உரிமைப் போர்; சுதந்திரப் போர்
War of Succession — வாரிசு போர்
White Paper — வெள்ளை அறிக்கை

Z

Zamindar — பெருநிலக்கிழார்